

மறைமலையடிகள் தமிழுக்குப் புத்துயிரும், புதுவாழ்வும் அளித்தார். தமிழுக்கும், தமிழருக்கும் இவர் ஆற்றிய தொண்டு தலைசிறந்தது.

- டாக்டர். க. கணபதி பிள்ளை

தமிழ்மொழி தனித்தியங்கவல்லது என்பதைத் தங்கள் எழுத்தாலும், பேச்சாலும் உலகறியச் செய்த பெருமை மறைமலையடிகளுக்கே உரியது. நாட்டில் "மறைமலையடிகளார் நடை" என ஒன்று உருவெடுத்துத் தோன்றி பரவியுள்ளது. எனவே அடிகள் "தனித்தமிழ் நடையின் தந்தை" என்று அழைக்கப்படுகிறார்.

- டாக்டர். அ. சிதம்பரநாதன் செட்டியார்

அடிகளார் தம் ஆராய்ச்சி நூல்களில், தமிழ் மரபையும் பண் பாட்டையும் விளக்குவதோடு அவற்றிற்கு மாறான கருத்துக்கள் எந்த நூலில் இருப்பினும், எந்தப் புலவர் கூறி இருப்பினும் அவற்றை எடுத்துக் காட்டிப் புறக்கணிக்கும் இயல்பினர். நல்லதைப் போற்றி அல்லதைக் கடிதல், உயர்ந்ததைச் சிறப்பித்துத் தாழ்ந்ததை ஒதுக்குதல், உண்மையைத் தழுவிப் பொய்ம்மையை விலக்குதல் - ஆகியவை அடிகளாரின் தனித் தன்மை களாகும்.

- மு. வை. அரவிந்தன்


தமிழ்மண்

2, சிங்காரவேலர் தெரு,
தியாகராயர் நகர், சென்னை – 600 017
தொலைபேசி : 044 24339030


14

மறைமலையம்

# மறைமலையம்

மறைமலையடிகள் பேச்சும் - எழுத்தும்

14

தனித்தமிழியக்க நூற்றாண்டு வெளியீடு

[1916 – 2016]

## * கோகிலாம்பாள் கடிதங்கள்
## * மறைமலையடிகள் கடிதங்கள்



தமிழ்மண்

# மறைமலையம் - 14

(தனித்தமிழியக்க நூற்றாண்டு வெளியீடு)

## புதினம் - 2

- கோகிலாம்பாள் கடிதங்கள்
- மறைமலையடிகளார் கடிதங்கள்

ஆசிரியர்

முந்மொழிச்செம்மல் **மறைமலையடிகள்**

பதிப்பாளர்

**கோ. இளவழகன்**

**தமிழ்மண்**

| | | |
|---|---|---|
| முதல்பதிப்பு | : | 2015 |
| பக்கம் | : | 28+324 = 352 |
| விலை | : | 440/- |

# மறைமலையம் - 14

ஆசிரியர்
மும்மொழிச் செம்மல் **மறைமலையடிகள்**

பதிப்பாளர்
**கோ. இளவழகன்**

**வெளியீடு**

**தமிழ்மண் பதிப்பகம்**
எண். 2, சிங்காரவேலர் தெரு,
தியாகராயர் நகர், சென்னை - 600 017.
தொ.பே.: 24339030, செல்: 9444410654
மின்னஞ்சல்: elavazhagantm@gmail.com

◆தாள் : 16.0 கி. மேப்லித்தோ, ◆ அளவு : 1/8 தெம்மி ◆
◆ எழுத்து : 11.5 புள்ளி, ◆ பக்கம் : 352 ◆கட்டமைப்பு : இயல்பு
◆ படிகள் : 1000 ◆ நூலாக்கம் : வி. சித்திரா ◆
◆ அட்டை வடிவமைப்பு : கவிபாஸ்கர் ◆
◆ அச்சு : வெங்கடேசுவரா ஆப்செட், ஆயிரம் விளக்கு,
சென்னை - 600 006, மற்றும் பிராசசு இந்தியா,
திருவல்லிக்கேணி - 600 005.

“யான் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக ஏராளமான நூல்களில் ஆராய்ந்து கண்ட முடிவுகளை நூல்களாக எழுதியிருக்கின்றேன்.

பாற்கடலைக் கடைந்து அமுதம் எடுத்தது போல, உண்மை காணும் உணர்ச்சியினால் நடுநிலை நின்று ஆராய்ந்திருக்கின்றேன்.

ஒருவர் தம் வாழ்நாள் முழுவதும் கற்றாலும் அறியமுடியாத உண்மைகளை எல்லாம் எளிதாக எழுதி வைத்திருக்கின்றேன்.

எல்லாரும் தமிழ் இலக்கியங்கள் யாவற்றையும் கற்கும் தொல்லையை மேற்கொள்ள வேண்டிய தில்லை, அது முடியவும் முடியாது, தேவையுமில்லை.

எல்லா நூல்களிலும் உள்ள சிறந்த உண்மைகளை எல்லாம் பிழி சாறாக யான் வடித்துத் தந்துள்ளேன்.

என் நூல்களைப் படித்தாற்போதும், அதனால், தமிழ் முழுதுங் கற்ற பயனை அடையலாம்.”

– மறைமலையடிகள்

மும்மொழிச் செம்மல்

# மறைமலையடிகள்



**தோற்றம்:**
**15-7- 1876**

**மறைவு:**
**15-9- 1950**

மறைமலை யடிகளே
நிறைதமிழ் வளர்த்தவர்!
மனங்கொள நினைந்திடுக! – அவரது
மாண்பினைப் புகழ்ந்திடுக!

**– பாவலரேறு பெருஞ்சித்திரனார்**

பெரும்புலவர்

# அ. நக்கீரனார்



**தோற்றம்:** 22-7- 1927 **மறைவு:** 25-2-2010

தொண்டு செய்வாய் தமிழுக்கு!
செயல் செய்வாய் தமிழுக்கு!
ஊழியஞ் செய் தமிழுக்கு!
பணி செய்வாய் தமிழுக்கு!

என்று எனக்கு வழிகாட்டிச்சென்ற
பெரும்புலவர் **நக்கீரனார்** நினைவாக...

**- கோ. இளவழகன்**

## சான்றிதழ்

"நாகை - திரு. **வேதாசலம்** பிள்ளையவர்கள் ஒருபோது திருவனந்தபுரத்தில் ஒருவாரந் தங்கியிருந்த ஞான்று, அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்ததற்குச் சாலவும் மகிழ்கின்றேம். வருங்காலத் தமிழ் மக்களுக்கு மட்டற்ற தமிழ்ப்புலமை மிகுந்து வருமென்பதற்குச் சான்றாக இவர் இளமையிலேயே நுண்மாண் நுழைபுலம் உடையராயிருப்பது களிப்பூட்டுகிறது. மற்றும் தாய்மொழிப் பற்றுக் குறைந்த இக்காலத்தில், இவர் தமது நுண்ணறிவைத் தமிழ் நூல்களில் முற்றும் செலுத்தி நன்காராய்ந்துள்ளதும் பாராட்டற்குரியது. பத்துப்பாட்டு, கலித்தொகை, சீவகசிந்தாமணி முதலிய பழந்தமிழ் நூல்களில் ஆராய்ச்சியுடன் கூடிய இவர்தம் அறிவுடைமையே என்னை இவர்பால் மதிப்புறுமாறு செய்தது. தமிழாசிரியர்களின் தொகை சுருங்கிவரும் இக்காலத்தில் இவருக்குச் சிறந்த ஊக்கமளித்தால் இவர் ஒரு சிறந்த தமிழாசிரியராவாரென்று நாம் உறுதியாக நம்புகின்றேம். முன்னரே இரண்டாந்தரக் கல்லூரிகளில் தமிழ்கற்பிக்கப் போதுமான அளவு இலக்கண இலக்கியத்திற் சிறந்த தேர்ச்சி பெற்றவராயிருக்கின்றாரெனக் கருதுகின்றோம். குறைந்த அளவில் எஃப், ஏ., (F.A.) வகுப்புக்குரிய ஆங்கில அறிவு பெற்றாரானால் மேல்நாட்டு முறைப்படி தமிழ் நூல்களை வரலாற்றுச் சான்றுடன் ஆராயவும் எழுதவும் வல்லுநராவாரென்பது எம்முடைய சிறந்த எண்ணம்".

வண்ணாரப்பேட்டை **மனோன்மணீயம் பெ. சுந்தரம்பிள்ளை**
திருநெல்வேலி தமிழ்த்தாய் வாழ்த்தின் ஆசிரியர்
2-12-1895

(இந்த நற்சான்று திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் சுந்தரம் பிள்ளையவர்கள் பேராசிரியராக இருந்தபோது கொடுக்கப் பெற்றது.)

## என்றும் அணையா விளக்கு!

*தமிழ் அன்னையின் இயல்பான அழகுமுகத்தை மக்களுக்குக் காட்டினவர் மறைமலை அடிகள். தூசு படிந்து துகள் நிறைந்திருந்த அன்னை முகத்தை அலம்பிக் கழுவித் தூயதாக்கித் தமிழின உண்மை எழிலை உலகுக்குக் காட்டிய தமிழின் தலைத் தனித் தவப்புதல்வர் நமது அடிகளார். பிறமொழியின் துணையின்றித் தமிழ் தானே தனித்தியங்கித் தலைசிறக்கவல்லது என்பதை உலகுக்குக் காட்டிய பெரியார் நமது அகளார். சொற்பொழிவுத்திறனை ஒரு கலையாக வளர்த்துக் கற்போல் வார் நெஞ்சிலும் உணர்ச்சியைப் பாய்ச்சி அறிவுகொளுத்திய பெரியார் நமது அடிகளார். உலகிற்குகந்த உயர்நெறி தமிழ்நெறியாகிய சித்தாந்தச் செந்நெறியே என்பதை பறையறைவது போல் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதி நூல்களாக வெளியிட்டும், பல்லிடம் சென்று திரளான மக்களுக்குப் பேசியும் தெளிவுபடுத்திய பெரியார் நமது அடிகளார். தமிழ்நாட்டு மக்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் தடையேதுமின்றித் தனியாட்சிபூண்டு அரசு வீற்றிருந்த செம்மலார் மறைமலை அடிகள் இன்று உலகினை நீத்தனர். அவர்களின் ஆவி நிலைத்த அவ்வுடலும் காவி நனைத்த கல்லாடையும் இனி நாம் காண்பதரிது. ஆனால், அவர்களின் புகழ் உடம்பு உலகிற் பொன்றாது நிலை நிற்கும். தமிழ் உள்ளத்திலே அவர்கள் ஏற்றிவைத்த விளக்கு என்றும் அணையாது இருள்கடிந்து ஒளி பெருக்கும் என்பது திண்ணம்.*

**- பேராசிரியர் கோ. சுப்பிரமணிய பிள்ளை**

(பக். 47)

# மறைமலைய மாண்பு

## நுழைவுரை

தனித்தமிழ் என்ற அளவில் முன் நிற்கும் முழுதுரு எழில்வடிவர் தவத்திரு. மறைமலையடிகளாரே ஆவர்!

*முந்தை அடிகள் ஆகிய இளங்கோவடிகள், 'முத்தமிழ் அடிகள்' என முழக்கமிட நின்றார்!*

*இருபதாம் நூற்றாண்டு மறைமலையடிகளோ,* ***தனித்தமிழ்த் தந்தை*** *என்னும் தகவார்ந்த பெருமை பெற்றார்.*

*"தமிழ் தனித்து இயங்காது" என்றும், வடமொழி வழியது என்றும், "வடமொழித் துணையின்றி இயங்காது" என்றும், "உலக மொழிகளுக் கெல்லாம் தாய்மொழி வடமொழியே" என்றும் தமிழ்க் கல்வி வல்ல பெற்றியரும் முற்றும் மயங்கி யுரைக்க,*

*"வடமொழி உலக மொழிகளுக்குத் தாய்மொழி என்றால், அதற்கும் மற்றை மொழிகளுக்கும் தந்தை மொழி தமிழே" என்று கூறிய வடலூர் அடிகளார் புகழ்ப்பரப்பாளராய்ப் பொதுநிலைக் கழகம் கண்ட தவ அடிகளார்,* ***தனித்தமிழ்த் தந்தை*** *என்னும் பெருமை பெற்ற* ***மறைமலையடிகளார்*** *ஆவர்.*

*சிவனியம் சார்ந்த பெருமக்களும், பேரறிவர்களும் கூட, ஒப்பாராய், 'தனித்தமிழ்' (தனித்து அமிழ்) என்று பழிக்கவும் இழிக்கவும், துணிந்து நின்று, அவர் வெள்க; வெள்ளிடை மலையாகத் 'தனித்தமிழ்' என்பதை நிலை நாட்டிய நிறைமலை, மறைமலையடிகளாரே!*

*சிவனிய மடத்தினரும், வடமொழி வல்லாரும், 'தொல் காப்பியக் கடல்' எனப் புகழப்பட்டாருமாம் சாமிநாத தேசிகர், நாணமின்றி,*

"ஐந்தெ**ழுத்தா**ல் ஒருபாடை என்று **அறையவே நாணுவர்**
அறிவுடையோரே; **யாமும் அதுவே**"

*என்றும்,*

ஒன்றே ஆயினும் **தனித்தமிழ் உண்டோ?**"

*என்றும் - எழுதிப் பரப்பினாராக,*

*"ஒரு சொல் தானும் வேற்றுச் சொல் விரவா நூல் யாம் செய்வேம்" என்று ஐம்பான் நான்கு நூல்கள்* ***கலைமலி பேழையாய் எழுதிக் காட்சிப் படுத்திய*** *மாட்சியர் மறைமலையடிகளார்!*

**தொல்காப்பியக் காவல்**

*தமிழ் மொழிக்கு வாய்த்த தொல்காப்பிய வளநூல்,*

"வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே" (884)

*என்றும்,*

*மொழி பெயர்ப்புச் செய்தலிலும் முறைமை பேண வேண்டும் என்பதை,*

"மொழிபெயர்த்து அதர்ப்பட யாத்தல்" (1597)

*என்றும்,*

*பேச்சு வழக்கில் ஒரு கால் வேற்றுச்சொல் வந்து விடினும்,*

"மரபுநிலை திரிதல் செய்யுட் கில்லை" (1590)

*என்றும் - வரம்பாணை செய்தும், அச் செவ்வியல் வழித்தடம் சிதைந்தும் சீரழிந்தும், சேறும் சகதியும் நாறும் சிறுமையும் குறுமையும் வழிவழியே எய்த மூவாயிரம் ஆண்டுகளாய், அயலோர் சூழ்ச்சியாலும் திறவோர் மயக்காலும் ஏற்பட்ட அழிபாடுகளை எல்லாம்* ***தாமே ஓர் இயக்கமாய் இருந்து****, விழிப்பும் எழுச்சியும் ஊட்டியவர் மறைமலை அடிகளே என்பதால்,*

*"ஆரியத்தினின்று தமிழை மீட்டெடுப்ப தற்காக அரும் பாடுபட்டு இலக்கிய இலக்கண மரபோடு யான் கற்ற மொழிகள் முப்பது" என்னும் பாவாணர்,*

“மூவா யிரமாண்டு மோதும் வடமொழியால்
சாவாம் தகைநின்ற தண்டமிழை - மேவாக்
குமரித் தனிநிலைக்குக் கொண்டுவந்த **அப்பர்**
**அமரர் மறைமலை யார்**”

*எனப் பாடிப் பரவினார். ‘தனித் தமிழ்த் தந்தையார்’ என்ற பாராட்டும் இப் பாட்டின் தலைப்பில் வழங்கினார்.*

“நுண்ணிய நூல்பலவும் கற்பதே நோன்பாக
எண்ணிய வாழ்நாள் எலாமளித்துப் - பண்ணிய
**செந்தமிழ்நூல் ஒவ்வொன்றும் செப்பும் கடலறிவை**
**பைந்தமிழ் காக்கும் படை**”

*என அடிகள் கல்வி மேம்பாட்டையும் கலைத் திறப் படைப்புகளின் மேம்பாட்டையும் பாவேந்தர் பாரதிதாசனார் பாராட்டுகிறார்.*

**பல்துறை ஆற்றல்**

*அடிகளின் பல்துறை ஆற்றலை 1. பேராசிரியர், 2. பெரும் புலவர், 3. பாவலர், 4. ஆராய்ச்சியாளர், 5. மும்மொழிப் புலவர், 6. மொழிபெயர்ப்பாளர், 7. சொற்பொழி வாளர், 8. எழுத்தாளர், 9. பல்கலைச் செல்வர், 10. தனித்தமிழ்த் தந்தையார் என்று பாவாணர் பகுத்துக் காட்டுகிறார்.*

*மேலும் அவர் தம் நுண்மாண் நுழைபுலத்தை*

*“பனிமலை முகட்டின் உயர்வும், நீல ஆற்றின் நீளமும் அமைதி வாரியின் ஆழமும் அமைந்தவர் மறைமலையடிகள்” என்கிறார். (பனிமலை - இமயம்; நீல ஆறு - நைல்; அமைதிவாரி - பசிபிக்கு மாகடல்).*

**அடிகளார் நூல்கள்**

*அடிகள் பன்மாண் மாத்தமிழ் நூல்களை, நூலக இயக்கத் தந்தை அரங்க நாதரும், இந்நாள் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சியரும் அந்நாள் நூலகருமாகிய திருமிகு இரா. முத்துக் குமாரசாமி அவர்களும் 14 வகைமைப்படுத்தி வைத்தமை பெரும் பாராட்டுக்கு உரியதாம் அவை,*

1. மருத்துவம் 2. மறைபொருள் 3. இலக்கியம் 4. இதழ்கள் 5. சங்க இலக்கியம் 6. பாடல் 7. நாடகம் 8. புதினம் 9. கடிதம் 10. கட்டுரை 11. சமயம் 12. தத்துவம் 13. வரலாறு 14. சமூக இயல் என்பன.

முதற் குறள் வாத நிராகரணம் என்னும் மறுப்பு நூலே, அடிகளின் முதல் நூலாக வெளிப்படுகின்றது (1898) அந்நூன் மறுப்பு நயமே நாகை அடிகளை - பல்லவபுர அடிகளாக - தனித்தமிழ் அடிகளாக ஆக்க அரும் பெரும் தூண்டல் ஆயிற்றாம்.

அடிகளார் வரலாறு: கீழ்கடல் சார் நாகப்பட்டினத்தைச் சார்ந்த சிற்றூர் காடம்பாடி, ஆங்கு வாழ்ந்த அருந்தவப் பெருந்தகையர் சொக்கநாதர் - சின்னம்மையார்! இவ்விணையர் கொடையாய்த் தமிழன்னை செய்த தவப் பேற்றால் பிறந்தவர் வேதாசலம். பிறந்த பெரு மங்கல நாள் கி.பி. 15.07.1876.

சொக்கநாதர், சித்தமலம் அறுவித்த சித்தமருத்துவர்; அறிவ மருத்துவம் என்பதும் அது. அத்தொழில் அவர்க்கு வளத்தை வழங்கியது. அதனால் வேதாசலம் குறைவற வாழ்ந்தார்.

நாகப்பட்டினத்து **வெசிலியன் மிசன் பள்ளியில்** ஐந்து வகுப்புவரை பயின்றார்; சிறந்த மாணவராக விளங்கினார். ஆறாம் வகுப்பில் சேரும் நிலையில், அருமைத் தந்தையார் இயற்கை எய்தினார். ஆயினும் அன்னையார் உறுதியால் கல்வியைத் தொடர்ந்தார். அப்பள்ளியில் ஆங்கிலக் கல்விக்கு இருந்த முதன்மை தமிழுக்கு இல்லை. கிறித்தவ சமயம் பற்றி அன்றிச் **சிவனியம் பற்றி** அறிய வாய்ப்பில்லை என்னும் இரண்டு குறைகளையும் இளமையிலேயே உணர்ந்தார்.

வீட்டிலேயே தமிழ் நூல்களைப் பயின்று முதற் குறையையும், நாகையில் இருந்த **இந்துமதாபிமான** சங்கம் வழி இரண்டாம் குறையையும் நீக்கினார். பள்ளியிலும் குறையறக் கற்றார். வருவாய்க் குறையால் வாடும் அன்னைக்குச் சுமையாய் இல்லாமல் தனியே பயில்வதே இனியவழி என எண்ணி, நாகையில் **புத்தக வணிகராக விளங்கிய நாராயண சாமியார்** புலமையாலும் சிறந்து விளங்கியவர். ஆதலால் அவரிடம் தனியே இலக்கிய - இலக்கண - சமய நூல்களைக் கற்றார். நாராயணரின் முன்னை மாணவர் பேரா. **மனோன்மணீயம் பெ. சுந்தரனார்** என்பதையும் அறிந்தார். ஒன்பதாம் வகுப்பொடு பள்ளிக் கல்வியை நிறுத்தித் தனிக்கல்வியே கற்றார். தொல்காப்பியம்,

தொகை நூல்கள், திருக்குறள், திருச்சிற்றம்பலக் கோவை, இறையனார் அகப் பொருள் எனக்கற்றார்.

அடிகளார் இயற்றிய **திருவொற்றி முருகர் மும்மணிக் கோவை** முகப்பில், “எமது **பதினைந்தாம் ஆண்டில்** முறைப்படி துவங்கிய தமிழ்ப் பயிற்சியானது எமது **இருபத்தோராம் ஆண்டிற்குள்** தொல்காப்பியம், திருக்குறள், சிற்றம்பலக் கோவையார் என்னும் மூன்று நூல்களையும் முழுதும் நெட்டுருச் செய்து முடித்தேம் என்றும் வேறுசில நூல்களையும் முழுவதாக ஓதியதையும் கூறி,

இங்ஙனமாக, **விழுமிய தமிழ்ப்பழ நூல்களில் எமது கருத்து ஈர்ப்புண்டு நின்று பயின்ற பயிற்சியினாலேயே செய்யுளும் உரையும் தனிச் செந்தமிழ் நடையில் எழுதும் திறம் எமது இளமைப் பருவத்திலேயே எமக்கு வாய்ப்ப தாயிற்று”** என்கிறார். அவ்வாண்டு **கி.பி. 1897**. நாகை இந்து மதாபிமான சங்கத்திற்குச் சைவ சித்தாந்த சண்ட மருதம் என்னும் விருது பெற்ற **சோமசுந்தர நாயகர்** வந்து சொற்பொழிவாற்றினார். அவர் பொழிவில் வந்த கருத்தொன்றனை மறுத்து ஒருவர் எழுத, அதற்கு மறுப்பாக முருகவேள் என்னும் புனைபெயரில் மறுப்புரை எழுதினார். **அதனைக்கற்ற நாயகர்**, மீளப் பொழிவுக்கு வருங்கால் முருக வேளைச் சந்திக்க விரும்பினார். அச்சந்திப்பின் பயனே உன்னை விரைவிலே சென்னைக்கு வருவிப்போம் நீ அந்தப் பக்கங்களில் இருப்பதே நல்லது என்று கூறினார். இதுவே அடிகளார்க்குச் சென்னை வாழ்வு அமைய முதல் தூண்டல் ஆயிற்று. அடிகளுக்குப் பதினேழாம் வயதில் (1893) திருமணம் நிகழ்ந்தது. துணைவி தம் மாமன் மகள் சவுந்தர வல்லி என்பார்.

### திருவனந்தபுரம்

நாராயணசாமி அவர்களின் முன்னை மாணவராம் பேரா. சுந்தரனார் திருவனந்த புரத்தில் இருந்தார். அவரியற்றிய மனோன்மணீய நாடக நூல் கற்று அதன் அருமை கண்டு, பேராசிரியரைக் காணவிரும்பினார். அதனால் தம் ஆசிரியரோடு திருவனந்தபுரம் சென்று பேராசிரியரோடு உரையாடினார். வேதாசலனார் இளம் பருவத்தையும் மூதறிவையும் அறிந்த சுந்தரனார் வியப்புற்றுத் தகுதிச் சான்று ஒன்று வழங்கினார். சிறிது காலம் திருவனந்த புரத்தில் ஆசிரியப் பணியும் செய்தார்.

அவ்விடத்தின் பருவநிலை ஒவ்வாமையால் நாகைக்கே திரும்பினார்.

**சென்னை:** சோமசுந்தரனார் முன்னே கூறியபடி வேதாசலரைச் சென்னைக்கு அழைத்து அறிஞர் நல்லுசாமி என்பார் நடாத்திய **சித்தாந்த தீபிகை** என்னும் இதழாசிரியர் ஆக்கினார். பின்னே சென்னை **கிறித்தவக் கல்லூரி**க்கு ஒரு தமிழ்ப் பேராசிரியர் வேண்டியிருத்தல் அறிந்த சோமசுந்தரனார் வேதாசலனாரை அக்கல்லூரிப் பேராசிரியராக்க முயன்றார். அதுகால் தமிழ்த்துறைத் தலைவராக இருந்தவர் வி.கோ சூரியநாராயண சாத்திரியார் என்னும் பரிதிமால் கலைஞர். கல்லூரி முதல்வர் **வில்லியம் மில்லர்** என்பார்.

9.3.1898 இல் வேதாசலனார் பணியேற்றார். அங்குப் பதின்மூன்று ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்.

அக்கல்லூரிக் காலத்தே இளங்கலை மாணவர்க்குப் பாடமாக இருந்த **முல்லைப்பாட்டு** (1903) **பட்டினப்பாலை** (1906) என்பவற்றுக்கு ஆராய்ச்சி உரை எழுதினார்.

“அவ்வுரை நூலை வாங்கிக் கற்ற மாணாக்கரும் ஏனைத் தமிழறிஞரும் புதுமுறையாக எழுதப்பட்ட அவ்வுரைப் பாங்கினைப் பின்பற்றிப் பழைய தமிழ் நூல்களை ஆராய்வதில் கிளர்ச்சி பெறலானார். இப்புதுமுறை உரை, தமிழ் நூலாராயும் வகைகளை இனிது விளக்கி அறிஞர் பலர்க்கும் அக மகிழ்ச்சியினை விளைத்தமை கண்டு இனி, இத்தகைய **உரைகளையே எழுதுதல் வேண்டும் என எமதுள்ளம் பெரிதும் விழைந்தது**” என்கிறார்.

சென்னைப் பல்கலைக் கழகத்தார்ஆங்கிலமும் வடமொழியும் கட்டாயமாகப் படித்தல் வேண்டும் என்றும், தாய்மொழிப் பாடத்தை விருப்பப் பாடமாகக் கற்பிக்கலாம் என்றும் ஒரு தீர்மானம் ஆட்சிக்குழுவில் கொண்டு வந்தனர். ஒரு பாடம் விருப்பப்பாடம் எனப்பட்ட பின்னர் அதனைக் கற்க வருவார் எவர்? தமிழ் கற்கும் மாணவர் எண்ணிக்கை குறையவே ஆசிரியப் பணியிடமும் குறைய வேண்டுவதாகி, அடிகளார் 31.1.1911 ஆம் நாளுடன் கல்லூரிப் பணியை முடிக்க வேண்டிய தாயிற்று.

**மாணவர்:** இக்காலத்தில் அடிகளின் மாணவராக இருந்தாருள், **தணிகைமணி செங்கல்வராயர், இரசிகமணி**

***டி.கே.சி, நாவலர் ச.சோ. பாரதி, பேரறிஞர் ச. வையாபுரியார்*** *முதலோர் சிலர்.*

*தணிகைமணியின், தேவார திருவாசகச் சொல்லடைவு ஒரு பிறப்பளவில் செய்யக் கூடியதா?*

*நாவலர் ச. சோ. பாரதியாரின் ஆய்வுத் துணிவு எத்தனை கசடுகளை நீக்கியது? வையாபுரியார், கால ஆய்விலும், வடமொழிப் பிடிவாதத்திலும் தம்மைச் சால்பு ஆய்வில் இருந்து விலக்கினாலும், சங்க இலக்கியப் பதிப்பு, நிகண்டுப்பதிப்பு, பல்கலைக் கழக அகரமுதலிப் பதிப்பு இவற்றைச் செய்த அருமை என்ன? புறத்திரட்டு, களவியல், காரிகை ஆயவற்றின் பதிப்புச் சிறப்பு என்ன?*

*இவர்கள் பணியும் அடிகளாரைத் தழுவுதல் உண்மை தானே!*

**சமரச சன்மார்க்கம்**

*கல்லூரிப் பணியில் இருந்து வீடுபெற்ற அடிகளார்,* ***பல்லவபுரத்தை*** *வாழ்விடமாகக் கொண்டார். சமரச சன்மார்க்க நிலையம் தோற்றுவித்தார்.*

*எல்லாச் சாதியார்க்கும் எல்லாச் சமயத்தார்க்கும் அங்கீகாரமான சீவகாருணிய ஒழுக்கத்தையும், சமரச சன்மார்க் கத்தையும் பிற்காலத்தில் மிக வலியுறுத்திப் போதித்த ஆசிரியர் ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகளே ஆவார். அச்சுவாமி கள் வலியுறுத் திய அவ்விரண்டு கொள்கைகளையும் எங்கும் வலியுறுத்தி விளக்கி அன்பர்களை ஒருங்கு கூட்ட வேண்டி அச்சுவாமிகள் இட்ட பெயராலேயே, 'சமரச சன்மார்க்க நிலையம்' என்னும் இது தாபிக்கலாயிற்று. இந்நிலையத்திற்கு முன் ஆசிரியர்* ***திருவள்ளுவ நாயனார்****; பின் ஆசிரியர் இராமலிங்க சுவாமிகள் ஆவர் என்று பெயரீடு செய்து கொள்கைகளையும் வகுக்கிறார்.*

**குடும்பம்**

*1898இல் அடிகளார் சென்னைக்கு வரும்போது அவர்தம் அன்னையார் சின்னம்மையார், துணைவியார் சவுந்திரம் அம்மை யார், செல்வி சிந்தாமணி, அடிகளார் என்னும் நால்வரைக் கொண்ட குடும்பமாக இருந்தது.*

*1911இல் பல்லவ புரத்தில் குடிபுகும் போது நீலாம்பிகை, திருஞான சம்பந்தம், மாணிக்கவாசகம், திருநாவுக்கரசு, சுந்தர மூர்த்தி என்னும் மக்களும் கொண்ட ஒன்பதின்மர் குடும்பமாக இருந்தது. பல்லவுரம் புகுந்த பின் திரிபுர சுந்தரி பிறக்கப் பதின்மன் குடும்பம் ஆயிற்று. இந்நிலையிலேயே 27.08.1911இல் சைவத் துறவியர்க்குரிய* ***துறவாடை (காவி) கொண்டு சுவாமி வேதாசலம் ஆனார்***. *சுவாமி வேதாசலம் என்பதன் தனித்தமிழாக்கமே மறைமலையடிகள் என்பது வெளிப்படை. முன்னேயே அவரை* ***அடிகள்*** *என்றது அவர்தம் மாண்பு கருதியேயாம்.*

**மீள்பார்வை**

*நாம் மீள்பார்வை ஒன்றுபார்க்க வேண்டும்.*

*அடிகள் 21ஆம் அகவையிலேயே தனித்தமிழ் ஆய்வுத்திறம் கைவரப் பெற்றார்.*

*1903, 1907 ஆகிய ஆண்டுகளில் முல்லைப்பாட்டு, பட்டினப்பாலை ஆகிய நூல்களுக்கு ஆய்வுரை வழங்குங்கால் இதிலுள்ள சொற்கள் இத்தனை; இவற்றுள் செந்தமிழ்ச்சொல் இத்தனை; வேற்றுச் சொல் இத்தனை - என அறுதியிடுகிறார்.*

*ஆதலால், தனித்தமிழ் என்னும் தோற்றம்* ***1916 ஆம் ஆண்டில் நீலாம்பிகையார் தூண்டலால் ஏற்பட்டமை என்பது, அகத்தே அமைந்து கிடந்த வித்து, முளை விட்டு வெளிப்பட்ட நிலையாம்.*** *அவ் வெளிப்பட்ட நிலையும் உடனே பற்றிப் படரவில்லை! மேலும் சில ஆண்டுகளின் பின்னரேயே சமசர சன்மார்க்க நிலையம்,* ***பொதுநிலைக் கழகமாகவும்,*** *ஞானசாகரம்* ***அறிவுக் கடலாகவும்,*** *சுவாமி வேதாசலம்* ***மறைமலையடிகள்*** *ஆகவும் படிப்படியே கிளர்கின்றனவாம்!*

*ஓர் அரிய அமைப்பு உருவாகும் நிலையும், ஓர் அரிய கண்டு பிடிப்பு உலகவர் அறிய வெளிப்படலும், அவை இயக்கமாகவும் பயனாகவும் ஆகின்ற நிலையும் பற்றிய விளக்கம், அடிகளார் தனித்தமிழ் இயக்க வரலாற்றில் அடங்கியுள்ளதாம்!*

***எதிரிடைத் தூண்டல்:*** *மேலும் ஒன்று: ஒரு நேரிடைத் தூண்டலினும் எதிரிடைத் தூண்டல் வலிமை மிக்கது என்பதும், உள்ளத்து உறுதியை வெள்ளப் பெருக்காய் வெளிப்படுத்த வல்லது என்பதும் தெளிவாம்.*

**"ஒன்றே ஆயினும் தனித்தமிழ் உண்டா?"** என்று கற்றறிந்த தமிழர் ஒருவரே வினாவி நகைத்தல், பெற்ற தாய் மொழிப் பிறவிக்கு உற்ற தகைமை ஆகாது என்பதும், அதனை உணர்ந்த அப்பிறவி **பாம்பன் குருபாத அடிகள் போல்** சேந்தன் செந்தமிழ் என்ன ஒரு நூலியற்றித் தமிழ் தனித்து இயங்கவல்ல தனி உயர் மொழி என்று நிலைநாட்டியிருப்பின் வழிபடத்தக்க பிறவியாய் அமைந்திருக்கும்! அப்பேறு அதற்கு வாய்க்காமை,

"துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
மற்றை யவர்கள் தவம்" (குறள் 263)

என்னும் வள்ளுவர் வாய் மொழிப்படி,

தனித்தமிழ்த் தந்தைப் பேறு மறைமலையடிகட்கு வர இருப்பதற்கே நேரிட்ட நேர்ச்சியாம் என்க.

**இயக்கம்**

அடிகள் இயக்கம் ஆலமரமெனக் கால்பல கொண்டு அகல அகல விரியத் தனித்தமிழ் இயக்கமாய், உலகத்தமிழ்க் கழகமாய், பாவலரேறு தமிழ்க் களமாய், சேரர் கொற்றமாய், தமிழ்க்காப்புக் கழகமாய், தமிழ்ப் பாதுகாப்புக் கழகமாய், தனித்தமிழ் இலக்கியக் கழகமாய், தமிழ் வளர்ச்சிக் கழகமாய், மறைமலையடிகள் மன்றமாய், தமிழ்க்காவல் குழுவாய், இயற்றமிழ்ப் பயிற்றகமாய், பாவாணர் தமிழ் இயக்கமாய் ஆங்காங்கு முகிழ்த்து முனைப்பொடு கடனாற்ற ஏவியதாம்.

**நூலகம்**

அடிகள் நூற்றொகை, அருமணிக் குவையன்ன நாலாயிரம் நூல்களைக் கொண்டது. எதிரது உணர்ந்து, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்கு முற்கொடையாக வழங்கியதால், நாலாயிரம் **நாற்பதாயிரமாய் மேலும் மேலும் விரிந்து மறைமலையடிகள் நூலகப்** பெயரால், பெருமைமிகு வள்ளலார் முதற்கண் பொழிவு செய்த பெரியவர் சோமு அவர்கள் இல்லமே வாய்க்க உலக வளமாக்கியதாம்! அதன் வழியாகவே அடிகள் தாமே வெளியிட்ட நூல்களும், வெளியிடாமல் கழக வழி வெளிவந்த நூல்களும், அடிகள் காலத்திற்குப் பின் வெளிவந்த நூல்களும் ஆகிய முழுமைத் தொகுதிகளும் ***கி.பி. 1898 முதல் 1969***

***வரை முதற்பதிப்பாக வெளிவந்தவை.*** *அவற்றுள் படிகள் கிட்டுதற்கு அரியவையும் உண்டு. அடிகள்* ***நூல்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்ட பேற்றால்,*** *இன்று வாய்த்த நூல்கள் அனைத்தை யும் ஒட்டுமொத்தமாக வழங்கும் பெருவாய்ப்பைத்* ***தமிழ்மண் பதிப்பகம்*** *பெற்றதாம்.*

**வெள்ளச் சேதம்**

*அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு பதிப்பகத்துள் புகுந்து அச்சு அடிக்கப்பட்டதும், அடிக்கப்பட இருந்ததும், கணினிப்படுத்தி வைத்த குறுவட்டுகளும், மூலநூல்களும் என வாரி அள்ளிக் கொண்டு போனமை,* ***களத்துக்கு வந்த கதிர் மணிகள், களஞ்சியத்திற்கு வாராமல் போய, பேரழிவு ஒப்பதாம். ஆதலால்,*** *நூல்களை மீளத் தேடவும், கணினிப்படுத்தவும், குறுவட்டு ஆக்கி அச்சிடவும் என மும்மடங்குப் பணியும் பேரிழப்பும் பெருத்த அவலமும் உண்டாக்கிற்றாம். அந்நிலையில்,*

> "ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
> தாழா துஞற்று பவர்"

*என்னும் வாய்மொழியை* ***வாய்மை மொழியாக்கிய துணிவுச் செல்வர் இளவழகனாரும் அவர் குடும்பத்தவரும் ஆவர்!***

*முன்னறிவிப்புத் திட்டப்படி நூலுக்கு ஆர்வமாய்ப் பணம் செலுத்தியோர்க்கும் நூல் காலத்தில் கிட்டா உளைச்சல் இல்லாமல் போகாதே! அவர்களும் அமைந்து தாங்கல், இயற்கை இயங்கியல் வழியதாம்.*

**வெளியீடுகள்**

***தமிழ்மண் பதிப்பகம் தமிழ்மொழி இன மண்வளம் - வளர்ச்சி மீட்டெடுப்பு - என்பவற்றை முன்வைத்துத் தமிழ்ப் போராளி இளவழகனாரால் தொடங்கப்பட்டதால்,*** *பேரிழப்புக் காம் எனத் தெளிவாகத் தெரிந்தும், இசைக் கலைக்கு வாய்த்த ஒப்பற்ற களஞ்சியமாய் வாய்த்த - கருணாமிர்த சாகரத்தை வெளியிட்டதாம்! முன்னை வந்த முதற்பகுதி பேரிழப்பாக்கியும் அதன் பின்னைப் பகுதிகளையும் அரிதின் முயன்று வெளியிட்டது! மொழிஞாயிறு பாவாணர்; ஈழத்து அறிஞர் ந.சி. கந்தையா; வரலாற்றறிஞர் சாமிநாத சர்மா, உரைவேந்தர் ஔவை சு.து;*

*நாவலர் ந.மு.வே; பண்டித வித்துவான் தி.வே. கோபாலர்; சாமி சிதம்பரனார்; மயிலை சீனி. வேங்கட சாமியார்; பேரறிஞர் க. வெள்ளை வாரணனார்; பாவலர் குழந்தையார்; பாவலர் முடியரசனார்; பாவேந்தர், தொல் பொருள் கல்வெட்டு ஆய்ஞர் சதாசிவனார், சாத்தன்குளம் இராகவன் நூல்களையும் எளியேன் நூல்களையும் முழுமை முழுமையாக வெளியிட்டது.*

*தொல்காப்பியம்- பாட்டு - தொகை - காப்பியம் - கீழ்க்கணக்கு - தமிழ்நாட்டு வரலாறு - ஆங்கிலம் வல்ல அறிஞர் இராம நாதனார் நூல்களையும், யாழ்ப்பாண அகராதி முதலாம் அகராதித் தொகுதிகளையும் வெளியிட்டது. பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதிதொட்டு, இருபத்தோராம் நூற்றாண்டின் முற்பகுதி வரை வெளிவந்த - தமிழுக்கு ஆக்கமாம் நாட்டுடைமை ஆக்கப்பட்ட நூல்களை எல்லாம் - ஓரிடத்துப் பெற்று, ஒரு தனித்தமிழ் நூலகம் அமைக்கும் அளவுக்கு அச்சிட்டு வழங்கிய பெருமை இளவழகனார்க்கு உண்டு. அவரே அன்றி அவர் துணையையும் மக்களையும் உறவையும் அன்பையும் நண்பையும் ஒருங்கே இணைத்து, அறிஞர் பெருமக்கள் பலர் அரவணைப்பையும் வாய்ப்பக் கொண்டு வாழும் இயல்பு அவர்க்கு வாய்த்தலால் மட்டுமே, இவ்வாறு செயற்கரிய செய்ய வாய்த்ததாம் என்பதற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்பவரும் அவர்.*

**மறைமலைய மாண்பு**

*மறைமலையம், தனித்தமிழ் இயக்கம்! தமிழ்த் தனிப் பெருவளம்! முத்தமிழ்ச் சுரப்பு! சீர்திருத்தச் செழுமை! வாழ்வியல் வளம்! கலைச் சொல்லாக்கக் களஞ்சியம்! பண்டைத் தமிழர் வரலாற்றுப் புதையல்! ஆய்வியல் வழிகாட்டி! பொழிவுப் பொலிவு! எழுத்தின் எழில்! மொழிக் காவல் முனையம்! முட்டறுக்கும் முழுதுறு கொடை! மீட்டெடுக்கும் மேதகைமை! அள்ள அள்ளக் குறையா அணிமணிக் குவியல்! எனல் மெய்மை விளக்கமாம்!*

"புத்தகம் ஏற்றுப் பொலிவதே புத்தகம்"
வாழிய நலனே! வாழிய நிலனே!

*திருவள்ளுவர் நிலையம்,* *இன்ப அன்புடன்*
*7, இராமன் தெரு,* ***இரா. இளங்குமரன்***
*திருநகர், மதுரை - 6*
*625006.*

## மலைக்க வைக்கும் மறைமலையம்!

### பதிப்புரை

மொழியே இனமக்கள் முன்னேற நல்ல
வழியாம் அதனை வளர்க்க -பழியாய்த்
தமிழயரத் தாழ்ந்தான் தமிழன் அவனே
தமிழுயரத் தானுயர்வான் தான்

*மொழிப்பேரறிஞர் பாவாணர் அவர்கள் 'மொழியின் வழியாகவே மொழிபேசும் மக்கள் முன்னேற முடியும்' எனக் கூறுகிறார். உலகம் முழுதும் இவ்வுண்மை உணரப்பட்டுள்ளதை வரலாறு காட்டுகிறது.*

*பாவாணரை அறிவுலகம் சரியாக அடையாளம் காண்பதற்குக் காரணமானது மறைமலையடிகளார் தந்த பாராட்டு!*

*மறைமலையடிகள் (15.7.1876 - 15.9.1950) தேவநேயப் பாவாணர் (7.2.1902 - 16.1.1981) இருவரும் தனித்தமிழியக்கத்தைத் தாங்கி நிற்கும் தூண்களாகப் போற்றப்படுபவர்கள்.*

*மறைமலையடிகளார் 1916இல் தோற்றுவித்த தனித்தமிழ் இயக்கம், நூற்றாண்டை எட்டியுள்ள மகிழ்வான நேரம் இது!*

*தனித்தமிழியக்க நூற்றாண்டை நினைவு கூரும் வகையில், தனித்தமிழியக்கத் தந்தை மறைமலையடிகளாரின் எழுத்து, சொற்பொழிவு, நாட்குறிப்பு, கடிதங்கள் அனைத்தையும்* ***'மறைமலையம்'*** *எனும் பெருந்தொகுப்பாகத் தமிழ்மண் பதிப்பகம் வழி வெளிக்கொணரத் திட்டமிட்டோம்.*

*உலகம் முழுதும் பரவி வாழும் உணர்வு குன்றாத தமிழர்கள் தந்த ஊக்குவிப்பு, இந்தப் பெருந்திட்டத்தை நிறைவேற்றித் தீரவேண்டும் எனும் உறுதியை எனக்குத் தந்தது.*

*தனித்தமிழ் இயக்க அறிஞர்களும் ஆர்வலர்களும் அடிகளாரின் அரிய படைப்புகள் பலவற்றையும் தேடித்தேடி வழங்கி வழிகாட்டினர்; வலிமையூட்டினர்.*

*மறைமலையடிகளார் 1898ஆம் ஆண்டிலிருந்து எழுதி வந்துள்ளார். அறிவுக்கடல் (ஞானசாகரம்) இதழை 1902ஆம் ஆண்டிலிருந்து வெளியிட்டு வந்துள்ளார். அவரின் படைப்புகள் பெருவெள்ளமாய் வெளிவந்திருக்கின்றன.*

*அச்சேறாதவை, பெயர் கூடக் கேட்டறியாதவை, பெயர் தெரிந்தும் பார்வைக்குக் கிட்டாதவை - எனப் பலவகையாய்க் கிடைத்தன அடிகளாரின் அரும்படைப்புகள்! அவற்றை* ***'மறைமலையம்'*** *எனும் தலைப்பில் 34 தொகுப்புகளாக ஒருசேரப் பார்க்கும்போது, தமிழுலகம் வியப்படைவது உறுதி.*

மொழிநலம் இனநலம் பேணுதல் அன்றோ
முழுநலம் பெறுவழி! நாம்பெறல் என்றோ?

*இப்படிக் கவலையோடு கேட்பார்* **பாவலரேறு பெருஞ் சித்திரனார்** *(10.3.1933 - 11.6.1995). அவரின் 'தென்மொழி' இதழ் 1.8.1959 இலிருந்து வெளிவரத் தொடங்கிய பின்புதான், தனித்தமிழ்த் திசை நோக்கி நூற்றுக்கணக்கானோர் நடைபோடத் தொடங்கினர். அதில் நானும் ஒருவன்.*

*பெருஞ்சித்திரனாரின் எழுத்து காட்டிய அடையாளத்தால், பாவாணர் நூல்கள் எனும் அறிவுப்புதையல் பலர் கைகளிலும் குடியேறியது.*

*பாவாணர் நூல்கள் வலியுறுத்திப் பேசியதால், மறைமலை யடிகளாரைத் தேடிப்பயிலும் ஆர்வம் தமிழுலகில் புத்துயிர் பெற்றது.*

*ஆரியத்தை எதிர்ப்பதிலும் சமற்கிருதத்தை விலக்கு வதிலுமே தமிழின மேம்பாடும் தமிழ்க் காப்பும் அடங்கியிருக்கிறது. அவ்வுணர்ச்சியைத் தமிழர் நெஞ்சங்களில் அரும்ப வைத்தது* ***திராவிடர் இயக்கம்;*** *மலர்ந்து விரியவைத்தது* ***தனித்தமிழ் இயக்கம்!*** *குமுக, அரசியல், பண்பாட்டு மலர்ச்சிக்கு இந்த ஈரியக்கங்களின் பேருழைப்புப் பயன்பட்டது.*

*தமிழகத்தில் தனித்தமிழ் உணர்வு கி.மு. 7ஆம் நூற்றாண்டுக்குப் பின் தளரத் தொடங்கியது; 10ஆம் நூற்றாண்டுக்குப் பின் சரியத்*

*தொடங்கியது. வடமொழி வெள்ளத்தில் தமிழ் இழுத்துச் செல்லப்பட்டு விடாமல் காப்பாற்றியோர் கம்பரும் பவணந்தியும்! பின்வந்தோருக்கு அந்தக் காப்புணர்ச்சி இல்லாமல், அயன் மொழிப் பற்றுக்கு அடிமையானதால் தமிழும் தமிழினமும் பெற்ற இழப்புகள் ஏராளம்!*

*அயன்மொழிச் சேற்றிலிருந்து தமிழை மீட்கும் முயற்சி ஆங்கிலேயர் வருகையையொட்டிப் புத்துயிர் பெற்றது. வள்ளலார், பாம்பன் சாமிகள், வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள், சுப்பிரமணியசிவா, பரிதிமாற் கலைஞர் முதலிய பலரும் தொடக்க விதைகளாயினர்.*

*கோவை அவிநாசியில் பிறந்து விருதுநகரில் வாழ்ந்த விருதை சிவஞானயோகி 19.11.1908 ஆம் நாள் 'திருவிடர் கழகம்' தொடங்கித் தனித்தமிழ் உணர்ச்சிக்கு வேகங்கூட்டினார். அவ்வமைப்பில் உறுப்பினராயிருந்தவர் சுவாமி வேதாசலம் (மலைமலையடிகள்).*

*மறைமலையடிகள் எனத் தம் பெயரைக் கொண்டு, **1916இல்** அவர் தொடங்கியதே **தனித்தமிழ் இயக்கம்**.*

'துறைமிகு ஆங்கிலம் மறைவட மொழியொடு
தூய்தமிழ்ப் பேரறிஞர் - தனித்தமிழ்
தோற்றிய ஓரறிஞர்'

*பாவலரேறு பெருஞ்சித்திரனார் பாடியதற்கேற்ப, மறைமலை யடிகளார் தமிழ், ஆங்கிலம், சமற்கிருதம் முதலிய பன்மொழியிலும் புலமை மிக்கவர்.*

*பன்மொழிப் பேரறிஞரான மறைமலையடிகளார் தமிழுக்கும் தமிழருக்கும் ஆதரவாக நின்றதால் எதிர்ப்புக்கும் இழப்புக்கும் ஆளாக்கப்பட்டார். ஆனாலும் உறுதி குன்றாமல் தமிழுக்கு ஆதரவாய் உழைக்கும் உள்ளத்தோடிருந்தார். அதனால், தமிழர் உள்ளங்களில் இன்றளவும் மாறாப் பெருமையோடு அவர் வீற்றிருக்கின்றார்.*

"வாழ்த்தாத நாளில்லை வையகம்
மறைமலை யடிகள் மறையாத் திருப்பெயர்
வாழ்த்தாத நாளில்லை வையகம்"

பாவேந்தர் பாரதிதாசன் அவர் மாண்பினைப் பாடி மகிழ்ந்ததும், தம் 'குடும்ப விளக்கு' நூலினை மறைமலை யடிகளுக்குக் காணிக்கையாக்கி வழங்கியதும், அவரின் உறுதி தளராத உள்ளமும் உழைப்பும் கண்டு போற்றிய நன்றிக் கடன் என்பதில் அய்யமில்லை.

சென்னையில் கடந்த இருபது ஆண்டுகளாகச் செயல்பட்டு வரும் **தமிழ்மண் பதிப்பகப்** பணிகளைத் தமிழுலகம் அறியும்.

வாழும் தலைமுறைக்கும் வருங்காலத் தலைமுறைக்கும் வழிகாட்டவல்ல தமிழறிஞர்கள் பலரின் நூல்களை முழுமுழுத் தொகுப்புகளாக வழங்கியிருப்பது தமிழ்மண் பதிப்பகத்தின் முடிப்பினை (சாதனை)யாகப் போற்றப்படுகிறது.

தமிழ் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட அறிஞர்களைக் கண்டறிந்து, அவர்களின் நூல்களை முழுமையான தொகுப்புகளாகத் தமிழ்மண் பதிப்பகம் வெளியிட்டு வருகிறது. அவை காலம் முழுதும் பயன்படவல்ல கருவி நூல்கள் என்பதை அறிஞர் உலகம் அறியும்!

தமது நலத்தை ஒதுக்கி வைத்து, தமிழ் நலத்தைக் காக்க வாழ்ந்த அறிஞர்களின் அனைத்து நூல்களையும் ஒரு சேரத் தொகுத்து முழுத் தொகுப்பாக வழங்குவது பெரும்பணி! அதனைத் தமிழ்மண் பதிப்பகம் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது. தொகுப்பு நூல்களின் பட்டியலைப் பின்னிணைப்பில் காண்க.

தமிழுக்காக உழைக்கும் உணர்வை இளமையில் எம்மிடம் ஏற்படுத்தியோருள் பெரும்புலவர் நக்கீரனாரும் அவர்தம் இளவல் புலவர் சித்திரவேலனாரும் குறிப்பிடத்தக்கோர்! எம் நன்றிக்குரியோர்!

தனித்தமிழ் ஆர்வம், திராவிடர் இயக்க ஈடுபாடு எனும் இரு சிறகுகளால் எம்மை எழவைத்தவர் பெரும்புலவர் நக்கீரனார்! அவரை எண்ணிக் கண்பனிக்க நன்றி கூறுகிறது எம் நெஞ்சம்.

காலப்பழமையாலும் பராமரிப்புக் குறைவாலும் அழிய நேர்ந்த தமிழிலக்கியங்கள் அளவற்றவை! அவற்றில் ஒருபகுதியை யாவது மீட்டு நம் கைகளுக்கு வழங்கியோர் ஆறுமுகநாவலர், சி.வை. தாமோதரனார், உ.வே.சாமிநாதர் முதலிய சான்றோர் பெருமக்கள்!

*தமிழிலக்கியப் பெருஞ்செல்வத்தை மீண்டும் மீண்டும் அச்சாக்கி, அனைவர் கைகளையும் எட்டச் செய்த பெருமை - சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், உ.வே.சா. நூலகம், மணிவாசகர் பதிப்பகம் முதலிய பதிப்பாளர்களுக்கு உரியது.*

*அச்சுத்துறை அறிமுகமான பின்பே, அறிவுத்துறை அனைவருக்கும் பொதுச்சொத்தாகும் வாய்ப்பு வந்தது. எட்டாக் கனியாக ஓலைச் சுவடிகளில் முடங்கிக் கிடந்த இலக்கியச் செல்வங்கள், எல்லோருக்கும் எளிதாய்க் கிடைக்கும் பணியைச் செய்த பதிப்பாசிரியர்களும், பதிப்பாளர்களும் நம் நன்றிக் குரியோர்!*

*இரவு பகல் பாராது முதுமையைக் கருதாது உழைக்கும் மனவுரத்தை முன்னோடிப் பதிப்பாசிரியர்களின் பணியே எமக்கு வழங்கியது.*

*அரசும், பல்கலைக் கழகங்களும், அறநிறுவனங்களும், சமய பீடங்களும் ,பெரும் இயக்கங்களும், பெரும் செல்வர்களும் செய்ய வேண்டிய பெருந் தமிழ்ப்பணி இது! எளியவர்களால் இயங்கும் தமிழ்மண் பதிப்பகம் பெருந்தமிழ்ப் பணிகளை இன்னல்களுக்கு இடையில் அருமுயற்சியோடு செய்து வருவது, உள்ளவுரம் ஒன்றினால்தான்!*

“வல்லமை சேர்க்கும் வலிமையுண் டாக்கும்!
வண்டமிழ் நைந்திடில் எதுநம்மைக் காக்கும்?”

*காக்கும் தமிழைக் காக்கும் உணர்வைப் பாவேந்தர் பாடல் வரிகள் தந்தன.*

*அச்சுக்கு எட்டாமலும் கைக்குக் கிட்டாமலும் இருந்த பேரறிஞர் பலரின் நூல்களை நாட்டுடைமையாக்கி திராவிடர் இயக்க அரசுகள் வழங்கின. அதனால், அறிவு பரவலாகும் வாய்ப்புகள் உருவாயின.*

*‘சரிவும் இழப்பும் நமக்கு வந்தாலும் தமிழுக்கு வரக்கூடாது’ என எண்ணி உழைக்கும் இயக்கங்களும் அமைப்புகளும் தமிழ் நாட்டில் வற்றாமல் வளர்ந்தபடி இருக்கின்றன.*

*திருவிடர் கழகம் (1908)*
*தனித்தமிழ் இயக்கம் (1916)*
*தென்னிந்திய நலஉரிமைக் கழகம் (1916)*

*சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கம் (1934)*
*தமிழ்ப்பாதுகாப்புக் கழகம் (1937)*
*தமிழறிஞர் கழகம் (1943)*
*தமிழ்ப் பேராயம் (1959)*
*தமிழ்க்காப்புக் கழகம் (1961)*
*தனித்தமிழ்க் கழகம் (1964)*
*உலகத்தமிழ்க் கழகம் (1968)*
*தமிழியக்கம் (1972)*
*தமிழ்ச் சான்றோர் பேரவை (1998)*

*தமிழ் மலர்ச்சிக்கும் தனித்தமிழ் வளர்ச்சிக்கும் அடித்தளம் அமைத்த இத்தகு அமைப்புகளுக்கு மூல விசையாகத் திகழும் பெருமையைப் பெறுவோர்* ***மறைமலையடிகளாரும் பாவாணருமே!***

*தமிழ் வளத்திற்கும் தமிழர் நலத்திற்கும் சிவனிய மேம்பாட்டிற்கும் மறைமலையடிகளார் ஆற்றிய பணிகள் அளப்பரியவை. அவை தொடர்பாக அவர் ஆய்ந்தளித்த அறிவு முத்துகள் எண்ணற்றவை!*

*அடிகளாரின் அனைத்துப் படைப்புகளும் பொருள்வழிப் பிரிக்கப்பட்டு, காலவரிசையில் 34 தொகுப்புகளாகத் தொகுக்கப் பட்டு* ***'மறைமலையம்'*** *என உங்கள் கைகளில் இப்போது தவழ்கின்றது.*

*பல தலைமுறைகளுக்குப் பயன்படும் அறிவுக் கருவூலம் இது!*

*தமிழர் இல்லந்தோறும் இருக்கவேண்டிய அருந்தமிழ்ச் செல்வம் இது!*

*அறிவுலகத்தால்* ***'மறைமலையம்'*** *வரவேற்கப்படும் என்னும் நம்பிக்கை எமக்குண்டு. நூற் சுரங்கத்தில் நுழைய அழைக்கிறோம்.*

"தனக்கென வாழ்வது சாவுக்கொப்பாகும்
தமிழ்க்கென வாழ்வதே வாழ்வதாகும்"

*எனும் பாவேந்தர் வரிகளை நினைவுக் கூறுகிறோம்.*

**- கோ. இளவழகன்****- கோ. இளவழகன்**

## நூலுரை

*காதல் கதை இது.* **கோகிலாம்பாளே** *தன் காதலன் கடிதத்தை உள்வாங்கி, தான்மறுமொழி எழுதுவது போல் எழுதப்பட்ட புனைகதை.*

*சாதி ஒழிப்பில் உருக் கொண்டது எனின் சாலும். இதன் முதற்பதிப்பு 1921இல் "பல்லாவரம் பொது நிலைக்கழக ஆசிரியர் மறைத்திருவாளர் சுவாமி வேதாசலம் என்னும் மறைமலை யடிகளால் இயற்றப்பட்டுப் பல்லாவரம் பொதுநிலைக் கழக நிலையத்தின் கண் உள்ள டி.எம். அச்சக் கூடத்தில் பதிப்பிக்கப் பட்டது என்னும் குறிப்புளது.*

*இந்நூற் கதையின்கண் வருந் தலைவி கோகிலாம்பாளும் அவளுக்கு முதல் உறவினரும் பார்ப்பன இனத்தைச் சேர்ந்தவர் களாயிருத்தலாலும், அவள் தந்தையாகிய பாரசிகர் வட நாட்டவராதலாலும் அவர்களுடைய உரையாட்டுகளில் இடை இடையே வடசொற்களும் சில கொச்சைச் சொற்களும் கலந்திருத்தல் காணலாம் என நூல் நடைபற்றி முகவுரையில் கூறுகிறார்.*

*"உலக வழக்கிற்கு மாறுபடாமல் அதன் நிகழ்ச்சிகளை அங்குள்ளவாறே எடுத்து அவற்றை விழுமியவாக்கித் தொடுத்துக் கதைகளும் நாடகங்களும் இயற்றுதலே புனைந்துரை வழக்கில் வைத்து அவைதம்மை இயற்றும் நல்லிசைப் புலவனுக்கு இன்றி யமையாத கடமையாம். உலக இயற்கையிலும் மக்கள் இயற்கை யிலும் ஒரு சிறிதும் காணப்படாதவைகளைத் தானே படைத்து ஒரு கதை நூல் வகுத்தல் நல்லிசைப் புலமை ஆகாது". எனப் புனை கதை அமைவின் இலக்கணம் படைக்கிறார் அடிகள். விரிவான முன்னுரையுடையது இது.*

*கடித வழியாகக் கதைப் பின்னலிலும் ஒருவர் (காதலி) வழியாகவே இருவர் கடிதமும் காட்டிக் கதைப் புனைவு செய்தல்*

நல்ல உத்தியாம். கதை முடிவில் பின்னுரையாக, கோகிலாம் பாளின் காதற்கணவன் தெய்வ நாயகமே 'மறைமலையடிகட்கு எழுதப்பட்டது என ஒரு கடிதம் கொண்டு' நூல் நிறைகிறது.

என் மனைவி கோகிலாம்பாளும் யானும் அவள்தன் பெற்றோர்களால் ஓர் ஆண்டிற்குமுன் பம்பாய் நகரத்தில் மனம் உவந்து மணம் செய்விக்கப்பட்டு, அருமை பெருமையிற் சிறந்த அவள்தன் குடும்பத்தினரோடு சேர்ந்தே இனிது வாழ்ந்து வருகின்றோம் என்று எழுதும் நல்லதோர் உத்தியால் கடிதக் கதையை நிறைவு செய்கிறார்.

அடிகளார் கூறும் அறக் கூறுகள் கதையில் இடை இடையே மின்னி மிளிர்கின்றன. மு.வ. அவர்களின் புனைகதைகளின் முன்னோட்டம் போல்வது இது.

**இரா. இளங்குமரன்**

# நூலாக்கத்திற்குத் துணை நின்றோர்

**நூல் கொடுத்து உதவியோர்**

**ரோசா முத்தையா நூலகம்** - சென்னை.
**புலவர் கா. இளமுருகன்** – புன்செய் புளியம்பட்டி
(மறைமலையடிகள் மன்றம்)
**மறை. தாயுமானவன்** - சென்னை
(மறைமலையடிகளின் பேரன்)

**பிழை திருத்த உதவியோர்:**

| | |
|---|---|
| திரு. அ. மதிவாணன் (ஆங்கிலம்) | திரு. க. கருப்பையா |
| திரு. புலவர். த. ஆறுமுகம் | புலவர். மு. இராசவேலு |
| திரு. இராசுகுமார் | திரு. நாக. சொக்கலிங்கம் |
| முனைவர். க. சுப்பிரமணியன் | திருமதி. அ. கோகிலா |
| திருமதி. உசா | செல்வி. அபிராமி |

## நூல் உருவாக்கம்

**கணினி செய்தோர்:**

| | |
|---|---|
| திருமதி **வி. சித்திரா** | திருமதி **மலர்** |
| திருமதி **செல்வி** | திருமதி **ஹேமலதா** |
| திரு. **ஆசம்** | திருமதி **கலைவாணி** |
| **பிராசசு இந்தியா** (Process India), | திருமதி'**புகழ்ச்செல்வி' கயல்விழி** |

**நூல் வடிவமைப்பு:** திருமதி **வி. சித்திரா**

**மேலட்டை வடிவமைப்பு: கவி பாஸ்கர்**

**நூலாக்கத்திற்கு உதவியோர்**

இரா. பரமேசுவரன், க. இளந்திராவிடன், வே. தனசேகரன்,
கு. மருது, இல. தருமராசன்

**தாள் வழங்கியோர்:** சிவா தாள் மண்டி, சென்னை -1

**எதிர்மம்** (Negative)**:** பிராசசு இந்தியா (Process India) சென்னை-5.

**அச்சுடிப்பு மற்றும் நூல் கட்டமைப்பு:**

வெங்கடேசுவரா ஆப்செட் பிரிண்டர்சு மற்றும் பிராசசு இந்தியா

**'மறைமலையம்'** எல்லா நிலையிலும் செப்பமுற வெளி வருவதற்குப் பல்லாற்றானும் உதவியாக இருந்த இவர்களுக்கும் மற்றும் அறிஞர் பெருமக்களுக்கும் எம் நிறைந்த நன்றியும் பாராட்டும்.

# கோகிலாம்பாள் கடிதங்கள்

1931இல் பல்லாவரம் பொதுநிலைக் கழகம், வெளியிட்ட நூலினை மூலமாகக் கொண்டு இந்நூல் பதிப்பிக்கப்படுகின்றது

**இந்நூலைப் பற்றிய குறிப்புரை...**

அறிவுச் சிறப்பிற்கும், மனம்மொழி மெய்களின் தூய்மைக்கும் ஏற்ற இன்பச் சுவை மட்டுமே பெருகி நிற்கும் வகையில் புத்திலக்கியங்கள் பூக்க வேண்டும். அவற்றில் சொற்பொருள் நலன்கள் தூயனவாகத் துலங்குதல் வேண்டும். உலக இயற்கை, மக்கள் இயற்கைகட்கு ஏற்ப அமைந்த இலக்கியங்களே உண்மையானவை; அறிஞரின் பாராட்டுக் குரியவை. இவ்வாறு நூல்முறைகூறும் அடிகளாரின் கோகிலாம்பாள் கடிதங்கள், ஒரு பண்புநலன் சார்ந்த நாவலாகவே காணப்படுகின்றது.

வாழ்வியல் உண்மைகளையும், மொழி சமயம் பற்றிய கருத்துகளையும் அடிகளார் இந்நூலில் கூறியுள்ளார். காதல ரிடத்தே நிகழும் நினைவின் ஒருமையும், அடியார் களிடத்தே தோன்றும் ஒருமையும் எவ்வகையானும் ஒத்திருக்கும். நன்மக்கட்பேறே இவ்வுலக வாழ்வுப் பயனாகும். செல்வத்தால் வரும் மதிப்பு செல்வ நிலைக்கு ஏற்ப மாறுபடும். நமது பிறவியின் இன்ப துன்பங்களுக்கு நாமும் நம்மவர்கள் செய்யும் வினைகளும் காரணமாகும்.

முக்கனியின் தீஞ்சாறெனு விளங்கும் மெல்லொலி கொண்ட செந்தமிழ்க் கல்வியை அனைவரும் கற்கும் வகை செய்ய வேண்டும். சமுதாய மொழிக் கொள்கைகளைக் கூறும் அடிகளார் பிறப்பு - இறப்பு இல்லாச் சிவபிரானே முழுமுதற் கடவுள் எனத் தம் கடவுட் கொள்கையையும் குறிப்பிட்டுள்ளார்.

ஆய்வாளராகவும் அறிஞராகவும் விளங்கிய அடிகளாரைப் படைப்பிலக்கிய ஆசிரியராக அறிமுகப் படுத்தியது ‘கோகிலாம்பாள் கடிதங்கள்’. கடித வடிவ நாவல்களின் நுட்பங்களை யெல்லாம் ஒருங்குகொண்ட ஒரே நாவலாக இது விளங்குகிறது. அடிகளாரின் அருந்திறனுக்கும் புத்திலக்கியப் போக்கிற்கும் என அமைந்த அரிய படைப்பு இது.

**– டாக்டர் நா. செயப்பிரகாசு**
மறைமலை அடிகளின்
இலக்கியப் படைப்புகள்

# இரண்டாம் பதிப்பின் முகவுரை

'கோகிலாம்பாள் கடிதங்கள்' என்னும் இப்புதுக்கதை நூல் இற்றைக்குப் பத்தாண்டுகட்கு முன் வெளியாகியது. இதன் இரண்டாம் பதிப்பு இப்போதுதான் வெளிவருகின்றது. முதற் பதிப்பிலிருந்த சிற்சில எழுத்துப் பிழைகளும் ஒரு பெயர் மாறாட்டமும் இதன்கண் திருத்தப்பட்டன. இவற்றிற்குமேல் வேறு ஏதொரு மாறுதலும் இதன்கட் செய்யப்படவில்லை.

இந்நூற்கதையின்கண் வருந்தலைவி கோகிலாம்பாளும் அவளுக்கு முதல் உறவினரும் பார்ப்பன இனத்தைச் சேர்ந்தவர் களாயிருத்தலாலும், அவள் தந்தையாகிய பாரசிகர் வட நாட்டவரா தலாலும் அவர்களுடைய உரையாட்டுகளில் இடை யிடையே வட சொற்களுஞ் சில கொச்சைத் தமிழ்ச்சொற்களுங் கலந்திருத்தல் காணலாம்.

உலகவழக்கிற்கு மாறுபடாமல், அதன் நிகழ்ச்சிகளை அங்குள்ளவாறே எடுத்து அவற்றை விழுமியவாக்கித் தொடுத்துக், கதைகளும் நாடகங்களும் இயற்றுதலே, புனைந்துரை வழக்கில் வைத்து அவை தம்மை இயற்றும் நல்லிசைப்புலவனுக்கு இன்றியமையாத கடமையாம். உலக இயற்கையிலும் மக்கள் இயற்கையிலும் ஒருசிறிதுங் காணப்படாதவைகளைத் தானே படைத்து ஒரு கதை நூல் வகுத்தல் நல்லிசைப்புலமையாகாது. வட மொழியிலுள்ள பழங்கதைகள், இறைவன் வகுத்த உலக இயற்கையிலும் மக்கள் இயற்கையிலும் ஒரு சிறிதுங் காணலாகாத வைகளைப் படைத்து மொழிதலால், அவை தம்மைப் பிற்காலத்தே மொழிபெயர்த் துரைத்த புலவர்கள் தமிழ்நூல் வழக்கிற்கு ஒவ்வாத அவைகளைத் தாம் சிறிதாயினும் பகுத்துணர்ந்து பாராமல் அவ்வட நூல்களிலுள்ளவாறே எடுத்து மொழிந்து, ஆராய்ச்சியுணர்வு சிறிதுடையார்க்கும் பெரியதோர் அருவருப்பினை விளைவியா நின்றனர். ஒரு குரங்கு கடலைத்

தாண்டிற்றென்றலும், அஃது ஒரு மலையைப் பெயர்த்தெடுத்துக் கொணர்ந்த தென்றலும், ஒருவன் பத்துத் தலையும் இருபது கைகளும் உடையனாயிருந்தன னென்றலும், மற்றொருவன் இரண்டாயிரங் கைகள் உடையனாயிருந்தன னென்றலும், ஒருத்தியை வேறொருவன் சிறையாக எடுத்துச் சென்றக்கால் அவளிருந்த நிலத்தைப் பெயர்த்தெடுத்துச் சென்றானென்றலும், ஒருவன் தன் கையிலிருந்த வட்டத்தைச் சுழற்றியெறிந்து பகலவனை மறைத்தானென்றலும், இன்னும் இவைபோல்வன பிறவுமெல்லாம் உலக இயற்கை மக்களியற்கையில் எவரும் எங்குங் காணாதனவாகும். ஆகையால், இன்னோரன்ன பொருந்தாப் புனைவுகளை ஒரு கதையிலாதல் ஒரு நாடகத்திலாதல் இயைத்துரைத்தல் நல்லிசைப்புலமைக்குச் சிறிதும் ஒவ்வாது. ஏனென்றால், இயற்கைக்கு முழு மாறான கட்டுக்கதைகளைக் கூறும் நூல்களைப் பகுத்தறிவுடையார் கற்பராயின் அவர்க்கு அவை இன்பம் பயவாவாய் வெறுப்பினையே விளைக்கும்.

புதுக்கதைகளும் நாடகங்களும் ஆக்குதலின் நோக்கம் என்னென்றால், இன்பச்சுவையினையும், அதனோடு அறிவுவிளக்கத் தினையும் தந்து, அவ்வாற்றால் மனமாசு நீக்கி மக்கள் ஒழுகலாற்றினைத் தூயதாக்குவதேயாம். இனி, இன்பச் சுவையினைப் பயப்பதொன்றே கதைகள் நாடகங்கள் காப்பியங்கள் ஆக்கும். நல்லிசைப்புலவனுக்குத் தனிப்பெரு நோக்கம் ஆதல் வேண்டுமென்பாரும், மற்ற இன்பச்சுவையினை ஒருவாயிலாக் கொண்டு மக்கள் மனமாசு களைந்து அவர்தம் ஒழுகலாற்றினைச் சீர்திருத்தஞ் செய்தலே அந்நூல்கள் யாக்கும் ஆசிரியர்க்குக் கடமையாதல் வேண்டுமென்பாரும் என இருதிறத்தர் ஆங்கில நூலாசிரியர், பண்டைத் தமிழகத்தும் இங்ஙனம் இருவேறு கொள்கை களுடைய நல்லாசிரியர் இருபகுப்பினர் உளரேனும், மனமொழி மெய்கள் தூயவாதற்கு இன்பச்சுவையினை ஒருவாயிலாகக் கொள்வாரே தமிழாசிரியரில் மிகப்பலர். இஃது, **ஆசிரியர் நக்கீரனார்**,

“கடுத்தின்னாதானைக் கட்டி பூசிக் கடுத்தீற்றியவாறு போலவுங், கலங்கற்சின்னீர் தெருளாமையான் உண்பானை, அறிவுடையான் ஒருவன் பேய்த்தேரைக்காட்டி ‘உதுக்காணாய்! நல்லதொருநீர் தோன்றுவ, அந்நீர்பருகாய், இச்சேற்று நீர் பருகி என்செய்தி?” என்று கொண்டுபோய், நல்லதொருநீர் தலைப்

படுவித்து ஊட்டியது போலவுந், தான் ஒழுகா நின்றதோர் இணைவிழைச்சினுள்ளே மிக்கதோர் ஒழுக்கங்காட்டினான்." என்று **இறையனாரகப்பொருள்** முதற்சூத்திர வுரையில்கண் நன்கெடுத்து விளக்கிக்காட்டியவாற்றானும், **ஆசிரியர் இளங்கோவடிகள்** தாம் 'சிலப்பதிகாரம்' என்னுஞ் செந்தமிழ்க் காப்பியம் இயற்ற வெண்ணியதன் நோக்கம் இதுவென்பது புலப்பட,

"அரைசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாவதூஉம்
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை யுருத்துவந் தூட்டு மென்பதூஉஞ்
சூழ்வினைச் சிலம்பு காரணமாகச்
சிலப்பதி காரம் என்னும் பெயரால்
நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்"

என அந்நூற்பதிகத்தில் ஓதியருளியவாற்றானும் நன்கறியக் கிடக்கின்றது. ஆகவே, அறிவு விளக்கத்திற்கும், மனமொழி மெய்கள் தூயவாதற்கும் ஏற்ற இன்பச்சுவை ஒன்றுமே முதிர்ந்து நிற்கப் புதுக்கதைகளும் நாடகக் காப்பியங்களும் இயற்றுதலே எல்லாராலும் விரும்பற்பாலதொன்றாம். மற்று, அறிவுவிளக்கத் திற்குப் பழுது செய்யும் இயற்கை மாறுபாடுகளும், அகந் தூய்மைக்கு ஒவ்வா நிகழ்ச்சிகளுமே நிரம்ப அந்நூல்களை யமைத்தல் உயர்ந்த புலனெறி வழக்கிற்கு இசையாததொன்றா மென்று உணர்ந்து கொள்க. வடமொழியினின்று மொழி பெயர்க்கப்பட்டும், வட மொழியிலுள்ளவைகளைப் போற் செய்யப்பட்டும் இஞ்ஞான்று தமிழில் வழங்கும் புராணங்கள் காவியங்கள் முதலியன வெல்லாம், பகுத்தாராய்ந்து பார்க்க வல்லார்க்கு, அவர் நாடொறும் பழகும் இருவகை இயற்கை நிகழ்ச்சிகளொடுந் திறம்பி, அறிவுக்கு இசையாதனவாயிருத்தலின், அவை உயர்ந்த புலனெறி வழக்கின் பாற் படாவாய், அச்சுறுத்துதற்கு எத்தகைய 'பூச்சாண்டி'யைப் பொய்யாகப்படைத்து மொழியினும் அவை தம்மையெல்லாம் நம்பிவிடுஞ் சிறுமகாரை யொத்த' புல்லறி வினார்க்கே உவகையளிக்கும் பொய்வழக்கின்பாற் படுவனவாகும்.

மற்றுக், **'கலித்தொகை', 'அகநானூறு'** முதலான சங்கத் தமிழ்ப் பாட்டுகளும்; அவற்றையடுத்துத் தோன்றிப்பட்டது

பட்டாங்கு மொழியுஞ் '**சிலப்பதிகார' மும்**; உண்மையில் நடந்த தன்றாயினும் இருவகையியற்கைநிகழ்ச்சியொடும் மாறுபடாது செல்லுங் கதைதனை நூவலாநின்ற '**சீவகசிந்தாமணி**' யும்; அதற்குப் பின்னெழுந்து உண்மை நாயன்மார் வரலாறுகளை உள்ளவாறே நுவன்று, இருவகை நிகழ்ச்சியொடும் முழுதொத்து, அவற்றிற்கு மேற் புலனாகாது நிற்கும் முழுமுதற்கடவு ளியற்கையைப் புலனாக விள்ளுந் தனிப்பெருமாட்சி வாய்ந்த '**பெரியபுராணம்**' என்னுந் '**திருத்தொண்டர் வரலாறும்**' அஃகியகன்ற சான்றோர் கலங்கா மெய்ம்மை விலங்கற்பாறைமேல் நலனுறவெழுப்பிய புலனெ றிவழக்காம் பொன்மாளிகையுட் பொலிந்து விளங்கும் விலையறு மாணிக்கத்தாற் சமைத்த எழில்கிளர்பாவைகளாமென்றறிந்து கொள்ளல் வேண்டும்.

இங்ஙனம் உலகவியற்கைக்கும், மக்களியற்கைக்கும் மாறாகாத மெய்வழக்கின் வழிநின்றே கதைகளும் நாடகங்களுங் காப்பியங்களும் ஆக்கப்படல் வேண்டுமாயின், உண்மை நிகழ்ச்சிகளை உள்ளவாறே எடுத்து நுவலும் வரலாற்று (சரித்திர) நூல்கட்கும், மற்றுக் கதை நாடகங்கட்கும் வேறுபாடு என்னையெனின்; வரலாற்று நூல்கள் வரையும் ஆசிரியன், சென்ற காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைத் தொகுத்து அவற்றை முறைப் படுத்தித் திறம்படச் சொல்லும் அத்துணைக்கே யுரியனல்லது, அந்நிகழ்ச்சிகளைத் தான் வேண்டியவாறெல்லாந் திரித்துச் சொல்லுதற்குச் சிறிது முரியன் அல்லன். மற்றுக், கதை நாடகங்கள் இயற்றும் புலவனோ செல்கால நிகழ்ச்சிகளை அங்ஙனந் திரிபுபடுத்தாமல் நுவலல் வேண்டுங் கடப்பாடு உடையன் அல்லன்; மற்று, அச்செல்கால நிகழ்ச்சிகளில் அழகியன விழுமியன சில தெரிந்தெடுத்து, அவற்றைப் பின்னும் அழகில் மிகுவித்தல் வேண்டிக் கூட்டவேண்டுவன குறைக்க வேண்டுவன வெல்லாம் நுனித்தறிந்து செய்து, இங்ஙனஞ் செய்வுழி யெல்லாம் அவை உலக வியற்கையோடும் மக்க ளியற்கையோடும் திறம்பா தமைய இழைத்து, அங்ஙனம் இழைத்து ஆக்கிய அவற்றைப் பயில்வார்க்கு நகையும் அழுகையும் இளிவரலும் மருட்கையும் அச்சமும் பெருமிதமும் வெகுளியும் உவகையும் என்ற எண்வகை மெய்ப்பாடுகளுட் சில பல தோன்றவைத்து அருகா வின்பந் தருகுவனாவன். "வரலாற்று நூலாசிரியற்கும் நல்லிசைப் புலவற்கும் உள்ள இவ்வேறுபாட்டை விளங்க அறிதற்கு, இஞ்ஞான்று எடுக்கப்படும் நிழலுருப்படத்தையுங் கைவல் ஓவியனால்

வரையப்படும் விழுமிய ஓவியத்தையும் உற்று நோக்குமின்கள்! கருவிகொண்டு எடுக்கப்படும் நிழலுரு, எவ்விடத்தில் எக்காலத்தில் எவ்வெப்பொருள்கள் எவ்வெவ்வாறு இருந்தனவோ அவ்வவ் வாறே யமையும்; அதன்கண் அழகுள்ளனவும் அழகில்லனவும் ஆகிய எல்லாந் தாந்தாம் அமைக்கப்பட்டபடியே தோன்று மல்லது தமதியல்பில் மிகுந்தாயினுங்குறைந்தாயினுந்தோன்றா அந்நிழலுருவினை யெடுக்கும் விளைஞனும் அதன்கட்டோன்று வனவற்றிற் கூட்டியுங் குறைத்தும் ஏதொன்றுஞ் செய்ய மாட்டுவான் அல்லன்; நிழலுருக்கள், தான் பொருத்துங் கண்ணாடிப் பல வகையிற் செவ்வகையாகப் பதியப்பார்த்துப், பின்னர் அவற்றைக் காகிதத்தில் அச்சிட்டுத் தரும் அவ்வளவே அவனுக்குரிய தொழிலாகும். மற்றுக், கைவல் ஓவியனால் தீட்டப்படும் ஓவியமோ, ஓரிடத்தில் ஒருகாலத்தில் தோன்றும் ஒரு நிலக்காட்சியையோ, அல்லது சில சிற்றுயிர்களையோ, அல்லது அழகிற் சிறந்த மக்களையோ ஆங்காங்குக் காணப்படும் இயற்கைக்கு முரணாமல் மேன்மேல் அழகுமிகுத்து, அவ்வ வற்றின் நிறத்திற்கு ஏற்ற வண்ணங்களாற் குழைத்தெழுதிக் காட்டப்பெற்றுத் திகழ்வ தொன்றாகும்; அழகியவற்றோடு அருவருப்பாவனவுங் கலந்து காணப்படுமாயின்; அவற்றுட் பின்னையவற்றை நீக்கி முன்னைய வற்றை மட்டுமே தெரிந் தெடுத்து வரைகுவன் கைவல் ஓவியன்; ஒரோவொருகால் அவன் திருத்தமான வடிவங்களின் தோற்றத்தை மேலுஞ் சிறப்பாக விளங்க வைத்தற் பொருட்டுத் திருத்தமில்லாதவகைகளையும் உடன் வைத்து வரைய வேண்டுவனாயின், அவற்றின் அருவருப்புத் தன்மையைப் பலபடியாற் குறைத்து வரைகுவனே யன்றி, அதனை யுள்ளவாறே வரைந்து நமது சுவையுணர்வினைக் கெடுப்பான் அல்லன்; எனவே, அவன் பலநாளும் பலமுறையும் ஆய்ந்தாய்ந்து பார்த்துத் தான் வரையும் பொருள் வடிவங்களை இயற்கையிற் காணும் அளவினும் அழகுசெய்து, பகலவனொளி படும் பகுதி ஒளிரவும் அது படாத பகுதி சிறிதே இருளவும் வண்ணங்களை ஆற்றித் தொட்டெழுதி, அங்ஙனம் எழுதிய ஓவியத்தைக் காண்பதெல்லாம் “ஆ! இஃதியற்கையை எவ்வளவு ஒத்திருக் கின்றது! எனினும், ஈது இயற்கையழகினும் எவ்வளவு சிறந்து துலங்குகின்றது!” என்று வியந்துகூறிப் பெரிதும் இன்புறச் செய்யுஞ் செயற்கருஞ் செய்கைத்திறனுடையனாமென்றுணர்ந்து கொள்ளல் வேண்டும்.

இங்ஙனம் இருவேறுவகையவாய், அமைக்கப்படும் படங்களுள் நிழலுருப்படத்தை யொப்பதே வரலாற்று நூலா மென்பதூஉங், கைவல் ஓவியன் வரைந்த அரிய ஓவியத்தை யொப்பனவே கதைகள் நாடகங்கள் காவியங்களாகு மென்பதூஉம் நினைவிற் பதிக்கற்பாலனவாகும். இயற்கையிற் காணப்படும் பல்வகைப் பொருள்களையும் அவற்றின் நிகழ்ச் சிகளையும் அவ்வியற்கையிலுள்ளவாறே வகுத்துரைக்குமாற்றில் வரலாற்று நூல்கள் நிழலுருப்படங்களையே ஒப்பனவாகும். மற்று, இயற்கையி லுள்ளவற்றை அவ்வவ்வற்றின் இயல்புக்கு மாறாகாமலே, மேன் மேற் றூய்மைசெய்து மேன்மேல் அழகுசெய்து, தன் அறிவியல் நுட்பமுந் தன் அழகியலுணர்வும் அவற்றின் அமைப்பினூடு விரவி விளங்கச் சான்றோ னொருவனால் யாக்கப்படுமாற்றிற் கதைநூல் முதலியன விழுமிய ஓவியங்களையே யொப்பனவாகும். இயற்கைக்கு முற்றும் மாறுபட்டுக் காணப்படும் ஓவியங்களை நோக்குவார். அவற்றைக்கண்டு மகிழாமல் "ஈதென்னை! உலகத்தில் எங்குங் காணப்படாத பொய்வடிவாய் இருக்கின்றதே!" என்று இகழ்ந்துபோதல் போல, உலகவியற்கை மக்கள் இயற்கைக்கு முழுமாறாய் ஆக்கப்பட்ட கதைகள் நாடகங்களைக் காணும் அறிஞர் அவற்றின் பொய்ம்மை கண்டு அவற்றைப் பாராட்டாது புறத்தொதுக்குவர்.

அற்றேல், இயற்கையோ டொத்தவற்றில் நமக்கு மகிழ்ச்சி மிகுதலும், ஒவ்வாதவற்றில் அருவருப்புண்டாதலும் என்னை யெனின்; மக்கள் மனநிலை உள்ளதை உள்ளவாறு அறிதலிலேயே வேட்கை மிகுந்து நிற்கின்றது; அதுதான் அங்ஙனம் நிற்கவேண்டுவ தென்னையெனின்; உண்மையுணரும் அறிவினாலேயே மக்க ளெல்லாரும் உயிர்பிழைத்து வாழவேண்டியவர்களாய் இருக்கின்றார்கள். பசித்து உண்ணவேண்டி யிருப்பவனுக்குத் தனக்கேற்ற உணவையறிந்து உட்கொள்வதில் வேட்கையிருக்குமே யல்லாமல், உணவுப்பண்டங்களைப்போல் மெழுகாலும் நெட்டியாலுஞ் செய்யப்பட்டவைகளையெல்லாம் அறியாமல் உணவென நம்பி யுட்கொள்வதில் வேட்கை செல்லாது; நீர் வேட்கை மிகுந்தவனுக்கு நறுந் தீம்புனல் பருகுவதில் விழைவு மிகுமேயல்லாமல், தீம்புனல்போற் பொய்யாகச் செய்து வைக்கப்பட்ட நச்சுநீரைப் பருகுவதில் விழைவு செல்லாது, தமது பசிக்குந் தமது விடாய்க்கும் வேண்டுவன இவைதாம் என

உண்மையாக அறிந்தாலன்றி, எவரும் எதனையும் வெறுந் தோற்றத்தளவில் மயங்கி உட்கொண்டு விடக் காண்கின்றோ மில்லையே. அல்லதெவரேனும் அறிவுமயங்கி நஞ்சையுணவாகப் பொய்த்துணர்ந்து உட்கொள்வராயின், அவர் தமதுயிரிழத்தலுங் காண்டுமென்றே, ஆக, உயிர்வாழ்க்கை இனிது நடைபெறுதற்கே பொருள்களை உள்ளவா றுணர்தல் இன்றியமையாது வேண்டப் படுவதாயிருக்க, உயிர்வாழ்க்கையோடு இன்ப அறிவு வாழ்க்கையும் நன்கு வாய்த்தற்கு உண்மையுணர்ச்சி இன்னும் எத்துணை இன்றியமையாததாய் வேண்டப்படும்! உண்மையுணர்ச்சி இத்துணைச் சிறந்ததாய் இருத்தலினாலேயே, நாம் பயிலுங் கதைகள் நாடகங்கள் காப்பியங்கள் முதலிய நூல்களிற் கூறப்படும் நிகழ்ச்சிகள், நம் பழக்க வழக்கங்களிற் காண்கின்ற படியே உண்மை வழாது நுவலப்பட்டிருத்தல் காணிற்பெரிது மகிழ்ந்து அவைதம்மை மிகப்புகழ்ந்து பேசுகின்றோம்.

மேலும், நம்மோடொத்த மக்கள் எவ்வெவ் வகையான இயற்கையுடையரா யிருக்கின்றனர்? அவர்கள் தத்தம் இயற்கையால் எவ்வெவ்வகையான செயல்களைச் செய்கின்றனர்? தாஞ் செய்யும் அச்செயல்களால் துன்பத்தையடைகின்றனரா? இன்பத்தை யடைகின்றனரா? ஒருவரது செயலால் அவர்க்குப் பகையாம் நிலையிலோ உறவாம் நிலையிலோ நிற்பவர்கள், அவரைப் பகைத்தோ அல்லதவரோடு உறவாடியோ எங்ஙனம் ஒழுகுகின்றனர்? அவ்வெவ்வேறு ஒழுக்கத்தால் அவரும் ஏனையோரும் எய்தும் முடிவுகள் யாவை? என்று இவ்வா றெல்லாம் நாம் அவரவர் இயற்கை செயற்கை வரலாற்று முடிபுகளை யறிந்து கொள்வதிற் பேராவல் வாய்ந்தவர்களா யிருக்கின்றோம். இங்ஙனம் உணரும் உணர்ச்சியில், நல்லவராயினார் இன்புறக் கண்டால் நாமும் இன்புற்றும், அவர் துன்புறக்கண்டால் நாமுந் துன்புற்றும் ஒழுகும் இயல்பு நம்மெல்லா ரிடத்தும் அமைந்து நிற்கின்றது. இன்னுந், தீயராயினார் தமது தீய செயலால் துன்புறக் கண்டால் அஃது அவர்க்குத் தகும் என்னும் மனநிறைவும், அவர் அங்ஙனந் துன்புறாமற் செவ்விய வாழ்க்கையிற் களித்து இறுமாந்திருக்கக் கண்டால் ‘இத் தீயரும் இங்ஙனம் வாழ்தல் தகுமோ! இறைவனே நீ உளையோ!” என்னும் மனப்புழுக்கமும் அடைபவர்களா யிருக்கின்றனம்.

இவையேயன்றி, இங்ஙனம் பலதிறப்பட்டவராய் இருக்கும் மக்கள் தாந்தாம் பிறவியெடுக்குங்கால் எவ்வெக்குடும்பத்தில் எவ்வெவ்விடத்திற் போந்து எவ்வெவ்வாறு வளர்ந்து வந்தனர்? அங்ஙனம் வளர்ந்து வருங்கால் அவர் எவ்வெக்காலத்திற் செய்த செயல்கள் எவ்வெப்பயனைத் தமக்கும் பிறர்க்கும் விளைத்தன? அவர் பிள்ளைமைப்பருவந் தொட்டுக் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று நுகர்ந்துவந்த உலகியற் பொருள்கள் யாவை? அவை தம்மால் அவருடைய உணர்வும் பண்புஞ் செயலும் எவ்வெவ்வாறு உருவாகிப் புறத்தே புலனாயின? என்று உலக இயற்கைக்கும் மக்கள் மனவளர்ச்சிக்கும் உள்ள உறவும் பயனும் அறிவதிலும் நாமெல்லாம் மிக்க வேட்கை வாய்ந்தவர்களா யிருக்கின்றனமே. இவ்வாறெல்லாம் மக்களுள் ஒவ்வொருவரின் இயற்கைகளும் அவற்றின் புறநிகழ்ச்சிகளும் ஒன்றோடொன்று சன்னல் பின்னலாகப் பிணைக்கப் பட்டிருத்தலுடன், இப்பிணைப்பு, இடத்திலுங் கால இயக்கத்திலும் பொருந்திக் கிடக்கும் உலகியற் பொருள்களோடும் மிக நெருக்கமாக விரவி நடைபெறுகின்றன வல்லவோ?

ஆகவே, இத்துணைப் பிணைப்புகளோடுங் காணப்பட்டுச் செல்லா நின்ற மக்களியற்கை உலகவியற்கைகளை அளந்து ஆராய்ந்து கண்டு, அப்பிணைப்புகளின் சிக்கலை விடுவித்து, ஒவ்வொன்றனையும் இழையிழையாகத் தம் உணர்வினாற் பிரித்துப் பார்த்தும், பின்னர் அவற்றை இயைத்துப் பார்த்தும், அவற்றால் மக்கள் அடையும் முடிபுகளைச் சுவைதுளும்பத் திறனாக அமைத்துக்காட்டும் நல்லிசைப்புலவரே கதைகள் நாடகங்கள் காப்பியங்கள் இயற்றுதற்குரிய ரென்றுணர்ந்து கொள்க.

அற்றேல், நாடகங்கள் காப்பியங்களுக்குங் கதைகளுக்குந் தம்மில் வேறுபாடு என்னையெனிற், கூறுதும். பழையகாலத் தமிழில் இம்மூன்றுஞ் செய்யுள் வடிவிலேயே இயற்றப்பட்டன. மற்று, இக்காலத்திலோ காப்பியங்களைத் தவிர ஏனை இரண்டும் உரை நடையிலேயே பெரும்பாலும் இயற்றப்படுகின்றன. ஓராயிரத்து எழுநூறு ஆண்டுகளுக்கு முன் **மாணிக்கவாசகப் பெருமானால்** அருளிச் செய்யப்பட்ட **திருச்சிற்றம்பலக் கோவையார்** என்னும் நாடகத்தமிழ்நூல் வடித்த செந்தமிழ்ச் செய்யுட்களினாலேயே ஆக்கப்பட்டிருக்கின்றது. இற்றைக்கு

*ஆயிரத்து நானூறு ஆண்டுகளுக்குமுன் வடமொழியிற்* ***காளிதாசரால்*** *இயற்றப்பட்ட* ***சாகுந்தலம், விக்ரமோர்வசீயம், மாளவிகாக்நிமித்ரம்*** *என்னும் நாடகங்கள் மூன்றும் பாட்டும் உரையும் விரவிய நடையில் ஆக்கப் பட்டிருக்கின்றன. இற்றைக்கு முந்நூற்றைம்ப தாண்டுகளுக்கு முன் மேற்கே இங்கிலாந்து தேயத்திலிருந்த 'ஷேக்ஸ்பீயர்'* (Shakesphere) *என்னுந் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லா ஆங்கிலநாடக ஆசிரியரும் பாட்டும் உரையும் விரவிய நடையிலேயே தம்முடைய நாடகங்களை இயற்றியிருக்கின்றார். ஆனாலும், இஞ்ஞான்று ஆங்கிலத்தில் நாடகங்கள் வரையும் 'பெர்னாட்ஷா'* (Bernard Shaw), ***'கால்ஸ் உவர்த்தி'*** (Galsworthy) ***'பாரி'*** (Barrie) *முதலான ஆசிரியர்களோ முழுதும் உரைநடையிலேயே அவை தம்மை இயற்றுகின்றார்கள். என்றாலும், நாடகங்களைச் செய்யுளும் உரையும் விரவிய நடையில் இயற்றும் முன்னையாசிரியர் வழக்கமே சிறந்த தொன்றாகக் காணப்படுகின்றது. ஏனென்றால், உணர் வெழுச்சி தோன்றாத வெறுங்காலங்களில் மக்கள் இயற்கையாகவே உரைநடையிற் பேசுகின்றார்களாயினும்,* ***மிகுமகிழ்ச்சி, மிகுகவலை, மிகுதுயரம், மிகுசினந்தோன்றப்*** *பெறும் நேரங்களில் அப்போது தாமிருக்கும் நிலைக்கேற்றபாட்டுகளைப் பாடுவதிலோ, அல்லது செய்யுள்நடையிற் பேசுவதிலோ முனைந்து நிற்கின்றார்கள்; அந்நேரங்களில் வெறிதான உரைநடையிற் பேசுதல் அவர்கட்கு இயல்வதில்லை. அறிவில் மிகச்சிறந்தார் முதல் அதில்மிகக் குறைந்தார் ஈறான எல்லாரும் மகிழ்ச்சி மிக்க நேரங்களிற் பாட்டுப்பாடி யின்புறுதலைக் காண்மின்கள்! மிகு கவலை மிகு துயரங்கொண்ட காலங்களிற் பெண்மக்களும் ஒப்பாரி சொல்லி யழுதலைக் காண்மின்கள்! மிகச்சினந்து கலாம் விளைப்பவர்கள் அடுக்கடுக்கான சொற்களைச் செய்யுள்நடையிற் பெய்து உரத்துக் கூவுதலைப் பார்மின்கள்! ஆகவே, உணர்வெழுச்சி தோன்றும் இடங்களிற் பாட்டும், அஃதில்லாது உணர்வுஞ் செயலும் அமைதியாகச் செல்லும் இடங்களில் உரையும் வர நாடகநூல்கள் இயற்றுவார் பக்கமே மக்களியற்கையொடு பெரிதொத்து நிற்பதாகும்.*

*இனிக், கதைநூல்களெல்லாம் இஞ்ஞான்று உரைநடையிலேயே இயற்றப்படுகின்றன. இவற்றுள் ஒரோவிடங்களிற் செய்யுட்களுங் காணப்படுதல் உண்டெனினும், அவை அக்கதையுள் இயங்குவார் மகிழ்ச்சிமிக்கோ துயரம்மிக்கோ*

பாடுவனவாய் அருகிவருமே யல்லாமல், நாடகங்களிற்போலப் பெருவரவின வாய்ப்புகுவன வல்ல. இதுவேயுமன்றி, நாடகங்களில் அவற்றை யியற்றும் ஆசிரியன் உரையாகத் தொடர்ந்து வருவன எவையும் இரா; எல்லாம் நாடகங்களில் இயங்குந் தலைமகன் தலைமகள் பாங்கன் பாங்கி என்றற்றொடக்கத்தார் உரையாடும் உரையாட்டு களாகவேயிருக்கும். மற்றுக், கதை நூல்களிலோ தலைமகன் தலைமகள் முதலாயினார் நேர்முகமாகவோ, அன்றி ஒரோவொரு கால் தனிமையிலிருந்து தாமாகவோ பேசும் உரைகளைப் பிணைப்பதோடு, அக்கதைநூல்களை இயற்றும் ஆசிரியன், தலைமகன் தலைமகள் முதலாயினார் தம் இயற்கைகளைப் பற்றியும், அவர்தம் ஒழுகலாறுகளைப் பற்றியும், அவற்றால் விளையும் நன்மை தீமைகளைப் பற்றியும், அவர் இயங்கும் இடத்தின் இயல்பு காலத்தின் இயல்புகளைப் பற்றியும், இன்னும் இவைபோன்ற வேறு சிலபலவற்றைப் பற்றியுந்தான் கூறக் கருதியவைகளைக் கூறவும் இடம் பெறுவன். இவ்வேற்றுமையே யன்றிக், கதைகள் சிறியவும் பெரியவுமாய்ச் சுருங்கியும் விரிந்தும் நடைபெறல்போலாது, நாடகங்கள் மிகவிரிந்து செல்வதின்றிச் சுருங்கிநடக்கும் மற்றுமொரு வேறுபாடும் உடையதென்பதும் நினைவிற் பதிக்கற்பாற்று.

என்றிதுகாறுங் காட்டிய கதைநூல் இலக்கணங்கள் இனிதொருங்கமையக் **கோகிலாம்பாள் கடிதங்கள்** என்னும் இந்நூல் இயற்றப்பட்டிருக்கின்றது. இதன்கண் வருந் தலைமகள் கோகிலாம்பாள் தன் காதற்கணவற்கெழுதிய கடிதங்களின் வாயிலாகவே இந்நூற்கதை புலனாகிச் செல்லுதலால், அத்தலை மகளே இந்நூலை இயற்றிய ஆசிரியன் நிலையில் நிற்கின்றாள். ஆதலால், இந்நூலாசிரியன் தன் கருத்தாகக் கூறக் கருதியன வெல்லாம் அவன் வரையுங் கடிதங்கள் வாயிலாகவே புலப்படுக்க வேண்டியவனாவான் என்றுணர்ந்து கொள்க.

கோகிலாம்பாள் நாட்செல்லச் செல்லத் தமிழ்மொழிப் பயிற்சியில் மிக்கவளாய்ச் செல்லுதலின், துவக்கத்தில் அவள் எழுதுங் கடிதங்களில் அவள் இனத்தவரான பார்ப்பனர் வழங்கும் வடச்சொற்கள் இடையிடையே கலந்திருந்தல்போலப், பின்னர் அவள் எழுதுவனவற்றில் அவை அத்துணை கலவாமல், தனித்தமிழ்ச் சுவை மிகுந்து வருதல் கண்டுகொள்க. கோகிலத்தின் மாமனார் தமிழ்ப்பயிற்சியுடையரேனும், அவர் தமிழ்நடை

யெழுதிப் பழகியவரென்பது புலப்படாமையின், அவர் பேசுவனவற்றில் வடசொற்கள் காணப்படும். அவர்க்கு இனமான ஏனையோரில், அவள் தமையனைத் தவிர மற்றையோ ரெல்லாந் தமிழ்ப்பயிற்சி சிறிதும் இல்லாதவராகலின், அவர் இயற்கையாய்ப் பேசுகின்ற படியே அவருடைய உரையாட்டுகள் எழுதப்பட்டிருக்கின்றன. என்றாலும், இயற்கையில் அவர்கள் மிகவுஞ்சிதைத்துப் பேசுந் தமிழ்ச் சொற்கள் நூலுள் அங்ஙனமேவருதல் அருவருப்புக்கு இடமாய் நூன்மாட்சிக்கு வழுவாமகலின், அவை பெரும்பாலுந் திருத்தியே எழுதப்பட்டிருக்கின்றன. இங்ஙனஞ் **சொற்களையும் பொருள்களையும் தூயவாக்கி வகுத்தலே நூல்யாக்குமுறை யென்பதனைச் சிறிதும் ஆய்ந்துபாராத இஞ்ஞான்றைக் கதை நூற்காரர்கள், வடசொல்லும் ஆங்கிலச் சொல்லுங் கொச்சைத் தமிழ்ச்சொல்லும் விரவிய மிகச் சீர்கெட்ட நடையில் அவைதம்மை வரைந்து, நூன்மாட்சி யினைப் பாழ்படுத்து கின்றனர்.** நாளேற நாளேற அறிவுஞ் செயலுஞ் சீர்திருந்தி வளர்தற்கு ஏற்ற உயர்ந்த முறையில் எழுதப்படுங்கதை நூல்களையே பயிலல்வேண்டுமல்லால், இத்தகைய வழூஉக் கதைகளைப் பயிலல் நன்றாகாது.

இனிப், பார்ப்பனருள்ளூந் தமிழ் நன்குணர்ந்தாரது மனவியற்கை மென்பதப்பட்டு விரிந்தநோக்க முடைத்தாய்ப் பிறர் நலங்கருதும் விழுப்பம் வாய்ந்து திகழ்தலும், அஃதுணராத ஏனையோரது இயற்கை வன்பதப்பட்டுக் குறுகிய நோக்கம் உடைத்தாய்த் தன்நலங் கருதுஞ் சிறுமைவாய்ந்து நிற்றலும் இக்கதை நிகச்சியுள வருவார்பாற் பிரிந்து தோன்றி உலக வழக்கில் உள்ள படியே அமைந்துகிடத்தல் காணலாம். இவ்விரு வேறு வகையினருள்ளும் ஒவ்வொருவர் இயற்கையுஞ் சிறிதும் பெரிதுமாய்த் தனித்தனி வேறுபட்டு, அவரவர்க்குரிய உண்மைத் தோற்றத்தை ஓர் உருப்படுத்தித் தனித்தனி விளங்கக் காட்டுதலுங் கண்டுகொள்க.

இனிச், சிறந்த ஒரு கதையின் அமைப்பும் உடம்பின் அமைப்புந் தம்முள் ஒப்புமை யுடையனவாகும். உடம்பின் உறுப்புகள் அத்துணையும் ஒன்றுக்கொன்றுதவியாய் அவ்வுடம் போடொருங்குசேர்ந்து நின்று அதனை வளரச்செய்தல் போல, இக் கதைநூற் றலைவியின் வரலாறும், அவடன் பெற்றோர் வரலாறும், அவடன் பாட்டன் மாமன் வரலாறும்

பிறவுமெல்லாம் ஒன்றோ டொன்று பிணைந்துநின்று இக்கதையினை நடாத்துதல் காண்க. ஓர் உடம்பிற்கு அதன் உயிர் இன்றியமையாததாய் நிற்றல் போல மக்கட்கூட்டுறவின் விழுப்பமுங் காதற்கற்பொழுக்க மாட்சியுந் தமிழ்மொழியின் ஏற்றமும் முழுமுதற்கடவுள் விளக்கமும் இக்கதை நூலுக்கு உயிராய்நிற்றல் உணர்ந்துகொள்க.

**- மறைமலையடிகள்**

# பொருளடக்கம்

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | கடிதம் - 1 | 17 |
| 2. | கடிதம் - 2 | 21 |
| 3. | கடிதம் - 3 | 27 |
| 4. | கடிதம் - 4 | 36 |
| 5. | கடிதம் - 5 | 42 |
| 6. | கடிதம் - 6 | 47 |
| 7. | கடிதம் - 7 | 63 |
| 8. | கடிதம் - 8 | 78 |
| 9. | கடிதம் - 9 | 102 |
| 10. | கடிதம் - 10 | 110 |
| 11. | கடிதம் - 11 | 121 |
| 12. | கடிதம் - 12 | 127 |
| 13. | கடிதம் - 13 | 140 |
| 14. | கடிதம் - 14 | 149 |
| 15. | கடிதம் - 15 | 168 |
| 16. | கடிதம் - 16 | 187 |
| 17. | கடிதம் - 17 | 243 |
| | பின்னுரை | 287 |

# கடிதம் - 1

*அன்புள்ள நேசரே, நேற்றிரவு எங்கள்வீட்டு மெத்தைமேல் நான் என் தங்கையோடும் உலாவிக்கொண்டிருக்கையில் நீர் வீசி எறிந்த ஏதோ கடிதாசிமடிப்புஒன்று என் எதிரே வந்து விழுந்தது. அதனை நீர் எறிந்ததை என் தங்கை பார்க்கவில்லை. அவள் வானத்திலே சந்திரனைச்சூழவிளங்கிய வட்டத்தை உற்று நோக்கிய படியே 'இதோபார் அம்புலி கோட்டை கட்டி யிருக்கின்றது!' என்று என்னைக்கூப்பிட்டுக் காட்டிக் கொண்டிருந்தாள். அந்தக் கடிதாசி மடிப்பு எதிரேவந்துவிழவே, நான் அதனை எடுக்கக்கீழே குனிந்தேன். என் தங்கையும் என்னைக்கவனித்தாள். என் உடலம் பதறியது, வாயோ குழறியது. என்னை அறியாமலே என் உள்ளத்தில் ஒரு நடுக்கம் உண்டாயிற்று. கடிதாசியைக் கையில்எடுத்ததும் என் தங்கை என்னைப்பார்த்து "அக்கா, அதென்ன கடிதாசி? ஏன் என்னமோ ஒருமாதிரியாய்ப் பேசுகிறாய்?" என்று கேட்டாள். அதற்கு நான் "வேறொன்றும் இல்லை! ஏதோகடிதாசி கீழேகிடந்ததை எடுத்தேன். உள்ளே வா, நம் அறையிற்போய் விளக்கேற்றிப் பார்க்கலாம்" என்று மெத்தைமேல் உள்ள என் அறைக்கு அவளை அழைத்துப்போனேன். அறைக்குட்போனதும் நல்ல காலமாக நெருப்புப்பெட்டி அகப்படவில்லை. கீழே இறங்கிப் போய் அதனை எடுத்துவரும் படி அவளை அனுப்பிவிட்டு, அவள் திரும்பி வருவதற்குள் உமது கடிதத்தை மறைவான ஓரிடத்தில் ஒளித்து வைத்து என் தம்பிமார் படிக்கும் பாடப் புத்தகங்கள், சன்னலின் உள் திண்ணைமேல் இருப்பதை நிலா வெளிச்சத்தால் பார்த்து அவற்றைத் தடவினேன்; மேலிருந்த புத்தகத்தில் கிழிந்த ஓர் ஏடானது என்கைக்கு வந்தது. உடனே அதனை எடுத்து மடித்து என்கைக்குள் வைத்துக்கொண்டு சிறிது மன ஆறுதலோடு நின்றேன். இதற்குள் என்தங்கை ஒரு மெழுகுவர்த்தி விளக்கையே கையில் எடுத்து வந்தாள். என் தங்கை*

மிகவுங்கூர்மையான அறிவுள்ளவள் என்பது உமக்கேதெரியும். அவளுக்கு இப்போது வயது எட்டுத் தான் ஆகிறது; ஆயினும் அவள் அறிவைப்பார்த்தால் அவள் முப்பதுவயதுடையவள் போல் தோன்றுகிறாள். ஒருவருடைய முகச்சாயலைப் பார்த்து அவருடைய குணங்களைத் தெரிந்து கொள்ளுகின்றாள். பாடங்களையும் வெகுதீவிரமாயப் படித்து விடுகின்றாள். இப்போது தமிழ் நான்றாய் எழுதவும் படிக்கவுங் கற்றுக் கொண்டாள். இங்கிலீஷில் நன்றாய் எழுத்துக் கூட்டுகின்றாள், செய்யுட் பாடங்கள் எல்லாம் செவ்வையாக ஒப்பிக்கின்றாள். இவள் விளக்கெடுத்துவந்ததும் இருவரும் மேசையண்டை போனோம். விளக்கை மேசைமேல் வைத்தாள். நான் நாற்காலியை விளக்கின் கிட்ட இழுத்து அதில் உட்கார்ந்து கொண்டு, அவள் என் முகத்தைப் பாராதபடி கையிலிருந்த கடிதாசியை எடுத்துப் பிரித்தேன். பக்கத்தில் நின்ற என் தங்கை அதைப்பார்த்ததும் "ஓ, இது நம்ம தம்பி பிச்சு பாடப்புத்தகத்தில் கிழிந்த ஏடு அல்லவோ? இதையா நீ எடுத்தாய்?" என்று என்னைச் சந்தேகத்தோடு பார்த்துக் கேட்டாள். "ஆம், இதுதான், வேறு என்ன அம்மா?" என்று அமைதியோடு சொன்னேன். அதன் மேல் என்னை ஒன்றுங்கேட்க மனம்இன்றி இருந்துவிட்டாள்.

அப்போது என்மனம் பட்டபாட்டை என்னென்று எடுத்துச் சொல்வேன்! என் தங்கையினிடத்து இதுவரையில் நான் என் மனத்தை இதுபோல் ஒளித்துப் பேசியதில்லை. என் தங்கையை அரை நிமிஷங்கூடப் பிரிந்திருக்க மனம்வராத நான், இப்போது அவளைவிட்டுத் தனியேஇருக்க விரும்பினேன்! அவள் எப்போது என்னைவிட்டு அப்புறம்போவாள் என்று எதிர் பார்த்தேன்! இதற்குள் கீழேயிருந்த எங்கள் தாயார் ஏதோ காரியமாகத் தங்கையைக் கீழேவரும்படி கூப்பிட்டார்கள். அவளும் உடனே கீழேபோனாள். நானும் தலைமேல் ஏறியிருந்த பெருஞ்சுமையை இறக்கி வைத்தவள் போல மனம் ஆறுதல் அடைந்து பெருமூச்சு விட்டேன்.

உமது கடிதத்தைப் படித்துப்பார்க்க என் மனம் துடிதுடித்தது. என் நினைவெல்லாம் உமது கடிதத்தின்மேல் குவிந்து நின்றது. நிலத்தில் புதையலாக வெட்டி எடுத்த, ஒரு செப்புப்பானையை மறைவான ஓர் இடத்தில் கொண்டுபோய் வைத்தவன் அப்பானையின் உள்ளேயிருப்பது இன்னதென்று

அறிய யாருமில்லாத சமயத்தை நாடுவது போல நானும் உமது கடிதத்தின் உள்ளிருப்பது இன்ன தென்று உணரப் பதைபதைத்தேன். தங்கை அப்புறம் போனதும் நான் படிக்கும் புத்தகங்களில் ஒன்றை எடுத்து அதனுள் உமது கடிதத்தைப் பிரித்து வைத்துப் பார்த்தேன். அதனைப் படிக்கும் போதே என் உடம்பெங்கும் அனன்றது; என் கண்கள் மயங்கின; என் உயிரும் உணர்வும் என் வசப்படாமற் போய்விட்டன.

“கண்மணி, உன் அழகிய உருவமானது என் நினைவிற் குடிகொண்டு விட்டது; உன்னை நினைக்க நினைக்க உன்மேல் எனக்கு அளவிடப்படாத அன்பு ஊறித்ததும்பி வழிகின்றது. என் செல்வியே உன்னை இங்ஙனம் அழைப்பது பற்றி என் மேற்கோபம் அடைவாயோ? என்செய்வேன்! என்மேற்குற்றஞ் சொல்வாயோ? நீ என்னை எப்படிச் செய்தாலும் நன்றே. உன்னை இன்றி நான் எப்படி உயிர்வாழ்வேன்!” என்றுநீர் எழுதியசொற்கள் ஒவ்வொன்றும் என்னை அனலிலிட்ட மெழுகைப்போல் உருக்குகின்றன. நான் பருவம் அடையாத சிறுமியாயிருந்த போது எங்கள் வீட்டாரும் உங்கள் வீட்டாரும் எவ்வளவோ அன்னியோன்னியமாக இருந்தோம்; நீங்கள் முதலிமார் என்றும் நாங்கள் பார்ப்பார் என்றும் வித்தியாசம் இல்லாமற் பழகினோம். நான் அடிக்கடி உங்கள் வீட்டில் வந்து விளையாடுவதும் நீர் எங்கள் வீட்டில் வந்து விளையாடுவதுமாய் நமது சிறுபருவம் எவ்வளவோ நமது மனத்திற்கு மகிழ்ச்சி தந்தது. அந்தச் சிறுபருவத்தில் உம்மைக் காணும்போதெல்லாம் எனக்கு மிகவும் பிரியமாயிருந்தது; நீரும் என்மேல் அதிகபட்சமாய் இருந்தீர். நாம் இருவரும் இங்ஙனம்; ஒருவர்மேல் ஒருவர் மிகுந்த ஆசையாய் இருப்பதை நம் பெற்றோர்கள் நாளடைவில் கவனித்துவந்தார்கள் என்று பிற்பாடு செவ்வையாகத் தெரிந்து கொண்டேன். ஏனென்றால் நான் பருவம் அடைய ஒருவருஷம் இருக்கும் போதே என் பெற்றோர்கள் என்னை அடுத்தவீட்டுக்குப் போக வேண்டாம் என்றும் இனிமேல் அந்த அடுத்தவீட்டு முதலிப் பையனிடம் போய் விளையாடப் படாது பார்த்துப் பேசவுங் கூடாது என்றும் தடுத்தார்கள். அது முதல் நான் அவர்கள் சொற்படியே இவ்வீட்டைவிட்டு வெளிப் புறப்படாமல் இருந்தேன்; ஆனால், என்மனம் மாத்திரம் உம்மை விட்டுப் பிரியவில்லை. உம்முடைய பெற்றோர்களும் உம்மை எங்கள் வீட்டுக்கு வரலாகாது என்று கண்டித்தார்களாம். இப்படி நாம்

இருவரும் காவலில் வைக்கப்பட்டாலும், ஒவ்வொரு சமயம் நாம் மெத்தைமேல் யாருமில்லாத சமயத்தில் கண்டு மகிழ்ந்து வந்தோம். அப்போதெல்லாம் நீர் என்னை உமது தங்கை போலவும், நான் உம்மை எனது தமையன் போலவும் நேசித்து வந்தோம். ஆனால், நாளேற நாளேற நமது நேசம் வேறுவிதமாய் மாறி வரலாயிற்று. உம்மை எப்படிப் பிரிந்திருப்பது, உம்மோடு எந்நேரமும் கூடிவிளையாடக் கிடைக்குமோ என்னும் ஓர் எண்ணம் எனக்குள் வேரூன்றி வரத்தொடங்கியது. நண்பரே, நான் பருவம் அடைந்த இந்த நாலைந்து வருஷமும் உமது உருவத்தை மாத்திரம் அன்று, உம்மையே எந்நேரமும் என்நெஞ்சில் வைத்துப் பார்த்து வருகின்றேன். என் செல்வியே என்று அழைத்தால் என்மேற் கோபிப்பாயோ? என்கின்றீர். ஆம், கோபிப்பேன் தான். என் செல்வியே, என்றால், நீர்வேறு நான்வேறு என்று ஏற்படுகின்ற தன்றோ? ‘என்உயிரே’ என்று என்னை அழைப்பீரானால் உம்மேற் சிறிதுங்கோபியேன். நீருடம்பும் நான் உமது உயிருமாக இருக்கலாம். அப்படியல்லாவிட்டால் நான் உடம்பும் நீர் எனது உயிருமாக இருக்கவேண்டும்.

என் தங்கை விழித்துக்கொண்டாள். எல்லோரும் அயர்ந்து உறங்கும் நள்ளிரவில் நான் மாத்திரம் விழித்திருந்து நான் படிக்கும் அறையில் இக்கடிதத்தை எழுதினேன்; இதோ அக்கா, அக்கா என்று என்னைக் கூப்பிடுகின்றாள். விடை எழுதும்.

## கடிதம் - 2

*எனதன்பிற்குரிய நண்பரே, -நேற்றுமாலையில் நீர் எறிந்த கடிதத்தை எடுத்துக்கொண்டேன். இனிமேல் நீர் கடிதம் எறிவதாயிருந்தால் நான்மாத்திரம் மெத்தைமேல்வரும் சமயம் பார்த்து அப்படிச்செய்வீர் என்று கேட்டுக்கொள்ளுகின்றேன். முதல் நாள் நீர் எறிந்த கடிதத்தை நான் எடுத்த காலந்தொட்டு என் தங்கை என்னோடு மெத்தைமேல் வந்தால் நாற்புறமும் சுற்றிப்பார்த்த வண்ணமாய் இருக்கிறாள். அவள் மனத்தில் என்ன சந்தேகம் இருக்கிறதோ! ஒருகால் நீர் எறிந்தபோது அதனைச் சாடையாகத் தான் பார்த்தாளோ என்னமோ அறியேன். அவளால் யாது விளையுமோ என்று அஞ்சிவாடுகிறேன். என் கண்ணனையீர், இனி உமது திருமுகமண்டலத்தைக் காணாமல் உயிர் வாழ்வேனோ?*

*என்தங்கை என்னிடத்தில் அளவிறந்த அன்பும் ஆசையும் வைத்திருக்கின்றாள். மான்கன்றுபோல என்னைச் சுற்றிச்சுற்றித் திரிகின்றாள். அவளுடைய சாந்தகுணமும் கூரிய அறிவும் என் நினைவைவிட்டு என்றும் அகல்வதில்லை. என்காலிற்பட்டதைத் தன் கண்ணிற்பட்டதுபோல் எண்ணி நெஞ்சம்உருகுகிறாள். சில சமயங்களில் நான் அவளை வெடுவெடுப்போடு பேசினால், அவள் அல்லிமலர்போல் முகம்வாடியிருப்பாள். அதுகண்டு மனம் வருந்திக் "குழந்தாய், கிடக்கிறதுவா" என்றால் ஓடி வந்து என்னைக் கட்டிக்கொண்டு முத்தம்இடுவாள். எங்கள் குடும்பத்தில் என்னோடு பிறந்தவர்களில் இந்த அருமைத் தங்கையிடத்தில் எனக்குள்ள ஆசை பிறரிடத்தில் இல்லை. இவளும் என்மேல்வைத்த பிரியத்தால் நான் ஒவ்வொருகால் மாற்றப்பிள்ளைகளோடு ஆசையோடு விளையாடினால், என்னைப்பார்த்து "அக்கா, உனக்கு என்மேல் ஆசையோ, தம்பிமாரிடத்து ஆசையோ?" என்று என் மோவாயை நிமிர்த்திக்கேட்பாள். அதற்கு நான் "அம்மா, உன்னிடத்தில் தான்*

எனக்கு ஆசை" என்று சொன்னால்தான் விடுவாள். உண்ணும் போதும் உறங்கும் போதும் என் பக்கத்தை விட்டு அகலாள். நேற்றிரவு நாங்கள் சாப்பிட்டபிறகு நானும் என் தங்கையும் முற்றத்து நிலாவிலே உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தோம்.

அப்போது அவள், "அக்கா, அடுத்த தைமாதம் எனக்குக் கல்யாணம் ஆகப்போகிறதென்று அம்மாவும் அப்பாவும் பேசிக் கொண்டார்கள். நம்ம அண்ணா சுப்பிரமணியனுக்குப் போன வைகாசிமாதம் கல்யாணம் நடந்ததே; அப்படித்தானே எனக்கும் நடக்கும்? எனக்கு உயர்ந்த பட்டுச்சீலைக்கட்டிப் பளப்பளப்பான நகைகள் போட்டுப், பூச்சூடிக் கொட்டி முழக்கி என்னை எல்லாரும் கொஞ்சுவார்கள் அல்லவா? நம்ம அண்ணா பக்கத்திலே ஒரு சிறு பெண்ணை எவ்வளவு அலங்காரம் பண்ணி எல்லாருங் கொண்டு போய் உட்கார வைத்தார்கள்! என்னை யார் பக்கத்திலே உட்கார வைப்பார்கள்?" என்று கேட்டாள்.

"அம்மா, உனக்கு எல்லா அலங்காரமும் பண்ணி மிகுந்த சிறப்போடுதான் கல்யாணம் நடத்துவார்கள்" என்று சொல்லி, "ஆனால், உனக்கு மணமகன் இன்னார் என்பது எனக்குத் தெரியாது. நல்லது, உனக்கு எப்படிப்பட்டவன் மணமகனாய் வந்தால் பிரியமாயிருக்கும்?" என்று அவளைக்கேட்டேன்.

"அக்கா, நம்ம சுப்பிரமணியனும் அந்தச் சிறுபெண்ணும் கலியாண மனையில் உட்கார்ந்திருந்தபோது இரண்டுபேரையும் பார்க்கப் பார்க்க எனக்கு ஆசையாயிருந்தது.சுப்பிரமணியன் எவ்வளவு அழகாயிருக்கிறான்! அந்தப்பெண்ணும் எவ்வளவு அழகாய் இருக்கிறாள்! பார், ஆனால் நம்ம சுப்பிரமணியனைவிட அடுத்த வீட்டிலிருக்கிற **தெய்வநாயகம்** எவ்வளவு அழகாயிருக் கிறான்! அதென்ன அக்கா தெய்வநாயகத்தையும் உன்னையும் பார்த்தால் ஒரேமாதிரியாய் இருக்கிறதே?" என்று சொல் லுகையில் சட்டென்று பயந்தவளாய் அதனை நிறுத்தி அக்கா, அம்மா கேட்டுக்கொண்டு வந்திடப்போகிறாள்? நான் அசாக்கிரதையாய்ப் பேசிவிட்டேன்" என்று மிரண்டு சொன்னாள்.

உடனே "என் அம்மா, இப்படிப் பயப்படுகிறாய்?" என்று கேட்டேன்.

"முன்னொருதரம், அம்மாகிட்டப்போய் நம்ம அக்காளையும் அடுத்த வீட்டுத் தெய்வநாயத்தையும் பார்த்தால் ஒரேமாதிரியாய் இருக்கிறதே, அதேன் அம்மா?" என்று இப்படியே கேட்டேன். அதற்கு அம்மா கோபித்துக்கொண்டு என்னை அகப்பைக்காம்பால் அடித்து, 'இனிமேல் அடுத்தவீட்டு முதலிப்பையன் பேரை இந்த வீட்டுக்குள் சொல்லாதே' என்று என்னைக் கண்டித்தாள். அதை மறந்து அந்தப் பையன் பேரைச் சொல்லிவிட்டேன்" என்று சுற்றிப் பார்த்துக்கொண்டே சொல்லிவிட்டுப் பிறகு "அக்கா, தெய்வ நாயகத்தின் பேரைச் சொன்னால் அம்மா ஏன் கோபித்துக் கொள்கிறாள்? நம்ம வீட்டுக்கும் அவாள் வீட்டுக்கும் எவ்வளவோ அன்னியோன் னியமாய் இருந்ததே இப்போது ஏன் அவாள் வீட்டிலிருந்து இங்கேயாரும் வருகிறதில்லை. இங்கேயிருந்து அங்கே யாரும் போகிறதில்லை? என்னைக்கூட அங்கே போக வேண்டாமென்று கட்டுப்பாடு பண்ணிவிட்டார்களே. அதேன்?" என்று மெதுவாய்க்கேட்டாள்.

"அம்மா, நான் பெரியபெண்ணாகி இந்த நாலைந்து வருஷ காலமாய்த்தான் இவ்வளவு கட்டுப்பாடும். இதற்குமுன் நான் உன்னைப் போலச் சிறுபெண்ணாயிருந்தபோது தெய்வ நாயகமும் நானும் எவ்வளவோநேசமாய் விளையாடிப் பழகினோம். பிறகு நான் பெரியபெண்ணாய் வளர்ந்து விட்டபடியாலும் தெய்வ நாயகமும் பெரிய பிள்ளையாய் வளர்ந்துவிட்டதனாலும், நான் புருஷன் இல்லாதவளாய் இருப்பதனாலும், நாங்கள் இருவரும் இனிமேற் சேர்ந்து பழகப்படாது என்று அப்படிக் கட்டுப்பாடு செய்து விட்டார்கள். உன்னைப்போகவேண்டாம் என்று நிறுத்தியதற்கும் காரணங்கள் உண்டு" என்று சிலவற்றைச் சொல்லாமற் சொன்னேன்.

இதனை உற்றுக்கேட்ட அவள் உடனே "அவ்வளவு கட்டுப்பாடு ஏன் செய்யவேண்டும்? தெய்வநாயகத்தையும் உன்னையும் ஒன்றாக வைத்துக் கல்யாணம் பண்ணி விடலாகாதா?" என்று என் முகத்தை நோக்கி வினாவினாள்.

இச்சொற்களைக் கேட்டதும் என் மனம் சில்லிட்டது? என் முகம் நாணத்தாற் சிவப்படைந்தது. அவள் கேட்டபடியே நடவாத என் தீவினையை நினைந்து ஒரு பக்கத்தில் மனம் உளைந்தது, அவள் கேட்டதன்மேல் உண்மை சொல்ல வேண்டியதைப் பற்றி

மற்றொரு பக்கம் மனம் கூசியது. இப்படிப்பட்ட என் மனக் குழப்பமெல்லாம் என் தங்கை என் முகத்திற் பார்த்து.

“என் அக்கா பலவிதமாய் விசனப்படுகிறாய்?” என்றாள்.

“ஒன்றும் இல்லை அம்மா, தெய்வநாயகமும் நாமும் ஒரே சாதியாய் இருந்தால், எனக்கும் அந்தப்பிள்ளைக்கும் ஒருகால் கல்யாணம் முடிந்திருக்கக்கூடும். ஆனால், அவர்கள் சூத்திரச்சாதி, நாமோ பார்ப்பாரச்சாதி. ஆனதனால் தான் அப்படி நடக்க வில்லை.” என்றேன்.

“அப்படியானால், ஒரேசாதிக்குள்ளேதான் கல்யாணம் நடக்க வேண்டுமோ? சூத்திராளுக்கும் பிராமணாளுக்கும் கல்யாணம் நடப்பதில்லையோ? நடந்தால் குற்றம் என்ன?” என்று கேட்டாள்.

“இப்போது ஒரே சாதிக்குள்தான் கல்யாணம் நடப்பிப்பது வழக்கமாய் இருக்கின்றது. பிராமணரைப் பார்க்கிலும் சூத்திரர் மிகத் தாழ்ந்தவர்களென்றும், அவர்களிடம் பெண் கொடுத்தல் கொள்ளலாவது அவர்களுடன் உண்ணல் கலத்தலாவது செய்வது சிறிதும் ஆகாது என்றும் நம்மவர்கள் சொல்லு கிறார்கள்” என்றேன்.

அதற்கு நுண்ணறிவுடைய என் தங்கை, “அக்கா, அக்கா இதென்ன அநியாயம்! சூத்திராளுக்கும் நமக்கும் என்ன வித்தியாசம்? அவர்களுக்கும் கண் கால் தலையெல்லாம் இருக்கின்றன. நமக்கும் கண் கால் தலையெல்லாம் இருக்கின்றன. நாம் பேசுவது நடப்பது போலவே அவர்களும் செய்கிறார்கள். நாம் உண்பது உடுப்பது போலவே அவர்களும் செய்கிறார்கள். நம்மில் ஆண் பிள்ளை பெண் பிள்ளைகள் இருப்பது போலவே அவர்களிலும் இருக்கிறார்கள். நாம் வீடுவாசல்களில் வசிப்பது போலவே அவர்களும் வசிக்கிறார்கள். நமக்கென்ன இரண்டு தலையும் அவர்களுக்கு ஒரு தலையுமா இருக்கின்றன? நமக்கு நான்கு கண்ணும் அவர்களுக்கு இரண்டு கண்ணுமா இருக்கின்றன? நம்வயிற்றிற் பொன்னும் அவர்கள் வயிற்றில் மண்ணுமா இருக்கின்றன? நாம் ஆகாயத்தில் வசிக்க அவர்கள் தரையிலா வசிக்கின்றார்கள்? அப்படி ஒன்றும் இல்லையே. அப்படியிருக்க அவர்கள் தாழ்ந்தவர்கள் என்றும் நம்மவர் உயர்ந்தவர்கள் என்றுஞ் சொல்லுவது ஏன்?” என்று வினாவினாள்.

அவள் கேள்வியின் நுட்பத்திற்காக மிகவும் அதிசயித்து "என் அருமைக்கண்மணி, நீ சொல்லியதெல்லாம் உண்மையே நம்மைப் போல் மனிதப்பிறவி எடுத்தவர்களுக்கும் நமக்கும் உடம்பளவில் வித்தியாசம் ஏதும் இல்லை; இன்பதுன்பங்கள் அனுபவிப்பதிலும் வித்தியாசம் இல்லை. ஆனால், அவர்கள் குணங்களிலும் செய்கை களிலும் அளவிறந்த பேதங்கள் இருக்கின்றன. சிலர் நற்குணம் உள்ளவர்களாய் இருக்கிறார்கள் சிலர் தீக்குணம் உள்ளவர்களாய் இருக்கிறார்கள்; சிலர் நல்ல செய்கையும் சிலர் தீய செய்கையும் உடையவர்களாய் இருக்கின்றார்கள். இவற்றினாலே தாம் முதலிற் சாதிபேதங்கள் உண்டாயிருக்க வேண்டுமென்பது எனக்குத் தோன்றுகின்றது" என்றேன்.

உடனே அவள் "அப்படியானால் நம்மவர்கள் மாத்திரம் நற் குணமும் நல்ல செய்கையும் உள்ளவர்கள்; மற்றச்சாதியார் தீக் குணமும் தீயசெய்கையும் உள்ளவர்கள் என்றல்லவா சொல்ல வேண்டும்?" என்று சொன்னாள்.

"இல்லை, இல்லை. நம் நினைவுக்கு எட்டாத முன்னொரு காலத்தில் நற்குணமும் நற்செய்கையும் உடைய சிலர் கடவுளைத் தொழுதுகொண்டு உலகத்திற்கு நன்மை செய்து வந்தார்கள்; அதனாலே அவர்களுக்குப் பிராமணர் என்றும் பார்ப்பார் என்றும் பெயர் வந்தது. அவ்வளவு நல்லவர்களாய் இருந்த முன்னோர் களுக்குப் பிறந்தபிள்ளைகளும், அவர்களின் சந்ததியார்களும் ஏறக்குறைய நல்லவர்களாகவேயிருந்து வந்தமையால் அவர்களுக்கும் பார்ப்பார் என்னும் பெயர் பின்னும் வழங்கி வந்தது. ஆனால் இப்போதுள்ள நம் சாதியாரோ அந்த நற்குண நற் செய்கைகளினின்றும் பிசகிப்போய் விட்டார் களென்று சமாசாரப் பத்திரிகை களிலும் அடிக்கடி படித்து வருகின்றேன். நமது அகத்திற்கு வரும் சுற்றத்தார்களும் பலமுறை பேசக் கேட்டிருக்கின்றேன். மற்றச் சாதியாரைப்பற்றி நான்கேட்ட மட்டில் அவர்கள் நல்லொழுக்கத்திலும் நற்குணத்திலும் மேம்பட்டு வருகிறார்களென்று தெரிகின்றேன்" என்றேன்.

"அப்படியானால் மற்றச்சாதியார்களில் நல்லவர்களைப் பிராமணர் என்று சொன்னால் குற்றம் என்ன?" என்று பின்னுந் தொடர்ந்து வினவினாள்.

"அவ்வாறு சொல்வதிற் குற்றம் ஒன்றும் இல்லையானாலும், நம்முடைய சாதியார் மற்றவர்களில் நல்லவர்களைக் கண்டால் தலையெடுக்கவொட்டாமல் அவர்களை நசுக்கிவிடக் கங்கணங் கட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்று கேள்விப் படுகிறேன்." என்று விடைகூறினேன். இதற்குள் எங்கள் தாயார் படுக்கைக்குப் போகும்படி கத்தினமையால் நாளைக்கு இதைப் பற்றிப் பேசலாம் என்று போய்விட்டோம். மிச்சமும் பின்னால் எழுதுகிறேன்.

## கடிதம் - 3

*என் கண்ணனையீர்,*

*நேற்று நான் அரைகுறையாய் வரைந்து அனுப்பின கடிதத்தைப் பார்த்து நீர் மிகமகிழ்ந்து எழுதி இன்று உச்சிப்போதில் எறிந்த கடிதம் எனக்கு ஆராமகிழ்ச்சி தந்தது. எனக்கும் என் றங்கைக்கும் நடந்த சம்பாஷணையில் என்றங்கையின் நுட்பறிவை மிகவியந்து, அச்சம்பாஷணையின் முடிவைத் தெரிவிக்கும்படி கேட்டிருக்கிறீர்கள். இன்று பிற்பகலிற் சாப்பாடு முடிந்தபிறகு என் தாயார் படுத்துறங்கினாள்; புருஷர்கள் யாரும் இல்லை, எல்லோரும் வெளியே அலுவலின்மேற் போய்விட்டார்கள். அச்சமயம் பார்த்து என் அருமைத்தங்கை என்னிடம் மெத்தை மேல் வந்தனள். அவள் வருவதற்குச் சிறிது முன்னே தான் உமது கடிதத்தைப் படித்துக் கொண்டிருந்தேன். அவள் வரும் அரவங்கேட்டு அதனை அப்பால் மறைத்து வைத்துவிட்டேன். அவள் என்னண்டை வந்தவுடனே, "அக்கா, நேற்றிராத்திரி நாம் பாதியில் நிறுத்திவிட்ட பேச்சை மறுபடியும் பேச எனக்கு ஆசையாயிருக்கின்றது. அக்கா, நம்மவர்கள் மற்றச்சாதியாரை மேலுக்கு வரவொட்டாமல் தடை செய்கிறார்கள் என்று சொன்னையே, அப்படி ஏன் அவர்களைத் தடை செய்ய வேண்டும்?" என்று மிகவும் ஆவலோடு கேட்டாள்.*

*"அதற்குப் பொறாமையே தான் காரணமாயிருக்க வேண்டும் என்பது எனக்குத் தோன்றுகின்றது. நம்மவர்கள் தம்மை உயர்ந்த சாதியாராக எண்ணி மகிழ்ந்திருத்தலால், மற்றவரும் தம்மைப் போல உயர்வடையவிட்டால் அவர்கள் தம்மை மதியார்கள் என்றும், தமக்குள்ள உயர்வு குறைந்து போகுமென்றும், அதனால் தமக்குள்ள வரும்படி சுருங்கி விடுமென்றும் நினைத்துத்தான் அதற்கு இடந்தருகிறார் களில்லை என்று தெரிவிக்கின்றேன்" என்று நான் விடை பகர்ந்தேன்.*

இதனைக் கேட்டதும் அவள்சிறிது நேரம் வாய்பேசாமற் சுவரைப் பார்ப்பதுபோலிருந்து என்னைநோக்கி, "நல்லது, அக்கா நம்ம பிராமணச்சாதியில் இந்தத்தேசத்தில் எத்தனைப் பேர் இருப்பார்கள்?" என்று மிகவும் ஆழ்ந்த சிந்தனையோடு கேட்டாள்.

"இவ்வளவுபேர் என்று எனக்கு மொத்தக்கணக்குத் தெரியாது; என்றாலும் நம்மவர்கள் இலட்சக்கணக்காகத்தான் அங்கங்கே இருக்கிறார்கள் என்பதுமாத்திரம் நிச்சயம்" என்றேன்.

உடனே அவள், "நல்லது, இவ்வளவுபேரும் போதுமான வரும்படி பெற்றுப் பிழைத்துத்தானே வருகிறார்கள். மற்றச் சாதியாரை உயரவிடாவிட்டாலும், நம்மவர் குடும்பங்களே ஒன்று பத்து நூறு ஆயிரமாகப் பெருகிவிட்டால் அப்போது நம்மவர் என்ன செய்வார்கள்? அல்லாமலும், நம்மவர்களில் ஒவ்வொருவரும் தம்மைத் தாம் உயர்வாகத்தானே மதித்திருக் கிறார்கள். அப்படி ஒவ்வொருவரும் தம்மை உயர்வாக மதித்திருப்பதால், நம்மவர் களுக்கள் ஏதாவது தாழ்வுவருகிறதா? இல்லையே. இது போலவே, மற்றச்சாதியார்களில் நற்குணமும் நற்செய்கையும் படிப்பு முள்ளவர்களை நம்மோடு சேர்த்துக் கொண்டு, அவர்களுக்கும் நமக்கும் ஏதும் வித்தியாசம் இல்லாமல் நடத்தி வருவோமானால், நம்மவர்களுக்க இன்னும் நல்லதாகு மோயன்றித் தீங்கொன்றும் வராதே" என்று கூறினாள்.

அவள் நுட்ப அறிவின் திறத்திற்கும், என் மனத்தில் உள்ள எண்ணப்படியே பேசினதற்கும் நான் மிகவும் உள்ளங்களித்து அவளைக் கட்டியணைத்துக் கன்னத்தில் முத்தம் வைத்து, "அறிவில் மிக்க என் ஞானவிளக்கே, நீ சொல்லிய தொவ்வொன்றும் பொருத்தமாகவே இருக்கின்றது. ஆனாலும் என் செய்யலாம்! சிறு குழந்தையாகிய உனக்குள்ள அறிவுங் காருணியமுங்கூட நம்மவர்களில் மிக வயது முதிர்ந்தவர்களுக்கும் இல்லையே? நம்மவர்களிற் பல்லுஞ் சொல்லும்போய் வாய்திறந்தாற் காத தூரம் நாறும் அசுத்தக் கிழவர்கள்கூட மற்றச்சாதியாரிற் சுத்தி பத்தியுடைய வர்களைக் கண்டாலும் ஏழடி எட்டி நடக்கிறார்கள். மற்றச் சாதியார் வெயிலிற் களைத்துச் சிறிதுநேரம் ஒதுங்குவதற்குத் தம்வீட்டு ஒட்டுத்திண்ணை யண்டை வந்தால் நம்மவர்கள் தமது வீடு தீட்டுப்பட்டுப்போம் என்று

அவர்களைத் துரத்துகிறார்கள்! அல்லது தெரியாமல் உட்கார்ந் திருந்து எழுந்துபோனார்களானால் அவர்களிருந்த விடத்திற் சாணிகரைத்துத் தெளிக்கின்றார்கள். மாட்டுச்சாணியிலும் ஆறறிவுடைய மனிதன் தாழ்ந்தா போயினான்! பசியால் உயிர் போகிறதென்று பிறசாதியான் ஒருவன் வந்தால், அவனுக்கு அன்னமிடிற்றீட்டுப் பட்டுப்போமென்று நம்மவர் அன்னஞ் சிறிதும் இடுவதில்லை; ஒருகால் கொஞ்சம் இரங்கிச் சோறிட மனம் வந்தாலும் வீட்டில் உள்ளவர்கள் எல்லாரும் உண்டபிறகு மிச்சம் இருந்தாற் சிறிது இடுவார்கள்! இதற்குட் பசித்து வந்தவனுக்குப் பாதிஉயிர்போய்விடும்! ஐயோ! தாகத்தால் மிக வருந்திவந்தவர் களுக்குத் தண்ணீர் கொடாமல் வெருட்டின நம்மவர்கள் எத்தனை பேரை நான் பார்த்திருக்கின்றேன்! தம்மை உயர்ந்தசாதியாராக மதித்ததனால் நம்மவர்களுக்கு வந்த கேட்டைப் பார்!. அவர்கள் சிறிதும் மன இரக்கம் இல்லாதவர்க ளானார்கள்! மற்றச்சாதியாரைத் தம்மோடொத்த உயிர்கள் என்று நினையாமல் தாழ்வாக நினைத்துப் பாவத்தையும், தம்மை உயர்வாக நினைத்து அகங்காரத்தையும் கட்டிக் கொண்டார்கள்! உடம்போடு அழிந்து போவதாகிய சாதிவித்தியாசத்தைப் பெரிதாகமதித்து, உயிர்க்கு இனிமைதருகின்ற சீவகாருணிய மென்னும் பெரும்புண்ணியத்தை இழந்து போனார்கள்! நம்மவர்கள் இப்பெரும் பாவத்தினின்று எப்படிக் கரையேறப் போகின்றார்கள்! என அல்லும் பகலும் எண்ணிப்பரிதவித்து வருகின்றேன்'' என்று நான் சொல்லுகையில் என் தங்கை இடைமடக்கி,

"ஏன் அக்கா, இப்போது இங்கிலீஷ் படிக்கிறவர்களில் நம்மவர்கள் சாதிவித்தியாசத்தை அவ்வளவாகப் பாராட்டுகிற தில்லையென்று நீ அடிக்கடி சொல்லி வந்திருக்கிறாயே?'' என்று வினவினாள்.

"கண்மணி, இங்கிலீஷ் படித்த நம்மவர்கள் அழகை என்னென்று சொல்வேன்! இங்கிலீஷ் படித்த நம்மவர்கள் தம் எண்ணம் போலெல்லாம் நடப்பதற்குச் சௌகரியமாகச் சாதி வித்தியாசம் பாராட்டுவதில்லையென்று சொல்லுகிறார்களே தவிர, உண்மையில் அவர்கள் தாம் அதனை மிகுதிப்படுத்தி வருகிறார்கள். இங்கிலீஷ் படித்த சிலர் குசினிக்காரப்பறையர் வைத்திருக்கும் சாப்பாட்டுக் கடைகளிற்போய்க் காப்பிவாங்கிக்

குடிக்கிறார்கள்.வேறுசிலதின்பண்டங்களும்வாங்கிஉண்கிறார்கள். இதனைக் கேள்விப் பட்ட அவர்கள் உற்றார் உறவினரான வைதிகப் பிராமணர் அவர்களைப் பார்த்து, இப்படிப் பறையர்கடைகளிலே சென்று காப்பி உண்பது தகுமா? என்று வினாவினால் அப்போது மாத்திரம் பறையன் என்றால் என்ன? அவன் மனிதன் அல்லனோ? அவனுக்கும் நமக்கும் என்ன வித்தியாசம்? வெறுந் தண்ணீர் வாங்கிக் குடிப்பதாற் குற்றம் சிறிதும் இல்லை. இங்கிலீஷ் படித்த நாங்கள் வித்தியாசம் பாராட்டுவதில்லை. நீங்கள் கருநாடகப்பேர்வழிகள்; இந்தக் காலத்திற்கு இவையெல்லாம் கூடா, என்று மழுப்பிச் சொல்லி விட்டுப் போய்விடுகிறார்கள். இப்படிச் சொல்லும் இவர்களே தாம் உத்தியோகம் பார்க்கும் தொழிற்சாலைக்குட் சென்றால், தம்மினும் மேம்பட்ட அறிவினை உடையராய்த் தம்மோடொத்த நிலையிலும் தமக்குமேற்பட்ட நிலையிலும் உத்தியோகத்திலுள்ள வேளாளர், வடுகர் முதலான பிறசாதியாரைப் பார்த்துப் பொறாமைகொண்டு புழுங்கி இந்தச்சூத்திரப்பயல்கள் பிராமணாளான நமக்குச்சமமாயும் நமக்குமேலாயும் வந்து விட்டார்களே என்று தமக்குட் கூடிப் பேசிக்கொண்டு அவர்களைக் கெடுத்துக் கீழ்தள்ளச் சமயம் பார்க்கிறார்கள். இன்னும் தாம் உத்தியோகஞ்செய்யும் இடங்களில் தம்மோடொத்த பிராமணர்களையே அலுவலிற் கொண்டுவந்து அமர்த்தி வைக்கிறார்களே யல்லாமற் பிறசாதியாரில் உத்தமராயும் கல்வியறிவிற் றேர்ந்தவர்களாயும் இருப்பவரையுங் கூடத் தாமிருக்கும் இடங்களிற் சேர்ப்பதில்லை. உயர்ந்த நியாயாதிபதி வேலையினின்று விடுதிபெற்ற நம்மவர் ஒருவர் தாமிருந்த அவ்வேலைக்கு வேளாளர் ஒருவரும் பிராமணர் ஒருவரும் தக்கவராயிருக்கக் கண்டு உடனே தம்மோடொத்த பிராமணரைத் தம்மிடத்து அழைத்து நீர் நானிருந்தநியாயாதிபதி வேலைக்குவரப் பிரயத்தினம் பண்ணும்; நீர் இதில் அசட்டையாய் இருந்து விடுவீரானால் ஒரு சூத்திரப்பயல் வந்து உட்கார்ந்துவிடுவான் என்று மிக்க காரத்தோடுஞ்சொல்லி, அவரை ஏவி அவர்க்கே அவ்வேலையைச் செய்து வைத்தனராம். இங்ஙனமே எனக்கு எட்டும் செய்தி ஒவ்வொன்றும் இங்கிலீஷ் படித்த நம்மவர்கள் அதுபடியாத நம்மவர்களினும் மிகுந்த மனவைரங் கொண்டு சாதிவித்தியாசம் பாராட்டி வருகின்றனர் என்பதை அறிவுறுத்துகின்றது. ஆகையால், இங்கிலீஷ் படித்த

நம்மவர் தம்முடைய சௌகரியத்தின் பொருட்டுச் சாதி வித்தியாசம் பாராட்டுவதில்லையே யொழியப், பிறசாதியாரின் நன்மையின் பொருட்டு அங்ஙனம் செய்கின்றனரென்பது எள்ளளவுந் தோன்றவில்லை" என்றேன்.

என். சொற்கள் ஒவ்வொன்றனையும் உற்றுக்கேட்ட என் தங்கை "அப்படியா! அப்படியா!" என்றுஏங்கி "நம்மவர்கள் அவ்வளவு கல்நெஞ்சம் உடையவர்களா!" என்று மெல்லெனக் கரைந்து "நல்லது, அக்கா, நம்மவர்களிற் புருஷாள்தாம் அப்படியிருக்கிறார்கள். ஸ்திரீகள் எப்படிப்பட்டவர்கள்? அதனைச் சிறிதுசொல்" என்று கேட்டாள்.

"ஆ! நம்முடைய ஸ்திரீகளின் நிலைமையா! நம்மவர்களில் ஆண்மக்களுக்காவது சிறிது கல்வியுணர்ச்சி இருக்கின்றது; நம்முடைய பெண்பாலார்க்கு அதுவும் இல்லை; இவர்களிற் படித்தவர்கள் என்று சொல்லக்கூடியவர்கள் தப்புந்தவறுமாக வண்ணான் கணக்கு எழுதத் தெரிந்தவர்களேயல்லாமல் வேறல்லர். அறிவினை வளரச்செய்யும் உயர்ந்த நூல்களுள் ஒன்றேனும் இவர்களுக்குத் தெரியாது. எழுத்துக்கள் சில எழுதக்கற்றுக்கொண்ட தமது கல்வியையே பெரிதாகமதித்து இறுமாந்திருக்கிறார்கள். தம்மைத் தேவமாதர்கள் என்றும் மற்றச்சாதியார் அனைவரையும் சூத்திரப் பேய்கள் பறைப் பிசாசுகள் என்றும் எண்ணியிருக்கிறார்கள். குளங்களுக்குப் போய்க் குளித்துவரும்போது மற்றச்சாதியாரைக் கண்டு இவர்கள் துணுக்குற்று அப்புறமும் இப்புறமும் ஒதுங்குவதைப் பார்த்தால் எனக்குச் சிரிப்பு வராமல் இருப்பதில்லை. பல்வகைச் சாதியாரும் தோய்ந்து அசுத்தப்படுத்தின குளத்தின் நீரிலே முழுகி வரும் இந்தத்தேவமாதர்கள்மேல் அவ்வசுத்தத்திற் சிறிதாயினும் படாமல் இருக்குமா? என்று நான் எனக்குள்ளே எண்ணிக் கொள்வதுண்டு. இவர்களுக்குத் தருமசிந்தையென்பது சிறிதுங் கிடையாது. எந்நேரமுந் தம்மை உயர்வாகவும் பிறரைத் தாழ்வாகவும் நினைப்பதால், பிறரைக்கண்டால் அருவருப்புங் கோபமுங்கொண்டு அகங்கரிக்கின்றார்கள். அதனால் இவர்கள் மனம் சிறிதும் இளக்கமின்றிக் கல்லைப்போற் கரடாய்ப் போய் இருக்கின்றது. இவர்களுக்கு அன்பும் பட்சமும் இன்னபடி யென்றே தெரியா. அதனால் இவர்கள் தம் தாய் தந்தையர், சகோதரர் சகோதரிமார், கணவர், உற்றார் உறவினார்

முதலியவர்களிடத்துங் கூட உண்மையன்பு பாராட்டுவதில்லை. தமக்கு உடுக்க உயர்ந்த பட்டுப்புடைவையும் உண்ண நாவிற்கினிய பண்டமும், பூணச் சிறந்த நகைகளும் பிற வசதிகளும் கிடைத்தால் தமது வாழ்க்கையைத் தேவ வாழ்க்கையாக எண்ணி இறுமாந்து கிடக்கின்றார்கள்; இவ்வளவுங் கிடையாவிட்டால் தம்மவர்கள் மேல் மிக மனம்நொந்து வெறுப்புற்றிருப்பார்கள். இவர்களின் இவ்வறியாமைக் குணத்தினாலும் செய்கையினாலும் நம் ஆண்மக்கள் செய்யும் தீயசெய்கைகளுக்கும் அவற்றால் அடையும் துன்பங்களுக்கும் ஓர் அளவே இல்லை; அம்மா" என்றேன்.

"அப்படியானால் அக்கா, உன்னைப்போல நம்ம பெண் மக்களிற் படித்தவர்கள் இல்லையா?" என்று வினாவினாள்.

"அம்மா, எனக்குத்தான் என்ன தெரியும்? நம் அண்ணா சுப்பிரமணியன் தமிழ்க்கல்வியிற்றேர்ந்த அறிஞர்களிடம் எந்நேரமும் பழகிவருவதால், அவன் என்னைத் தமிழ் நூல்கள் படிக்கும்படி தூண்டி எனக்குப் பலஉயர்ந்த தமிழ்ப்புத்தகங்கள் வாங்கித்தந்து வருகிறான். நானும் அவற்றை மிகுந்த ஆவலோடு படித்து வருகின்றேன். இன்னும் நான் படிக்கவேண்டிய நூல்கள் எவ்வளவோ இருக்கின்றன. அது நிற்கட்டும், என்னைப்போலப் படிப்பவர்களும், என்னிலும் மிகுதியாகப்படித்தவர்கள் சிலரும் நம்முடைய பெண்மக்களில் இருக்கிறார்கள். ஆனால், இவர்கள் எல்லாரும் குடத்துக்குள்ளே வைத்த விளக்குப்போலப் பொலி விழந்து இருக்கிறார்கள்.நம்மவர்களிற் படியாத மாதர்களெல்லாம் படித்த அப்பெண்மணிகளைக்கண்டு பொறாமைகொண்டு ஏளனஞ்செய்வதே தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள். இதனால் அவர்கள் மிக மனம்நைந்து தமது கல்வியைப் பயன்படுத்தக் கூடாமல்வீணே காலங்கழித்து வருகின்றனர்; உற்றார் உறவினர் பழிப்புக்கு அஞ்சின இவர்கள் பெற்றோர்களும் இவர்களை மேன்மேலும் படிக்க இடந்தருவதில்லை. என் செய்வார்கள்! பாவம்! நம் அண்ணா சுப்பிரமணியனுடைய உதவியில்லாவிட்டால், நம்முடைய பெற்றோர்களும் என்னை இவ்வளவு கூடப் படிக்கவிட மாட்டார்கள்" என்று மனம் விண்டு கூறினேன்.

இதனைக்கேட்ட என் தங்கை கண்கலங்கி, "ஐயோ! இது என்ன கொடுமை. அக்கா, ஏன் அவ்வளவு கொடுமைக்கும் அவர்கள் ஆளாயிருக்கவேண்டும்? நம்மிற் படித்த அப்பெண்

மணிகள் தம் எண்ணம்போற் படித்துத் தாம் படித்ததைப் பிறர்க்கு எடுத்துச்சொல்வதிற் குற்றம் என்ன?" என்று வினவினோள்.

"குற்றம் சிறிதும் இல்லை. ஆயினும், உற்றார் உறவினர் பெற்றோர்க்கு அடங்கியிருக்கும் வரையிலும் இவர்கள் அவர்கள் சொற்படிதான் நடக்கவேண்டு மேயல்லாமல், தாமாகவே ஏதுஞ் செய்தல் ஆகாது" என மொழிந்தேன்.

"பெற்றோர்கள் கற்பிப்பது நல்லதானால் அதற்கு அடங்கி நடக்கவேண்டுவது முறைதான். அவர்கள் நலமல்லாததைக் கற்பித்தால் அதற்கும் அடங்கி நடப்பது தகுமா? அப்படி அடங்கி நடவாவிட்டால் என்ன?" என்று மீண்டும் வினவினாள்.

"அம்மா, அவர்கள் சொற்படி நடவாவிட்டால் அப்பெண் மணிகள் அடிபட்டும் உதைபட்டும் பலவாறு அவர்களால் துன்பப் படுவார்கள் என்றேன்.

"அப்படியானால் அப்பெண்கள் அவ்வளவு கொடுமை செய்பவர்களை விட்டு நீங்கி வெளியேபோய்த் தனியே காலங்கழிக்கலாகாதா?" என்று கேட்டாள்.

"நமது தேசத்தில் பெண் மக்கள் தமக்கு உற்ற ஆண் துணை யின்றித் தனியே சென்று காலங்கழிக்க முடியாது;" என்று உரைத்துப் பின்னும் அவள்மனநிலையைத் தெரிந்துணர்தற்காக; "அது நிற்கட்டும், நான் நமது பெற்றோரையும் மற்றவர்களையும் எல்லாம் விட்டுப் பிரிந்து தனியே போய் எங்கேயாவது இருக்கலாமா?" என்று முகஞ்சுளியாமல் அவளைக்கேட்டேன்.

இச்சொற்களைக் கேட்டதும் என் தங்கையின் கண்களில் நீர் முத்து முத்தாய்த் துளித்தது. உடனே அவள் என்னைக் கட்டித் தழுவிக்கொண்டு, "அக்கா, நீ அப்படியெல்லாம் எங்களை விட்டுப்போய்விடாதே; உன்னைப் பிரிந்து நான் எப்படியிருப்பேன்? அக்கா, அக்கா என்று உன்னையே கூப்பிட்டுக் கொண்டு அலைய மாட்டேனா! நீ எங்கேபோனாலும் உன்னை நான் விட மாட்டேன். அம்மா, அப்பாவிடம் சொல்லி நீ எங்கேபோனாலும் உன்னை அழைத்துக் கொண்டு வந்துவிடுவேன். அக்கா, நீ என்னை விட்டுப் போய்விடுவாயோ? அம்மாவிடம் போய்ச் சொல்லட்டுமா?" என்று சொல்லிக்கொண்டே எழுந்தாள்.

அவள் எழுந்ததைக்கண்டு மிகவும் அஞ்சி அவளை உடனே கையைப்பிடித்து மடியில் உட்காரவைத்து, "என் செல்வமே,

உன்னை விட்டுப் போவேனா? நான் சும்மா விளையாட்டுக்காக உன்னைக் கேட்டேன். எப்படி நீ என்னைப் பிரிந்திருக்கக் கூடாமல் மனம் வருந்துகின்றாயோ, அப்படித்தானே நம்மிற் படித்த பெண்களையும் அவர்களைச் சேர்ந்தவர்கள் பிரியக்கூடாமல் வருந்துவார்கள். இதனை உனக்குத் தெரிவிப்பதற்காகவே அப்படிச் சொன்னேன். அதற்காக நீ துயரப்படாதே என் கண்மணி!'' என்று சொல்லி அவளை முத்தம் வைத்தேன்.

என் அருமை நண்பரே, இவ்வளவுதான் எங்களுக்குள் நடந்த சம்பாஷணையின் விவரம். நீரும் நானும் அளவளாவி உயிரும் உடலும்போற் பிரிவின்றிக் கலந்திருந்து இல்லற வாழ்க்கையை நடத்துவதற்கு நாம் இருவரும் தொலைவிலுள்ள ஒரு நகரத்திற்குப் போய்விட வேண்டுமென்று எழுதினீரே. நீர் நும்முடைய தாய் தந்தையர் உற்றார் உறவினர் முதலிய எல்லாரையும் அறவேவிட்டு என் பொருட்டு வரத்துணிந்தபோது, நான் மாத்திரம் அதற்கு இசையாமல் இருக்கலாமா என்று நீளநினைந்துபார்த்து யானும் என் தாய்தந்தையர் முதலான எல்லாரையும் துறந்து நும்முடன் போவதற்குத் துணிவு கொண்டேன். அங்ஙனந் துணிவுகொண்ட சில நிமிஷங்களுக் கெல்லாம் என்றங்கைக்கும் எனக்கும் மேற்கூறிய சம்பாஷணை நடந்தது, பாரும், எங்கள் பார்ப்பாரச் சாதியிற் படித்த பெண்கள் சிலர் படுந்துன்பத்தை யான் எடுத்துச் சொன்னபோது என் தங்கை மிக மனம் உருகி, 'அவர்கள் ஏன் தம்மைச் சேர்ந்தாரை விட்டு நீங்கி வெளிப்புறப்பட்டுத் தன்னந்தனியே வாழலாகாது என்று கேட்டவள். பிறகு நான் தனியே பிரிந்துபோயிருக்கலாமா என்று அவளைக் கேட்டதும், அதுகாறும் மிக்க நுண்ணறிவோடும் நியாயவுணர்ச்சியோடும் பேசிவந்த தன் அறிவையும் மறந்து, என்மேல் உள்ள அன்பினால் அங்ஙனம் பிரிவதற்கு உடன் படாமல் வெம்பினாள். எவ்வளவு நுண்ணறிவுடையோ ராயிருந்தாலும் அவர் ஒருவரிடத்துண்டான அன்பின் வசப்படுவாரானால் தம் அறிவையும் நியாய முறையையுங் கைவிடுவாரென்பது இதனால் விளங்குகின்றதன்றோ? என் ஆருயிர்க் காதலரே, என் தங்கை என்மேல் வைத்த பிரியத்தால் என்னைப் பிரிந்திருக்க மாட்டாளே! என்னைப் பிரிந்தால் அவள் எவ்வாறாவாளோ என்று நினைக்க என் நெஞ்சம் பகீரென் கின்றதே! பாலினுந் தூயமனமுடையீர், உம்மையும் அகன்

*றிருக்க என் உள்ளம் இசைகின்றதில்லை, என்னை அகன் றிருக்கும் ஒவ்வொரு நிமிஷமும் உமக்கு ஒவ்வொரு வருஷமாய் இருக்கின்றதென வரைந்தீர்; எனக்கோ அப்படியில்லை, உம்மை விலகியிருக்கும் ஒவ்வொரு நொடியும் எனக்கு ஒவ்வோர் ஊழியாய் இருக்கின்றதே! உடலானது உயிரையும் பிரிந்திருக்கும், மலரானது மணத்தையும் பிரிந்திருக்கும், நானோ உம்மைப் பிரிந்திரேன். கல்வியின் மிக்க வல்லவரே, உமது கல்வியின் உயர்வையும், குணத்தின் நலத்தையும் அழகின் அமைவையும் நான் அறிவேன்; என்னுடைய அருமைகளை நீர் அறிவீர். நம் இருவர்தம் பொருத்தத்தையும் பிறர் எவர் அறிவார்? சாதி வித்தியாசமே நம்முடைய தேசத்தார்க்கு உயர்ந்த தத்துவஞான மாயிருக்கின்றது; சாதி வித்தியாசத்தால் நம்மவர் கண்டன யாவை? அகங்காரமும், கோபமும், பிரிவும், பகையும் அல்லவோ? சாதியில் வேறுவேறான நாம் இருவரும் பொருந்தியிருக்க ஐயோ! நம்மைச் சேர்ந்தவர்கள் இணங்குவார்களா? ஒருகாலும் இணங்கமாட்டார்களே! என் செய்வேன்! உடம்போடு ஒருங்கு இருக்கவேண்டுமாயின் என்னவர்கள் எல்லாரையுங் துறக்கலாம். என்றங்கையை எவ்வாறு துறப்பது! ஆ! ஈ தென்ன இது! திருவல்லிக்கேணிக்குப் போக வேண்டும் கீழே வா என்று என் அன்னை அழைக்கிறாளே. என் அன்பரே, மற்றவை பின்னால் எழுதுகிறேன். எத்தனைநாள் சென்று இங்கே வரும்படியாய் இருக்குமோ, என்னை மறவாதீர்!*

# கடிதம் -4

*என் அருமைக்காதலரே,*

*நான் இங்கே திருவல்லிக்கேணிக்கு வந்து ஒருமாத காலமாய் விட்டது. இந்த ஒரு மாதமும் உமக்குக் கடிதம் எழுதச் சமயம் வாய்க்கவில்லை. நீர் என்னைப்பற்றிஏது நினைத்துக் கொண்டீரோ! உம்முடைய திருமுகத்தை யான் காணக் கிடையாமற் கழிந்த இவ் வொருமாதகாலமும் எனக்கு மிகவும் பொல்லாதகாலம். யான் உமக்குக் கடிதம் எழுதவும் உம்முடைய கடிதத்தை, யான் காணவும் பெற்றால் என் உள்ளம் ஒருவாறு ஆறுதல் அடைந்திருக்கும். அவ்வளவுக்கும் இடம் இல்லாமற் போய் விட்டதே! உம்மை நினைந்துநினைந்து பாவியேன் நெஞ்சம் நெகிழுகின்றது. என் சிந்தையெல்லாம் உம்மேற் பதிந்து அல்லும் பகலும் உம்மையே நினைந்திருப்பதனாலேதான் என்னுயிர் உடம்பிற்றங்கியிருக்கின்றது. இங்கே வந்தநாள் முதல் உம்மைத் திடீரெனப் பிரிந்ததனால் உண்டான வருத்தம் என்னுடம்பையும் அரைவாசி ஆக்கிவிட்டது. உணவும் உண்பதில்லை, உறக்கமும் கொள்வதில்லை. இந்த வீட்டிலுள்ளவர்களிற் பெரும்பாலும் எல்லாரும் என்னை வெறுக்கின்றார்கள். இங்கே என்னிடத்தில் இரக்கமுகங் காட்டுகிறவர் ஒரே ஒரு கிழவனார்தாம், இவரை என் மாமனார் என்கிறார்கள். இவருடைய ஆதரவு இல்லாவிட்டால் இங்கே யான் ஒரு நிமிஷங்கூட உயிர்வாழ முடியாது. என் மாமியார் என்று சொல்லப்படுகிறவள் பொல்லாத கிழப்பிசாசு; என் நாத்துனார் கொடியபட்டி; என்மைத்துனன் என்பவன் ஒரு பெருந் தலையெடுப்புள்ளவன். இவர்களுக்கும் எனக்கும் எந்நேரமும் ஓயாத போராட்டமாக இருக்கின்றது. நச்சுப்பாம்பு களாற் சூழப்பட்ட ஒரு குடிசையில் மந்திரக்காரன் ஒருவனது உதவி பெற்று வசிப்பவர் ஒருவரைப் போல யான் இவர்கள் நடுவிலே என் மாமனார் உதவியால் ஒருவாறு மனத்தைத் தேற்றிக்கொண்டிருக்கின்றேன். யான் இங்கே வந்த ஏழெட்டு*

நாளைக்குப் பிறகு மாமியார் என் மேற் பெருஞ்சண்டை தொடுத்தாள்.

"என்னடி, நீ கலகல என்று பேசாமல் இப்போதுதான் புருஷனைப் பறிகொடுத்தவள்போல் இருக்கிறாயே?" என்று மாமியார் வம்புக்கு இழுத்தாள்.

அதற்கு நான் ஒன்றும் பேசாமல் இருக்கவே, நாத்துணார் கடுகடுத்த முகத்தோடு, தன் தாயின் முகத்தைப் பார்த்து, "நீ சொல்லுவது அவள் காதில் நுழையவில்லை, அவள் யாரோ புருஷாள்மேல் நினைவாயிருக்கிறாள். அவளைப் பார்த்தால் முண்டைச்சிமாதிரியாகவா இருக்கிறது. இப்போது தான் கல்யாண மணைமேல் உட்காரப் போகிறவளைப்போல் இருக்கிறது. தலையில் மயிரைப்பார்! எவ்வளவு பளப்பளப்பா யிருக்கிறது! காதில் சிவப்புத்தோடு நெருப்பு எரிகிறது போலிருக்கிறது; கழுத்தில் தங்கச் சங்கிலி, பொத்தான் வைத்த பட்டுரவிக்கை, உயர்ந்த பட்டுப் புடவை, கையில் தங்கக் காப்புக் கொலுசு, எவ்வளவு ஒய்யாரம்! எவ்வளவு சிங்காரம்! உடம்பைப்பார்! மினுமினுவென்று இருக்கிறது. அவளுக்குக் கவலையேது? விசனம் ஏது? இவளை வைக்கிறபடி வைத்தால் இவளுக்கு இவ்வளவு ஒயில் உண்டாகுமா? ஏண்டியம்மா, இவள் தலையை ஏன் மொட்டை அடியாமல் விட்டு விட்டீர்கள், ஐயங்காரப் பெண்பிள்ளைகளுக்கு அல்லவோ தலையில் மயிர் வைக்கிற வழக்கம், நம்ம ஸ்மார்த்தச் சாதியில் அப்படி வழக்கம் இல்லையே?" என்று கேட்டாள்.

"ஆமடியம்மா, அந்தக் கொடுமையை என்ன சொல்லுகிறது! நம்ம ஆண்பயல்கள் பறைப்பாஷைபடிக்கத் தொடங்கி இவ்வளவு குட்டிச்சுவரும் உண்டானது. நாங்கள் எல்லாம் இவள் ஆமுடையான் இறந்தவுடனே இவள் தலையை மொட்டை அடித்துவிட வேண்டு மென்றுதான் சொன்னோம். நம் பயல் ராமசாமியும் இவள் தமையன் சுப்பிரமணியனுந்தாம் மயிர் வாங்கப்படாதென்று குறுக்கே கிடந்தார்கள். அந்த இளம் பயல்கள் பேச்சைக்கேட்டு நம்ம கிழப்படுவானும் இவன் பெற்றோரும் சரி சரியென்று ஒத்துக்கு மத்தளங்கொட்டி, இவளுக்கு இன்னுங் கொஞ்சம் வயசானபின் மயிரை எடுத்து விடலாம் என்று மெழுகிப் பேசிவிட்டார்கள். இவள் ஆமுடையான் இறந்தபோது இவள் எட்டுவயதுக் குழந்தையாய்

இருந்தபடியால், இனத்தாரும் இரக்கப்பட்டு ஒன்றுஞ் சொல்லாமல் இருந்து விட்டார்கள். பிறகு இவள் பருவமாகி இந்த நாலைந்து வருஷங்களாக இவள் தலைமயிரை எடுத்துவிட வேண்டுமென்று நான் சொல்லி வந்தும் என் சொல்லைக் கவனிப்பவர்கள் யாரும் இல்லை. அங்கேயிருந்தால் இவள் தமையன் சுப்பிரமணியனால் கெட்டுப் போகிறாள்; இங்கே வந்தால் நம்ம கிழப்படுவான் இவளுக்குச் செல்லங் கொடுத்துக் கெடுத்து விடுகிறான்" என்று அவளை நோக்கி விடை பகர்ந்தாள்.

தன் தாயின் சொற்களைக் கேட்ட அவள் பின்னுங் கொந்தளிப்பு உடையவளாகி, "அவர்களுக்குத்தாம் அறிவில்லாமற் போனாலும் இருபது வயசுப் பெண் பிள்ளையாகிய இவளுக்கு அறிவு எங்கே போனது. என்றைக்குப் புருஷனை இழந்தாளோ அன்றைக்கே எல்லாவற்றையும் இழந்தாள். இன்னும் இவள் தலையில் மயிர் வைத்திருப்பதும் அலங்காரம் செய்துகொள்வதும் எந்தப் புருஷனுக்காக. இவளுக்குள்ள அகங்காரத்தை என்ன வென்று சொல்லலாம்!" என்று நாராசத்தைக் காய்ச்சி என் காதில் ஊற்றினாற் போலச் சுடுமொழிகளைச் சொன்னாள்.

இதுவரையில் வாய்பேசாமல் அமைதியோடுங் கேட்டுக் கொண்டிருந்த நான் மனவருத்தம்மிகுந்து "ஏன் நீங்கள் என்னை இப்படியெல்லாம் பழித்துப் பேசுகிறீர்கள்? உங்களுக்கு நான் யாது குற்றம் செய்தேன்?" என்று வினவினேன்.

அதற்கு நாத்துணார் பதைபதைத்து, "நீ தாலி அறுத்தவள் அல்லவா? உனக்கு இவ்வளவு அலங்காரங்களும் எதற்காக என்றாள்.

அதன் மேல் "தாலி அறுத்தவள் என்று நீ என்னை ஏன் ஏசுகிறாய்?" என்று மீட்டும் வினவினேன்.

என்னடி "ஒன்றும் அறியாத அம்முக்கள்ளிபோற் பேசுகிறாய்? பாவி உன்னைக் கட்டாமல் இருந்தால் என தமையன் இன்னும் உயிரோடே இருப்பான்; உன்னைக் கட்டின மறுவருஷமே அவன் இறந்து போனான்; நீ மாத்திரம் குத்துக் கொழுக்கட்டை போல் இருக்கின்றாய்" என்று சினந்து கூவினாள்.

"வீணான பழிச் சொற்களை என்மேல் நிரப்ப வேண்டாம். உனக்கே ஐம்பது வயதுக்குமேல் ஆகின்றது, உன் தமையன் இப்போதிருந்தால் ஐம்பத்தேழு வயதுக்கு மேற்பட்டவ

ராயிருப்பர். நான் ஏழுவயதுக் குழந்தையாயிருந்தபோது என்னை நாற்பத்தைந்து வயதுள்ள ஒருவருக்குக் கல்யாணஞ் செய்வித்தது உங்களுடைய அறிவீனமேயல்லாமல், என்னுடைய குற்றம் அன்று. உன் தமையன் எப்படிப்பட்டவரோ எனக்குத் தெரியாது. அவரைக் கண்டபோ தெல்லாம் நான் பயந்து ஓடினது மாத்திரம் எனக்கு ஞாபகத்தில் இருக்கின்றது. அவர் உன்னைப் போலவே பல்நீண்டு உதடு கீழே தொங்கப் பருத்த தொந்தியோடு தலையில் சிறிய தேங்காய்க் குடுமி வைத்துக் கொண்டு அங்கு மிங்கும் போவதைப் பார்த்த போதெல்லாம் நான் மிகவும் நடுநடுங்கி அழுதோடிப் போனதெல்லாம் எனக்குக் கனவுகண்டாற் போல நினைவுக்கு வருகின்றது. எனக்குத் தந்தையைப் போல் இருந்த உன் தமையனோ எனக்கு ஏற்ற மணவாளன்! ஒருவரையொருவர் பேரன்போடு நேசித்து இருவரும் ஓருயிராய் ஒருவராக மருவிப் பிறர்க்குத் தீங்கில்லாத வழியிலே தாம் அனுபவிக்க வேண்டிய இன்பங்களையெல்லாம் அனுபவித்துக் கொண்டு, உலகத் திலுள்ள எல்லா உயிர்களுக்கும் உதவி ஒத்தாசை முதலான பல நன்மைகளைச் செய்து வாழ்பவர்கள் அல்லரோ மணவாளனும் மணவாட்டியும் என்று சொல்லப்படுவார்கள்? இவர்களுள் ஒருவர் ஒருவரைப் பிரிந்து வினைவசத்தால் இறந்தாலும் மற்றவர் தமது நேசத்தினின்றும் மாறுபடமாட்டார்; மனைவி இறந்தால் அன்புள்ள கணவன் அவளையே நினைந்தவனாகி வேறொருத் தியைக் கனவிலும் நாடானாய் வேறு இன்பங்களையும் விரும் பானாய்க் கடவுளையே தொழுதுகொண்டு தன் வாழ்நாளைக் கழிப்பன்; கணவன் இறந்தால் அன்புள்ள மனைவி அவனையே நினைந்தவளாகி வேறோர் ஆண்மகனைக் கனவிலும் நினையாளாய், வேறு எவ்வகை இன்பங்களையும் கருதாளாய்க் கடவுளையே தொழுதுகொண்டு உயிரற்ற வெற்றுடம்பு போல் தன் நாட்களைக் கழிப்பள். அப்படிப்பட்டவளின் மயிரைச் சிரையாமலே அவள் மயிர் அழகிழந்து போகும்; விலையுயர்ந்த ஆபரணங்களையும் பட்டாடைகளையும் பிறர் கொண்டுவந்து அவளை அலங்கரிப்பினும் அவள் அவற்றில் நாட்டம் சிறிதுமின்றி அவற்றை அருவருத்துவிடுவள்; அவளுடம்பு ஊண் உறக்கமுங் கொள்ளாமல் மெலிந்து பொலிவிழந்து போகும்; அவளுடைய அழகைக் குலைக்கப் பிறர் எவரும் வேண்டாம்; அவள் நினைவே அதனைச் செய்யப் போதுமானது.

இப்படியல்லாமல், இருவர் சம்மதமும் இன்றிப் பொருத்தஞ் சிறிதும் அமையாத இருவரை ஆடுமாடுகளைப் பிணைப்பது போலப் பிணைத்து விடுவதும், அங்ஙனம் பிணைக்கப்பட்ட இருவரும் ஒற்றுமையும் அன்பும் இன்றி மனவருத்தத்தோடு காலங் கழிப்பதும், அவருள் மனைவி என்னப்பட்டவள் இறந்தால் கணவன் என்னப்பட்டவன் பல்லுஞ்சொல்லும் போன கிழவனா யிருந்தாலும் அவனுக்குப் பால் குடிக்கும் பாலகனான ஒரு பெண்மகவை மணம் புரிந்து விடுவதும், கணவன் என்னப் பட்டவன் இறந்தால் மனைவி எவ்வளவு சிறுபருவத்தினளா யிருந்தாலும் அவள் தலையைச் சிரைத்து அணிகலன்களை நீக்கி வெள்ளைக் கோணிப் புடைவை உடுப்பித்து உப்பில்லாச் சோற்றையிட்டு வருத்துவதும் ஐயோ! என்ன கொடுமை! பிறருடைய வலுகட்டாயத்தால் மணஞ் செய்விக்கப்பட்டு மிக்க வருத்தத் தோடும் அவனோடு சிலநாள் இருந்து வயது முதிர்ந்த அவன் இறந்துபோகவே சுமை நீங்கியதென ஒருவாறு ஆறுதல் அடைந்திருக்கும் ஏழைப் பெண்ணின் தாலியை அறுத்தால் என்ன, அவள் தலையைச் சிரைத்தாலென்ன, ஆடை அணிகலன் களைக் கழற்றியதாலென்ன, உப்பில்லாப் புற்கையை இட்டதனா லென்ன, அவள் மனம் இறந்தவனைச் சிறிதும் நாடாது; அவள் கண்கள் அவன்பால் அன்பினால் நீரைச்சொரியா.

ஆடுமாடுகளைப் பிணைப்பதுபோல ஆண்மக்களையும் பெண் மக்களையும் பிணைப்பதனாலேதான் இந்த நாட்டில் எல்லாவகையான தீய ஒழுக்கங்களும் தீங்குகளும் ஒன்றுக்குமேல் ஒன்றாகப் பெருகி வருகின்றன. கணவனும் மனைவியும் அன்பினாற் பொருந்துவார்களாயின் உலகம் அப்போதுதான் சிறப்படையும், தீமைகளெல்லாம் அப்போதுதான் ஒழியும்.

உன் தமையனை எனது ஏழாவது வயதில் என் கணவனாக நினைந்து யான் அன்புபாராட்டியதில்லை, கணவனும் மனைவியும் நடந்துகொள்ள வேண்டிய முறை இன்னதென்று தெரிந்ததுமில்லை. நான் தாலி அறுத்தவளும் அல்லேன். கணவனை இழந்தவளும் அல்லேன், ‘யான் அன்றும் கன்னிப் பெண்ணே, இன்றும் கன்னிப் பெண்ணே, கன்னிப்பெண்ணுக்குரிய எல்லா மங்கல அலங்காரங்களும் எனக்கு உரியனவேயாகும். நீங்கள் ஒரு காரணமும் இன்றி என்னை இப்படியெல்லாம் பழித்துப் பேசுவது தகாது’’ என்று மிக்க சுருசுருப் போடும் உருக்கத்தோடும் பேசினேன்.

என் சொற்களைக் கேட்டுச் சிறிதுநேரம் திகைத்து நின்ற அவ்விருவரில் மாமியார் என்பவள் மூக்கின்மேல் முன்விரலை வைத்து,

“இவள் அதிகப் பிரசங்கியாய் விட்டாளே. இவள் ஏதோ நாம் படித்திருக்கிறோம் என்னும் இறுமாப்பினால் அல்லவோ இவ்வளவு தூரம் மூச்சுவிடாமற் பேசினாள். ‘அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பேதுக்கு’ என்பது சரியாகவேயிருக்கிறது. படிப்பில்லா விட்டால் மூத்தோர் சொல்லை மீறி இவள் இவ்வளவு பேசுவாளா’- என்று அவள் கூக்குரலிட்டுப் பேசுயையில் வெளியே போயிருந்த மாமனார் வந்துவிட்டாராகையினால், அவர் ‘அடி, போதும், போதும், உன் சொல்லை நிறுத்து, அந்தக் குழந்தையை ஏண்டி புறக்கணிக்கிறாய்? நீ தான் படிப்பில்லாத மூடமாயிருக்கிறாய். அந்தக் குழந்தையையும் உன்னைப்போல் மூடமாக்கப் பார்க்கிறாயோ.” என்று பல்லைக் கடித்துக் கொண்டு உள்ளே வந்தார். அவர்களிருவரும் மிகப் பொல்லாதவர்களா யிருந்தாலும் மாமனாரைக் கண்டவுடனே திடுக்கிட்டுக் “கிழப்படுவான் வந்திட்டான்; இனி இவளுக்குக் கொண்டாட்டந் தான்” என்று சொல்லிக்கொண்டே சமயற்கட்டுக்குப் போய் விட்டார்கள். மற்றையவும் நீர் எனக்குக் கடிதம் எழுதவேண்டிய விலாசமும் பின்பு தெரிவிக்கின்றேன்.

## கடிதம் - 5

*என் அன்பிற்கினிய நேசரே,*

*நாலைந்து நாட்களுக்கு முன் நான் எழுதிய கடிதம் உமக்குச் சேர்ந்திருக்கலாமென்று நம்புகிறேன். இந்த நாலைந்து நாட்களும் மாமனார் வெளியே எங்கும் போகாமல் வீட்டிலேயே இருந்தமையால், மாமியாரும் நாத்துணாரும் வாய் திறந்து என்னை வைது வருத்தாமலிருந்தார்கள் என்றாலும், யான் அவர்கள் இருக்கும் சமயற்கட்டுக்குப்போனால் முகக்கடுகடுப்பும் வாய் முணுமுணுப்பும் அவர்களிடமில்லாமல் இருப்பதில்லை. அவர்களுடைய தொந்தரவுக்கு அஞ்சி அவர்களிருக்குமிடத்திற்கு நான் அடிக்கடி போவதில்லை. முன்கட்டு மேல் மெத்தைமேல் மாமனாரோடு கூடவே இருந்து வருகிறேன். ஆகாரமும் இவர் தம்முடனிருந்து உண்ணும்படி எனக்குக் கற்பித்திருக்கிறார். யான் உறங்குவதும் மேல்மெத்தையில் இவர் அறைக்குப் பக்கத்திலே தான். இவருடைய உயர்ந்த குணங்களானவை எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றன. கள்ளங்கவடு அறியாப் பால்போலுந் தூய உள்ளம் உடையவராயிருக்கின்றார். எண்பது வயதிற்கு மேற்பட்டவராயிருந்தும், இவர் அறிவு மிகவுந் தெளிவுடைய தாகவே இருக்கின்றது. ஆங்கில நூற் கல்வியில் மிக வல்லவ ராயிருக்கின்றார். எனக்கு ஆங்கிலமொழியில் மிகுந்த ஆராயச்சி இல்லா விட்டாலும் அவர் அந்நூல்களிலிருந்து எடுத்துச் சொல்லும் பொருள்கள் எனக்கு அளவிறந்த வியப்பையும் மகிழ்ச்சியையுந் தருகின்றன. உலக இயற்கைப் பொருள்களான மலையங்காடு பள்ளத்தாக்கிலுள்ள தோப்புகள் கான்யாறு, மலைப் பக்கத்து ஏரிகள் அங்கங்கேயுள்ள பலவகைப் பறவைகள் மிருகங்கள் முதலியவற்றைப் பற்றிய ஆங்கிலப் பாட்டுகளை அவர் இன்று எனக்கு எடுத்துச் சொல்லியபோது, நானும் அவற்றைப் போலவே நம்முடைய சங்கத்தமிழ் நூல்களிற் பாடப்பட்டிருக்கும் இனிய செந்தமிழ்ப் பாடல்களை எடுத்துப் பாடினேன்.*

*அவற்றை அவர் கேட்டவுடன், "இவ்வளவு அருமையான பாட்டுகள் பழைய தமிழில் இருப்பது எனக்குத் தெரியாது, தெரிந்தால் அவற்றைப் படித்து ஆனந்தித்திருப்பேன். பிற்காலத்தில் கம்பர் முதலான சிலர் பாடிய பாட்டுகளை மாத்திரம் கேட்டிருக்கிறேன்; இவர்கள் பாட்டுகளில் இயற்கைப் பொருள் வருணனைகள் மிகுதியாய் இல்லாமல், பொய்யும் புளுகும் நிறைந்த கற்பனைகளே நிரம்பி யிருந்தமையால் அவற்றில் எனக்கு விருப்பஞ் செல்லவில்லை. ஆயினும், தமிழில்* ***திருவள்ளுவர்*** *செய்த* ***திருக்குறளிலும், மாணிக்கவாசகர்*** *செய்த* ***திருவாசகத்***‌*திலும் மாத்திரம் எனக்கு மிகுந்த பிரியம். இவ்விரண்டு நூல்களுக்குஞ் சமானமானது உலகத்தில் வேறெந்த நூலும் இல்லையென்பதே என் அபிப்பிராயம். நல்லதம்மா, உனக்குத் திருவாசகத்திற்* ***குயிற்பத்துப்*** *பாடமிருக்கிறதா?" என்று கேட்டார்.*

*அதற்குயான், " ஆம், அதுபாடமாயிருக்கிறது" என்றேன்.*

*"நீ வீணைவாசித்ததைக் கேட்டு இரண்டு மூன்று வருஷங்களாய் விட்டன" என்று சொல்லி, அங்கே கூடத்தின் வடவண்டை மூலையில் உறைபோட்டுச் சார்த்தி வைக்கப் பட்டிருந்த வீணையைச் சுட்டி, "அதோ உள்ள அந்த வீணையை எடுத்து வந்து மீட்டிக் குயிற்பத்தை உன் இனிய குரலோடு கலந்து அதில் வாசி" என்று மனமகிழ்ந்து சொன்னார்.*

*அவர் சொன்ன வண்ணமே அவ்வீணையை எடுத்து வந்து அதன் உறையைக் கழற்றி அப்பால் வைத்துவிட்டு, வீணையின் நரம்புகளைத் தெறித்து, என் குரலுக்குப் பொருந்த இசைகூட்டி மாணிக்கவாசகப் பெருமானைச் சிந்தித்து அவர் அருளிச் செய்த குயிற்பத்தின் முதற்பாட்டாகிய,*

"கீதமினிய குயிலே கேட்டியேல் எங்கள் பெருமான்
பாத மிரண்டும் வினவிற் பாதாளம் ஏழினுக் கப்பால்
சோதிமணிமுடி சொல்லிற்சொல்லிறந்துநின்றதொன்மை
ஆதிகுணமொன்றும் இல்லான் அந்தமிலான் வரக்கூவாய்!"

*என்பதை மனம் நெக்குருகிப் பாடினேன். அதனைக் கேட்ட போது அவர் அடைந்த ஆனந்தத்தை இவ்வளவென்று "வாய் விட்டுச் சொல்ல முடியாது. அவர் கண்களில் நீர் முத்து*

முத்தாயத் துளித்தது. தன்னை மறந்து அவர் அடிக்கடி “என் அப்பனே, ஆண்டவனே, மாணிக்கவாசகப் பிரபு, உன்னைப் போலச் சிவத்தின் உண்மையைக் கண்டவர் யார்!” என்று சொல்லிச் சொல்லித் தேம்பினார். அந்தப் பாட்டு முடிந்தவுடனே அவர் என்னை நோக்கிக் குழந்தாய் உனது குயில் போன்ற குரலில் இக்குயிற்பாட்டைக் கேட்கும்போது, மாணிக்கவாசகரே இப்போது இங்கிருந்து ஒப்புயர்வற்ற அந்தச் சிவத்தைப் பாடுவது போல் இருக்கின்றது; ஆ! இதுதான் சிவானந்தம்! இப்படிப்பட்ட சிவானந்தப் பாடல்கள் இருக்கையில் பாழுஞ் சங்கீத வித்வான்கள் பாழான கீர்த்தனைகளையும் மற்றவை களையும் பாடி மனிதப் பிறவியைப் பாழாக்குகிறார்களே! இப்போது உனது அழகிய வடிவத்தைப் பார்த்தால் அந்தச் சரஸ்வதி மாதாவைப் போலவே இருக்கிறது. நீ வீணைவாசிப்பது அந்த மாதா வீணாகானஞ் செய்வது போலவே இருக்கின்றது. நல்லது, குயிற்பத்தில் இன்னுஞ் சில பாட்டுகள் பாடு” என்றார். உடனே யான்,

“நீல வுருவிற் குயிலே நீண்மணி மாட நிலாவுங்
கோல வழகிற் றிகழுங் கொடிமங்கை யுள்ளுறை கோயில்
சீலம் பெரிது மினிய திருவுத்தரகோச மங்கை
ஞாலம் விளங்க இருந்த நாயகனை வரக்கூவாய்.”

“காருடைப்பொன் றிகழ்மேனிக்கடிபொழில்வாழுங் குயிலே
சீருடைச் செங்கமலத்திற் றிகழுரு வாகிய செல்வன்
பாரிடைப் பாதங்கள் காட்டிப் பாச மறுத்தெனை யாண்ட
ஆருடை யம்பொனின் மேனி யமுதினை நீவரக் கடவாய்”.

என்னுஞ் செய்யுட்களை மிக மனம் உருகிப் பாடினேன். இவற்றைப் பாடும்போது என் அருமை நாயகனாகிய உம்மைப் பிரிந்திருப்பதும். உம்மை என்னிடத்தே வரும்படி என் மனம் இடைவிடாது விரும்புவதும் என்நினைவில் எழுந்தன. என் செய்வேன்! எந்தப் பாட்டைப் பாடினாலும், எந்த நூலைப் படித்தாலும் உம்மைப் பற்றிய நினைவே எனக்கு எப்போதுந் தோன்றுகின்றது; என் நெஞ்சத்தில் வேறு ஒரு நினைவுக்கு இடஞ் சிறிதுமில்லை; உமது நினைவே அதனை முழுதுங் கவர்ந்து கொண்டது. காதலர் களுக்குள் நிகழும் இந்நேசத்தின் வலிமையை என் என்பேன்! இது வேறெந்த நினைவும் நிகழ இடங்கொடாமல் அவர் சிந்தையை முழுதுந் தன்வசப்படுத்திக் கொள்கின்றது. மற்ற நினைவு

களையோ நாமே முயன்று முன்னுக்குக் கொண்டுவரல் வேண்டும். இதுவோ தானாகவே முன்றோன்றி முதன்மை பெற்று விளங்குகின்றது. காதலரிடத்தே நிகழும் நினைவின் ஒருமையும், அடியார்களிடத்தே தோன்றும் நினைவின் ஒருமையும் எவ்வகையாலும் ஒத்திருக்கின்றன. இதனாலன்றோ **மாணிக்க வாசகப் பெருமான்** சிவபரம் பொருளிடத்து அடியார்க்கு நிகழும் அன்பின் நிகழ்ச்சிகளைக் காதலர் மாட்டு நிகழும் அன்பின் நிகழ்ச்சிகளோடு ஒப்பவைத்துத் **திருச்சிற்றம்பலக் கோவையார்** என்னும் அருமை மிக்க நூலை அருளிச் செய்திருக் கின்றார். உம்முடைய நினைவு எனக்குத் தோன்றும்போதெல்லாம் சொல்லுக்கு அடங்கா ஆனந்தம் விளைகின்றது; ஆனால், அதன் பக்கத்தே உம்மைப் பிரிந்திருத்தலால் ஆற்றாமையுந் தோன்றி என்னைத் துயரப் படுத்துகின்றது. அடியார்கள் சிலர் தம் ஆண்டவனை நினைத்து ஆனந்தப்பட்டு, அவ்வளவோடு அமையாமல் அழுது அழுது வருந்தியதைச் சிற்சில சமயங்களில் யான் கண்டபோது ஆனந்தப்படும் இவர்கள் அழுது வருந்துவது ஏன்? என்று எனக்குள் யான் பலமுறை வினவியும் அதன் உண்மை அப்போது சிறிதும் எனக்கும் புலப்படவில்லை. இப்போதோ என்னிடத்து நிகழும் அனுபவத்தைக் கொண்டு அதன் றன்மை இதுதான் என்று உணரப்பெற்றேன். உம்மை நினைக்கும் போதெல்லாம் என்னுள்ளம் ஆராக்களிப்பினால் துளும்பு கின்றது. உடனே உம்மோடு அளவளாவி ஒன்றாயிருக்கப் பெறாமல் வேறா யிருந்தலால் நெஞ்சந் துடித்து ஆற்றாது அழுகின்றேன். அடியார்களுந் தமது ஆண்டவனை நினையுந் தோறும் ஆரா மகிழ்ச்சியும் அவனை அணைந்து பிரியாதிருக்கப் பெறாமையால் ஆராத்துயரமும் அடைகின்றார்கள் என அறிந்தேன். என் அருந்துணையே, உண்மையன்பில் அகப்பட்ட காதலர்க் கல்லாமற் பிறர்க்கு ஆண்டவன் அன்பின் றிறங்கள் சிறிதும் புலப்படமாட்டா என்பதும் தெரிந்து கொண்டேன். இங்ஙன மெல்லாம் என் சிந்தனையானது காதலின் வசப்பட்டு அதன் இயல்புகளைச் சிந்தித்த வண்ணமாய் நிலைபெறவே, யான் சிறிது நேரம் என்னை மறந்து வீணைவாசித்தலையுங் கைவிட்டுப் பாடாமல் ஓய்ந்திருந்தேன்.

என்னை இந்த நிலையிற் கண்ட என் மாமனார் தாமடைந்த ஆனந்தத்தையும் விட்டுத் திடுக்கிட்டு, "ஏன் அம்மா, ஏதோ ஒரு வகையாய்க் கண்கலங்கி இருக்கின்றாய்?" என்று கேட்டார்.

"மாமா, வேறொன்றும் இல்லை. மாணிக்கவாசகர் அன்பின் விசேஷத்தை எண்ணி எண்ணி என்மனம் உருகுகின்றது. பாருங்கள்! உலகத்தில் எதனைப் பார்த்தாலும் தன் ஆண்டவனையே நினைக்கின்றார்; எந்த உயிரைக் கண்டாலும் அவற்றினிடத்தே தன் ஐயனைப் பற்றியே பேசுகிறார், பாடுகிறார். இவ்வன்பின் பெருக்கத்தாற் சிற்றறிவுடைய குயிற்பறவையும் தமது நாயகனையே வரும்படி கூவல்வேண்டு மெனக்கேட்டுக் கொள்கின்றார். இங்ஙனம் பேரன்பு நிகழப்பெற்றால் அவ்வன்பிற்கு உரியவரையன்றி வேறொன்றையும் உள்ளம் நாடாதுபோலும்! இவ்வியல்பை நினைக்க நினைக்க என்னால் ஆற்றமுடியாமல் என் நெஞ்சம் கலங்கி நெக்குடைந்தது" என்றேன்.

இச்சொற்களைக் கேட்டதும் "ஆம், ஆம், அது மெய்தான். திருவாசகத்தின் உருக்கம் வேறெதிலும் இல்லை. '**திருவாசகத்தில் உருகார் மற்றொருவாசகத்தும் உருகார்**' என்னும் பழமொழி பொய்யல்லவே. ஆனாலும், நீ சிறுபருவமுள்ள குழந்தையாதலால் இவ்வளவு தூரம் நீ பக்திவசப்பட லாகாது. நல்லது, ஐந்துமணி ஆகப்போகிறது. இன்றைக்கு உன்னைக் கடற்கரைக்கு அழைத்துப் போக விரும்புகின்றேன். கீழே வேலைக்காரனைக் கூப்பிட்டு நமது பெட்டி வண்டியைக் குதிரையிட்டுக் கொண்டுவரச் சொல்" என்று சொல்லி உடுத்திக் கொள்ளப் போனார். கடற்கரைக்குப் போய்வந்த பிறகு உமக்குக் கடிதம் எழுதுகிறேன் என் அன்பார்ந்த முத்தம்.

## கடிதம் - 6

*அருமையிற்சிறந்த காதலரே,*

*நேற்று யான் எழுதிய கடிதம் உமக்குக் கிடைத்திருக்கலாம் என்று நம்புகின்றேன். யான் எழுதியவாறே நேற்று மாலையில் என் மாமனார் என்னைத் திருவல்லிக்கேணியிற் கடற்கரைக்கு அழைத்துக்கொண்டு போனார். இராசதானிக் கலாசாலையின் தென்னண்டையிலுள்ள அகன்ற பாட்டைவழியாக எங்கள் வண்டி சென்றது. சிறிதுநேரமாயினும் ஓய்வின்றி எழுந்து சுருண்டு விழுந்து ஓவென்று முழங்கி அலையும் கடல்நீரின் அருகே இந்தக் கலாசாலையின் அழகிய கட்டிடம் மிகுந்த அமைதியோடும் அசைவின்றி விளங்குதலைக் கண்டதும் என்னுள்ளத்திற் பலவகையான சிந்தனைகள் ஒன்றன் பின் ஒன்றாகத் தோன்றின. உலகத்தில் மனிதர்கள் அனுபவிக்கும் செல்வ வாழ்க்கையானது கடலலைபோல் மாறிமாறிப் போகின்றது; வாழ்வுமாறி மாய்ந்து போகுங் காலத்து அவர்கள் மனம் வருந்தி ஓலமிடுதலைப் போலக் கடலோசையானது மாறாமல் முழங்குகின்றது; கடலின் அலைகளால் அங்குமிங்குமாக அலைக்கப்பட்டு இரைதேடித் திரியும் பலவகை மீன்களைப்போல மனிதர்கள் இவ்வுலக வாழ்க்கையிற் கிடந்து உழலுகின்றார்கள்; ஆனால், அக்கலா சாலையோ என்றும் மாறாத கல்விச் செல்வத்தைத் தன்னுள்ளே வைத்திருத்தலால் தானும் மாறாமல் நிலைபெற்று விளங்கு கின்றது; உலகவாழ்விற் பற்று இன்றிப் பலதிறப்பட்ட அரிய நூற்பொருள்களை ஆராய்ந்து கொண்டிருக்கும் அதன் மாணாக்கர்கள் முனிவர்களைப் போலவுந் தேவர்ளைப் போலவும் பேரின்பக்கடலிற் றோய்ந்தவர் களாய்ப் பெருமை யுற்றுத் தோன்றுகின்றார்கள். ஆ! என்னிளம் பருவத்தில் யான் கல்விச்சாலையிற் கழித்த நல்நாட்கள் அப்போது என் நினைவுக்கு வந்தன. என் அருமைத் தெய்வநாயகம் உம்மோடு கூட அறிவு நூல்களின் அரும் பொருள்களை ஆராய்ந்து படித்துவந்தபோது*

நாம் எவ்வளவு மகிழ்ச்சி அடைந்து வந்தோம்! உலக வாழ்க்கையில் நாடோறுங் காணப்பட்டு வரும் வஞ்சனையும் பொறாமையும் சினமும் களவும் கட்குடியும் காமமும் மோசமும் பொய்யும் புனைசுருட்டும் நமது பார்வையிற் சிறிதும் தென்படாதிருந் தனவே. அக்காலத்தில் நமது உள்ளம் பால்போற் பரிசுத்தமா யிருந்த தன்றோ? அப்போது நமக்கு விசனமேது? கவலையேது? நம்மோடு கல்விபயின்ற நம் உடன் மாணாக்கர்களும் நாமும் சிறிதுந் தன்னயங் கருதாமல் ஒருவரை யொருவர் எவ்வளவு அன்பாய் நேசித்து வந்தோம்! அதுவன்றோ உண்மையான நேசம்? இவரால் நமக்கு இன்ன உதவி கிடைக்கும் என்னும் நோக்கத்தோடு உலகத்தார் கொள்ளும் நேசம் உண்மையில் நேசமாகுமா? அது வியாபாரஞ் செய்வதனோடு ஒக்குமன்றோ!" உண்மை யன்பினையும் உண்மை யறிவினையும் எங்கே கண்டோம்? கலாசாலையிலன்றோ? நம் உபாத்தியாயர்களும் ஆசிரியர்களும் நம்மிடத்தே எல்லாம் அகமும் முகமும் மலர்ந்து தேனினும்பாலினும் இனிக்கும் இன்சொற்களால் அரிய பெரிய பொருள்களையும் ஒழுக்கங் களையும் எடுத்து நமக்கு விளக்கிக் காட்டியபோது நாமடைந்த மகிழ்ச்சியை இனி வேறெங்கே அடைவோம்? நமக்கிருந்த ஐயங்களை நம் ஆசிரியன் மாரிடத்து எவ்வளவு தாராளமாய்க் கேட்டுத் தெளிந்தோம் இனி நிகழ்வன வற்றை அங்ஙனம் யாரிடத்துக் கேட்டுத் தெளிவோம்! என்று இங்ஙனம் யான் எண்ணமிட்டுக் கொண்டிருக்கையில் எங்கள் வண்டியானது இராசதானிக் கலா சாலையின் கீழண்டைச் சாலையில் வந்து நின்றது. உடனே என் மாமனாரும் யானும் வண்டியிலிருந்து இறங்கினோம்.

இறங்கினதும் செம்மண் கப்பியினால் இடித்துச் சமமாக அமைக்கப்பட்ட அகன்ற அக்கடற்கரைச் சாலையின் அழகானது என் கண்ணையுங் கருத்தையுங் கவர்ந்தது; அச்சாலையின் கீழண்டையிலே அச்சாலையினுஞ் சிறிது உயரமாக நெடுக அமைக்கப்பட்டிருக்கும் நடைவழியானது மேற்புறத்து வரம்பில் கருங்கல்லணை வகுக்கப்பட்டுப் பார்ப்பதற்கு மிகவும் இனிதாயிருந்தது; அந்த நடை வழியின்மேல் ஒவ்வோரிடத்து இருப்புக் கால்கள் உள்ள விசிப் பலகைகள் இடப்பட்டிருந்தன. அவற்றுள் ஒன்றின்மேற் சிறிது நேரம் உட்கார்ந்திருக்கலாமா? என்று என் மாமனாரை யான் கேட்க அவரும் அதற்கு இசைந்து அங்கே வெறுமையாய் இருந்த ஒன்றின்மேல் என்னையும்

அழைத்துக் கொண்டுபோய் உட்கார்ந்தார். ‘உட்கார்ந்தபின் யான் மேற்கு முகமாகத் திரும்பி இராசதானிக் கலாசாலைக் கட்டிடத்தையும், அதன் அருகாமையிலுள்ள கலச மாலையும் பார்த்து வியந்து கொண்டிருந்தேன். அன்புள்ள தெய்வநாயகம், நீர் இரண்டு வருஷங்களுக்கு முன் வித்தியார்த்தி பரீட்சையில் தேறி, அதற்கு அடையாளமாகச் சர்வகலா சங்கத்தார் கொடுத்த நிலையங்கி யினை இந்தக் கலசமாலிலேதான் பெற்றுக்கொண்டீர் என்பது அப்போது என் நினைவில் எழுந்தது. வித்தியார்த்திகள் கலைமகளின் திருவருளைப் பெறுதற்குரிய சிறந்த திருவிழாக் கொண்டாடப்படும் இம் மகா மண்டபத்தினை அப்பெருந்தேவி எழுந்தருளியிருக்கும் பரிசுத்த ஆலயமாகவே நினைந்து மனத்தாற் றொழுதேன்.

யாங்கன் சென்றது மாலைக்கால மாதலால் பெட்டி வண்டிகளிலும் சாரட்டு வண்டிகளிலும் ஜட்காவண்டிகளிலும் ஒற்றை மாட்டுவண்டிகளிலும் துவிசக்கர வண்டிகளிலும் ஆண் பெண் என்னும் இருபாலாரும் நடைவழியின் மருங்கேவந்து தொகுதி தொகுதியாக இறங்கினர். அங்ஙனம் வந்து இறங்கினவர் களுள் முதன்முதல் என் கண்ணிற் றென்பட்டவர்கள் ஒரு பாரசிக குடும்பத்தார். இச்சிறு குடும்பத்தில் ஒருவர் ஆண்மகன்; ஒருவர் பெண்மகள்; ஐந்து பிள்ளைகள்; இச்சிறு குடும்பத்தின் தலைவரென்று தோன்றிய அக்கனவானுக்கு ஏறக்குறைய முப்பத்தைந்து வயது இருக்கும்; நீண்டுயர்ந்து சற்றுப் பருத்த உடம்புள்ளவர்; விளிம்பு சுருட்டிய கறுப்புக்குல்லா ஒன்று தலைமேற் கவித்திருந்தார்; கழுத்திலிருந்து முழங்கால் அளவுந் தொங்கும் தளர்வான மேற் சட்டையும் காற்சட்டையும் அணிந்து அடிகளுக்குத் தோற் சப்பாத்து இட்டிருந்தார்; பூவரசின் பழுப்புப் போல் மங்கலான புகர்நிறம் உடையவராயிருந்தாலும் இவரது முகத்தில் மிகவும் அமைதியான தோற்றமும் வசீகரமும் அறிவின் மேன்மையுங் காணப்பட்டன. இவரது மனைவி யென்று தோன்றிய அப்பெருமாட்டியார் ஒப்பற்ற ஒரு தேவமாதரைப் போல் இருந்தனர்; இவருக்கு முப்பது வயதிருக்கும். இலேசாகப் பொன் நிறம் ஊட்டிய ஒரு சலவைக்கல் இருந்தால் அதனை இவ்வம்மையின் உடம்பின் நிறத்திற்கு ஒப்பாகச் சொல்லலாம்; இவர் கணவன் நிறம் மங்கலாயிருப்பதுபோல் இல்லாமல் இப்பெரு மாட்டியின் நிறம் மெருகிட்டதுபோல் மிகவுந்

தெளிவாய் இருந்தது; இவர் உடுத்தியிருந்த மெல்லிய வழுவழுப்பான நீலப் பட்டாடையானது இவரது அழகிற்கும் உடம்பின் அமைவுக்கும் தக்கதாயிருந்தது, காற்றினால் அவ்வாடையானது அவருடைய அங்கங்களின்மேற் படிந்து தோன்றியபோது அவைகடைந்து திரட்டப்பட்டவை போல் அவ்வளவு திருத்தமாக இருந்தன; அவ்வாடையைத் தலைமேல் அரைமுக்காடாக அணிந்திருந்தனர்; அவரது முகமோ சிறிது அகன்று உருண்டு முழுமதியைப்போல் விளங்கிற்று; தலைமேல் மயிர் இரண்டு கூறாக வகுக்கப்பட்டு நெற்றியின் இருபுறத்தும் நெளி நெளியாக மிகக் கறுத்து ஒழுக அதன் கீழ் அம்முகத்தை நோக்கியக்கால், ஏதோ மழைகாலத்தின் ஒரு நாளிலே ஓடும் ஒரு கரிய மேகத்தின் ஓரத்திலே அருமையாகக் காணப்படும் தெள்ளிய சந்திரனையே அதற்கு ஒப்பாகச் சொல்ல வேண்டுமென எண்ணினேன். ஆ! அவ்வம்மையின் கரிய புருவங்களின் கீழே கறுத்துப் பருத்த விழிகள், சுற்றியுள்ள தன் பிள்ளைகளை நோக்குகையிற் புரண்டு புரண்டு சுழன்ற அழகை என்னென்று கூறுவேன்! அவரது சற்றுப் பெரிய மூக்கானது நுனியிற் சிறிது வளைந்திருந்தாலும் அவ்விழிகளுக்குப் பொருத்தமாயிருந் தமையினாலே பார்வைக்கு மிக இனியதாகவே யிருந்தது; தம் பிள்ளைகளைப் பார்த்து அடிக்கடி அவ்வம்மையார் புன்முறுவல் செய்கையில் அவர் இதழ்களின் அகத்தே சிறிது தோன்றிய பற்களானவை சற்றுத்திறந்த பவழச்செப்பின் வாய்வழியே உள் வைத்த முத்துக்கோவை தோன்றினாற்போல் திகழ்ந்தன. இனி இவ்விருவரினும் அருமையான காட்சியை அவர்தம் பிள்ளை களிடத்துக் கண்டு களிப்புற்றேன். இவர்களின் அருகே நின்ற மூத்தபிள்ளை பன்னிரண்டு வயதுள்ள அழகியபெண்; அதன் முகத்திலே புத்தப்புதிய இளம்பருவப் பேரழகு குடிகொண்டு வயங்கிற்று; தன் தாயின் அழகின் கூறுகளெல்லாம் வடிக்கப்பட்ட சாரமாய் அதனோடு கட்டிளமைப் புதுமையுங் கலந்து திரண் டெழுந்த உருவமே அப்பெண்பிள்ளையென்று சொல்லலாம்; வெள்ளைக்காரப் பெண் பிள்ளைகளுக்கு உடுத்துவதைப் போல் மேற்சட்டையுங் கீழ்ப் பாவாடையுஞ் சேர்த்து அணிந்து இடையில் தங்க ஒட்டியாணம் அப்பிள்ளைக்குப் பூட்டப் பட்டிருந்தது; தலைமேல் அடர்ந்து நீண்ட மயிரானது கரிய பின்னலாகப் பின்னப்பட்டு பின்னே நீளத் தொங்கிற்று; காலில் கரிய மேற்சோடும் அடியில் மெல்லிய சப்பாத்தும் இடப்

*பட்டிருந்தன; இதன் கண்களிற் கள்ளங் கவடில்லாத வெள்ளை நோக்கம் அமைந்திருந்தது. இப்படிப்பட்ட இப்பிள்ளையின் இடது கையின் மேல் அள்ளி ஏந்திய அமிழ்தத்தைப்போல ஓர் அருமையான ஆண் மகவு இருந்தது. அக் குழவியைப் பார்த்து அப்பெண்பிள்ளை புன் சிரிப்புக் கொள்கையில் அவ்விரண்டின் தெளிவான கன்னங்களிலும் குழிவிழுவது பார்க்கப் பார்க்க ஆசையை விளைத்தது. கைக் குழந்தைக்கு ஒரு வயதிருக்கலாம். கீழ்நின்ற மற்ற மூன்று குழந்தைகளும் அருமையான ஆண் பிள்ளைகள். அப்பிள்ளைகள் மூன்றுக்குங் கழுத்திலிருந்து முழங்கால் வரையில் சட்டைகள் இடப்பட்டிருந்தன; அவற்றின் தலைமேல் உள்ள மயிர் முழுதும் இரண்டங்குல நீளம் வைத்து நறுக்கிவிடப்பட்டிருந்தது; அம்மூன்றும் வானத்திலிருந்து வழுக்கிவீழ்ந்த வான்மீன்களையே ஒத்திருந்தன; அவற்றின் தூய கொவ்வைச் செவ்வாயினைப் பார்க்குந்தோறும் அம்மகவுகளை முத்தம் இடவேண்டுமென்னும் அவா அடங்காமல் எழுந்தது. அவற்றில் இரண்டு பிள்ளைகள் தந்தையின் இடது கை விரலையும் வலதுகை விரலையும் பிடித்துக் கொண்டு உள்ளக் கிளர்ச்சியோடுந் தம் சிற்றடிகளை எடுத்து வைத்துக் குறுகுறு வென்று நடந்தன; மற்றொருபிள்ளை அங்ஙனமே தாயின் கையைப் பிடித்துக் கொண்டு நடந்தது. ஆ! இச்சிறு குடும்பத்தார் அத்தனைபேர் முகத்திலுந் ததும்பிய மகிழ்ச்சியைப் பார்த்த போது இவர்கள் பேரின்பத்தில் வசிக்குந் தேவர்கள் தாமோ என்று ஐயுற்றேன்; துன்பங் கவலை முதலியவற்றை இவர்கள் தினைத்துணையேனும் அனுபவித்தவர்களாகத் தெரியவில்லை. இத்துணை அருமையான குழந்தைகளைப் பெற்றுப் பேரின்பத்தை அனுபவிக்கும் இவர்களினுந் தேவர்கள் சிறந்தவரோ என்றும் நினைத்தேன். பரிசுத்த இயல்புடையவரான குழந்தைகளைத் தம்மிடத்... துடையவர்கள் தாமும் பரிசுத்தமானவர்களாகவே இருக்க வேண்டும். "தக்கார் தகவிலரென்பது அவரவர், எச்சத்தாற் காணப் படும்" என்ற பொய்யாமொழி என்றும் பொய்யா மொழியாகவே விளங்குதலை இங்கே தெளிந்துகொண்டேன். இத்தன்மையவான குழந்தைகள் உள்ள இடத்திலே அன்புருவான சிவம் விளங்கிக் கொண்டிருக்கும் என்பது திண்ணம். இத்தகைய குழவிகளைப் பெறாதவர்க்கு இவ்வுலக வாழ்வினாற் சிறிதும் பயனில்லை.*

"பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனும்மற்
றென்னுடைய ரேனும் உடையரோ - இன்னடிசில்
புக்களையுந் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய்
மக்களை இங் கில்லா தவர்"

என்னும் புகழேந்தி வாக்கு முற்றும் உண்மையே.

இச்சிறு குடும்பத்தார் நாங்கள் இருந்த இடத்திற்குக் கொஞ்ச தூரத்தில் வண்டியைவிட்டு இறங்கினர். அவர்கள் வண்டியை விட்டு இறங்கினது முதல் யான் அவர்களைப் பார்த்த வண்ணமாகவே இருந்தேன். அவர்களும் நாங்கள் இருந்த பக்கமாய் நடந்து வருகையில் அப்பாரசிக கனவானும் அவர் மனைவியாரும் அவர்களின் மூத்த பெண்ணும் என்னைச் சுட்டிப் பார்த்து ஏதோ பேசிக்கொண்டே வந்தார்கள்; அவர்கள் எங்கள் அருகாமையில் வந்ததும் என்னோடும் என் மாமனாரோடும் பேசவிரும்பினார்க ளென்பதை அவர்கள் முகக்குறிப்பினால் அறிந்தேன்; ஆனால் எங்களை முன்பின் அறியாதவர்களாய் இருந்தமையால் அவ்வாறு சடுதியில் எங்களோடு பேசுவதைப் பற்றி நாங்கள் வேறுவகையாய் நினைக்கப் போகிறோம் என்று அஞ்சி, நடுவே கடற்கரையோரத் திற்குத் திரும்பும் பாதைவழியே மெல்லச் சென்றார்கள். என் மாமனார் அச்சிறு குடும்பத்தாரைப் பார்த்தது முதல் "என்ன அருமை! என்ன அருமை! அம்மா, அந்தப் பாரசிக கனவானையும் அவர் மனைவியாரையும் அவர்கள் குழந்தைகளையும் பார்க்கப் பார்க்க எவ்வளவு ஆனந்தமாயிருக் கின்றது! இவர்களோடு பேச வேண்டுமென்னும் ஆசை எனக்கு அதிகமாயுண்டாகிறது. அவர்கள் கடற்கரை ஓரத்திற் போய் இருக்கட்டும்; கொஞ்ச நேரங்கழித்து நாமும் அங்கே போகலாம். அந்தக் குழந்தைகள் விளையாடிக் கொண் டிருப்பதைப் பார்த்தாலும் போதும்" என்று அவர் என்னைப் பார்த்துச் சொல்லியதைக் கேட்டு எனக்கும் மிகுந்த மகிழ்ச்சி உண்டானது.

பின்னுஞ் சிறிது நேரத்திற்கெல்லாம் மாமனாரும் யானும் கடற்கரை ஓரத்திற்குச் சென்றோம். சென்று, அலைநீர் வந்து வந்து திரும்பும் அவ்விடத்திற்குக் கிட்ட மணலின் மேல் உட்கார்ந்து கொண்டு, எங்களுக்கு முப்பது அடி தூரத்தில் வந்திருந்த அப்பாரசிக குடும்பத்தாரைப் பார்த்தபடியே யிருந்தோம். எங்கள்

வருகையைக் கண்ட அக்கனவானும் அவர்தம் மனைவியாரும் முகமலர்ச்சி யுடையவர்களாய் என்னைச் சுட்டித் தமக்குள் ஏதேதோ பேசிக் கொண்டனர்; அங்ஙனம் அவர்கள் பேசுகையில் அவர்களுக்கு முன்றோன்றிய முகமலர்ச்சிமாறி ஒருவகையான வாட்டந் தோன்றியது. இப்போது கைக்குழந்தையானது அவ்வம்மையார் மடிமேல் இருந்தது; அவரும் அவர் கணவரும் கிட்டக்கிட்ட உட்கார்ந்திருந்தனர். பெரிய பெண்பிள்ளையானது மற்ற மூன்று ஆண் குழந்தைகளையும் கையிற் பிடித்துக் கொண்டு, கரையோரத்திற் கடலலையானது ஓடிவரும் போது எதிரோடிக் கால்களைத் தண்ணீரில் நனைப்பதும், திரும்பிப்போன அலை மும்மரித்து வருகையிற் சிரித்துக் கொண்டு பின் ஓடி வருவதுமாக மிக்கமகிழ்ச்சியோடும் விளையாடிக் கொண்டிருந்தது. இந்த விளையாட்டிற் சிறிது இளைப்படைந்த பிறகு, தண்ணீர் வரும் முகமாய் ஒன்று மணலிற் குழிதோண்டுவதும், ஒன்று மணல்வீடு கட்டுவதுமாய் இருக்க மற்றொரு பிள்ளை அவ்வீட்டைக் காலால் எற்றிக் கலைப்பதும், தோண்டிய குழியிற் போய் நின்று கொள்வதுமாய் அவ்விருபிள்ளைகளையும் அழுகை மூட்டினது; பெரிய பெண்பிள்ளையோ மிக்க அன்போடும் திறமையோடும் துடுக்கான பிள்ளையைக் கண்டிப்பதிலும், மற்றிரு பிள்ளைகளை அழுகைதீர்த்து அமைதிப்படுத்திக் கூட விளையாடுவதிலும் சுறுசுறுப்பாய் இருந்தனள். நாங்கள் இவ்விடத்திற்கு வரும் முன்னெல்லாம் விளையாடிக் கொண்டிருக்கும் தம் அருமைக் குழந்தைகளைப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்த அப்பாரசிக கனவானும் அவர் தம் மனைவியாரும், எங்களைத் திரும்பப் பார்த்த பிறகு ஏதோ மனக்கவலை யுடைவர்களாய்ப் பிள்ளை களைப் பார்த்து மகிழாமல் ஆற்றாமை மிகுதியும் அடையப் பெற்றதோடு அவ்வம்மையார் என்னுடன் பேசுவதற்கு மிகுந்த விருப்பமுங் கொள்ளப்பெற்றாரென்று தெரிந்துகொண்டேன். முன் சொல்லியவாறு விளையாடிக் கொண்டிருந்த அக் குழந்தைகள் இப்போது அவ்விளையாட்டைவிட்டுக் கடல் மணலில் ஆங்காங்குப் புதைந்து கிடந்த கிளிஞ்சல்களைக் கிண்டிக் கிளறி எடுக்கத் தொடங்கின. இங்ஙனம் அவைகள் பொறுக்கிக் கொண்டு சுறுசுறுப்பாய் அங்கும் இங்கும் செல்கையில், அவற்றுள் ஒரு சிறு குழந்தை என் பக்கமாய் வந்தது; அது பொறுக்கிய கிளிஞ்சில்களை எடுத்துக் கொண்டு மேல் நிமிர்ந்த வுடனே என்னை ஏறிட்டுப் பார்த்தது; பார்த்ததும் அவர்கள்

பாஷையில் ஏதோ ஒரு சொல்லை சொல்லிக் கொண்டு ஓடிவந்து என் கழுத்தைக் கட்டிக் கொண்டது; யானும் அதனாற் பெருமகிழ்ச்சி அடைந்து அதனை அணைத்து முத்தமிட்டு மடிமீது வைத்துக் கொண்டேன். இந்தக் குழந்தை என் மடிமீது வந்து இருத்தலைக் கண்டவுடனே மூத்த பெண்ணும் மற்ற இரண்டு குழந்தைகளும் என் எதிரே வந்தனர்; மூத்த பெண்ணுடன் வந்த இரண்டு பிள்ளைகளிற் பெரியபிள்ளை மாத்திரம் என் கிட்ட வந்ததும் சிறிது விலகியிருந்தது; மற்றொரு பிள்ளையோ அருகில் வந்து என்னைப் பார்த்ததும் என் மடியிலிருக்கும் குழந்தையைப் போலவே நெருங்கி வந்து என் வலதுகையை எடுத்துத் தன் மார்போடு அணைத்துக் கொண்டது; பெரிய பெண்பிள்ளையும் பெரிய பையனும் மாத்திரம் என்னை உற்றுப் பார்த்தபடியே புன்சிரிப்போடு நின்றனர். இப்பிள்ளைகள் எல்லாம் இவ்வாறு என்னிடத்தில் அன்பு பாராட்டுவதற்கு ஏதோ அர்த்தம் இருக்க வேண்டுமென்று நினைத்தேன். எதிரில் நின்ற பெரிய பெண் சில நிமிஷங்களுக்குப் பிறகு தங்கள் பாஷையில் ஏதோ சொல்லி என் மடிமீதிருந்த குழந்தையை அழைத்தது. ஆனால், அக்குழந்தையோ என்னைவிட்டு போக மனம் இல்லாமல் தலையை அசைத்து, என்னை நன்றாக இறுக்கிப் பிடித்துக் கொண்டது. நானும் அவ்வளவு அன்போடுள்ள அக்குழந்தையை விடுவதற்கு மனம் இல்லேனாய், அம் மூத்த பெண்ணை நோக்கி அதற்கு நமது தமிழ்ச் சொல் தெரியாதென்று எண்ணி அக்குழந்தை சிறிது நேரம் என்னிடமே இருக்கட்டும் என்பதைச் சைகையாற் காட்டினேன். ஆனால், அம்மூத்த பெண்ணோ தமிழிலேயே எங்க அக்காளாக்கு மென்று அந்தப்புள்ளை உங்களிக்கிட்டையேயிருக்கு என்று துலுக்கர் தமிழ்ப் பேசுகிற மாதிரியாகப் பேசிற்று. உடனே நான் அப்படியானால் நீங்கள் எல்லோரும் என் பக்கத்திலே உட்காருங்கள் என்று சொன்னேன். அதனைக் கேட்டு அந்த மூத்தப் பெண்ணும் பையனும் என் பக்கத்தே உட்கார்ந்தார்கள். எங்களுக்குள் நடந்த இவைகளையெல்லாம் சிறிது தூரத்தில் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த இவர்கள் பெற்றோரான அப்பாரசிக கனவானும் அவர் மனைவியாரும் தம் பிள்ளைகள் என்னிடத்தில் மகிழ்வோடு பேசிக்கொண்டு என்னிடத்தும் என்னருகிலும் உட்கார்ந்திருத்தலைக் கண்டு அதென்னவென்று விசாரித்ததற்கு எம்மிடம் எழுந்து வந்தார்கள். எங்கள் அருகில்

வந்ததும் அப்பாரசிக கனவான் என் மாமனாருக்கு வந்தனஞ் சொன்னார். உடனே என் மாமனாரும் அவருக்கு நல் உபசாரங்கள் சொல்லித் தம் எதிரில் இருக்கும்படி கற்பித்தார். இனி என்னிடத்தில் நெருங்கிய அவர் மனைவியாருக்கு யான் வந்தனங்கள் சொல்லி அவர்களை என் அருகேயிருக்கும்படி கேட்டுக்கொண்டேன். அவ்வம்மையாரும் அப்படியே இருந்தார்கள். உடனே அப்பாரசிக கனவான்.

"அய்யா, நம்பளுக்கு மூத்த பெம்பிளப்பிள்ளே ஒருத்தி இருந்தா; அவ அச்சம் இந்தம்மாளேப்போலே இருந்தா; நம்ப துரதிர்ஷ்டம் அவ இப்போதா செத்துப்போனா; இந்தக் கைக் கொயந்தெரெண்டும் அவகிட்ட ரொம்ப ரொம்பப் பிரியம்; அதனாலேதா அந்தக்கொயந்தங்க இந்தம்மாவைப் பார்த்து அம்மாத்த ஆசையா அவுங்ககிட்டே வந்திருக்கு; என்ன செய்றது, பார்த்திங்களா நம்பளெக்காட்டிலுங் கொயந்தங்களுக்குப் பயக்கமானவங்க எடத்திலே அதிக வாஞ்சை என்று சிறிது துயரங் கலந்த குரலில் இந்துஸ்தானக்காரர் தமிழ்ப்பேசுகிற வகையாகக் கொச்சை கொச்சையாய்ப் பேசினார்.

இங்ஙனம் அவர் பேசியவுடனே அதனைத்தொடர்ந்து அவர் மனைவியார் என் மாமனாரைப்பார்த்து "தாதா சிறிது நேரத்திற்கு முன் நாங்கள் வண்டியிலிருந்து இறங்கிச் சாலையில் வரும்போது உங்களைப் பார்த்தோம்; இந்த அம்மா எங்கள் மூத்த மகளைப் போலவே இருந்தமையால் ஒரு பக்கம் துயரமும் ஒரு பக்கம் உங்களைக் கண்டு பேசவேண்டுமென்னும் ஆவலும் எங்களுக்கு உண்டாயின. ஆனால் இதற்குமுன் பழக்கம் இல்லாமை யால் நீங்கள் என்ன நினைத்துக் கொள்வீரகளோவென்று பேசாமல் வந்து விட்டோம். நல்ல காலமாய் இந்தக் குழந்தை களால் நாம் இங்கே சந்திக்கலாயிற்று. இறந்து போன என் அருமைமகளை இன்றைக்கு நாங்கள் திரும்பவும் பெற்றுக் கொண்டாற்போல இந்த அம்மாவைப் பார்த்து எங்களுக்கிருந்த ஆற்றாமையெல்லாம் நீங்கப்பெற்றோம். எங்களுக்காக இல்லாவிட்டாலும், இந்தப் பச்சைக் குழந்தை களுக்காகவாவது இந்த அம்மாவை எங்கள் கண்ணில் அடிக்கடி காட்டும்படி உங்களை மிகவுஞ் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்" என்று நல்ல செந்தமிழில் திருத்தமாகப் பேசிக் கையெடுத்துக் கும்பிட்டார்.

இந்த அம்மா நல்ல தமிழில் பிசிரில்லாமல் பேசியதைக் கேட்டு எனக்கு உண்டான வியப்பு இவ்வளவென்று சொல்ல முடியாது.இவர்கள் என்னளவில் வைத்த அன்பும், அதனை வெளியிட்டுக் கூறிய சொற்களும் என் உள்ளத்தை உருகச் செய்தன. இவர்கள் பேசியவுடனே, இவர்கள் கணவனார் "அய்யா, நம்ப பெஞ்சாதி நம்பளெக் காட்டிலும் தம்பிள் நல்லாப் பேசுவா. நம்பளிக்கித் தம்பிள் நல்லாப்பேச வருறதில்லை. அதுக்காக நீங்கோ நம்பளே ரொம்ப மன்னிச்சுக்கொள்ளணும். இந்த அம்மாவே பார்த்த ஒடனே எங்க மூத்தபெண்தா உசிரோடெ வந்திட்டான்னு நாங்க ரொம்ப ஆனந்தப்பட்டிருக் கிறோம். அய்யா, நீங்கோ மெத்த தயவுபண்ணி அடிக்கடி இந்தம்மாவெ நாங்க பார்க்கும்படி உபகாரம் பண்ணனும், அப்பொதா எங்க துக்கம்போவும்" என்று மிக்க பணிவோடு பேசினார்.

"ஐயா! உங்களையும், உங்கள் அருமை மனைவியாரான இந்த அம்மா அவர்களையும், உங்கள் குழந்தைகளையும் பார்க்கும்போது களங்கமின்றிப் பரிசுத்தராய் விளங்கும் ஒரு சிறு தேவ கூட்டத்தாரைப் பார்ப்பது போலவே எனக்கும் என் மருமகளுக்குந் தோன்றுகின்றது. உங்களைப்பார்த்த நிமிஷந் தொட்டே உங்களுடைய ஸ்நேகத்தைப் பெறவேண்டுமென்னும் அவா எங்களுக்கு மிகுதியாய் எழுந்தது; அதனாலேதான் நாங்கள் இவ்விடத்திற்கு வந்தோம். என் மருமகளைப் பார்த்து உங்களுக்குள்ள துக்கம் நீங்குவதாய் இருக்குமானால், உங்களுக்கு மன ஆறுதலைத் தருதற்கு நாங்கள் பாத்திரராய் இருப்பதை நினைந்து அளவற்ற சந்தோஷம் அடைகிறோம்; இவ்வளவு சிறந்தவர்களான உங்களுக்கு நாங்கள் இந்தச் சிறிய உதவி செய்வதைவிட வேறு என்ன பாக்கியம் இருக்கின்றது? நீங்கள் பார்சிக்காரராகவும் நாங்கள் பிராமணாளாகவும் இருந்த போதிலும் நமக்குள் ஏதொரு வித்தியாசமும் இன்றிக் கலந்து நேசமாயிருக்க வேண்டியது அவசியந்தான்," என்று என் மாமனார் முகமலர்ந்து கூறினார்.

அதனைக் கேட்ட அவ்விருவரும் மன உருக்கம் மிக்கவர் களாய் விழிகளில் நீர்ததும்ப மாமனாருக்கு வந்தனங் கூறினர். அம் மனவுருக்கந் தணியும்வரையிற் சிறிது நேரம் பேசாதிருந்தனர். அது தணிந்த சிறிதுநேரத்திற் கெல்லாம் அப்பாரசிக கனவான் என்

மாமனாரை நோக்கி, “அய்யா! எனக்கி யொரு சந்தேகம் வந்திருக்கு; அதெ உங்கொ எடம் கேக்கிரத்துககாக நீங்க நம்பெள மன்னிச்சுக் கொள்ளணும்”, என்று சொல்லினார்.

“அதைப்பற்றித் தாங்கள் சிறிதும் யோசிக்கவேண்டாம்; எதைப்பற்றி நீங்கள் கேட்கவேண்டுமானாலும் கேட்கலாம்; நான் சொல்லத் தயாரா யிருக்கிறேன்”, என்று மாமனார் பிரியத்தோடு சொன்னார்.

“வேறொண்ணு மில்லிங்கோ, இந்தம்மாவெ உங்க பேத்திப்பிள்ளேண்ணு நெனச்சோம்; ஆனாக்கோ, உங்க மரிமகண்ணு நீங்கோ சொன்னிங்களே?” என்று அக் கனவான் வினவினார்.

“ஐயா, இதுபுதிதாகச் சந்திப்பவர்கள் எவர்க்கும் சந்தேகத்தை உண்டுபண்ணத் தக்கதுதான். நியாயமாகப் பார்த்தால் இந்த அம்மா எனக்குப் பேர்த்திக்குப் பேர்த்தியாகவேண்டும்; இவளுக்கு இப்போது பத்தொன்பது வயதுதான் ஆகின்றது. எனக்கோ எண்பத்தைந்து வயது ஆகிறது. இக்குழந்தையை எனக்கு மருமகளென்றால் யாருக்குத்தான் சந்தேகம் உண்டாகாது! எனக்கு இருபத்தெட்டாவது வயதிற்பிறந்த மூத்தமகன் ஒருவன் இருந்தான். அவனுக்கு இரண்டு முறை விவாகம் செய்தேன். இரண்டு முறையும் அவனது துரதிர்ஷ்டத்தால் அவன் மனைவிகள் இறந்துபோனார்கள். அதன் பிறகு அவனுக்குக் கல்யாணம் செய்விக்க எனக்குச் சிறிதும் விருப்பம் இல்லை. அவனும் அரைவாசி பிரியம் இல்லாமலே இருந்தான். ஆனால், அவனுக்கு மாசம் ஒன்றுக்கு ஆயிரரூபாவுக்கு மேல் வரும்படி இருந்தது. சட்டப்படிப்பில் கெட்டிக்காரன். நியாயஸ்தலத்தில் வாதிப்பதில் வல்லவன். ஆனால், பிறர்பேச்சைக் கேட்பவன். கொஞ்சம் சுயகாரியப்பிரியன். தன்னைப் புகழ்ந்து பேசுகிறவர் சொல்லுக்கு நிரம்பவும் செவிகொடுப்பவன். இவனை எந்நேரமும் புகழ்ந்து பேசிக்கொண்டு இவனிடத்திற் காசுபிடுங்கித் தின்னும் வைதிகப் பார்ப்பார் சிலர் இருந்தனர். பிள்ளை இல்லாதவர்கள் புத் என்னும் நரகத்திற்கு போவார்களாதலால் எத்தனை தடவை யாயினும் ஓர் ஆண்மகன் கல்யாணம் பண்ண வேண்டுவது அவசியம் என்றும், எழுபது வயது வரையில் ஆண்கள் விவாகம் செய்து கொள்ளலாம் என்றும் அப்பாவிகள் அவனுக்கு அடிக்கடி சொல்லி அவனைத் தமது பாழும்பேச்சுக்கு உடன் படுத்திக்

கொண்டார்கள். தனக்கு மூன்றாம் முறை விவாகம் செய்து கொள்ளப் பிரியம் இருப்பதை என்னிடம் ஒருநாள் என் மூத்தமகன் தெரிவித்தபோது, உனக்கோ இப்போது நாற்பத்தைந்து வயதாகிறது. நம்முடைய சாதி வழக்கப்படி பத்து வயசுக்கு உட்பட்ட பெண்ணைத்தான் நீ கல்யாணம் செய்ய வேண்டி வரும்; பிறகு அப்பெண் புஷ்பவதியாகிறதற்கு ஐந்து வருஷம் ஆகும்; அப்போது உனக்கு ஐம்பது வயசாகிவிடும். மேலும் நீ நோயில் அடிக்கடி விழுகிறாய். உனக்குக் குழந்தை போலிருக்கும் ஒரு பெண்ணைக்கட்டி அந்தப்பாவத்தால் வரும் பெருநரகத்தை இந்த உலகத்திலேயே நீ அனுபவிப்பதைவிட பிள்ளையில்லாததனால் வருவதாகப் பணப்பேய்பிடித்த வைதிகப் பார்ப்பார் சொல்லும் நரகத்தில் இறந்தபின் போய்விழுவதே மெத்த நல்லது. ஆகையால் உனக்கு இனி விவாகஞ்செய்யத் தோலோதோல் நான் உடன்பட மாட்டேன். என்று தீர்மானமாகச் சொல்லிவிட்டேன். என் சொல்லைக் கேளாமலே அவன் இந்தப்பெண்ணை மணந்து இதன் பாவத்திற் கையை வைத்தான். இக்குழந்தையைக் கட்டும்போது இவளுக்கு வயது எழுதான். கல்யாணஞ் செய்த அந்த வருஷத்திலேயே இக்குழந்தையை விதந்துவாக்கி அவன் இறந்தொழிந்தான் என்று மிகுந்த அருவருப்போடும் மனவருத்தத் தோடும் என் மாமனார் விடைகூறி, இதில் அவர் மனம் மிகுதியாய்க் கலங்கினமையாற் சிறிதுநேரம் நிலத்தைப் பார்த்தபடியே தலை குனிந்திருந்தார்.

அப்போது அப்பாரசிகப் பெருமாட்டியார் பெருந்துயரம் நிகழப் பெற்றவராகி, "ஐயோ! பாவம்! இந்தக் குழந்தையின் நிலைமை இப்படியா ஆயிற்று!" என்று வருந்திச் சொல்லிப் பின்னர் என் மாமனாரைப் பார்த்துத், "தாதா, அவ்வளவு வயதான உங்கள் மூத்தமகனுக்க ஏழு வயதுக் குழந்தையைக் கொடுக்க இப்பெண்ணின் பெற்றோர்கள் எப்படி உடன் பட்டார்கள்?" என்று கேட்டார்கள்.

இந்த அம்மையாரவர்கள் பேசும்போதெல்லாம் இவர்கள் பேசும் விஷயங்களில் எனக்கு அவ்வளவாகக் கவனஞ்செல்ல வில்லை; இவர்கள் கணவரும் குழந்தைகளும் கொச்சையாகத் தமிழ்ப்பேச இவர்கள் மட்டும் இவ்வளவு தெளிவான தமிழ்ப் பேசுவதற்கு எங்ஙனங் கற்றுக்கொண்டார்கள் என்பதில் எனக்கு வியப்பு மிகுதியாயுண்டாயிற்று. இந்த அம்மையார் கேட்ட

கேள்விக்கு உடனே என் மாமனார் பின்வருமாறு விடை கூறுவாரானார்.

"அம்மா எங்கள் பிராமண சாதிக்குப் பொருளாசை என்பது இயற்கையாகவே அளவு கடந்து உள்ளது. மாதம் ஒன்றுக்கு ஐயாயிரம் ரூபா வரும்படியுள்ளவனாய் ஒருவன் இருந்தாலும் ஐம்பது மைலுக்கு அப்பாலே ஐந்து ரூபா பூரிகொடுக்கிறார் களென்றால் அதனை அவன் வாங்குகிறதற்குக் கட்டுச்சோறு தூக்கிக் கொண்டு கால்நடையாய்ப் போவான். இந்தத் துராசைக்குத் தப்பினவர் எங்களில் லட்சத்தில் ஒருவர் இருப்பாரோ என்பது கூட சந்தேகம். பணங்கொடுக்கிறவன் பறையனாயிருந்தாலும் அவன் எவ்வளவு குணக்கேடனும் தகாத செய்கையுடையவனுமாய் இருந்தாலும் அவன் வேண்டிய காரியங்களெல்லாம் செய்ய முந்தி வந்து நிற்பார்கள்; தம்மோடொத்த பிராமணனாயினும் அவன் கையிற் காசில்லாத வறியவனாயிருந்தானேல் அவன் குணத்தாலும் ஒழுக்கத்தாலும் எவ்வளவு உயர்ந்தவனானாலும் அவனைத் திரும்பியும் பாரார். கையிற் பணமுள்ளவர்கள் சுபாவமே இப்படியிருந்தால், எங்களிற் பணமில்லாத ஏழைகள் எவ்வளவு ஆசையுடையவர்களா யிருப்பார்கள் என்பதை யான் சொல்ல வேண்டுவதில்லை. இந்தப் பிள்ளையைப் பெற்றவர்களோ அத்தனை ஏழைகள் என்று சொல்லுவதற்கும் இடமில்லை; இவள் தாயைப் பெற்ற பாட்டனாரும் பெருஞ் செல்வவான். இவள் தகப்பனைப் பெற்றவரும் மிகுந்த சொத்து உள்ளவர். இவர்கள் இருவரும் இவர்கள் பெண்சாதிமார்களும் நிரம்பவும் நல்லவர்கள். நல்ல செய்கையும் உடையவர்கள். ஆனால் இவள் தகப்பனோ அத்தனை நல்ல குணமும் நல்ல செய்கையும் உடையவன் அல்லன்; அதனால் அவ்வளவு சொத்துக்களிலும் முக்கால்வாசிக்கு மேல் செலவழித்து விட்டான். என்றாலும், மிச்சம் இருக்கின்ற சொத்தே இவனுக்கும் இவன் தலைமுறைக்கும் போதும் அனால் காசாசை என்கின்ற பேய் அவனைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டது. என் மூத்த மகனிடத்தில் காசு பிடுங்கித்தின்னும் வைதிகப் பார்ப்பார்கள் அவனிடம் போய் உம்முடைய பெண்ணுக்கு நல்லவரன் இருக்கிறான்; மாதம் ஒன்றுக்கு ஆயிர ரூபாவுக்கு மேல் வரும்படி உள்ளவன். வயது நாற்பத்தஞ்சுதான்; அதிகமில்லை. உமக்குக் கல்யாணச் செலவு கொஞ்சமும் இல்லை. திவ்யமான ஆபரணங்கள் எல்லாம் மாப்பிள்ளை வீட்டுக்காரரே

போடுகிறார்கள். இவைகளோடு நாலாயிரு ரூபாவும் உமக்கும் வாங்கித் தருகிறோம் என்று சொல்லி அவனுடைய சம்மதத்தைப் பெற்றுவந்து என் மூத்த மகனிடத்தில் ஏராளமான தொகையைப் பிடுங்கிக் கொண்டு போய்க் கொடுக்கவே அந்தத் தொகையைப் பார்த்த அவனும் பெண்ணைக் கொடுத்து விட்டான். வயசானவனுக்குப் பெண்ணைக் கொடுப்பதில் இவள் தாய் முதலிற் பிரியம் இல்லாதவனாய் இருந்தாலும் தொகுப்பாய் நாலாயிர ரூபாவைப் பார்க்கவே அவளும் இந்தப் பெண்ணைக் கொடுக்கச் சம்மதப்பட்டு விட்டாள். என்ன செய்யலாம்! எல்லாருங் கூடி இவள் பாவத்தில் கையை வைத்தார்கள்! கல்யாணம் நடந்தபோது அந்தக் கொடுமையைப் பார்க்க எனக்கு மனம் இல்லாமையால் யான் மதுரைக்குப் புறப்பட்டுப் போய்விட்டேன். பிறகு ஒரு மாதங் கழித்துத்தான் இங்கே வந்தேன்'' என்று துயரத்தோடு பேசினார்.

அதனைக்கேட்டு அந்த அம்மையார் வருத்தமும் சிறிது கோபமும் உடையவராகித், "தாதா, பிள்ளையில்லாதவர்கள் புத் என்னும் நரகத்திற்குப் போகின்றார்களென்றால், பிள்ளையில்லா தவர்கள் எவராயிருந்தாலும் அந்த நரகத்திற்குப் போக வேண்டியது தானே?'' என்று வினாவினார்.

"எங்கள் புராண கதைப்படி பார்த்தால் அப்படித்தான் சொல்ல வேண்டியிருக்கின்றது'' என்று மாமனார் விடை கூறினார்.

"அப்படியானால், பிள்ளையில்லாத ஆண்கள் புத் என்னும் நரகத்திற்குப்போகாமல் இருக்கும் பொருட்டு எழுபது வயது வரையில் எத்தனை தரம் வேண்டுமானாலும் சிறு குழந்தைப் பெண்ணைக்கூடக் கல்யாணம் செய்யலாம் என்றால் அங்ஙனமே பிள்ளையில்லாத பெண்களும் அந்த நரகத்திற்கு போகாம லிருக்கும் பொருட்டு எத்தனை தரமாயினும் கல்யாணம் செய்து கொள்ளலாமென்று ஏற்படுகின்றதன்றோ?'' என்று அவ்வம்மை யார் மிகுந்த நுட்ப அறிவோடுங் கேட்டார்.

அவர்களின் நுண்ணறிவை வியந்து உடனே என் மாமனார் "ஆம் அம்மா. அப்படித்தான் கொள்ளவேண்டி வருகின்றது'' என்றார்.

"அங்ஙனமானால் சிறு வயசுள்ள இந்த அம்மாவும் பிள்ளை யில்லாமையால் புத் என்னும் நரகத்திற்குச் சென்றது விழாமலிருக்கும் பொருட்டு, இந்த அம்மாவையும் மறுபடியும் ஏன் கல்யாணஞ் செய்து கொடுக்கப்படாது? உங்கள் வைதிகப் பார்ப்பாருக்கு இது புத்தியிற் படாதது ஏன்?" என்று சிறிது கோபக் குறிப்புத்தோன்ற வினாவினார்.

"ஆண்மக்களே எல்லா நலங்களையும் சுதந்தரங்களையும் பெற வேண்டும்; பெண்மக்கள் எப்படிப் போனாலும் எவ்வளவு துன்பத்திற்கு உள்ளானாலும் பாதகமில்லை. பெண் ஜென்மம் பாப ஜென்மந்தானே என்று பிழைபட எண்ணுஞ் சுயகாரியப் புலிகளான வைதீகப் பார்ப்பார் புத்திக்கு இது தோன்றாமற் போவது சகசந்தானே" என்று என் மாமனார் விடை கூறினார்.

இதற்குட் பகலவன் மேற்றிசையில் மறைய, மாலைப் பொழுது வந்தமையால் அவர்கள் ஏறிவந்த வண்டிக்காரன் அப்பாரசிக கனவானிடம் அணுகிக் குதிரையை வண்டியிற்பூட்ட அனுமதி கேட்டான் என் மடிமீதும் என் பக்கத்திலும் இருந்தசிறு மதலைகள் இரண்டும் அந்திக்காலத்துத் தாமரைகளைப் போலக் கண் உறங்கி விட்டன. ஆதலால், அக்குழவிகளை என்னிடமிருந்து பிரித்தெடுத்துக் கொள்வது அவர்களுக்கு எளிதாய் இருந்தது. நாளைப் பிற்பகலில் எங்களிருப்பிடத்திற்கு வந்து எங்களைக் காண்பதாகச் சொல்லி எங்கள் வீட்டடையாளத்தைக் கேட்டுத் தெரிந்துகொண்டு அவர்கள் மிகுந்த அன்போடும் எங்களிடம் விடைபெற்றுக் கொண்டு ஏகினர். திரும்பவும் அவர்களைக் காணலாம் என்னும் நம்பிக்கையால் அவர்கள் பிரிந்ததைப் பற்றி நாங்கள் வருத்தம் அடையவில்லை.

அன்று **உவா** நாளுக்கு முந்தியதாகையாற் பெரும்பாலுங் கலை நிரம்பிய இள மதியம் பால் நிரம்பிய பளிங்குக்குடம் போலத் தளதளவென்று கடலின்மேல் வானத்தில் திகழ்ந்தது; கடலின் நீர்ப்பரப்பெல்லாம் அக்குடத்தினின்றும் ஒழுகிய பால் படர்ந்த தென்ன வெண்மையாக மிளிர்ந்தது; ஓங்கியெழுந்து நுரைத்துவரும் அலைகளானவை கீழ்வழிந்தபால் பொங்கி வழிவதனையே ஒத்திருந்தன; இவ்வழகிய காட்சியைப் பார்த்துக் கொண்டு நாங்கள் இருக்கையில் எனக்கு உம்மைப் பற்றிய நினைவு மிகவுந் திறப்பட்டுத் தோன்றியது. நீண்ட நாளாக உமது அருமை திருக்கரலிகிதம் வருவதற்கு இடம் இல்லாதிருப்பதை உணர்ந்து

என் நெஞ்சம் நீராய் உருகிற்று. என் செய்வேன் பாவியேன்! சென்ற ஒரு மாதகாலமாக யான் உமக்கு அனுப்பும் கடிதங்களும் உமக்குத் தவறாமல் வந்து சேர்கின்றனவோ இல்லையோ என்னும் ஐயமும் என்னைப் புண்படுத்துகின்றது. இன்னும் ஒரு வாரத்தில் உமது கடிதத்தை யான் காணும் பாக்கியம் பெறுவேன் என்று நினைக் கிறேன். இங்ஙனம் யான் எண்ணமிட்டுக் கொண்டிருக்கையிற், கடற்காற்று மிகவும் குளிர்ந்து வீசியது. உடனே என் மாமனார் 'வீட்டுக்குப் போகலாம்' என்று சொல்லவே, எழுந்து சாலையண்டைவந்து எங்கள் வண்டியில் ஏறிக்கொண்டு வீடுவந்து சேர்ந்தோம். மற்றச் செய்திகளெல்லாம் இன்னும் இரண்டொருநாளில் எழுதுகிறேன்.

# கடிதம் -7

என்னுயிரிற் கலந்துகலந் தினிக்கின்ற என் அருமைக் காதலரே,

'ஆறு நாளுக்கு முன் யான் எழுதிய கடிதம் உங்களுக்கு வந்திருக்கலாம் என்று நம்புகின்றேன். கடற்கரையிற் சந்தித்த அன்றைக்கு மறுநாளில் பிற்பகலில் அப்பாரசிக கனவானும் அவர் மனைவியாரும் தாங்கள் சொன்னபடியே எங்கள் இல்லத்திற்கு வந்தார்கள். அவர்கள் வருவார்கள் என்பதை முன்னரே அறிந்திருந் தமையால், எங்கள் மாமனாரவர்கள் அவர்களை விருந்தேற்றற்கு வேண்டுவனவெல்லாம் சித்தஞ் செய்திருந்தார்கள். அப்பாரசிக கனவானும் அவர் தம் மனைவியாரும் அவர்கள் குழந்தைகள் எல்லாரும் வந்தார்கள். என் மாமனார் அக் கனவானை எதிர் கொண்டு கைகொடுத்து அழைத்து மெத்தை மேற் கொண்டு சென்று சூரியகாந்திப்பட்டினால் மிக மேன்மையாகவும் அழகாகவும் அமைக்கப்பட்டிருந்த (Sofa) ***சார்மணைக்** கட்டிலில் அவரை இருக்கச் செய்ததோடு, அதற்கு அருகாமையிற் சலவைக்கற் பதித்த வட்ட மேசையைச் சுற்றி நீலப்பட்டுத் துணியினுள் பஞ்சுவைத்துச் செய்யப் பட்ட நாற்காலிகளின்மேல் அவ்வம்மையாரையும் அவர் தம் குழந்தைகளையும் அமரும்படி செய்வித்தார். அவ்வம்மை யாரவர்கள் எங்கள் வீட்டினுள் நுழைந்தவுடனே என்னைப் பார்த்ததும் பலநாட் பிரிந்திருந்த தன் அருமைக் குழந்தையைப் பார்த்தாற்போல அவ்வளவு வேட்கையோடும் என்னைக் கட்டி அணைத்து முத்தம் இட்டார்கள். அதன் பிறகு யான் அவர்களின் மூத்த பெண்பிள்ளையை முகமலர்ந்து கைபிடித்து அழைத்த தோடு அதற்கு அடுத்த பெரியபையனை முத்தம் இட்டும் மற்ற இரு சிறிய குழந்தைகளைக் கையிற் றூக்கியெடுத்து முத்தமிட்டுக் கொண்டும் மெத்தைமேல் ஏறினேன். முன்னே சொல்லியபடி அவர்கள் எல்லாரும் இருக்கைகளின் மேல் இருந்தபிறகு யான்

அவ்விரு குழந்தைகளையும் மடிமீது வைத்துக்கொண்டே அவ்வம்மை யாருக்குப் பக்கத்தில் ஒருநாற்காலியின்மேல் உட்கார்ந்தேன். என் மாமனார் அப்பாரசிக களவானுக்கு எதிரிலே மெல்லிதான ஒரு சாய்மான நாற்காலிமேலிருந்து கொண்டு, பல வகையான நல்லுபசார மொழிகளைச் சொல்லி அவர்களை மகிழ்வித்தார். என் மாமியாரும் நாத்தனாரும் நல்ல குணம் உள்ளவர்களாய் இல்லாமையால், அவர்களை உபசரிக்க வர வேண்டாம் என்று என் மாமனார் தடுத்துவிட்டு, யானே எல்லா உபசாரங்களும் செய்யும்படி திட்டஞ் செய்திருந்தார். மேசைமேல் வைக்கப்பட்டிருந்த குடகுநாரத்தம்பழச் சுளை களையும், கொடி முந்திரிப் பழங்களையும் அக்குழந்தைகளுக்கு யான் சிறிதுநேரம் வாயில் ஊட்டிக் கொண்டிருந்து, பிறகு இலட்டுகங்களை எடுத்து அவற்றின் கையிற்கொடுத்து அவைகளை நாற்காலிகளின்மேல் இருக்கவைத்து எழுந்தேன். அவைகள் அப்பண்டங்களைத் தின்று கொண்டே என்னைப் பார்த்துப் பாத்து பார்த்துப் பெருமகிழ்ச்சி யோடும் புன்னகை செய்து கொண்டிருந்தன. பின்னர் நெய்யிற் பாகப்படுத்தின பன்னீர் ஜிலேபிகளையும் வாதுமை அலுவாவையும் அன்ன தாழம்பழத்தில் அரிந்த துண்டுகளையும் வெள்ளித் தட்டுகளில் வைத்து மூத்தப்பெண்ணுக்கும் பெரிய பையனுக்குங் கொடுத்து விட்டு, ரோசாப் பூவின் சத்தினாற் செய்யப்பட்ட தீம்பானகத்தைப் பளிங்குத் தமிளர் இரண்டில் நிரப்பி அவற்றை அக்கனவானுக்கும் அவ்வம்மையாருக்கும் பருகக் கொடுத்தேன். அவற்றை அவர்கள் மகிழ்ந்தேற்றுக்கொண்டு என்னையும் மாமனாரையும் அங்ஙனமே அருந்தும்படி வேண்டினார்கள். மாமனார் அவ்வாறே செய்யும் படி எனக்குக் குறிப்பித்தமையால், வேறிரண்டு தமிளரில் அப்பானகத்தை நிறைத்து என் மாமனாருக்கு ஒன்றைக்கொடுத்து மற்றொன்றை யான் அருந்தினேன். அதன் பின்னர்க் கனிவான சீமை இலந்தைப் பழங்களை அறுத்தும், செவ்வாழைக் கனிகளை உரித்தும் அவற்றைப் படிகத்தட்டுகளில் இட்டு அவர்களுக்கும் என் மாமனருக்கும் வைத்தேன். அவற்றை யடுத்து உழுத்தம் பருப்புவடை முந்திரிப்பருப்புச் சேர்த்துச் செய்த கடலைமாப் போண்டு உருளைக்கிழங்குருண்டை முதலிய காரப் பலகாரங்கள் சிலவும், பன்னீர்ப்பூந்தி, ‘சீனிப்பாற்கட்டி முதலிய இனிப்புப் பலகாரங்கள் சிலவும் கொண்டுவந்து எல்லார்க்கும் வழங்கினேன். அக்கனவானும் குழந்தைகளுங் காரப்பலகாரங்களின் சுவையை

மிகவியந்துகொண்டு அத்தகைய அரியபண்டங்கள் தாம் தின்றதேயில்லையென்று சொன்னார்கள். கடைசியாக எல்லாரும் பருகுவதற்கு வாதுமைப் பருப்பும் பாலுஞ்சேர்த்துச் செய்த தீம்பானீயத்தை எல்லார்க்கும் வழங்கினேன். அதன்பின் அகன்ற வெள்ளித்தட்டு ஒன்றில் மெல்லிய வெற்றிலைபாக்கு இலவங்கப்பூ சாதிக்காய் சாதிப்பத்திரி முதலியவற்றை வைத்து என் மாமனாருக்கும் அப்பாரசிக கனவானுக்கும் அவர்தம் மனைவி யார்க்குங் கொடுத்து மல்லிகைப்பூவின் அத்தரும் பன்னீருங்கலந்து மணங்கமழும் சந்தனக் குழம்பைப் பளிங்குக் கிண்ணங்களில் நிரப்பி அவற்றை அவர்கள் எதிரில் வைத்தேன். இறந்துபோன தங்கள் மகளே திரும்பவும் உயிர் பெற்று எழுந்து வந்து இங்ஙனமெல்லாம் உபசரிப்பதாகக்கருதி அவர்கள் அப்போது அடைந்த மனக்களிப்புக்கு ஓர் அளவே யில்லை. நெடுநேரம் யான் உபசரித்துக் கொண்டிருந்தமையால் எனக்குப் பிரயாசை மிகுதியாயிருக்கு மென்று சொல்லி, என்னை ஒரு நாற்காலியில் இருக்கும் படியும் இருந்து தின்பண்டங்கள் அருந்தும்படியும் கற்பித்தார்கள். அவர்கள் சொற்படியே ஒரு நாற்காலியில் அமர்ந்து சிறிய பிள்ளையை எடுத்து என் மடிமீது வைத்துக் கொண்டு அதற்கும் சிறிதுகொடுத்து யானும் சிறிது அருந்தினேன்.

பிறகு சிறுகுழந்தைகள் விளையாடுவதற்கு விளை யாட்டுச் சாமான்கள் சிலவற்றையெடுத்து அவற்றின் கையிற் கொடுத்தேன். சிறிதுநேரம் சென்றபிறகு என் மாமனார் வீணையை எடுத்து வந்து மீட்டித் தேவார திருவாசகம் பாடும்படி கட்டளையிட்டார். அப் படியே யானும் அதனையெடுத்துவந்து மடிமீது வைத்து மீட்டினேன். அப்பாரசிகப் பெருமாட்டியாரும் அவர் தம் மூத்த பெண் பிள்ளையும் என் பக்கங்களிலிருந்து கொண்டு ஒற்றைக் கையைக் கன்னத்தின்மேல் வைத்துக் கொண்டும் முழங்கையை மேசை மேல் ஊன்றிக் கொண்டும் என்னையும் வீணைமேல் என் விரல்கள் ஓடுவதையும் பார்த்த வண்ணமாய் இருந்தனர்; மற்றப் பிள்ளைகள் மூன்றும் என்னைச் சுற்றிநின்றன. என் மாமனாரும் அப்பாரசிக கனவானும் யான் பாடப்போவதை ஆவலோடு எதிர் பார்த்துக் கொண்டிருந் தார்கள். யான் வீணையின் நரம்புகளைத் தெறித்துப் பார்த்து ஓசைகூட்டி ஒழுங்குபடுத்தியவுடனே,

"மாதர் பிறைக்கண்ணியானை மலையான் மகளொடும்பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவா ரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல் ஐயா றடைகின்றபோது
காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன கண்டேன்
கண்டேனவர்திருப் பாதங் கண்டறியாதன கண்டேன்"

என்னும் **அப்பர் சுவாமிகள் தேவாரத்தைக்** கால்மணிநேரம் வரையில் என் மனம் உருகப் பாடினேன்.

இதனைக்கேட்டு மிகவும் மனங்கரையப்பெற்ற அப்பாரசிக கனவானும் அவர் மனைவியாரும் அப்பாட்டின் உருக்கத்தையும் தமிழின் இனிமையையும் எனது குரலின் குளிர்ந்த ஒலியினையும் பாடுந்திறமையினையும் மிகவியந்து மகிழ்ந்து பேசினார்கள். பின்னும் அவர்கள் இதே வகையான மற்றொருபாட்டுப் பாடும்படி கேட்டுக்கொள்ளவே என் மாமனார் **மாணிக்க வாசகசுவாமிகள் திருவாசகத்தில்** ஒன்று பாடும்படி சொன்னார்கள். மறுபடியும் யான் வீணையின் நரம்புகளைத் தெறித்து,

"முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே"

என்னும் **திருவாசகத்தைப்** பாடினேன்; இதனை யான் மடித்து மடித்துப் பாடுகையில் பெரியவர்களான அம்மூவர் கண்களிலும் நீர் முத்துமுத்தாய்த் துளித்தன. யான் பாட்டை நிறுத்தினவுடனே அப்பாரசிககனவான் என் மாமனாரை நோக்கிப்

"பெரியய்யா உங்கதமிள்பாஷை கடினசப்தங்களும் ஸ்ஷ் முதலான சீறுற சப்தங்களும் இல்லாமே ஆ! எம்மாத்தம் இனிப்பா இருக்குது! அதிலும் இந்தப்பாட்டெ பாடினவர் ரொம்ப ரொம்பப் பெரியவங்களா இருக்கணும்! இதெப்பாடினவர் எப்போ இருந்தார்? அவரெப்பத்திக் கொஞ்சம் தயவுசெய்து சொல்லுங்கோ" என்று நிரம்பினவியப்போடும் உருக்கத்தோடும் கேட்டார்.

*தேவார திருவாசகங்களிடத்தும் அவற்றை அருளிச் செய்த ஆசாரிய சுவாமிகளிடத்தும் இயற்கையிலேயே மிக்க அன்பு பூண்டொழுகும் என் மாமனார் அப்பாரசிக கனவானின் மன நிலையைப் பார்த்து மேலும் மனக்கிளர்ச்சி யுடையவராகி, "அருமையுள்ள ஐயா, எங்கள் தமிழ்ப்பாஷை தெய்வத்தன்மை யுடையதாகும். நமது ஸமஸ் கிருதபாஷையும் வேதவேதாந்தங்கள் முதலான பெரிய சாஸ்திரங்களையுடைய தெய்வீகபாஷை யாயிருந் தாலும் அதைவிடத் தமிழ்ப் பாஷையே பலவகையாலும் உயர்ந்ததும் இனியதும் என்பது என் கருத்து. தாங்கள் இப்போது குறிப்பிட்டபடி உச்சரிப்பவர்களுக்குப் பிரயாசையினையும் கேட்பவர்களுக்குப் பயத்தையும் அருவருப்பையும் உண்டாக்கும் கடினசப்தங்களும் சீறுகிற ஓசைகளும் ஸமஸ்கிருதத்தில் இருப்பது போல எங்கள் செந்தமிழ்மொழியில் இருப்பதில்லை.* **தேனும் பலாச்சுளையும் மாம்பழமும் வாழைக்கனியும் சேர்த்துப்பிழிந்த தீஞ்சாறு ஒழுகினாற் போல அத்தனை இனிப்பான மெல்லிய ஒலிகளே எங்கள் செந்தமிழில்** *இருக்கின்றன" என்று சொல்லும் போதே அப்பாரசிக கனவான் இடையில்,*

*"ஆ! ஆ! பேஷ்! ஐயா, தாங்க இப்போ சொன்ன வார்த்தைகளே தேன்போல தித்திக்குதே! இப்போ சொன்ன வாக்யத்தெ திருப்பிச் சொல்லுங்கோ!" என்று தன்னைமறந்த மகிழ்ச்சியோடு வினாவினார்.*

*அதற்கு இணங்கிய மாமனார், "நல்லது ஐயா, தேனும்பலாச் சுளையும் மாம்பழமும் வாழைக்கனியும் சேர்த்துப்பிழிந்த தீஞ்சாறு ஒழுகினாற்போல அத்தனை இனிப்பான மெல்லிய ஒலிகளே எங்கள் செந்தமிழில் இருக்கின்றன. இந்தப்பாஷையில் உரத்த சப்தங்களும் கோபம் வருத்தம் வந்தகாலங்களிற் பிறக்கும் ஹஸ முதலான சப்தங்களும் இல்லாமையினாலே இந்தப் பாஷையில் எழுதப்பட்ட நூல்களைக் கற்பவர்க்கு மன அமைதியும் தெய்வ பக்தியும் எல்லா உயிர்களிடத்து அன்பும் தாமாகவே வருகின்றன. நம் இந்து சமயப் பிரிவுகளான சைவ வைஷ்ணவ சமயங்களிலிருந்த பெரிய பெரிய பக்தர்களெல்லாம் ஸமஸ்கிருதத்தில் வல்லவர் களாயிருந்தும் செந்தமிழிலேயே பாட்டுக்கள் பாடித் தெய்வத்தை ஸ்துதித்தார்கள். இந்த அம்மாள் முதலிற்பாடின பாட்டு* ***அப்பர் சுவாமிகள்*** *தேவாரத்தில் உள்ளது.*

இந்தச்சுவாமிகள் ஆயிரத்து முந்நூறு வருஷங்களுக்கு முன் இருந்தவர்; இந்தக் காலத்திலுள்ள இந்துக்களிற் சிலர் கிறிஸ்துமதத்திற்குப் போவது போல, இவரும் சைவசமயத்திற் பிறந்தவராயிருந்தும் அக்காலத்திலிருந்த ஜைன மதத்திற்குப் போயிருந்தார்; பிறகு இவருக்குக் கொடுமையான வயிற்று நோய்வந்தது; எந்தவிதமான பரிகாரத்தினாலும் அது நீங்காமல் பரமசிவத்தைப் பாடியபிறகு நீங்கிற்று; அதுமுதல் இவர் மறுபடியும் சிவபக்தரானார்; இதையுணர்ந்த ஜைனர்கள் இவரைச் சுண்ணாம்புக்காளவாயில் நுழைத்தும், கருங்கல்லிற் கட்டிக் கடலில் வீழ்த்தியும், யானைக்காலில் இடற முயன்றும், விஷத்தை உண்ணக் கொடுத்தும் பலவழியில் துன்புறுத்தி னார்கள்; ஈச்வரகிருபையால் இவர் அவற்றிற்கெல்லாம் தப்பிப் பிழைத்து, அநேக சிவாலயங்களை தரிசித்துக் குழந்தைப் பருவத்திலேயே ஈசுவரனால் பாலூட்டப் பட்டு ஞான மூர்த்தியான திருஞானசம்பந்தப் பெருமானுடைய நேசத்தைப் பெற்று உலகத்திற்குப் பல பேர் உபகாரங்களைச் செய்து சிவத்தின் திருவடியை அடைந்தார்; அவர் அவ்வப்போது ஈசுவரனை ஸ்துதித்த அருமையான செந்தமிழ்ப் பாடல்களுக்கு **'தேவாரம்'** என்று பெயர்.

"இந்தம்மாள் இரண்டாவது பாடினபாட்டுத் **திருவாசகத்தில்** உள்ளது; அதனைப்பாடினவர் **மாணிக்கவாசகசுவாமிகள்**. இவர் ஆயிரத்து அறநூறு வருஷங்களுக்கு முன் பாண்டிய ராஜனிடத்தில் மந்திரியாயிருந்தவர். இவர் இளம்பருவத்திலேயே ஞானத்தை அடையும் விருப்பம் உடையவராயிருந்தார். பாண்டியன் குதிரை வாங்கி வரும்படி இவரை அனுப்ப, இவரும் அப்படியே திருப் பெருந்துறை என்னும் இடத்திற்குசென்று, அங்கே குதிரைகளுக்குப் பதிலாக ஞானகுருவைத் தரிசித்து, அவரால் தாம் பலநாளாய் அடையவிரும்பின பரமஞானத்தை அடைந்து அரசன் தந்த பொருளையெல்லாம் குருவிற்கே அர்ப்பணம் பண்ணி, அதனாற் பல துன்பங்களையடைந்து, கடைசியாகப் பரமசிவகிருபையால் அத்துன்பங்களினின்றும் விலகி, லங்காதேசத்திலிருந்து வந்த புத்தர்களோடு வாதஞ்செய்து அவர்களை ஜெயித்துத் **திருவாசகம்**, **திருச்சிற்றம்பலக் கோவையார்** என்னும் உயர்ந்த நுல்களை அருளிச் செய்து சிவஜோதியிற் கலந்தார். இவர் திருவாய் மலர்ந்தருளின திருவாசகத்தைப் படித்து மனம் உருகாதவர் இல்லை. இதை ஒத்த

நூல் உலகத்தில் எந்தப் பாஷையிலும் இல்லையென்று உறுதியாகச் சொல்லலாம் என்று குழைவாகவும் சுருக்கமாகவும் எடுத்துச் சொன்னார்.

இவைகளைக் கேட்ட அந்தப் பாரசிககனவானும் அவர்தம் மனைவியாரும் அவ்வடியார்களின் சிறப்புகளை மிக வியந்து பாராட்டினார்கள். அப்பாரசிககனவான் தமிழின் இனிமையும் அதிலுள்ள நூல்களின் அருமையும் நன்கு தெரியப்பெற்றவராகித் தாம் அப்பாஷையினை எப்படியாவது கற்றுக் கொள்ள வேண்டு மென்னும் தமது மனவுறுதியைத் தெரிவித்தார். இந்தச் சம்பாஷணை முடிந்ததும் என் மாமனார் தாம் படிக்கும் புத்தகசாலைக்கு அக்கனவானை அழைத்தனர்; ஆங்கில பாஷையில் நிரம்பக் கற்றவராகையால் என் மாமனார் பல்லாயிரம் உயர்ந்த ஆங்கிலப் புத்தகங்கள் தொகுத்துச் செவ்வையாக ஒழுங்குபடுத்தி வைத்திருந்தார். அவற்றைப் பார்ப்பதற்காக அக்கனவான் மாமனாரோடும் புத்தக சாலைக்குச் சென்றார். அவர்தம் மனைவியார்க்கும் எனக்கும் ஆங்கில பாஷை தெரியாதாகையால் நாங்கள் கூடச் செல்லவில்லை. அவ்வம்மை இவ்வீட்டின் மேலும் கீழுமெல்லாம் பார்க்கவேண்டு மென்னும் குறிப்பைப் புலப்படுத்தினதால் யான் அவர்களை அழைத்துக் கொண்டு மெத்தை மேல் உள்ள இடங்களை யெல்லாங் காட்டிப் பின் கீழ்ச் சென்றேன். இந்தவீடு மூன்று கட்டுகளாக அமைக்கப்பட்டிருந்தது. முதற்கட்டு வருவோருடன் பேசுவதற்கும், நடுக்கட்டு வீட்டிலுள்ள ஆண்மக்கள் புழுங்கு வதற்கும் தங்கள் நித்தியகர்மங்களைச் செய்து கொள்வதற்கும், கடைசிக் கட்டுப் பெண்பிள்ளைகள் இருப்பதற்கும் சமையல் முதலியன செய்வதற்கும் உபயோகமாம்படி வசதியாக அமைக்கப் பட்டிருந்தன. ஆங்காங்குள்ள தட்டுமுட்டுகளும் நேர்த்தியாக ஒழுங்கு செய்யப் பட்டிருந்தன. இவற்றையெல்லாம் அப்பெருமாட்டியார் மகிழ்ச்சியோடு பார்த்துக் கொண்டு சமையல்கட்டுவரையில் சென்றார். மூத்தபெண் கைக்குழந்தையைக் கையில் இடுக்கிக் கொண்டு தாயோடு கூடவே வந்தனள். மற்ற மூன்று பிள்ளைகளும் மெத்தைமேலே புத்தகசாலைக்குள் தம் தந்தையாரோடுகூட இருந்தனர். சமையற்கட்டண்டை நாங்கள் வருவதைப் பார்த்ததும், என் மாமியாரும் நாத்துணாரும் புலி பாய்வதைப் போலச் சரேலென்று எங்கள் எதிரேவந்தனர். சிணுங்கின அவர்கள் முகத்தையும் அவர்கள் வந்த விரைவையும்

பார்த்தவுடனே அப்பாரசிக அம்மையார் திடுக்கிட்டு நின்றார். 'இவர்கள் யார்?' என்று கேட்கும்பொருட்டு அவ்வம்மையார் என் முகமாகத் திரும்புதற்குள் என் மாமி கடுகடுத்த முகத்தோடு "நீ யாரம்மா?' இங்கே வருகிறே. உன்னைப்பார்த்தால் துலுக்கச்சி யாட்டமா இருக்கு. இது பிராமணாள் ஆம் என்று நோக்குத் தெரியாதோ? எட்டிநில்" என்று கொடுமையாப் பேசி விட்டுப் பிறகுடனே என்னைப்பார்த்து, "ஏண்டி கெட்டமுண்டே, நோக்குத்தான் துலுக்கச்சி கிறிஸ்துவச்சி பாப்பாத்தி எல்லாம் ஒண்ணாச்சே! இந்தத்துலக்கச்சியை ஏண்டி சமையல்கட்டு வரையில் அழைத்துக்கொண்டுவந்தே! அறிவு கெட்டவளே!' என்று என்னை வைதுபேசினாள். நான் அவ்விருவருக்கும் விடைசொல்ல வாயெடுக்கும் முன்னமே, அப்பாரசிகப் பெருமாட்டியார் என்னை அவள் திட்டுவதைப் பார்த்து மனம் பதைபதைத்து அவளை நோக்கி "ஏன் அம்மா அந்தக் குழந்தையை வீணாகத் திட்டுகிறீர்கள்? நான் துலுக்கச்சி அல்லேன். நாங்கள் பாரசிககாரர், இந்துக்கள் தாம். நான் உங்கள் சமையல் கட்டுக்குள் வரமாட்டேன். அதற்காகப் பயப் படாதீர்கள் சும்மா, வீட்டைப் பார்க்கவந்தேன். கோபித்துக் கொள்ளாதீர்கள்" என்று மிகவும் பொறுமையாக இனியகுரலிற் சொன்னார். அவ்வம்மையின் உருவத்தையும், அவர் சொல்லின அமைதியையும்கண்டு கேட்பவர் மனம் கல்லாயிருந்தாலும் கரையும்; கல்லினும் வல்லென்னும் நெஞ்சம் உள்ள இப்பெண் பேய்களுக்கோ சிறிதும் மனம் இரங்கவில்லை. உடனே அவர்கள் பின்னுங்கடுமையாய் "நீ பார்சிக்காரியாயிருந்தாலென்ன; வேறு யாராயிருந்தால் எங்களுக்கென்ன? நீ இந்த இடத்திற்குள் கால் வைக்கவேகூடாது. அப்பாலேபோ. இங்கேயொன்றும்பேசாதே" என்று உரத்துக் கூவினார்கள். இந்தக்கூச்சல் காதில் விழுந்த தனாலேயாக்கும் உடனே என் மாமனார் மெத்தை மேலிருந்து கீழே எங்களிடம் கடுகிவந்தார். இவரைக்கண்டதும் அப்பேய்களிரண்டும் வாய் பேசாது அப்புறம் ஒழிந்தன. எனக்குண்டான வருத்தத்திற்கோ அளவில்லை; புதிதாக அன்புடன் வந்த அப்பாரசிக அம்மையாரை அவர்கள் அவ்வளவு தாழ்வாகப்பேசியது என் உள்ளத்தில் வாள்இட்டு அறுப்பதுபோலாயிற்று. என் மாமனார் எங்கள் அருகில் வந்ததும் சிறிதுநேரத்தில் நிகழ்ந்தவற்றை யெல்லாம் விரிவாகச் சொன்னேன். இதனைக்கேட்டதும் இந்த நிலவுலகத்தில் தாம் பிறவியெடுத்தது முதல் அடைந்திராத

அத்தனை பெருந்துன்பத்தை அடைந்தார்; இத்துன்பத்தினால் மிகவும் களைப்புடையவராகிக் கீழே உட்கார்ந்து அப்படியே நிலத்தின் மேற் சாய்ந்துவிட்டார். இதனைப்பார்த்தயானும் அப்பாரசிகப் பெருமாட்டியாரும் அளவிறந்த அச்சமும் கவலையும் வருத்தமும் உடையவர்களாகிச் சிறிது மலைத்து நின்றோம்; அதன்பின் ஒருநொடிக்குள் அவ்வம்மையார் என் மாமனாரைத் தூக்கித் தமது மடிமேல் வைத்துக் கொண்டு, என்னை அஞ்ச வேண்டாமென்று தேறுதல் சொல்லி, ஓர் ஏனத்தில் சிறிது குளிர்ந்தநீர் கொண்டுவரும்படிஏவ, யானும் சமையற்கட்டுக்குள் விரைந்தோடி அதனை எடுத்து வந்தேன்; அக்குளிர்ந்தநீரை மாமனார் முகத்தின் மேற்றெளித்து விசிறி கொண்டுவீசிக் களைப்பாற்றிக் கொண்டிருந்தோம். இதற்குள் அவர்களின் மூத்தபெண் எங்கள் மெத்தைமேற்போய்த் தன்றந்தையாரான அப்பாரசிக கனவானை அழைத்து ஓடிவந்தது. அவர் என் மாமனார் களைத்துக்கிடப்பதையும் நாங்கள் காப்பாற்றிக் கொண்டிருப்பதையும் பார்த்துத் திகைப்படைந்து பதறிக்கிட்டவந்து முதலில் அவரது மார்பையும் பிறகு அவரது கையையும் தொட்டுப் பார்த்தார்; பார்த்து நாடி நிரம்பவும் மெதுவாக நடக்கின்றதென்று சொல்லித் தாம் விரைவில் ஒருவைத்தியரை அழைத்துவரப் போனார். பெரும்பாவிகளான என் மாமியாரும் நாத்துணாரும் தங்கணவரும் தந்தையுமாகிய என் மாமனார் இங்ஙனம் அபாயகரமான நிலைமையிற் கிடப்பதைப்பார்த்தும், கிட்ட வந்தார்களில்லை; தூரத்தில் நின்றுகொண்டே, "கிழப்படுவானுக்கு வேணும், அந்தமுண்டைச்சி துலுக்கச்சியை வீட்டுக்குள்ளே அழைத்து வந்ததை நாம் கண்டிக்கையில் இந்தக்கிழப்பயல் அவளுக்காக நம்மைக் கொல்லவந்தானே. துலுக்கச்சி வீட்டுக்குள்ளே வந்ததைப் பொறுக்காமல் நம்ம வீட்டுத் தெய்வம் அவனைக் கீழே அடித்துப் போட்டுவிட்டது. போறான், கிட்டப் போய்த் தூக்கியெடுக்கலாமென்றால் துலுக்கச்சி பக்கத்தில் இருக்கிறாளே" என்று மெதுவான குரலில் என் காதில் விழும்படி பேசினார்கள். இவர்களின் கொடுஞ்செயலும், புதிதுவந்த அவ்வுயர் குணப் பாரசிகமாதர் அவர்களால் இகழப்பட்டதும், அருமையிற் சிறந்த என் மாமனார் சிறிது நேரத்தில் அபாயகரமான நிலையை அடைந்திருப்பதும், அப்பாரசிககனவான் இதனால் வருத்தம் மிக எய்தி வைத்தியரை அழைக்கப்போனதும், அபாயமான

நிலைமையிலுங் கூட அப்பெண் பேய்கள் இரண்டும் வயதில் முதிர்ந்த என் மாமனார் அருகில் வராமல் இரக்கமும் அன்பும் இன்றித் தூரத்தே நின்று கொண்டு இகழ்ந்து பேசுவதும் என்னுள்ளத்திற் புகுந்து, நாற்புறத்தும் வேடர்களால் ஏவப்படும் கூரிய அம்புகள் தைக்க நிலைகலங்கி வருந்தும் மான்கன்றைபோல் யான் பெரிதும் நோவும் படி செய்தன! சற்று நேரத்திற்கு முன் அருமையிற் சிறந்த அப்பாரசிக குடும்பத்தாரை விருந்தேற்று உபசரித்த போது யானடைந்த மகிழ்ச்சியெல்லாம் எங்கேயோ பறந்து போயின! நல்லோருடைய சேர்க்கையால் எவ்வளவு நலங்களை அடைந்தோமாயினும், தீயோர்சேர்க்கையும் உடனிருக்குமாயின் அதனால் அந்நலங் களெல்லாம் சிதறுண்டு போகும் என்றும் அதனால் அளவுபடாத துன்பமே விளையு மென்றும் எண்ணி என் நெஞ்சம் உருகவே என் கண்களில் நீர் துளித்தது; அப்பாரசிக அம்மையார் என்னைக் கண்டு மனம் மிகக்கசிந்தவராகி "அம்மா, சிறிதும் வருந்தாதே. உன் மாமனாருக்கு ஏதும் அபாயமில்லை" என்று தேறுதல் சொல்லி எனது முகத்தைத் தமது பட்டாடையால் துடைத்தனர். இப்படிப்பட்ட பேரிடரான சமயத்திலும் கந்தருவமாதைப் போல் என் பக்கத்தேயிருந்து கொண்டு அன்னையிலும் அருளுடை யராய் எனக்கு ஆறுதல் சொல்லுதற்கும் உரியவர் ஒருவர் இருக்கின்றார் என்பதனை அறியவே என் உள்ளம் ஒருவாறு ஆறுதலெய்திற்று.

இதற்குள் அப்பாரசிககனவான் தக்க ஓர் ஆங்கில வைத்தியரை அழைத்துவந்தார். அவர் வரவே நாங்கள் என் மாமனார் தலையை மெல்லென ஒருதலையணை மேற் சார்த்திவிட்டு, எழுந்து அப்பாற் சிறிது விலகிநின்றோம். உடனே வந்த அவ்வாங்கில கனவான் சுருசுருப்பாகவும் நிதானமாகவும் என் மாமனார் மார்பையும் கை நாடியையும் முதுகையும் கண்களையும் நாவையும் பரிசோதித்துப் பார்த்து ஆங்கிலத்தில் உள்ள நிலைமையைச் சொல்ல அப்பாரசிக கனவான் அதனை தமிழில் மொழிபெயர்த்துச் சொன்னார். அவர் சொன்னதன் கருத்து இது; சடுதியில் உண்டான பெருங் கோபத்தினாலும் துயரத்தனாலும் விளைந்த மன அதிர்ச்சியினால் இந்தக்களைப்பு நேர்ந்திருக்கிறது. இளம்பருவம் உள்ளவர்க்காயின் ஈது இவ்வளவு களைப்பினை வருவித்திராது. முதிர்ந்த வயதினாரா யிருப்பதால்

இவ்வளவு ஆயாசம். இதனால் இப்போதொன்றும் அபாய மில்லை. இன்னும் இரண்டு மணி நேரத்தில் குணம் அடைந்து விழிப்பார். ஆனாலும், இவ்வதிர்ச்சியினால் உண்டான நோய் தீர இன்னும் ஒருமாதம் ஆகும். இவருடைய இரத்தத்தைப் பரிசோதித்து முடிவு தெரிவிக்கிறேனென்று சொல்லிக் கையில் ஓர் ஊசியைக்குத்தி அங்குவந்த ஒரு துளியிரத்தத்தை இரண்டு கண்ணாடித் துண்டுகளின் இடையே வைத்துக்கொண்டு போகும் பொழுது ஒரு சீட்டில் சில மருந்துகளைக்குறித்து அவற்றை வாங்கிக் கொடுக்கும்படி கற்பித்துத் தாம் மறுநாட்காலையில் திரும்ப வந்து பார்ப்பதாக மொழிந்து போனார்.

அவ்வாங்கிலவைத்தியர் போனதும் அப்பாரசிககனவான் தெரிவித்தபடி தாழ்வாரத்தின் பக்கத்திலிருந்த ஓர் அறையில் கட்டில் இட்டு அதன்மேற் படுக்கைவிரித்துச் சித்தஞ்செய்ய வேண்டியவர்களானோம். இதற்குள் அப்பாரசிககனவான் தமது வண்டிக்காரனைக் கூப்பிட்டு அவன் கையில் அந்தச்சீட்டையும் தமது பணத்தையுங் கொடுத்து மருந்து வாங்கி வரும்படி ஓர் ஆங்கிலமருந்துக்கடைக்கு அவனை அனுப்பினார். இதற்குள் மாலையில் மணி ஆறாயிற்று. வெளியேபோயிருந்த என் மைத்துனன் இராமசாமி அப்போதுதான் வீட்டுக்குள் வந்தான். இவன் கொஞ்சம் தலையரட்டையுடையவன் ஆகையால், இவனிடத்தில் யான் நெருங்குவதுமில்லை, மிகுதியாய்ப் பேசுவது மில்லை. ஆனால் தன் தந்தையினிடத்திற் பிரியமும் அச்சமும் உள்ளவன்; தன்னின் மேலோராயிருப்பவர்க்கு மட்டும் அச்சத்தினால் மரியாதை செய்பவன். இவன் இரண்டாங் கட்டுக்குள் வந்ததும், தன் தந்தையார் கீழே களைத்துக்கிடக்க நாங்கள் எல்லாரும் அவர் பக்கத்தே பரபரப்பாயிருக்கப் பார்த்தான். கம்பீரமான தோற்றம் உள்ள அப்பாரசிக கனவானையும் தேவமாதரைப் போன்ற அவர்தம் மனைவி யாரையும் பார்த்ததும் அச்சமும் பணிவும் அடைந்தவனாகி உடனே அவர்களுக்கு வணக்கவுரை கூறினான். அவன் கூறிய வணக்கவுரைகளை ஏற்றுக் கொண்டு அவ்விருவரும் அவனுக்கு நல்லுரைசொன்னாராயினும், அவனது தோற்றத்தைக் கண்டு அவன் மேற்சிறிது அருவருப்புங் கொள்ளலானார் என்பதை அவர்கள் முகக் குறிப்பினால் கண்டு கொண்டேன். அவன் மரியாதையுடையவன் போல ஒடுக்கத் தோடும் என்பக்கத்தே

வந்து "கோகிலா, அப்பா ஏன் இப்படிப் படுத்திருக்கிறார்கள்? நீ ஏன் விசனமான முகத்தோடும் இருக்கிறாய்? இந்தப்பாரசிக கனவான் யார்?" என்று வினாவினான். உடனே யான் அப்பாரசிக குடும்பத்தாரையும் அங்கு நிகழ்ந்தவற்றையும் பற்றிச் சுருக்கமாய்ச் சொன்னேன். இதைக் கேட்டு அவன் சிறிது மனக் கலக்கமும் அவமானமும் அடைந்தவனாகி முதலில் தன் உறவும் அக்காளும் செய்த குற்றத்தை மன்னிக்கும்படி அப்பாரசிகப் பெருமாட்டி யாரையும் அவர்கணவரையும் வேண்டிக் கொண்டான்; அவர்கள் தாம் அதனைக்குற்றமாகவே நினைக்கவில்லையென்றும் உயர் குணத்தினும் நுட்பஅறிவினும் அன்பினும் சிறந்தவரான அப்பெரியவர் தங்கள் பொருட்டு அத்தனை அபாயகரமான நிலைமையை அடையலானதுதான் தமக்குப் பெருந்துயர மாயிருப்பதென்றும் தெரிவித்து, விரைவிற் படுக்கை சித்தஞ் செய்யும்படி அவனுக்கு வற்புறுத்திச் சொன்னார்கள். மந்த புத்தியுடை வனாகையால் அது செய்வதைவிடுத்துச் சமையற் கட்டிற்குட் போய்த் தன்றாயுடனும் அக்காளுடனும் சண்டையிட லானான்; அப்பெண்பேய்கள் இரண்டும் இவனுக்குச் சிறிதும் அடங்கினவர்கள் அல்லர்; மேலும், இவனுடைய குணமுஞ் செய்கையும் அவ்வளவு நல்லன அல்லவாதலால் இவனிடத்தில் அவர்களுக்குச் சிறிதும் மதிப்பில்லை. இவன் உள்ளே சென்று கோபமாய்ப் பேசவே இவன்தாய் விளக்குமாற்றை எடுத்துக் கொண்டு இவனைச் சாடத்துவங்கினாள் என்று சில குறிப்பு களினால் வெளியே தெரிந்து கொண்டேன். இப்பாரசிக குடும்பத்தார்க்கு உள்ளே நடக்கும் இந்தச் சச்சரவு தெரிந்தால் மிகவும் தாழ்வாக அவர்கள் எல்லாரையும் நினைக்க இடந்தரும் என்று நினைத்து, யான் உள்ளேசென்று, "இராமசாமி, பார்க்கிறவர்களுக்கு மிகவும் பந்தக்கேடாக இப்படியெல்லாம் நடப்பதற்கு இதுதானா சமயம்? உன் தகப்பனார் உயிர் போனாற்போற் கிடக்கிறார்; அவருக்குப் படுக்கை சித்தப் படுத்துவோம் வா" என்று அழைத்தேன். அவன் என் சொற்களைக் கவனியாதவனாய் அங்கே ஒரு மூலையிலிருந்த ஒரு தடிக்கம்பை எடுத்து, "இந்தச் சிறுக்கிகளை இந்தத் தடியால் அடித்துக் கால் கையை முறிக்கிறேன்பார்; என் அப்பா மாத்திரம் சாகட்டும், இந்தப் பெட்டைக் கழுதைகளை மண்ணுக்குப் போட்டு விடுகிறேன்பார்" என்று வீம்பு பேசுகையில் இவன் அக்காள் இவன்மேற் புலிபோற் பாய்ந்து இவன் கையிலிருந்த தடிக்கம்பைப்

பிடுங்கி அப்பால் எறிந்துவிட்டு, இவனது தலைமயிரைப் பிடித்துச் சிம்பி முதுகைப்பிடித்து வெளியே தள்ளிச் சமையலறைக் கதவைச் சாத்தி உள்ளே தாழிட்டுக்கொண்டாள். இதனைப் பார்த்துப் புன்சிரிப்பும் வருத்தமும் கொள்ளப் பெற்றேன். கையாலாகாமல் வெளியே தள்ளுண்டு தலைகுனிந்து நின்ற என்மைத்துனனைப் பார்த்து, "இனி அவர்களோடு நீ பேசுவதிற்பயனில்லை, உன் தந்தையாரைக் கவனிக்க வேண்டுவது தான் உன் கடமை. மேலும், நம் இல்லத்திற்கு விருந்தினராய் வந்த அக்கனவானும் அவர் குடும்பத்தாரும் நமக்காக மிகவும் வருத்தப்பட்டுக் கொண்டு தம் வீட்டிற்கும் போகாமல் இருக்கிறார்கள். அவர்கள் சொன்னபடி செய்வோம் வா" என்று சொல்லி அவனை அமைதிப்படுத்தி அழைத்தேன்; அந்தப் பட்டிகளை அடக்கத் தன்னாற் சிறிதும் ஆகாதென்று தெரிந்த பிறகு என் சொல்லுக்கு இணங்கி, அவன் இப்பால்வந்து, மெத்தைமேற் போய் மடக்குக்கட்டிலை எடுத்து வந்து விரித்து, அதன்மேல் மெல்லிய பஞ்சுமெத்தையிட்டான். ஏனென்றால் எங்கள் மாமனார் வீட்டில் வண்டியோட்டுங் குதிரைக்காரனைத் தவிர வேறு வேலைக்காரர் இல்லை.

அதன்பின் அப்பாரசிக குடும்பத்தாரும் யாங்களுமாக என் மாமனாரை மெல்லெனத் தூக்கிக் கட்டிலில் அம்மெல்லணை மேற் கிடத்தினோம். அதன்பின் அப்பாரசிககுடும்பத்தார் அமருவதற்கு நாற்காலிகள் கொண்டுவந்து கட்டிலின் பக்கத்தே இடப்பட்டன. அவர்கள் அவைகளின்மேல் அமரும்படி எங்களாற் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். வீடெங்கும் பளிங்கு விளக்குகள் ஏற்றப் பட்டன. மணி ஏழடித்தது, மருந்துவாங்கச் சென்ற வண்டிக்காரன் கையில் மருந்து நிரப்பியபுட்டியோடும் திரும்பி வந்தான். உடனே அதனை அப்பாரசிக கனவான் வாங்கி அளவுப் படி ஒரு சிறுபளிங்கு ஏனத்தில் அம்மருந்திற் சிறிது ஊற்றி என் மாமனார் வாயைத் திறப்பித்து அதனை உட்செலுத்தினார். அப்போதும் என் மாமனார் உணர்வற்று இருந்தார். எல்லாருங் கவலையோடு அவரை உற்றுப் பார்த்தபடியே இருந்தோம். மணி ஏழரை அடித்தது. என் மாமனார் கண் இறைப்பைக்குள் கண்மணி அசைவது போற் காணப்பட்டது. யாங்கள் பின்னும் ஆவலோடு அவரைக் குனிந்து பார்த்தோம். பின்னர்ச் சிலநிமிஷங் களிலெல்லாம் அரைவாசி கண்ணைத் திறந்து பிறகு முற்றுந் திறந்தார். சென்றவுயிர் மீண்டும் வந்ததென்று களிப்புற்றோம்.

கண்ணைத் திறந்து என்னைப் பார்த்த மாமனார் ஏதேனும் தாகத்திற்குத் தரும்படி கைக்குறி காட்டினார். முன்னமே பால்விட்டு நீர்க்கக் காய்ச்சியிருந்த வாற்கோதுமைக்கஞ்சியைக் கொண்டு வந்துயானும் என் மைத்துனனுமாக ஊட்டினோம். அதனைப் பருகியதும் சிறிதுநேரம் கண்ணைமூடிக் கொண்டிருந்த தனால், இன்னுங் களைப்புத்தீரவில்லையென்று உணர்ந்தோம். பிறகு எட்டு மணி அடித்தது. மாமனார் இப்போது நன்றாகக் கண்ணை விழித்துத் தன் மகனைப் பார்த்துத் தான் சாய்ந்து கொண்டிருக்க வேண்டுமென்று மெல்லெனச் சொன்னார். உடனே, மெல்லிய திண்டு ஒன்றை முதுகின் புறத்தே வைத்து அவரை மெதுவாகப் பிடித்துச் சாய்ந்திருக்கவைத்தான். இப்போதவர்க்கு முற்றும் நல்லுணர்வு வந்தது. ஆனாற் பேசுவது மெதுவாகவும் பிராயசையோடு கூடியதாகவும் இருந்தது. அப்பாரசிககனவானையும் அவர் மனைவியாரையும் நிரம்பத் தம்மருகே வரும்படி மிக்க வேண்டுதலோடும் சைகை பண்ணினார். அவர்கள் அங்ஙனமே மகிழ்ந்து கிட்டவர, அவ்வம்மையார் கைகளையெடுத்துத் தம் கண்களில் ஒற்றிக் கொண்டும், அக்கனவான்கைகளையெடுத்துச் தம்மிருகரங்களின் இடையில் வைத்துக் கொண்டும் மெலிந்த குரலிற் சொல்லுவார், “தங்கள் அன்பார்ந்த வருகையினால் நான் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையில்லை-ஆனாலும் அம்மகிழ்ச்சியால் உண்டான இன்பத்தை என் வீட்டிலிருந்து ஆடும் இரண்டு பெண் பேய்கள் கெடுத்தன. சரஸ்வதியையும் லக்ஷ்மியையும் போல் விளங்கா நின்ற இந்த அம்மையாரைக் குறைவாகப்பேசிய சொற்கள் என் உயிரைக் கொண்டு போகும் - எமனாகவே இருக்கின்றன. அப்பேய்கள் செய்த கொடுமையைத் தாங்கள் இருவரும் பொறுத்துக் கொள்ள வேண்டும். இனி நான் நெடுநாளைக்கு உயிரோடு இரேன். அதுவரையில் நீங்கள் என்னை வந்து பார்த்து உங்கள் முகதரிசனத்தை எனக்குக் காட்டும்படி வேண்டிக் கொள்கிறேன்” என்று விட்டு விட்டுப் பிராயாசையோடு சொல்லி அவர்கள் குழந்தைகளை அருகே அழைத்து முத்தம் வைத்துக் கொண்டார். மாமனார் பின்னே சொல்லிய சொற்களும் அவரது அன்பும் எங்கள் எல்லார் உள்ளங்களையும் நீராய் உருக்கின. அப்பாரசிக அம்மையார் முகத்தை மூடிக்கொண்டு தேம்பித் தேம்பி அழுதார்; அக்கனவான் கைக்குட்டையை எடுத்து அடிக்கடி தம் கண்களைத் துடைத்தார். எனக்குண்டான

ஆற்றாமையால் யான் ஏதும் பேசக்கூடவில்லை, என் கன்னங்களின் மேல் கண்ணீர் ஓயாமல் வடிந்தது. என்மைத்துனன் பெரிதும் மனங்கலங்கி நின்றான். குழந்தைகள் எல்லாம் எங்களைப்பார்த்தபடியே கண் கலங்கி நின்றன. இந்த நிலைமையிற் கால் மணிநேரம் வரையில் நாங்கள் ஏதும் பேசாமல் நின்றோம். பின் அந்தப் பாரசிககனவான் ஒருவாறு மனத்தைத் தேற்றிக் கொண்டு மாமனாரை நோக்கிப் "பெரியப்பா, உங்க வீட்டுக்கார அம்மாவும் மகளும் எங்களெத் தாள்வாப்பேசினது எங்களிக்கிக் கொஞ்சமும் விசனமில்லெ. தயவு செய்து அதெ நீங்கோ மனசிலே வைக்கவேணாம்; உங்களிக்கி அதிசீக்கிரத்தில் சௌக்கியம் உண்டாகும். இப்போ எங்களிக்கிச் செலவு கொடுக்க. நாளெக்கி அதிகாலையில் நான் வைத்யரோட வாறேன்" என்றார். அந்த அம்மையாரும் அடிக்கடி தாம் வந்து பார்ப்பதாகவும், தமக்காகச் சிறிதும் வருத்தப்படாமல் இப்போது நடந்ததை முற்றும் மறந்து அமைதியாக இருக்கு மாறும் வேண்டிக் கொண்டார். பின்னர் அந்த அம்மையார் அப்புறமாக என்னை அழைத்து அப்பெண் பிள்ளைகள் ஏது சொல்லி வைதாலும் அதற்கொன்றும் சொல்ல வேண்டாம் என்றும், மாமனாரை எந்நேரமும் கவனமாய்ப் பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும், தாம் நாளைப் பிற்பகலில் வருவது நிச்சயமென்றும் எதற்கும் மனசஞ்சலப்பட வேண்டாம் என்றும் சொல்லி மிகுந்த அன்போடும் என்னைப் பலகாற் கட்டி முத்தமிட்டு எல்லாருமாய்த் தெருவாயிலுக்குப் போக யானுங்கூடவே சென்று அந்த அம்மையாரிடம் அவர்கள் விலாசத்தில் எனக்குக் கடிதம் வந்தால் அதனை என்னிடம் சேர்ப்பிக்கும்படி அவர்களைக் கேட்டுக் கொண்டேன். அதற்கு அவர்கள் அப்படியே இணங்கினார்கள். குழந்தைகளையெல்லாம் முத்தமிட்டு வண்டியிலேற்றினேன். இந்தக் கடிதத்தோடு வைத்திருக்கும் சிறுதுண்டிற் கண்ட விலாசப்படி எனக்கு உடனே கடிதம் எழுதுங்கள். மற்றவை யெல்லாம் பின்னர் எழுதுகின்றேன். வந்தனம்.

## கடிதம் - 8

*என் ஆருயிரிற் சிறந்த அண்ணலே,*

*சென்ற பத்துநாளாகத் தங்களிடமிருந்து கடிதம் வரும் வருமென்று எதிர்பார்த்தபடி வராததை எண்ணியும், தாங்கள் சிகந்தராபாக்கம் போய்விட்டீர்கள் என்ற செய்தியை இடையிற் கேட்டும், தங்களுக்கு முன்னே நான் எழுதிய ஒரு கடிதம் தங்கள் பாற் கொடுக்கப்படாமல் என் வீட்டாரிடத்துக் கொடுக்கப் பட்டமையே தாங்கள் சென்னையிலிருந்து சிகந்தராபாக்கத் திற்குப் போகக் காரணம் ஆயிற்று என்பதைத் தெரிந்தும், இனித் தங்களுக்குக் கடிதம் எழுதவும் தங்கள் திருமுகத்தை யான் காணவும் நேராது போய்விடுமோ என நினைந்தும் யான் ஏங்கிய ஏக்கம் எல்லாம் இன்று வந்த தங்கள் அன்புள்ள கடிதத்தைப் பார்த்து நீங்கப் பெற்றேன். இக்கடிதத்தைக் கண்டவுடன் தங்களைக் கண்டாற் போலவே என் உள்ளங் குளிர்ந்தது; அதனால் அதனைத் தாங்களாகவே பாவித்து முத்தம் வைத்தேன். என் பெருமானே, யான் இடையிற் கேட்டவை அனைத்தும் தாங்கள் இப்போது எழுதியிருக்கும் செய்திகளோடு ஒத்திருக் கின்றன. இங்கே சென்ற பத்துநாளாக நடந்தவைகளையெல்லாம் வரைகின்றேன்.*

*இந்தப் பத்துநாளாக யான் அடைந்த மனக்கலக்கமும் துன்பமும் இந்தப்பிறவிக்கும் இனிவரும் பிறவிக்கும் போதும். அன்பினும் அருமையினுஞ் சிறந்த என் மாமனார் நோயாய்க் கிடப்பதனால் எனக்குண்டான மனத்துயரத்திற்கோ அளவில்லை; அதனோடு இங்கு நடந்தவைகளும் தாங்கள் சென்னையை விட்டுப் போய்விட்ட செய்தியும் சேர்ந்து என்னை நீராய் உருக்கின. என் மாமனார் இன்னும் படுக்கையிலேதான் இருக்கிறார்; வந்து பார்க்கும் வைத்தியர்கள் அவர் பிழைத்து எழுந்திருப்பார் என்று உறுதியாகச் சொல்லவில்லை. அந்தப் பாரசிக கனவானும் அவர் மனைவியாரும் நாடோறும்வந்து பார்த்துப் போகிறார்கள்.*

இவர்களை ஒவ்வொரு நாளுங் காணக் கிடைத்திருப்பதுதான் என் மனத்திற்குப் பெரியதோர் ஆறுதலாயிருக்கின்றது. அது நிற்க.

என் மாமனார் நோயாய்விழுந்த செய்தியை மறுநாள் என் மைத்துனனால் அறிந்த என் பெற்றோர்களும் என் தமையனும் அன்று சாய்ங்காலம் அவரைக்காண இங்கே வந்தார்கள்; அவர்களோடு என் தங்கை தனலட்சுமியும் கூடவந்தாள். என் தங்கையை இங்கே அனுப்பிவைக்கும்படி என் பெற்றோர்க்கு இதற்குமுன் இரண்டு மூன்றுமுறை எழுதியும் அவர்கள் அவளை அனுப்பாதது எனக்குப் பெருவருத்தமாயிருந்தது. ஆகவே அவள் அன்றைக்கு வந்ததைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்தேன். ஆனால், என் தங்கையோ என்னிடத்தில் நிறைந்த அன்புடையவளாயிருந்தும், ஏதோ குற்றஞ் செய்தவளைப் போல் என்னிடம் அணுக அஞ்சினவளாய் அங்கும் இங்குமாய்ப் போய்க் கொண்டிருந்தாள். இவள் இப்படி இருப்பதைப்பார்த்து எனக்கு மனம் ஒரு வகையான குழப்பமாயிருந்தது. என் பெற்றோரும் தமையனும் மாமனார் பக்கத்திற் சூழ்ந்து பேசிக்கொண்டிருக்கையில், யான் என் தங்கையைப் பிடித்து அணைத்து முத்தமிட்டுக் "குழந்தாய், நீ ஏன் என்னோடு எப்போதும் போலக் கலகலவென்று பேசாமல் விலகிப் போகிறாய்?" என்று கேட்டேன். அதற்கு அவள், "ஒன்றுமில்லை, அக்கா" என்று சொல்லித் தலையைக் குனிந்துகொண்டாள். "அருமை கண்மணி, நீ உண்மையைச் சொல்லாமல் மறைக்கின்றாய். ஏதோ உன் மனத்தில் இருக்கிறது. அதை நீ சொல்லா விட்டால் மனம் எனக்கு மிகவுங் கலக்கமாய் இருக்கும்" என்றேன். "நீ மட்டும் எனக்கு உண்மையைச் சொன்னாயா?" என்று யான் திடுக்கிடும்படி மெல்லெனச் சொன்னாள். உம்மைப் பற்றிய உண்மையைத் தவிர வேறொன்றையும் யான் அவளுக்கு மறைத்த தில்லாமையால் இவள் இதை எப்படியோ தெரிந்து கேட்கிறாள் என்று நாணமும் அச்சமும் அடைந்து "குழந்தாய், நான் எதனை உனக்கு மறைத்தேன்?" என்று கேட்டேன். அதற்கவள், "அம்மா அப்பா எல்லாம் அதோகிட்டேயிருக்கிறார்கள். நீ தனியாக வந்தால் சொல்லுகிறேன்" என்றாள். உடனே ஒருகாரியமாய்ப் போவது போல் அவளையும் அழைத்துக்கொண்டு மெத்தைமேல் உள்ள எனது அறைக்குட்சென்றேன். சென்று, அங்கிருந்த சார்மணைக் கட்டில் ஒன்றின்மேல் அவளும் நானும் உட்கார்ந்து "குழந்தாய் இப்போது நீ சொல்ல வேண்டுவதைச் சொல்" என்றேன்.

"அக்கா, இரண்டு வாரத்திற்கு முந்தி நம்ம வீட்டுத் திண்ணை மேல் உச்சிப்போதில் விளையாடிக் கொண்டிருந்தேன். அப்போது தபால்காரன் காகிதம் ஒன்றை என்கையிற் கொடுத்து 'இதை வீட்டுக்குள்ளே கொடுத்துவிடு" என்று சொல்லிப் போனான். அந்தக் காகித உறைமேல் எழுதியிருந்த மேல் விலாசம் உன் கையெழுத்தாய் இருந்தது; விலாசத்தைப் படித்துப் பார்க்காமல் அப்பா அண்ணாவுக்குத்தான் நீ எழுதினையாக்கு மென்று உள்ளே ஓடி அப்பாகையில் கொடுத்தேன்" என்று அவள் சொல்லுகையில் யான் உடல் நடுங்கித் திகில் கொண்டு,

"என்ன அதை அப்பாகையிலா கொடுத்தாய்? அவர் அதனைப் பிரித்துப் படித்துப்பார்த்தாரா? சுருக்கச்சொல்" என்று கேட்டேன்.

"ஐயோ, நான் மேல்விலாசத்தைப் படித்துப் பார்க்காமல் அதனை அப்பாவிடம் கொடுத்து உனக்குப் பெரும்பிழை செய்து விட்டேன். அப்பா அந்தக் காகிதத்தின் மேல் விலாசத்தைப் பார்த்து இதென்னடி! நம்ம கோகிலா பக்கத்தாத்துத் தெய்வ நாயகம் பேருக்குக் காகிதம் எழுதியிருக்கிறாளே! என்று ஆச்சரியத்தோடும் கோபத்தோடும் சொல்லிக்கொண்டே காகிதத்தைப் பிரித்துப் பார்த்தார். படிக்கும்போது அவர் முகத்தில் உள்ள களை மாறிக் கோபம் உண்டானதைத் தெரிந்து ரொம்பவும் பயமடைந்தேன். உனக்கு நான் பெருந் தப்பிதம் செய்துவிட்டேன் என்று எண்ணினேன்; தெய்வநாயகத்தின் பேரைச் சொன்னாலும் என்னைக் கண்டிக்கும் நம்ம அம்மாவும் அப்பாவும் இப்போது உன்னை என்ன செய்வார்களோ என்று எண்ணி ரொம்பவும் விசனப் பட்டேன்" என்று அவள் சொல்லுகையில்,

"நல்லது, கண்மணி, கடந்துபோன காரியத்திற்காக நீ விசனப் பட்டுப் பயன் இல்லை. அந்தக் காகிதத்தைப் படித்தபிறகு அப்பா என்ன செய்தார்? அதைச்சொல்" என்று வினவினேன்.

"அவர் ஏதும் பேசாமல் சமையல்கட்டுக்குள் போய் அம்மாவண்டை குசுகுசுவென்று என்னென்னமோ சொன்னார்; அப்போது அவாள் பேசிக்கொண்டது இன்னதென்று எனக்குத் தெரியாது" என்று சொல்லியதும்,

"அவ்வளவுதானா உனக்குத் தெரியும்? அதன்பின் ஒன்றும் நடக்கவில்லையா? நம் அண்ணா சுப்பிரமணியனுக்கு இது தெரியுமா அவன் ஏதாவது சொன்னானா?" என்று கேட்டேன்.

"இன்னுங்கொஞ்சம் எனக்குத் தெரியும். அன்றைக்கி ராத்திரி பத்துமணி வரையில் அவாள் ஒன்றும் பேசவில்லை. நான் சாப்பிட்டுவிட்டு எட்டுமணிக்கெல்லாம் படுத்துக் கொண்டேன். கொஞ்சநேரம் நன்னாத் தூங்கிவிட்டேன். பிறகு அம்மா அப்பா அண்ணா எல்லாரும் மெதுவாகப் பேசுகிறசத்தங் கேட்டு விழித்துக் கொண்டேன். உன்னைப்பற்றியும் தெய்வ நாயகத்தைப் பற்றியும் அவாள் பேசுவதைக் கேட்டுத் தூங்குவது போல் இருந்து உற்றுக் கேட்டேன். அப்போது அப்பா இதுக்குத்தான் பெண் பிள்ளையைப் படிக்க வைக்கக்கூடாது என்று தலையிலடித்துக் கொண்டேன் என்று சொன்னார். அதற்கு நம்ம அண்ணா பெண்பிள்ளைகளைப் படிக்க வைப்பதில் தப்பு ஒன்றும் இல்லை; பெண்களைப் பெற்றவர்கள் செய்யும் ஏற்பாட்டிலேதான் தப்பு உண்டு' என்று சொன்னான். அப்படி யானால் நாம் என்னதப்பான ஏற்பாடு செய்து விட்டோம்?" என்று அப்பா கேட்டார். நம் கோகிலா பால்குடித்த பல்கூட விழாத ஏழுவயதுக் குழந்தையாய் இருக்கையில் அவளை நாற்பத்தைந்து வயதுள்ள நோயாளிக்கு மூன்றாந் தாரமாகக் கட்டிக் கொடுத்தியே; அந்த ஏற்பாடுதான் பிசகு என்று அண்ணா சொன்னான். 'போடா போ, இதெல்லாம் நம்ம செயலா? அல்லது நீயாவது மாதம் ஒன்றுக்கு முந்நூறு நானூறு சம்பாதிக்கிறியா? இங்கிலிஷிலே பி.ஏ. பரிட்சை தேறினே; தமிழிலே படிபடி என்று படிச்சுக்கிழிச்சே, மாசமெல்லாம் உத்தியோகஞ் செய்து இருவது ரூபா கொண்டு வருகிறே. கோகிலாவைக்கட்ட நாலாயிர ரூபா தொகுப்பாக் கொடுத்தார்கள். அந்தப் பணத்தைக் கொண்டுதான் உன்னைப் படிக்க வைத்தேன். இப்போ நீ என்ன கொழிக்கிறே' என்று அப்பா ஆத்திரத்தோடு பேசினார்.

"அதற்கு நம்ம அண்ணா 'உனக்குப் பணம் பணம் என்று பணந்தான் பெரிதாய் இருக்கிறது. கோகிலாவைக் கொலை செய்வது போல் விற்று நீ வாங்கின நாலாயிரரூபாவும் நிலையாய் நின்றதா? நீயே பலவகையில் அப்பணத்தை வீண்செலவு செய்து விட்டது எனக்குத் தெரியாதா? யான் பச்சையப்பன் பள்ளிக்

கூடத்தில் தருமச் சம்பளத்தில் படித்துப் பி.ஏ. பரீட்சையில் தேறியிருக்க, நீ எதோ எனக்கு அதைச் செலவு செய்துவிட்டதாகப் பொய் பெருமை பாராட்டுகிறாயே; நான் அறிவுக்காகப் படித்தேனேயல்லாமல் பணத்திற்காகப் படிக்கவில்லை. என் படிப்பின் அளவுக்குத் தக்கபடி பணம் தானாகவே மேன்மேல் மிகுதியாக வரும். செட்டாய்ச் செலவு செய்தால் எனது சம்பளமும் நமது பிதிரார்ச்சித வரும்படியும் நம் குடும்பத்திற்கும் இன்னுமொரு குடும்பத்திற்கும் நன்றாய்ப்போதும். உன்னைப் போல் வீண்செலவு செய்தால் இதுவும் போதாது. இதைப்போல் இன்னும் பத்துமடங்கு வந்தாலும் போதாது. அதனாலேதான் நீ பணமோ பணமோ என்று அலைகிறாய். அதெல்லாம் இருக்கட்டும். நம் கோகிலாவை நீயே காசுக்காக விற்றுவிட்டு, இப்போது அப்படி நடந்ததெல்லாம் விதியென்கின்றாய். அதெல்லாம் விதியானால் இப்போது அவளும் பக்கத்து ஆம்பள தெய்வ நாயகமும் அன்பு பாராட்டி வருவதும் விதியென்று இருக்கிறது தானே; அதைவிட்டு அவர்கள் இருவரையும் கருவறுக்கிறேன் என்று நீ கறுவம் கட்டுகிறது ஏதுக்கு, என்றான். அவன் சொற்களைக் கேட்ட அப்பா ரொம்பவும் கோபம் அடைந்து கையைத் தரைமேல் அடித்துப் பயலே, தகப்பன் மகன் என்கிற மட்டு மரியாதைகூட இல்லாமல் நான் சொல்லுகிறதை மறுத்துப் பேசுறாயா? உன் எழவுக்குப் பட்டபாடெல்லாம் விழலுக் கிறைத்த நீராயிற்றே இங்கிலீஸ் படித்த கொழுப்பா உன்னை இவ்வளவு தூரம் பேசச் சொல்றது. கோகிலாவை நீயே அவனுக்குக் கூட்டிக் கொடுப்பாய்போல் இருக்கிறதே' என்று சொல்லிக் காறித்துப்பினார். நம்ம அண்ணாவோ அப்பா கோபத்தைப் பார்த்துப் பயப்படாமல் சாந்தமாகவே, 'ஏன் வீணாய்க் கோபிக்கிறாய்? நான் ஒன்றும் அவமரியாதையாகப் பேசிவிட வில்லை. நான் இங்கிலீஷ் படித்ததனாலேதான் நியாயமாகப் பேசுகிறேன். நீயோ நியாயமின்றிக் கோபம் அடைகிறாய். நியாயம் பேசுகிறபோது அப்பன் மகன் என்கிற உறவில்லை; உண்மை எதுவோ அதைத்தான் சொல்லவேண்டும்; கோகிலாவுக்காக நான் பரிந்து உண்மையைச்சொல்ல, நீ கூட்டிக்கொடுப்பாய்போலி விருக்கிறதே என்று தகாத வார்த்தையைச் சொன்னாய். நீ செய்ததைப் போலவும் நம்மவர் களிற் சிலர் செய்வதைப் போலவும் அப்படியொன்றும் நான் செய்யத் துணியேன். குழந்தைப்பருவம் முதற்கொண்டே

*கோகிலாவும் தெய்வநாயகமும் மிகவும் நெருங்கிப் பழகினவர்கள்; பத்து வயது வரையில் ஒரே பள்ளிக்கூடத்திற் படித்தவர்கள் கோகிலா பருவம் ஆகும் வரையில் அவனும் அவளும் மிகவும் நேசமாயிருக்கும்படி விட்டு விட்டோம். அவர்கள் இருவரும் அழகிலும் குணத்திலும் கல்வியிலும் ஏறக்குறைய ஒத்தவர் களாயிருத்தலால் அவர்கள் ஒருவர் மேல் ஒருவர் மிகுந்த அன்பு பாராட்டலானது சகஜந்தானே. அவளுக்குத் தக்க கணவன் வாய்ந்திருந்தாலும், அல்லது ஏறக்குறைய உன் வயதுள்ள அவள் கணவன் உயிரோடிருந்தாலும் அவள் தெய்வ நாயகத்தைப் பற்றி நினைக்க இடமிருந்திராது என்று சொல்லலாம். கணவன் முகத்தைக் கூடப் பாராமல் ஐயோ எட்டு வயதிலேயே தாலியறுத்த கோகிலா தன்னால் மிகுந்த அன்போடு நேசிக்கப்பட்ட தெய்வ நாயகத்தினிடம் மேலும் மேலும் அன்புடையள் ஆனது குற்றமாகப் பழிக்கத் தகுந்ததா!" என்று சொன்னான். அது வரையில் பேசாமல் இருந்த நம்ம அம்மா அண்ணா சுப்பிர மணியனைப் பார்த்து, 'ஆமா, நீ சொல்றது சரிதான். நாமளோ பார்ப்பாரச் சாதி, அடுத்த ஆத்துத் தெய்வநாயகமோ சூத்திரச் சாதி, இதையாவது நினைக்க வேணாமா? மேலும் தான் விதந்துவாயிருப்பதையேனும் நினைத்துப் பார்க்க வேணாமா? கோகிலா என்ன சிறுகுழந்தையா, புத்தியறிந்தவளாச்சே, நல்ல படிப்பாளியாச்சே நம்ம குடும்பத்திற்கு எவ்வளவு அவமானம். இதையெல்லாம் நினைத்துப் பார்க்காமல், தான் சுகமாயிருக் கிறதைத்தானே நினைத்தாள்!' என்று சொன்னாள். அதற்கு நம்ம அண்ணா 'அம்மா, நீ கூடத் தெரியாமல் பேசுகிறாய். நான் நம் கோகிலாமேல் எள்ளளவு கூடக் குற்றம் சொல்ல மாட்டேன். சமவயசும் அழகும் சமமான நற்குணமும் இளமையும் கல்வியும் வாய்ந்த ஸ்திரீ புருஷாள் ஒருவரையொருவர் காணும்படி நேருமானால் கண்ட அந்த க்ஷணமே அவர்கள் தம்மை அறியாமல் தமக்குள் ஒரு தெய்வீகமான அன்பு உண்டாகப் பெறுவார்கள்; அந்த அன்பு பிறகு எந்தக் காரணத்தை யுள்ளிட்டும் எக்காலத்தும் மாறவே மாட்டாது; அவர்கள் இருவர் உயிரும் ஓர் உயிராய்ப் போகும். அப்படிப்பட்ட உயர்ந்த அன்புக்குமுன் சாதிக் கட்டுப்பாடு சமயக் கட்டுப்பாடு குடும்பக் கட்டுப்பாடு முதலான எவையும் எதிர் நிற்கமாட்டா. அப்படிப் பட்ட உயர்ந்த அன்பின் வசப்பட்டவர் களைச் சுயகாரியம் பார்ப்பவர்களென்று சொல்லவே கூடாது. பெற்றோர் சுற்றத்தார்*

கட்டி வைக்குங் கட்டுப்பாட்டுக்கு அடங்கித் தன் கணவன்மேல் பிரியம் வைக்கும் சாதாரண ஸ்திரீகளின் நடவடிக்கைக்கு நம் கோகிலாவைப் பலிகொடுத்து விடக்கூடாது. அவளுடைய விசேஷத்தை நான் நன்றாய் அறிவேன். மழை பெய்தால் நீர் நிறைந்து வற்றிப்போகும் ஊறாக் கிணற்றுக்கும் பல வருஷங் களாக மழை பெய்யாவிட்டாலும் இறைக்க இறைக்க ஊறும் கிணற்றிற்கும் எவ்வளவு வித்தியாசம் உண்டோ அவ்வளவு வித்தியாசம் பிறர் கட்டுப்பாட்டுக்காகப் பிரியம் வைக்கும் சாதாரண ஸ்திரீகளுக்கும் அப்படியின்றி இயல்பிலேயே அன்புருவாய் விளங்கும் நம் கோகிலாவுக்கும் உண்டு. அம்மா, நான் தமிழ் இங்கிலீஷில் அநேக சரித்திரங்கள் படித்திருக்கறேன்; அச் சரித்திரங்களில் உயர்ந்த அன்புடைய ஸ்திரீ புருஷர்களின் வாழ்க்கையின் வரலாறுகளைப் படித்தறிந்திருக்கிறேன். இப்போது நம் கோகிலாவும் தெய்வநாயகமும் நேசம்பூண்டிருப்பது அவற்றை ஒத்ததாகவேயிருக்கிறது. அவள் தனது சுகத்தைக் கருதி இப்படிச் செய்தாள் என்று நினையாதே. நம்மவர்கள் செய்து வைத்திருக்கும் சாதிக் கட்டுப்பாடு சமயக் கட்டுப்பாடு குடும்பக் கட்டுப்பாடு முதலியவற்றையெல்லாம் நன்றாக ஆழமாய்ச் சிந்தித்துப் பார்த்தால் எல்லாம் சுயகாரியமாகத்தான் முடியும். அப்படியிருக்கக் கோகிலா மேல் குற்றஞ் சொல்வது நியாயமாக இல்லை என்று வெகு உற்சாகத்தோடு பேசினான். அவைகளுக் கெல்லாம் நம்ம அம்மா ஒன்றும் சொல்லத் தெரியாதவளாய் உன்னைப்போல நான் என்ன படிச்சா இருக்கிறேன்? நம்ம கோகிலா இப்போது செய்வது நியாயமாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் அடுத்த ஆத்துப் பையன் இந்த ஊரிலே இல்லாமல் வேறே தூரமான எந்த ஊருக்காவது போகும்படி வழிசெய்தால், அப்போதுதான் நம்ம கோகிலா அடங்குவாள்' என்று சொன்னாள். அதற்கு நம்ம அண்ணா 'அவன் எவ்வளவு தூரம் போனாலும், அவர்கள் இருவருக்கும் உள்ள அன்பை மாற்ற எவராலும் முடியாதென்று நினைக்கிறேன்' என்று சொன்னான். அப்போது நம்ம அப்பா இவன் ரொம்பப்படித்த அகங்காரத்தால் இன்னதுதான் பேசுறதென்னு தெரியாமல் பினத்துறான். நல்லது, நாளைக்கு அந்த முதலிப்பயல் இந்த ஊரில் இல்லாமல் செய்கிறேன்' என்று சொல்லிக்கொண்டே எழுந்து மெத்தைமேல் படுக்கப்போனார். அப்பால் அண்ணாவும் 'நீங்கள் எப்படியாவது போங்கள்' என்று சொல்லிவிட்டுப் படுக்கைக்குப்

போனான். இதற்கு மணி பன்னிரண்டானதால் அம்மாவும் நானும் நன்றாய்த் துங்கிவிட்டோம். பின் மூன்று நாளைக்குப் பிறகு அப்பா அம்மாவிடம் வந்து 'அந்த முதலிப் பயலை ஊரைவிட்டுத் துரத்திவிட்டேன்' என்று சொன்னார். அதைக் கேட்டவுடன் உன்னை நினைத்து நான் ரொம்பவும் வருத்தப் பட்டேன். அக்கா, தெய்வநாயகத்திற்கு நீ காகிதம் எழுதுகிற செய்தி எனக்குச் சொல்லியிருந்தால் நான் ஜாக்கிரதையாய் இருந்திருப்பேன்" என்று எல்லாம் விடாமல் என் தங்கை மிகுந்த நினைப்போடு சொன்னான். நடந்த இவ்வளவு விஷயங்களையும் சிறிதும் மறவாமல் நினைப்பில் வைத்திருந்து சொன்ன என் தங்கையின் ஞாபகசக்தியையும் புத்தி சாதுரியத்தையும் கண்டு மகிழ்ந்து அவளை முத்தம் வைத்தேன். அவள் சொல்லிய செய்திகளால் அச்சமும் திகிலும் களிப்பும் துயரமும் என்னிற் கலந்து தோன்றின. இனி அருமையிற் சிறந்த என் தங்கையை அடிக்கடி காணவும் அவளோடு பேசவும் இடம் நேராதென்பதைக் கண்டு கொண்டேன். அதனாற் கன்றைப்பிரிந்த ஆபோற் கலக்கமுற்று ஆற்றாமை மிக அவளைப் பலகால் அணைத்து முத்தம் வைத்தேன். அச்சமயத்தில் அவளும், "அக்கா, அம்மாவும் அப்பாவும் இனிமேல் என்னை உன்னிடம் அனுப்பக் கூடாதென்று, பேசிக் கொண்டார்கள். உன்னை நம்ம வீட்டுக்கு அழைக்கக் கூடாதென்றும் இங்கே மாமியும் நாத்தனாருந்தாம் உன்னை அடக்கத்தக்கவர்களென்றும் சொன்னார்கள்" என்று வருத்தத்தோடு கூறினாள். "குழந்தாய், நம் அண்ணாவும் நானும் உயிரோடிருக்கும் மட்டும் நான் உன்னைக் காணாமல் இரேன். அதோ அம்மா கூப்பிடுகிறாள், கீழே போவோம் வா" என்று அவளோடு கூடக் கீழே வந்துவிட்டேன்.

என் பெற்றோரும் தமயனும் மாமியும் நாத்துணாரும் மைத்துனனும் எல்லாம் என் மாமனாரைச் சூழ இருந்துகொண்டு பற் பல விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். என் தமயன் மட்டும் அடிக்கடி மாமனாரைக் கவனித்து வந்தான். மாமனாரும் மிகுதியாய் என் தமயனோடுதான் பேசினார். ஏழு மணி அடித்தது. உடனே தலைவாயிலண்டை ஒருவண்டி வந்து நின்றது. இரண்டொரு நிமிஷத்திற்கெல்லாம் அப்பாரசிகப் பெருமானும் பெருமாட்டியும் உள்ளே வந்தனர். அவர்கள் வரவினைக் கண்டவுடன் மழைமுகங்கண்ட பயிர்முகம் போல மகிழ்ந்து விரைந்து சென்று அவர்களை எதிர்கொண்டேன்;

அப்பாரசிக அன்னையார் மிகுந்த ஆராமையோடும் என்னை அணைத்துக் கொண்டார்கள். அக்கனவானோ "பெரியய்யா எப்படியிருக்குறாங்கோ அம்மா?" என்று ஆவலோடு வினவினார். "கொஞ்சம் சுகந்தான்" என்று சொல்லிக்கொண்டே அவர்களை அழைத்துக்கொண்டு மாமனார் படுக்கையறைக்கு வந்தேன். இப்போது இவர்களுடன் இவர்களின் பிள்ளைகள் வரவில்லை. இவர்களைக் கண்டவுடன் என் மாமனார் முகம் மலர்ந்து காட்டியது. என் மைத்துனன் இவர்களைக் கண்டவுடன் எழுந்து வந்தனம் பண்ணி இரண்டு நாற்காலி கொண்டு வந்து மாமனார் கட்டிலின் அருகில் இட்டு அவர்களை அவற்றின்மேல் இருக்கும் படி வேண்டினான். மாமனாரும் மிகவும் அன்போடு அவர்களை அவற்றில் இருக்கச்சொன்னார். அவர்கள் அமர்ந்தவுடன் மாமனாரைப் பார்த்து அவரது சுகநிலை எப்படியென்று கேட்டார்கள். மாமியும் நாத்துணாரும் இவர்களைப் பார்த்தவுடனே முகத்தைத் திருப்பிக் கொண்டு பின் கட்டுக்குப் போய்விட்டார்கள். என் அன்னை அவர்களோடு செல்லவில்லை. இவர்களைப் பார்த்து வியந்தபடியே நின்றாள். என் தந்தையும் தமயனும் கட்டிலின் அப்பக்கத்தே நாற்காலியிலிருந்தபடியே இவர்களை இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்பாரசிக கனவான் மாமனார் சுகத்தைப் பற்றிக் கேட்டானதும், எதிரிலிருந்த என் தமயனைப் பார்த்து "இவங்கோ நம்ம கோகிலாம்மா அண்ணாத்தெ எண்ணு நினைக்கிறேன்" என்று மகிழ்ந்த முகத்தோடு கேட்டார்; அச்சமயத்தில் அவர் மனைவியர் என்னையும் என் தமயனையும் பார்த்து மகிழ்ச்சியடைந்து கொண்டிருந்தார்கள். என் மாமனார் "ஆம் ஐயா, குழந்தை கோகிலாவுக்கு-இவன் ஒருவன் தான்-தமயன் என்னு-சொல்லத் தக்கவன் - கல்வியிலும் - விவேகத்திலும் - நற்குண நற் செய்கையிலும் - சிறந்தவன் - எங்கள் குடும்பத்தில் - கோகிலாவும் - இவனுந்தான் - என் மனத்திற்குப்-பிடித்தவர்கள்" என்று சிறிது பிராயாசையோடு விட்டுவிட்டுப் பேசினார். அப் பாரசிகப் பொருமாட்டியாரும் "அகத்திலுள்ளது முகத்தில் தெரியும்" என்றபடி இவர் குணத்தின் விசேஷம் இவரது முகத்தில் நன்றாய் விளங்குகின்றது. இவர் நம் கோகிலாவைப் போலேதான் நல்லவராய் இருப்பாரென்று திண்ணமாய்த் தோன்றுகின்றது" என்று சொன்னார்கள். என் தமயன் அவ்வம்மை யார் சொற்களைக் கேட்டு வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தவனாய்த்,

தனது இருக்கையினின்றும் எழுந்து அவ்வம்மையார்க்கும் அவர்தம் கணவர்க்கும் வணக்கவுரை கூறினான்.

இச்சமயத்தில் மறுபடியும் தலைவாயிலண்டை ஒரு வண்டி வந்து நின்றது. ஒரு நிமிஷத்திற்கெல்லாம் வெள்ளைக்கார வைத்தியர் உள்ளே வந்தார். அப்பாரசிககனவான் தன் இருக்கையினின்றும் எழுந்து வந்தனம் சொல்லி அவரை அதில் இருக்கவைத்துத் தான் பிறிதொன்றின்மேல் இருந்தார். இப்போது வைத்தியரும் அப்பாரசிககனவானும் என் மாமனாரும் தமயனுமெல்லாம் ஆங்கில மொழியிற் பேசிக்கொண்டார்கள். பிறகு வைத்தியர் மாமனாரின் நாடியையும் சுவாசப் பையின் அசைவையும் நாவையும் கண்ணையும் பரிசோதித்துப் பார்த்தார். அதன்பின் தமது சட்டைப்பையிலிருந்து ஒருசிறு புட்டியை எடுத்து அதிலிருந்த மருந்தை முனையிற் கூர்மையாயிருந்த ஒரு சிறிது நீண்ட குழையில் ஊற்றி, அக்கருவியின் முனையால் இடது தோட்புறத்திற்குத்தி நரம்பின்வழியே அம்மருந்தை ஏற்றினார். அதன்பின் மறுநாட் காலை வரையிற் செய்யவேண்டிய முறைகளை சொல்லிவிட்டுப் போனார். பின்னர் சிறிது நேரம் பேசியிருந்த பின் அப்பாரசிக கனவானும் அவர் மனைவியாரும் எல்லாரிடத்தும் விடை பெற்று கொண்டு தமது இல்லத்திற்குப் புறப்பட்டார்கள். என் தமையனும் மைத்துனனும் அவர்களை வழிவிடுதற்குத் தலைவாயில் வரையிற் போனார்கள்; நானும் அவ்வம்மையாரைப் பிரிதற்குக்கூடாமல் அவர்களுடன் தலைவாயிலண்டை சென்றேன். அவர்களை வண்டியிலேற்றி அனுப்பியபின்னர், என் தமயனை நோக்கி “வைத்தியர், மாமா நோயைப் பற்றி யாது சொல்லினார்?” என்று கேட்டேன். அவன், “மாமாவின் இருதயம் மிகவும் நிலைகுலைந் திருப்பதாயும், அதனால் அவர் உடம்பிலுள்ள இரத்தம் முற்றும் நஞ்சாய்ப் போய்விட்டதாயும், அவர் பிழைப்பது மிகவும் அரிதென்று தமக்குத் தோற்றுவதாயும், மிக உயர்ந்த மருந்துகள் உட்செலுத்தப் பட்டாலும் முதிர்ந்த வயதினரா யிருத்தலால் அவற்றால் முற்றும் நோய்தீருமென்று திட்டமாய்ச் சொல்லமுடியா திருப்பதாயும், என்றாலும் விரைவில் மரணம் நேரவொட்டாமல் அம்மருந்துகள் அவரை இன்னுஞ் சிலநாட்கள் பிழைத்திருக்கச் செய்யுமென்று தமக்கு நம்பிக்கை இருப்பதாயும் கூறினார்” என்று தெரிவித்தான். இச்செய்தியைக் கேட்டு என் நெஞ்சம் நிலை தடுமாறிக் கலங்கியது. வேறொன்றும் அப்போது யான் என் தமயனோடு

பேசக்கூடவில்லை. மாமனாரிடம் திரும்பி வந்து சிறிதுநேரம் பேசாமலிருந்தோம் அப்பால் என் பெற்றோர்கள் தம் இல்லத்திற்குச் செல்ல விடைதரவேண்டுமென்று மாமனாரைக் கேட்டார்கள். அவரும் அதற்கு இசையவே எல்லாரும் அங்கு நின்றும் புறப்பட்டார்கள். என் மாமனார் என் தமயனுக்குச் சைகைசெய்து அவனை மட்டும் சிறிது பின்னிட்டுப் போகும்படி குறிப்பித்தார். அங்ஙனமே அவன் பெற்றோர்களை முன்விட்டுப் பின்னே நின்றான்; நான் என்பெற்றோர்களோடு பேசிக் கொண்டே என் தங்கையைக் கையிலிட்டுக்கொண்டு தெருவாசலுக்கு போனேன். ஆகையால், மாமனாருக்கும் என்தமயனுக்கும் இடையில் நடந்தது இன்னதென்று எனக்குத் தெரியாது. ஆனால், என் தமயன் மட்டும் சென்ற வாரத்தில் இரண்டுமுறை பிற்பகலில் தனியேவந்து என் மாமனாரிடம் தனியாகப் பேசிப்போனான். இஃது இப்படியிருக்க, நேற்றிரவு நடந்தவைகளைச் சிறிது வரைகின்றேன்.

என் மாமனார் என்னைத்தவிரப் பிறர்கையில் கஞ்சி வாங்கிக் குடிப்பதுமில்லை; எது வேண்டுமானாலும் என் மைத்துனனை ஏவுவர். மாமியும் நாத்துணாரும் அவர்கிட்ட வருவதுமில்லை, வந்தாலும் அவர் வெறுப்புடன் பார்க்கும் பார்வைக்குப் பயந்து அப்பால் விலகிப்போய்விடுவர். இவ்வளவு கெட்ட முரடர்களான அப்பெண்பாலார் இருவரும் வயது முதிர்ந்த என் மாமனாருக்கு நிரம்பவும் பயந்து நடுங்குவதை நினைத்து யான் ஒவ்வொரு கால் வியப்படைவதுண்டு; ஆனாலும், அதன்காரணம் மட்டும் எனக்கு விளங்குவதில்லை. இந்த வரலாறுகளால், இரவில் நான் மட்டும் தான் என் மாமனார் படுக்கையண்டை உறங்குவது வழக்கம்; என் மைத்துனனோ அறைக்கு வெளியே தாழ்வாரத்தில் உறங்குவன். நேற்று நடுஇரவில் பன்னிரண்டரை மணியிருக்கும். நானோ நன்றாய் அயர்ந்து உறங்கிக்கொண்டிருந்தேன். ஏதோ மெல்லிய ஓசை எங்கிருந்தோ வருவதுபோல் தூக்கத்தில் எனக்குத் தோன்றியது. உடனே விழித்துப்பார்த்தேன்; என் மாமனார்தாம் “குழந்தே, குழந்தே” என்று என்னை எப்போதுங் கூப்பிடுகிற வழக்கப்படி மெல்லக் கூப்பிட்டார். “ஏன் மாமா” என்று சொல்லிக் கொண்டே அவர் அருகில் போனேன். அவர், “கையில் விளக் கெடுத்துக் கொண்டு அரவமில்லாமற்போய் வீட்டிலுள்ளவர்

களெல்லாம் நன்றாய்த் தூங்குகிறார்களாவென்று பார்த்துவா" என மிகுந்த மனக்கிளர்ச்சியோடு சொல்ல, யான் வியப்புற்று, அவர் சொல்லிய வாறே பார்த்துவந்து "எல்லாரும் தம்மைமறந்து தூங்குகிறார்கள்" என்றேன். "அதன்மேல் அவர் என்னைத் தமக்குப் பக்கத்திலே இருக்கும்படி கற்பித்துத் தாம் தலயணைமேற் சாய்ந்த வண்ணமாய் அமர்ந்து, "குழந்தாய், நீ உங்கள் பக்கத்து ஆத்துத் தெய்வ நாயகத்திற்குக் கடிதம் எழுதினையாமே?" என்று அமைதியோடும் வினாவினார். யான் எதிர்பாராத தொன்றை இவர் கேட்டமையால் மிகக் கலங்கி இன்னது சொல்வதென்று அறியாமல் திகைத்து ஒன்றுஞ்சொல்லாமல் பேசாதிருந்தேன். அதனைக் கண்டு பின்னும் அவர் "நீ கொஞ்சமும் பயப்பட வேண்டாம்; உண்மையைச் சொல்" என்று குளிர்ந்த முகத்தோடு கேட்டார். அவர் முகத்தில் கோபம் வருத்தம் முதலியகுறிகள் காணப் படாமையால் சிறிது மனந்தேறி, "மாமா, ஆம். நான் அவருக்குக் கடிதம் எழுதினது உண்மைதான்" என்று சிறிது தடுமாற்றத்தோடு சொன்னேன்.

"நாமோ பிராமணாள், அந்தப் பையனோ சூத்திரச்சாதி, இன்னும் நீயோ கைம்பெண், நீ அவனோடு ஸ்நேகம் பண்ணுவது தெரிந்தால் பிராமணாள் சூத்திராள் எல்லாரும் அவமதிப்பாய்ப் பேசுவார்களே. மற்றவர்கள் இருக்கட்டும். கல்வியும் விவேகமும் வாய்ந்த உனக்கு இது குற்றமென்று தோன்றவில்லையா?" என்று கேட்டார். இவர் இப்போது சொல்லிய சொல் ஒவ்வொன்றுங் கூரிய அம்புபோற்பாய்ந்து என் நெஞ்சைத் துளைத்து விட்டன. இவற்றிற்கு விடைசொல்லவேண்டுமென்று ஏதோ என்னைத் தூண்டுவதுபோற் காணப்பட்டது. உடனே யான்,

"மாமா, நான் செய்வது குற்றமோ குற்றமில்லதோ, இதனைப் பகுத்தறியச் சத்தியற்றவளாயிருக்கிறேன். தெய்வ நாயகமும் நானும் சிறுபருவம் முதலே உடன் வளர்ந்து உடன் பழகி ஒரே பள்ளிக் கூடத்தில் சிலவருஷங்கள் வரையில் படித்துவந்தோம். அக்காலத்திலேயே அவரைக் காணாமலும் அவரோடு பேசாமலும் இருக்க என்னால் முடிவதில்லை; அவரைப் பிரிந்திருந்த சமயங்களிலெல்லாம் என்உயிர் தத்தளிப்ப துண்டு" என்று நான் சொல்லு கையில், என் மாமனார்.

"நடுவே ஒன்று கேட்கிறேன்; நல்லது, நீ அவனிடத்தில் அவ்வளவு பிரியமாயிருந்தது போல, அப்போது அவனும்

உன்னிடத்தில் அவ்வளவு பிரியமாய் இருந்தானா?'' என்று வினாவினார்.

“ஆம், மாமா, அவரும் ஒரு நிமிஷமேனும் என்னைப் பாராமலிருப்பதில்லை. அடிக்கடி எங்கள் வீட்டுக்கு ஓடிவருவர். அப்போது அம்மா ஏதேனும் அவருக்குப் பட்சணங் கொடுப்பள். அதைத் தான் வாங்காமல் ‘முதலில் கோகுக்குக்கொடு, இல்லாக் கால் நான் வாங்கமாட்டேன்’ என்று பிடிவாதஞ்செய்வர். அதன்மேல் அம்மா எனக்குப்பாதியும் அவருக்குப்பாதியும் கொடுப்பள். குடகுக்கிச்சலி, சீமை இலந்தைப்பழம் முதலியன அவர் வீட்டார் அவருக்குக் கொடுத்தால் அவர் அவற்றை எடுத்துக் கொண்டு வந்து என் கையிற் கொடுத்து என்னைத் தின்னச் சொல்லிக் கட்டாய படுத்துவர்; யானோ நீ தான் முதலில் தின்ன வேண்டும் என்பேன். அவர் ‘நீ தான் தின்ன வேண்டும்’ என்பார். நான் தின்னாமல் இங்ஙனம் மறுத்துக் கொண்டிருந்தால் அவர் கண்கலங்கும். அது கண்டு எனக்கும் அழுகைவரும். பிறகு இருவருமாய் அவற்றைப் பகிர்ந்துகொண்டு ஒரே சமயத்தில் தின்னுவோம். அறியாப் பருவத்தில் எம்மிருவருக்கும் உண்டான இந்த நேசமானது வரவர வளர்ந்து வந்ததேயல்லாமல் சிறிதுங் குறைந்ததில்லை'' என்று கூறினேன்.

“நல்லது, கோகிலா, அந்தப்பையன் வேறொரு பெண்ணை விவாகம் செய்து கொண்டால் நீ யாது செய்வாய்? அல்லது அவன் பெற்றோர்கள் கட்டாயப்படுத்தி ஒரு பெண்ணை அவன் கழுத்தில் கட்டிவிட்டார்களானால் நீ என்செய்வாய்?'' என்று சிறிது இரக்கத்தோடு என் மாமனார் கேட்டார்.

“மாமா, என்னைத் தவிர அவர் வேறொரு பெண்ணைக் கனவிலும் நினைப்பார் என்று எனக்குத் தோன்றவில்லை. அவருடைய பெற்றோர்கள் அவருக்கு விவாகஞ்செய்ய எவ்வளவோ முயன்று பார்த்தும் அவர் அதற்குச் சிறிதும், இணங்கவில்லை. ஒருகால் தெய்வசங்கற்பத்தால் அவர் வேறொருத்தியை மணந்து கொள்ளும்படி நேர்ந்தாலும், யான் அவர்மேல் வைத்திருக்கும் அன்பை மாற்றிக்கொள்ளச் சிறிதும் வல்லவள் அல்லேன்; என்வாழ்நாட்கழியும்மட்டும் யான் அவர் காலடியிற் கிடந்து அவருக்கு ஊழியஞ் செய்துகொண்டு அவருக்கு வேலைக்காரியாய் இருப்பேன்'' என்று யான் சொல்லுகையில் என் மாமனார் நான் கடைசியிற் சொன்னதைக் கேட்டு மனம் உருகினவராய்,

"ஓ! கோகிலா, நீ அப்படிச்சொல்லாதே, கற்பொழுக்கத்திற் சிறந்த உனக்கு அப்படி ஒன்றும் சிறுமைநேராது. நீ சொல்லிய விருத்தாந்தங்களையெல்லாம் நன்றாக எண்ணிப்பார்த்தால் உனக்கும் அந்தப்பையனுக்கும் உண்டாயிருக்கும் நேசமானது மகா பரிசுத்தமும் தெய்வத்தன்மையும் உடையதாக இருக்கிறது. நீயே அவனுக்கு மணமகளாகவும் அவனே உனக்கு மணமக னாகவும் பொருந்தத்தக்கவர்கள். ஏதோ ஊழ்வினைப்பயத்தால் உங்கள் இருவரையும் வெவ்வேறு சாதிகளிற் பிறப்பித்து இது வரையில் உங்களை வருத்திய தெய்வமானது இனி உங்களை ஒன்று கூட்டு மென்று நம்புகின்றேன். ஆனால், ஒன்று சொல்லுகிறேன். நீ எப்படியாவது அவனோடு விவாகஞ்செய்து கொண்டுதான் வாழ வேண்டும்" என்றார்.

மாமனார் சொல்லிய இவ்வமிர்த மொழிகளால் உயிர் தளிர்க்கப் பெற்றயான் அவர் கடைசியிற் சொல்லிய சொற்களைக் கேட்டுச் சிறிது திடுக்கிட்டு "மாமா, நீங்கள் சொல்லுகிறபடி நான் அவரை மணந்து கொள்வதற்கே விருப்பம் உடையேனாயினும், நாங்கள் இருவரும் வெவ்வேறு சாதியினராகவும், எனது நிலைமை ஒரு விதந்துவின் இயல்புடையதாகவும் இருத்தலால், நாங்கள் விவாகம் செய்து கொள்வதற்கு இந்த நாட்டிலுள்ளவர்கள் எவரும் இசையமாட்டார்களே! அதுமட்டுமா! எங்களைப் பலவகையிற் புறம்பழித்து எங்களுக்குப் பலவாறு தீங்கிழைப் பார்களே" என்று கலக்கத்தோடு கூறினேன்.

"இல்லை! இல்லை! கோகிலா, என்னுடைய கருத்து அப்படியன்று; இந்தத் தேசத்தவர் தன்மை எனக்குத் தெரியாதா! இதைப்பற்றி உன் தமையனிடம் பேசியிருக்கின்றேன். அவனும் என் ஏற்பாட்டிற்கு இணங்கியிருக்கின்றான். நம்மிடம் வருகிற அன்பர்களான அப்பாரசிகப்பெருமானிடத்தும் பெருமாட்டி யிடத்தும் உன்னை அடைக்கலமாக ஒப்பிக்கப்போகிறேன். அவர்கள் பம்பாய்க்கு உன்னையும் அந்தப்பையன் தெய்வநாயகத் தையும் அழைத்துப்போய் விவாகம் செய்விப்பார்கள். உன் தமையன் அப்போது உன்னுடனிருந்து எல்லா உதவியும்செய்து, உங்கள் விவாகத்தை நடத்திவைப்பான். எனக்கு ஓர் இலட்சம் ரூபா இருக்கிறது. அத்தொகையில் எண்பதினாயிரரூபா எடுத்து நாற்பதினாயிரரூபா உனக்கும் நாற்பதினாயிரரூபா உன் தமையனுக்குமா எழுதிவைக்கப் போகின்றேன். இத்தொகையை

நீயும் உன் கணவனும் பாதுகாவலோடு வைத்து ஏதுங்கவலை யின்றி இல்லறத்தை நடத்தி இன்பம் அனுபவிப்பீர்களாக! ஏழை எளியவர் களுக்கும் வலியற்றவர்களுக்கம் இயன்ற அளவு ஊணும் உடையும் கொடுத்து அவர்கள் துன்பத்தைப் போக்குவீர்களாக! பசியாலுந் தாகத்தாலும் வருந்திவந்தவர்களுக்கு முதலில் உணவுந் தண்ணீருங் கொடுத்து அவர்கள் களைப்பை மாற்றியபின் நீங்கள் உணவெடுக்க வேண்டும். தமிழ்க்கல்வியை எவரும் படிக்கும்படி செய்து வருதல் வேண்டும்; படிக்க வகையற்றவர்களுக்கு உங்களால் இயன்ற உதவிகளைச் செய்துவாருங்கள். நீங்களும் இடைவிடாது கல்வியிற் பயின்று வருதல் வேண்டும். உன்கணவன் இங்கிலீஷிலும் வல்லவனாதலால், அந்தப் பாஷையிலிருக்கின்ற அற்புதமான பூதபௌதிக சாஸ்திரக்கருத்துக்களையெல்லாம் நீ தெரிந்து கொண்டு தமிழர்களுக்குப் பயன்படும் வண்ணம் அவற்றை எழுதித் தமிழ் நூல்களாக வெளிப்படுத்தல் வேண்டும்" தமிழோ மிகவும் பழமையான பாஷை; மிகவுந் திருத்தம் உள்ளது, அழகுவாய்ந்தது, வழக்கத்திலிருப்பது; நமது சமஸ்கிருதபாஷை பழமையான தென்றாலும் அஃது உலகவழக்கத்தில் இல்லாதது; பேசுவதற்கும் படிப்பதற்கும் தமிழைப்போல் இனிமையாகவும் மிருதுவாகவும் இல்லாதது; அதனை எவ்வளவுதான் கற்றாலும் அதனால் எல்லாரோடும் பேசமுடியாது; அதில் நூல்கள் எழுதினால் அவற்றை எல்லாரும் படித்துப் பயன் அடையப் போகிறதில்லை. ஆதலால், அந்தப்பாஷையில் நம்மவர் வைத்திருக்கின்ற துரபிமானத்திற்கு நீ ஆளாகப்படாது. தமிழையே பரவச் செய்தல் வேண்டும். சமஸ்கிருத பாஷைச் சொற்களைக் கண்ட மட்டும் தமிழில் வழங்காமல் தமிழ்ச் சொற்கள் ஏராளமாக இருப்பதால் அவற்றையே நீ பழக்கத்துக்குக் கொண்டுவந்து, புண்ணிய பூமியாகிய இத்த தமிழ் நாட்டுக்குப் பலநன்மைகளை நீ செய்தல் வேண்டும். தெய்வ பக்தியினை வளரச் செய்யுந் தேவார திருவாசகங்களும் மற்றவைகளுங் கற்று நீங்களிருவரும் சூரிய சந்திரர்களைப் போல நீடூழி வாழ்ந்து வருவீர்களாக' என்று சொல்லியதும் தொடர்பாகப் பேசி வந்ததனால் களைப்படைந்தவராகி என் மாமனார் சிறிதுநேரம் கண்ணை மூடிக்கொண்டிருந்தார்.

யானோ இவர் பேசிய சொற்களால் மெய்மறந்த மகிழ்ச்சி உடையவளாகி இன்னது செய்வதென்று தெரியாமல் யானும்

சிறிதுநேரம் பேசாமலிருந்தேன். அப்பால் என் மாமனார் களைப்புத்தீர்ந்து என்னை விழித்துப் பார்த்தார்; யானும் என் உணர்வு வரப் பெற்றேனாகி, என் மாமனாருடைய பெருந்தன்மையையும், அருட் குணத்தையும், தாரளமான உள்ளத்தையும், என்னிடத்து வைத்திருக்கும் பேரன்பினையும் நினைந்து நினைந்து இன்னது சொல்வதென்று அறியேனாய் அவருடைய கைகளை எடுத்து என் கண்கள்மேல் ஒற்றிக்கொண்டு தேம்பித் தேம்பி அழுதேன். அவர் அதனைக்கண்டு ஆற்றாராய்க் “குழந்தாய், அழவேண்டாம்; அழவேண்டாம்” என்று சொல்லிக்கொண்டே என் கண்களைத் துடைத்தார்.

பிறகு “மாமா, ஒன்றுக்கும் பற்றாத சிறியவளான என்மேல் தேவரீர் இவ்வளவு அன்புவைத்து எளியேனைப் பாதுகாத்த பேர் அருளுக்கு நான் எங்ஙனம் நன்றி செலுத்துவேன்! என்குல தெய்வமே நீங்கள் சுகமாக எழுந்திருந்து சிறியேங்கள் செய்யும் ஊழியங்களை ஏற்றுக்கொண்டு எங்கள் கூடவே உங்கள் வாழ்நாள் அளவும் இருக்கும்படி மனம் இரங்கவேண்டும்” என்று அழுதபடியே கூறினேன்.

“குழந்தாய், நம்முடைய குலத்தில் நீயும் உன் தமையனுந் தான் என் அன்பிற்கு உரியவர்கள். அதனால், உங்களை நல்ல நிலைமையில் வைப்பது தான் என் மனத்திற்கு இசைந்தது. நீங்கள் இருவரும் என்னிடம் பேரன்பு வைத்திருப்பதொன்றே எனக்குப் போதுமானது. நான் உயிர்பிழைத்திருந்தால் உங்களுடன் இருந்து காலந்தள்ளத் தடை இராது - ஆ! அதோ! என் அருமை மகள்! என் கண்மணி இத்தனைநாள் நீ என்னை எங்ஙனம் பிரிந்திருந்தாய்!” என்று என் மாமனார் மேலே ஆகாயத்தைச் சுட்டிக்காட்டிக் கண் இமையாதிருந்தார்.

என்னை நோக்கிப் பேசிவருகையில் இடையே இவர் இங்ஙனம் மேலே சுட்டிக்காட்டிப் பேசியதைக்கேட்டு என் உள்ளம் திடுக்கிட்டது. யான் மேல் நிமிர்ந்து பார்த்தேன். என் கண்ணுக்கு ஒன்றும் புலப்பட்டிலது. என் மாமனாருக்கு ஏதோ உணர்வு பிறழுகிறதென்று எண்ணிக் கலங்கினேன். பின்னர்ச் சிறிது நேரத்திற் கெல்லாம் என் மாமனார் கண் இமை கொட்டியது. உடனே அவர் என்முகமாய்த்திரும்பிப் பின் வருமாறு கூறினார்:

"குழந்தாய், யான் சிறிது நேரத்துக்குமுன் சொல்லிய சொற்களைக் கேட்டு நீ நிரம்பவும் அச்சம் அடைந்திருக்கிறாய் என்று அறிகின்றேன். சிறிதும் அஞ்சாதே. எனக்குப் பதினெட்டாவது வயதில் ஒரு கல்யாணம் ஆயிருந்தது. இப்போதிருக்கிற பேய் இரண்டாந்தாரமாவள். முதல் தாரக்காரி மகாஉத்தமி, அழகிலுங் குணத்திலும் லக்ஷிமியையே ஒத்தவள், கல்வியில் அவள் சரஸ்வதியே. அவளும் நானும் உயிரும் உடலும்போல் இணை பிரியா அன்பினராய் இருந்தோம். எங்களிருவர் அன்பின் பயனாகச் சுவர்ணவிக்கிரகம் போன்ற ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதனை நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்த்து வந்தோம். அந்தக்குழந்தைக்கு ஐந்து வயதாகிற போது அதன் தாய் மாரடைப்பு நோயினால் ஐயோ! சடுதியில் இறந்துபோனாள்! உயிரினுஞ் சிறந்த மனையாளைப் பறிகொடுத்த துயரம் ஒருபுறம் வருத்தத் தாயற்ற என் அருமைக் குழந்தையின் நிலைமையானது என்னை மற்றொருபுறம் நீராய் உருக்கி வந்தது. இந்தக் குழந்தையை பாதுகாக்கும் பொருட்டுத் திரும்பவும் நான் விவாகஞ் செய்து கொள்ள வேண்டுவதாயிற்று. என் செய்வேன்! இப்போதுள்ள பேயை என் உறவினரெல்லாருஞ் சேர்ந்து என் கழுத்துக்குக் கயிறாய்க் கொண்டு வந்து கட்டிவைத்தார்கள். நான் நினைத்தற்கு மாறாக, இப்பேய் என் அருமைக்குழந்தையைப் படுத்தி வைத்தபாடு இன்னும் எத்தனை பிறவியெடுத்தாலும் என் நெஞ்சை விட்டு நீங்காது. என் அருமை மகள் ஒரு தெய்வக் குழந்தையாகவே வளர்ந்தது! அதன் அறிவு நுட்பத்தையும், அடக்க ஒடுக்கத்தையும், கல்விப்பயிற்சியையும், இரக்கக் குணத்தையும், தெய்வ சிந்தனையையும் பேரழகையும் இன்னும் மற்ற உயர்குணநலங் களையும் என் ஒரு நாவால் எங்ஙனம் எடுத்துச் சொல்வேன்! அவ்வருமைக் குழந்தையை உனக்கே ஒப்பாகச் சொல்லவேண்டும். ஐயோ! நினைக்கவும் என் நெஞ்சம் பகீரென்கின்றதே! அக் குழந்தைக்குப் பத்தாவது வயது வந்தது. ஒருநாள் நான் வெளியே போயிருந்து வந்தேன். அப்போது என் அருமைக் குழந்தை படுக்கை மேல் ஏதும் அரவமின்றி அமைதியாய்க் கிடந்தது. உடனே யான் பதைபதைத்து அதனருகே சென்று, 'குழந்தே, யான் வருங் காலங் களிலெல்லாம் எதிரோடிவந்து என்னைக் கட்டிக்கொள்வாயே இன்றைக்கு ஏன் இப்படிப் படுத்துக்கிடக்கிறாய்?" என்று தடுமாற்றத் தோடு கேட்டேன். அதற்கு அம்மகவு அப்பா, சித்தி ஏதோ தின்னக்

கொடுத்தாள்; முதலில் நான் அதைத் தின்னாமல் வைத்துக் கொண்டிருந்தேன். அவள் ‘அது ரொம்ப ருசியான பண்டம், தின்று பார்’ என்றாள்; அப்படியே தின்றேன். இப்போது எனக்கு மயக்கந் தலைக்கேறுகிறது. நான் இனிமேல் சித்திகிட்ட இருக்கமாட்டேன். நான் என் அம்மாகிட்டப் போகிறேன். நீ சித்தியை ஒன்றுஞ் செய்ய வேண்டாம். ஆனால், நீ மாத்திரம் பத்திரமாய் இரு’ என்று சொல்லி விட்டு இறந்தபோயிற்று” என்று சொல்லுகையில் என் மாமனார் கண்ணீர் ஆறாய்ப்பெருக ஆற்றாமல் அழுதார். மிகவும் நோய்ப் பட்ட நிலையிலிருக்கும் என் மாமனார் மிகவும் துயரம் அடைவதைப் பார்த்து என் நெஞ்சம் நெக்குடைந்தது, அதனை ஒருவாறு தேற்றிக் கொண்டு,

“மாமா, நோயாயிருக்கும் நீங்கள் இப்படி வருந்தலாமா? கொஞ்சம் ஆறுதல் அடையும்படி கெஞ்சிக்கேட்டுக் கொள்ளு கிறேன்” என்று அவர் கண்களைத் துடைத்தேன். அவரும் ஒருவாறு மனம் தேறிக் “குழந்தாய், அம்மகவு இறந்து ஒருமாதம் வரையில் நான் புத்திசுவாதீனம் இன்றியிருந்தேன். அவ்வொரு மாதம் வரையில் இங்கே நடந்தது இன்னதென்று எனக்குத் தெரியாது. அவ்வொருமாதமுங்கழித்து என் புத்தி முன் நிலைமைக்கு வந்தது. முன்னே சுவர்க்கம் போலிருந்த என் வீடு இப்போது பாழடைந்து மிகவும் துக்ககரமாயிருந்தது. என் இரண்டாந்தாரப் பேய் நாடோறும் இராக்காலத்தில் அலறு வதாகவும் அன்ன ஆகாரம் இன்றி மிகமெலிந்து பாயும் படுக்கை யுமாய்க் கிடந்து அளவுபடாத துன்பத்தை அடைவதாகவும் என் அருகிருந்து உபசரித்த உறவினர்ச் சிலர் சொல்லக்கேட்டு என் அருமைக் கண்மணியைக் கொலைசெய்த அவள் அப்படி வருந்துவதற்குக் காரணம் யாதாய் இருக்கலாம், அவள் என் மகளைப்பற்றி வருந்துவதற்குக் காரணம் இல்லையேயென்று எண்ணமிட்டுக் கொண்டிருந்தது. அன்றிராத்திரி அவள் அலறு கிறசத்தங்கேட்டு, அவள் படுக்கையறையின் அண்டையிற்போய் மெல்ல உள்ளே பார்த்தேன்; ஓ! என் கண்களுக்குப் புலனான அவ்வடிவத்தின் பயங்கரமான தோற்றத்தை எவ்வாறு எடுத்துரைப்பேன்! குழந்தாய், அஞ்சாதே! அது தீயோரைத் தண்டிக்கவந்த தேவரூபமேயன்றி வேறன்று. அது மிகவும் கறுத்துப் பருத்து நீண்டிருந்தது; அதன் முகமும் அங்க அடையாளங்களும் செவ்வையாகத் தெரியவில்லை; என்றாலும், அதன் கையில் ஒருசாட்டைக்கோல் இருந்தது. அக்கோல்

முனையிலிருந்து தொங்கிய மணிக்கயிற்றில் ஒரு வரிசையாகப் பெரிய கருந்தேள்கள் ஒட்டிக்கொண்டிருந்தன; அச் சாட்டைக் கயிறு அவ்விரண்டாந்தரப் பேயின் முதுகின்மேற் பளீர் பளீர் என்று அடித்தது; அங்ஙனம் அடிக்கையில் அக்கயிற்றின் நெடுக உள்ள தேட்கொடுக்குகள் அவள் முதுகினுள்ளே பாய்ந்து பாய்ந்து வருதலையும், அவள் அப்போது என்னாற் பார்க்கவுஞ் சொல்லவுங் கூடாதவிதமாய்த் துடித்தலையுங் கண்டு அரைவாசி உயிர் பிரிந்தவன் போல் உணர்விழந்து நிலைத்தின்மேற்களைத்து வீழ்ந்தேன். என்னை அறியாத ஓர் உறக்கம் வந்து என் கண்களை மூடியது. அங்ஙனஞ் சிறிதுநேரம் உணர்விழந்து கிடந்தபின், திரும்பவும் என் உணர்வு எனக்கு மிகவுந் தெளிவாக வரப் பெற்றேன். இன்னும் என் கண்கள் நன்றாக மூடித்தான் இருந்தன; ஆனாலும் என் மனைவியின் படுக்கையறையை நான் நன்றாய்க் கண்டேன். அவள் படுக்கையைச் சூழக்கரிய ஓர் இருள் சூழ்ந்திருந்தது. அவ்விருள் வட்டத்தின் புறத்தே முன்னே நான் கண்ட வடிவம் இன்னும் நின்று கொண்டுதான் இருந்தது. ஆனால் இப்போது அதனைச்சூழ மிகவும் பிரகாசமான ஓர் ஒளிவட்டந் தோன்றியது; முன்னே என் கண்ணுக்குப் புலனாகாதிருந்த அவ்வடிவத்தின் முகமும் அங்க அடையாளங்களும் இப்போது எனக்கு மிகவுந் தெளிவாய் விளங்கின; ஆயினும், என் கண்கள் இன்னும் மூடியே இருந்தன. அந்தத் திருவுருவத்தின் முக அழகும் மற்ற அங்கங்களின் அழகும் இந்நிலவுலகத்தில் யான் என்றும் கண்டிராத தன்மை யோடும் விளங்கின. அதனை இந் நிலைமையிற் கண்டதும் முன் என துள்ளத்தே நிகழ்ந்த அச்சமெல்லாம் நீங்கப்பெற்றேன். என் நெஞ்சகத்தே என்னை அறியாத ஓர் ஆற்றாமையும் அன்பும் வரப் பெற்றேன். உடனே, ஆண் வடிவாய்த் தோன்றிய அத்திருவுருவத்தை நோக்கி அழுதேன். பின்னர் அதனை வாழ்த்தினேன், வணங்கினேன்; நானிருந்தநிலை கனவோ நனவோ இன்னதென்று என்னால் துணிந்துரைக்கக் கூடவில்லை; என்கைகால் முதலான எந்த அவயவமும் ஆடவும் இல்லை, அசையவுமில்லை; என்னால் எழுந்து அதனருகே செல்லவுங் கூடவில்லை; என்றாலும் என் உணர்வுமாத்திரம் நிரம்பவுந்தெளிவாயிருந்தது; எல்லாம் எனக்கெதிரே மிகுந்த விளக்கத்தோடுந்தோன்றின. அவ்வழகிய திருவுருவத்தைக் காணக்காண என் உள்ளம் குளிர்ந்தது; ஆரா மகிழ்ச்சி அடையப்பெற்றேன். அதனை யான் வணங்குவதும்

வாழ்த்துவதுமெல்லாம் மனத்தாற் செய்தேன். பிறகு அதனை மிகவுங்குழைவோடுதொழுது 'ஐயனே! தேவரீரைச் சிறியேன் இன்னாரென்று உணரப்பெற்றிலேன். பெரும்பாவிகளான எங்கள் முன்னிலையில் தேவரீர் எழுந்தருளுதற்குக்காரணம் யாதோ அறிவித்தருளல் வேண்டும் என்று வேண்டினேன். அப்போது அது தன் அழகிய மலர்வாய்திறந்து 'பிள்ளாய்! உலகத்தின் கண் உள்ள உயிர்கள் செய்யும் நல்வினை தீவினைகளை அளந்து பார்த்து நல்லார்க்கு அருள்புரிந்தும் பொல்லார்க்கு இருள்நரகந்தந்தும் எல்லா உயிர்களையும் பரிசுத்தஞ்செய்து வரும் எல்லாம் வல்ல அறக் கடவுளுக்குத் தொண்டுசெய்து வரும் அடியார் குழாத்துட்சேர்ந்த ஒரு தேவன்யான். தீவினைகளுள் மிகக் கொடியது ஓர் உயிரைக் கொலைசெய்வதேயாம்; அக்கொலையுள்ளம் மிகக் கொடியது களங்கம் அற்ற இளம்பருவச்சிறாரைக் கொல்வதேயாம்; அதனினும் மிகமிகக் கொடியது அறிவும் அழகும் அன்புங்குடிகொண்ட சிறுவரைக் கொல்வதேயாகும். இதோ! இங்கே கிடக்கின்ற இப்படுபாவி உன் அருமைக்குழந்தையை நஞ்சு ஊட்டிக் கொன்றாள்! இவள் செய்த இப்பாவத்தினுங் கொடியது வேறு இல்லாமையால் இவளை இப்பிறவியிலேயே எதிர்நின்று தண்டித்து இவள் பாவத்தைத் தீர்த்தற்பொருட்டு அறக்கடவுளால் ஏவப்பட்டு வந்தேன். மிக்க பாவஞ்செய்த இவள் கட்புலனுக்குக் கரிய கொடிய உருவமாய்க் காணப்படுகின்றேன். நீயும் சிலபல பாவங்கள் செய்தவனாகையால் நீ நின் ஊனக்கண்ணாற் பார்த்தபோது கரிய வடிவத்தோடுங் காணப்பட்டேன். இப்போது நீ சூக்ஷுமசரீரத்தில் நின்று அன்போடுருகி ஞானக் கண்ணாற் பார்த்தலால் எனது உண்மையான வடிவத்தோடுங் காணப்படுகின்றேன்' என்று அருளிச் செய்தது, உடனே யான் அதனைக் கைக்கூப்பித்தொழுது 'என் பெருமானே, யானும் பாவியேனாயினும், தேவரீர் திருவுருவத்தைக் காணுதற்குச் சிறிதேனுந் தவம் பண்ணினேன். யான் புனிதன் ஆயினேன்; இக்கொடும் பாவி இன்னும் எத்தனை நாள் இங்கே தண்டிக்கப்படுதல் வேண்டும்?' என்று பணிவாக வினவினேன். அதற்கு அது 'பெரும்பாலும், இவ்வுடம்பில் இவளைத் தண்டிக்கவேண்டு மளவுந் தண்டித்தாயிற்று. இனித் தண்டிப்பின் இவள் அதனை இவ்வுடம்பிற்றாங்காள். இனிக் கொலைச்செயலை இப்பிறவியிலும் இனிவரும் பிறவிகளிலும் சிறிதும் நினையாள். இவள் பெற்ற இளங்குழந்தைகள் மூன்றையும்

இவள் பாதுகாக்க வேண்டியிருத்தலின் இனி நாளையோடு இவள் தண்டனையை நிறுத்துவோம். நீ நல்லனாயிருத்தலின் இவள் அடையும் இக்கொடுந்தண்டனையை நீ சிறிதும் உணராதிருத்தற் பொருட்டு, நீ மகளையிழந்த துயரத்தையே ஒரு காரணமாய்க் கொண்டு உன்னைச் சென்ற ஒரு திங்களாக உணர்வின்றிக் கிடக்க வைத்தோம். உன் மனையாளை இவ்வளவு தண்டித்தும் அவளுக் குரிய கொடுங் குணமானது நீண்டகாலம் வரையில் அவளை விட்டு அகலாது. அவளால் நீ இன்னுந் துன்புறத்தப்படுவை. உன்னாற் பொறுக்கக் கூடாத அளவு அவள் உன்னைத் துன்புறுத்துங் காலங்களில், என்னை நினைப்பையாயின், யான் அவளெதிரிற்றோன்றி அச்சுறுத்துவேன். நாளை உன் உறவினர் சிலரோடு இந்நேரத்தில் இவள் படுக்கையண்டை வந்து திருநீற்றையள்ளி இவட்குக்கொடுப்பை யானால், அது முதல் யான் இவட்குச்செய்யுந் தண்டனையை நிறுத்திக் கொள்வேன்' என்றருளியது. திரும்பவும் யான் அதனை வணங்கி 'என் ஆண்டவனே', கொலைப்பாவத்திற்கு மாத்திரந்தான் இத்தண்டனையோ; எல்லாப்பாவங்களுக்கும் இதுபோல்வ துண்டோ? இத்தண்டனை இப்பிறவியோடு ஒழியுமோ? மறுமையிலும் உண்டோ? செய்தபாவங்களை இறைவன் மன்னிப்பதுண்டோ? இல்லையோ? சிறிது அருளிச்செய்தல் வேண்டும்' என்று இரந்து கேட்டேன். அதற்கு அது'கொலைப் பாவத்திற்கு மாத்திரந்தான் இக்கொடுந்தண்டனை, இறைவன் செய்யும் படைப்புத் தொழிலுக்கு இடர்புரியாத மற்றப் பாவங்களுக்கு இத்தகைய கொடுந்தண்டனை சிறிதும் இல்லை. இக்கொடுந்தண்டனை முழுதும் இப்பிறவியில் இவ்வுடம்பு தாங்காது. ஆயைால், சூக்கும உடம்பில் இவ்வுயிரைக் கொண்டு போய் வேறு உலகங்களில் வருத்துவோம். பாவம் செய்த உயிர் அப்பாவத்தின் பொல்லாங்கை உணர்ந்து அறிவும் அன்பும் உடையதாகி இறைவனை வழுத்தி மன்னிப்புக்கேட்குமாயின் எவ்வகைப் பாவமும் மன்னிக்கப்படும் என்று கருணையோடும் விடை பகர்ந்தது. அதனால் மனம் தேறுதல் அடைந்தேனாகிப் பின்னும் அதனை நோக்கி என் தெய்வமே! அடியேன் தேவரீர் திருவுருவத்தை மறுபடியும் கண்ணாரக்காணும் புண்ணியம் பெறுவேனா?' என்று உருக்கத்தோடும் வினவினேன். அதற்கது, 'நீ இவ்வுலகத்தைத் துறந்து செல்லுதற்கு மூன்று நாட்களின்முன் நனவிலேயே, நீ இப்போது பறிகொடுத்த அருமைப் பெண்

குழந்தையைத் தேவ வடிவத்திற் காண்பாய்; அக்குழந்தையின் வடிவந்தோன்றி மறைந்த பின் என்னை நினைப்பையாயின் யான் நின் கட்வுலனுக்கு எதிரே தோன்றுவேன்; என்னைக் கண்ட மூன்றாம் நாள் திரும்பவும் என்னைக்கண்டு அமைதியாக என்னோடும் மேலுலகங்களுக்குப் போதுவை' என்று அருளி மறைந்து போயிற்று. அத்திருவுருவங் கட்டளையிட்டவாறே மறுநாளிரவு என் உறவினர் சிலரோடும் அவள் படுக்கையண்டை சென்று அவளுக்குத் திருநீற்றையள்ளிக் கொடுக்க அன்றோடு அத்தேவதண்டனை நின்று போயிற்று. அதுமுதல் அவள் என்னிடத்து மிகுந்த அச்சமுடையவளாய் நடந்து வந்தனள். என்றாலும், என் அருமைமகவைக் கொலைசெய்த அவளிடத்து அதன்பின் யான் அன்பு பாராட்டியதுமில்லை, அவளை அணுகியது மில்லை. அவளைப்பார்த்த நேரமெல்லாம் அருவருப்பாகவே காலங்கழித்துவந்தேன். பல வருஷங்களுக்குப் பிறகு ஒருநாள் அவள் தனது கொடுங்குணத்தால் எனக்கு மிகுந்த மனவருத்தத்தை உண்டு பண்ணவே, யான் அத்தேவவடிவத்தை நினைந்தேன்; நினைந்த ஒரு நொடிப்பொழுதில் அது கரியகொடிய உருவத்தோடும் அவள் எதிரிற்றோன்றியது. அவள் அதனைக் கண்டு அலறிக் கீழ்விழுந்து மூர்ச்சையானாள். அங்ஙனம் நேர்ந்ததற்குப் பிறகு என் எதிரில் அவள் வருவதேயில்லை. அதனாலே தான், முன் ஒருநாள் அவள் உன்னை வைது வருந்துகையில் யான் வந்து கோபிக்கவே, உள் ஓடிப்போனாள். அந்தப் பாரசிகப் பெருமாட்டியாரையும் உன்னையும் அவள் புறம்பழித்துப் பேசிய சமயத்திலும் யான் வரவே அவள் உள் ஓடிப்போனது இந்தக் காரணததினாலேதான். அஃதிருக்கட்டும். அந்த அழகிய தேவவடிவம் அருளிச் செய்தபடியே என் இளம்பருவத்தே யான் இழந்துபோன என் அருமை மகளின் தேவவடிவம் சிறிது நேரத்திற்குமுன் என் கண்ணெதிரே தோன்றியது. இதனால் இன்றையலிருந்து மூன்றாம் நாள் யான் இவ்வுலகத்தைத் துறந்து போவது திண்ணம்" என்று என் மாமனார் சொல்லவே என்னால் ஆற்றமுடியாத துயரம் என் உள்ளத்தே உண்டாயது. ஏதும் பேசாமல் எனது மேல்முன்றானை யால் என் கண்களைப் பொத்திக்கொண்டு பொருமியெழுதேன். சிறிது நேரம் சும்மா இருந்த என் மாமனார் பிறகு என்னை நோக்கிக்,

“குழந்தாய், நீ இப்படி வருந்துவது கூடாது. என்றைக் கிருந்தாலும் ஒரு நாளைக்கு நான் இறக்க வேண்டுவது உறுதி தானே. புல்லின் முனைமேல் உள்ள நீர்த்துளியானது எந்த நேரத்திலாயினுங் காற்றால் அசைந்து கீழ்விழுமன்றோ? காற்று இல்லையானாலும், வெயிலால் ஆவியாகமாறிப்போகுமன்றோ? நான் இந்தக் கூட்டைவிட்டுப் போனாலும் சூக்ஷுமச சரீரத்திலாயினும் ஒவ்வொருகால் திரும்பி வந்து உனக்கு ஆறுதல் தந்து செல்வேன். இப்போது அவ்வழகிய தேவவுருவத்தைத் தியானிக்கப் போகின்றேன். நீ அதிபரிசுத்தமுடைய பெண்மணி யாயிருத்தலால் நீயும் அவ்வருள்வடிவைத் தியானிப்பையானால், ஒருகால் அஃதுன் கண்ணுக்குப் புலப்பட்டாலும் புலப்படும்” என்று சொல்லினார்.

என் மாமனார் சொல்லிய சொற்களின் உண்மையை நினைந்து பார்த்து இனி ஆற்றாமல் வருந்துவதிற் பயனில்லையென்று என் மனத்தை ஒருவாறு தேற்றிக்கொண்டு, அத்தெய்வத்தை அன்புடன் நினைத்து ‘என் கண்ணுக்குத் தென்படும்படி குழைந்து வேண்டியிருந்தேன். என் மாமனாரும் ஏதும் வாய்பேசாமல் அமைந்த முகத்தோடு கீழ்நோக்கிய பார்வையிலிருந்தார். அங்ஙன மிருந்த சிறிது நேரத்திற்கெல்லாம் எங்கட்கு எதிரிலே மேலே ஆகாயத்தில் ஒரு பேரொளிவட்டம் மினுமினு வென்று கிளர்ந்து தோன்றியது. அவ்வளவு அமைதியும் அழகும் வாய்ந்த ஒரு பேரொளிப் பிழம்பை இதற்குமுன் யான் எங்குங் கண்டதேயில்லை; அவ்வொளியைப் பார்க்க என் கண்கள் சிறிதுங் கூசவில்லை; அவ்வொளிவட்டத் தோற்றத்தை அடுத்து அற்புதமான ஒரு மணங்கமழ்ந்தது; அதனையடுத்து மின்னொளி யில் திரட்டி அமைத்தாற்போன்ற அவ்வழகிய ஆண்தேவவடிவம் அவ்வொளி வட்டத்தின் நடுவில் தோன்றியது. அத்தேவனின் முகத்திற் பொழிந்த அருள் அழகையும், அம்முகத்தில் விளங்கின கருணை ஒழுகு விழிகளின் பொலிவையும் மற்ற அங்கங்களின் திருந்திய தெளிவையும் பேதையேன் என் ஒருநாவால் எங்ஙனம் எடுத்து மொழிவேன். அதனைக் கண்டதும் என் மாமனார் தம் கைகளைத் தலைமேற் குவித்துக்கொண்டு கண்ணீர் ஆறாய்ப்பெருக வாழ்த்தினார்; அடியேனும் அங்ஙனமே கைகூப்பி வேறெதுஞ் சொல்லத் தெரியாமல் ‘என் ஐயனே! என் அப்பனே! என்றேன். அத் திருவுருவம் எங்களை நோக்கிப்

புன்முறுவல் செய்தது. ஆனால், ஏதும் வாய்த்திறந்து பேசிற்றிலது. பின்னர் சிறிது நேரங்கழியவே, அத்திருவுருவமும் அங்கே கமழ்ந்த மணமும் அப்பேரொளி வட்டமும் மெல்ல மெல்ல மறையத் துவங்கின. அச்சமயத்தில் என்னையறியாத ஓர் அயர்ச்சி வந்து சூழ்ந்தது. அப்புறம் இன்னது நடந்ததென்று எனக்கொன்றுந் தெரியாது. மறுபடியும் யான் கண்ணைத் திறக்கையில் கோழி கூவியது. கிழக்கெல்லாம் பொன் நிறமாய் வயங்கிற்று. கதிரவன் செம்பொற் குடம்போலக் காணப் பட்டான். நான் மெல்ல எழுந்து பார்க்கையில் யான் என் படுக்கையில் நன்றாக அயர்ந்து உறங்கினதாகவே கண்டேன். என் மாமனாருக்கு இன்னும் உறக்கம் நீங்கவில்லை. மகிழ்ச்சிததும்பும் முகத்தோடு அவர் நன்றாய்த் தூங்கவே, அவ்வறையைவிட்டு அப்பாற்போய் என் காலைக் கடன்களை முடித்துக்கொண்டு, இக் கடிதத்தை உடனே உங்கட்கு எழுதினேன். இன்று நடப்பன வெல்லாம் நாளைக் கடிதத்தில் எழுதி அனுப்புகிறேன்.

## கடிதம் - 9

*என் ஆருயிர்க்குயிரான காதலரே,*

*நேற்று நான் எழுதிய கடிதத்தைப் பார்த்திருப்பீர்களென்று நம்புகின்றேன். இன்று பிற்பகல் ஏறக்குறைய மூன்று மணியிருக்கும். ஒரு மணிக்கு வாற்கோதுமைக்கஞ்சி குடித்தபின் அயர்ந்துறங்கின என் மாமனார் அப்போதுதான் கண் விழித்தார். விழித்ததும் 'மணி எவ்வளவு?' என்று கேட்டார். மூன்று மணியென்று யான் தெரிவிக்கவே, அவர் "குழந்தாய், இப்போது உன் தமையனும், அந்தப் பாரசிககனவானும் அவர்தம் மனைவியாரும் வேறிரு கனவான்களும் வருவார்கள். நாற்காலிகளைச் செவ்வையாக என் பக்கங்களில் இடு. பின் கட்டிலுள்ள நம்முடைய பேய்கள் நன்றாய்த் துங்குகின்றனவா வென்று பார்த்து, அந்தக் கதவையிழுத்து இந்தப் பக்கந் தாழ்ப்பாள் இட்டுவா" என்று மெல்லெனக் கூறினார். என் மாமியும், நாத்துணாரும் ஒவ்வொருநாளும் பிற்பகலில் இரண்டு மணி முதல் ஐந்தரை அல்லது ஆறுமணி வரையில் நன்றாய்த் தூங்கும் வழக்கத்தை என் மாமனார் செவ்வையாகத் தெரிந்திருந்துங், கதவைத் தாழ்இட்டுக் கொள்ளும்படி கற்பித்ததைப் பார்த்தால் ஏதோ என்னைப்பற்றி முக்கியமானது பேசப் போகின்றார்களென்று எண்ணி, அங்ஙனமே அதனை இழுத்து அரவமின்றித் தாழிட்டுத் திரும்பினேன். தலைவாயிலண்டை வண்டிகள் வந்து நின்றன. இரண்டு நிமிஷத்திலெல்லாம் என் தமையன் முன்னே வழிகாட்டிவர, அவன் பின்னே எங்கள் குலத்தவரான கனவான்கள் இருவரும், அவர்கட்குப் பின்னே என் தந்தையேயனைய அந்தப் பாரசிக கனவானும் என் அன்னையேயனைய அவர்தம் மனைவியாரும் வந்தனர். கனவான்கள் மூவரையும் மாமனார் படுத்திருக்கும் அறையுள் என் தமையன் அழைத்துச் சென்றான். வேறிருகனவான்கள் கூட வந்திருத்தலையறிந்து அப்பாரசிகப் பெருமாட்டியார் அவ்வறைக்குள்ளே செல்லாமல்*

வெளியே நின்ற என்னிடம் வந்து என்னை அணைத்து முத்தமிட்டார்கள்; உடனே அவர்களிருப்பதற்கு ஒரு நாற்காலி எடுத்து வந்து இட்டு, அதன்மேல் அவர்களை அமர்வித்து, அவர்கள் விருப்பப்படி யானும் ஒரு சிறு விசிப்பலகைமேல் அவர்கள் பக்கத்தில் இருந்தேன்.

உடனே என்னை நோக்கிக் "குழந்தாய், பெரிய ஐயாவுக்கு உடம்பின் நிலைமை எப்படியிருக்கிறது? யான் கேள்விப்பட்டதில் அவர்கள் பிழைத்தெழுவது அருமையென்று தெரிந்து, இவ்வளவுக்கும் நான் காரணமாயிருந்ததை எண்ணி எண்ணி என் நெஞ்சம் ஏங்குகின்றது!" என்று தம் அழகிய விழிகளிற் கண்ணீர் துளும்பத் துயரத்தோடுங் கூறினர்.

அச்சொற்களைக் கேட்டு யானுங் கண் கலங்கி "அன்புருவான அம்மா, இந்த வீட்டில் நடந்திருக்குங் கொடுஞ் செயல்களை மட்டுந் தாங்கள் தெரிந்திருப்பீர்களாயின் என் மாமனாரின் நோய்க்குத் தாங்கள் ஓர் எள்ளளவுகூடக் காரணமாகமாட்டீர்களென்றும், அதற்கு என் மாமியும் நாத்துணாருமே நெடுகக்காரணமாய் வந்திருக்கிறார்களென்றும் அறிந்துகொள்வீர்கள். அக்கொடுஞ் செயல்களையெல்லாம் முந்தாநாளிரவுதான் என் அருமை மாமனார் வாயாற் கேட்டுணர்ந்தேன்; அற்புதமான சில காட்சிகளையுங் கண்டேன். இவற்றையெல்லாந் தங்களுக்குச் சொல்லவேண்டு மென்று நான் விரும்பியும், அவைகள் என் மாமனாரது குடும்பத்தைப் பற்றியன வாயிருத்தலால், அவருடைய கட்டளையின்றிச் சொல்ல அஞ்சுகின்றேன். இன்றைக்கு அவரிடம் உடன்பாடு பெற்றுக் கொண்டு நாளைக்கு அவற்றை உங்களுக்குத் தெரிவிக்கின்றேன்" என்று மெல்லிய குரலிற் கூறினேன். அச்சொற்களைக் கேட்டதும் அவ்வம்மையார் ஒருவாறு மனந்தேறியவராய், "நல்லது அம்மா, நம் அன்பிற்சிறந்த பெரிய ஐயா நம்மைவிட்டு விரைவிற் பிரிந்து போய் விடுவார்கள் போல் தோன்றுகிறதே! இவ்வளவு கொடுமையான இந்த இடத்தில் அவருக்குப் பின் நீ எவ்வாறு இருந்து காலங் கழிப்பாய்" என்று பொருமலோடும் சொல்லினர்.

"ஆம். அம்மா, அவருக்குப்பின் அரைநிமிஷமும் 'யான் இங்கிருக்க முடியாது. எனக்கு நீங்கள்தாம் புகலிடம். எனக்குத் தாயுந்தந்தையும் நீங்களும் ஐயாவுந்தாம். இப்படியே என் மாமனாரும் எனக்கு முந்தாநாள் இரவு சொன்னார்கள். என்னைப்

பற்றிய சில இரகசியங்களை இன்னும் உங்களுக்குச் சொல்லா மலிருக்கின்றேன்; சொல்லச் சமயம் வாய்க்கவில்லை" என்று சொல்லுகையில் நாணத்தினால் மேலும் பேசமாட்டாமல் தலை கவிழ்ந்து கொண்டேன்.

என்மேல் அன்பாற்கனிந்த அவ்வன்னையார், "குழந்தாய், நீ எதற்காக வெட்கப்படுகிறாய் என்பது எனக்குத் தெரியும். நீ அதற்காக வெட்கப்பட வேண்டாம். போனவாரத்தில், உன் தமையனார் நாலைந்துமுறை எங்கள் வீட்டிற்கு வந்து என் கணவரிடத்தும் என்னிடத்தும் மிகவும் அன்போடு அளவளாவி உன்னைப் பற்றிய செய்திகள் அத்தனையும் சொல்லிப் போனார். பெரிய ஐயா அவர்கள் உன்னாற் காதலிக்கப்பட்ட தெய்வநாயகம் என்பவருக்கு உன்னை மணஞ்செய்து கொடுக்கும்படி எங்களுக்குச் சொல்லியனுப்பினார்கள். நாங்கள் அங்ஙனம் நியமிக்கப்பட்டது எங்கள் பாக்கியந்தான் என்று நினைத்திருக் கின்றோம். பெரிய ஐயாவைப் போன்ற அவ்வளவு நல்லகுணம் வாய்ந்த ஒருவரை நீ மாமனாரகப் பெற்றதும் அங்ஙனமே எல்லா நற்குணங்களும் அமையப் பெற்ற ஒருவரை நீ தமையனாகப் பெற்றதும் உனது புண்ணியமேயாம். குழந்தாய், அன்றொருநாள், நாங்கள் உன்னைக் கடற்கரையிற் கண்டதுமுதல் என் மூத்தமகளே உயிர் பெற்றெழுந்து 'கோகிலம்' என வேறுபெயர் வைத்துக் கொண்டு வந்துவிட்டனள் என்றெண்ணி, உன்னை அவள் மேல் வைத்த அன்பினும் மிகுதியான அன்போடு பாராட்டி வருகின்றோம். ஆதலால் உன் பொருட்டு எவ்வளவு செலவு நேர்ந்தாலும், எவ்வளவு வருத்தம் உண்டானாலும் அவற்றை யெல்லாம் ஒரு பொருட்டாய்க் கருதாமல், உன்னை நன்னிலையில் வைப்பதற்கே நாங்கள் உறுதி செய்திருக்கின்றோம்" என்று சொல்லுகையில்,

இடையே யான் "அம்மா, பணச் செலவைப்பற்றிக் கவலையில்லை; எங்கள் குலதெய்வமேயனைய என் மாமனார் எனக்கு நாற்பதினாயிர ரூபாவும் என் தமையனுக்கு நாற்பதினாயிர ரூபாவுந் தமது சொத்திற் பகுத்து எழுதிக் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்" என்றுரைக்கையில் அவ்வம்மையார்,

"ஆம். எனக்கும் அது தெரியும்; அங்ஙனந் தமது விருப்பத்தை எழுதி முடித்துப் பதிவு செய்யும் பொருட்டாகவே பெரிய ஐயா நியாய நூற்பண்டிதர் இருவரை அழைத்துவரும்படி

உன் தமையனாரை நேற்று எங்களிடம் அனுப்பியிருந்தார். நியாய நூற் கல்வியிற்றேர்ச்சி பெற்ற இருவரை அதற்காகத்தான் இப்போது அழைத்து வந்திருக்கின்றோம். இன்னுஞ் சிறிது நேரத்திற்குள் பத்திரம் முதலியவையெல்லாம் எழுதிமுடியும்" என்று விளம்பினார்.

யான் மீண்டும், "அம்மா, பணச்செலவைப் பற்றிய துன்பந் தங்களுக்கு நேராதாயினும், என்னால் வேறுபல துன்பங்கள் விளையுமே என்றுதான் யான் நிரம்பவுங் கலங்குகின்றேன்" என்றேன்.

"அவைகளைப்பற்றி அக்கரையில்லை. என்ன துன்பம் வந்தாலும் நாங்கள் உன்மேல் வைத்திருக்கும் அளவிறந்த அன்பினால் அவைகள் துன்பமாகத் தோன்றமாட்டா" என்று அவ்வம்மையார் அன்போடு கூறினார்கள்.

இந்தப்பேச்சு முடிந்த அந்த நிமிஷத்தில், என் தமையன் அறையுளிருந்து வெளியே எங்களிடம் வந்து, எழுதிமுடித்த சொத்து பங்கீட்டுப்பத்திரத்தைப் படித்துக்காட்டப் போகிறார் களாதலின் அதனைக் கேட்கவரும்படி எங்களிருவரையும் உள் அழைத்தான். அதற்கிசைந்து நாங்கள் உள்ளே சென்றோம். என் மாமனார் அப் பராரசிகப் பெருமாட்டியாரை ஒரு நாற்காலியில் அமரும்படி அன்போடு குறிப்பித்தார். எங்களினத்தவரான நியாய நூற்பண்டிதர் இருவர் கூட இருந்தமையால் என்னையிருக்கும்படி கற்பிக்கவில்லை. அந்தக் குறிப்பைத் தெரிந்துகொண்டு அவ்வம்மையார் அமர்ந்திருந்த நாற்காலியைப்பிடித்துக் கொண்டு அவர் பக்கத்தில் நின்றேன். என் மாமனார் தமது குடும்பத்தார்க்கு இருபதினாயிர ரூபாயும், என் தமையனுக்கு நாற்பதினாயிர ரூபாயும், எனக்கு நாற்பதினாயிர ரூபாயும் பகுத்துக் கொடுத்திருக்கும் வகைகளையும் அப்பங்குகளுக்குரிய சொத்தின் வகைகளையும் தெளிவாகக்காட்டி எழுதிய சீட்டுகளை நியாயநூல்வல்ல அவ்விருவரில் ஒருவர் படித்துக் காட்டினர். அவற்றில் எழுதப்பட்டவையெல்லாம் எங்களுக்கு இசைவா யிருத்தலை அறிந்தபின் என் மாமனார் சிறிது நிமிர்ந்த நிலையிற் பிடிக்கப்பட்டுக் கையெழுத்திட்டார். அப் பாரசிககனவானுஞ் சட்ட நூல் வல்லாருஞ் சான்றாகக் கையெழுத்து செய்தனர். இவை முடிந்த சமயத்தில் அரசினரால் அனுப்பப்பட்டு பதிவு செய்யும் அலுவல் பார்ப்பவர் வந்து சேர்ந்தார்; அவர் அப்

பத்திரங்களைப் பார்த்துப் படியெடுத்தெழுதிக்கொண்டு சாட்சிக்காரரிடத்தும் என் மாமனாரிடத்துங் கையெழுத்தும் பெருவிரல் ஒப்பமும் வாங்கிக்கொண்டு சென்றார். அந்தப் பாரசிககனவானே அப்பத்திரத்திற் கண்டவற்றை நடப்பித்தற்கு அதிகாரமுடையவராக நியமிக்கப்பட்டதனால், அவற்றை என் மாமனார் அவர் கையிலேயே கொடுத்துவிட்டார். அப்பத்திரத் திற் கண்டவற்றைப் பெயர்த்தெழுதிய மூன்று வேறு கடிதங்களில் ஒன்று என்னிடத்தும், மற்றொன்று என் தமயனிடத்துந் தரப்பட்டன; மூன்றாவது பிரதி என் மைத்துனனுக்காக அப்பால் வைத்துவிடப்பட்டது. என் மைத்துனன் இச்சமயத்தில் கூட இருந்தால் ஏதேனும் வம்பு செய்வானென்றெண்ணியே அவனை ஏதோ ஒருகாரியமாக என் மாமனார் பகல் பன்னிரண்டு மணிக்கே வெளியில் அனுப்பி விட்டார். ஆகவே, இப்போது நடைபெற்று முடிந்த ஏற்பாடு அவனுக்காவது அவன் அன்னை தமக்கைக் காவது சிறிதுந் தெரியாது. இத்தனை விரைவில் இவ்வளவு திறமாகவுந் திருத்த மாகவும் இதனை முடிக்கும்படி ஒழுங்கு செய்து என் தமயனை ஏவிய என் மாமனாரின் அறிவு நுட்பமும், அவர் ஏவியபடியே அப்பாரசிககனவான் உதவியைக்கொண்டு இத்தனையுஞ் செவ்வையாகச் செய்து முடிப்பித்த என் தமையனது நன் முயற்சியும், என் தமையனது வேண்டுகோளுக் கிணங்கி இவ்வரும்பேருதவியை சிறிதுங் காலந்தாழாமற் செய்த அப்பாரசிகப் பெருமானின் பெருந்தகைமையும் நம்மால் என்றும் பாராட்டற் பாலனவாயிருக் கின்றன. தன்வயிற்றிற் பிறந்த மக்களுக்குக் கொடுத்ததைவிட இரண்டு பங்கு மிகுதியாய் எனக்கும் என் தமையனுக்குந் தமது சொத்தைப் பங்கிட்டுக் கொடுத்த என் மாமனாரின் செயற்கருஞ் செயலுக்கு நானும் என் தமையனும் எழுமை எழுபிறப்பும் நன்றி செலுத்துங் கடமைப்பாடு உடையவர்களாய் இருக்கின்றோம்.

இக்காரியம் முடிந்ததும் நியாயதுரந்தார் இருவரும் பதிவு செய்வோரும் எங்கள் எல்லாரிடத்தும் விடைபெற்றுக்கொண்டு ஏகினர். "இப்பெருங்காரியம் எப்போது முடியும்! எப்போது முடியும்!" என்று இதுகாறும் ஆவலோடு உயிர் தாங்கிக் கொண்டிருந்த என் மாமனார், அது முடிவுபெற்றவுடன் மிகுந்த இளைப்புடையவராய்ப் படுக்கைமேற் சாய்ந்துவிட்டார். சிறிது நேரத்திற்கு முன்னெல்லாம் ஒருவாறு மகிழ்ந்திருந்த எங்கட்கு இப்போது ஆற்றொணாத் துயரம் உண்டானது. எல்லாரும் வாய்

பேசாது வாடிய முகத்தோடு என் மாமனாரை உற்றுப்பார்த்த வண்ணமாய் இருந்தோம். அவர்தம் களைப்புத் தீரும்பொருட்டு அவருக்கு ஏதாயினும் அருந்தக் கொடுக்க வேண்டுமென்பதை அப்பாரசிகப்பெருமான் குறிப்பிட்டமையால், யான் விரைந்து சென்று பின்கட்டுக்கதவைத் திறந்துகொண்டு சமயலறைக்குச் சென்றேன். ஐந்தரைமணி ஆகியும் இன்னுந் தூங்கிக் கொண்டிருந்த மாமியும் நாத்துணாருங் கதவுதிறந்த ஓசைகேட்டு அப்போதுதான் கண்ணைத் திறந்தார்கள். என்னைப் பார்த்ததும் அவர்கள் மறுபடியும் கண்ணை மூடிக்கொண்டார்கள். யானோ சுக்கு நறுக்கியிட்டுக் காய்ச்சிய பாலிற் கற்கண்டு கலந்து அதனை ஒரு கண்ணாடிக் கிண்ணத்தில் ஊற்றியெடுத்துக்கொண்டு மாமனாரிடம் வந்து அதனை அவர் வாயிற் பொருந்தவைத்து அதனைப் பருகும்படி வேண்டினேன்; அவர் சிறிது கண்ணைத் திறந்து அப் பாலை மெல்ல மெல்லப் பருகினார். பின்னர்ச் சிறிது நேரங்கழித்துக் களைப்புத்தீர பெற்றவராகி அப்பாரசிக கனவானைப் பார்த்து இக்காரியத்தை இத்தனை விரைவில் ஒழுங்குபெற முடித்ததைப் பற்றி நன்றியறிவு கூறினார். அதன்பின் என் கையைப்பிடித்து அக்கனவானிடத்தும் அவர் தம் மனைவியாரிடத்துங் கொடுத்து "இன்றுமுதல் இக்குழந்தை உங்கள் குழந்தையேயாவள்; இனி இவளுக்கு ஏதொரு குறைவுமின்றி இவள் விருப்பப்படி நடத்தி வைக்கவேண்டிய மறுமணத்தைப் பற்றி உங்களிடத்தும் இவனிடத்தும் முன்னமே பேசியிருக்கிறேன். இனிமேல் யான் சொல்லவேண்டுவது ஒன்று மில்லை. நீங்கள் எல்லாரும் எல்லாச் செல்வங்களோடும் ஈரநெஞ்சத் தோடும் இறைவனிடத்தன்போடும் விளங்கி எல்லாஉயிர்க்கும் இன்பத்தையே செய்து இனிது வாழ்வீர்களாக! யான் இன்றிரவு இவ்வுலக வாழ்க்கையைத் துறந்து செல்வேன்!" என்று அடங்கிய குரலிற் சொன்னார்.

இங்ஙனம் அவர் கடைசியிற் சொல்லியதைக்கேட்டு நாங்கள் எல்லாருந் துன்பக் கடலில் அமிழ்ந்தினவர்களாய் ஏதும் வாய்பேசக் கூடாமல் கண்ணீர் உதிர்த்துக் கொண்டிருந்தோம். எங்களுடைய துன்பத்தைப் பார்த்து என் மாமனார் தாமும் மிகத் துன்புற்று "என் செய்யலாம்! பேயோடுபழகினாலும் பின் அதனைப் பிரிந்து போகும் போது ஆற்றமுடியாத் துன்பமே நேரும். நல்லவராகிய உங்களோடு பழகிய காலம் சுருக்கமான தாயிருந்தாலும், அதற்குள் எனக்கு உண்டான அன்பிற்கு

அளவில்லை. என் அன்பிற்கினிய கோகிலாவையும் அவள் தமயனையும் என் உயிர்போற் பாராட்டி வந்தேன். அவர்களும் என்னிடத்தில் நிறைந்த அன்போடும் அடக்கத்தோடும் நடந்துகொண்டார்கள். உங்களையும் இவர்களையும் பிரிவது எனக்குப் பெருந்துன்பத்தைத் தந்தாலும், ஈசன் இந்த உலகத்தில் இருக்கும்படி எனக்கு அளந்துபோட்ட நாள் முடிந்துபோயிற்று. என்றைக்கிருந்தாலும் நான் இறக்கவேண்டியதே. ஆதலால் அதற்காக நீங்கள் வருந்திப்பயனில்லை'' என்று கூறினார்.

இவற்றைக்கேட்டு ஒருவாறு மனம் ஆறுதலடைந்த அப்பாரசிக கனவான், 'பெரியய்யா, இண்ணெராத்திரிக்கி எங்களெப் பிரிஞ்சு போரதாச் சொன்னிங்களே! அதென்ன?' என்று கேட்டார்.

என் மாமனார் என்னைப் பார்த்து நேற்றிரவில் தாம் எனக்குச் சொல்லியவைகளையும் தாமும் யானும் நேரேகண்ட காட்சிகளையுஞ் சிறிதும் விடாமல் விரிவாய் எடுத்துச் சொல்லும்படி எனக்குக் கட்டளையிட்டார். அதற்கிணங்கி யான் எல்லா நிகழ்ச்சிகளையும் வழுவாமல் எடுத்துக்கூற அப்பெருமானும் பெருமாட்டியாரும் என் தமையனும் மிகுந்த அச்சத்தோடும் வியப்போடும் அவற்றை முற்றுங்கேட்டார்கள்.இவற்றையெல்லாம் அப்பெருமாட்டியாருக்குக் கூறவெண்ணிய என் அவாவும் தீர்ந்தது. இவ்வளவும் முடிய மாலை ஏழரைமணியாயிற்று. மாமியும் நாத்துணாரும் பின் கட்டிற் சமயற்றொழிலில் நின்றமையால் இவ்வறைக்குள் நடந்ததொன்றும் அவர்கட்குத் தெரியாது; இஃது எனக்கு ஓர் ஆறுதலாயிருந்தது. வெளியே சென்ற என் மைத்துனனும் சில பண்டங்கள் வாங்கிக் கொண்டு அப்போதுதான் உள்ளேவந்தான். என் மாமனார் பின் ஏதோ நினைத்துக் கொண்டவராய் அப்பாரசிகரிருவரையும் பார்த்து, 'நாளை எனது சவச்சடங்குக்குத் தாங்கள் வரவேண்டாம். உயிர் போனபின் இந்த உடம்பின் பொருட்டுத் தாங்கள் வந்து வருந்தலாகாது. மேலும், எங்கள் பார்ப்பாரச்சாதியைச் சேர்ந்தவர்கள் நாளைக்குப் பெருங்கூட்டமாய் இங்கே வந்திருப் பார்கள். அவர்களுக்கு மட்டுமரியாதையாவது, தங்களைப் போலும் நல்லோர்களிடம் நடந்துகொள்ளவேண்டிய முறையாவது சிறிதுந் தெரியா. தங்களைக் கண்டால் அவரவர்க்குத் தோன்றியவாறு தலைக்குத்தலை பேசுவார்கள்.

இங்கே நடக்கும் செய்திகளையும், இனிமேல் நடக்க வேண்டு வனவற்றையும் பற்றிச் சுப்ரமணியன் அடிக்கடி உங்களிடம் வந்து தெரிவிப்பான். எனக்கு மிகுந்த அயர்ச்சியாய் இருக்கின்றது. ஐயா என்னை முத்தமிட்டு விடை கொடுங்கள்! அம்மா, உங்கள் கையை நான் முத்தம் வைத்துக் கொள்கின்றேன்" என்று அவர்களிரு வரிடத்தும் அன்போடு கூறினார். அப்பாரசிககனவானும் அம்மையாரும் தாங்காத் துயரத்தினராய் மாமனாரை முத்தம் வைத்துக்கொண்டு பிரியமனமின்றியிருந்தும், இறக்குந்தறு வாயில் உள்ள அவருக்கு இனி வருத்தந்தராலாகாதென்று குறிப்பித்துக் கொண்டு, அவரது காலை அவ்விருவருந்தொட்டு வணங்கியபின், மெதுவாக அவ்வறையைவிட்டு வெளியே போவாராயினர். என் மாமனார் செய்த சைகைப்படி யானும் என் தமையனும் அவர்களோடு தெருவாயில் வரையிற் சென்றோம். அவ்வன்னை யார் என்னைத் தமது கையில் அணைத்துக் கொண்டே நடந்தார். அப்பெருமான் என் தமையனை அணைத்துக்கொண்டு சென்றார். வாயிலண்டை வந்ததும் எங்களிருவர்க்கும் நிரம்பவும் உருக்கமான குரலில் ஆறுதல் மொழிகள் சொல்லிவிட்டு, "இன்னுஞ் சிலநாட்களில் நாமெல் லாம் ஓரிடத்தில் ஒன்றாயிருப்போம், கவலை வேண்டாம். இன்று இரவு முழுதும் பெரிய ஐயாவிடம் நீங்களிருவருங் கவனமா யிருங்கள்!" என்று அவ்வம்மையார் சொல்ல அதற்கிணங்கி அவர் கணவருஞ் சொன்னார். அதன்பின் நாளை மாலையில் தம்மை வந்து சந்திக்கும்படி அக்கனவான் என் தமையனுக்குத் தெரிவித்து வண்டியிலேறினார். அம்மையாரும் பின்னும் எனக்கு ஆறுதல் சொல்லி வண்டியிலேறிக் கொண்டார். இனி யெப்போது ஒருவரையொருவர் காண்குவமோ என்னுந் துயர நினைவால், வண்டி எங்கள் கண்ணுக்கெட்டாமல் மறையும் வரையில் நாங்கள் அவர்களையும் அவர்கள் எங்களையுமாகச் சிறிது நோக்கிநின்று அப்பால் உட்புகுந்தோம். உடனே என் தமையனை மாமனாரிடம் வைத்துவிட்டு, எனது மாலைக் கடனை முடித்து வந்து, நாளைக்குக் கடிதம் எழுத நேராதோ என்னும் அச்சத்தால் இதனை அப்போதே எழுதி என் தமையன் வாயிலாகத் தபாலுக்கு அனுப்பினேன். இனி நடப்பனவற்றைப் பிறகு எழுதுகிறேன். இன்று நிகழ்ந்தவை களால் என் உள்ளம் மிகக்கலங்கியிருக்கின்றது. என் அமுதனை யீர், உமது துணையையே நம்பி இவ்வுயிரைத் தாங்குகின்றேன்.

## கடிதம் - 10

சென்ற ஒரு திங்களாகத் தங்களுக்குக் கடிதம் எழுதக்கூடாது போனமைபற்றி ஏக்கம் அடைந்தவளாய் இருக்கின்றேன். இதற்கிடையில் தங்களிடமிருந்துவந்த இரண்டு கடிதங்களும் எனக்குப் பெருமகிழ்ச்சியையும் பேராறுதலையுந் தந்தன. இக் கடிதங்களில் தாங்கள் குறிப்பிட்டிருக்கும் ஒரு செய்தி என் உள்ளத்திற் கலக்கத்தை விளைவிக்கின்றது. தங்களுக்குச் சேதுராமன் என்னும் ஒரு பார்ப்பன இளைஞனின் நேசம் கிடைத்திருப்பதாகவும், அவன் தங்களிடத்தில் மிகுந்த அன்புடையவனாய் நடத்தலின் தாங்களும் அவன் மேல்நிரம்ப அன்புவைத்து ஒழுகுவதாகவும், அவன் நம்மிருவர் நேசத்தையும் அறிந்து களிப்பதோடு நமக்கு வேண்டிய உதவி யெல்லாஞ் செய்ய விரும்புவதாகவும் எழுதியிருக்கிறீர்கள். தாங்கள் அறிவிற் சிறந்தவர்களாய் இருந்தாலும் தங்களுக்கு இயற்கையாகவுள்ள நல்லதன்மையால், அன்புடையவர்போல் நடக்கும் எவரையுந் தாங்கள் எளிதில் நம்பிநடத்தலை நான் சிறு பருவ முதற் கொண்டே உன்னிப்பாய்ப் பார்த்துவந்திருக்கின்றேன். எனக்கு இது சிறிது துன்பத்தைத் தருகின்றது. மேலுந், தங்கள் நண்பன் பார்ப்பன சாதிக்குரியவன் என்றதைக் கேட்டது முதல் என் மனம் ஐயுறவுடையதாய் இருக்கின்றது. நானும் பார்ப்பாரச் சாதியிற் பிறந்தவளேயாயினும் பார்ப்பனர் பலரோடும் பழகிப் பார்த்ததில் அவர்கள் பெரும்பாலுந் தங்காரியத்திலேயே கருத்துடையவர்களென்றும், பிறரது நன்மையைச் சிறிதாயினும் எண்ணிப் பாரார்களென்றுந், தங்காரியம் முடிப்பதற்கு எதுவுஞ் செய்யத் துணிவார்களென்றும் அறிந்திருக்கின்றேன். அதனால், அவர்கள் சொல்லி லாயினுஞ் செயலிலாயினும் எனக்குச் சிறிதும் நம்பிக்கை வைக்கக் கூடவில்லை. அவர்களிற் சிலர் நல்லவராகவும் இருக்கலாம். தங்கள் நண்பர் நல்லவராயிருக்கவுங்கூடும். என்றாலும் தங்களை எச்சரித்து வைக்க வேண்டுவது எனது கடமையென்றெண்ணி இதனைக் குறிப்பிட்டேன். யானெழுதியது

தவறாயின் என்னை மன்னிக்கும் படி தங்களைப்பலகாலும் வேண்டிக் கேட்டுக் கொள்ளுகின்றேன். எல்லாம் உணர்ந்த தங்களுக்குப் பேதையேன் எழுதவேண்டுவது என் உண்டு!

எம்மவர் சுயகாரியப்பிரியர் என்பதற்குச் சென்ற ஒரு மாதமாக இங்கு நடந்து வருபவைகளே போதிய சான்றாகும். அருமையிற் சிறந்த என் மாமனார் உயிர் துறந்த மறுநாட் காலையிலேயே என் பெற்றோரும் அருமைத் தங்கை தனலட்சுமியும் இங்கு வந்து இருபது நாள் வரையிலிருந்து பத்து நாட்களுக்கு முன் தான் வீட்டுக்குத் திரும்பிச் சென்றார்கள். அவர்கள் இங்கேயிருந்தது ஒருவகையில் ஆறுதலாயும் மற்றொருவகையில் வருத்தமாயும் எனக்குத் தோன்றிற்று. அவர்கள் இங்கேயிருந்தவரையில் மாமியாரும் நாத்துணாரும் என்னைத் துன்புறுத்துவதற்கு இடமில்லா திருந்தது. ஆனாலும், என்னைப்பெற்ற அன்னை எப்போதும் போல என்னிடத்தில் தாராளமான அன்போடு நடந்துகொள்ளாமையும், என் தந்தையார் என்னோடு பேசியபோதெல்லாம் முகக் கடுகடுப் போடு சுருக்கமாய்ப் பேசினமையும், என் தங்கையாவது, தமையனாவது என்னோடு தனித்துப் பேசுதற்கு என் பெற்றோர்கள் இடந்தராது வந்தமையும் என் நெஞ்சத்தைப் புண் ஆக்கின. துக்கங் கொண்டாடவந்த எங்கள் சாதிப் பெண்பாலாரெல்லாம் என்னைப் பாராமுகமாய் நடத்திச் செல்லும்படி மாமியும் நாத்துணாரும் ஏதேதோ அவர்கள் காதிற் சொல்லிவந்ததும் அப்புண்ணிற் கோல் நுழைத்தாற் போலாயிற்று. அப்பாரசிக குடும்பத்தாராவது இடைக் கிடையே இங்கு வந்திருந்தால் அஃதெனக்கோர் ஆறுதலைத் தந்திருக்கும். அவர்கள் வருவதற்கும் வழியில்லாமற் போயிற்று. அவர்கள் வருகையினாலேயே என் மாமனார் இறக்கலானார் என்னும் பழிச்சொல்லை மாமியும் நாத்துணாரும் வருவார் போவாரெல்லாரிடத்தும் ஒரு பாடமாய்ச் சொல்லி வந்தனர். நுண்ணறிவிற் சிறந்த அப்பாரசிகப் பெருமானும் பெருமாட்டியும் இவ்வாறு பழிச்சொற் பரவுமென்பது முன் உணர்ந்தே இங்கு வராமல் நின்று போனார்களென்று, அவ்வம்மையார் இடைக் கிடையே என் தமையன் வாயிலாக எழுதிவிடுத்த அன்பான துன்டுக்கடிதங்களாற் றெரிந்து கொண்டேன். என் தமையன் என்னைத் தனியே சந்தித்துப் பேச இடம்பெறாமையால், இத் துண்டுக்கடி தங்களையும் தாங்கள் எழுதின அன்பான

கடிதங்களையும் என்கையிற் சேர்ப்பிக்கவும் என்னருமைத் தங்கை நேரம்பார்த்து மிகவுந் திறமையோடும் பேர் உதவி புரிந்து வந்தாள். என் பெற்றோருந் தங்கையுந் தமதில்லத்திற்கு ஏகிச் சற்றேறக் குறையப் பத்துநாட்கள் ஆயின. இப்போது என் தமையன் மட்டும் என்னை அடிக்கடி வந்து பார்த்துப்போகிறார். என் பெற்றோர்களோடு எங்கள் இல்லத்திற்கு யான்போக விரும்பியும், அவர்கள் என்னை அழைத்துக்கொண்டு போக இசையாமற் சென்றதைப்பற்றி என் உள்ளம் வெதும்பியது. அது போகச், சென்ற பத்துநாட்களாய் எனக்குப் புதிய ஒரு துன்பம் முளைத்திருக்கின்றது. என் மைத்துனர் ஐந்தாறு நாட்களாய் என்னிடம் மிகவும் அன்பாக நடந்து வருகிறான். மாமியும் நாத்துணாருங்கூட என்னிடம் அன்பு காட்டுகிறது போற் காணப்படுகின்றனர்.

ஏழெட்டு நாட்களுக்குமுன் என் மைத்துனன் தனியே என்னிடம் வந்து “கோகிலா, ஏதொன்றும் நீ என்னிடம் திறப்பாகச் சொல்லு கிறாயில்லையே. நீ ஏன் இவ்வளவு மௌனமாக இருக்கவேண்டும்?” என்று கேட்டான்.

“உன்னிடம் யான் எதைத் திறப்பாகச் சொல்லவில்லை? பேச வேண்டியதொன்றும் இல்லாமையாற் கல்வியிலேயே எனது காலத்தைக் கழித்துவருகின்றேன்” என்று அவனுக்கு மறுமொழி புகன்றேன்.

“நல்லது, என் தந்தையார் லட்சரூபாய்க்குச் சொத்து உடைய வராயிற்றே. எனக்கு, இருபதினாயிரந்தானே எழுதிவைத் திருக்கிறார்? மற்ற எண்பதினாயிரமும் எங்கே?” என்று வினாவினான்.

இவன் அத்தனை நுண்ணறிவு இல்லாதவனாகையால் இவனைத் தட்டிக்கொடுத்து இவன் வாயினாலேயே இவன் எவ்வளவு தெரிந்திருக்கின்றானென்பதை உணர, “நீ மிகுந்த திறமை யுடைவனாகையால் நீயேயெல்லாந் தெரிந்திருப்பாய் என்று எண்ணினேன். ஆனால், உனக்கொன்றுந் தெரியாதா?’ என்று கேட்டேன்.

‘ஓ! எனக்கெல்லாந்தெரியும். உனக்கு நாற்பதினாயிர ரூபாயும் உன் தமையனுக்கு நாற்பதினாயிர ரூபாயும் என் தகப்பனார் எழுதி வைத்திருக்கிறார் அல்லவா?” என்றான்.

"நீ இவற்றை எப்படி அறிந்தாய்?" என்று வினாவினேன்.

"என் பங்குக்கு இருபதினாயிரம் எழுதி வைத்திருக்கிற பத்திரத்தை எடுத்துப் படித்துக்காட்டும்படி என் தாயும் தமக்கையுங் கேட்டார்கள். அப்படியே நான்படிக்கப் பிறகு மற்ற எண்பதினா யிரத்தைப் பற்றி என்னை விவரங்கேட்டார்கள். எனக்குத் தெரியா தென்று சொல்லவே, அவர்களிருவரும் யோசித்துப் பத்திரம் பதிவு செய்தவரைக் கேட்டால் தெரியு மென்று எனக்கு உளவு சொன்னார்கள். வழிதெரிந்தபின் அந்த ரகசியத்தைக் கண்டுபிடிப்பது எனக்கொரு பெரிதா?" என்று தன்னை வியந்து கூறினான்.

"இவ்வளவு திறமைஉடைய உனக்கு நான் சொல்ல வேண்டுவது வேறென்னஇருக்கின்றது? அஃதிருக்கட்டும். உன் தாய் தமக்கையர் வேறென்ன சொன்னார்கள்?" என்று கேட்டேன்.

"கோகிலம் நம்ம ஆத்துக்கு வந்தவளானதால் அவளுக்கு அவ்வளவுதொகை கொடுக்கவேண்டியதுதான்; அவள் தமையன் நம்ம இனத்தாரில் பி.ஏ. பரிட்சை தேறினவனாதலால் அவனுக்கும் அவ்வளவு தொகை கொடுக்கவேண்டியதுதான் என்று சொன்னார்கள்" என்றான்.

இவன் சொல்லிய இது சிறிதும் நம்பத்தக்கதன்று. இவன் தாய் தமக்கையரின் குணப்பாங்கை நான் செவ்வையாக அறிந்திருப் பதனால், அவ்வளவு பெருந்தொகையை எங்க ளிருவர்க்கும் பகுத்துக் கொடுத்ததைப்பற்றி அவர்கள் வயிறெரிந்து வைத்திருப் பார்களேயல்லாமல் இவன் சொல்லிய படி மகிழ்ந்து பேசி இரார்கள் என்பது திண்ணம். உண்மை அவ்வாறிருக்க, இவன் இப்போது இசைந்து பேசியதைப் பார்த்தால் இவனும் இவன் தாய் தமக்கையரும் என் கையிலிருக்கும்பொருளைப்பிடுங்க ஏதோ சூழ்ச்சி செய்திருக்கிறார் களென்பது தெரிகின்றது. ஆதலாற் பின்னும் இவனை ஆராய்ந்து பார்க்கலாமென்றெண்ணி, "நல்லது, இனி ஆகவேண்டுவது என்ன?" என்று கேட்டேன்.

"நீ இந்த வீட்டுக்கு முதல் மருமகளாதலால் இங்கே எல்லா வற்றிருக்கும் நீதான் தலைமையாக இருந்து எல்லாவற்றையும் நடத்தி வைக்கவேண்டும். என் தாய் தமக்கையர்கள் அறிவில்லாதவர் களாகையால், அப்பா இருந்தபோது ஏதோ உன்னைக் கொடுமையாய் நடத்தி விட்டார்கள். கடந்துபோன

தவறுகளையெல்லாம் நீ பாராட்டக்கூடாது. அப்பா இறந்து போன பிறகு அவர்கள் மனந் திருந்தியிருக்கிறார்கள். அவர்கள் உன்னிடத்திற் கொடுமையாக நடந்து கொண்டதைப் பற்றி இப்போது மெத்தவருத்தப் படுகிறார்கள்'' என்றான்.

இவன் இப்படிப் பேசுவதெல்லாம் என் கையிற் பணமிருப் பதனாலேயே என்று தெளிவாக உணரலானேன். ஈட்டி எட்டின மட்டுங் குத்தும் பணம் பாதாளமட்டும் குத்தும்' என்ற பழமொழி உண்மையாகவே இருக்கின்றது. பணம் இருந்தால் எல்லா வல்லமையும் உண்டு; பணமில்லாதவர்கள் பிணமென்றே உணரப் பெற்றேன். பணத்தின் பொருட்டு இங்குள்ளவர்கள் எனக்குத் துன்பஞ் செய்யாமல் நடப்பதுபோற் காட்டுவார் களாயினும், உள்ளுக்குள் அப்பணத்தைப் பறிக்க வேறு என்னென்ன சூழ்ச்சி செய்வார்களோவென்றஞ்சினேன். பொருளை இழந்து போவது பற்றி யான் வருத்தப்படவில்லை. வரும்போது பொருளைக் கொண்டு வந்தோமா? போம்போது அதனைக் கொண்டு செல்லப் போகிறோமா? "காதற்ற ஊசியும் வாராதுகாண்நின்கடைவழிக்கே" என்பது முற்றுமுணர்ந்த மேலோர் திருவாக்கன்றோ? ஆனாலும், இவ்வளவு பெரும் பொருளை இவர்கள் கையில் வைத்திருந்தால் நல் வழியில் அதனைப் பயன்படுத்தாமையோடு தீயவழியிலுந் தாராளமாய்ச் செலவிட்டுப் பழிபாவாங்களைத் தேடிக்கொள்வார் களென்பதைச் செவ்வையாக உணர்ந்தன்றோ என்னருமை மிக்க மாமனார் அதில் ஒரு பெரும்பாகத்தை எனக்கு எழுதிவைத்தார்? ஆகையால், அதனை என்னால் இயன்றமட்டும் பாதுகாத்து அவரால் அறிவிக்கப்பட்ட நல்வழிகள் பலவற்றிலும் அதனைப் பயன்படுத்துவதன்றோ எனது பெருங்கடமை என்று எண்ண மிட்டுக் கொண்டிருந்தேன். அன்றைக்கு என் மைத்துனனும் அவ்வளவோடு அப்பேச்சை விட்டுவிட்டான். அடுத்தநாள் என்னோடு பேசுகையில் பின் வருமாறு சொல்வானானான்.

"கோகிலா, அப்பா இருந்தபோது ஆங்கிலமாவது தமிழாவது நன்றாய்ப் படியாமற்போனேன். எந்த அலுவலிலும் போய் அமரப் போதுமான படிப்பில்லை. குடும்பப் பாரமோ இப்போது என் தலையிற் பொறுத்திருக்கின்றது. நமது வீட்டுச்செலவுக்குத் தக்கவரத்து இல்லை. ஏதேனும் ஒரு பெருவியாபாரமாவது செய்யலாமா என்று எண்ணிக் கொண்டிருக்கின்றேன், உனது கருத்தென்ன?"

“அப்படியானால், படித்தவர்களெல்லாரும் உத்தியோகம் பார்க்கவேண்டும்; படிப்பில்லாதவர்கள் மட்டும் வியாபாரம் முதலான மற்றத்தொழில்களைப் பார்க்கவேண்டுமென்பதுதான் உன் கருத்தோ?” என்று கேட்டேன்.

“ஆமா, சொக்காத் தலைப்பாவோடு வெள்ளைவேட்டி உடுத்திக்கொண்டுபோய் உத்தியோகம் பார்த்துப் பணஞ் சம்பாதிப்பது தான் படிப்பிற்கு அழகு. வியாபாரம் பண்ணுவதற்கு படிப்பு ஏன்?” என்றான்.

“அப்படியானால் உத்தியோகத்தாற் பணஞ்சம்பாதிப்பவர்களுக்கும் வியாபாரத்தாற் பணஞ்சம்பாதிப்பவர்களுக்கும் வேறுபாடு யாது?” என்று வினவினேன்.

“உத்தியோகஞ் செய்வோருக்குப் பெருமை உண்டு. எல்லாரும் அவரைக்கண்டு அச்சத்தோடு நடப்பார்கள். வியாபாரிகளுக்கு அவ்வளவு பெருமையும் மதிப்புமில்லை” என்றான்.

“நல்லது, உத்தியோகம் பார்ப்பவருக்கு அவ்வளவு பெருமையும் மதிப்பும் வருவது அவரைப்பற்றியா அவரது உத்தியோகத்தைப் பற்றியா?” என்று கேட்டேன்.

“அவருடைய உத்தியோகத்திற்காகத்தான் பெருமையும் மதிப்பும்” என்றான்.

“அப்படியானால் அவருக்காக ஏதுபெருமையும் ஏதுமதிப்பும் இல்லையென்பது பெறப்படுகின்றதன்றோ? உத்தியோகத்தால் வரும் உயர்வும் மதிப்பும் அவ்வுத்தியோகத்திற்கு உரியனவாய்ப் போகின்றனவேயல்லாமல், அதனைத் தாங்கினவர்க்கு ஏதும் இல்லையே. தனக்குச் சொந்தமல்லாத ஒன்றைக்குறித்துத் தான் பெருமை பாராட்டுவது எவ்வளவு பேதைமை! கூத்துமேடைமேல் அரசவேஷம்பூண்டு ஆடுவோன் தன்னையே ஓர் அரசனாய்ப் பாவித்து மகிழ்ந்தால், அஃது எவ்வளவு நகைப்புக்கிடமாய் இருக்கும்! அதுபோலவே, அரசனுடைய அதிகாரத்தைத் தாங்குவோர் அவ்வதிகாரத்திற்குரிய பெருமையைத் தமதாக நினைத்து மனப்பால் குடித்தல் எவ்வளவு அறியாமையாய் இருக்கின்றது! கற்றதற்குப்பயன் அறிவா, அறியாமையா? கற்றும் அறிவில்லாத உத்தியோகஸ்தரைக் காட்டிலும், வீண்பெருமை பாராட்டாத கல்லாதவரே

சிறந்தவரன்றோ?" என்றுகூறினேன். இச்சொற்களை கேட்டு இவற்றிற்கு வகைசொல்லத் தெரியாதவனாய் அவன் சிறிது நேரம் வெட்கமுற்றுத் தலைகுனிந்த பிறகு, 'நல்லது, கோகிலா நீ சொன்னவையெல்லாம் சரி. பதவிகளால் வரும் பெருமை தன்னைச் சேராதென்றால், ஒருவன் தனக்குச் சொந்தமான பெருமையைத் தேடிக் கொள்வதற்கு வேறுவழிதான் எப்படி?" என்று கேட்டான்.

"நீயே நன்றாய் நினைத்துப்பார்த்து, உன்னறிவிற்பட்டதை எனக்குச்சொல், அதன்மேல் என்னறிவிற்குட்பட்டதை நான் சொல்லுகிறேன்" என்றேன்.

"பொருள் நிறைய இருந்தால் எல்லாப்பெருமையும் ஒருவனுக்குத் தானே வரும் என்று எனக்குப்படுகின்றது" என்று சற்று ஐயுறவோடு கூறினான்.

"உத்தியோகத்தால் வரும் உயர்வு உத்தியோகத்தோடு போய்விடுதல் போலப் பணத்தால் வரும் நன்கு மதிப்பும் பணத்தோடு போய்விடுமன்றோ? செல்வராயிருந்தகாலத்து நன்கு மதிப்போடு வாழ்ந்தவர்கள், அச்செல்வங்கெட்டு வறியராய்ப் போனபின் எல்லாராலும் அவமதிப்பாய் நடத்தப்படுதலை நீ பார்த்ததில்லையா? என்றேன்.

"ஆமா, பலரைப் பார்த்திருக்கிறேன், உன் தாயைப் பெற்ற பாட்டனும் பாட்டியுங்கூடச் செல்வவான்களாயிருந்தபோது எவ்வளவோ பெருமையோடு வாழ்ந்தார்களாம்; அவர்கள் தரித்திரராய்ப் போனபிறகு எவ்வளவோ மதிப்புக்குறைச்சலாய் நம்மவர்களால் நடத்தப்பட்டார்களாம். அதனால், அவர்கள் நம்மவர் கண்களுக்குத் தென்படாமல் நீயும் நானும் சிறுபிள்ளை களாயிருந்த போதே எங்கேயோ போய்விட்டார்களாம்; உன் தாயோடுகூடப் பிறந்த உன்சித்தி சொல்லுக்கு அடங்காப் பேரழகு உடையவளாம்; அந்த அம்மாளுக்குக் கல்யாணமே ஆக வில்லையாம்; அந்த அம்மாளும் அவன் தம்பி ஒருவனும் அவர்கள் பெற்றோரு மெல்லாம் போன இடம் இன்னுந் தெரியவில்லை. காலஞ்சென்ற என் அப்பா, அவர்களைத் தேடிகொண்டுவரப் பலமுறை முயற்சி செய்தும் பயன்படவில்லை. இவ்வளவும் தரித்திரத்தால் வந்த மதிப்புக் குறைச்சல்தான்" என்று அவன் கூறுகையில் , என் எண்ண மெல்லாம் என் சிற்றன்னை மேலும்

பாட்டன் பாட்டி மேலும் என் தாய்மாமன் மேலும் செல்ல லாயின. இறந்துபோன என் மாமனாரும் மறைந்துபோன இந் நால்வரையும் பற்றிச் சிற்சில முறை என்னிடம் தெரிவித்ததுண்டு. மறைந்துபோன இவர்களைப் பற்றியே யான் தொடர்பாக நினைக்கலானமையால் மேலும் பேசமனமில்லாம லிருந்தேன். அன்றைக்கு அவ்வளவோடு என்மைத்துனனும் பேச்சை நிறுத்திக் கொண்டான். வறுமையால் துன்புற்று எங்கேயோ போய்விட்ட என் சிற்றன்னை முதலான நால்வரையும் பற்றி அன்று முதல் நிரம்பக் கவலையடையலானேன். என் கண்ணனையீர், தாங்கள் சிறுபருவமுதல் இத்தகைய துன்பங்களை அறியாம லிருப்பதுப் பற்றிச் சிறிது பொறாமையடைலானேன். இப்போது தான் என்னாற் சிலதுன்பங்களை அடைந்தீர்கள்! யானோ என் இளந்தைப் பருவமுதல் கவலைக்குந் துன்பத்திற்கும் அவ மதிப்புக்கும் ஆளாயிருந்து புழுங்கிவருகின்றேன். இவ்வளவு தீமைக்குங் காரணம் என்னென்றாற் பழவினையேயென்று பலருஞ் சொல்லுவார்கள். ஆனால், எனக்கது பொருத்தமாகத் தோன்ற வில்லை. பழவினைக்குக் கண்ணுங் காலுங் கையுமா இருக்கின்றன? அது தானே எதனையும் அறிந்து செய்யத்தக்க அறிவுடையதா? அப்படி ஏதும் இருப்பதாகத் தெரியவில்லையே. **ஏதோ மேற் பிறவியிற்பழகிய பழக்கங்களால் இப்பிறவியிலும் நாம் அப்பழக்கத்துக்கு தக்கபடி நடக்கிறோம் என்பதை மட்டும் நான் ஒருவாறு ஒத்துக்கொள்கிறேன்**. ஆனால், இப்பிறவியில் நாம் அடையுந் துன்பங்கள் பெரும்பாலனவற்றிற்கு நாமும் நம்மைச் சேர்ந்தவர்களும் செய்து வரும் புதுவினையே உண்மை யான காரணமென்று ஆழ்ந்து ஆராய்ந்து பார்க்குந்தோறும் யான் அறிகின்றேன். **பெரும்பாலும் ஆண்மக்களாயிருப்ப வர்கள் தாமே எல்லா நன்மைகளையும் அடையவேண்டு மென்னும் நோக்கத்தினாற் பெண்மக்களைப் பலவகையான கட்டுப்பாடுகளுக்கு உள்ளாக்கி யிருக்கின்றார்கள்**. இந்தக் கட்டுப்பாடு களெல்லாந் தமது நலத்தையே கருதிச் செய்தமை யாற், கடைசியாக இவைகளே அவர்களையும் அவர்களைச் சார்ந்த பெண்மக்களையும் பெருந் துன்பத்தில் அமிழ்த்தி விடுகின்றன. ஒருவர் தமது நன்மையையே கருதும்போது, பிறருக்கு அதனால் உண்டாகுந் துன்பம் அவருக்கு தோன்றாமற் போகின்றது. தம்மைவிட்டுப் பிறரை நினைக்க மாட்டாமையின் அதனால் அவருக்கு விரிந்த நோக்கமும் விரிந்த அறிவும்

இல்லாமற் போகின்றன. இவையிரண்டும் இல்லாதவர் தாம் செய்யும் ஏற்பாடுகள் எல்லாவற்றிலும் வழுவிப் பிழைபடுதலின் யானை மண்ணைவாரித் தன்றலையில் இட்டுக்கொள்வது போல, அவர்கள் தாமாகவே தமக்குப் பேரிடரை வருவித்துக் கொள்கின்றனர். மற்றக் குடிமக்களெல்லாம் நல்வழியில் நடக்கும் பொருட்டுத் தானே முன்நடந்து காட்ட வேண்டியவர்களான எங்கள் பார்ப்பன குலத்தவர்கள் செய்து வைத்திருக்குங் கட்டுப்பாடுகளைப் பாருங்கள்!

பெண்பிள்ளைகள் மங்கைப்பருவம் அடைதற்கு முன்னமே அவர்களை மணஞ்செய்து கொடுக்கவேண்டுமென்றும் அப்படிச் செய்யாதவர்களைத் தஞ்சாதிக்குப் புறம்பாக்கவேண்டுமன்றும் ஒரு கட்டுப்பாடு செய்துகொண்டார்கள். இந்தப் பொருந்தாக் கட்டுப்பாட்டை முற்பிறவியிற் செய்த பழவினையா உண்டாக்கிற்று? இல்லையே,பெண்மக்களிடத்தில் தாம்வைத்த நம்பிக்கைக் குறைச்சலினாலன்றோ இவர்கள் தாமாகவே இந்தக் கட்டுப் பாட்டை ஏற்படுத்தினர்? தாம் செய்த இப் புதுவினையால் ஐயோ! இவர்கள் எவ்வளவு துன்பத்தை உழக்கின்றார்கள்! தம்மை நம்பின பேதைப் பெண் மக்களையும் எவ்வளவு பெருந்துன்பத்திற்கு ஆளாக்கி வருகின்றார்கள்! உலக இயற்கையில் உள்ள எந்த உயிர்களிலாயினும் இத்தகைய கட்டுப்பாடு காணப்படுகின்றதா? **ஆடு மாடு மான் மரை மயில் குயில்** முதலான தாழ்ந்த உயிர்களுங்கூடத் தத்தம் பருவம் அடைந்த பின்னன்றோ தம்மிற் கூடிக் களிக்கின்றன? மாஞ் செடி கொடிகளும் இலைநிறையத் தழைத்துப் பூத்தபின்னல்லவா அழகிய வண்டினங்கள் இன்னிசை மிழற்றிக்கொண்டு அவற்றை அணுகு கின்றன? இன்னும் உலகின்கண் உள்ள மக்கட்பிறப்பினரில் ஒரு மிகச் சிறு பகுதியாய் உள்ள எம்பார்ப்பன இனத்தவரை ஒழித்து, வேறெந்த மக்கட் பகுப்பினரிலாயினும் இதனையொத்த பொல்லாத கட்டுப்பாடு காணப்படுகின்றதோ? இல்லையே. இவன் தனக்கு ஏற்றவன் இவன் தனக்கு ஏலாதவன் என்று சிறிதும் பகுத்தறியத் தெரியாத இளம் பெண்மகவை உலக வாழ்க்கையில் தான் செய்ய வேண்டிய அரும்பெருங் கடமைகளையும், அவற்றைத் தான் ஏற்று நடத்துங்கால் தனக்கு உற்றதுணையாவான் இவனேயென்ப தனையுந் தினைத்தனையும் அறிய மாட்டாத ஒரு பேதைப் பெண்மகவை, அதன்றாய் தந்தையாரும் சுற்றத்தவருந் தமது

*புல்லிய நன்மையையே நாடி அம்மகவுக்கு எவ்வகையிலும் ஒவ்வாத ஒருவன் காலிற் கட்டிவிடுங் கொடிய பொல்லாங்கை என்னென்றுரைப்பேன்! என் பெருமானே, இப்பொல்லாங்கின் பொருட்டாகவன்றோ எல்லா இரக்கமும் உடைய நம் இறைவன் அவர்களைக் கடுமையாகத் துன்புறுத்தி வருகின்றான். ஐயோ! நங்குழந்தை மங்கைப்பருவம் அடையும் நாள் இன்றோ நாளையோவென்று நெருங்குகின்றதே! என் செய்வோம்! மணமகன் கிடைக்கவில்லையே! நமது முடைதெரிந்து நங்குழந்தையைக் கேட்கவரும் சிற்சிலருங்கூடப் பதினாயிரம் ரூபா சீதனங் கிடைக்குமா? இருபதினாயிரம், ரூபா கிடைக்குமா என்று நெஞ்சில் ஈரமில்லாமற் கேட்கின்றார்களே! கேட்டபொருளைக் கொடுத்துவிடலாமென்றால் நமது பிழைப்பிற்கே அவ்வளவு பொருள் இல்லையே! கடன் வாங்கிக் கொடுக்கலா மென்றால் நம்மை நம்பி அத்தனை பெரியதொகை எவர் நமக்குக் கொடுப்பார்கள்?' என்று ஏங்கி ஏங்கி மனம் நையுந் தாய்தந்தையர் எத்தனைபெயர்!'' தமக்காகத் தாய்தந்தையர் படும் மனத் துயரத்தை கண்டு உள்ளந்தாங்காமல் வெந்து தமது உயிரையும் வெறுத்து உயிர் துறந்த கன்னிப் பெண்கள் எத்தனை பெயர்! அல்லது தங் கையில் இருந்த பொருளையெல்லாந் தாம் பெற்ற பெண்களுக்கு இங்ஙனஞ் சீதனமாகக் கொடுத்துவிட்டுத் தள்ளாத முதுமைக்காலத்தில் வறுமை கொண்டு பட்டினியும் பசியுமாய்க் கிடந்துமாளும் பெற்றோர்கள் எத்தனை பெயர். மேலும், எங்களவர்களிற் பல அலுவல்களில் அமர்ந்திருப்பவர் களெல்லாம் தாம் மணஞ்செய்து கொள்ளாதிருந்த போதும், மணஞ்செய்தும் பெண்மக்களைப் பெறாதமுன்னும் முறை தவறாமல் கூடியவரையில் ஈரநெஞ்சம் உடையவர்களாய் நடக்கின்றார்களெனவும், ஆனாற் பெண்மக்களைப் பெற்ற வுடனே சீதனங்கொடுக்கவேண்டுவதை எண்ணிப் பலரை வருத்திக் கைக்கூலி வாங்கத் துவங்குகின்றார்களெனவும், தாம் கைக்கூலி வாங்குவது மேலுள்ளார்க்குத் தெரிந்தால் தமது அலுவலை இழந்தும் சிறையில் அடைபட்டும் பெரிதுந் துன்புறுகின்றார் களெனவும் அடிக்கடி கேள்விப்பட்டு வருந்தியிருக்கின்றேன். இவைகளையெல்லாம் எண்ணிப் பார்க்குங்கால், எங்களவர் தமது நலத்தையே கருதிச் செய்த பொருந்தாக் கட்டுப்பாடுகளும் பொருள்மேல் வைத்த பொல்லாத பற்றுதலும் அல்லவோ இவ்வளவு துன்பங்களுக்கும் பிறப்பிடமாய் இருக்கின்றன!*

இவைகளெல்லாம் இவர்கள் தாமாகவே செய்த புதுவினையால் வந்தனவேயல்லாமல், பழவினைப்பயன் என்று சொல்வதற்கு இடமில்லையே! என் மனத்திலுள்ளவருத்தத்தால் இவைகளை யெல்லாந் தங்கட்கு வீணே விரித்தெழுதலானேன். என் ஆருயிர்ப் பெருமானே, மூடிவேகும் ஒருகலத்தில் அதன் மூடியைத் திறந்த அளவானே அதன் உள்ளிருந்த வெப்பம் ஆறுவதுபோல, என் அகத்தேயுள்ள புழுக்கத்தைத் தங்களிடந் தெரிவித்துக் கொண்டால் எனக்கு ஆறுதல் உண்டாகின்றது. ஆதலால், எளியேனைத் தாங்கள் மன்னித்தல் வேண்டும். ஆ! இப்போது இவ்வீட்டு வாயிலில் ஏதோ ஒரு வண்டி வந்து நிற்கும் ஓசை கேட்கின்றது. ஓ! யாரோ யானிருக்கும் மேன்மெத்தைமேல் மெல்ல நடந்து வருவது போற் கேட்கின்றது! மிச்சமும் பின்னர் எழுதுகின்றேன். என் அன்பார்ந்த முத்தம்.

## கடிதம் -11

*என் ஆரூயிர்க்குயிராய்த் திகழும் அன்புள்ள பெருமானே,*

*நேற்றுப் பிற்பகல் யான் தங்கட்கு எழுதிய கடிதங் கிடைத்திருக்குமென்று நம்புகின்றேன். அக்கடிதத்தை முடிக்குந் தறுவாயில் என்னைக் காணவந்தவர்கள் வேறு யாரும் அல்லர், அந்தப் பாரசிகப் பெருமாட்டியாரேதாம். அவர்களும் அவர்களின் சிறிய மகன் ஒருவனும் மட்டுமே வந்தார்கள். சென்ற ஒரு திங்களாக என்னைக் காணாதிருந்தமையால் மெத்த மனம் வருந்தின அந்த அம்மையார் என்னைக் கண்டவுடனே, நெடுநாட்காணாது போன தன் கன்றைத் தேடித்தேடித்திரிந்த ஆவானது அதனைத் திரும்பவுங் கண்டால் எவ்வளவு ஆற்றாமை யோடு அதனிடம் அன்பு பாராட்டுமோ அதுபோலவே என்னை மார்போடு அணைத்து அணைத்து முத்தம் வைத்துக் கண்ணீர் சிந்தினார்கள். யானும் மனம் உருகாமல் இருக்கக்கூடவில்லை. இங்ஙனம் இருவேமுக்கும் நேர்ந்த ஆற்றாமை சிறிது தணிந்தபின், அவ்வம்மையார்.*

*"கண்மணி, சென்ற ஒருமாதகாலமாய் யான் உன்னைக் காணாமையால் உண்டான வருத்தத்தை இப்போது உன்னைக் கண்டு நீங்கப்பெற்றேன். இனி உன்னைக் காண எத்தனை நாளாகுமோ என்பதை நினைக்க என் நெஞ்சம் நீராய் உருகிப் போகின்றது! என் செய்வேன்! ஏதும் நம் கையில் அகப்பட்டதாய் இல்லையே!" என்று உரைத்தார்கள்.*

*இந்த வீட்டில் உள்ளவர்களின் பொருட்டுத் தாம் வரக்கூடா திருப்பதை நினைத்து இங்ஙனஞ் சொல்லு கின்றார்களாக்குமென்று எண்ணினவளாய், "என் அம்மா, இந்த வீட்டில், எனக்கு முன் இருந்த துன்பம் இப்போது இல்லை. என் மாமனார் எனக்கு நாற்பதினாயிரம் ரூபாவும் என் தமையனார்க்கு நாற்பதினாயிர ரூபாவும் எழுதி வைத்திருப்பதை இங்குள்ளவர்கள்*

சென்ற பத்து நாளாகத் தெரிந்திருக்கிறார்கள். பெருந்தொகையான பொருள் எங்கள் இருவர் கையிலுஞ் சிக்கிக்கொண்டதைப் பற்றி இவர்கள் உள்ளுக்குள் மிகுந்த வேக்காளம் உடையவர்களாய் இருந்தாலும் அதனை வெளிக்காட்டாமல் என்னை நல்லதனப்படுத்தி அப்பொருள் முழுமையும் என்னிடத்தினின்றும் பிடுங்கிக் கொள்வதற்கு ஏதேதோ சூழ்ச்சிகள் செய்கிறார்கள். இப்போது எவரேனும் என்னிடம் வந்து பேசினாலும் இவர்கள் முகக் கடுகடுப்பு காட்டுகிறதில்லை.என் தமையனாரும் என்னிடம் தனியே வந்து நாலைந்து நாளாய்ப் பேசிப்போகிறார்; அதற்கும் இவர்கள் ஒன்றுஞ் சொல்வதில்லை. இவையெல்லாம் என் தமையனார் தங்களிடந் தெரிவித்திருப்பா ரென்று நம்புகின்றேன்" என்று யான் கூறுகையில், அப்பெருமாட்டியார் "ஆம், ஆம்" என்று தலையசைத்து "எல்லாம் அவர் வந்து சொன்னார்; அதனாலே தான், யானுந் துணிந்து இன்றைக்கு வந்தேன்" என்று அவர்கள் கூற, 'இங்ஙனமே தாங்கள் ஒழிவுள்ள போதெல்லாம் இங்கே வந்து செல்லலாமே" என்றேன்.

"இல்லை, கண்மணி, நாளை மாலை வண்டியில் நாங்கள் எல்லாரும் பம்பாய்க்குப் போகவேண்டியதாயிருக்கிறது!" என்று வருத்தத்தோடு கூறினார்கள்.

"திடீரென்று இங்ஙனம் புறப்பட வேண்டியது ஏன்? அம்மா" என்றேன்.

"என் கணவனார்க்கு ஒரேஒரு தமையனார் உண்டு. அவர் ஒரு பெரிய வியாபாரி. திரண்டபொருள் உடையவர். அவர்க்குப் பிள்ளை இல்லை. அவர் சிலநாட்களாக நோயாய் இருந்தார். உரத்த உடம்புடையவர் ஆகையால் அவர் நோயிலிருந்து நலம் பெற்று எழுந்திருப்பாரென நினைத்தோம். ஆனால், அவரைப் பார்க்கும் வைத்தியர்கள் எல்லாரும் இன்னும் நான்கு நாளில் அவர் இறந்து போவார் என்று உறுதி சொல்லிவிட்டார்களாம். அவர் எங்கள் எல்லாரிடத்தும் மிகுந்த அன்புள்ளவர்; நாங்களும் அவரிடத்தில் அங்ஙனமே மிகுந்த அன்புவைத்திருக்கின்றோம். உடனே புறப்பட்டுவரும்படி இன்றைக் காலையில் தந்தி வந்தது. காலை முதல் ஐயா அவர்கள் இங்கே கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்கு படுத்தி முடிக்கும் பொருட்டு வெளியே போயிருக்கிறார்கள். வெளியே போகும்போது, உன்னிடம் எல்லாஞ் சொல்லிவிட்டு வரும்படி எனக்குக் கற்பித்துப் போனார்கள்.

நாளைக் கட்டாயம் நாங்கள் புறப்படவேண்டியதுதான்" என்றார்கள்.

"அம்மா, அப்படியானால் நீங்கள் எல்லாருந் திரும்பி இந்த ஊர்க்குவருவது எப்போது?" என்று கவலையோடு வினாவினேன்.

"குழந்தாய், அதைப்பற்றி நானும் ஐயா அவர்களைக் கேட்டதில் அவர் தம் தமையனார் பம்பாயில் நடத்தி வந்த பெரிய வியாபாரத்தை நடத்தவேண்டியிருப்பதோடு அங்குள்ள சொத்துக்களையும் மேற்பார்க்கவேண்டி வருமாதலால், இங்கே திரும்பி வருவது முடியாதென்று சொன்னார். ஒருகால் திரும்பி வந்தாலும், இங்கே அவரவர்கள் தரவேண்டிய நிலுவையைத் தண்டல் பண்ணுவதற்குத் தாம் மட்டும் வரவேண்டிய திருக்குமாம்; அதுவுங்கூடத் தாம் வராமல் தம் கணக்கப்பிள்ளை களைக் கொண்டும் செய்துவிடலாமாம்" என்று அவ்வம்மையார் சொல்லுகையில்,

"அப்படியானால் யான் திக்கற்ற பாவியாயினேனா! என்று கண்ணும் மனமுங் கலங்கிக் கூறினேன்.

யான் கலங்கியதைக் கண்டு மனம்பெறாமல், அன்பே உருவான அப்பெருமாட்டியார், "குழந்தாய், கண்கலங்க வேண்டாம். உன்னை நாங்கள் அப்படி விட்டுவிடுவோமா! யாங்கள் பெற்ற பிள்ளைகளினும் உன்னைப் பன்மடங்கு மேலான அன்புடன் பாராட்டுகின்றோம். திடீரென்று உன்னைப் பிரிந்து போகநேர்ந்தது பற்றி யாங்கள் மிகுந்த துயரம் அடைந்தோம் என்றாலும், இன்னுஞ் சிலநாட்களில் உன்னையும் உன் தமையனையும் பம்பாயில் எங்கள் இருப்பிடத்திற்கு வரவழைத்துக் கொள்ள ஏற்பாடு செய்திருப்பதனால் ஒருவாறு ஆறுதல் அடைந்தோம்' என்று என் கண்களைத் தமது பட்டாடையால் துடைத்துக் கொண்டே சொல்லினார்கள்.

"அப்படியானால், என் தாயே, இன்னுஞ் சில நாட்கள் சென்று என்னை நீங்கள் வருவித்துக் கொள்வதை விட, இப்போது கூடவே என்னை அழைத்துச் சென்றால் என்ன?" என்று வினாவினேன்.

"இன்று காலையில் உன் தமையனாரோடு கூட அதைப் பற்றி சற்றேறக்குறைய ஒருமணிநேரம் வரையிற் பேசினோம்.

உன்னை எங்களோடு அனுப்புவதற்கு உன் பெற்றோரும் உன் மாமியார் நாத்துணாரும் சிறிதும் உடன்பட மாட்டார் களென்றும், உனக்கும் எங்களுக்கும் நேசம் உண்டானதிற் றினையளவும் உடம்பாடு இல்லாதவர்களாய் அந்நேசத்தை மாய்க்க ஏதேதோ ஏற்பாடு செய்கிறார்களென்றும், உன்னிடத்தும் உன் தமையனிடத்தும் உள்ள பொருள்களையெல்லாம் பறித்துக் கொள்வதற்கு எத்தனையோ வகையான சூழ்ச்சிகள் எல்லாம் செய்கிறார்களென்றும் உன் தங்கையின் வழியாக உன் தமையனார் தெரிந்து கொண்டிருக்கிறார். ஆகையால், உன்னை எங்களிடங் கொண்டு வந்து சேர்ப்பிக்கும் இன்னுஞ் சில நாட்கள் வரையில் இந்தப்பொல்லாத மனிதரிடையில் உன்னைவைத்து எப்படிப் பாதுகாக்கப் போகிறோம் என்று அவர் மிகவுந்தவிக்கிறார். இந்தச் செய்திகளைக் கேட்டது முதல் எங்கள் உள்ளம் ஒரு நிலைப்படாமல் சுழன்று கொண்டேயிருக்கின்றது. அவர்களில் எவருக்குந்தெரியாமல் உன்னை இப்போதே அழைத்துப் போகலாமா என்று பேசிப்பார்த்தோம். அதுவுங் கூடியதாயில்லை. ஒருகால் என் மைத்துனனார் பம்பாயில் காலமாய் விடுவரேல், சில நாட்கள் வரையில் அங்கே எல்லாம் பெருங் குழப்பமாய் இருக்கும். அப்போது இவர்கள் அங்கே உன்னைத் தேடிக் கொண்டுவந்து உன்னை மீண்டும் இந்த ஊருக்கு அழைத்துக் கொண்டுபோக வேண்டுமென்று வலுகட்டாயம் பண்ணுவார் களானால், அப்போது பலவகையான இடர்கள் உண்டாகும்; அந்த நேரத்தில் இவர்கள் செய்யும் வம்புக்கு ஈடு கொடுப்பது ஐயா அவர்களுக்கு முடியாமையாய் இருக்கும். ஆதலால் இப்போது எங்கட்கு நேர்ந்திருக்கும் இவ்வல்லல் களெல்லாம் ஒழிந்து எங்கள் அலுவல்கள் எல்லாம் ஓர் ஒழுங்குக்குவந்தபின் தான் உன்னை எங்களிடம் அழைத்துக் கொள்வது நலம் என்று முடிவுகட்டினோம். சிறிதேறக்குறைய இன்னும் ஒரு மாதத்தில் எல்லாம் ஒருவழிப்படு மென்றும், அதன்பிறகு உன் தமையனார் உன்னை அழைத்துக் கொண்டு பம்பாய்க்கு வரும்படி திட்டஞ் செய்ய வேண்டுமென்று ஐயா அவர்கள் சொன்னார்கள். நாளை மாலை வண்டியில் நாங்கள் புறப்படுவதால், நாளைக்கு நம் அன்பர் **தெய்வ நாயகத்திற்கு** ஒரு தந்தி கொடுத்து அவர் மற்றைநாள் **வாடிச் சந்திப்பில்** வந்திருந்து வண்டியிலேயே எங்களைப் பார்க்கும்படி செய்யலாமா? ஐயா அவர்களும் யானும் அவரைப்பார்ப்பதற்கு மிக விரும்புகின்றோம்.

கண்மணி, உன் கருத்து என்ன? என்று என்னை அப் பெருமாட்டியார் வினாவினார்கள்.

"என் செல்வத்தாயே, 'பழம் நழுவிப்' பாலில் விழுந்தாற்' போலப் போம் வழியில் நீங்கள் அவரைப் பார்த்தல் நலமாயிருக்கும் என்று யான் கொண்ட விருப்பத்தின் படியே தாங்களும் ஐயா அவர்களுங் கொள்ளலானது எனது நல்வினையே. நாளைக் கட்டாயம் அவருக்குத் தந்தி கொடுக்கவேண்டும்" என்று பெருங் களிப்போடு மொழிந்தேன்.

அதன் பிற் சிறிது நேரம் நான் இங்குள்ளவர்களிடத்தில் இன்னும் ஒரு திங்கள் வரையில் எவ்வளவு கருத்தாய் நடக்க வேண்டுமென்பதை வற்புறுத்திக் காட்டித் தாம் பம்பாய் போய்ச் சேர்ந்தவுடன் கடித மெழுதுவதாகச் சொல்லிவிட்டு, என்னை அணைத்து முத்தம் வைத்துக்கொண்டு பிரியா விடைபெற்று ஏகினார். ஏகுகையில், நாளைக்கு வண்டியேறப் போகும்போது ஒழிவு இருந்தால் எல்லாருமாய் வந்து சொல்லிக்கொண்டு போவதாகவுந் தேறுதல்கூறிச் சென்றார்கள். என்னை ஈன்றாள் இத்துணை அன்பாய் என்னிடம் இருக்கப்பெற்றேன் இல்லையே? என்னைப்பெற்றாள் என்னை வெறுத்து இங்குள்ள பாவிகளிடம் என்னைத் தள்ளிவிட்டிருக்க, அழகிய உயிர்ப்பாவையாய்த் திகழும் இப்பெருமாட்டியார் ஒன்றுக்கும் பற்றாத ஏழையேனைப் பெற்ற மகளினும் எத்தனையோமடங்கு மேலாக அன்பு பாராட்டி வரும் அரும்பெருந்தகைமையினை நினைந்து நினைந்து என் நெஞ்சம் நெக்குருகிப்போயிற்று.

"செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது"

என்ற பொய்யா மொழியின் படி எளியேனிடத்து ஏதொரு கைம்மாறும் எதிர்பாராமல் இவர்கள் செய்துவரும் இப்பேருதவிக்கு எழுபிறப்பெடுத்து நன்றி செலுத்தினாலும் அது போதாதே! ஐயனே, என் ஆருயிர்க் காதலனே! இவர்களை நாளை அடிக்குந் தந்தியின்படி தாங்கள் அன்பு கூர்ந்து **சிக்கந்தரபாத்தி லிருந்து வாடிச் சந்திப்புக்குச்** சிறிது முன்னதாகவே வந்திருந்து இவர்களைப் பார்த்துச் சிறிது நேரமேயாயினும் மெய்யன்புடன் அளவளாவி, அவர்களிடம் விடைபெற்றுச் செல்லும்படி தங்கள் திருவடிகளில் தாழ்மையோடு பணிந்து கேட்டுக்கொள்ளு

கின்றேன். இந்தக் கடிதம் விரைவில் உங்களிடஞ் சேரவேண்டு மென்பதனால் இதனை இவ்வளவோடு முடித்துத் தபாலுக்கு அனுப்புகின்றேன். இன்னும் இரண்டு நாட்களில் தங்கட்குக் கடிதம் வரைவேன். இனிமேல் தாங்கள் எனக்கெழுதும் விடைகளை என் தமையன் அலுவல் பார்க்கும் இடத்திற்கு அனுப்புங்கள். இங்ஙனந் தங்கள் ஆருயிர்க் காதலி.

# கடிதம் - 12

*இன்னமுதத்தினும் இனிய குணம் வாய்ந்த என் காதற் செல்வமே!*

*யான் முற்கடிதத்தில் எழுதிய படியே முந்தாநாள் மாலையில் வண்டியேறப் போம்போது, அன்பிற் சிறந்த அப்பாரசிக குடும்பத்தார் என்னிடம் வந்து சொல்லிக்கொண்டு போனார்கள். அவ்வம்மையார் என்னைப் பிரியமாட்டாமல் என்னைத் தமது மார்பிற் சார்த்திக்கொண்டு தேம்பித்தேம்பி அழுதார். நாங்கள் இருவேமும் இங்ஙனங் கண்ணீர் உதிர்ப்பதைக் கண்டு அவர்களின் பெரியபெண் வருந்தியவருத்தமும் மற்றச் சிறு குழந்தைகள் பட்டபாடும் எத்தனை பிறப்பெடுத்தாலும் என் நெஞ்சை விட்டு அகலா. தந்தையினுங் கோடி மடங்கு சிறந்த அப்பாரசிகப் பெருமான் என் கைகளை எடுத்துத் தம் கண்களில் ஒற்றிக்கொண்டு கண்ணீர் ஆறாய்ப் பெருக்கினார். இங்ஙனம் நாங்கள் எல்லாரும் ஆற்றக்கூடாத துயரம் அடைவதைப் பார்த்து மனங்கலங்கி அருகில் நின்ற என் தமையன் தன்னை ஒருவாறு தேற்றிக்கொண்டு எங்கள் எல்லாரையும் ஆறுதல் பெறச் செய்து, நேரமாவதைக் குறித்துக் காட்டிப் பின் அவர்கள் என்னைவிட்டுப் பிரியச் செய்தான். அவர்கள் எல்லாருஞ் சென்றபிறகு, யான் தன்னந் தனியாய் இருந்து நடந்தவற்றையெல்லாம் எண்ணி ஆறாத் துயர்க்கடலில் அழுந்தினேன். உண்மையன்புடையரைப் பிரியப் பெறுதலினும் பெருந்துயர் இல்லையென இப்போதுதான் சிலதிங்களாக உணர்ந்து வருந்தீவினை உடையளானேன். முதலில் என் ஆருயிர்க்குயிரான தங்களையும் என் கண்மணியனைய தங்கையையும் பிரிந்து வரலானேன். அதன்பின் என் அருமையிற் சிறந்த மாமனாரைப் பிரிந்தேன். இப்போது இவர்களைப் பிரிந்தேன். தங்களைத் திரும்பவுங் காணப்பெறலாம் என்ற ஒரு சிறுநம்பிக்கையும், அதற்குத் துணையாய் நிற்கும் என் தமையன் உதவியுமே என்னை உயிர் பிழைத்திருக்கச் செய்கின்றன.*

கரைகாணாத ஆழ்ந்த பெரு வெள்ளத்தில் அகப்பட்டு அமிழ்ந்திப்போகும் ஒருவன் தற்செயலாய் மிதந்துவந்து தன் கைக்கு எட்டிய சுரைக்குடுக்கை ஒன்றைப் பற்றிக் கொண்டு உயிர்தப்பலாம் என்ற நம்பிக்கை கொண்டு முயல்வது போல யானுஞ் சிறிது முயற்சியுடையவளாய் இருக்கின்றேன். முப்பழம் பிழிந்த சாற்றைக் கட்டுப்பாகோடு கலந்து ஒரு சிறு மதலைக்கு ஊட்டினாற்போலத் தாங்கள் எழுதுங் கடிதங்களில் உள்ள சொல்லும் பொருளுந்தளர்ந்த என் உயிரை இடையிடையே தளிர்க்கச் செய்கின்றன.

நேற்று மாலையில் இங்கே நடந்தவைகளைத் தங்கட்குத் தெரிவித்தாலன்றி எனக்கு உறக்கம் வராது. நேற்றுச் சாய்ங்காலம் ஏழுமணிக்குக், கொடுங்குணங்கட்கு இருப்பிடமான என் தந்தையும் கொடியள் அல்லளாயினும் சொல்வோர் சொல்லைக் கேட்டு நடக்கும் இயல்பன்றித் தானே எதனையும் ஆராய்ந்து பார்க்கத் தெரியாத என் அன்னையும், நுண்ணறிவும் என்பால் அன்பும் மிக்க என் தங்கையும் இங்கே வந்தார்கள். வந்தவர்கள் என்னுடன் நிரம்ப அளவளாவிப் பேசாமல் சமையற்கட்டுக்குள் நுழைந்து என் மாமி நாத்துணாரோடு மிக மறைவாய்ப் பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் அங்ஙனம் இருக்க, அருமையிற் சிறந்த என் தங்கையோ என்னை மிகவும் அன்போடு கட்டிக் கொண்டு, என்னோடு மெத்தைமேல் வந்தாள்.

“கண்மணி, உன்னை அடிக்கடி காணக்கூடாத தீவினை யுடையவளானேனே! அம்மாவும் அப்பாவும் என்னை நமது வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போகாமல் ஒரே ஒட்டாரமாய் இருக்கின்றார்களே; அது போகட்டும்; உன்னையாவது என்னிடம் அடிக்கடி அனுப்பி வைக்கின்றார்களா வென்றால் அதுவு மில்லை. நம் பெற்றோர்கள் எவ்வளவு கல் நெஞ்சம் உடையவர் களாயிருக்கிறார்கள்!” என்று வருந்திக் கூறினேன்.

“ஆமா, அக்கா, நம் அம்மாவையாவது ஒருபங்கு சேர்த்துக் கொள்ளலாம். நம் அப்பாவோ ரொம்பப் பொல்லாதவராயிருக் கிறார். உன் பேச்சையாவது பெயரையாவது எடுத்தால் பாம்பு போற் சீறிவிழுகிறார். அவரைப்பார்த்தால் எனக்குச் சொல்ல முடியாத அச்சம் வருகிறது. அடுத்த ஆத்துக்காரப் பையன் **தெய்வ நாயகத்திற்கு** நீ காகிதம் எழுதினதைப்பற்றியே அப்பா முன்னெல்லாம் எரிச்சலோடு பேசிக்கொண்டிருந்தார். ஆனால்,

*இப்போது சிலநாளாக, 'அந்தக் கிழப்பயல் இந்தப்பாழும் முண்டச்சி கையில் நாற்பதினாயிரம் ரூபாவும், இந்தப் பறைப்பயல் கையில் நாற்பதினாயிரம் ரூபாவுங் கொடுத்துவிட்டு ஒழிந்தானே!" என்று உன்னையும் நம் அண்ணாவையும் வாயில் வந்தபடியெல்லாம் திட்டுகிறார்! அவர் வையும் வசவுகளைக் காதுகொடுத்துக் கேட்க முடியவில்லை! யாது செய்வது!" என்றாள்.*

*"செய்யத்தக்கது ஒன்றுந்தோன்றவில்லை! அம்மா, அப்பா வுடைய நல்லெண்ணத்தை இனி நான் பெறுதற்கு வழி இல்லை! அது போகட்டும்; இன்னும் ஏதாவது என்னைப்பற்றி அம்மா அப்பா பேசிக்கொண்டார்களா?" என்று கேட்டேன்.*

*"ஒவ்வொருநாளும் இரவில் நான் தூங்கின பிறகு அம்மாவும் அப்பாவும் என் காதுக்குக் கேளாதபடி குசுகுசு வென்று என்னென்னமோ பேசின படியாகத்தான் இருக்கிறார்கள். என்னாற் கூடியமட்டும் நான் தூங்குவதுபோல் இருந்து உற்றுக் கேட்டுப் பார்த்தேன்; ஆனால், ஒருநாள் அவர்கள் பேசிக் கொண்டு வந்ததில் முன்னும் பின்னுங் கேட்கவில்லை; நடுவே சொன்னது மட்டும் நினைவிலிருக்கிறது 'யமகாதகப்பயல் ஒருவனை அனுப்பியிருக்கிறேன் உடனுக்குடன்.... தெரிய வருகிறது....மலைக்காட்டுக் குகையில் அடைத்து.... வழியாய் வாங்கிக்கொண்டு... விடலாமா?' என்று அப்பா சொல்லியவற்றில் நடுநடுவே சில பேச்சுகள் கேளா விட்டாலும் கேட்டது இம்மட்டுத்தான். இதைக்கேட்டதும் அம்மா பரபரப்பாய் 'அப்படி வேணாம்! தொகை மட்டும் நம்மகைக்கு வந்தாற் போதும்' என்று சிறிது உரக்கச் சொன்னாள். அதற்கு 'நல்லது பார்ப்போம்' என்று அப்பா சொன்னார் இவ்வளவுக்கு மேல் எனக்கொன்றுந் தெரியாது" என்று நினைவிலும் உண்மையிலுஞ் சிறந்த என் அருமைத்தங்கை எடுத்துச் சொன்னாள்.*

*இந்தச் சொற்களைக் கேட்டது முதல் என் உள்ளம் ஒருநிலைப் படாமற் கலங்கியது. என் தந்தையார் எனது பொருளைக் கவர்ந்து கொள்ளும்பொருட்டு ஏதோ ஒரு பெரும் பொல்லாங்கான சூழ்ச்சியைச் செய்துவருகிறார் என்றும் எனது உயிருக்கே கேடு சூழுகிறார் என்றும் அறிகின்றேன். எனது பொருளையும் எனது உயிரையும் இழந்து விடுவதற்காக நான் மிகவுங் கலங்கவில்லை; எனக்கு உதவி செய்துவரும் என்*

அருமைத்தமையனுக்கும், என்னோடு ஒன்று கூடி வாழ்தற்கு உரிய தங்களுக்கும், இப்போது எனக்கு உண்மைத்தாய் தந்தையராய் இருந்துவரும் அப்பாரசிகப் பெருமான் பெருமாட்டியாருக்கும் ஏது தீங்கு இழைக்க முயன்று வருகின்றாரோ என்பதை நினைக்கையில் என் நெஞ்சம் பெரிதும் நடுங்குகின்றது! எல்லாம்வல்ல கடவுளின் அருளால் அன்றித் தீயோர் செய்யும் சூழ்ச்சிகளுக்குத் தப்பிப்பிழைக்க ஏதொரு வழியுங் காணேன்; அவன் அசைத்தாலன்றி அணுவும் அசையா தாகையால் அவன் துணையையே நம்பி, நம்மால் இயன்றமட்டும் நாம் விழிப்பாய் இருக்கவேண்டும். தங்களிடம் நண்பன் போல் வந்திருக்கும் பார்ப்பன இளைஞனைப்பற்றியே எனக்கு ஓயாமல் ஐயம் உண்டாகின்றது. யான் எழுதிய கடிதங்களிற் சிலவற்றைத் தாங்கள் அவனுக்கு முன்னே காட்டினீர்கள் என்பதைத் தங்கள் கடிதத்தால் அறிந்தநாள் முதல் என் மனம் சிறிதும் அமைதி பெறவில்லை. இப்போது தங்கள் கடிதங்களைத் தாங்களாகவே காட்டப்புகுந்தாலும் அவன் காண்பதில்லை என்றும், எப்போதும் பலவகையான முயற்சிகளிற் கருத்தாய் இருப்பதல்லாமல் தங்கள் அலுவல்களில் அவன் சிறிதும் தலையிடுவதில்லையென்றும் அவனுடைய செய்கைகளை எவ்வளவு ஊன்றிப் பார்த்தாலும் அவனிடத்திற் கள்ளங் கவடு இருப்பதாகத் தினையளவுந் தோன்ற வில்லை யென்றுந் தாங்கள் எழுதியிருப்பதொன்றேனும் என் மனத்திற்கு இசையவில்லை; ஏனென்றால்,

> "தொழுத, கையுள்ளும் படை ஒடுங்கும் ஒன்னார்
> அழுத கண்ணீரும் அனைத்து"

என்று மெய்ந்நூலாகிய திருக்குறள் கூறுவதொன்றே, அவனைப் பற்றித் தாங்கள் எழுதுவனவற்றைக் காணும் போதெல்லாம் என் நினைவிற்கு வருகின்றது, 'ஒருவனை அனுப்பியிருக்கின்றேன்.... உடனுக்குடன்.... தெரியவருகிறது' என்று என் தந்தையார் சொல்லிய சொற்கள் இந்தப் பார்ப்பன இளைஞனையே சுட்டுகின்றன; இவனைக் கொண்டே தங்கட்கும் எனக்கும் இடையில் நடப்பன வற்றையெல்லாம் என் தந்தையார் தெரிந்து கொள்ளுகிறார் என்று கருதுகின்றேன். கல்வியறிவில் மிகச்சிறந்தவரான தாங்கள் அவனை அத்தனை எளிதில் நம்பிவிடக்கூடாதென்று வலியுறுத்துகின்றேன். இனிமேலாயினும் நீங்கள் நிரம்பவும்

*விழிப் பாயிருப்பதோடு, அப்பையனை அகற்றி விடுவதற்கும் முயற்சி செய்வீர்களென்று நம்புகின்றேன். என் தங்கை எடுத்துக் கூறிய சொற்கள் இப்போது நடக்கும் சூழ்ச்சிகளைக் குறிப்பாகத் தெரிவிக்கும் பொருட்டுக் கடவுளே அவளுக்குத் தெரியும்படி செய்தன ரென்று நம்புகின்றேன். தாங்கள் எனக்கெழுதும் அடுத்த கடிதத்தில் அவனைத் தங்களிடம் வராமல் அகற்றிவிட்ட செய்தியை ஆவலோடு காணலாம் என்று நம்பியிருக்கின்றேன்.*

*யானும் என் தங்கையும் பேசிக்கொண்டிருந்த சிறிது நேரத்தி லெல்லாம் என் அன்னை என்னையுந் தங்கையையுங் கீழே வரும்படி கூவி அழைத்தாள். யாங்கள் உடனே கீழிறிங்கி வரவே, அப்போது வாய்நிறைய வெற்றிலைபாக்கு இட்டு மென்று கொண்டிருந்த என் தந்தையார் வாயை நிமிர்த்திக் கொண்டு "கோகிலா , இப்படி வந்து எங்கள்கிட்ட உட்காரு" என்று எச்சில் குழம்பிய நாவோடு கூறினார். அங்ஙனமே நான் பணிவோடு இருந்த பிறகு, வாய்நிரம்ப இருந்த எச்சிலைத் துப்பிவிட்டு வந்து, வாயை மென்றுகொண்டே, "என்ன கோகிலா, உன் மாமனார் உனக்கு எழுதிவைத்த நாற்பதினாயிர ரூபா சொத்தையும் நீ என்ன செய்யப் போகிறாய்?" என்று கேட்டார். இதற்கு விடையாக, என் மாமனார் இறந்து போவதற்கு முன் என்னை நோக்கி அந்தச் சொத்தை பயன்படுத்தும்படி சொல்லிய சொற்களையெல்லாம் எடுத்துரைத்தேன்; மாமனார் எனக்குக்கூறிய சொற்களில் தங்களைக் குறிப்பிட்ட பகுதியை மட்டும் யான் சொல் வில்லை. அமைதியாகப் பேசிய என் சொற்களைக் கேட்ட அவர் என் மேல் அன்புள்ளவராயும் பொருளிற் பேரவா இல்லாதவராயும் இருந்தால் எவ்வளவோ மனமகிழ்ந்திருப்பார்! ஆனால் அவர் என் சொற்களைக் கேட்டு மனம் மகிழாமையோடு மிகுந்த சினக் குறிப்பு உடையவராகவும் காணப்பட்டார். எனக்கோ அவர் முன்னிலையில் உள்ளம் நடுங்கியது! ஆனால், அவர் தமது சினத்தைக் காட்டாமல் அமைதியுடைவர்போல் "கோகிலா, நீ சொன்னதொன்றும் என் மனத்திற்குப் பிடிக்கவில்லை; தான தருமங்கள் செய்ய அந்தச் சொத்தை உபயோகிக்கப்போகிறேன் என்கிறாய். தான தருமங்கள் யாருக்கு யார் செய்ய வேணுமென்று உனக்குத் தெரியுமா? பிராமண குலத்திற் பிறந்தவர்களுக்கே மற்றச் சூத்திர சாதியிற் பிறந்தவர்கள் தான தருமங்கள் செய்யவேணுமே*

யல்லாமல், பிராமணர்கள் மற்றவர்களுக்கு எவ்விதமான தான தருமங்களும் செய்யக்கூடாது. பிராமணர்களே இந்தப் பூலோகத்திற்கு தேவர்க ளென்று சொல்லப்படுவார்கள். இந்தப் பூலோகத்தில் சகல சுகங்களையும் அனுபவிக்கும் பாத்திதை உண்டு. மரணாந்தத்திலும் இவர்களுக்கு மாத்திரமே சுவர்க்கம் உண்டு. பிராமணர் அல்லாத மற்ற எல்லாச் சாதியாரும் சூத்திரர்கள் ஆவர்கள். சூத்திரர்கள் என்றால் மூடர்கள் அல்லது அடிமை வேலை செய்பவர்கள் என்று அர்த்தம். பிராமணருக்கு மற்றச் சூத்திரச் சாதிப்பயல்களெல்லாம் தூர இருந்து அடிமை வேலை செய்து பிழைக்க வேண்டும். மற்றச் சாதியாருக்கும் மிருகங் களுக்கும் ஏதொரு வித்தியாசமும் இல்லை. மிருகங்கள் வியாதி யினாலும் பசியினாலும் துன்பப்பட்டால் அவற்றிற்கு எவரேனும் உபகாரம் செய்வதுண்டோ? அதுபோலவே சூத்திரக்கழுதைகள் வியாதியாலும் பசியாலும் துன்பப்பட்டு அழிந்தால் அவர்களுக்கு நாம் உபகாரஞ் செய்வது கூடாது. சூத்திரன் ஒருத்தன் தாகத்தால் பிராணன் போகிறதென்று அழுதாலும் அவனுக்கு ஒருவாய் ஜலங் கூடக் கொடுக்கலாகாது; கொடுத்தால் நமக்குப் பாபம் வரும். அது நிற்கட்டும். ஏதோ திராவிட பாஷைக்கு உதவி செய்ய வேண்டுமென்று சொன்னாயே; தமிழ் சூத்திரர்களுக்கும் பள்ளுப்பறை முதலான ஈன சாதியார்க்கும் உரியதேயல்லாமல் தேவகுலத்திற் பிறந்த பிராமணாளான நமக்குக் கொஞ்சமும் உரிய தல்ல. நமக்கு உரியது தேவபாஷையாகிய சமஸ்கிருதமேயாகும். அதைத்தான் நாம் படிக்க வேணும்; அதைத்தான் நாம் அபிவிர்த்தி செய்ய வேணும். சூத்திரரும் மற்ற ஈன சாதியாரும் அதனைப் படிக்கவே கூடாது; அதனை அவர்கள் காதில் கேட்கும்படி நாம் உரத்துப் படிக்கவுங் கூடாது; சமஸ்கிருதப் படிப்புக்கு அல்லாமல் சூத்திர பாஷையாகிய தமிழுக்குப் பிராமணாள் எள்ளளவும் உபகாரஞ் செய்யக்கூடாது. அது நிற்கட்டும். தேவார திருவாசகங்கள் படிக்கவேணும், அவைகளைப் படிப்பவர்க்கு உபகாரஞ் செய்ய வேணும் என்று சொன்னாயே. இந்தப் பாட்டுகள் யாருக்குச் சொந்தம்? உனக்குத் தெரியுமா? சூத்திரர் சாவுக்குக் கிரியைகள் செய்யும் சூத்திரப் பண்டாரப் பயல்கள் வயிற்றுப் பிழைப்புக்குப் பாடும் பண்டாரப் பாட்டுகளைச் சில படித்த சூத்திரப் பயல்கள் தேவாரம் திருவாசகம் என்று கௌரமாகச் சொல்லிக் கொள்ளுகிறார்கள். அந்தப் பாட்டுகளில் பாடியிருக்கும் சிவன்

சூத்திர தேவதை, ஈன சாதியார்க்காக ஏற்பட்டவன். நம்முடைய வேதங்களில் சிவனைப் பற்றிய பிரஸ்தாபமே இல்லை. ஈன சாதியார்க்காக **வியாசர் எழுதி வைத்த புரணாங்களிலேதான் சிவனைப்பற்றிய பிரஸ்தாபம் வருகிறது**. பிரமணாளாகிய நாமோ சாட்சாத் பிரம்மஸ்வரூபம். நம்மைத் தவிர்த்துப் பிரம்மம் வேறேயில்லை. புராணங் களிலே சொல்லப்பட்ட தேவதைகளுக் கெல்லாம் மேலானதாகிய சாட்சாத் பிரம்மமே நாமாயிருப்ப தால் நாம் சிவனை வணங்குவது ரொம்பக் கேவலம். ஜகத் குருவாகிய சங்கராச்சாரிய சுவாமிகள் சைவம் முதலான ஷண்மதங்களையும் ஐயித்து நாமேபிரம்மம் என்பதை நிலை நாட்டியிருக்கிறார். ஏதோ கால வித்தியாசத்தால் சூத்திரப் பயல்களிற் சிலர்கள் படிச்சும், சிலர்கள் சம்பத் உடையவர் களாயும் இந்த மிலேச்ச ராஜாங்கத்தில் உயர்ந்து வருவதால் நம்மவர்கள் அவர்களுடைய தாட்சணியத்திற்காக வாயை மூடிக்கொண்டு இருக்கிறார்கள்; அப்படியிருந்தாலும் நம்மவர்கள் நம்முடைய காரியத்தில் கண்ணாய்த்தான் இருக்கிறார்கள். நீ சொன்னவை யெல்லாம் சுத்தப்பிசகு. நீ சூத்திரப் பயல்கள் எழுதிய சுவடிகளைப் படிச்சு இப்படியெல்லாம் பிதற்றினாய், உன் மாமனார் தள்ளாத கிழவர். அவர் மரணமாகுஞ் சமயத்தில் அவருடைய அறிவை மயக்கி நீ ஏராளமான சொத்தை அவரிடம் எப்படியோ வாங்கிவிட்டாய். புத்திப்பிசகால் அவர் செய்ததும் சொல்லியதும் பிராமணம் அல்ல. அந்தச் சொத்துக்கு என்ன வழி சொல்லுகிறாய்?'' என்று வாய் ஓயாமற் பெருங் கூச்சலாய்ச் சடசடவென்று பேசிக் கடைசியாக என்னை அதட்டிக் கேட்டார். அவர் பேசியவை அனைத்தும் சொல்லவொண்ணாத வருத்தத்தை விளைவித்து என் நெஞ்சத்தைப் புண்படச் செய்தன. அவர் பேசிய வட மொழிகளையும் கொச்சைத் தமிழையும் அப்படியே எழுதினால் தங்கட்கு அருவருப்பாய் இருக்கும் என்று சில வடசொற்களை விட்டுச் சிலதமிழ்ச்சொற்களைத் திருத்தி எழுதி யிருக்கின்றேன். இவர் பேசிய வகை என்னை மிகவுந் திகைப்படையச் செய்து, பிறகு எனக்கு அச்சமுந் திகிலும் உண்டாக்கின. எதிரே என்னைப் பெற்ற தந்தையைக் காண்பதுபோல் அல்லாமல் எமனைப் பார்ப்பதுபோல் நடுக்கம் உற்றேன். பார்ப்பனர் அல்லாத மற்ற இனத்தினரையும், இனிய செந்தமிழ் மொழியை யும் தேவார திருவாசகத்தையும் சிவபெருமானையும் மட்டுக்கு மிஞ்சி மிகுந்த காரத்தோடும் இவர் இகழ்ந்து பேசிய சொல்

ஒவ்வொன்றும் என் செவியிற் கூரிய அம்புபோற் பாய்ந்து என் நெஞ்சத்தைக் கிழித்துச் சென்றன! இவர் சொல்லியவற்றிற் கெல்லாம் விடைசொல்ல வேண்டுமென்று என் உள்ளம் பதைபதைத்தும் என் நாவோ எழவில்லை. ஆயினும், தள்ளாத கிழவரான என் மாமனாரை அறிவு மயக்கி அவரிடம் எராளமான சொத்தைப் பிடுங்கிக் கொண்டேன் என்று இவர் கடைசியிற் சொன்ன சொல்லானது, முன்பே பேசிய இகழுரைகளாற் கிழிந்து பிளவுப்பட்ட என் நெஞ்சின் வழியே புகுந்து தேடிப்பார்த்து என் உயிரைக் கொள்ளை கொண்டுபோகுங் கூற்றுவன் கைக்கணை யாகவே தோன்றியது. அச்சம் மிகுந்த ஒரு கனவைக் கண்டு அக்கனவின் கண் ஏதுஞ் செய்யமாட்டாமற் செயலிழந்து கிடக்கும் நிலைமைக்கும் அப்போது யானிருந்த நிலைமைக்கும் ஏதும் வேறுபாடு இல்லை. அருகிலிருந்த என் அன்னையும் எனக்காக ஏதும் பரிந்து பேசாமல் சும்மா இருந்தனள். என் மாமியும் நாத்துணாரும் யான் கடிந்து பேசப்பட்டு வருந்தி யிருப்பதைப் பார்த்து மிகவும் மகிழ்ச்சியோடிருந்தார்கள். சிறு பிள்ளையான என் தங்கை மட்டுந்தான் என் நிலைமையைக் கண்டு முகம் வாடிக் கண்கலங்கினாள். இப்படியிருக்கையில் இறை வனருளால் என் அருமைத்தமையன் என்னைக் காணும் பொருட்டு அப்போது அங்கு வந்தான். வந்தவன் உடனே எங்கள் அருகில் வந்து உட்கார்ந்து எனது துன்பத்தைப் பார்த்தவுடன் தந்தையை நோக்கி,

“அப்பா, கோகிலம் ஏன் இவ்வளவு முகவாட்டத்தோடு இருக்கிறாளே!” என்று கேட்டான்.

நல்லநேரத்தில் என் தமையன் எனக்குச் சார்பாக வந்ததைக் கண்டு மனம்பொறாத தந்தை “நீ தான் அவளைக்கேள்” என்று சினத்தோடு கூறினார்.

“அவள் வாட்டமாயிருக்கிறாளேயென்று உன்னைக் கேட்டேன்; உனக்குச் சொல்ல மனம் இல்லாவிட்டால் அவளையே கேட்கிறேன்!” என்று சொல்லிவிட்டு, என்னை நோக்கிக் “கோகிலா என்ன நடந்தன? ஏன் நீ இவ்வளவு வாட்டத்தோடு இருக்கின்றாய்?” என்று வினாவினான்.

இப்போது யான் சிறிது பேசத்துணிந்து நடந்தவைகளை யெல்லாம் சுருக்கமாகத், தந்தை காரத்தோடும் தீய எண்ணத் தோடும் சொல்லிய பாங்கு புலப்படும்படி எடுத்துக் கூறினேன். இவற்றைக் கேட்ட என் தமையன் பெரிதும் உள்ளம் வருந்தி, "மாமா சொல்லிய நல்ல உபதேசத்தை, நீ கேட்டதன்மேல் கோகிலம் உனக்குச் சொன்னாளே தவிர, அவளாக ஏதொன்றும் சொல்லவில்லையே. அப்படியிருக்க நீ ஏன் அவள்மேல் வீணாக எரிந்து பேசவேண்டும்? மேலும், மாமா தாமாகவே சொத்து எழுதிவைக்கப் போவதாகச் சொன்ன பிறகுதான் அது கோகிலத்திற்குத் தெரியுமேயல்லாமல் அவள் மாமாவிடத்திற் பொருளைப்பற்றிச் சிறிதுங் கேட்டவளே அல்லள்; உண்மை அப்படியிருக்க அவள் மேற் பழிசுமத்தியது நல்லதன்று. மாமா சொல்லிய உபதேசமொழிகள் அத்தனையும் மிகச் சிறந்தவைகள். நம் பார்ப்பார இனத்தில் பெரும்பாலார் உண்மை தெரியாமல் பொறாமையால் இகழ்வதுபோல் நீயும் தான தருமங்களையும் மற்ற சாதியாரையும் தமிழையும் தேவார திருவாசகங்களையும் சிவத்தையும் இழிவாய்ப் பேசிவிட்டாய். மாமா எவ்வளவோ படித்தவர் எவ்வளவோ ஆராய்ந்துபார்த்தவர் எவ்வளவோ அனுபவம் உடையவர் அவர் சொல்லியவைகளை யெல்லாம் நீ தாழ்வுபடுத்திப் பேசியது ஏற்குமா?" என்று என் மனம் குளிரவும் என் தங்கை முகம் மலரவும் தந்தை மனம் எரியவும் மாமி நாத்துணார் முகம் நாணவும் என் தமையன் சுருக்கமாகவும் நன்றாய்ப் பதியும்படியாகவும் என் மாமனார் பெரிதும் நன்கு மதிக்கப்பட்டு எல்லா வகையிலும் உயர்ந்தவராய் விளங்கினமை யால் அவர் சொல்லியவற்றை மறுத்துப் பேசினால் தமது பேச்சு ஏறாதென்பதை தெரிந்த தந்தையார் என் மாமனார் சொல்லிய வற்றை மறுத்துக்கூற மனந்துணியாமையால், "உன் மாமனார் பெரியவர் தாம், அவரை யாருந் தாழ்வாகப் பேசவில்லை; ஆனாலும் அவர் தமது நிலை தப்பியிருந்த போது சொல்லியவை களைப் பற்றி நாம் வாதாட வேண்டியதில்லை. அது போகட்டும்" என்று சொல்லி என் தமையனையும் என்னையும் நல்லது பண்ணிக் கொள்வார் போல, "ஏ சுப்ரமணியா, கோகிலம் ஒருத்திக்கு நாற்பதினாயிரம் ரூபா எதுக்கு? உன் தங்கைக்கோ கல்யாணம் ஆகவேண்டியருக்கிறது. ஸ்ரீதனம் ஐயாயிர ரூபாய்க்குக் குறைந்தால் வாங்கமாட்டோம் என்று மாப்பிள்ளை வீட்டுக்காரர் சொல்லுகிறார்கள். மாப்பிள்ளை பி.ஏ.க்குப் படிக்கிறான்; அது

முடிந்ததும் பி.எல்லுக்குப் படிக்க வேணும். அவன் படிப்புச் செலவு முழுவதும் நாமே செய்யவேணும் என்று மாப்பிள்ளையைச் சேர்ந்தவர்கள் சொல்லுகிறார்கள்; இது வரையில் வந்து பெண் கேட்டவர்களில் இவர்கள் கொஞ்சத்துக்குக் கொஞ்சம் குற்றமில்லை; மற்றவர்கள் இருபதினாயிரம் பதினாயிரங் கேட்டார்கள்; இப்போது வந்த மாப்பிள்ளையை விட்டு விடலாகாது. யானும் உன் தாயாரும் மிச்சக்காலமுந் தள்ள வேண்டியிருக்கிறது; மற்றவர்கள் கையைப் பார்த்திராமல் நாங்கள் ஜீவனம் பண்ணுகிறதற்கு ஐயாயிர ரூபாவாவது வேண்டாமா?'' என்று சொல்லுகையில் உடனே என் தமையன்,

“ஏன்? நான்தான் இருக்கிறேனே. மாமா அவர்கள் என் மேல் அருள்கூர்ந்து எனக்கும் நிரம்பப் பொருள்கொடுத்திருக்கின்றார். அம்மாவுக்கும் உனக்கும் என்னென்ன வேண்டுமோ அவ்வளவுந் தந்து உங்களைப் பாதுகாக்க நான் கடமைப்பட்டிருக்கின்றேன். என் தங்கையின் திருமணத்திற்கும் நான் ஐயாயிர ரூபா தருகிறேன்; இதற்காகக் கோகிலத்தை ஏன் வருத்தப்படுத்த வேண்டும்?'' என்று ஈகையும் அன்பும் வாய்ந்த என் தமையன் கூறினான். என் தங்கைக்காக யானும் பொருளுதவி செய்யக் கடமைப்பட்டிருத் தலைத் தெரிவிக்க வேண்டுவது கட்டாயமாகத் தோன்றினமை யால், “யானும் என் தங்கையின் திருமணத்திற்காக ஐயாயிர ரூபா தருகிறேன்'' என்று சொல்லினேன். எங்கள் இருவர் சொல்லிலும் தந்தையார் மன நிறைவு பெறாதவராய்,

“காலமெல்லாம் நாங்கள் உன் கையை எதிர்பார்த்து உன்னை அண்டிப் பிழைக்கமுடியாது. எங்களுக்கென்று ஒரு பதினாயிர ரூபாவாவது வேணும். ஆகையால், நீ ஓர் ஐயாயிர ரூபாவும் கோகிலம் ஓர் ஐயாயிர ரூபாவுங் கொடுத்தால் அதுகொண்டு எங்கள் காலந் தள்ளுவோம்'' என்று ஆவலோடு சொன்னார். எனக்கு அவர் கேட்ட தொகை கொடுக்கலாம் என்ற எண்ணம் தோன்றியது; ஆனால், என் தமையனுக்கு அது பிடிக்கவில்லை என்பது அவனது முகக்குறிப்பால் நன்கு புலனாகியது. ஆகையால், அவன் கூறும் விடையை எதிர்பார்த்திருந்தேன்.

“அப்பா என் பணமெல்லாம் உன்னுடையதுதானே. நீ ஏன் இவ்வளவு வேறுபிரித்துப் பேசுகின்றாய்? உன்னுடைய கையில் தொகையிருந்தால் செலவாய்ப் போய்விடும். உன் செலவுக்கு

எவ்வளவு எந்த நேரத்தில் வேண்டுமானாலும் நான் தருகிறதற்குப் பின் வாங்கவில்லை'' என்றான்.

அச்சொற்களால் என் தந்தையார் முகம் வேறுபட்டவராய் உடனே என்னை நோக்கிக் ''கோகிலா, நீ என்ன சொல்லுகிறாய்?'' என்று கேட்டார்.

''அண்ணா கருத்துப்படியே என் கருத்தும்'' என்றேன்.

அதற்கு அவர் அப்படியா என்று தலையை அசைத்து, ''நல்லது அது இருக்கட்டும்; பெரியவர் உனக்குக் கொடுத்த இவ்வளவு சொத்திற்கும் உன் மைத்துனனே உண்மையான சொந்தக் காரன். இவ்வளவு பெருஞ்சொத்தை நீ சுவீகரித்துக் கொண்டது ரொம்ப அநியாயம்; இவ்வளவும் நீ வைத்துக் கொண்டாலும் உனக்கு அது லபிக்காது. மேலும், அவனுக்கு அப்பெரியவர் கொடுத்திருக்கிற இருபதினாயிர ரூபாவும் அவனுக்குக் காணாது. அவனுக்குக் கல்யாணம் ஆகவேண்டி யிருக்கின்றது; தாயையுந் தமக்கையையும் ஜீவகாலபரியந்தம் வைத்துப் பாதுகாக்க வேண்டிய வனாயிருக்கின்றான். ஆகையால், அவன் ஒரு பெரிய வியாபாரஞ் செய்ய உத்தேசித்திருக்கின்றான்; அவனுக்குச் சகாயமாக நானும் அவன்கூட இருந்து வியாபாரஞ் செய்யப் போகின்றேன். அதற்குக் குறைந்தது ஐம்பதினாயிர ரூபா முதல் வேண்டும்; ஆதலால், உனக்கு வந்த நாற்பதினாயிரத்தையும் அவனுக்குக் கொடுத்துவிட்டால், அவன் அதனை முதலாக வைத்துக்கொண்டு வியாபாரத்தைச் செய்து வருவான். நூற்றுக்கு அரைவட்டி வீதம் அந்த நாற்பதினாயிரத்திற்கும் மாசமாசம் வட்டிகொடுத்து விடுவான். உன்பணம் வேறிடத்திலிருப்பதை விட உன் மைத்துனனிடத்தில் இருப்பது ரொம்ப நல்லதல்லவா?'' என்று கேட்டார்.

அவர் கேட்டதற்கு இணங்காமல் விடைசொன்னால் அவர் மிகவுஞ் சினப்பட்டுச் சீறுவாரே என்று அஞ்சி என் தமையன் முகத்தை நோக்கினேன். எனது இடைஞ்சலை அறிந்து உடனே அவன் ''அப்பா, மாமா அவர்கள் கோகிலத்திற்கு எழுதிவைத்த சொத்தை அவள் முழுதுந் தன் விருப்பப்படி செய்யக்கூடாமல் சில கட்டுப்பாடுகள் செய்திருக்கின்றார். மாமா உயிரோடிருந்த போது முன் ஒருநாள் நீங்கள் அவரைப் பார்க்க வந்திருந்தது உன் நினைவிலிருக்கலாம். அந்த நேரத்தில் அங்கே வந்திருந்த அந்தப்

பாரசிக கனவான் மாமாவுக்கு மிக நெருங்கிய நண்பர். அந்தக் கனவானது கருத்தையொட்டியே கோகிலம், அந்தச் சொத்தைப் பயன்படுத்தவேண்டுமென்றும், அவரது மேற்பார்வையிலேயே அவள் அந்த சொத்தை அனுபவித்துவரல் வேண்டுமென்றும் மாமா தமது கருத்தை எழுதிப் பதிவுசெய்திருக்கின்றார். ஆகவே, அதனைப் பயன்படுத்தும் வகையில் கோகிலம் தனது விருப்பப்படி நடக்கக் கூடாதவளாய் இருக்கின்றாள்; ஆதலால், இவளை இதற்காகத் துன்புறுத்திப் பயனில்லை" என்று உண்மையை நன்றாக எடுத்துக் கூறினான்.

இதுகாறும் வாய்பேசாதிருந்த என் மாமி இதனைக் கேட்டதும் புலிபோற் சீறி "யார் சொத்துக்கு யார் அதிகாரி? தள்ளாத கிழவர் புத்திமாறியிருந்த சமயத்தில் இவாளிருவரும் எங்கள் சொத்தை மோசமாய்ப் பறித்துக்கொண்டு, இப்போது என்ன சட்டம் பேசுகிறார்கள்! இது தெய்வத்திற்கு "அடுக்குமா! நியாய ஸ்தலத்திற்குப் போனால்தான் இவாள் மோசம் வெளியாகும். இவாளோடு வெறும் பேச்சு என்னத்திற்கு!" என்று கூவிப்பேசினாள் .

அதுகேட்ட என் தந்தை "ஏ சுப்பிரமணியா, இந்தச் சொத்து உங்களிருவருக்கும் லபிக்குமா என்பதைப் பிந்திப் பார்த்துக் கொள்வோம். இவ்வளவு தூரம் வந்தமட்டில் இனி நீ எங்களுடன் இருக்கத்தகாது, நாளைக்கே நீ வேறுவீடு பார்த்துக்கொண்டு உன் சம்ஸாரத்தை இட்டுக்கொண்டு போய்விடு. இனிமேல், கோகிலத்திற்கும் எங்களுக்கும் ஏதொரு சம்பந்தமுமில்லை" என்று சினந்து கூறினார்.

உடனே என் மாமியும் "இனி இவளும் இங்கேயிருக்கப் படாது, நாளைக்கே இவள் இந்த வீட்டைவிட்டு வெளியே போய் விடவேண்டும்" என்று ஆத்திரத்தோடும் அதிகாரத்தோடும் என்னைச் சுட்டிக் கூறினாள்.

என் தந்தையின் தொடர்பையும் மாமி நாத்துணார் தொடர்பையும் அறவே தொலைத்து விடுவதற்கு இசைவான ஒருகாலத்தை யானும் என் தமையனுஞ் சில நாட்களாக ஆவலோடும் எதிர்பார்த்திருந்தோமாதலாற், கடவுள் செயலால் இவர்கள் வாயிலிருந்தே எங்களை வெளிப்படுத்துஞ் சொற்கள் பிறக்க, யாங்கள் உள்ளுக்குள் மகிழ்ச்சி உடையேமானோம்.

ஆயினும், அம்மகிழ்ச்சியை யாங்கள் புலப்படுத்தவில்லை. இவர்கள் சொல்லின் உண்மையை வலுப் படுத்தல் வேண்டி என் தமையன் "நீங்கள் கோபத்தாற் பேசுகிறீர்களா? அல்லது நாங்கள் வெளியேதான் போகவேண்டு மென்று உண்மையோடு பேசுகிறீர்களா?" என்று வினவினான்.

"இல்லை, இல்லை, நீங்கள் இருவரும் வெளியே போய்விட வேண்டியது அவசியந்தான்- இனிமேல் அரை நிமிஷம் நீங்கள் இங்கேயிருக்கப்படாது" என்று தந்தையும் மாமியும் சற்றேறக் குறைய ஒத்துப் பேசினார்கள்.

"நல்லது, நாளை மாலையில் நான் வெளியே வேறோர் இடம் பார்த்துக்கொண்டு போவதோடு என் தங்கை கோகிலத்தை நாளைக்கு இவ்வீட்டைவிட்டு வெளியே யான் அழைத்துச் சொல்வதுந் திண்ணம்" என்று என் தமையன் அமைதியோடு அழுத்தமாகச் சொன்னான். இச்சொற்களைக் கேட்டு என்னை ஈன்றவளும் என் அருமைத் தங்கையும் மட்டுங் கண்கலங்கினார்கள். என்றமையன் சடுதியிலெழுந்து "கோகிலா, நாளை மாலையில் நான் இங்கே வருகிறேன். நீ இந்த வீட்டை விட்டுப் புறப்படச் சித்தமாயிரு" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான். அவன் போனபின் என் தந்தை என் அன்னையை யுந் தங்கையையுங் கூட்டிக் கொண்டுபோனார். அவர்கள் போனபின் மேன்மாடத்தின் மேல் என திருப்பிடத்திற் சென்று நடந்தவைகளையெல்லாம் நினைந்து பார்த்துத் துயரமும் மகிழ்ச்சியுங் கலந்தநிலையிற் சிறிது நேரமிருந்தேன். இவ் வீட்டிலிருப்பது எனக்குப் பாழாய்த் தோன்றியது. தனக்குச் சொந்தமல்லாத ஒரு வேற்றிடத்தில் தனக்கு ஆகாதவர் கூட இருக்கும்படி நேர்வதைப் போல் துன்பமாவது பிறிதில்லை. இன்றிரவும் நாளைப்பகலும் எனக்கு ஓர் ஊழிகாலம் போல் இருக்கும். நாளை என் தமையனிருக்குமிடஞ்சென்றதுந் தங்கட்குக் கடிதம் எழுதுகிறேன்.

## கடிதம் - 13

என் உள்ளக் கமலத்தில் ஓவாது அமர்ந்திருக்குந் தெய்வமே,

முற் கடிதத்தில் யான் குறிப்பிட்டபடியே என் அருமைத் தமையன் தான் புதிதாய்க் குடிபோன இருப்பிடத்திற்கு என்னை அழைத்துக்கொண்டு போம்பொருட்டு நேற்று மாலையில் வந்தான். கொடுஞ் சிறையில் அடைபட்டுக்கிடந்த ஒருவன் தான் அதிலிருந்து விடுதலை பெறுங்காலம் இதுதானென்று திண்ணமாய்த் தெரிந்த பிறகு அதனைச் சொல்லுக்கு அடங்கா ஆவலோடும் ஐயுறவோடும் எதிர்பார்த்திருத்தல் போல, யானும் என் தமையன் வரும் மாலைப் பொழுதை எதிர்நோக்கியிருந்தேன். அவ்விடத்தைவிட்டு நீங்குதற்கு அமயம் வாய்த்ததை உன்னி இறைவனைத்தொழுது அவனுக்கு நன்றி செலுத்தும் மகிழ்ச்சியின் இடையிடையே, ஒருகால் என் தமையன் என்னை அழைத்துக் கொண்டு போகக் கூடாவாறு ஏதேனும் இடையூறு நேர்ந்தால் என்செய்வது என்னும் ஐயுறவுந் தோன்றி என்னை மிகவுந் துன்புறுத்தியது. இங்ஙனம் யான் தவித்துக் கொண்டிருந்த பொழுதில், என் தமையன் வரவே, கட்புலனாகாக் கடவுளைக் கட்புலனெதிரே கண்டாற்போல என்னை மறந்த களிப் புடையவள் ஆனேன். அந்த வீட்டிலிருந்து யான் என்னுடன் எடுத்துப் போகவேண்டுவது ஒன்றுமில்லாமையால் யான் புறப்படுவதற்குச் சித்தமாய் இருந்தேன். அன்பிற் சிறந்த என் மாமனார் காலமான பிறகு, எனது உணவையும் யானே மெத்தை மேல் யானிருந்த அறையில் ஆவியடுப்பிற் சமைத்து வந்தேன். எனக்கு வேண்டிய உணவுப் பொருள்களும் மற்றையவும் என் தமையனே அடிக்கடி கொணர்ந்து கொடுத்துவந்தான். அதுவல்லாமலும், அந்தப் பாரசீகப் பெருமாட்டியார் என் செலவிற்காக என் மாமனார் இறந்த மறுநாளே, இருநூறு ரூபா என் தமையன் வழியாக எனக்கு அனுப்பியிருந்தார். ஆகவே, என்னுடைய புத்தகங்கள் சிலவும் என் ஆடை அணிகலன்கள்

சிலவும் அடங்கிய ஒருசிறு கைப்பெட்டியை மட்டுங்கையில் எடுத்துக் கொண்டு கீழ் இறங்கி மாமி நாத்துணாரிடம் அதனைத் திறந்து காட்டி விட்டுப் போவதற்கு விடைகேட்டேன்.பெட்டியைத் திறந்துகாட்டியபோது மட்டும் அதனுள்ளேயிருந்தவற்றைக் கருத்தாய்ப்பார்த்த அவர்கள் தமக்கு உரியது ஏதும் அதனுள் இல்லாமை கண்டு மனம் நிறைந்தவர்களாய் என்மேல் அருவருப் போடு ஒன்றும் பேசாமற் சமயற்கட்டுக்குட் போய்விட்டார்கள். வாய்ப்பேச்சுக்கூடப் பேசாமல் அவ்வளவு கொடுமை பாராட்டிச் சென்ற அவர்களது இல்லத்தில் நமக்கு என்னவேலை!'' என்று என் தமையன் குறிப்பிக்க, யான் அவனோடு தெருவாயிலண்டை வந்தேன்; வெளியே சென்றிருந்த என் மைத்துனனும் அப்போது உள்ளே வந்தவன் நான் அவ்விடத்தை விட்டுச் செல்வதைப் பற்றி சிறிது வருந்தினான். அவன் எங்களுடன் வருந்திப் பேசிய ஒலி கேட்டவுடனே உள்ளேயிருந்த மாமியும் நாத்துணாரும் அவனை அதட்டிக் கூப்பிட்டார்கள். நாங்கள் உடனே ‘‘போய் வருகின்றோம்' என்று அவனிடம் சொல்லிவிட்டு வண்டியிலேறிப் புதியவீட்டுக்கு வந்து சேர்ந்தோம்.

இவ்வீடு இச்சென்னை மாநகரத்திற் குடிமக்கள் தோட்டத்திற்கு* (People’s park) மேலண்டைவாடையில் உள்ள சாலையில் அமைந்திருக்கின்றது. மேல்மாடம் உள்ளது. மிகப் பெரிதல்லா விடினும் அழகிதாயிருக்கின்றது.மேல்மாடத்திலிருந்து பார்த்தால் குடிமக்கள் தோட்டத்தினுள் உள்ள மரஞ்செடி கொடிகளும் பிறவும் நன்றாய்த் தெரிகின்றன. மேன் மாடத்தில் தனியேயிருந்து படிக்கவுங் கடவுளை வணங்கவும் இஃது ஏற்றதாயிருக்கின்றது. எனக்கு இன்றியமையாது வேண்டிய எல்லாவசதிகளும் என் அருமைத் தமையனால் செவ்வையாக அமைக்கப்பட்டிருந்தன.எனக்கு வேண்டியது ஏதேனும் இருந்தால் அதனையான் வாய் திறந்து சொல்லுமுன் குறிப்பால் அறிந்துகொண்டு அதனை என் அன்புருவான தமையன் உடனே வருவித்துத் தருகின்றான். என் அன்பிற் சிறந்த மாமனாரோடு யானிருந்த போது அடைந்த பெரு மகிழ்ச்சியைச் சென்ற ஒரு திங்களுக்கு மேல் இழந்து போன யான் திரும்பவும் அதனை இப்போதுதான் பெறலானேன்.

இவ்வீட்டிலுள்ளவர்கள் என் தமையனைத் தவிர, அவன் மனைவியும் அவளுக்குப் பாட்டி முறையில் உள்ள ஒரு கிழவியுந்

தாம். இந்தக் கிழவி மிக நல்லவள், இன் சொல்லும் அமைதியும் உடையவள். என்னிடத்தில் நிறைந்த அன்புடையவளாய் இருக்கின்றாள். என் தமையன் மனைவியோ இன்னும் மங்கைப் பருவம் அடையாத ஒரு சிறு பெண். என் பெற்றோர்களை நான் விட்டுப்பிரிந்து என் மாமனாரிடம் போவதற்குமுன் ஓர் ஆண்டிற்கு முன்னேதான் இவளை என் தமையனுக்கு மணஞ் செய்வித்துக் கொண்டு வந்தார்கள். ஆனால் இவளை இவள் பெற்றோர்கள் அடிக்கடி தமது வீட்டிற்கு அழைத்துப் போய்விட்டமையாலும், இடையிடையே எங்களிடம் வந்திருந்த சில நாட்களும் என் அன்னை இவளை வீட்டுவேலையில் ஏவிக்கொண்டிருந்ததல்லாமல் என்னோடு நன்றாய்ப் பழகுவதற்கு இடங்கொடாமையாலும் யான் அப்போது இவளை நெருங்கிப் பழகுவதற்கு இசைவில்லாமற் போயிற்று. என்றாலும், அப்போதே இவளைப்பற்றி எனக்கு நல்லெண்ணமே இருந்தது. இப்போது இவளோடு நெருங்கிப் பழக மிக அமயம் வாய்த்ததுபற்றி மகிழ்கின்றேன். இவள் பெருஞ் செல்வர்வீட்டுப் பிள்ளை. இவள் தந்தையார் அரசியலில் உயர்ந்த அலுவலில் இருந்தவர்; அவர் இரண்டு ஆண்டுக்கு முன்னே தான் காலமானார்; இவள் அன்னையார் நிரம்ப அடக்கம் உள்ளவர், வெளியே அந்த அம்மையாரைப் பார்ப்பதே கிடையாது. கணவன் பிரிவாற்றாமை யால் மனத்துயரத்திலேயே மங்கியிருக்கின்றார். இவள் ஒரே பெண் ஆதலால் இவளிடத்தில் மிகுந்த அன்பு பாராட்டுகின்றார். இப்பெண்ணுடன் பிறந்த ஆண்பிள்ளைகள் மூவரும் மூத்தவர்கள்; இந்தப் பிள்ளைகளைப் பார்த்து மன ஆறுதல் பெற்று இவர்கள் பொருட்டாகவே உயிர்வாழ்கின்றனர். மூன்று நான்கு முறை இந்த அம்மையார் எங்கள் வீட்டிற்கு வந்தபோது என்னைப் பார்த்து ஒரு வகையில் மிக மகிழ்ந்தாராயினும் எனது நிலைமைக்காக மிக வருந்திக் கண்ணீர் உதிர்த்தனர். மங்கைப் பருவம் அடையும் முன் பெண் மக்களுக்கு மணஞ்செய்வது பெருந் தீமை என்பதனை நன்குணர்ந்தவர். இந்த அம்மையார் கட்டாயத் தினாலேயே தம் மகளுக்குப் பன்னிரண்டாவது ஆண்டில் மணம் நடைபெறலாயிற்று. இல்லையானால் ஐந்தாறு வயதிலேயே இவள் கழுத்திற் றாலியைக் கட்டியிருப்பார்கள். இவள் பெயர் கனகவல்லி; இவள் பெயரின் தன்மைக்குப் பொருத்தமாகவே இவளுடைய வடிவமானது பொன்னாற் செய்த பூங்கொடிபோல் அத்தனை அழகாக அமைந்திருக்கின்றது. என் தமையனுடைய

நல்ல இயல்புக்கு ஒத்த இவளை மனையாளாக அவனுக்கு இசைத்து வைத்த இறைவன் அருளுக்கு யான் நன்றி செலுத்து கின்றேன். இவள் இசை பாடவும் வீணை வாசிக்கவுங் கற்பிக்கப்பட்டிருக்கிறாள்; ஆயினும் அவ்விரண்டிலும் இன்னும் நன்றாய்த் தேர்ச்சி அடைய வில்லை; சிறுபிள்ளையாதலால் இன்னும் ஆண்டு முதிர முதிர அவற்றில் நன்கு தேர்ச்சி பெறுவாள் என்பதில் ஐயமில்லை. ஆனால், இவளிடத்தில் எனக்குக் குற்றம்போல் தோன்றுவனவும் சில உண்டு. கல்வி கற்பதில் இவளுக்கு மிகுந்த விருப்பம் இல்லை. வீட்டு வேலைகளும் ஒன்றுமே செய்யத் தெரியவில்லை. எந்நேரமும் இசை பாடுவதிலேயே கருத்தாயிருக்கிறாள். இசையில் அவ்வளவு கருத்தா யிருப்பது குற்றமல்லாவிடினுங், கல்வியையும் வீட்டு வேலையையும் உன்னியாமையே குற்றமாக இருக்கின்றது. இதற்குக் காரணம் இவள் பெற்றோர்களே. இவள் தந்தையார் பெருஞ்செல்வராயும் அரசியலில் உயர்ந்த அலுவல் பார்த்த வராயும் இருந்தமையால் தாம் அலுத்துவந்து வீட்டிற்சேர்ந்த நேரங்களில் இனிய இசை கேட்டு இன்புறும் பொருட்டு இவளை இசையிலேயே பயிற்றி வந்தார். இவள் அன்னையோ தனக்கு இவள் ஒரே மகளாதல் பற்றி இவளிடத்தில் அளவுக்கு மிஞ்சிய அன்பு வைத்து இவளை விட்டு வேலையிற் பழக்காமல் வளர்த்து விட்டார்; மிகச்சிறிய வேலை முதல் மிகப் பெரியவேலை வரையில் எல்லாவற்றையுஞ் செய்தற்கு வேலைக்காரர் பலரை இவள் பெற்றோர்கள் ஏற்படுத்தி யிருந்தமையால் இவள் வீட்டு வேலையிற் பழகுவதற்கு இடமில்லாமலே போயிற்று. நமது உடம்பு ஓர் இயந்திரம் போல்வதாய் இருத்தலின் இதன் உறுப்புகள் ஒவ்வொன்றும் பெரும்பாலும் அசைந்து கொண்டிருத்தல் வேண்டும்; அசையாத இயந்திரத்தின் உறுப்புகள் துருவேறிப் பழுதாய்ப் போவது போலப் பல வேலைகளிலும் வருந்தி உழையாத ஒருவர் உடம்பின் உறுப்புகளும் இரத்த ஓட்டங் குறைந்து நரம்பு வலிவற்றுப் பழுதாய்ப் போகின்றன. உடம்பிற்கு உழைப்பு இல்லாமையால் இந்தப் பெண் உடம்பின் வளர்ச்சிக்கு வேண்டிய அளவு உணவு உண்பதில்லை; பிறர் கட்டாயத்திற்காகச் சிறிது கூட உண்பளாயின் அன்றைக்கெல்லாம் வயிறு செரியாமல் வருந்துவள், சில நேரம் வாயாலெடுப்பள்; அதனால் இவள் உட்கொள்ளும் உணவு சிறு குழந்தையின் உணவினுஞ் சுருங்கியது; செவ்வையான உடம்பின்

வளர்ச்சிக்கு வேண்டிய உணவும் அது செரிப்பதற்கு வேண்டிய உடம்பின் உழைப்பும் இல்லாமையால் இவள் உடம்பில் இரத்த ஓட்டம் இருக்க வேண்டிய அளவுக்கு இல்லை; அதனால் பொன் போல் இருக்கத் தக்க இவளது உடம்பின் நிறம் சிறிது வெளிறிக் காணப்படுகின்றது; கன்னங்களிலுஞ் சிவந்த நிறம் இல்லை; உடம்பிற் சதை குறைவாய்ப் பஞ்சுபோல் இருப்பதால் திரண்டு உருண்ட கொழுமையில்லை. இயற்கையாகவே சிறந்த அழகு வாய்க்கப்பெற்ற இவள் கல்வியும் உடம்புழைப்பும் உடையவளாய் நடந்து வருவளாயின் அச்செயற்கையால் அவ்வழகு மேன்மேற் பெருகிச் சுடர்விரி பசும்பொன்போல் விளங்கும். இவளைப் பெற்றோர்கள் தாம் செல்வத்திலுஞ் சிறந்த நிலையிலும் மேம் பட்டிருந்ததை நினைந்து, தம் மக்கள் ஏவற்காரர் இல்லாமல் தாமாகவே வீட்டு வேலைகளைச் செய்தல் இழிவெனக் கருதி அவர்களை இங்ஙனம் வளர்த்து வைத்தது பெருந் துன்பத்திற்கே இடமாகின்றது.

நமது நாட்டிற் செல்வர்வீட்டுப் பெண்பாலார் ஆண்பாலார் இருவருந் தமக்கு வேண்டிய வேலைகளைத் தாமேசெய்தல் தாழ்வென நினைந்து வெறுமனே காலங்கழித்தலி னாலன்றோ அவர்கள் கொடிய நோய்கள் பலவற்றிற்கு ஆளாகி ஆண்டு முதிரா முன்னரே கூற்றுவனுக்கு இரையாகின்றனர். செல்வர்களுக்கு வரும் நோய்கள், நெற்றித் தண்ணீர் நிலத்தில் விழப் பாடுபடும் ஏழை எளியவர்கட்கு வருகின்றனவா? இல்லையே. செல்வ மகளிர்கள் கருக் கொண்ட காலங்களிற் படுந்துன்பமும், அக்கருவை உயிர்க்க மாட்டாது, நண்பகல் வெயிலிற்பட்ட புழுப்போல் துடிதுடித்து உயிர்மாளுங் கொடுமையும் உடம்பு வருந்த உழைக்கும் ஏழைப் பெண் பிள்ளைகளிடங் காணப்படுவதுண்டோ? சிறிதும் இல்லையே. ஒருகால் தெய்வச் செயலால் வருந்திமகப் பெற்றாலும் அவர்கள் நீண்டநாள் உடம்பு தேறாது மருத்துவர் சொல்லும் மருந்துங் கையுமாய்த் துன்புற்று நாட்கழித்தலும், அவர் ஈன்ற பிள்ளைகளும் அவர்களைப் போலவே நோய்ப்பட்டு வருந்துதலும் எத்தனையோ வீடுகளில் நம் கண்ணெதிரே நடந்து வருகின்றன. தம்மைச் செல்வரென்றும் மேல் நிலையில் உள்ளவரென்றும் இறுமாப்போடும் எண்ணி நடந்ததனால் அடையும் பயன் இதுதானா? பிழையான எண்ணத்தினால் தாம் துன்புறுவதல்லாமலும் தம் வயிற்றிற் பிறக்கும் பிள்ளைகளும்

இங்ஙனமே கால்வழி கால்வழியாக நோய்வாய்ப்பட்டு நொந்து மாயும்படி செய்வதுஞ் செய்விப்பதும் எவ்வளவு பேதைமை! எவ்வளவு கொடுமை!! தாம் கொட்டாலுந் தம் பிள்ளைகளை யாவது சீர்திருத்தக் கூடாதா? பிள்ளைகளைக் காலையில் எழச்செய்து, காலைக்கடன்களை முடித்துத் தலைமுழுகிப் பூத்தொடுத்துச் சாந்து அரைத்து இறைவன் திருவுருவ அடையாளங்களுக்குத் திருமுழுக்குச் செய்வித்து அவற்றைச் சாத்தி அகில் புகைத்துக் கர்ப்பூரங் காட்டி, இறைவனைத் தொழுது பாட்டுப்பாடி வணங்கும்படி ஏவுதல் வேண்டும்; இங்ஙனங் கடவுளுக்குச் செய்யும் வழிபாட்டை ஆண் பெண் பிள்ளைகள் இருவருஞ்செய்தல் கட்டாயமாக வேண்டப்படும். இவ்வாறு செய்யாமற் செல்வர்வீட்டுப் பிள்ளைகள் காலையில் எட்டுமணி வரையில் தூங்கி எழுந்து பல்கூட விளக்காமல் 'காப்பி', 'ரொட்டி' என்று கூவுகின்றன. இத்தீய வழக்கத்தைச் செல்வர்கள் அறவே ஒழித்துவிடல் வேண்டும். கடவுளைத் தொழுதபின் பெண் மக்கள் சிறிது நேரமும் ஆண் மக்கள் மிகுந்த நேரமும் இருந்து கல்வி கற்றல் வேண்டும். பெண் பிள்ளைகள் வீட்டிலிருப்பவர்களா யிருந்தாற் காலையிற் கல்வி கற்ற சிறிது நேரம் போகப் பிறகு சமையற்றொழிலுக்கு வேண்டிய எல்லா வேலைகளையும் திருத்தமாகவும் நேர்த்தியாகவும் திறமையாகவுஞ் செய்யக் கற்றுக் கொள்ளல் முதன்மையாகும். உடம்பை நோய் அணுகாமற் பாதுகாத்து வளர்ப்பதற்குச் செவ்வையான உணவே இன்றியமை யாக் கருவியாய் இருப்பதனால் நாவிற்கு இனிமையும் உடம்பிற்கு நலமுந் தரும் பலவகை உணவுப் பொருள்களையும் கூறுபாடு அறிந்து சமைத்து வைத்தலைக் காட்டிலும் மேலான தொழில் பெண் மக்களுக்கு இல்லை. ஏனென்றால், உடம்பு செவ்வையான நிலைமையிலிருந்தால் தான் எல்லா நன்மைகளையும் அடையலாம்; ஆதலாற் சமையற்றொழிலைத் தாழ்வாக நினைத்து அதனை ஏவற்காரர்கையில் விட்டிருப்பது சிறிதும் விரும்பத் தக்கதன்று. இதனாற் பல தீங்குகள் உண்டாவதை வழக்கத்திற் பலரும் பார்த்துங் கேட்டுமிருக்கலாம். மேலும், சமையற் றொழிலை செய்யுங்கால் அடிக்கடி நிமிர்ந்துங் குனிந்தும் நடந்தும் உடம்பு பலவாறு அசைதலகல் உடம்பிலுள்ள எல்லா உறுப்புக்களும் செவ்வனே அசைந்து இரத்தம் நன்றாய் ஓடவும் நரம்புகள் வலிவேறவும் அவற்றால் நன்றாய்ப் பசியெடுக்கவும் வேண்டுமளவுக்கு உண்ட உணவு செரிக்கவும் இடம்

உண்டாகின்றது; அதன்மேலும், நெருப்பண்டையிலிருத்தலால் உடம்பு நன்றாய் வியர்க்க, இரத்தத்திலுள்ள நச்சுப் பொருள்கள் உடனுக்குடன் வெளிப்பட அதுவுந் தூயதாகின்றது; இவற்றோடு உணவுப் பண்டங்களைப் பதம் அறிந்து ஒன்றுகலந்து இன்சுவைப்பட ஆக்கவேண்டி யிருந்தலால் அவ்வேலையில் முனைந்து நிற்கும் அறிவுங் கூர்மையாகின்றது. இங்ஙனம் பலவகையாலும் பெண் மக்களுக்குச் சிறந்ததாகக் காணப்படுஞ் சமையற்றொழிலை இகழ்ந்து கைவிட்டிருத்தலைக் காட்டிலும் வேறு தீமை பெண் பிள்ளைகளுக்கு யாது இருக்கின்றது? இனிச் சமையல் செய்து உணவெடுத்துச் சிறது களைப்பாறியபின் சிறிது தையல் வேலையிற் பழகி அதன்பின் அரிய பல நூல்களையும் வீணை முதலான இசைக் கருவிகளையும் கற்றலிற்கருத்து ஊன்றல் வேண்டும். இங்ஙனஞ் செய்தலை விடுத்து நம் நாட்டுப் பெண்பாலாரிற் பலரும் ஓய்வான நேரங்களில் அண்டைவீட்டுப் பெண்பிள்ளைகளை அழைத்து வைத்துக் கொண்டு வீணான ஊர்ப்பேச்சுப் பேசுவதிலுந் தாயம் ஆடுவதிலும், பிறரை வம்புக்கு இழுப்பதிலுந் தூங்குவதிலுந் காலத்தைப் போக்குகின்றனர்! செல்வர்வீட்டுப் பெண் பிள்ளைகளையும் ஏழை வீட்டுப் பெண்பிள்ளைகளையும் ஒப்பிட்டு பார்த்தால் ஏழைப் பெண்மணிகளே மிக மேலானவர்களாய் இருக்கின்றார்கள். வயிற்றுக்கில்லாமையால் எளிய பெண்கள் நெல்லுக்குத்தியோ இல்லை தைத்தோ மா அரைத்தோ விறகு விற்றோ பிறர் இட்ட ஊழியஞ் செய்தோ தமது காலத்தை ஒரு நொடியும் வீணே கழியவிடாமல் தமக்கும் பிறர்க்கும் பயன் படும்படியான வழிகளிற் செலவிடுகின்றார்கள். இந்த இருதிறத்தவர் நிலைமைகளையும் எண்ணிப் பார்க்குங்கால் செல்வர்வீட்டு மாதர்கள் செல்வத்தாற் பெற்றபயன் சிறிதும் இல்லையென்பது புலனாகின்றதன்றோ? செல்வத்தைப் பெற்று இங்ஙனஞ் சீரழிவதைக் காட்டிலும், வறுமையிற் செம்மையாயிருத்தலே பன் மடங்கு சிறந்ததாய்க் காணப்படுகின்றது.

என்பெருமானே, தாங்கள் எனக்கு அன்போடு எழுதிய கடிதங்கள் பலவற்றிற் படித்தல், எழுதுதல் யாழ் இசைத்தல் முதலான சில வேலைகளைத் தவிர வேறு வீட்டுவேலை எதுவும் மெய்வருந்தச் செய்யவேண்டாம் என்று தாங்கள் எனக்குக் கற்பித்திருந்தது என் மனத்திற்கு இசையவில்லை. தாங்கள் என் மேல் வைத்த நிறைந்த அன்பினால் அங்ஙனம் எழுதியதற்கு

மகிழ்ந்தேனாயினும், மற்றைச் செல்வர்களைப்போல நீங்கள் இப்படி சொல்வது என் கருத்துக்கு இணங்கவில்லை; அதனாலேதான் செல்வமாதர்கள் தமது காலத்தை எங்ஙனம் பயன்படுத்தல் வேண்டுமென்பதைப் பற்றி இவ்வளவு விரித்தெழுதி என் கருத்தைத் தங்கட்குத் தெரியப் படுத்தலானேன். யான் கல்வி கற்பதில் எவ்வளவு அக்கரையாய் இருந்தேனோ அவ்வளவு அக்கரையாய் வீட்டு வேலைகளையுஞ் சுருசுருப்போடு செய்து வந்தமையே காலஞ்சென்ற என் அருமை மாமனாருக்குப் பேருவப்பைத்தந்தது. சமையல் வேலை முதலாக எல்லா வீட்டு வேலைகளையும் என்னால் இயன்வரையிற் செவ்வையாகச் செய்து வந்தபோதெல்லாம் என் மாமனார் என்னைக் கண்டு மகிழ்ந்து இதுதான் பெண்மக்கட்கு அழகு!' என்று கூறிய மொழிகள் எனக்கு அவ்வுண்மையை நன்கு விளங்கச் செய்து மனக்கிளர்ச்சியை உண்டுபண்ணின. யானெழுதியவற்றிற் குற்றம் இருந்தால் அதனை எடுத்துக்காட்டி என்னைத் திருத்தும்படி தங்களை மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

என் அருமைத் தமையன் மனைவியைப்பற்றிச் சொல்ல வந்ததில் இவ்வளவும் எழுதிவிட்டேன். என் அண்ணன் இவளுக்கு வீட்டுவேலை முழுதுங் கற்பித்துக் கொடுக்கும்படி என்னைக் கேட்டுக்கொண்டிருக்கின்றான். இவளும் என் சொற்படி கேட்பவளாயும் என்பால் மிகுந்த அன்புடையவளாயும் இருக்கின்றமையால் இவளைத் திருத்துவது எனக்கு எளிதாகவே இருக்கும். என் அருமைத் தங்கை தனலட்சுமியை இனிக் காண்பதற் கில்லாதவாறு பிரிந்துவந்த எனக்கு இவளோடு கூடியிருக்கப் பெற்றது பெருங்களிப்பாயிருக்கின்றது. ஆ! இப்போது தபாற்காரன் வந்து கதவைத் தட்டுகிறான்! திரும்பவந்தெழுதுகிறேன்.

என் ஆருயிர்ச் செல்வப் பெருமானே, இப்போது தபாற்காரன் கொண்டுவந்து கொடுத்தது தங்கள் அன்பு பொதிந்த கடிதந்தான். அதனுள் வரைந்திருந்தவைகளைப் படித்துப்பார்த்து அளவிலா மகிழ்ச்சி அடைந்தேன். என்னை ஈன்ற அன்னையினுங் கோடி மடங்கு உயர்ந்த அந்தப் பாரசிகப் பெருமாட்டியாரையும், என் தந்தையினுங் கோடிதரஞ் சிறந்த அந்தப் பாரசிகப் பெருமானையும் அவர்கள் அருமைக் குழந்தைகளையுந் தாங்கள் வாடிச்சந்திப்பிற் போயிருந்து பார்த்து, மிக்க அன்போடும்

அளவளாவிப் பேசினமை அறிந்து பேரின்பக்கடலிற் றிளைத்தவளானேன். அவர்களைப் பற்றி தாங்கள் மிக உயர்ந்த எண்ணங் கொள்ளலானதுந். தங்களைக் கண்டு பேசியதில் அவர்களின் அகமும் முகமும் மலர்ந்து இன்புறலானதுந் தெரிந்து என் உள்ளங்கொண்ட மகிழ்ச்சியை எழுத வலிவற்றவளா யிருக்கின்றேன். ஆனால் மற்றும் ஒரு செய்தி எனக்குத் துன்பத்தைத் தந்து உடனே ஆறுதலையும் உண்டாக்கினது. அவர்களைத் தாங்கள் பார்க்கச் சென்றபோது சேதுராமன் என்னும் அந்தப் பார்ப்பனப்பையன் தங்களுடன் வரலானதுந் தாங்கள் அவர்களிடம் சிறிது பேசித்திரும்பியதற்குள் அவன் தன்னைப்பற்றி அவர்கட்குத் தெரிவிக்கும்படி தங்களை அடிக்கடி கேட்கலானதுந்,தாங்கள் அவனைப்பற்றிப் பின்னுஞ் சிறிதுநேரம் பொறுத்துத் தெரிவிக்கலாம் என்று இருந்ததற்குள் அவன் தானாகவே தன்னைப் பற்றி அவர்களிடம் தெரிவித்துக் கொண்டதும் அவ்வாறு அவன் இடையே வலியப் புகுந்து அவர்களிடம் பழக்கஞ் செய்து கொள்ள முயன்றது அவ்விருவர்க்கும் அருவருப்பை விளைத்ததும், அவனது செய்கை தங்கட்குச் சிறிது வருத்தத்தையும் பெருமைக் குறைச்சலையும் தந்ததும் எனக்குத் துன்பத்தைத் தந்தன; ஆனாலும், அவர்கள் அவனிடம் முகங்கொடுத்துப் பேசாமல் தங்களிடமே பேசியதுந், தங்களை அப்பாரசிக கனவான் அருகழைத்துத் தங்கள் காதில் அவனைப்பற்றித் தமக்குநல்லெண்ணம் இல்லை யென்று தெரிவித்ததும் என் உள்ளத்திறகு ஆறுதலைத் தந்தன. இப்போது தான் தாங்கள் அவன் செய்கையில் ஐயுறவு கொள்ளத் தலைப்பட்டீர்கள். விரைவில் அவனைத் தங்களிடம் வராமல் நீக்கிக் கொள்வதறிந்தும் உவப்படைந்தேன். அது நிற்க.

பம்பாய்க்குச் சென்றபின் அப்பாரசிக அம்மை யாரிடமிருந்து எனக்கும் இன்னுங் கடிதம் வரவில்லை; அதனால், அவர்களுடைய குடும்ப ஏற்பாடுகளெல்லாம் நிரம்பக் குழப்பமான நிலைமையில் இருக்கின்றன என்று அறிகின்றேன். அந்தப் பாரசிகப் பெருமானின் தமையனார் காலமாயிருக்க வேண்டும். எப்படியும் இன்னுஞ் சில நாட்களிற் கட்டாயங்கடிதம் வரும். அப்போது எல்லாம் விரிவாய்த் தெரியும். தங்கட்கும் அவர் எல்லாம் எழுதித் தெரிவிப்பார் என்று நம்புகின்றேன். இன்னும் நாலைந்து நாளில் மறுபடியுந் தங்கட்கு எழுதுகிறேன்.

## கடிதம் - 14

*என் மனத்தடத்தில் மலர்ந்திருக்கும் மணங்கமழ் தாமரையே,*

*இன்றைக் காலையில் என் தமையன் மனைவியைப் பார்க்கும் பொருட்டு அவன் உறவினர் சிலர் வந்தனர்; அவர்கள் வந்தபின் சிறிது நேரத்தில் அவள் அன்னையும் வந்தனர். பார்க்கவந்தவர்கள் எல்லாரும் பெண்பிள்ளைகளே. எல்லாரும் முப்பத்தைந்திற்கு மேல் நாற்பதுவயதுக்கு உட்பட்டவர்கள். எல்லாருங் கணவரோடிருந்து வாழ்பவர்கள். கனகவல்லியின் அன்னையார் மட்டுங் கணவனை இழந்தவர்; ஆனாலும், என்னைப்போல் தலையிற் கூந்தல் வைத்திருக்கின்றார். நாங்கள் வந்தவர்களுக்குச் செய்ய வேண்டும் உபசாரங்களைச் செவ்வையாகச் செய்து அளவளாவிப் பேசிக்கொண்டிருக்கையில், வந்தவர்களில் ஓர் அம்மையார் வழக்கமாகப் பேசும் பேச்சுகளில் விருப்பம் இல்லாதவராய், அவர்கள் வரும் நேரத்தில் யான் படித்துக் கொண்டிருந்து மேசை மேல் வைத்துவிட்டுவந்த புத்தகத்தை எதிரேபார்த்து "அம்மா, கோகிலம் அதென்ன புஸ்தகம்? நாங்கள் வரும்போது நீ அதை ரொம்பக் கவனமாய்ப் படித்துக் கொண்டிருந்தாயே" என்று கேட்டார்.*

*அதற்கு நான் "அது **திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்கள் அடங்கிய திருமுறை**" என்றேன். அதற்கு அந்த அம்மையார் ஒன்றுஞ்சொல்லாமற் புருவத்தை மேல்நிமிர்த்தித் தலையை அசைத்து வாயைக் குவித்து வலக்கையின் முன்விரல்களை மடக்கி வாய்மேல் வைத்தார். அவர் ஏதும்பேசாமல் வெறுப்போடுசெய்த அதனைக்கண்டு என் உள்ளம் வருந்தியது. சிலநாட்களுக்குமுன் என் தந்தையார் இங்ஙனமே தேவார திருவாசகங்களையும் எம்பெருமானையும் சைவ சமயத்தையும் மற்றச் சாதியாரையும் இழிவுபடுத்திப் பேசியதனால் உண்டான என் மனப்புண் இன்னும் ஆறாமல்*

இருக்கையில் அதிற் கூரிய இருப்புக்கோலைக் காய்ச்சி நுழைத்த பான்மையாக இந்த அம்மையாரும் அத்தெய்வ அருணூலைப் பற்றி யான் சொல்லிய சொற்களை அருவருத்தமை பெருந்துயரை விளைத்தது. எங்கள் பார்ப்பன இனத்தவரில் உள்ள ஆண்பெண் என்னும் இருபாலார்க்கும் இந்தப் பொல்லாத சாபக்கேடு இருப்பது இப்போது தான் எனக்கு நன்றாய்த் தெரிந்தது. இதனை நினைக்க நினைக்க என் மனம் நைந்து முகம்வேறுபட்டது. எனக்குண்டான வாட்டத்தை அறிந்த கனகவல்லியின் அன்னையார் எனக்கு ஆறுதல் உண்டாகும் பொருட்டுக்,

“குழந்தே, அந்த நூலின் அருமை இந்த அம்மாளுக்குத் தெரியாது. பொதுவாக நம் இனத்தவர்கள். அந்த நூல்கள் சூத்திரர்களுக்குத்தாம் உரியவைகள்; பிராமணாளுக்கு வேதங்கள் மாத்திரந் தாம் சொந்தம்; அவர்கள் அவற்றைத் தவிர மற்றத் தமிழ் நூல்களை படிக்கப்படாதென்னும் ஒரு பொருந்தா நம்பிக்கையுள்ளவர்களாய் இருக்கிறார்கள். அதற்காக நீ வருத்தப் படாதே” என்று எனக்கு ஆறுதல் வரப்பேசினார்கள்.

இங்ஙனமே என் தந்தை பேசியபோது அவரை மறுத்துச் சொல்லக்கூடாத நிலைமையில் அப்போதிருந்தேன். ஆனால், இப்போது நான் அப்படி வாயை மூடிக்கொண்டிருக்கக் கடமைப் பட்டவள் அல்லேன் என்பதை உணர்ந்துபார்த்து, எம்மினத்தவர் கொண்ட அறிவில்லாத நம்பிக்கையை மாற்ற விரும்பிப் பார்க்க வந்தவளோடு பேசுவதைப் பார்க்கிலும், என் அத்தையோடு இதனைப் பேசுதலே நலம் என்றெண்ணி ‘அத்தே, தமிழும் தமிழ் நூல்களும், சூத்திரர்களுக்கு மட்டுந்தாம் உரியவை என்று எந்தக் காரணத்தைக் கொண்டு நம்மவர் சொல்லுகிறார்கள்?” என்று வினவினேன்.

அதற்கு அத்தையார் “நம் முன்னோர்களும் ஞானத்திற் சிறந்த ருஷிகளும் ஸமஸ்கிருத பாஷையைத்தான் பேசினார் களென்றும், அதிலேயே சகலசாஸ்திரங்களையும் எழுதி வைத்தார்கள் என்றும், கீழோர் பேசுந் தமிழ் முதலான பாஷைகளை அவர்கள் பேசவும் இல்லை. அவற்றில் வேதம் முதலான உயர்ந்த சாஸ்திரங்களை எழுதி வைக்கவும் இல்லையென்றும் நம்மவர் சொல்லக் கேட்டிருக்கிறேன் நூல்களிலும் படித்திருக்கின்றேன்” என்றார்.

“அப்படியானால் அகத்திய முனிவரைப் பற்றித் தங்கள் கருத்து யாது?” என்று வினாவினேன்.

“அவர் ருஷிகளில் தலைமை பெற்றவர் என்றும், அகிலலோக நாயகனான ஈசுரனுக்குச் சமமானவர் என்றும், சகல வேத சாஸ்திரங்களும் சொல்லுவதாக அறிந்திருக்கின்றேன்” என்று அத்தையார் சொன்னார்.

“அப்படியானால், அவ்வளவு தெய்வத்தன்மை பொருந்திய அகத்திய முனிவர், ‘பிரபுவாகிய சிவபெருமான் திருவருளினாலே தமிழ்மொழியாகிய திராவிடபாஷையை அமைத்தேன்’ என்று அவர் தாமே சொல்லியதாக ஸ்காந்த மகாபுராணத்திற் சங்கரசங்கிதை உபதேசகாண்டம் எழுபத்தொன்பதாம் அத்தியாயத்தில் துலக்கமாகக் கூறப்பட்டிருக்கையில், முன்னிருந்த மகருஷிகள் தமிழைப்பேசவில்லை, அதில் நூல்கள் எழுதவில்லையென்பது எப்படிப்பொருந்தும்?” என்று கேட்டேன்.

“அப்படியா அம்மா! எனக்கு இந்த உண்மை இதுவரையில் தெரியாது. தமிழுக்கு முதல் பரமாசாரியர் அகஸ்திய முனிவரா!” என்று வியந்து, யான் சொல்லியதற்கும் யான் சொல்லியதைக் கேட்டு விடைசொல்லத் தெரியாமல் வாய் மூடிக் கொண்டிருக்கும் அப்பெண்பாலார் நிலைமைக்கும் மகிழ்ந்து கொண்டார் என் அத்தையார்.

இதற்குள் முதலில் என்னைக்கேட்ட பெண்பிள்ளை “நம் முன்னோர்களிற் பெரும்பாலார் தமிழ்ப்பேசவாவது அதில் நூல்கள் எழுதவாவது பிரியப்படவில்லையென்று அர்த்தம் பண்ணக் கூடாதோ?” என்று வினாவினாள்.

உடனே அதற்குநான் “திருவள்ளுவ மகருஷி திருக்குறள் என்னும் ஒப்பு உயர்வில்லாத் தமிழ்வேதத்தை அருளிச்செய்ய வில்லையா? மூவாயிரம் ஆண்டு தவம் இருந்த திருமூலமகருஷி திருமந்திரம் என்னும் அரிய ஞானசாஸ்திரத்தைத் தமிழிற் செய்தருள வில்லையா? இவ்விருவர்க்கும், சமஸ்கிருத வியாகரணஞ் செய்த பாணினிமுனிவர்க்கும் மிக முன்னேயிருந்த தொல்காப்பிய மகருஷி உலகத்தில் மற்றெந்தப் பாஷையிலுங் காணமுடியாத நுட்பங்களெல்லாங் கண்டறிந்து தொல்காப்பியம் என்னும் இலக்கண மகோததியை நமக்குத் தந்தருளவில்லையா? இந்தத் தொல்காப்பிய மகருஷி அகஸ்தியருக்குப் பிரதம சிஷ்யரென்று

சில பழைய நூல்களால் அறிகின்றோம். வான்மீகர் மார்க் கண்டேயர் முதலான அருந்தவத்தோர்களுந் தலைச்சங்கத்தி லிருந்து தமிழ் ஆராய்ந்தார்களென்றும், அவர்களாலும் அக்காலத்திலிருந்த முனிவர்களாலும் இயற்றப்பட்ட தமிழ் நூல்கள் எண்ணிறந்த வாமென்றும் நாம் செவ்வையாக அறிகின்றோம். அது நிற்கட்டும். அவர்கட்குப் பிற் காலத்தில் நம் பார்ப்பனவகுப்பில் அவதாரஞ் செய்தருளிய **மாணிக்கவாசக சுவாமிகள்** திருவாய்மலர்ந்த திருவாசகத்தையும், **திருஞானசம்பந்தப் பெருமானும் சுந்தர மூர்த்தி சுவாமிகளும்** அருளிச் செய்த தேவாரங்களையும் படித்துப பரவசப்பட்டுப் பத்தியால் மனங்கரையும் பேரின்ப அனுபவம் உடையவர்கள் தமிழைச் சூத்திர பாஷையென்றும் அதில் உயர்ந்த நூல்கள் இல்லை யென்றுஞ் சொல்ல மனந்துணிவார்களோ? சைவவேளாள இனத்தில் திருஅவதாரஞ் செய்த **அப்பர் சுவாமிகளென்னுந் திருநாவுக்கரசு** அடிகள் திருவாய்மலர்ந்தருளிய **தேவாரப் பதிகங்களைக்** கேட்ட கல்லுங் கரையுமானால், அவற்றைக்கேட்டு நெஞ்சம் உருகாத நம் பார்ப்பனச் சாதியாரின் மனத்தை என்னென்று கூறுவேன்! திருநாவுக்கரசரின் தெய்வத்தன்மையை உணர்ந்தன்றோ திருஞான சம்பந்தமூர்த்தியும் அவரை வணங்கி 'அப்பரே' என்றழைத்தார்! அப் பூதியடிகள் என்னும் பிராமண முனிவர் திருநாவுக்கரசு அடிகளிடத்தில் அளவுபடாத அன்புபூண்டொழுகி அவர் திருவடிகளைத் தொழுது அருள்பெற்ற உண்மைச் சரித்திரத்தை நம்மவர் அறியாதது அவர்தந் தீவினையே! **மெய்கண்டதேவர் என்னும் சைவவேளாளக் குழந்தை** வேதாகமங்களாலுங் கண்டறியப் படாத முடிந்த உண்மைகளையெல்லாங் கரைகண்டு தெளிவுபடுத்தி அருளிச் செய்த **'சிவஞானபோதம்'** என்னும் ஒப்புயர்வில்லா ஞான நூலினை நம்மவர் பெயரளவாகக்கூட அறியாதிருக்குங் கொடுமையை யான் என்னென்று எடுத்துரைப்பேன்! இத்தெய்வக் குழந்தையின் அளவுபடா ஞானப்பெருமையினைத் தெரிந்தன்றோ, எல்லா வேதாகமங் களையுஞ் சிக்கறுத்துணர்ந்த சகலாகம பண்டிதர் என்னும் பிராமண முனிவர் தமதறிவையும் ஒருபொருளாக எண்ணாது சென்று அக்குழந்தையின் திருவடிகளில் வீழ்ந்து பணிந்து, அப்பிள்ளைக்கு அடிமையாகி அதனால் உபதேசிக்கப்பட்ட **சிவஞானபோதத்திற்கு** உரையாகச் **சிவஞானசித்தி** என்னும்

ஞான நூலை இயற்றியருளினார்! இன்னுந் **தில்லைமூவாயிரம் பிராமணர்** கட்குந் தலைவராய் விளங்கிய **உமாபதி சிவனார்** அருளிச் செய்த **'சிவப்பிரகாசம்'** முதலான ஞானசாஸ்திரங் களை நம்மவர் உணராத தீவினை பெரிது! பெரிது!! இதுவரையில் நான் எடுத்துச் சொல்லிய அருந்தமிழ் நூல்களுக்காயினும் அவற்றை அருளிய முனிவர்கட் காயினும் ஒப்புயர்வு சொல்லத்தக்க சாஸ்திரங்களேனும் ஆச்சாரியர்களேனும் நமது சமஸ்கிருதத்திலும் இல்லை, வேறெந்தப் பாஷைகளிலும் இல்லையென்று காலஞ்சென்ற என் மாமனாரவர்கள் ஆராய்ந்து சொல்லப் பலமுறை கேட்டிருக்கின்றேன். ஆகையால், தமிழின் பெருமை அறியாது அதனை இழிவாய்ப் பேசுவது நம்மினத்தவர் தம்மைத் தாமே இழிவுபடுத்துவதாய் முடிகின்றது" என்று அழுத்தமாய்க் கிளர்ச்சியோடு பேசினேன்.

எங்களைக் காணவந்த இப்பெண்பிள்ளைகளில் எவருந் தமிழில் இவவளவு பெருமையிருக்குமென்று சிறிதும் அறிந்தவர் அல்லர். இவர்களுடைய அறியாமைக்காக நான் மிகவும் இரங்கு கின்றேன். இவர்களை இவ்வளவு குருட்டுத்தனமான நிலைமையில் வைத்துக்கொண்டு தாமுங் குருடர்களாய் குருட்டுக்கொள்கைகளிற் பிடிவாதமாய் நிற்கும் எங்கள் சாதி ஆண்மக்களே இவ்வளவுக்குங் குற்றஞ் சாட்டப்பட வேண்டியவர் களாய் இருக்கிறார்கள். அது நிற்க, யான் மேற்சொல்லியவாறு பேசியவைகளைக் கேட்டு எல்லாருந் திகைத்திருக்கையில், என்னைக் கேள்விகேட்ட பெண் பிள்ளை மறுபடியுஞ் சிறிது காரம் உடையவளாய்,

"நீ சொல்லியதெல்லாஞ் சரிதான், **தமிழ்வேதம்** என்று சொல்லுந் **திருக்குறளைச் செய்தவர் ஒரு வள்ளுவப் பறையராமே?**" என்று கூறி, யான் சொல்லிய மற்றவைகளை யெல்லாம் விட்டு விட்டு திருவள்ளுவ நாயனார் பிறப்பைக் குறித்து இழிவு சொன்னாள்.

"நல்லது அம்மா, அவர் யாருக்குப் பிறந்தவர்? அதை அன்பு கூர்ந்து சொல்லுங்கள்" என்றேன்.

அதற்கவள், "அவர் தகப்பனார் யாரோ ஒரு **முனிவ**ராம், அவர் தாய் ஒரு பறைச்சியாம்" என்றாள்.

"ஆம், அவர் தந்தையர் **யாளிதத்தார்** என்னும் ஒரு சிறந்த முனிவர், அவர் ஒருபுலைச்சியை மணந்தது உண்மைதான். ஐம்புல ஆசைகளையும் முற்றத்துறந்த ஒருமுனிவரர் தன்னை விரும்பும்படி செய்த அப்புலைச்சி மற்றப் பெண்பிள்ளைகளைப் போன்றவளாய் இருப்பளா? அவள் அழகிலுங் குணத்திலுஞ் செய்கையிலும் நிகரற்றவளாய் எல்லாப் பெண்பிள்ளைகட்கும் மேலானவளாய் இருந்திருக்கவேண்டுமன்றோ? மற்றைப் பெண்பாலாரிடத்துங் காணப்படாத சிறந்த இயல்புகள் அவளிடத்திற் காணப்பட்டமை யாலன்றோ அருந்தவத்தோரான அம்முனிவர் அவளை விரும்பி மணந்துகொண்டனர். அவ்வளவு சிறந்த அப்பெண்ணரசியை நம் பார்ப்பன மகளிரினுஞ் சிறந்த தெய்வ மகளாகச் சொல்ல வேண்டுமே யல்லாமல் வெறும் பிறப்புப்பற்றிப் புலைச்சியாகச் சொல்லுதல் பெருங்குற்றமாம். அது போகட்டும். அவள் வயிற்றிற் பிறந்ததற்காக திருவள்ளுவரை இழித்துப் பேசினால், **மீன் பிடிக்கும் வலைச்சி வயிற்றிற் பிறந்த வியாச முனிவரையும்** இழித்துப் பேசவேண்டி வருமே! ஆனால், அவரை மட்டும் வேதங்களை வகுத்தவரென்றும் **பதினென் புராணங்களையும் மகாபாரத்தையும்** இயற்றினவ ரென்றும் மிக உயர்த்துப் பேசி அவரைத் தெய்வமாக வணங்குவதேன்? மேலும், நம் பார்ப்பனப் பிரிவினர்க்கு முதற்றந்தை தாயரான ருஷிகளும் ருஷி பத்தினிகளும் எப்படிப்பட்ட பிறப்பினர் என்பதை நம்மவர் மறந்துபேசுவது எனக்கு பெருவியப்பாய் இருக்கின்றது.

"சேற்றிற் பிறந்த செங்கழுநீர் போலப்
பிரமற்குக் கூத்திவயிற்றிற் பிறந்த வசிட்டரும்,
வசிட்டர்க்குச் சண்டாளி வயிற்றிற் பிறந்த சத்தியரும்,
சத்தியர்க்குப் புலைச்சிதோள் சேர்ந்து பிறந்த பராசரும்,
பராசர்க்கு மீன்வாணிச்சி வயிற்றிற் பிறந்த வியாசரும்"

என்று நம் முன்னோர் பிறப்பைக் கூறுங் **கபிலரக வலைச்**சிறிது படித்தாலும் இவ்வுண்மையெல்லாம் நன்றாய் அறியலாமே. இன்னுந் **தீர்க்கதமஸ்** என்னும் முனிவர்க்குத் தாசிவயிற்றிற் பிறந்த **கக்ஷிவத்** என்பவர் இயற்றிய மந்திரங்கள் தெய்வத்தன்மை யுள்ளனவாக ஏற்றுக்கொள்ளப் பட்டு இருக்கு வேதத்தின் முதல் மண்டிலத்திலும் ஒன்பதாம் மண்டிலத்திலுஞ் சேர்க்கப்பட்டிருக் கின்றன அல்லவோ?

இன்னும் இப்படியேயுள்ள நம்முன்னோர்களின் பிறப்பு வரலாறுகளை ஆராயப்புகுந்தால், அவை அளவில்லாமல் இருக்கின்றன. இவைகளையெல்லாம் நடுநிலைமையோடு ஆழ்ந்து நினைத்துப் பார்க்குங்கால் பிறப்பினால் ஒன்றும் இல்லை; அவரவர் அறிவின் மேன்மையாலும், அவர் செய்யும் அரும்பெருங் செய்கையாலும், அவர்க்குள்ள ஈகை இரக்கம் முதலான உயர் குணங்களாலுமே எல்லாச் சிறப்புகளும் உண்டாகின்றன என்று தெளிவாய் அறிகின்றோம். ஆகையால், அறிவிலும் உயர்குணச் செய்கை யிலும் ஒப்புயர் வின்றி விளங்கிய திருவள்ளுவ நாயனாரைத் தெய்வமாக நினைத்து வழிபட வேண்டுவதாயிருக்க அவரைப் பிறப்பினால் இழிந்தவராக நினைக்குந் தீவினைக்கு நாம் உள்ளாகப் படாது. நம்முடையவேத ஆகம புராண இதிகாசங்களிற் சொன்னவைகள் பெரும்பாலும் நம்மவர்க்குத்தான் பொருத்தமாகத் தோன்றும்; மற்ற நாட்டாரும் மற்றச் சாதியாரும் மற்றச் சமயத்தாரும் அவைகளை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். திருவள்ளுவ நாயனார் அருளிச் செய்த திருக்குறளில் உள்ள உண்மைகளோ எல்லா நாட்டார்க்கும் எல்லாச் சாதியார்க்கும் எல்லாச் சமயத் தார்க்கும் பொருத்தமானவைகள்; அதிலுள்ள பொருள் களை எல்லாருந் தலைமேல் ஏற்றுக் கொள்வார்கள்; அதனால் உலகத்திலுள்ள எல்லா மக்களும் இம்மை மறுமைப் பயன்களைப் பெற்றுச் சிறப்பார்கள். எல்லாரையுங் கரையேற்றும் இத்திருக்குறள் என்னுஞ் செந்தமிழ் லேகத்திற்கு நிகரானது எந்த மொழியிலும் எந்தநாட்டிலும் இல்லை. இப்படிப்பட்ட பேரறிவுநூல் நமது சமஸ்கிருத பாஷையில் இருந்தால் அதனைச் செய்தவர் பெயரை மறைத்து அது கடவுளே அருளிச் செய்ததென்று நம்மவர் கூறிவிடுவார்கள். **பழைய தமிழ்ப் புலவர்கள் பொய்யுரை கூறாத புனிதர்களாதலால்** அதனை ஆக்கிய திருவள்ளுவர் பெயரை மறையாமல்,

> “அறம்பொருள் இன்பம்வீ டென்னும் அந்நான்கின்
> திறந்தெரிந்து செப்பிய தேவை-மறந்தேயும்

வள்ளுவன் என்பான் ஓர்பேதை அவன் வாய்ச்சொற்
கொள்ளார் அறிவுடை யார்''

என்று அவரைத் தெய்வமாகக் கொண்டு பழைய காலந் தொட்டு வணங்கி வருகிறார்கள்' என்று தொடர்பாய்ப் பேசினேன்.

யான் சொல்லிய இவைகள் எல்லாம் என் அத்தையார் மனத்திற்கு மிகவுந் இசைவாய் இருந்தமையால் அவர் மட்டும் அடங்கா மகிழ்ச்சியுடையவராயினார். மற்றப் பெண்பிள்ளை களிற் சிலர் அவற்றை மனங்கொண்டவராயுங் கொள்ளாதவ ராயுங் காணப்பட்டனர். அவர்களில் என்னைக்கேள்வி கேட்டவன் மட்டும் யான் சொல்லியவகைகளை முற்றும் மறுத்துக்கூற விரும்பினளாயினும், யான் பேசியவை அவ்வளவும் மறுக்கக் கூடாத நூற்பிராமணங்களோடு அறிவுக்கும் அனுபவத் திற்கும் ஒத்து இருந்தமையால், உடன்பாடு உடையவள்போற் சிறிது நேரம் சும்மா இருந்து பிறகு,

"ஆமம்மா கோகிலம், நீ சொல்லிய தெல்லாஞ் சரிதான், நீ இவ்வளவு விசேஷமாய்ப் படித்திருப்பதற்காக நான் ரொம்பச் சந்தோஷப்படுகிறேன்'' என்று என்னைத் தனது பண்ணிக் கொள்வாள் போல் மகிழக்கூறி, மறுபடியும் "ஆனால் ஒன்று, அகஸ்தியர் முதலான மகருஷிகளும், மாணிக்கவாசகர் ஞான சம்பந்தர் முதலான மகாஞானிகளும், பிராமணர்களேயாயினும் அவர்களெல்லாஞ் சூத்திர தேவதையாகிய சிவனைக் கொண்டாடினபடியால் அவர்கள் நம்மினத்தவர்களால் பூஜிக்கப்படாமல் ஒதுக்கி வைக்கப் பட்டார்கள்; ஆனதால், அவர்கள் பாடிய தேவாரப் பாடல்களை நாம் படிக்கக் கூடாது'' என்று சொன்னாள்.

அதற்குமேல் நான் "சிவபெருமான் சூத்திரதேவதை என்றீர்களே; அதன் கருத்துயாது? அதனை எனக்கு விளங்கச் சொல்லுங்கள்'' என்றேன்.

"சூத்திர தேவதையென்றால் அடிமை வேலை செய்யுந் தாழ்ந்த சாதியார்க்கு மட்டுந்தான் அவன் தெய்வம் என்பது அர்த்தம்'' என்றாள்.

"சிவம் தாழ்ந்த சாதியார்க்குத் தெய்வம் என்று சொன்னால் அனுபவத்தில் அப்படியேயிருக்கவேண்டுமே. தாழ்ந்த சாதியார்

எல்லாரும் **மாரி பிடாரி காட்டேரி எசக்கி இருளன் மதுரைவீரன்** முதலான தேவதைகளையல்லவோ வணங்கி வருகிறார்கள்; சிவம் என்னும் பெயர்கூட அவர்களிற் பெரும்பாலார்க்குத் தெரியாதே. வடக்கே கைலாசம் காசிமுதல் தெற்கே இராமேசுவரம் வரையிற் பழைய காலத்திலிருந்தே சிவாலயங்கள் அமைக்கப்பட்டு வேதாகம விதிப்படி நாடோறும் பூஜையும் பருவ காலங்களில் திருவிழாக்களுஞ் சிவபெருமானுக்குச் செய்யப்பட்டு வருதலன்றோ நமக்கு ஒவ்வொரு நாளும் அனுபவமாய்க் காணப்படுகின்றது. சிவாலயங் கட்குச் செல்பவர்களெல்லாரும் உயர்ந்தவர்களாகவே இருக்கக் காண்கின்றோமேயல்லாமல், தாழ்ந்தவர்கள் அவற்றின் உள்ளே செல்லுவதற்கும் இடம்பெறுவ தாயில்லையே. சிவபெருமான் திருவுருவங்களைத் தொட்டுப பூசிக்கும் ஆதிசைவப் பிராமணர் களைத் தவிர, மற்றப் பிராமணர்கள் அத்திருவுருவங்களின் அருகே சென்றாலுந் தீட்டாயிவிடும் என்று அவர்கள் எட்ட நிற்கும் படி கற்பிக்கப்பட்டிருத்தலை நம்நாட்டில் எங்கும் நாடோறும் நாம் கண்டுவருகின்றோமே. அப்படியிருக்கச் சிவம் தாழ்ந்த சாதியார்க் குரிய சூத்திரதேவதை என்று சொன்னால் அதை நாம் எப்படி ஒப்புக்கொள்ளக்கூடும்?'' என்று அமைதியாகப் பேசினேன்.

அதற்கவள் உடனே பரபரப்பாய் "அது சரிதான். சிவன் கோயில்களைப் போலவே ஸ்ரீமந் நாராயணன் ஆலயங்களும் இம சேது பரியந் தம் இருக்கின்றனவே. விஷ்ணுமூர்த்தியைத் தான் பிராமணளாகிய நாம் வணங்கவேண்டும்'' என்று உரக்கப் பேசினாள்.

அதற்கு நான் பின்னும் அமைதியாகவே மெல்லிய குரலிற் "சிவபிரான் சூத்திரதேவதை என்றும், அவர் பிராமணர்களால் வணங்கத் தக்கவர் அல்லர் என்றும் நீங்கள் சொல்லியது அனுபவத்திற்கு ஒத்ததாயில்லையேயென்று நான் எடுத்துக் காட்டினேன். சிவபிரான் பிராமணர்களாலும் மகருஷிகளாலுந் தேவர்களாலும் வணங்கத்தக்க முழுமுதற்கடவுள் என்பதை நாம் எல்லாங் கட்டாயமாக ஒத்துக்கொண்டுதான் ஆகவேண்டியிருக் கின்றது'' என்று வலியுறுத்திப் பேசினேன்.

"சிவன் பிராமணர்களாலும் மகருஷிகளாலும் வணங்கத் தக்கவர் என்பதை நானும் ஒத்துக்கொள்கிறேன். ஆனால், அவர் முழுமுதற்கடவுள் என்றும் எல்லாத் தேவர்களாலும் வணங்கத்

தக்கவரென்றும் நான் ஒத்துக்கொள்ளமாட்டேன். அவர் விஷ்ணு மூர்த்திக்குத் தாழ்ந்தவர் என்றும், அவர்க்கு மேற்பட்ட விஷ்ணுவே முழுமுதற்கடவுள் என்றுங் கைக்கொள்வதே பிராமணர்களாகிய நமக்குக் கடமை" என்று அவள் பின்னும் உரத்துக் கூறினாள்.

"நல்லதம்மா, உண்மையைத் தெரிந்து கொள்ள வேண்டு மென்னும் எண்ணத்தோடு நாம் பேசுவதாயிருந்தால், ஏதோ எனக்கு தெரிந்த மட்டும் பேசுகின்றேன். நான் சொல்வதைக் கேட்டு நீங்கள் கோபிக்கிறதென்றால் என் பேச்சை இவ்வளவோடு நிறுத்திக் கொள்ளுகின்றேன்'" என்று பணிவோடு கூறினேன்.

உடனே அத்தையார் "அம்மா, நீ சொல்வதிற் கோபத்திற்கு இடமானது ஒன்றும் இல்லையே. சாஸ்திரங்களில் எழுதியிருப்பதை தானே நீ எடுத்துச் சொல்லுகிறாய்" என்று எனக்கு ஆறுதலாகக் கூறினார்.

அதைக்கேட்டதும் என்னோடு வாதாடின அந்த அம்மை "ஆமா, கோகிலம் சொல்வதில் நாம் கோபிக்க வேண்டியது என்ன இருக்கின்றது. அம்மா நீ சொல்லு" என்று தானும் ஆறுதல் சொல்வாள் போற் கூறினாள்.

அதன்மேல் நான் "அப்படியானால் நான் உங்களை நமஸ்கரிகின்றேன். சுருதி யுக்தி அனுபவங்களை ஒட்டி என் சிற்றறிவுக்கு எட்டிய மட்டும் பேசுகின்றேன். அம்மா, நம்மைச் சுற்றிலும் என்னென்ன காண்கின்றோம். **நம்மையொத்த மனிதர்களையும், மனிதர்களல்லாத பலவகைப் பிராணிகளையும், பிராணிகளினுந் தாழ்ந்த மரஞ்செடி கொடிகளையும், உயிர் அற்ற மண் தண்ணீர் நெருப்பு காற்று ஆகாயம் என்னும் பஞ்சபூதங் களையும், இப்பஞ்ச பூதங்களின் சேர்க்கையாற்றோன்றிய பலவகைப் பண்டங்களையும், இவற்றிற்கு இருப்பிடமான இந்த மண்ணுலகத்தையும், இந்த மண்ணுலகத்திற்கு மேலே விளங்கும் சூரிய சந்திர நாட்சத்திர மண்டிலங்களையும் அல்லாமல் இவற்றிற்கு வேறான தேவர்களை யேனும், தேவர்களினும் மேற்பட்ட கடவுளையேனுங் காண்கின்றோமா? இத்தனை உயிர்களையும் இத்தனை பண்டங் களையும் இத்தனை உலகங்களையும் படைத்தவரான கடவுள் ஒருவர்**

**இருக்கவேண்டுமென்பது உண்மையே யென்றாலும், அவரை நாமுங் கண்டதில்லை, மற்றவர்களுங் கண்டதில்லை. தம் வாழ்நாள்முழுதும் வேத வேதாந்தங்களைக் கரைகண்டு படித்தவர்களும் அவரைக் கண்டவர்களாயில்லை. இத்தகைய நிலைமையில் நாம் இருக்கையில், 'விஷ்ணுவே முழுமுதற் கடவுள், சிவன் அவர்க்குத் தாழ்ந்தவர்' என்று சொல்வது எப்படி? உலகத்திற்கு ஒரு கடவுளே யிருக்கவேண்டுமல்லாமல், இரண்டு கடவுளரும், அவ்விருவரில் ஒருவர் உயர்ந்தவரும் மற்றவர் அவர்க்குந் தாழ்ந்தவருமாய் இருப்பர் என்பதும் எப்படி?" என்று கேட்டேன்.**

*இக்கேள்விகளுக்கு விடைசொல்லத் தெரியாமல் விழித்த அப்பெண்பிள்ளை சற்றுப் பொறுத்துக் "கடவுளைப் பற்றி நமக்குத் தெரியாவிட்டாலும் வேதங்களிலும் புராணங்களிலும் அவருடைய லக்ஷணங்களைப் பற்றிச் சவிஸ்தாரமாய்ச் சொல்லி யிருக்கின்றதே. நாராயணமூர்த்தி ஒருவரே தசாவதாரங்கள் எடுத்து* ***இராவணன் கும்பர்கணன் துரியோதனன்*** *முதலான இராக்ஷதர்களை அழித்து உலகத்தை இரக்ஷித்தார் என்று சொல்லியிருக்கின்றதேயல்லாமற் சிவன் அப்படி இரக்ஷித்தார் என்று சொல்லவில்லையே. அதனால் நாராயணனே கடவுள்" என்று இப்போது சிறிது அமைதியாகப் பேசினாள்.*

*"நல்லதம்மா, வேதங்களிற் சொல்லியிருப்பதைப் பற்றிப் பிறகு ஆராய்வோம். எனக்குப் புராணகதைகளில் நம்பிக்கை யில்லையானாலும், நீங்கள் சொன்னமட்டிலாவது பொருத்தந் தானா வென்று பார்க்கவேண்டும். இராவணன் முதலான மிகக் கொடிய அரக்கர்களை விஷ்ணு பிரமன் இந்திரன் முதலான எவர்களும் அழிக்க இயலாமல் அவர்களால் துன்புற்றனர் என்றும், அதனாற் சிவபிரான் மகனாரான சிவசுப்பிரமணியக் கடவுளே தோன்றி அவர்களை யெல்லாம் அழித்துத் தேவர்களையும் உலகத்தாரையும் இரட்சித்தனர் என்றும்* ***பதினெட்டுப் புராணங்களில் ஒன்றான ஸ்காந்தமகாபுராணம்*** *சொல்லுகின்றதன்றோ? விஷ்ணு முதலான தேவர்களாலும் அழிக்கக்கூடாத* ***சூரபத்மன்*** *முதலாயினாரை அழித்து உலகத்தை இரட்சித்தது சிறப்போ? அவர்களினுந் தாழ்ந்த* ***இராவணனை*** *அழித்தது சிறப்போ? மேலுங் கைலாசத்தைப் பெயர்த்தெடுத்த அந்த இராவணனைச் சிவபிரான் தமது காற்*

பெரு விரலால் அம்மலையோடு சேர்த்து அழுத்தி அதன்கீழ் அவனை நெரித்திருக்க, அவனோடு பலநாள் எதிர்நின்று போர்புரிந்து வருந்திக் கடைசியில் அப்பெருமான் அருளால் அவனை மடித்த விஷ்ணுவின் அவதாரமான இராமனது வெற்றியைச் சிறந்ததாகக் கூறி அதனால் அவனே கடவுள் என்று சொல்லுவது எப்படிப் பொருந்தும்?' என்று கேட்டேன்.

"நல்லது, **விஷ்ணு பத்தவதாரம் எடுத்ததுபோலச் சிவனாவது சுப்பிரமணியராவது பத்தவதாரம் எடுத்தார்களா?** மனுஷ்யாளான நம்மைக் காக்கும்பொருட்டு **மனுஷ்யாவ தாரத்தில்** வந்த நாராயணரன்றோ கிருபாளு, சர்வஜீவதயாபரனான அவரன்றோ கடவுள்" என்று அந்த அம்மை எடுத்த விஷயத்தை விட்டுப் பொருந்தாத தொன்றைச் சொல்லி என்னை மடக்கப்பார்த்தாள். இப்படியே எங்கள் இனத்தவரில் ஆண் பெண் இருபாலாரும் உண்மையின்ன தென்று தெளிந்து நாம் அடைவதில் விருப்பம் இல்லாதவர்களாய்த் தாம் பிடித்த பொய்யையே சாதிக்கும் அகங்காரம் உடையவர்களாய் இருப்பதுடன், தாம் நினைப்பதும் பேசுவதுஞ் செய்வதும் வேதாகம புராண இதிகாசங்களுக்கு முற்றும் மாறாய் இருந்தும் தாம் **வைதிகர்** என்றும் **சாஸ்திரக்ஞர் ஸ்மார்த்தர்** என்றும் இறுமாப்போடு வீண் உரையாடுவதும் என் மனத்திற்கு மிகுந்த துயரத்தை விளைவித்தது. இந்தப் பெண் பிள்ளை வீண்வம்பு பேசுவதால் இவளோடு தொடர்பாகப் பேசுவதிற் பயனில்லை யென்றெண்ணிச் சிறிதுநேரம் சும்மா இருந்தேன். கல்வியிலும் உண்மை தெரிவதிலும் நிரம்பிய ஆவலுடைய அத்தையாரோ என்னைச் சும்மா இருக்கவிடாமல்,

"குழந்தே, பரமசிவம் பிறப்பு இறப்பு இல்லாதவராயிற்றே, ஆனதால், அவர் அவதாரம் எடுத்துவராதது குற்றமாகுமா?" என்று எனக்குத் துணையாக என்னைநோக்கிப் பேசினார்.

அத்தையார் உண்மையறிந்து பேசுவதால், அவர் பொருட்டாகவேனும்இதனை விளக்கிப் பேசவேண்டுமென நினைந்து, "அத்தே, இந்த அம்மா அவர்கள்பத்துத்தரம் பிறந்ததை விஷ்ணுவுக்கு ஒரு மேன்மையாகச் சொல்லுகிறார்கள். ஆழ்ந்து நினைந்துப் பார்த்தால் கடவுளுக்குப் பிறப்பு சொல்லுவது குற்றம் என்பதனை அவர்களே நன்றாய் உணரக்கூடும். நம்மவர்கள் குற்றமான செயல்களுக்குப்பெரிய பெயர்களை வைத்து அவற்றை

*மறைத்துவிடுவது வழக்கமாயிருக்கின்றது.* ***நாராயணர் பத்துத்தரம் பிறந்ததைத் 'திரு அவதாரம்'*** *என்று சொல்லி விட்டால் அக்குற்றம் மறைந்துவிடுமோ? மனிதர்களுக்குங் கடவுளுக்கும் உள்ள வித்தியா சந்தான் யாது? கடவுளும் மனிதரைப் போற் பிறந்து இறந்தால் இவர் கடவுள் இவர் மனிதர் என்று நாம் பிரித்தறிவ தெப்படி?" என்று நான் சொல்லுகையில் அந்தப் பெண்பிள்ளை,*

*"எவராலும் அழிக்க முடியாத* ***இராவணன் துரியோதனன்*** *முதலான கொடியவர்களையெல்லாம் அந்த விஷ்ணு பகவான்* ***இராமனுங் கிருஷ்ணனுமாய்த்தோன்றி*** *வேரோடு அழித்தாரே, அப்படிப்பட்ட பராக்கிரமச்செயல் மற்ற மனிதர்களாற் செய்யக் கூடுமோ? அவ்வளவு உத்திருஷ்டமான பராக்கிரமத்தைக் கண்டு தான் அவரைக் கடவுளாக நாம் துணிந்து பூஜிக்கிறோம்" என்று மிக்க நியாயமாகப் பேசுவது போற் கூறினாள்.*

*"உயர்ந்த பராக்கிரமச் செயல் உடையவர்களையெல்லாங் கடவுளாகச் சொல்லுகிறதென்றால்* ***இராவணன் வலிமையை அடக்கிய வாலி கார்த்தவீரியார்ச்சுனன்*** *முதலானவர்களையும், இராம லட்சுமணர்களை நாகபாசத்தாற் கட்டி மயக்கமடையச் செய்த* ***இந்திரசித்தினையும்*** *கிருஷ்ணனை அம்பால் எய்து விழச் செய்த* ***வேட்டுவனையும்****, சண்டையில் வெற்றிபெற்று விளங்கிய* ***வீமார்ச்சுனர்களையும்*** *ஓரிரவிற் பாண்டவர் படை முழுதுங் கொன்று நிகரற்று உலாவிய* ***அசுவத்தாமரையும்****, மற்ற நாடுகளில் இங்ஙனமே வெற்றியில் மேம்பட்டுநின்ற வேந்தர் களையுங் கடவுளராகவன்றோ சொல்லவேண்டிவரும். அங்ஙனஞ் சொன்னால் உலகத்திற்கு ஒரு கடவுள் என்பதுபோய் வலிமை யுள்ள மனிதர் ஒவ்வொருவருங் கடவுளர் என்றன்றோ சொல்ல வேண்டிவரும். அவ்வாறு கடவுளராக நாம் சொன்னாலும் அவர்கள் அப்பெயரை நிலை நிறுத்திக் கொள்ள வல்லவர் ஆவார்களா? எவ்வளவு வலிமையுடை யவர்களும் இறவாமல் நிலைநின்றார்களா? இராவணன் இறந்தான்; இராவணனிலும் மேற்பட்ட வாலியுங் கார்த்தவீரியார்ச்சுனனும் இறந்தனர்; இராம லட்சுமணர்களும் இறந்தனர்; கிருஷ்ண பகவானும் இறந்தனர்;* ***எவர்க்குப் பிறப்பு உண்டோ, அவர்க்கு இறப்பும் உண்டு.*** *இறப்புப்பிறப்புகளுக்கு உள்ளாகும் இந்த ஊன் உடம்பு*

அறியாமையிற் கிடந்து நல்வினை தீவினைகளைச் செய்யும் நம்போன்ற சிற்றுயிர்களுக்குக் கடவுளாற் படைத்துக் கொடுக்கப் படுவதாகும். **அழியாமைக்கும் இருவினைக்கும் அப்பாற்பட்டுள்ள கடவுளுக்கு இத்தகைய ஊன் உடம்பு வரமாட்டாது**. மாயா சரீரத்தை உயிர்களுக்குப் படைத்துக் கொடுப்பவன் தான் ஒரு மாயா சரீரத்தை அடைவானா? ஒரு காலத்தும் அடைய மாட்டான். அவன் அருளையே திருமேனியாக உடையவன். எப்படிப்பட்ட தேவர்களும் மாயையிற் கடவுளால் உண்டாக்கப் பட்ட பல வகையான சரீரங்களை உடையவர்களாய் நோயுந் துன்பமுங் கவலையும் கொண்டு தமக்கு வரையறுத்த கால முடிவில் இறப்பவர்களாயிருக்கின்றனர் என்று அவரவர்க் குரிய புராணங்களே தெளிவாகக் கூறுவதால், முழுமுதற்கடவுள் ஒருவனைத் தவிர மற்றெல்லாரும் பிறந்து இறக்குஞ் சிற்றுயிர்களேயென்பது செவ்வையாக விளங்குகின்றது. **சிவபிரான் ஒரு தாயின் வயிற்றிற் கருவாய்த் தங்கிப் பிறந்து இறந்ததாக எந்தப் புராணமுஞ் சொல்லாமையால் அவர் ஒருவரே முழுமுதற்கடவுள். நாராயணன் பத்துப்பிறவியெடுத்து இறந்தமையால் அவர் ஒரு காலத்தும் கடவுளாகமாட்டார்.** இங்ஙனஞ் சிவபிரான் ஒருவரே எல்லாத் தேவர்கட்கும் மேலான பிரமமாய் இருப்பதுபற்றியே சாம வேதத்தைச் சேர்ந்த சதபதப் பிராமணமும் சிவபிரானை நோக்கி "நீர் தேவர்களிலே பிராமணர்" (த்வம்தேவேஷு ப்ராஹ்மண:) என்று கூறித் துதிக்கின்றது. மற்றச் சாதியாரெல்லார்க்கும் மேலானவராகத் தம்மைத்தாமே எண்ணிக்கொள்ளும் பிராமணராகிய நாம் தேவர்களிற் பிராமணராய் இருக்கின்ற சிவபிரானையன்றோ வணங்கல் வேண்டும்? மேலும், **இராவணனைக் கொன்றதனால் உண்டான பாவம் நீங்க இராமர் சிவலிங்கம் வைத்துத் பூஜித்தது இராமேசுவரத்திலும், பாண்டவர்க்கு வெற்றியுண்டாம் பொருட்டுக் கிருஷ்ணபகவான் அர்ச்சுனனை அழைத்துக் கொண்டு சென்று கைலாசத்திற் சிவபொருமானை வணங்கி அவரது அருளைப் பெற்று மீண்டது மகாபாரத்திலும் விளக்க மாகக் காண்கின்றோமே!** இராமகிருஷ்ணரால் முழுமுதற் கடவுளாக வணங்கப்பட்ட சிவ பெருமானை, அந்த இராம கிருஷ்ணரைத் தெய்வமாகப் பாவிக்கும் நம்மவர் வணங்காமற் பழிப்பது தம் தெய்வத்தையே பழிப்பதாய் முடிகின்றதன்றோ? ஆகவே, நம்மவர் நம் முன்னோர்கள் செய்துவந்த

ஈசுவரோபாசனைக்கு முற்றும் மாறாக நடந்துகொண்டு, வேதாகம புராண இதிகாசங்களிற் கூறியபடி ஈசுவர பூஜை செய்பவர்களை **அவைதிகர்** என்றும், அவற்றிற்கு முழுவிரோதமாக நடக்குந் தம்மை மட்டும் **வைதிகர் என்றுஞ்** சொல்லிக்கொள்வது எவ்வளவு புதுமையாயிருக்கின்றது!" என்று கூறிமுடித்தேன்.

இவ்வுண்மைகளைக் கேட்டு இவற்றைச் சிறிதும் மறுத்து உரைக்க மாட்டாமல் அந்தப் பெண் பிள்ளை வாயடங்கிச் சும்மா இருந்தாள். அத்தையார் இவைகளைக் கேட்டும் இதுவரையில் வாயாடிவந்த அவள் அடங்கிவிட்டதைப் பார்த்தும் மிகுந்த மனக்கிளர்ச்சி உடையவராகிச் சிவபெருமானே முழுமுதற்கடவுள் என்னும் உண்மையை இன்னும் அவர்கட்கு வலியுறுத்திக்காட்ட வேண்டுமென்னும் நோக்கத்தோடு, "அருமைக்குழந்தே, நீ இவ்வளவு சூக்ஷுமமான உயர்ந்த ஞானப்பொருள்களைத் தெரிந்திருப்பாய் என்று நான் இதற்குமுன் நினைக்கவேயில்லை. இப்போது உன்னைச் சாக்ஷாத் லோகமாதாவாகிய அந்தச் சரஸ்வதி யாகவே பாவிக்கின்றேன். அகிலலோகநாயகனான சிவபெருமான் ஒருவரே உண்மையான பரம்பொருள் என்று இப்போது தான் நன்றாய் உணர்ந்தேன். இன்னும் உன்னிடத்திற் சில சந்தேகங்கள் கேட்டுத் தெளியவேண்டியதிருக்கின்றது. குழந்தையாகிய உனக்கு இவ்வளவு சிரமங் கொடுப்பதைப்பற்றி என் மனம் அதிகமாய் வருந்தினாலும், நல்ல சமயம் கிடைத்திருக்கையில் அந்தச் சந்தேகத்தைக் கேட்டு நீக்கிக் கொள்ள வேண்டுமென்னும் ஆவல் என்னை முன்னுக்குத் தள்ளுகின்றது. உனக்கு ஆயாசமாக இல்லா விட்டால் இதற்கு விடைசொல்லவேண்டும். நம்மவர்கள் வேதத்திற் சிவனுக்கு இடமில்லையென்றும், சைவ மதம் வேதத்திற்குப் புறம்பானது என்னும் அர்த்தத்தோடு அதனை **வேதபாஹியம்** என்றும் சொல்லிவருகிறார்களே. அவை உண்மையா? என்று கூறி வினாவினார்.

இதைக்கேட்டதும் வாயாடியான அந்தப் பெண்பிள்ளை இப்போது தனக்கொருபிடி கிடைத்ததெனச் சிறிது மகிழ்ந்தவளாய் "ஆமம்மா, எனக்கும் அது நெடுநாட் சந்தேகம்; அது கோகிலத் தினாலேதான் நீங்க வேண்டும்" என்றாள்.

"ஏதோ ஏழையேன் அறிந்த மட்டிற் சொல்லுகிறேன்; குற்றங் குறைகள் இருந்தால் அத்தையாரும் நீங்களும் பொறுத்துக்

கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். முழுமுதற் கடவுள் **உபாசனையை மிகுத்தெடுத்துச் சொல்லுவதில் எஜுர் வேதமே** மற்ற மூன்றுவேதங்களிலுஞ் சிறந்ததாய் விளங்கு கின்றது. அவ்வளவு சிறந்த எசுர்வேதத்தின் நடுவில் உள்ள **சதருதரீயம் என்னும் மந்திர பாகம்** முற்றும் முழுமுதற் கடவுளான சிவபெருமான் ஒருவரே பரம்பபொருள் என்று வலியுறுத்தி அவர்க்கு வணக்கங் கூறுதலை நம்மவர் உணராது பேசுந் தீவினைக்கு நாம் என் செய்யலாம்! அம் மந்திரபாகத்தை நாடோறும் **அத்தியயனம் பண்ணிக்கொண்டு** வந்தும் அதன் அர்த்தம் இன்னதென்றறியாமற் கிளிப்பிள்ளைகள் பேசுவது போற் கூவிச் சொல்லுதலால் நம்மவர் பெற்ற பயன் **சிவ தூஷணக் கொடும் பாவமேயாம்**. அச்சதருத்ரீயத்தின் இருபத் தெட்டாவது மந்திரத்தின் கண் உள்ள **"நமோபவாய ருத்ராயச நம சர்வாயச பசுபதயேச நமோ நீலக்ரீவாயச சிதிகண்டாயச"** என்னுஞ் சொற்கள் சிவபெருமானைக் குறித்தல் சிறு குழந்தைகளும் அறியக் கூடுமே. அதன் இரண்டாவது மந்திரமான **"யாதேருத்ர சிவாதநூர் அகோரா பாபகாசிநீ தயாநஸ்தந்வா சந்தமயா கிரிசந்தாபிசாக்சீதி"** என்பது 'மலைகளின் மேல் எழுந்தருளியிருப்பவரே, உருத்திர சிவபெருமானே கொடிய தல்லாதாய்த் துன்பத்தைச் செய்யாதாய் உள்ள தமது திருமேனியோடு தோன்றி அடியேங்களை விளக்கியருள்க!" என்று பொருள்படுதலும், இதன்கண் 'உருத்திர சிவன்' என்னும் பெயர்கள் வெளிப்படையாய் இருத்தலும் நம்மவர்க்குத் தெரியாமற் போனமை எவனோ! சுக்ல எசுர்வேதத்தில் உள்ள **வாஜசநேய சங்கிதையில்** 'தேவரீர் அருளாளராய் இருத்தலாற் சிவன் எனும் நாமம்பெற்றீர்' என்னும் பொருள் படச் "சிவோ நாமாஹி" என்று சொல்லப்பட்டிருப்பதை நம்மவர் உண்மையாக அறிந்திருந்தால் அப்பெருமானைப் புறம்பழிக்குங் கொடுந் தீவினைக்கு உள்ளாவார்களா! **இருக்குவேதப் பத்தா மண்டிலத்தின்** நூற்று முப்பத்தாறாம் பதிகத்தின் ஏழாவது மந்திரத்திலே **"கேசி விஷஸ்ய பாத்ரேண யத் ருத்ரோணாபிபத்ஸகா"** என்று சிவபெருமான் விஷபானஞ் செய்து தேவர்கள் முதலான எல்லா உயிர்களையுங் காத்தருளினமை சொல்லப்பட்டிருக்கின்றது. இன்னும் அதன் ஆறாம் மண்டிலத்திலே அவர் எல்லா நோய்களையும் நீக்கும் ஆயிரம் மருந்துகளை வைத்திருப்பவர் (வைத்தியநாதர்) என்றும் எல்லா உலகங்களுக்குந் தலைவர்

என்றும், முதன் மண்டிலத்திலே அவர் பாட்டுகளுக்கும் வேள்விகளுக்குந் தலைவர்என்றும், இரண்டாவது மண்டிலத்தில் ஈசானரான அவர் பொன் வண்ணமுடையவர் எல்லா உலகங்களுக்கும் வீரர்களுக்குந் தேவர்களுக்கும் முதல்வராய்த் தெய்வத்தன்மையினின்றும் நீக்கப் படாதவர் என்றும் அவர் பலவாறு புகழ்ந்து துதிக்கப்பட்டிருக்கின்றார். மற்றத்தேவர் கட்கில்லாத சிறப்பும் முழுமுதற்கடவுள் இலக்கணமும் சிவபெருமான் ஒருவருக்கே மிகப் பழையதான இருக்கு வேதத்திலும், வேதங்களிற் சிறந்த எசுர்வேதத்திலும் வெளிப்படையாகச் சொல்லப்பட்டிருக்க இவைகளுக்கு மாறாகச் சிவ தூஷணஞ் செய்து நம்மைப்போற் பிறந்திறக்கும் மனிதர்களை நம்மவர் வணங்கிவருவது எவரிட்ட சாபமோ, யாது தீவினையோ அறியேன்! "மானவன் ஆகாயத்தைத் தோல்போற் சுருட்ட வல்லனாங்காறுஞ் சிவனையறியும் அறிவாலன்றித் துக்கநிவர்த்தி உண்டாகாது" என்று **சுவேதா சுவதரோபநிடதம்** வலியுறுத்திச் சொல்லுவதால், சிவம் என்னுஞ் சொல்லைக் கேட்டாலுங் கசப்போடுபோகும் நம்மவர்க்குத் துக்க நிவர்த்தி எங்கே உண்டாகப் போகின்றது! அரசனைப் போன்ற மேம்பாடு அடையவேண்டினோர் அவ்வரசனுடைய தயவைப் பெற்றாலன்றி அதனை அடைய முடியுமோ? அல்லது, அவன் அதிகாரத்தின் கீழ் அலுவல் பார்க்குந் தாழ்ந்த ஊர்காவற் சேவகனை வேண்டினால் அவ்வரசச் செல்வத்தைப்பெற முடியுமோ? அது போல அழியாத பேரின்பச் செல்வத்தைப் பெற விரும்பினோர் அதனைத்தரவல்ல முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானை வழிபட்டால் மாத்திரம் அதனைப் பெறலாமேயல்லாமல், பிறந்திறக்கும் மனிதர்களையும் அங்ஙனமே பிறந்திறக்கும் மற்றத் தேவர்களையும் எத்தனைகாலம் வணங்கிவேண்டினாலும் அதனை அடையவே முடியாது" என்று கூறினேன்.

இவ்வளவுங்கேட்ட அத்தையார் மிகமகிழ்ந்து "கண்மணி, கோகிலா, நம்மில் எத்தனையோ வருஷம் வேதம் ஓதிவருபவர் களுக்கும், தெரியாத இந்தப் **பிரஹ்மஜ்ஞான** ரகசியங்களை யெல்லாம் நீ எப்படியம்மா அறிந்தாய்! அந்தச் சாக்ஷாத் ப்ரஹ்மமே சிவபெருமான் என்று இப்போது நன்றாய் அறிந்து எங்கள் அஞ்ஞானம் நீங்கினோம்!" என்று சொல்லி நிறைந்த அன்போடும் அருகிருந்த என்னைக் கட்டியணைத்து முத்தம்

இட்டார். இவ்வுண்மைகளை யெல்லாங் கேட்டுக் காணவந்த பெண்பிள்ளைகள் "அந்தச் சிவத்தினுடைய பெருமை இப்படியா இருக்கின்றது! பாபஜென்மமாகிய நமக்கு இதுவரையில் தெரியாமற் போயிற்றே! இன்று தான் சுதினம் கோகிலத்தால் ஞானப்பிரகாசத்தை அடைந்தோம்! இவளுக்கு நாம் எப்படி நன்றிசெலுத்தப் போகின்றோம்! அம்மா குழந்தே, நீ தீர்க்காயுசாயிருந்து நம்மவர்களுக்குச் சரஸ்வதி போல் விளங்கி இந்தச் சிவஞானத்தை உபதேசித்து நம்மவர்களைக் கடைத் தேற்றும்படி அந்தக் கைலாசபதியைப் பிரார்த்திக் கின்றோம்" என்று சொல்லி என்னைத்தொட்டு முத்தம் வைத்தவர்களாய் அன்பாற் கண்ணீர் சிந்தினார்கள். என்னோடு வாதாடி வந்த பெண்பிள்ளையும் இதுவரையிற் சும்மா இருந்தாலும் சிவபெருமான் பிரபாவங்களைக் கேட்ட புண்ணியத்தால் மனந்திருந்தி "அம்மா கோகிலம், நான் உனக்கு அபசாரம் செய்தவளாய்விட்டேன். சிவபெருமான் உண்மை தெரியாமல் நான் பேசின குற்றத்தைப் பொறுக்கும்படி உன்னைக் கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய புருஷாள் இவைகளை அறியாமலிருப்பதால் நாமும் இந்த அஞ்ஞானக்கும்பியிற்கிடந்து ஜன்மத்தை விருதாவாக்கி வருகின்றோம். சிவஞானச் செல்வமே, உனக்கு நான் மிகுந்த சிரமத்தைக் கொடுத்துவிட்டேன். ஆனாலும் இன்றைக்குத் தான் உண்மையைத் தெரிந்தேன்" என்று உள்ளபடியே மனங்கரைந்து பேசினாள். இவர்கள் உண்மை தெரிந்து மனந்திருந்திச் சிவபக்தி அடைந்து ஒன்றுக்கும் பற்றாத என்னைப் புகழ்ந்துபேசியதெல்லாம் என் உள்ளத்தை உருகச் செய்தன! சிவபெருமான் திருவருட்டிறத்தை நினைந்து மனங்கசிந்திருந்தேன். பிறகு, வேறு சிலவற்றைப் பேசிக்கொண் டிருந்தோம். இதற்குட் பிற்பகல் மணி மூன்றாய் விட்டது. அவரவர் கணவர்களும் பிள்ளைகளும் அலுவலிலிருந்தும் பள்ளிக்கூடத் திலிருந்தும் ஐந்து மணிக்கெல்லாம் வீட்டுக்குத் திரும்புவார்கள் ஆகையால், அவர்கள் வருதற்குமுன்னமே வீட்டுக்குச் செல்ல என்னை விடை கேட்டார்கள். அங்ஙனமே அவர்கள் செல்லுதற்கு விடைகொடுத்தேன். அத்தையார் மட்டும் என்னோடு இரண்டு நாள் இருக்க விரும்பி இங்கே தங்கிவிட்டார்கள்.

இப்போது இரவு பதினொருமணி அத்தையார், என் தமையன் என் தமையன் மனைவி எல்லாரும் அயர்ந்து

உறங்குகின்றார்கள். இன்றைப் பகலிற் சிவபெருமான் பெருமை களையும், அவனடியாரும் அவர் அருளிச் செய்த நூல்களும் அவற்றை நமக்குத் தெரிவிக்கும் முறைமைகளையும் யான் எடுத்துப் பேசச் சமயம் வாய்த்ததற்கும், அவைகளை எல்லாங் கேட்டு எங்கள் பார்ப்பனக் குலத்துப் பெண் பிள்ளைகள் மனந்திருந்தி மகிழ்ந்து போனதற்கும் என் உள்ளம் அடங்கா மகிழ்ச்சியாற் பொங்கிற்று. அத்தையார் என்னோடு இருந்து படுக்கப்போகும்வரையில் யான் எடுத்துச்சொல்லிய உண்மை களைப் பின்னும் பின்னும் வியந்து பேசி என் தமையனி டத்துந் தம் மகளிடத்தும் அவைகளைச் சொல்லி சொல்லி மகிழ்ந் தமையால் எனக்குண்டான உள்ளக் களிப்பு மேலுக்குமேல் அளவுபடாமல் மிகுந்தது. சைவசமயத்தின் உண்மையை உணர்ந்து அதிற் பேரன்பு பூண்டொழுகுந் தங்கட்கு உடனே எழுதித் தெரிவிக்க என் உள்ளம் ஓயாது விழைந்தது. யான் இன்புறுங்கால் தாங்களும் இன்புறுதலும் யான் துன்புறுங்கால் தாங்களுந் துன்புறுதலும் இயல்பாக இருத்தலால் யான் இன்றைக்கு அடைந்த பெருங்களிப்பை என் உயிரின் உள்ளிருந்து உலவுந் தங்கட்குத் தெரியாவிட்டால் என் உயிர் அமைதி பெறுமோ! பெருமானே, இதோ! மாசற்ற வானத்தில் விளங்கும் முழுநிலா தங்கள் திருமுகத்தை போலவும் அதிலிருந்து வருங்குளிர்ந்த ஒளி தாங்கள் என்னைப் பார்த்து மகிழ்ந்து புன்சிரிப்புக் கொள்ளுங்கால் தோன்றுந் தங்கள் பற்களின் ஒளிபோலவுந் தோன்றுகின்றனவே! ஏ மதியமே, இந் நகரத்தின் கண் இவ்விரவுகாலத்தில் எல்லாம் அரவம் அடங்கி எல்லாரும் அயர்ந்துறங்கும் இப்பொழுதில் நீ மட்டுமே யான் அடையும் மகிழ்ச்சியைக்கண்டு உடன் மகிழ்கின்றாய்! இப்போது என் ஆருயிர்க்காதலன் தனித்திருந்து உனது அமுத ஒளியில் உலவினால் அவரையும் நீ காண்பாய்! இப்போது ஒருவரையொருவர் காணப் பெறாத என் இருவேமையும் நீ உயர இருந்து ஒருங்கே காணுந் தெய்வத்தன்மையுடையை யாதலால் இப்போதே என் மகிழ்வினை அவர்க்குத் தெரிவிப்பாயானால், நின் உதவியை என்றும் மறவேன்! ஆ! ஈதென்னை! தங்களை நோக்கி எழுதும் இக்கடிதத்தில் நிலவை நோக்கிப் பேசிப் பிதற்றுகின்றேனே! பெருமானே, இன்னும் இரண்டு மூன்று நாட்களில் தங்கட்கு எழுதுவேன்.

## கடிதம் - 15

இம்மைக்கும் மறுமைக்கும் என் இன்னுயிர்த் துணையாய் அமர்ந்த காதற்கற்பகமே,

தங்கட்குத் திரும்பக் கடிதம் எழுதுவதற்கு இரண்டு கிழமை கடந்துபோனது பற்றி நிரம்ப வருந்துகின்றேன். அந்தப் பாரசிகப் பெருமான் பெருமாட்டியாரிடமிருந்து கடிதம் இன்றுவரும் நாளை வரும் என்று எதிர்நோக்கியபடியாயிருந்து பார்த்த கண்ணும் பூத்துப் போயிற்று! அக்கடிதம் வந்தபின் தங்கட்கு விடை எழுதலாமென் றிருந்தேன். இதற்கிடையில் தங்களிட மிருந்துவந்த கடிதத்தால், தங்கட்கும் அவர்களிடமிருந்து கடிதம் வரவில்லையென்பதறிந்து மிக வருந்தினேன். அவ்விருவரும் நம்மை மறந்துவிட்டார்களோ என்று தாங்கள் ஐயுறவு கொள்வதுபோல் யானுங் கொள்ளக்கூட வில்லை. தாங்கள் அவ்விருவர் இயற்கைகளையும் பலநாட்பழகி அறியாமையால் தாங்கள் அங்ஙனம் ஐயப்படுவது இயல்புதான். ஆனால் யானோ அவர்களோடு அன்பால் நெருங்கிப் பலநாட் பழகியிருத்தலால் அவ்வாறு அவர்களைப் பற்றிச் சிறிதும் நினைக்கக்கூடவில்லை. இங்ஙனமாக அவர்களிடமிருந்து கடிதம் வராமல் நான் நீளநீள என் மனத்துயரமும் நீண்டுகொண்டே வந்தது. இதனால், நேற்று எனக்கு உண்டான துன்பம் அளவிட்டுச் சொல்ல முடியாது. “சென்ற இரவு ஒருமணி வரையில் எனக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. அதனோடு, இந்தக் கொடியவெயிற் காலத்தின் வெப்பமும் புழுக்கமுந் தாங்கக்கூடியனவாயில்லை. அதனால் மேன் மாடத்தின் மேற்றளத்தின்மேலேறி, அது வெறுந்திறப்பான வெளியாதலால் அங்கே உலவிக்கொண்டிருந்தேன். இப்போது என் உள்ளத்தை மகிழ்விக்கத்தக்க தோற்றம் ஒன்றும் இல்லை. வானத்தில் நிலவொளியில்லை. எங்கும் இருள் சூழ்ந்திருந்தது. வானத்தின் கட் பலகோடிக் கணக்காய்க் காணப்பட்ட வான்மீன்

களும் எனக்கு ஆறுதலைத் தரவில்லை. எனக்குண்டான மனப்புழுக்க உடம்பின் புழுக்கத்தால், இருண்ட அவ்வானை ஓர் அரக்கன் உடம்பாகவும், அதிற்றோன்றும் மீன்களை அவனுடம் பிற்றோன்றிய வியர்வைத் துளிகளாகவும் நினைத்தேன். கீழே தெருவிலுள்ள தூண் விளக்குகளில் அவ்விளக்கேற்றும் வேலைக்காரன் நிறைய, எண்ணெய் விடாமல் மிச்சம் பிடித்துக்கொண்டு போனமையாற் போலும் அவற்றிற் சில அணைந்துபோயின, வேறுசில அணையுந் தறுவாயில் இருந்தன. ஊர்காவற்சேவகன் தூக்க மயக்கத்தால் மெல்ல நடந்தபடியாய் இடையிடையே சீழ்க்கை அடித்துக் கொண்டு செல்வதை அறிந்தேன்; இஃது எனக்கு ஒருவகையான அச்சத்தைத் தந்தது. இதுவுமல்லாமல், எதிரேயுள்ள குடிமக்கள் தோட்டத்தில் இராக்காலத்துப் பறவைகளான **ஆந்தை கூகை கோட்டான்** முதலியன இரைதேடிக் கூப்பிடும் ஒலியானது யான் வெருக் கொள்ளும்படி செய்தது. ஆனால், இவ்விருளின் ஊடே ஊடே மிக உயர்ந்த நகர விளக்குக்கூண்டின் ஒளி அடுத்தடுத்துத் தோன்றியவாறாய்ச் சுழன்று செல்கையில் அஃது என் கருத்தைக் கவர்ந்தது. நள்ளிருட் காலம்போல் தாங்குதற்கரிய துன்பம் வந்து கவிந்தகாலத்திலுங்கூடச் சுழன்றுசெல்லும் அவ்விளக் குக்கூண்டின் அழகிய ஒளிபோல் இறைவனருளால் இன்பமும் இவ்வுலக வாழ்க்கையில் இடையிடையே சுழன்றுவந்து மக்கள் உயிரைத் தளிர்க்கச் செய்யுமென எண்ணினேன். இருள்செறிந்த இராப் பொழுதிலும் முயற்சி மிகுந்து இரைதேடி இயங்குஞ் சில பறவைகளைப் போல் மக்கள் சிலருந் தமக்குப் பேர் இடுக்கண் வந்த பொழுதிலுஞ் சுருசுருப்புடையராய் முயற்சிசெய்ய வேண்டுமே யல்லாமல் மனந்தளர்ந்து மடிந்திருத்தல் ஆகாதெனவும் உணர்ந்தேன். இப்படியெல்லாம் எண்ணமிட்டுக் கொண்டிருக்கை யிற் கீழே யான் படிக்கும் அறையிலுள்ள கடிகாரம் ஒரு மணி அடித்தது. திறந்த வெளியில் உலவினமையால் என் உடம்பின் வெக்கையுந் தணிந்தது. பகலவன் மறைந்து பதினைந்து நாழிகை ஆனமையால் வெளி வெப்பமும் ஆறியது. ஒரு வகையான குளிர்ங்காற்றும் வீசத் துவங்கியது. அப்போது எனக்கு அயர்வும் நல்ல தூக்கமும் வந்தன. உடனே படிவழியாற் கீழ்மாடத்தில் இறங்கி என் மெத்தைமேற் போய்ப் படுத்துச் செவ்வையாய் உறங்கினேன்.

நெடுநேரம் யான் நன்றாய் உறங்கியிருக்க வேண்டும். ஏனென்றால் அச்சமும் மகிழ்ச்சியுங் கலந்த ஒரு கனவுகண்டு யான் கண்விழித்தபோது மணி ஐந்தடித்தது. அங்ஙனம் யான் விழிப்பதற்கு முன்னே பின்வருமாறு கனவுகண்டேன். நீங்களும் யானும் ஒன்று சேர்ந்து ஒரு பெரும்பாட்டையினூடே செல்வது போல ஒரு தோற்றம் உள்டாயிற்று. இப்பாட்டையின் இருபுறத்தும் பல வகையான மரங்கள் அடர்ந்து மேலே பந்தல் இட்டாற்போல் இருந்தன; அதன் இரு பக்கங்களினும் மலைகளுங் காடுகளுங் காணப்பட்டன. யான் தங்களோடு சேர்ந்து வழி நடக்கப் பெற்றமையால் மெய் மறந்த களிப்புடையேன் ஆகி, அருகிலுள்ள மரஞ்செடி கொடிகளைப் பற்றியும் வகை வகையான பறவைகளைப் பற்றியுந் தங்களை வினாவத் தாங்களும் என் மேற் பேரன்புபூண்டு மகிழ்ந்து விடைசொல்லப் பெரிதும் அளவளாவிக்கொண்டு தங்களோடு உடன் செல்லக் கண்டேன். அப்போது மாலைக் காலமாயிருந்தது. கதிரவன் மேல்பால் வட்டத்தின் கீழ் இறங்கி மறைந்துபோய்விட்டான். மாலை வெளிச்சம் வரவரச்சுருங்கி இருள்வந்து மூடுவதுபோற் றோன்றிற்று. அப்பொழுது தாங்கள் துணுக்குற்றுக் "கண்மணி, நாம் எந்த இடத்திற்குப் போய்ச் சேர்வதென்று தெரியவில்லை. முன்பின் ஆராய்ந்து பார்க்கக் கூடாத படி திடீரென உன்னை அழைத்துக் கொண்டு ஆள்வழக்கம் இல்லாத இப்பாதையில் யான் வரும்படி நேரிட்டமைக்காக மிகவும் வருந்துகின்றேன். என்னைப் பற்றியமட்டில் எனக்கு அச்சம் சிறிதும் இல்லை. மெல்லிய இயல்பு வாய்ந்த இளமங்கையாகிய உன்னை இங்ஙனம் அழைத்துவந்து உன்னைத் துன்பத்திற்கு உட்படுத்து வதைப் பற்றியே என் நெஞ்சம் நினைத்துத் துடிக்கின்றது!" என்று கூறக் கேட்டு, யான் மிக மனம்நைந்து "பெருமானே, என் பொருட்டுச் செல்வப் பெருந்தகையாகிய தாங்கள் இப்படி யெல்லாம் வந்து வருந்துகையில், எனக்குத் துன்பந்தருவதாகச் சொல்வதை நான் அறியக்கூடவில்லை. தங்களோடு இருக்கையில் எனக்குத் துன்பம் என்பது இன்னதென்றே புலப்படவில்லை. தங்களோடு அன்பால் அளவளாவப்பெற்ற இவ்வின்பத்திலேயே என் உள்ளம் படிந்து நிற்கின்றது என்றேன். இவ்வாறு நான் சொல்லி முடித்து ஒரு நொடிப் பொழுதுதான் இருக்கும். எனது இடது கைப்புறமாய்ப் பாட்டையின் ஓரத்திலிருந்து ஒரு மரச்செறிவிலிருந்து

ஏழெட்டுப் பேர் சடுதியில் வந்து நம்மை வழிமறித்தார்கள். அவர்களுடைய உடம்பின் தோற்றமானது மிகுந்த அச்சத்திற்கு இடந்தரா விட்டாலும், அவர் களெல்லாருங் கையில் தடிக்கம்பு பிடித்தவராயும், இடுப்பினின்றுங் கட்டித் தொங்கவிட்ட கொடுவாள் உடையராயும் இருந்தமை யாலும், ஆள்வழக்க மில்லா அக்காட்டுவழியில் அந்நேரத்தில் வந்து வழிமறித்த மையாலும் அவர்கள் நோக்கம் இன்னதென்பது மின்னல் ஒளிபோற் சுருக்கென எனக்குப்பட்டது. அவர்களைக் கண்ட திகிலால் மெய்யும் மனமும் நடுங்கி அயர்வுற்றுத் தங்கள் மேற் சாய்ந்து தங்களை என் கைகளாற் சுற்றி இறுக்கமாய்ப் பிடித்துக் கொண்டு உணர்விழந்தேன். அங்ஙனம் யான் அறிவுமயங்கிய பின் நடந்தது இன்னதென்று யான் அறியேன். திரும்பவும் யான் என் உணர்வுபெற்று விழித்துப் பார்க்கையில் யான் ஒருமலைக் குகையில் அடைபட்டிருக்கக்கண்டேன். இப்போது என் உயிரைப் பற்றிய அச்சம் எனக்குச் சிறிதும் இல்லாமற்போயிற்று. ஆனால் என் பக்கத்திலிருந்த தங்களைக் காணாமல் ‘ஓ என் பெருமானே!’ என்று வீறீட்டு அலறினேன். அப்போது அழாதே, அலறாதே, அஞ்சாதே என்னுஞ் சொற்கள் என்காதில்விழ, அச்சொற்களைக் கேட்டு, வழுவி விழுவோனைச் சடுதியில் ஒருவர் தாங்கினாற் போற் சிறிது ஆறுதல்பெற்று, அச்சொற்கள் வந்தமுகமாய் நோக்க, எனக்கு எதிரே சற்று எட்டி ஒருபக்கமாய் நீண்டு உயர்ந்த ஒருவன் நிற்றலை உணர்ந்தேன். உடனே ஐயா என் கணவன் எங்கே? என் கணவன் எங்கே? என்று பதறிக்கேட்டேன். அதற்கு அவன் உன் கணவன் இருக்கிறான். உன் மாமன் உனக்குக் கொடுத்த நாற்பதினாயிரம் ரூபாவும் நீ எனக்குக் கொடுத்தால் தான் நீ அவனைக் காணலாம்’ என்றான். ஐயா, அந்த நாற்பதி னாயிர ரூபாவும் நான் உமக்குக் கொடுத்துவிடுகிறேன்; என் மேல் உள்ள என் நகைகளெல்லாம் உமக்குக் கொடுத்து விடுகிறேன். நான் ஒரு கந்தைத் துணியை உடுத்துக்கொண்டு இந்தப் பட்டுப்புடவை யையும் உமக்குந் தந்து விடுகிறேன். இன்னும் உமது வீட்டுவேலை யெல்லாம் வேண்டுமானாலும் யான் செய்கிறேன். என் கணவனை மட்டும் ஒன்றுஞ் செய்யாமல் எனக்குக் கொடுத்து விடும் என்றேன். இச் சொற்களைக் கேட்டதும் அவன் அங்கே நில்லாமல் மறைந்துபோனான். ஆனால் யானோ தனியாளாயிருந்து தங்களைக் காணாமையால் ஆற்ற முடியாமல் விம்மி விம்மி

அழுதேன். என் விழிகளிலிருந்து வடிந்த நீர் தலை யணையை நனைத்துவிட்டது. விடியற்காலையிற் குடி மக்கள் தோட்டத்தி னின்று துயில்நீங்கி எழுந்த பறவைக் கூட்டங்களின் ஒலியானது அந்த நிலைமையில் என்னைத் தூக்கத் தினின்றும் எழுப்பி விட்டது. அதனால், யான் கண்டது கனவே யல்லாமல் வேறு அன்று என ஒருவாறு ஆறுதல் அடைந்தேன். என் தந்தையார் சொல்லிய கொடுஞ்சொற்களைக் கேட்டிருந்து எனக்கு சொன்ன என் தங்கையின் மொழிகளால் இக்கனவு எனக்குந் தோன்றியதோ! அல்லது இது நனவின்கண் நிகழும் நிகழ்ச்சியை முன் அறிவிப்பதோ! என்று பலவாறு எண்ணி எண்ணி என் உள்ளம் தடுமாறி நடுங்கியது! இது நனவில் நடக்குமானால் ஏழையேன் இத்துன்பத்தைத் தாங்குமாறெப்படி! என்று இறைவனைத் தொழுது வருந்தினேன்.

இவ்வாறு யான் படுக்கையிலேயே வருந்திக்கொண்டு அமர்ந்திருக்கையில் என் அருமைத்தமையன் என்னிடம் வந்து “ என்ன கோகிலா, வாட்டமாய் இருக்கின்றாயே! ஓ! நீ மிகவும் அழுத வகையாய் உன் முகங் காணப்படுகின்றதே! ஏதேனுந் துயரமான கனவு கண்டனையோ! இரவில் நானும் ஒரு பொல்லாத கனவு கண்டேன். நீயும் நானும் அந்தப்பாரசிக கனவானும் எங்கேயோ செல்ல, அப்போது திருடர்கள் புகுந்து நம்மை வேறுவேறாய்ப் பிடித்துக்கொண்டுபோய்ப் பாழான இடங்களிற் சிறையாய் அடைத்து வைக்கக் கனவுகண்டு உன்பொருட்டும் அந்தப் பாரசிக கனவான் பொருட்டும் யான் அப்போதுற்ற துன்பம் இவ்வள வென்று எடுத்துச்சொல்ல முடியாது! பறவைகளின் கூச்சலால் அந் நடுக்கத்தினின்றும் எழுப்பட்டேன். அதனாலே தான், உடனே உன்னைப் பார்ப்பதற்காக விரைந்து வந்தேன். யாது நேர்ந்தது?” என்று கவலையோடு வினாவினான். எங்கள் இருவர் கனவும் ஏறக்குறைய ஒத்த நிலைமையில் நிகழ்ந்தமை கண்டு எனக்கு மிகுந்த அச்சமும் வியப்பும் உண்டாயின. யானும் எனது கனவின் வரலாற்றை எடுத்துரைத்தேன். கனவு நிகழ்ச்சியை நம்பாத என் தமையனும் யான் சொல்லியதைக் கேட்டு வியப்பும் அச்சமும் அடைந்ததோடு, இது பின் வருவதை முன்னறிவிப்பதாய் இருக்கலாமோவென்று ஐயுறவுகொண்டவனாய்ச் சிறிதுநேரஞ் சும்மா இருந்து, பிறகு என்னைத் தேற்றுவதற்காகக் “கோகிலா, அது கிடக்கட்டும், நீ கண்டதும் நான் கண்டதுங் கனவே

யல்லாமல் நனவன்று; ஆகையால், அதில் நாம் நம்பிக்கைவைத்து வருந்துவது குழந்தைகள் இராக் காலத்தில் தம்நிழலைக் கண்டு பேய் என்று வெருள்வதையே ஒத்திருக்கின்றது. இனி, அதைப் பற்றி நினையாதே, இந்த வேனிற் காலத்து விடியற்காலம் எவ்வளவு இனியதாய் இருக்கின்றது! நாம் எல்லாருஞ் சிறிது நேரம் இந்தப் பூங்காவினுட்போய் உலவி வருவோம் வா" என்று கூறி, என்னையுந் தன் மனைவியையும் அவள் அன்னையையும் அழைத்துக் கொண்டு குடிமக்கள் தோட்டத்தினுட் சென்றான்.

உண்மையாகவே இன்று வைகறைப் பொழுது மிகவும் இனியதாகத்தான் இருந்தது. மெல்லிய தென்றற்காற்றுச் சில்லென்று மேல் வீசியது. தம் விருப்பம்போல் அக்காவினுள் இருக்கும் பலதிறப் பறவைகள் மரக்கிளைகளிலுஞ் செடிகளிலுங் கொடிகளிலுந் தாவித்தாவிப் பறந்து வைகின. அப்பறவைகளிற் சில பச்சையுஞ் சிவப்புங்கலந்து பளப்பளப்பாய்த் திகழுஞ் சிறகுகள் உடையனவாயும், வேறு சில நீலப்பட்டுப்போன்ற இறக்கைகள் உடையனவாயும் மற்றுஞ்சில மஞ்சள்நிற முடையனவாயும், பின்னுஞ் சில தூயவெண்மையும் இன்னுஞ் சில சாம்பல்நிறமும் உடையனவாயும் பார்க்கப்பார்க்க அழகாய் இருந்தன. அவற்றின் வடிவங்களும் நீண்டுங் குறுகியும் அகன்றுங் காணப்படும் அவற்றின் தோகை அமைப்புகளும் படைப்பின் திறத்தைப் புலப்படுத்தின. இத்தோட்டத்தின் நடுவே ஒரு பெரும்பகுதியை வளைத்து அடைத்து, அதற்குட் சில கூண்டுகளுள் வைத்திருக்கும் பலவகைப் புட்களைப் பார்ப்பதிலுந், தம் எண்ணப்படியே வெளியே திரியும் இந்தப் பறவைத் தொகுதிகளைப் பார்ப்பதே என துள்ளத்திற்குப் பெரு மகிழ்ச்சியைத் தந்தது.

பகலவன் கீழ்கடல் வட்டத்தின்மேற்றோன்றியிருக்க வேண்டும். தோட்டத்தின் உள்உள்ள மரஞ்செடி கொடிகளின் மறைப்பால் இறக்கத்தில் நிற்கும் அவனது வட்ட ஒளிவடிவு எங்கள் கண்களுக்குப் புலனாகாவிட்டாலும், கீழ்பாற்கவிந்த வானிடம் எல்லாம் பொன்நிறம் பெற்றுத் துலங்கினமையால் அத்தோற்றத்தைக் கண்டு களித்தோம். வரவரக் கதிரவன் ஒளி மரஞ்செடிகொடிகளின் பசிய இலைகளின்மேற் பட்டு மிளிர்ந்தது. தென்றற்காற்று அவ்விலைகளின்மேல் வீசும்போது அவை கலகலவென்னும் ஓர் இனிய ஒலியைச் செய்தன.

இவைகளைப் பார்க்கவுங் கேட்கவுஞ், சென்ற இரவுகண்ட கனாவினால் உண்டான துயரம் என்னை விட்டு அகன்றது. என் அகத்தே ஒரு கிளர்ச்சி எழுந்தது. இத்தோற்றங்களை நாங்கள் வியந்து பேசிக்கொண்டு ஆங்கிலர் இசைக்கருவி முழங்கும் மண்டபத்தின் கீழ்ப்பாங்குள்ள இலைக் கொடி மண்டபத்தினுட் சென்று, அங்கே இடப்பட்டிருந்த உயர மணைகள்மேல் ஏற்றிவிட்ட அழகிய பச்சிலைக்கொடியானது அம் மண்டபத்தின் சுற்றுப்பரப்புமுழுதும் பம்பிப்படர்ந்து தன் நெருங்கிய இலைகளால் ஞாயிற்றின் ஒளி உள் நுழையாவாறு மறைத்துக் குளிர்ந்த நிழலைத் தந்தது. கீழே மரப்படிகள் அமைத்து அவற்றின்மேல் வரிசை வரிசையாக வைத்திருக்கும் மண் தொட்டிகளில் வளர்க்கப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான அழகிய பசுஞ் செடிகள் எம்கண்களைக் கவர்ந்தன. ஒவ்வொரு செடியின் வடிவமும் வியக்கத்தக்கதாயிருந்தது. அவற்றுட் சிலவற்றின் மேல் பூத்திருக்கும் மலர்களிற் சிவப்புப் புள்ளிகள்வாய்ந்த மஞ்சள்நிறந் திகழ்ந்தது. சிலவற்றில் திரிக்குழாய்போல் நீண்டு வாய் அகன்ற நீலப் பூக்கள் இருந்தன. ஆனால், இவற்றின் நிறத்திற்குத் தக்கபடி இவற்றில் நறுமணம் அமையாதது மட்டுந்தான் எனக்கு ஒரு குறையாய்த் தோன்றியது. தமிழ்நாட்டிலுள்ள அழகிய நறுமணம் மிக்க பூஞ்செடிகட்கும், மணம் இன்றி அழகு மட்டும் வாய்ந்த இவ் அயல்நாட்டுப் பூஞ்செடிகட்கும் உள்ள வேற்றுமை என்னுள்ளத்தில் வலிமைபெற்றுத் தோன்றியது. ஆயினும், அயல்நாட்டுப் பூஞ்செடி கட்குள்ள இக்குறையை நீக்குதற்கு அவற்றுள் ஒன்றான ரோஸ் என்னும் நிலத்தாமரைப் பூஞ்செடி ஒன்றிருக்கின்றதன்றோ. ஆ! அதன் அழகும் மணமும் நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும் அடங்கா இன்பத்தைத் தருகின்றன! நம் தமிழ்நாட்டிலுள்ள சிவந்த நீர்த் தாமரையின் அழகையும் மணத்தையும் மட்டுமே அவற்றிற்கு ஒப்பாகச் சொல்லலாம் என்று நான் எண்ணுகையில், அங்குள்ள தோட்டக்காரன் அக்கொடிப்பந்தர் மண்டபத்தின் வடபால் உள்ள அகன்ற ஒரு நீர்த்தொட்டியிலிருந்து நீர் முகந்த ஒரு தகரவாளியை கையிற்றூக்கிக்கொண்டு அதன் குழாய்வாயிற் சிறு சல்லடை வழியே பல கதிர்களாய் நீர்சொரியுமாறு அங்குள்ள தொட்டிச் செடிகட்கு நீர்விட்டுக்கொண்டு வரக்கண்டோம். கண்டதும் அவனை நோக்கி “ஐயா, இங்கே ரோசாச்செடி இருக்கிறதா?” என்று கேட்டேன். அவன் ‘அம்மா இங்கே

அழகான செடிகள் மட்டும் தான் இருக்கவேணும், அழகுக்காகச் செடிகள் வைச்சிருக்கும் இடத்தில் மணமுள்ள பூஞ்செடிகளும் கனி முதலானது உள்ள செடிகளும் இருக்கப்படாது என்று வெள்ளைக்காரத் துரைகள் சொல்லுகிறார்கள். இந்தத்தோட்டம் வெள்ளைக்காரருக்காகவே ரொம்பக் கருத்தாய் வைச்சு வளர்க்கிறார்கள். ஆனாலும், நான் இந்தச் செடிகள் மறைவில் இரண்டு மூன்று ரோசாச்செடிகள் வைச்சிருக்கிறேன்'' என்றான். இவன் சொல்லிய சொற்களால் வெள்ளைக்காரத் துரைகளின் தன்மையையறிந்து வியப்படைந்தேன். அதன்பின், அவன்காட்டிய அந்த ரோசாச்செடிகளின் அண்டையிற் போனோம். ஒரு செடியில் ஒரே காம்பில் இரண்டு பெரும் பூக்கள் மலர்ந்து நறுமணம் பரப்பின; இரத்தம்போற் கருமை கலந்த சிவப்பும் இன்றித் தாமரைபோல் வெளிறின சிவப்புமின்றி நடுத்தரமாய் விளங்கிய அவற்றின் செம்மை நிறமும் மணமும் எங்கள் கண்ணையுங் கருத்தையும் கவர்ந்தன. அவற்றை நாங்கள் நிரம்பிய ஆவலோடு நோக்கி வியந்துபேசுதல்கண்டு அந்தத் தோட்டக் காரன் எங்கள்பால் அன்புடையனாய் அவ்விரண்டு கொழுமலர்களையும் பறித்து என் தமையன் கையிற் கொடுக்க, அவன் ஒன்றை எனக்கும் மற்றொன்றைத் தன் மனைவிக்குங் கொடுத்தான். அந்நறுமலரை முகந்தும் அதன் செவ்வொளியைக் கண்ணாற் பருகியும் என் உள்ளம் மிக அமைந்து களிப்பிற்றுளும் பிற்று. பின்னர் அந்தத் தோட்டக்காரனுக்கு நாங்கள் நாலணாக் கொடுத்தோம்; அவனும் அதனை முகம் மலர்ந்து ஏற்றுக் கொண்டான். அதன்பிற் சிறிதுநேரம் அங்கே மகிழ்வுடன் இருந்து, அப்பால் அங்கு நின்றும் புறப்பட்டுத் தீவுபோற் செயற்கையாக அமைத்திருக்கும் ஒருசிறு நிலப்பகுதியைச் சூழ்ந்துள்ள உப்பங் கழியருகிற் சென்றோம்.

அவ்வுப்பங்கழியின் கரைஓரத்தில், இலைகள் நெருங்கிக் குளிர் நிழலைத்தரும் ஒருவகையான பலமரங்கள் நெடுகஓங்கி நிற்கின்றன. பருத்தமாங்காயைப் போன்ற பசுங்காய்கள் நடுவே சிறிது அறுப்புடையனவாய் அம்மரங்களிற் கும்பு கும்பாய்த் தொங்கின. அக்காய்களுட்பல அக்கழித்தண்ணீரில் வீழ்ந்து மிதந்தன; பல கரையோரங்களில் வீழ்ந்து காய்ந்தனவும் பச்சையுமாய் இருந்தன. அவற்றுள் இரண்டுமூன்றை நாங்கள் எடுத்து, அவற்றின் பெயரும் பயனும் என்னவென்று அங்கிருந்த

காவற்காரன் ஒருவனைக் கேட்டோம். அவன் கூறியபெயர் உயர்ந்தோர் நடுவில் வழங்கத் தகாததாயிருந்தமையால் அதுகேட்டு நாணம் உற்றோம்; அவை ஒன்றுக்கும் பயன்படா எனவுங் கூறினான். இவ்வளவு ஏராளமாய்க் காய்க்கும் இவை உணவுக்கேனும் மருந்துக்கேனும் பயன் படுமானால் எவ்வளவு நலமாயிருக்குமென்று பேசினோம். கடவுள் படைப்பிற் பயன்படாதது இராது; ஆனால், இக்காயின் பயன் மக்கள் இன்னும் உணரவில்லையென்று பிறகு ஒரு முடிவுக்கு வந்தோம்.

பின்பு அக்கழியின் கரையண்டை தண்ணீரில் நின்ற ஒரு சிறு படகைப்பார்த்து, அஃது எதற்காக அங்குநிற்கின்றதென்று கேட்டேன். அத்தோட்டத்திற்கு வருவோர் விளையாட்டாக அதில் ஏறி அக்கழியிற் சுற்றி வருவதற்காக அஃது அங்கே நிற்கின்றதென என் தமையன் உரைத்தான். அதன்மேல் அதில் ஏற விரும்பினோம். காவற்காரன் ஆள் ஒன்றுக்கு இரண்டணா வாடகை கொடுக்க வேண்டுமென்று கேட்டான். அங்ஙனமே எட்டணாக்கொடுத்து நாங்கள் நால்வரும் அதில் ஏறிக் கொண்டோம். என் தமையன் அதின் நடுவேயிருந்து கொண்டு அப்படகின் துடுப்பு இரண்டை எடுத்து அதன் இருபுறத்து வளையங்களிலும் மாட்டி வலித்தான். யானும் அவன் மனைவியும் அவனுக்கு எதிரில் உட்கார்ந்தோம். அத்தையார் அவனுக்குப் பின்னேயுள்ள இடத்தில் இருந்தார்கள். அவன் வலிக்கவலிக்க அது தண்ணீரின்மேற் சறுகியோடிற்று. அதன் ஓட்டம் எங்களுக்கு நிறைந்த மனக்கிளர்ச்சியைத் தந்தது. அக்கழியின் குறுக்கே மேற்கவிந்துள்ள பாலத்தின்கீழே வந்து, அதன் கண்கள் ஒன்றின்ஊடே எங்கள் படகு செல்லும்போது எனக்குப் பின்னும் மகிழ்ச்சிமிகுந்தது. அக்கழியின் நடுவேயுள்ள திட்டில் பெரியதொரு கூண்டினுள்ளே அடைக்கப்பட்டிருந்த பல வகைப் பறவைகளுங் கீச்சிடும் ஒலி கேட்டு அம்முகமாய்ப் பார்த்தோம். அத்திட்டில் பலவகைக் குரங்குகள் தறிகளிற் சங்கிலியாற் பிணிக்கப்பட்டு அவற்றைச் சூழவருதலும் அவற்றின் மேல் ஏறியிருத்தலுந் தோன்றின. இக்குரங்குகளையும் அப்பறவை இனங்களையுந் தமது மனப்போக்கின்படி விட்டிருந்தால் அவை எவ்வளவு களிப்பாயுஞ் சுருசுருப்பாயும் உலவும்! மக்கள் பார்க்கும் பொருட்டாக இவை இங்ஙனம் சிறைப்படுத்தப்பட்டு மனம் மடிந்திருக்கின்றனவேயென்று இரக்கமுற்றுப் பேசினோம். இவ்வாறு நாங்கள் அத்திட்டைச்

சுற்றிவருகையில் அதன் சரிவில் தண்ணீர் ஓரமாய் நின்று கொண்டிருந்த இரண்டு மூன்று கூழைக் கடாப் பறவைகள் எம் கருத்தை இழுத்தன. அவற்றின் நீண்டவலிய அலகுகளும், கீழ் அலகின்கீழே நிகளமாய்த் தொங்கும் அவற்றின் தோற்பைகளும் பார்க்கப்பார்க்கப் புதுமையாய் இருந்தன. இவ்வாறாக இவைகளைப் பார்த்துக் கொண்டே அப்படகில் மகிழ்ச்சி யோடு சுற்றிவந்து ஏறின இடத்திற் சேர்ந்து கீழே இறங்கினோம்.

இதற்குட் பகலவனுங் கீழ்பால் வட்டத்தினின்று மேலெழுந்து விட்டான். அவனது கதிரொளியானது அங்குள்ள மரங்களின் ஊடே ஊடே புகுந்து காணப்படுவதாயிற்று. அப்போது ஏழு மணியிருக்கும். எல்லாரும் வீட்டுக்குச் செல்ல வந்தவழியே திரும்பி நடந்தோம். பல துறைகளிற் சென்று பல தொழின் முயற்சிகளைச் செய்வோருந் தத்தம் அலுவல்மேற் போதலைப் பார்த்துக் கொண்டே வீடுவந்து சேர்ந்தோம். என் தமையன் பத்துமணிக்கெல்லாம் அலுவலுக்குப் போகவேண்டு மாதலால்,நாங்கள் காலைக் கடன்களை முடித்துச் சிவபெருமாற்கு வழிபாடியற்றிச் சமையற்றொழிலிற் புகுந்தோம். சென்ற ஒருதிங்களாக யான் விடாப் பிடியாய்ப் பழக்கிவருதலால், என் தமையன் மனைவி கனகவல்லி வீட்டு வேலைகளைச் சுருசுருப்பாகவும் திறமாகவுஞ் செய்யக் கற்றுக் கொண்டாள். சமையல் செய்வதிலுந் தேர்ந்துவிட்டாள். இப்போது அவள் முன்னையிலும் பார்க்க அழகாயிருக்கின்றாள். அவள் உடம்பிற் சதையுந் திரண்டு உருண்டு அரைத்துப்பூசினாற் போல் எங்கும் ஒருபடியாய் இறுகி வளர்ந்து வருகின்றது. இப்போது அவள் கன்னங்கள் வெளிறுமாறித் தாமரைப்பூவின் இதழ்போற் செம்மைநிறம் ஏறிப் பளபளப்பாய்த் திகழுகின்றன. எனக்கு இவளைப்பற்றிய கவலையும் நீங்கிற்று. தமிழ்மொழியைக் கற்பதிலும் இவளுக்கு இப்போது ஆவல் உண்டாயிருப்பதால், இனிமேல் என் தமையன் இவளுக்குத் தமிழ் நூல்களைச் செவ்வையாகக் கற்பிக்கக்கூடும். எந்நேரமும் இவள் தெலுங்குப் பாட்டுகளைப் பாடும் பழக்கமும் ஓய்ந்துவருகின்றது. என்னோடு கூடச் சேர்ந்து தேவார திருவாசகச் செந்தமிழ்த் தெய்வப் பாடல்களை வீணையில் விருப்பத்தோடு பாடிவருகின்றாள். இவள் இங்ஙனம் நல்ல மாறுதல் அடைந்து வருவதைப் பார்த்து

என் தமையனும் அவள் அன்னையும் மிகமகிழ்ந்து வருகின்றார்கள்.

சமையல்முடிந்து என் தமையன் உணவுகொண்டு அலுவலுக்குப் போயினான். நாங்களும் உணவுகொண்டோம். அத்தையார் சிறிது அயர்வு தீரப் படுக்கச்சென்றார். கனகவல்லி 'நளவெண்பாப்' படிக்க உட்கார்ந்தாள். யானும் அவளுக்குப் பாடங் கற்பிக்கும் பொருட்டுக் கீழ் மாடத்திலேயே அவளோடு கூட இருந்தேன். யான் சொல்லிக் கொடுத்தவைகளைக் கேட்டுக் கொண்டு அவள் படிக்கும்போது, இடைக்கிடையே யான் நேற்றிரவு கண்ட கனவின் தோற்றமும் இன்று காலையிற் குடிமக்கள் தோட்டத்தில் உலவி வந்தமையும் என்னையறியாமலே என்னுள்ளத்தில் கலந்து வந்து தோன்றின. மணி பதினொன்றே முக்கால் ஆயிற்று. தபாற்காரன் வந்து கதவைத் தட்டினான். அவ்வொலி கேட்டதும் என் உள்ளம் தாவிக்குதித்தது. எனக்கு முன் கனகவல்லி ஓடிக் கதவைத்திறந்து இரண்டு கடிதங்களை வாங்கிக் கொண்டுவந்து என்கையிற் கொடுத்தாள். ஒன்று எனக்கும் மற்றொன்று என் தமையனுக்குமாக எழுதப் பட்டிருந்தன. அவ்விரண்டின் மேல்விலாசக் கையெழுத்தும் அந்தப் பாரசிகப் பெருமான் கையெழுத்தாய் இருந்தமையால் என் கடிதத்தைப் பிரித்துப்பார்க்க எனக்குண்டான ஆவலும் மனத்துடிப்பும் இவ்வளவென்று எழுதல் இயலாது. ஆனாலுங் கனகவல்லிக்கும் அவள் அன்னைக்கும் அந்தப் பாரசிகப் பெருமான் எழுதுங் கடிதங்களில் உள்ளவை தெரியலாகாது என்பது என்தமையன் கருத்து எவ்வளவு நல்லவர்களும் இரக்கமுள்ளவர்களு மாயிருந்தாலும் வழக்கமாய் நடந்து வருவதற்கு மாறான தொன்றைக் கண்டால் அவர்கள் உடனே அதனிடத்து வெறுப்புக்கொள்வது இயற்கையா யிருக்கின்றது. அதனால், அவைகளைத் தெரியாமல் வைப்பது எனக்கும் இசைவாகவேயிருந்தது. அதனால், அவரவர்க்கு வருங் கடிதங்களில் உள்ள செய்திகளை அவர்களே தெரிவித்தால் அல்லாமல், மற்றவர்கள் அவற்றைப் பற்றிச் சிறிதுங் கேட்கலாகா தென்று என் தமையன் வரையறுப்பாய்த் திட்டம் பண்ணியிருந் தமையால் அக்கடிதங்கள் இரண்டையும்பற்றிக் கனகவல்லி ஏதுமே கேட்கவில்லை. இந்த ஏற்பாட்டினால், வீணான கேள்விகளும், அவற்றிற்கு விடை சொல்லவேண்டுந் துன்பமும்

இல்லா தொழிந்தன. கனகவல்லி அவற்றைப் பற்றிக் கேளா விட்டாலும் அவள் உள்ளத்தில் அவற்றை அறிய ஆவலிருக்கும் என்பதனாற் சுருக்கமாக 'அம்மா கனகவல்லி இந்தக்கடிதம் தம் அண்ணாவுக்கு வந்தது; இஃது எனக்கு வந்தது. என் மாமனார் அகத்தில் இருக்கையில் ஒர் அம்மா எனக்கு நேசம் ஆனார்கள். அவர்கள் இப்போது ஊருக்குப் போய் இருக்கிறார்கள். அவர்கள் அங்கேயிருந்து எழுதியிருக்கிறார்கள்' என்று தாராளமாகச் சொன்னேன். அதற்கு அவள் "மச்சி, மேல்விலாசக் கையெழுத்து இரண்டிலும் ஒரே மாதிரியாய் இருக்கிறாப்போல் தோன்றுதே" என்று சற்றுப் பராமுக மாய் வினாவுவது போற் கேட்டாள். உடனே நான் ஐயுறவுக்கு இடம் இல்லாதபடி "ஆம், அம்மா, அந்த அம்மாவின் கணவர் அண்ணாவுக்கு மிகநேசமாயுள்ளவர்; அண்ணாவுக்கு அவர் நெருங்கிய நேசமாகவே, அந்த அம்மா அவர்கள் எனக்கு நேசம் ஆகும் படி நேர்ந்தது. அந்த அம்மா தமிழ் நன்றாய்ப் படித்தவர்கள். ஆனால், இங்கிலீஷ் தெரியாது, அதனாலேதான் இங்கிலீஷ் கற்ற அவர்களின் கணவனார் மேல்விலாசம் இங்கிலீஷில் எழுதியிருக்கிறார்" என்றேன். அதன்மேல் அவள் களங்கம் இல்லாமலே. "அந்த அம்மா அவர்கள் தமிழிலேயே மேல் விலாசம் எழுதலாமே?" என்று வினாவினாள். "இல்லை, அவர்கள் வியாபாரத்தின் பொருட்டுத் தமிழ் தெரியாத வடநாட்டுப் பக்கம் போயிருக்கிறார்கள். அதனாலேதான் அங்கேயுள்ள தபாற்சாலைக்காரருக்குத் தெரியும்படி ஆங்கிலத்தில் விலாசம் எழுதியிருக்கிறார்கள்'" என்றேன்.

இவ்விடையை அவள் ஒப்புக்கொண்டவளாகி அதற்கு மேல் ஒன்றுங்கேளாமல் இருந்துவிட்டாள். என்றாலும் அவள் இவ்வளவு கூடக் கேட்டதும் அவற்றிற்கெல்லாம் நான் விடை சொல்ல வேண்டி நேர்ந்ததும் எனக்குப் பெருஞ் சல்லையாய் இருந்தன. இதற்கே இத்தனை துன்பமானால், இதற்குமேல் அக்கடிதங்களில் உள்ள செய்திகளையும், அச்செய்திகளின்மேல் வரும் வரலாறு களையும் வினாவப் புகுந்தால் அவற்றிற்கெல்லாம் விடை சொல்வதும், அவைகளைச் சொல்லி ஒப்புக்கொள்ளும் படி செய்வதும் எவ்வளவு வருத்தத்திற்குங் காலக்கழிவிற்கும் வீண் பழிப்பிற்கும் இடஞ்செய்யும்! இவ்வளவு தொல்லைப்பட்டுங் கேட்பார்க்குஞ் சொல்வார்க்கும் ஏதேனும் அதனாற் பயன்

உண்டா என்றால் அதனையும் காணோம். சொல்லுவார் மறைவுகளை அறிதலாற் கேட்பார் அவரைத் தாழ்வாக நினைத்து வரவர அவர் பால்வைத்த அன்பும் நேசமுங் கெடப்பெறுவர்; சொல்வாருந் தம்மறைவுகளை அவர் கேட்டுத் தெரிந்தமையால் அவர்மேல் வருத்தங்கொள்வதோடு, அவரைக் காணுவதற்குங் கூசுவர். எல்லாருங் குற்றம் உடையவராயினுந், தம் குற்றத்தைக் குற்றமாக நினையாமற் பிறர் குற்றத்தையே பெரிதாக நினைப்பர். தினையளவு குற்றத்தையும் பனையளவாக்கி வெறுப்படைவர். பிறரிடத்திற் குற்றம்போற் காணப்படுவது ஆராய்ந்து பார்க்குங்காற் குற்றமாக முடியாதாயினுந், தாம் அதனைக் குற்றமாக நினைத்துவிட்டாற் பிறகு அதனை நலம் உடையதாக எண்ண உடன்படாமை மக்களுக்கு இயற்கையாகவே இருக்கின்றது. இவ்வியல்புகளை ஆழமாக நினைத்துப் பார்க்கையில், உலகத்தில் **அன்பு நேசம் உறவு உதவி துணை** என்பன அமைந்த வாழ்க்கையும் இன்பமும் நிலவ வேண்டு மானால், ஒருவர் மற்றொருவர் மறைவுகளை அறிதலில் வீண் முயற்சியும் வீண் ஆவலுங் கொள்ளுதல் கூடாது. இந்த உயர்ந்த உண்மையை உணர்ந்து என் தமையன் செய்த ஏற்பாடு எவ்வளவோ சிறந்ததாயிருக்கின்றது. என் தமையன் தங்களைப் போல் ஆங்கில மொழியில் தேர்ச்சி பெற்றதும் அத்தேர்ச்சி யினால் ஆங்கில மக்களிடத்தில் உள்ள இத்தகைய உயர்ந்த வழக்க ஒழுக்கங்களைப் பின்பற்றி நடப்பதும் எவ்வளவோ நலம் பயப்பன வாயிருக்கின்றன! ஆங்கில மக்களிடத்துள்ள இன்னோரன்ன விழுமியபழக்க வொழுக்கங்களை கைப்பற்றாமல் அவர்களிடத் துள்ள சில குறைவான செயல்களையும் ஊண் உடைகளையும் விடாப் பிடியாகக் கைக்கொண்டு நடக்கும் நம் நாட்டவர் சிலர் பலரின் நடக்கையானது எவ்வளவு தீங்கினைத் தருவதும் வருந்தத் தகுவதுமாயிருக்கின்றன! அது நிற்க.

பின்பு கனகவல்லிக்கு நளவெண்பாவிற் சுயம்வர காண்டத்திற் சில செய்யுட்களுக்குப் பொருள் விளக்கிச் சொல்லியவுடன் அவள் தன் பழம்பாடங்களைத் திருப்பிப் படிக்கும்படி கற்பித்துவிட்டு, வழக்கப்படி என் பாடங்களைக் கற்கப்போவது போல் மேன் மெத்தைமேல் ஏறி யான் படிக்கும் அறையில் வந்தேன். தலைமேல் ஏற்றிய ஒருபெருஞ் சுமையைக் கீழ் இறக்கிவைக்க இடம் பெற்றவளைப் போல் யான் ஆறுதல் பெற்று

எனக்கு வந்த கடிதத்தை விரைந்து பிரித்துப்பார்த்தேன். திருமகளுங் கலைமகளுங் ஓர் உடம்பிற் பிறந்தால் ஒத்த அப்பாரசிகப் பெருமாட்டியாரால் அழகிய தமிழில் அழகிய எழுத்தில் மன மகிழ்ச்சிக்கு ஏதுவான செய்திகள் அதில் அன்போடும் உருக்கத்தோடும் எழுதப்பட்டிருந்தன. அக்கடிதத்தை ஒருமுறைக்குப் பலமுறை திருப்பித் திருப்பிப் படித்துக் களிப்புற்றேன். ஏழையேனிடத்துத் தாய் தந்தையர் அன்பை இழந்து அவர்களாற் கைவிடப்பட்ட எளியேனிடத்துத் தாய்தந்தையரினும் மிக்க அன்பும் உரிமையும் உடையரான அப் பாரசிகப் பெருமாட்டியையும் பெருமானையும் எனக்கு உற்ற துணையும் உதவியுமாய்த் தந்தருளிய எல்லாம் வல்ல சிவபெருமானை உள்ளங்குழைந்துருகிப் பலகால் வாழ்த்தினேன். என் ஆரூயிர்ப் பெருமானே தங்களை யான் மணந்துகொள்ளப் பெறுங்காலம் மிகவும் அணுக்கத்தில் இருக்கிறதென்பதை அக்கடிதத்தால் அறியப் பெற்ற இந்நாளே அந்த மணங்கூடும் நன்னாளாய்த் தோன்றியது! தாங்கள் பக்கத்தில் இருப்பது போலவே என்னை யான் நினைக்கின்றேன்! **கண்பெற்ற குருடன் போலவும், பெருஞ் செல்வம் வாய்த்த வறியன் போலவுங் கார்வரவுகண்ட மயில்போலவும், மழை பெற்றவறள் நில மாந்தர் போலவும்** யான் இன்றைக்கு எய்திய பெருங் களிப்பினை எனது புல்லிய சொற்களைக் கொண்டு எங்ஙனம் எழுதிக்காட்ட வல்லேன்! என் செல்வப்பெருந்தகையே, என்னையும் என் தமையனையும் உடனே புறப்பட்டுப் பம்பாய்க்கு வரவேண்டு மென்றும், வந்த கிழமைக்குள் நமது திருமணத்தை நடத்த ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் அவ்வம்மையார் எழுதித் தெரிவிக் கிறார்கள். அவ்வம்மையார் கணவரின் தமையனார் இறந்து போனார். அவர்க்குப் பிள்ளை யில்லாமையால் அவருடைய பொருள் முழுதும் அவர் தம்பியாரும் என் தந்தையினும் மேலானவரும் ஆன அந்தப்பாரசிகப் பெருமானுக்குச் சேர வேண்டுவதாயிற்று. இந்த வகையில் அவர்க்குப் பத்துலட்ச ரூபா சொத்து வருவதாக அப்பெருமாட்டியார் எழுதியிருப்பதைக் கண்டு யான் சொல்லுக்கு அடங்கா மகிழ்ச்சி அடைந்தேன். இப்படிப்பட்ட நல்லோர் கையிற் பொருள் மிகுதியாய்ச் சேர்ந்தால் அஃது எல்லார்க்கும் பயன்படும். மற்றவரிடந் திரண்டபொருள் இருந்தால் யாருக்கு என்ன பயன்! அவர்களிடம் இருக்கும் பொருளும் நிலத்தினுள் எவர்க்குந் தெரியாமலிருக்கும்

புதையலும் ஒன்றேயாம். நிலத்திலிருக்கும் புதையலாயினும் எப்போதேனும் ஒருகாற் பிறர் கையில் அகப்படும் என எண்ணுதற்கு இடம் உண்டு; ஆனாற், கையிறுக்கம் உடைய வர்கள் கைப்பொருளோ ஒரு காலத்தும் எவர்க்கும் பயன்படுவதில்லை. ஆதலால், அந்தப்பாரசிகப் பெருமானுக்குப் பெருஞ் செல்வத்தைத் தந்தருளிய இறைவன் அருட்டிறத்தை வியந்து நாம் வாயாரவாழ்த்தக் கடமைப்பட்டிருக் கின்றோம். அந்தப் பாரசிகப் பெருமானுக்கு இங்ஙனம் ஏராளமான செல்வம் வருவதைப் பற்றி அவருக்குத் தாயக்காரரா யுள்ளவர்கள் பெருங் கலகஞ்செய்து, அச்சொத்தை தாம் கவர்ந்துகொள்ளும் பொருட்டு நிரம்ப முயற்சி செய்தார்களாம். ஆனால், அவர்களை அமைதிப்படுத்தும்பொருட்டு அந்தப் பெருமான் செய்த ஏற்பாடுகள் மிகவும் புகழற்பாலனவா யிருக்கின்றன. கல்வியிலுஞ் செய்கையிலும் உலக முறைகளிலும் பெரிதுஞ் சிறந்த தக்கோர் சிலரை நடு நிலையாளராக வைத்து அவர்களைக் கொண்டே அத்தாயத்தாரை எல்லாம் ஒரு பொதுவிடத்தில் வருவித்துவைத்துக் கல்விக்குங்கைத் தொழில் வளர்ச்சிக்கும் ஏழை எளியவர்கள் பிழைப்புக்கும் பயன்படும் பொருட்டுப் பலவகை அறங்களுக்கும் உதவி புரிவதனால் தம் தமையனார் சொத்து அவ்வளவையும் அத்தாயத்தார்க்கே கொடுத்து விடுவதாகவும், அல்லது அதற்கு உடன்படா விட்டால் அச் சொத்து முழுமையும் அப்பாரசிகப் பெருமான் தாமே பலவகை அறங்களுக்குங் கொடுக்க முன்வந்திருப்ப தாகவும் உருக்கத்தோடு கூறினாராம். அதன்மேல் நடுநிலை யாளராய் ஏற்படுத்தப் பட்டவர்கள், "தம் தமையனார் சொத்து முழுமையும் இந்தக் கனவானே பெறுதற்குச் சட்டப்படி உரிமை உள்ளவர். இதிற் சிறிதும் உரியமையில்லாத நீங்கள் வீணாக வழக்குத்தொடுப்பதிற் பயனில்லை. இப்போது இவர் சொல்லுகிறபடி நீங்கள் பலவகை அறங்களுக்கும் பயன்படுத்து வதானால், இச்சொத்தெல்லாம் அவற்றிற்குத் தருவதாகச் சொல்லுகிறார். அதற்கு நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?" என்று தாயத்ததாரைக் கேட்க, அவர்களிற் சிலர் அறமே செய்து அறியாமையின் சும்மா இருந்தார் களாம். மற்றுஞ் சிலர் ஏழைகட்கு உணவுகொடுக்கும் ஓர் அறச்சாலைக்குங், கல்விக் கழகத்திற்கும், ஆநிரைகளைக்காக்கும் ஒரு விடுதிக்கும் இலட்சரூபா உதவும்படி சொல்ல, உடனே நம் பாரசிகப்

பெருமானவர்கள் அத் தொகையை அம்மூன்றற்கும் பகுத்துக் கொடுத்து, அங்ஙனத் தம்மை அறஞ்செய்யும்படி ஏவிய அவர்கட்குந் தம் நன்றியையும் வணக்கத்தையுஞ் செலுத்தித் தாம் இன்னுஞ் செய்யவேண்டிய அறங்களையும் எடுத்துச் சொல்லும்படி வற்புறுத்திக் கேட்க, அத்தாயத்தார் அவர் தம் பெருந்தன்மையையுஞ் செயற்கரிய செய்கையையும் பார்த்து வியந்து நெஞ்சம் இளகினவர்களாய் மனந் திருந்தி, "இந்தப் பெருந்தகையினிடத்திலேயே, அவ்வளவு பொருளும் இருக்கட்டும்; எங்களுக்கு ஒரு காசளவும் வேண்டாம்; நாங்கள் இவரது உயர்ந்ததன்மையை அறியாமற் பிழைசெய்தோம்" என்று மன்னிப்புக் கேட்டுக்கொண்டு சென்றார்களாம். நடுவு நின்றோர்களும் அவரது உயர்ந்த தன்மையையும் அதற்கேற்ற செயலையும் கண்டு வியந்து வாழ்த்தினார்களாம். இவர்களை யெல்லாம் ஒன்று சேர்த்து ஓர் ஒழுங்குக்குக்கொண்டுவர இத்தனை நாட்கள் சென்றனவாகவும், அதனாற் கடிதம் எழுதக் காலந்தாழ்த்துதற்குப் பெரிதும் வருந்துவதாகவும் அந்த அம்மை யாரவர்கள் எழுதியருக்கிறார்கள்.

இனி என்னை அழைத்துக்கொண்டு பம்பாய்க்கு வர வேண்டிய ஏற்பாட்டைப் பற்றித் தம் கணவராகிய அந்தப் பாரசிகப் பெருமான் என் தமையனுக்கு ஒரு கடிதம் எழுதியிருப்பதைப் பற்றியும், அங்ஙனமே எல்லாம் விரிவாக எழுதிய மற்றொரு கடிதத்தை அவர் தங்கட்கு அனுப்பி யிருப்பதைப் பற்றியும் அந்த அம்மையாரவர்கள் எனக்குக் குறிப்பிட்டிருத்தலால் அதனைக் கண்டு மகிழ்வுற்றேன்.

இன்று சாய்ங்காலம் என் தமையன் அலுவலிலிருந்து வீட்டுக்கு வந்ததும், அவனுக்கு வந்த கடிதத்தை அவன்கையிற் கொடுத்தேன். அவன் மேன்மெத்தைமேற்சென்று அதிலுள்ள வைகளைப் படித்தபின், என்னை அருகழைத்து அதில் உள்ளவை களையெல்லாம் எனக்கு மகிழ்வோடு எடுத்துச் சொல்லிக் "கோகிலா, நாம் எப்போது பம்பாய்க்குப் புறப்படலாம்?" என்று என்னை வினாவினான். அதற்கு நான் நாணமும் மகிழ்வுங்கலந்து தோன்றப் பெற்றேனாய்ச் சிறிது சும்மா இருந்து, பிறகு "அண்ணா, நீ எப்போது அங்கே செல்ல ஏற்பாடு செய்கின்றாயோ அப்போது புறப்படலாம்" என்றேன். "நல்லது, அத்தையார் இரண்டுநாள் இங்கே தங்கியிருக்க லானதும் நன்மையாகத்தான் இருக்கிறது.

கனகவல்லியையும் பாட்டியையும் அத்தையாரோடு நாளைக்கு அவர்கள் வீட்டிற்கு அனுப்பிவிடலாம் என்று எண்ணுகிறேன். நாளை நீக்கி நாம் பம்பாய்க்குப் புறப்படலாம். நான் இரண்டு வாரத்திற்கு விடுதி பெற்றுக் கொள்ளுகிறேன். நீ மற்றவைகளை யெல்லாம் ஒழுங்கு படுத்து. 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்' என்று பழமொழிப்படி எல்லாம் ஒத்துவரும் போதே உனது காரியத்தை முடித்துவிட எண்ணுகிறேன். ஏனென்றால் நந் தந்தையார் மிகவுங் கொடியவராய் இருக்கின்றார். உனக்கும் எனக்கும் ஏதேதோ கெடுதிசெய்ய அவர் மிகவும் பரபரப்பா யிருக்கிறாரென்று அறிகின்றேன். அவர் இப்போது இங்கில்லை யாம். உன் மாமியாகிய கொடியவளும் நம் தந்தை யாரும் ஒன்று சேர்ந்து எங்கோயோ வெளியூர்க்குச் சென்றிருக் கின்றார்களாம். எவனோ சேதுராமன் என்பவனிடமிருந்து நம் தந்தையார்க்கு அடிக்கடி கடிதம் வருகின்றதாம்'' என்று அவன் கூறுகையில்,

“ஐயோ! சேதுராமனா! நான் முதலிலிருந்தே அவனைப் பற்றி ஐயுறவுகொண்டது உண்மையாய் வருகின்றதே!'' என்று பேரச்சத்தோடு கூறினேன்.

“ஓ! உனக்கு அவனைப்பற்றி எப்படித் தெரியும்?'' என்று தமையன் வியப்புடன் வினாவினான்.

“தெய்வநாயகத்தினிடம் அவன் நேசம்பாராட்டிச் சிலகாலம் வந்து கொண்டிருந்ததாகவும், பிறகு அவன் நடக்கை தமக்குப் பிடியாமையால் அவனைத் தம்மிடம் வராமற்செய்து கொண்ட தாகவும் தெய்வநாயகம் ஒரு திங்களுக்கு முன் எழுதி யிருந்தார். அஃதிருக்கட்டும். அவனைப்பற்றியுந் தந்தையார்க்கு அவன் கடிதம் எழுதுவது முதலான செயல்களைப் பற்றியும் உனக்கு எப்படித் தெரியும்?'' என்று வினாவினேன்.

“நேற்றுத் தற்செயலாக உன் மைத்துனனைப் பார்த்தேன். அவன் தாயினிடத்துள்ள கெட்டகுணங்கள் அவனிடம் இல்லை; காலஞ்சென்ற மாமாவினிடத்துள்ள நல்ல குணங்களிற் சில அவனிடம் அமைந்திருக்கின்றன. அவன் தன் அளவிற்கு இருபதினாயிரம் ரூபாய் கிடைத்ததே போதுமென்று மன நிறைந்து இருப்பதோடு, நம் மிருவர்க்கும் மாமா எண்பதினாயிர ரூபா எழுதிவைத்ததைப் பற்றிப் பொறாமையாவது மனவருத்த மாவது அவன் கொள்வதாக ஒன்றுந் தெரியவில்லை. ஆனால்,

நம்மிருவரிடமிருந்து சிறிது பொருள் உதவியை எதிர்பார்க்கிறான். மாமா அவர்களின் சாவுக்கு அவன் தாயுந்தமக்கையுங் காரணமாயிருந்ததை நினைத்து நினைத்து வருந்துகின்றான். இதனாலும், உன்னைத் தன் வீட்டிலிருந்து அவர்கள் போகும்படி கட்டாயப் படுத்தினாலும் நம் தந்தையாரோடு அவ்விருவரும் அவனுக்குத் தெரியாமல் மறைவாகப் பல செய்திகளை அடிக்கடி கூடிப்பேசி வருவதாலும் அவர்களிடத்தில் அளவிறந்த வெறுப்புக் கொண்டவனாய் இருக்கிறான். இவன் இந்நிலையிலிருப்பதைக் கண்டு மனம் மகிழ்ந்தேனாய், அவன் வீட்டுச் செய்திகளை யான் பராமுகமாய் வினவி வருகையில் அந்தச் சேதுராமன் என்பனைப் பற்றியும் இப்போது அவன் அன்னையும் நந்தந்தையும் ஒன்று சேர்ந்து வெளியே எந்த ஊர்க்கோ போயிருப்பதைப் பற்றியும் அவனே எடுத்துச் சொன்னான். அவர்கள் மிகவு மறைவாய்க் கூடிப் பேசுதலால், இவ்வளவுக்குமேல் அவர்கள் இன்னது செய்கிறார்கள் என்பது புலப்படவில்லை யென்றுங் காலில்லாமற் சொன்னான். அவன் சொல்லியமட்டிலிருந்து அவர்கள் நமக்கு ஏதோ ஒரு பெருந் தீங்குசெய்ய முயன்றுவருகிறார்கள் என்பது தெரிகின்றது" என்று சொன்னான்.

அச்செய்தியைக் கேட்டு என் மனம் மிகமருண்டது. ஆனாலுந் தீயோர் செய்யுந் தீமைகளை இறைவனே விலக்க வேண்டுமல்லாமல் நம்மாற் செய்யக்கூடியது ஒன்றும் இல்லாமையை அறிந்தும் பம்பாய்க்கு நாளைக்கழித்துப் புறப்பட வேண்டியிருப்பதை நினைந்தும் ஆறுதல் பெற்றுக் கிளர்ச்சி யுற்றேன். பிறகு தங்களுக்கும் அந்தப் பாரசிக கனவானுக்கும் எங்கள் வருகையைப்பற்றிக் கடிதங்கள் எழுத என் தமையன் மேசையண்டை உட்கார்ந்தான். யானும் இக்கடிதத்தைத் தங்கட்கும் மற்றொரு கடிதத்தை அந்தப் பாரசிகப் பெருமாட்டி யாருக்கும் எழுத என் மேசயண்டை உட்கார்ந்தேன். நாங்கள் புறப்படும்போது தந்தியும் அனுப்புவோம். வாடிச்சந்திப்பில் யாங்கன் தங்களைக்காணும் பெரும்பேற்றைத் தாங்கள் ஏழையேன்மீது மனம் இரங்கித் தருதல்வேண்டும. தங்கள் திருமுகத்தை விரைவிற் காணலாம் என்னும் பேரவாவால் என் மனம் உள்நிறைந்து புடைத்திருக்கின்றது. பெறற்கரும் பெரும் பேற்றைத் தந்தருளும் என் தெய்வமே, தங்களை வழியிலேகண்டு சென்றால் மட்டும் என்னுயிர் என்னுடம்பில் நிலைக்கும்,

தங்களுக்காக வன்றோ இந்த ஏழை உயிர்தாங்கியிருக்கின்றாள்! இல்லாவிடில் இந்த உயிர்வாழ்க்கை எனக்கு எதுக்காக! எந்தவேலை எப்படியிருந்தாலும் அதனைச் சிறிதுகாலம் நிறுத்திவைத்து, எங்கள் வண்டிவரும் நேரத்தில் தாங்கள் தவறாமல் வாடிச் சந்திப்பில் வந்திருக்கும்படி தங்களை மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன். நாங்கள் பம்பாய் போய்ச் சேர்ந்தபிறகு நமது மணத்திற்கு வேண்டும் ஏற்பாடுகளெல்லாம் செய்தவுடனே தங்களைப் பம்பாய்க்கு வருவிப்பதாக எழுதியிருக்கிறார்கள். இனி, யான் பம்பாய் சேர்ந்த பிறகுதான் தங்கட்குக் கடிதம் எழுத இடம்பெறுவேன்.

# கடிதம் - 16

என் ஆருயிர்ப் பெருமானே! இன்னதென்று உரைக்க முடியாத திகில்நிறைந்த கனவுகண்டு, அக்கனவினின்றும் விழித்து எழாமல் அதிலேயே அகப்பட்டு வருந்திப் புலம்பும் ஒருத்தியைப் போல் நினைவு கலங்கிய நிலைமையில் இக்கடிதத்தைத் தங்கட்கு எழுதுந் தீவினை உடையளானேன். சென்னையிலிருந்து ஒருவாரத்திற்கு முன் யான் எழுதிய கடிதத்தில் யான் கண்ட ஒரு நடுக்கமான கனவைப்பற்றி தங்கட்கு எழுதியிருந்தேன். அக்கனவிற் கண்ட படியே பெரும்பாலும் எல்லாம் நடந்தது. யான் கள்வர் கையிலகப்பட்டு நேற்று இரவுதான் அவர்களிடமிருந்து மீண்டு, இன்றைக் காலையில் பம்பாயிலுள்ள அந்தப் பாரசிகப் பெருமாட்டியார் வீட்டில் வந்து சேர்ந்தேன். அந்தப் பாரசிகப் பெருமானும் என் தமையனும் அந்தக் கள்வரிடத்திலேதான் இன்னுஞ் சிறையிலே இருக்கிறார்களென்னும் நடுக்கமான செய்தியை உடைந்த மனத்தோடும் ஒழுகுங் கண்ணீரோடுந் தங்களுக்கு எழுதுகின்றேன். அந்தப் பாரசிகப் பெருமாட்டியார் தம் அருமைக் கணவரைப் பிரிந்து ஊண்உறக்கமின்றி உயிர்விடும் நிலையிலிருந்தவர் இன்றைக் காலையில் என்னைக்கண்டவுடனே தங்கணவனார் உயிரோடிருப் பதைத் தெரிந்து போனவுயிர் மீண்டு வரப்பெற்றார்போல் துள்ளி யெழுந்து, என்னை யணைத்துப் பலகால் முத்தமிட்டு, எனக்கு வேண்டிய வசதிகள ளெல்லாஞ் செய்யும்படி தம் ஏவலாட்களுக்குக் கற்பித்துவிட்டுத், தங்கணவரையும் என் தமையனையும் மீட்டுக் கொண்டுவரும் பொருட்டாகத் தம் உறவினரான ஆண்மக்கள் சிலரை அழைத்துக்கொண்டு ஊர் காவற் சாவடிக்குப்போய், அங்குள்ள அதிகாரிகளோடு என்னையும் அழைத்துக்கொண்டு, அவ்விரு வருஞ் சிறையிருக்கும் இடந்தேடிப் புறப்படவேண்டும் ஏற்பாடு களெல்லாம் செய்துகொண்டு, ஒரு மணி நேரத்திற்குமுன் தான் வீட்டுக்குத் திரும்பி வந்தார். வந்தபிறகுதான் சிறிது உணவு

கொண்டார். அவர் நெஞ்சம் பதைக்கின்றது! ஓயாமற் பெருமூச் செறிகின்றார்! கண்ணீர் ஆறாய்ப் பெருக்குகின்றார்! எம் பெருமானுக்கு இதற்குள் யாது நேர்ந்ததோ! என்கிறார். ஐயோ! இத்தகைய துயரத்தை என் வாழ்நாளில் இதற்குமுன் யான் கண்டதே இல்லை! இத்தனை துன்பமும் இவர்கட்கு என் ஒருத்தியால் நேர்ந்ததன்றோ!" என எண்ணி எண்ணி என் நெஞ்சம் ஏங்கியது! அந்த அம்மையார் தங்குழந்தைகளை யெல்லாம் பார்த்துப் பார்த்து தவிக்கின்றார்! அக்குழந்தைகளிற் கைக்குழவியுங் கூட இந்நிகழ்ச்சிகள் ஒன்றும் அறியாதாயினும் வாடி வதங்கிப் போயிற்று! அறிவு தெரிந்த மற்றப் பிள்ளைகளும் பெரியபெண்ணும் இடைக்கிடையே ஓவென்று அலறுகிறார்கள்! தந் தந்தையாரை நினைத்துந் தம் அன்னையின் துயரத்தைக் கண்டும் விம்மி விம்மி அழுகின்றார்கள்! என் செய்வேன் பாவியேன்! இந்தப் பெருந்துயரான நிலைமையில் எல்லா இரக்கமும் உடைய சிவபெருமானே எங்கட்கு உதவிபுரிதல் வேண்டும். யானும் அவர்களோடு நீள மனம் நைந்து வருந்திய பிறகு, அவ்வருத்தந்தீர்ந்து என்னை அறியாமலே ஒரு பெருங் கிளர்ச்சி கொள்ளப் பெற்றேன். அங்ஙனங்கிளர்ச்சி கொண்டதும் அந்த அம்மையாரை நோக்கி "என் அம்மா, இவ்வளவுதுயரம் அடையவேண்டாமென்று தங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன். கொடுங்கள்வர் கையில் அகப்பட்ட ஏழைச் சிறுமியாகிய என்னை அவர்களிடத் தினின்று தப்புவித்துக் காடுகளும் மலைகளுந் தாண்டித் தங்களிடம் வந்து சேரும்படி உதவிபுரிந்த பேர் இரக்கமுடைய கடவுள் நம் ஐயா அவர்களையும் என் தமையனையும் அங்ஙனமே விரைவில் மீளச்செய்து நம்மிடஞ் சேர்ப்பிப்பாரென்னும் நம்பிக்கை என்னுள்ளத்தில் நிரம்பவும் வலிவேறித் தோன்றுகின்றது. இன்றிரவே சேவகருடன் நாம் சென்று அவர்கள் சிறையில் அடைபட்டுக்கிடக்கும் இடந்தேடி இருவரையும் மீட்டுக்கொள்வ தோடு அக்கொடுங் கள்வர்களையும் பிடித்துக்கொண்டுவந்து சிறையில் அடைக்கும்படி நம் இறைவன் உதவிபுரிவார். இந்த நேரத்தில் பெரிய மனவலியும் மனத்துணிவுந் தான் வேண்டும். அன்பும் அருளுங் குடிகொண்ட தங்களிருவர்க்கும்; என் தமையனுக்கும் ஏதோர் இடுக்கணும் நேராது; நல்லோரைக் கடவுள் கைவிட மாட்டார். அப்படிக் கைவிட்டால் கடவுள் ஒருவர் இருக்கிறார் என்னும் நம்பிக்கை உலகத்தில் இல்லாமலே

போயிருக்கும். தீமையே அரசாளும். ஆனால், அப்படியில்லை. தீமையின் வலிவைக் குறைக்கும் வழி வகைகள் நாளுக்குநாள் பெருகி வருகின்றன. உற்றநேரத்தில் அன்புமிக்க நல்லோர்க்கு இறைவன் அருள் புரிந்து வருகிறார் என்னும் நம்பிக்கை அறிவுவளர்ச்சியோடு கூடி வலுவடைந்து வருகின்றது. அதற்கு ஒன்றுக்கும் பற்றாத ஏழையேன் இப்போது தப்பிவந்தமையே ஒருசான்று. ஆகையால், இன்னுஞ் சில மணி நேரத்தில் நாம் புறப்படுதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்" என்றேன். ஏழையேன் கூறிய புன்சொற்களைக் கேட்டு ஒருவாறு மனந்தேறிய அம்மையார் என்னையணைத்து முத்தமிட்டு நாங்கள் இன்று இரவு புறப்படுவதற்கு வேண்டும். ஏற்பாடு களெல்லாம் செய்யப்போனார். பன்னிரண்டு சேவர்களும் நுண்ணறிவுமிக்க ஓர் அதிகாரியும் எங்களுடன் வருவதற்குத் தீர்மானம் செய்யப்பட்டிருக்கின்றது. அந்த அம்மையாரும் யானும் அவர்களுடன் போய்த் திரும்பும் வரையில் பெண்ணுடுப்புகளைக் களைந்து ஆண்உடுப்பிலிருக்கும் படி ஏற்பாடு செய்திருக்கிறார்கள். எங்களோடு அந்த அம்மையாருக்கு நெருங்கிய உறவினரான வேறு ஆறு ஆண்மக்களுங் கூட வருவார்கள். யான் ஒருத்தியே அவர் களோடு வந்தாலன்றித் தாம் உயிர் வாழமுடியாதென்று அந்த அம்மையார் ஒரே பிடியாயிருத் தலாலும், அதன் முடிவை இன்றிரவே தெரிந்துகொள்ளவேண்டு மென்றும் ஆத்திரம் அவர்களுள்ளத்தைக் கவர்ந்து கொண்டமை யாலும் என்னோடு கூட எனக்குத் துணையாய் வரத்தக்க பெண் பிள்ளை வேறு எவரும் இன்மையாலும் அந்த அம்மையார் என்னுடன் புறப்படுவதற்கு உறுதி செய்து விட்டார்கள். எங்களுடன் வருஞ் சேவகர்களும் மற்றைய ஆண்மக்களும் கைத் துப்பாக்கி தாங்கிப் படைக்கலம் பூண்டிருப்பார்கள். துப்பாக்கி களையும் படைக்கலங்களையும் எடுத்துக்கையாள்வதில் அவர்கள் எல்லாரும் மிகத்திறமை வாய்ந்தவர்கள். அதனோடு, எவ்வகை யான இடருக்கும் அஞ்சாநெஞ்சு வாய்ந்தவர்கள். ஆயினும், உண்மைக்குக் கட்டுப்பட்டு நன்மையே செய்யுங் கட்டுப்பாடு உடையவர்கள். என் பொருட்டு அந்தப்பாரசிக கனவானுக்கும் என் தமையனுக்கும் இந்த அம்மையார்க்கும் அவர் குழந்தைகட்கும் இத்தனை துன்பம் நேர்ந்தமையால் அவ்விரு வரையும் மீட்டுக் கொண்டாலல்லாமல் என் உயிர் இங்கு நில்லாது. என் உயிரை ஒரு துரும்பாக நினைத்திருக்கின்றேன்.

அவர்களை மீட்டுக்கொண்டு வந்து தங்களையுங் காணும் நல்வினை உடையேனோ இல்லையோ! ஆயினுந், தாங்கள் கவலைப்படாமலிருக்க வேண்டுகின்றேன். எல்லாம் வல்ல நம்மிறைவனருள் நமக்குத் துணையிருந்தால் பொல்லாத மனிதர் செய்யுந் தீங்குகள் நம்மை அணுகமாட்டா; அவை அவர்களையே திரும்பிச் சென்று பற்றும். நாங்கள் புறப்படுவதற்கு இன்னும் நான்கு மணி நேரங்கள் இருக்கின்றன. தாம் தம்மை மறந்த துயரத்தில் ஊண் உறக்கமின்றியிருந்தமையால் அந்த அம்மையார் இங்கே எங்கட்கு எதிர்பாராமல் நேர்ந்த இடர்களைத் தங்கட்குத் தெரியப்படுத்துவதற்குக் கூடாமற் போயிற் றென்றும், ஆதலால் நடந்த அவ்வளவுந் தங்கட்கு விரிவாய் நான் உடனே எழுதவேண்டுமென்றும் இப்போதுதான் தெரிவித்தார்கள். எங்கட்கு நேர்ந்த இடர் இன்னும் முற்றுந்தீராமையால், அது தீர்ந்த பிறகு எல்லாம் விரிவாய் எழுதலாமென்று நினைத்தேன். ஆனால், அம்மையார் சொன்னதிலிருந்து இன்னும் நேரமிருப்பதால் முற்றுந் தெரிவிக்கலாமென்றே துணிந்தேன். இன்றை இரவு நாங்கள் போகுமிடத்தில் நாங்கள் ஒருமிக்க மடியும்படி நேர்ந்தாலும், முன் நடந்தவைகள் தங்கட்குத் தெரியவேண்டுவது நலமென எண்ணினேன். ஆகையால், என் தமையனும் யானும் பம்பாயில் வந்து இறங்கின நேரம் முதல் நேர்ந்தவைகளை இங்கு எழுதுகின்றேன்.

வாடிச்சந்திப்பில் எதிர்பார்த்தபடியே தாங்கள் வந்து தங்கள் திருமுகத்தைக் காட்டி என்னைப் பெருங்களிப்பில் முழுகச் செய்தீர்கள். எம்பெருமானே, தங்களோடு சிறிது பேச வேண்டுமென என்னுள்ளம் மிகவிழைந்தும், அதனை என் தமையன் குற்றமாக நினையானென்பதனை யான் செவ்வையாகத் தெரிந்திருந்தும் அப்போது எனக்கு உண்டான களிப்பும் அதனோடு கலந்து தோன்றிய நாணமும் என் நாவை அசையவொட்டாமற் பூட்டி விட்டன. தாங்கள் என் உடம்பின் நலத்தைப் பற்றி வினவியும் அதற்குங்கூட விடைசொல்ல மாட்டாமல் புன்சிரிப்போடு இருந்து விட்டேன். அப்போ தென்நிலையையறிந்த என் தமையன் தன்னோடு பேசும்படி தங்களைத் திருப்பிக்கொண்டான். தங்கள் வினாவிற்கு யான் விடை கூறாததைப் பற்றித் தங்கள் உள்ளம் வருந்துமோ என்று வருத்தமும் அச்சமும் ஊடேஊடே கொள்ளப் பெற்றேன். ஆயினும், தாங்கள் என் தமையனிடம் அன்புடன் அளவளாவிக்

கொண்டு அருமையான சொற்களைப் பேச அச்சொற்களின் இனிமையையும் நுட்பத்தையும் அறிந்து பெரிதும் இன்புற்றேன்; அச்சொற்களுக்கேற்றபடியே தங்கள் அழகிய திருமுகத்தில் அமைதியாகத் தோன்றிய அசைவுகளையுங் குறிப்புகளையும் யான் இடையிடையே ஒருபக்கமாய்ப் பார்த்து, “யான் இவ்வுலகத்திலன்றி வானுலகத்தின்கண் இசையினிமை நெகிழ்ந் தொழுகுங் கந்தருவரொருவரைக் கண்டு மெய்ம்மறந்திருப்ப தாகவே நினைந்தேன். யான் அச்சிறிதுநேரமும் அடைந்த இன்பநிலைமை சொல்லவும் ஏட்டிலெழுதவும் இயலாது. அப்போது தங்களை என் ஆருயிர்த் தெய்வமாகவே நினைந்து மனத்தாற்றெழுதேன். பின்னுஞ் சிறிது நேரத்தில் எங்கள் வண்டி புறப்படுவதற்கு மணி அடிக்கப் பட்டது; அதனை அடுத்து வண்டியும் நகரத் தொடங்கியது. என் தமையனும் யானுந் தங்களைத் தொழுது விடை பெற்றுக் கொண்டோம். என் நினைவு தங்கள் முகமாயிருக்கக் கூட இருந்தவர் களுக்கு அஞ்சித் தங்களைப்பாராமல் என் முகத்தை உட்புறமாகத் திருப்பிக் கொண்டேன். ஆனாலுந், தங்களைத் திரும்ப எப்போது காணுவமோ என்று என் நெஞ்சந் துடிதுடித்தது. காதல் அன்பின் வாய்ப்பட்டவர்களுக்குப் பிரிவினும் மிக்கதுன்பந் தருவது வேறில்லை. தங்களைக் கண்டதில் மகிழ்ச்சியும் பிரிந்ததில் துன்பமும், இனி எப்போது காண்போம் என்பதில் ஏக்கமும், இதுவரையில் நம்மை ஒருங்கு கூட்டுதற்கு வேண்டும் உதவிகளையெல்லாம் வருவித்த நம்பெருமான் நம்மைத் திரும்பவும் விரைவில் நிலைபெறச் சேர்த்தருளுவன் என்பதில் ஆறுதலும் அடுத்தடுத்து அடைந்த படியாய்ச் சென்றேன். கதிரவன் மேற்றிசையிற் சாய்ந்த மாலைப் பொழுதில் எங்கள் வண்டி பம்பாய்க்குள் வந்தது. என் தமையன் ‘வண்டி பம்பாய்க்குள் வந்துவிட்டது, இன்னும் இரண்டொரு நொடியில் நிலையிற்போய்ச் சேரும் நம் தாய் தந்தையரினும் மிக்க அந்தப் பாரசிகப் பெருமானும் பெருமாட்டியும் நம்மை அழைத்துச் செல்லும் பொருட்டுத் தங்குநிலைக்கு வந்திருப்பார் கள் என்று நம்புகின்றேன்’ என்றான். யான் வெளியே தலையை நீட்டிப் பார்த்தேன். நிலவுவெளிச்சம் இன்னும் வளராத நாளாகையால், அன்று வெளியே எங்கும் இருளாயிருந்தாலும், வரிசை வரிசையாக வண்டி நிலையில் தூக்கப்பட்டிருக்கும் ஆவி விளக்குகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு முழுநிலாவைப்போல்

ஒளிவீசின. வண்டி நிலையின் அகன்றுயர்ந்த அழகிய அமைப்பும், அதற்குள் எங்கள் வண்டி விரைவாக ஒருவகையில் இருபுறத்தும் நின்ற நேர்த்தியான வண்டித் தொடர்களின் வரிசையும் இன்னதென்று கூறலாகாப் புதுமையும் வியப்புங்கலந்த ஓர் உணர்வினை என்பால் எழுப்பிவிட்டன. இதனோடு, எமக்கு உயிர்போற் சிறந்த அப்பாரசிகப் பெருமாட்டியாரையும் பெருமானையுங் காணுதற்கு ஓர் இமைப்பொழுது தான் இடையே தடையாயிருக்கின்றதென என்னுள்ளம் பொறாமல் மிகவிரைந்தது. வண்டி நிலையில் வந்து தங்கியது. வண்டி யினுள்ளிருந்த பயணக்கார ரெல்லாந் தத்தம் மூட்டை முடிச்சுகளை எடுத்துக்கொண்டு சிலர் ஆத்திரத்தோடும், சிலர் சிறிது அமைதியோடும் இறங்கினார்கள். அவரவர்க்கு உரியவர்கள் முன்னமே வந்திருந்து பற்பலரை வரவேற்றார்கள். என் தமையன் முதலிற் கீழ் இறங்கி எங்கள் சாமான்களை இறக்கிப் பின் என்னையும் இறக்கிவிட்டான். இறங்கியபின் யாங்கள் மிகுந்த ஆவலோடு அப்புறமும் இப்புறமும் நோக்குகையில் நாங்கள் வந்த வண்டியின் ஒரு கோடியிலிருந்து எங்களைப் பார்த்துக்கொண்டே அப்பெருமான் பெருமாட்டியார் இருவரும் அவர்களின் மூத்த பெண்ணும் மற்றொரு சிறுவனும் அவர்களின் வேலையாட்கள் இருவரும் நாங்களிருந்த இடத்திற்கு மலர்ந்த முகத்தோடும் புன் சிரிப்போடுங் கைகளை நீட்டிக் காட்டிக்கொண்டே எங்களிடங் கடுகவந்தார்கள். அவர்களைக் கண்டதும் என் தமையன் முற்சென்று அப்பாரசிகப் பெருமானிடஞ்சேர அவர் அவன் கையைப்பிடித்து மிக்க அன்புடன் குலுக்கி எங்கள் நலத்தைக் கேட்டபடியாய் என் அருகே வந்தார்; அவர் பக்கத்தே வந்த அம்மையார் என்னை உடனே கட்டியணைத்து முத்தமிட்டார்; அந்தப் பெருமானும் என் கையை எடுத்துத் தம் கண்களில் ஒற்றிக்கொண்டு “கோகிலா அம்மா சுகமா?” என்று கேட்டார். நாங்கள் ஒருவரையொருவர் அளவளாவி அப்போதடைந்த மகிழ்ச்சிக்கு ஓர் எல்லையில்லை. அந்த மூத்த பெண்ணின் கன்னங்களைக் கிள்ளி முத்தம் வைத்தேன். அச்சிறு பையனை எடுத்து என் இடுப்பின்மேல் வைத்துக்கொண்டேன். இதற்குள் அவர்களுடன் வந்த ஏவலாட்கள் எங்கள் சாமான்களை யெல்லாம் எடுத்துக் கொண்டார்கள். அந்தப் பெருமான் அந்தப் பையனை என்னிடத்தினின்றும் வாங்கித் தாந் தூக்கிக்கொண்டு முன் நடக்க நாங்கள் எல்லாம் அவர் பின்னே மெல்ல நடந்து,

சீட்டுக் கொடுக்குமிடத்தே அதனைச் செலுத்திவிட்டு, புறம்பே வந்தோம். எங்களுக்காக, உயர்ந்த அழகிய குதிரைகள் பூட்டப்பட்ட இரண்டு நேர்த்தியான பெட்டி வண்டிகள் வந்து நின்றன.

நாங்கள் அந்த வண்டிகளில் இன்னும் ஏறவில்லை; வண்டிக்காரர் எங்க மூட்டை முடிச்சகளையும் பெட்டிகளையும் எடுத்து வண்டியின்மேல் வைத்துக்கொண்டிருந்தார்கள். யான் சுற்றியுள்ள காட்சிகளைப் பார்த்து, அந்த அம்மையாரிடம் அவற்றின் விவரங்களைக் கேட்டுக்கொண்டிருந்தேன். அப்போது, கரியநிறமுங்குள்ளவடிவுங் கூழைக்கையும் உடைய ஒருவன் அந்தப் பக்கமாய்ச் சென்றவன் எங்களைவிட்டுப் பத்தடி அகன்றுநின்ற எங்கள் பாரசிக கனவானைப் பார்த்து அவரிடம் வந்து சலாம் பண்ணி ஆங்கிலத்திற் சிலபேசினான். அவர் அவனுக்குச் சுருக்கமாகச் சில மொழிகளை முகங்கொடாமல் விடையாகச் சொல்ல, அவன் அவற்றைக் கேட்டுக்கொண்டு விரைந்து போய்விட்டான். அவன் போனவுடனே அப்பெருமாட்டியார் என்னை நோக்கிக் "குழந்தாய் இவன்தான் நம் தெய்வநாயகத்தின் நண்பன் சேதுராமன்' என்று சிறிது அருவருப்போடு கூறினார்கள்.

அதனைக்கேட்டதும் என் மனந்திடுக்கிட்டது. அவனது அந்தங்கெட்ட வடிவத்தைப் பார்த்தவுடனே இன்னதென்று சொல்ல முடியாத ஒரு கலவரம் என் மனத்தே தோன்றிற்று. உடனே யான் அவ்வம்மையாரவர்களைப் பார்த்து 'அம்மா, சிகந்தராபாத்திலிருந்த இவன் இங்கே எப்போது வந்தான்? தங்கட்குத் தெரியுமா?" என்று கவலையோடு வினாவினேன்.

"குழந்தாய், நாங்கள் உன்னைவிட்டுப் பிரிந்து இங்கேவந்து சேர்ந்த ஒரு வாரத்திலெல்லாம் இவனும் இங்கேவந்து எங்களைக் கண்டான். சிகந்தராபாத்தில் ஆறேழு மாதங்கள் வரையிலிருந்து முயன்றும் அங்கே ஏதும் அலுவல் கிடைக்கவில்லையாம். அதன் மேல் அவன், தெய்வநாயகம் எங்களிடந்தன்னை அனுப்பியதாகச் சொல்லி, ஏதேனும் ஓர் அலுவல் பார்த்துத் தரும்படி ஐயா அவர்களிடம் பலகால் வந்து கேட்டான். அப்போது இங்கே எங்கள் குடும்பத்தின் நிலை மிகவுங்குலைந்திருந்தமையால், இவனிடத்திற் கருத்துவையாமல் இன்னும் ஒரு மாதங் கழித்துப் பார்ப்போம் என்று ஐயா சொல்லிவிட்டார்கள். 'பிறகு இங்கே குடும்பஞ்சீர்ப்பட்டதும், தெய்வ நாயகத்திற்கு எழுதிய கடிதத்தில்

ஐயா இவனைப்பற்றிச் சில குறிப்புகள் தெரிவிக்கும்படி கேட்டிருந்தார்கள். அவரிடமிருந்து வந்த விடையில் தமக்கும் அவனுக்கும் முன்னே சிலகாலம் நெருங்கிய நட்பு இருந்தது உண்மையே யென்றாலும் பிறகு இவன் இயல்புகளுஞ் சொற்களுஞ் செயல்களுங் கூர்ந்து பார்க்கப் பார்க்க ஏதோ கள்ளம் உடையன வாய்த் தம் மனத்திற்குப் பட்டமையால் அவனது நேசத்தை வரவர நழுவவிட்டதாகவும் இடையே நீ எழுதிய கடிதத்திலும் இவனுடைய நட்பு விலக்கத்தக்கதேயன்றி விரும்பத்தக்கதன்று என்று குறிக்கப்பட்டிருந்ததாகவுந் தெரிவித்த தோடு, இவனை அவர் எங்களிடம் போகும்படி அனுப்ப வில்லையென்றும், இவன் சிகந்தராபாத்திலிருந்து பம்பாய்க்கு வந்ததே தமக்குத் தெரியாத தென்றும் வரைந்திருந்தார். அதுமுதல் ஐயா இவனை எங்கள் வீட்டுக்கு வர இடங்கொடுப்ப தில்லை. இவனுக்கு வேலை எங்குங் கிடைக்கவில்லையென்றுஞ் சொல்லிவிட்டார். என்றாலும், இவன் தானாகவே இடைக் கிடையே வருகின்றான். இவனுக்கச் சுணையில்லை. முகங்கொடுத்துப் பேசாதிருக்கையிலும், இவன் வருவது எங்கட்குச் சிறிதும் பிடிக்கவில்லை. ஆனாலும், ஐயா அவர்கள் மிகுந்த இரக்கம் உடையவர்களாதலால் இவனை முகங்கடுத்துப் பேசமாட்டாமலிருக்கின்றார். இவன் ஏதோர் அலுவலுமின்றி இங்குமங்குமாய் அலைந்துகொண்டிருப்பதைப் பார்த்தால் இவன் ஏதோ ஒரு பொல்லாத நோக்கம் உடையவனாய்க் காணப்படுகின்றான்' என்று சொன்னார்கள். இதற்குள் எங்கள் சாமான்களெல்லாம் வண்டிமேலேறி விட்டமையால், அந்தப் பெருமானவர்கள் என்னையும் அந்த அம்மா அவர்களையும் மூத்த பெண்ணையும் ஒருவண்டியில் ஏற்றிவிட்டார்கள். தாமும், என் தமையனும் சிறுபையனும் மற்றொரு வண்டியில் ஏறிக் கொண்டார்கள். பிறகு வண்டிக்காரர் இருவருக்குந் தாம்போய்ச் சேரவேண்டிய இடம் இன்னதென்று குறிப்பிட்டுச் சொல்லியபின் எங்கள் வண்டியை முன்னுந் தம் வண்டியைப் பின்னுஞ் செலுத்தும் படி அப்பெருமான் கற்பித்தார். இவர் இங்ஙனம் இடங்குறிப்பிட்டு சொல்லியது கொண்டு "இவ்விரண்டு வண்டிகளும் வாடகை வண்டிகளோ?" என்று அம்மையாரைக் கேட்டேன். "ஆம் அம்மா, ஐயாவின் தமையனார் நீண்டகாலம் வெளியே செல்லக்கூடாதபடி கீல்பிடிப்பு நோயிலிருந்தமையாலுந், தம்மைத் தவிர வெளியே

செல்லக்கூடிய வேறு ஆண்பிள்ளைகளில்லாமையாலுந், தமக்கு வேண்டியனவெல்லாம் ஏவற்காரர்கள் வெளியே போய்ச் செய்து வந்தமையாலுந் தமக்குப் பயன்படாமை கண்டு தம்மிட மிருந்த உயர்ந்த வண்டி குதிரைகள் எல்லாவற்றையும் விற்றுவிட்டனர். நாங்கள் இங்கே வந்தபிறகும் பலவகையான குழப்பங்கள் நேர்ந் தமையால் நாங்களும் இன்னும் வண்டி குதிரை வாங்கவில்லை. இன்னுஞ் சிலநாளில் அவற்றை வாங்குவதற்கு ஏற்பாடு செய்திருக் கிறார்கள்" என்று கூறினார்கள். எங்கள் வண்டிக ளிரண்டும் விரைந்து செல்லுவன ஆயின.

யான் வண்டியிலிருந்தபடியே சாலையின் இருபுறத்துமுள்ள காட்சிகளை நோக்கிக்கொண்டு சென்றேன். சீமைப்பண்டங்கள் உள்நாட்டுப் பண்டங்களெல்லாம் விற்குங் கடைவீதிகளின் ஊடே வண்டிகள் செல்லும்படி, என் பொருட்டு அந்தக் கனவானவர்கள் கட்டளையிட்டிருந்தமையால் மிக அழகிய தெருக்களிலே எங்கள் வண்டிகள் சென்றன. தெருக்களின் இருபுறத்துமுள்ள அழகிய மாளிகைகள் ஒவ்வொன்றும்மூன்றடுக்கு நான்கடுக்குகள் உடையனவாய் உயர்ந்து காணப்பட்டன. அக்கட்டிடங்களிலுள்ள விளக்கினொளிகளும், அவற்றின் புறத்தே தெருக்களில் நிரை நிரையாக எரியும் ஆவி விளக்குகளின் ஒளிகளும், அம்மாளிகை களின் மேன் மெத்தைமேல் உயர்ந்த சிவப்பு நீலம் பச்சை முதலிய நிறம் மிளிரும் பட்டாடைகள் உடுத்து மின்னற்கொடி துவண்டாற் போல் உலவும் மிக அழகிய மாதர்களின் தோற்றமும், சில மாளிகைகளின் புறத்தே கண்ணாடிக் கதவுகள் மினுமினுவென்று தோன்ற அவற்றின் உள்ளே பலதிறப்பட்டாடைகளும் பளிங்குச் சாமான்களும் பொன் வெள்ளியிற் செய்த கலங்களும் பல விலை யுயர்ந்த மணிகளிற் செய்த அணிகலன்களும் உயரப் பலகை களிற்றைத்த மென்பட்டின் மேன் மிகவும் நேர்த்தியாக வைக்கப் பட்டிருக்குங் காட்சியும், சில கடைகளில் வெள்ளைக்காரர் பாரசிகரைப்போல் ஆண் வடிவிலும் பெண் வடிவிலும் செய்யப் பட்ட பதுமைகள் உயிருள்ளனபோல் நிறுத்தப்பட்டிருக்கும் எழிலும்,வேறு சிலவற்றில் உணவிற்காக விற்குங் **கொடிமுந்திரி மா செவ்வாழை அன்னதாழை சீமை இலந்தை சீமைஅத்தி நாரத்தை** முதலான கணக்கிறந்த பசிய பழவகைகள் வரிசை வரிசையாக அடுக்கப்பட்டிருக்கும் நேர்த்தியும், இன்னுஞ் சிலவற்றின்கட்

பொன்மினுக்குப் பூசிய உயர்ந்த உயர்ந்த புத்தக வரிசைகள் வைத்திருக்கும் பான்மையும் பிறவும் என் ஒரு நாவால் எடுத்துரைக்க ஏலாதன. தெருக்களுங் கட்டிடங்களும் விளக்குத் தூண்களுந் தூயவாய் ஒழுங்காய் அமைந்திருக்குந் திறம் பெரிதும் வியக்கற் பாலதாயிருக்கின்றது. பம்பாய் நகரம் வானின்கண் உள்ள இந்திரனுலகுதான் என்று முன்னே பலர் பலகாற் சொல்லக் கேட்ட சொல் முற்றிலும் உண்மையென்றே தெளிந்தேன்.

இப்போது வைகாசிமாதக் கடைசி. இந்தக் காலத்திற் சென்னை பக்கத்திற் கடுவேனிற்பருவமாயிருக்க, இங்கே மப்பும் மந்தாரமும் மழையுமாயிருக்கக் காண்கின்றேன். நாங்கள் வண்டித் தொடரிலிருந்து இறங்கும் போதேவானமெல்லாம் இருண்டு. குளிர்ங்காற்று வீசியது. இப்போது குதிரை வண்டியிற் செல்கையில் வானத்தின்கண் இடிமுழக்கமும் மின்னல் ஒளியும் இடையிடையே தோன்றலாயின. மழைத்துளிகளுஞ் சிதறின. காற்று மும்முரமாய் வீசவே, மழைத்திவலைகள் வண்டிக்குள் இருக்கும் எங்கள்மேற் பட்டன. அதனால், நாங்கள் சாளரக் கதவுகளை இழுத்துச் சாத்த வேண்டியதாயிற்று. வெளியேயுள்ள காட்சிகளை இப்போது நான் பார்க்கக் கூடாமை பற்றி மனம் வருந்தினேன். சென்ற பதினைந்து நிமிஷங்களாகச் சென்றது போலல்லாமல் இப்போது எங்கள் வண்டிகள் மிக விரைந்து செல்லலாயின. குதிரைக் குளம்படிகளின் ஓசை முன்னையிலும் உரத்துத் தோன்றின. வண்டிக்காரர் இருவருங் குதிரைகளை அடுத்தடுத்துச் சாட்டையால் அடிக்கும் ஒலி எனக்கு அச்சத்தை உண்டுபண்ணியது. வண்டித் தொடர்நிலைக்கும் நாங்கள் போய்ச் சேரவேண்டிய இருக்கைக்கும் அரைமணி நேர ஓட்டந்தான் என்று முன்னே நாங்கள் கலந்து பேசுகையில் தெரிந்து கொண்டேன். ஆனால், இப்போது அரைமணி நேரத்திற்கு மேலாயிருக்குமென்று என் மனத்திற்பட்டது. அதைப் போலவே அந்த அம்மையார்க்கும் பட்டது. “என்ன! வண்டி வழி தப்பிப் போவதுபோற் காணப்படுகின்றதே!” என்று அம்மையார் சிறிது பதைப்போடு கூறினார்கள். இச்சொற்கள் கூறி முடிப்பதற்குள் பின்னேவரும் வண்டியிலிருந்த அந்தப் பாரசிக கனவான் கூவும் ஒலி கேட்டது. சிறிது நேரமாய் மழை சோவென்று பெய்து கொண்டிருந்தமையால் அவர் யாது சொல்லுகிறாரென்பது எங்கட்குப் புலப்படவில்லை. ஆனாலும் வண்டிக்காரர்

வழிதப்பிச் செல்வதால், போகவேண்டிய வழியில் அவற்றைத் திருப்பச் சொல்லுகிறாரென்று கருதினோம். மழை சிறிது ஓய்ந்தது. வண்டிகளோ படுவேகமாய்ச் சென்றன. உடனே நாங்கள் மிகவும் அஞ்சிச்சாளரக்கதவுகளைக் கீழ் இறக்கிவிட்டு வெளியே பார்க்க ஒரே இருளாயிருந்தது. விளக்குவெளிச்சம் ஏதுங் காணப்படவில்லை. அந்தப் பாரசிகப் பெருமான் வண்டியை நிறுத்தச் சொல்லி அடுத்தடுத்துக் கூவும் ஒலி பின்னேயிருந்து கேட்டது. இப்போது அவர்கள் வண்டி எங்கள் வண்டிக்குச் சிறிது எட்ட இருப்பதாக அறிந்து திகில் கொண்டோம். "அம்மா ஈது ஏதோ ஆபத்தாக இருக்கின்றதே! நாம் பம்பாய்க்கு வெளியே காட்டு வழியாய்ச் செல்வதாகவன்றோ புலப்படுகின்றது! நெடுநேரமாய் ஐயா கூவுகிறார்கள்! இந்த வண்டிக்காரர்கள் அவற்றைக் கேளாதவர்கள் போல் மிகு விரைவாய் ஒட்டிக்கொண்டு போகிறார்களே!" என்றேன். அம்மையாரும் மிக அஞ்சி நடுங்கினவர்களாய் "ஈது ஏதோ இரண்டகமாகத்தான் இருக்கின்றது. ஆயினும் அஞ்சாதே! நாமும் வண்டியை நிறுத்தச் சொல்லிக் கூவுவோம்!" என்று சொல்லி உரத்துக் கூவினார். அவர்களது மெல்லிய குரலொலி கீழ்க்கையடித் தாற்போல் இடைவெளியை ஊடுருவிச் சென்றது. அதே நேரத்தில் வேறு ஒரு கீழ்க்கையொலி எங்களுக்கு முன்னே சற்றுத் தொலைவி லிருந்து வரக்கேட்டோம். உடனே வண்டிக்காரன் கடிவாளத்தைப் பிடித்திழுத்துக் குதிரைகளை நிறுத்தத் துவங்கினான். இதற்குட் பின்னே வந்த எங்கள் வண்டியும் அருகில் வந்து நின்றது. அந்தப் பாரசிகப் பெருமான் வண்டிக்காரர் மேல் மிகவுஞ் சினங் கொண்டவராகி, அவர்கள் வழி தப்பி வண்டியைக் கொண்டு வந்ததற்காக அவர்களை அச்சுறுத்திப் பேசித் திரும்ப வண்டியை நகரத்திற்குள் திருப்பும்படி கட்டளையிட்டார். வண்டிக்காரர்கள் ஏதுமே விடை சொல்லவில்லை. இதற்குள் வேறிரண்டு பெட்டி வண்டிகள் எங்களுக்கு எதிர்முகமாயிருந்து கடுவிரைவில்வந்து எங்கள் வண்டிகளின் பக்கமாய் நின்றன. அவ்விரண்டிலிருந்து நீண்டு வலியரான எட்டுப் பெயர் இறங்கினர். அவர்களில் இருவர் கைகளில் இரண்டு சிறு கூண்டு விளக்குகள் ஏற்றப்பட்டன. அவர்கள் எல்லாருந் தம் முகங்களிற் கரியமையைக் குழைத்துப் பூசி, முழுக்கறுப்பான மேற்சட்டை காற்சட்டை அணிந்திருந்தனர். இருவர் தம் காற்சட்டையிற் கட்டியிருந்த உறையிலிருந்து நீண்ட கூர்ங்கத்திகள் இரண்டை இழுத்துக் கையிற் பிடித்துக்

கொண்டார்கள்; மற்றிருவர் கைத்துப்பாக்கிகள் இரண்டைத் தம் கைகளில் ஏந்திப் பிடித்துக்கொண்டார்கள். இவர்களைப் பார்த்த வுடனே இவர்கள் இன்னார், இவர்கள் நோக்கம் இன்னது என்னும் வகைகள் உடனே புலப்பட்டன. மக்களாய்ப் பிறந்தவர்களில் இத்தகைய கொடுந்தோற்றமுங் கொலை செய்யுந் தீர்மானமும் உடையவர்களை இதற்கு முன் யான் எங்குங் கண்டதில்லாமையால், இவர்களைக் கண்டவுடனே என்னுயிர் என்னுடம்பை விட்டுப் போனதெனக் களைத்துப் பின்னே சாய்ந்து விட்டேன். இத்தகைய தொரு நிகழ்ச்சியைக் கனவிலே கண்டு கைகால் அசையாமலும் நா எழாமலுங் கட்டைபோற் கிடக்கும் ஒருத்திக்கும், விழிப்பு நிலையில் அங்ஙனமே இருந்த எனக்கும் ஏதொரு வேற்றுமையுமே இல்லை. ஆனாலும், என்னைச் சூழ நடப்பது இன்னதென்னும் ஓர் உணர்வு மட்டும் எனக்கு அப்போதிருந்தது. யான் இந்த நிலைமையை அடைய, அந்தப் பாரசிக அன்னையார் அவர்களைக் கண்டதும் 'ஐயோ!' என ஓர் ஓலமிட்டுத் தம் மகளை அணைத்த படியாய் மூச்சிழந்து உணர்வற்றுச் சாய்ந்து விட்டார். அந்தப் பெரிய பெண், அன்னையைக் கட்டிப்பிடித்துக்கொண்டு அவர்க்கு பின்னே பதுங்கிக் கொண்டனள். வந்த அக்கள்வர்கள் எல்லாரும் முதலில் எங்களுக்குத் தெரியாத ஒரு மொழியிற் பேசினர். ஆனால், அவர்களிற் சிலர் யானிருந்த வண்டியண்டை வர ஒருவன் தன் கையிலிருந்த விளக்கு வெளிச்சத்தை எங்கள் மூவர்மேற்படும்படி பிடித்தான். அவர்களுள் ஒருவன் மற்றொருவனைப் பார்த்துத் தமிழில் 'நல்ல காலமாய் இவர்கள் மூர்ச்சித்துக் கிடக்கிறார்கள். அந்த வண்டியிலேயுள்ள பார்சிகக்காரனுக்கும் பிராமணப் பையனுக்கும் மூக்கிலே மயக்க மருந்து பிடித்து அவர்களையும் நம்ம வண்டி ஒன்றில் ஏற்றிவிட்டோம். இவர்களுக்கும் மூக்கில் அந்தமருந்தைப் பிடிப்போமா?" என்று கேட்டான். அதற்கு மற்றவன் 'ஆமா! நம்ம துப்பாக்கிகளுக்குங் கத்திகளுக்கும் வேலை யில்லை!" அந்தப் பாரசிக்காரன் முதலில் நம்மை எதிர்க்கப் பார்த்தான். ஆனால், துப்பாக்கியை நான் அவன் தலைக்கு நேராய்ப் பிடிக்கவே அவன் திகில்கொண்டு பின்வாங்கினான். இதற்குள் மயக்க மருந்தை அவன் மூக்கில் பிடித்து நீ அவனை மூர்ச்சை அடையச் செய்துவிட்டாய். காரியம் எளிதாய் முடிந்தது." என்று கூறிக்கொண்டே என்னைச் சுட்டி "இந்த முண்டைச்சியைத் தான் நாம் கொண்டுபோக வேண்டியது"

என்று வசைமொழி சொல்லிப் பிறகு இந்தப் பார்சிக்காரியும் அவள் மகளும் நமக்கு வேண்டாம். இவ்விருவரையும் அவர்கள் இருப்பிடத்திற்கு அனுப்பி விடுவோம். ஆனாலும் இவர்கள் நடுவிலே விழித்துக் கொள்ளாதபடி இவர்கள் மூக்குகளிலும் அந்த மருந்தைப்பிடி" என்று உறுத்திச் சொன்னான். தமிழ் தெரியாத இந்த நாட்டில் இக்கள்வரிற் பலர் வேறு மொழிகளைப் பேசத், தமிழ்ப் பேசும் இவ்விருவர் மட்டும் வேறு யாராயிருக் கலாம் என்னும் ஓர் ஆராய்ச்சி நினைவு சோர்ந்துகிடந்த என் மூளையில் அப்போது உண்டாவதாயிற்று. அந்நேரத்தில் ஒருவன் ஏதோ ஒன்றை என் மூக்கிற் பிடித்தான். பிடித்ததும் யான் உணர்வற்றவளானேன். அதற்குப் பின் நடந்தது இன்னதென்று யான் அறியேன்.

மறுபடி நான் மயக்கம் நீங்கி உணர்வு பெற்றுக் கண்விழித்துப் பார்க்க ஒரு மலைக்குகையினுள்ளே யான் இருக்கக் கண்டேன். என்னைத் தவிர வேறு யாரும் அங்கே காணப்பட வில்லை. அந்தப் பாரசிக கனவானையும் என் தமையனையுங் காணேன். முதலில் யான் கனவுதான் காண்கிறேனோ என எண்ணினேன். பகலவன் வெளிச்சம் அக்குகையின் ஓர் இடுக்கின் வழியாய் நுழைந்து யான் இருந்த இடத்தின் இயல்பை எனக்கு விளங்கக் காட்டியது. என்னைச் சுற்றியுள்ள சுவர்களைத் தொட்டுப் பார்த்தேன். அவைகள் எல்லாம் வலிய கற்பாறை களினால் இயற்கையில் அமைந்தனவாயிருந்தன. இதனால் யான் காண்பது கனவன்று, நனவே எனத்தெளிந்தேன். நேற்றிரவு மின்னல் வீச்சுப்போல் அடுத்தடுத்துத் தோன்றிய திகிலான நிகழ்ச்சிகள் அவ்வளவும் ஒன்றன்பின் ஒன்றாய் என் நினைவுக்கு வந்தன. தாயினும் அருள் மிக்க அப்பாரசிகப் பெருமாட்டியார் எப்படியானார்! அவர் தம் மூத்தபெண் எவ்வாறானாள்! யான் இங்கே எப்படி வந்தேன்! என்று எண்ணலானேன். நேற்றிரவு எங்களை வந்து வழிமறித்தவர்கள் கள்வரானால் என் காதிலுங் கழுத்திலுங் கையிலும் இடுப்பிலுங் காலிலும் அணிந்திருந்த உயர்ந்த அணிகலங்களையெல்லாம் அவர்கள் கவர்ந்து கொள்ளாதது ஏன்? அவர்கள் நோக்கம் யாது! அவர்கள் என் வண்டியின் அருகில் வந்தபோது யான் அரைவாசி யுணர்வோ டிருந்தேன். ஆகையால் அவர்களில் இருவர் அப்போது தமிழிற்பேசிய சொற்கள் என் நினைவுக்கு வந்தன. 'இந்த

முண்டைச்சியைத் தான் நாம் கொண்டு போகவேண்டியது!" 'இந்தப் பார்சிக்காரியும் அவள் மகளும் நமக்கு வேண்டாம்" என்று அப்போது அவர்கள் சொல்லிய சொற்களை ஆராய்ந்து பார்க்கப் பார்க்க, 'என்னைக் கைம்பெண் என்று அவர்கள் எப்படியறிந்தார்கள்? இஃது ஏதோ பெரிய இரண்டகமாக இருக்கின்றதே!ஓ! நாங்கள் வண்டியில் ஏறும்போது அந்தச் சேது ராமன் என்பவன் பாரசிகப் பெருமானுடன் வந்து பேசி விரைவில் அவரைவிட்டுச் சென்றான்! அவன் இந்தக் கள்வர் கூட்டத்திற் சேர்ந்தவனாயிருக்கலாமோ! என்று பலவாறு எண்ணினேன். துயரமாவது துன்பமாவது அளவுக்கு மிஞ்சிப் போய்விட்டால், மன கலக்கமாவது கண்ணீராவது வருவதில்லையென்று பெரியோர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். எனது நிலைமையும் அப்போது அப்படியாகவே யிருந்தது. யாதுவரினும் வருக! ஏழை எளிய எனக்கு இறைவனே துணை! என்னும் ஒரு மனத்துணிவு வரப்பெற்றேன். அதன்பின், 'இங்கே இவ்வாறு எண்ணமிட்டுக் கொண்டிருப்பதிற் பயனில்லை. இந்த இடத்தை விட்டு வெளியே போக வழியுண்டா? என்று பார்க்கலாம்' என்னும் நினைவுகொண்டு எழுந்தேன். யான் அப்போதிருந்த இடம் அக்குகையின் ஒருபுறத்து மூலை, அகல நிகளத்திற் பத்தடி இடமுள்ளதாய் இருந்தது; இருபுறத்துச் சுவர்களும் மூலையாய்க் குவிந்து கூடிய இடத்தில் யான் எழுந்து நிற்க இயலாதபடி தலைக்குமேற் கூரைபோலிருந்த கற் பாறையுஞ் சரிவாய் வரவரத் தாழ்ந்திருந்தது. அம் மூலையிற் காணப்பட்ட சிறுபிளவினூடே தான் வெயில்வெளிச்சம் நுழைந்து தோன்றிற்று. அம்மூலையி லிருந்து இரு சுவர்களும் வரவர அகலும் பக்கத்தில் ஏறக்குறைய அதற்குப் பத்தடி எதிரே காட்டுமரப் பலகையடைப்பும், அதில் ஓா ஆள் ஊர்ந்து நுழையத்தக்க ஒரு சிறுவாயிலும், அதற்கொரு கதவும் இருந்தன. யான் அக் கதவண்டை சென்று அதனைத் திறக்க, அஃது எளிதில் திறந்தது. அதனூடு நகர்ந்து அப்புறஞ் சென்றேன். சென்று மெல்லென எழுந்துநின்றேன். அங்கும் மங்கலான வெளிச்சம் இருந்தது. அங்குள்ள மேற்கூரை உயரமாயிருந்தது. அவ்விடம் அகன்று அகல நிகளத்தில் நாற்பது ஐம்பதடி அளவுள்ளதாய் நேர்த்தியாய் இருந்தது அவ்விட மனிதர்களால் அமைக்கப்பட்ட தன்றுமலைகளின் இயற்கை யமைப்பின் னுள்ளேயே அஃது அவ்வளவு அழகாய் அமைந் திருந்தது. அதன் மேற் கூரையும் இயற்கைக் கற்பாறையாகவே

தான் இருந்தது. அக்கூரை வரவரச் சரிந்து கீழே நிலத்தில் வந்து கூடும் இடத்தில் மற்றும் ஒருசிறு கட்டிடங் காணப்பட்டது. அஃது யாதென்று காண அதனருகே சென்றேன். அது மனிதனாற் சமைக்கப்பட்ட கருங்கற் சுவர்கள் இருபுறத்தும் எதிரிலும் உள்ள தாயிருந்தது. எதிரேயுள்ள சுவரில் ஓர் ஆள் நின்றபடியாய்ச் செல்லத் தக்க ஒருவாயிலும், அதிற் பருத்த இரட்டைக் கதவுகளும் இருக்கக் கண்டேன். உற்று நோக்க அஃதொரு சிறு கோயிலாய்த் தோன்றியது. அதனைக் கண்டதுங் கடவுளையே நேரிற் கண்டாற் போல் மனக்கிளர்ச்சி கொண்டு அதன்கிட்டச் சென்று பார்த்தேன். இரண்டு கதவுகளும் நன்றாய் இறுகப் பூட்டப்பட்டிருந்தன. அக்கோயிலின் உள்ளே தண்ணீர் ஓயாமல் விழும் ஒலி கேட்டது. அதுகேட்டு வியப்புற்று உள்ளுள்ளதை நோக்க முயன்றேன். அக்கதவினிடையே காணப்பட்ட சாவித்தொளையினூடே பார்வையைச் செலுத்தினேன். உள்ளே விளக்கொன்று எரிந்தது. அழகிய காளி யம்மையின் கற்சிலை வடிவம் ஒன்று பிற்சுவரின் அருகே நிறுத்தப் பட்டிருந்தது. அதனைக் கண்டதும் மனங் கரைந்து தொழுதேன். உள்ளே மற்றொரு வியப்பான நிகழ்ச்சியுங் காணப்பட்டது. அம்மையின் முடிமேல் தண்ணீர் சொட்டுச் சொட்டாய் ஓயாமல் மேற்கூரையிலிருந்து வடிந்துகொண்டேயிருந்தது. அதனோடு அம்மையின் பின்புறத்தே தண்ணீர் குடத்தினின்று சாய்க்கப் பட்டாற்போல் ஓயாமல் மிகுதியாய் விழுந்து ஓடும் ஓசையுங் கேட்டது. அதற்கு மேல் அக்கோயிலின்உள்ளே ஒன்றுங் காணக் கூடவில்லை. அதனால், அம்மையை வணங்கிக்கொண்டு இப்புறந் திரும்பினேன். அதற்கு எதிரே ஒரு சிங்கத்தின் கற்சிலை வடிவம், அதற்கு முன்னே அகன்ற ஒரு வேள்விக் குண்டமும் இருந்தன. இவ் வடையாளங்களையெல்லாங் கண்டபின் அவ்விடம் ஒரு கோயிலே எனவும், எங்களைச் சிறைபிடித்து வந்த கள்வர்கள் தமது களவுத் தொழில் நன்கு நடைபெறல் வேண்டி வழிபடுங்காளி கோட்டமே அதுவெனவும் அதற்குள் யான் சிறையாக வைக்கப்பட்டிருக்கின்றே னெனவுந் தெளிவாக அறிந்து கொண்டேன். அவ்விடம் முற்றுஞ் சுற்றிப்பார்க்க எங்கும் அடைப்பாகவே இருந்தது. அக்கோயிலின் எதிரே ஐம்பதடி எட்டி இருபுறத்து மலையும் வரவரக் குறுகிக் கோணமாகும் இடத்தில் மற்றும் ஒரு சிறுவாயில் இருந்தது. அதன் ஊடு ஓர் ஆள் குனிந்துதான் செல்லல் வேண்டும். அவ்வாயிலுந் திணிந்த பலகைக்

கதவுகளாற் சாத்திப் பூட்டப்பட்டிருந்தது. அதனருகே சென்று எவரேனும் வெளியே இருந்தால் இந்த ஏழைச் சிறுபெண்மேல் இரக்கம்வைத்து இக்கதவுகளைத் திறந்துவிடுங்கள்!" என்று சொல்லி மன்றாடுங் குரலிற் பலகாற் கூவினேன். ஏதும் விடையில்லை. பின்னரும் பலகாற் கூப்பிட்டேன். ஏதோர் அரவமும் இல்லை. இரண்டுநாள் வண்டித் தொடரில் வந்தமை யாலும், முந்திய இரவிற் கள்வராற் பிடிபட்டு ஏதோர் உணவுமின்றித் திகிலால் மயங்கிக் கிடந்தமையாலும் மேலும் மேலுங் கூவியழைப்பதற்கு வலிவின்றிக்களைத்துப் பிறகு இரண்டுமணி நேரம் வரையிற் சும்மா இருந்துவிட்டேன். அவ்விரண்டுமணி நேரஞ் சென்றபின் அம்முன்வாயிற் கதவிற்றைத்த பூட்டினுள்ளே, ஒருபெருஞ் சாவி கரகரவென்று திருப்பும் ஓசை வந்தது. இப்போது கதவு திறக்கப் போகிறதென்று தெரிந்தேன். எத்தகைய கொடியோரை எந்த இரக்கமற்ற நிலையிற் காணப்போகிறேனோ என்று நேற்றிரவு போல் திரும்பப் பெருந்திகில் கொண்டேன். கதவுகள் படீரெனத் திறந்தன.

நீண்டு உயர்ந்து எலுமிச்சப்பழம் போன்ற நிறம் உடைய ஒரு பார்ப்பனக்கிழவர் கையிற் பூந்தட்டு ஏந்தியபடியாய் மெல்ல நடந்து உள் நுழையவும், அவர்க்குப் பின்னே சிறிது எட்டி இருபத்தைந்து வயதுள்ள ஒருமாதர் வரவுங் கண்டேன். என் நெஞ்சம் ஒருவாறு பதைப்பு நீங்கி அமைதியுற்றது. என்னைக் கண்டதும் அவர் திடுக்கும் வியப்பும் உற்றவராகி எனக்குத் தெரியாத ஒரு மொழியில் ஏதேதோ என்னைக் கேட்டார். எனக்குத் தமிழ்மொழி மட்டுந்தான் தெரியும், வேறுமொழி தெரியாதென்று தமிழிலேயே சொல்லிக் கையாலுங் குறிப்பித்தேன். அவர் தமிழ் தெரிந்தவர் போலத் தலையை அசைத்துக் கொண்டாரேயல்லாமல் வேறொன்றும் அப்போது என்னிடம் பேசவில்லை. ஆனால், அவர் தமக்குப் பின் வந்த மாதரைப் பார்த்து ஏதேதோ சொல்ல உடனே அவள் என்னைத் தன் பின்னே வரும்படி கைகாட்டி அழைத்தாள். அவள் முன் செல்ல யான் அவள்பின்னே சொல்லலானேன். என்னைச் சிறையிட்ட குகை வாயிலின் முன்னே திறப்பான வெளியில்லை. அவ்வாயிலின் வெளியேயுங் குறுகலான வழியே சென்றது. மேலுங் கீழும் இரு பக்கத்துமெல்லாம் மலைகளே. வழியானது பாம்பு நெளிபோல் வளைந்து வளைந்து சென்றது; சில இடங்களில் எறியும் வேறு சில இடங்களில் இறங்கியுஞ்

செல்லவேண்டியதாயிற்று; சில இடங்களில் தாழக் குனிந்து செல்லவேண்டுவ தாயிற்று. இவ்வாறாக ஒருமணி நேரம் வரையில் நடந்து கடைசியாக ஒரு திறந்த வெளியில் வந்து சேர்ந்தோம். கூடவந்த அப்பெண் பிள்ளை என்காலைக் கடன்களை முடிக்கும்படி குறிப்பித்தாள். அப்போது காலை ஏழுமணி இருக்கும். இப்போது யான் வந்து சேர்ந்த இடத்தில் பெரியபெரிய ஆலமரங்களும் அரசமரங்களும் ஓங்கி வளர்ந்திருந்தன. இந்த அகன்ற வெளியிடமும் மலைமேற்றான் அமைந்திருந்தது. இதனை அடுத்துள்ள மூன்று பக்கங்களிலும் மலைத் தொடர்கள் ஓங்கி வானத்தை அளாவின. இதன் ஒரு புறத்தின் ஓரமாயச் சென்று நோக்கக் கீழேயும் பெரிய பெரிய மலைத் தொடர்புகள் காணப்பட்டன. அதனால் மக்கள் உறையும் நிலத்திற்கு எவ்வளவு உயரத்தில் நான் இருக்கின்றேனென்பதே என்னால் அறியக்கூடவில்லை. மக்களுறையும் நாடு நகரங் களுக்குச் செல்லும் வழி துறைகளும் எனக்குத் தெரியவில்லை. எந்தப்பக்கம் பார்த்தாலும் மலைகளும் மலங் காடுகளுமே காணப்பட்டன. அவ்வளவு செழுமையான பசிய காடுகளையும், உயர்ந்த மலைக் குவடுகளையும், அடுக்கடுக்காய் உள்ள மலைத் தொடர்புகளையும் இதற்குமுன் யான் எங்குமே பார்த்ததில்லை. வழிதுறை தெரியாத இம்மலைத் தொடர்புகளின் ஊடே சிறைப்படுத்தப்பட்டிருக்கும் யான் திரும்ப இவ்விடத்தைவிட்டு அகன்று மக்களிருக்கும் நாடு நகரங்களை எவ்வாறு காணப் போகிறேன்! என்பதை நினைக்கவே என் கண்களினின்றும் நீர் முத்து முத்தாய்த் துளித்தது. கூடவந்த அப்பெண்பிள்ளை என்மேல் இரக்கக் குறிப்புக்காட்டி என்னை அழவேண்டா மென்று கை அசைத்தாள். அந்தப் பாரசிக கனவானையும் என் தமையனையும் பற்றிக் குறிகாட்டிக் கேட்டேன். அதற்கவள் ஏதும் விடை தெரிவியாமற் சும்மா இருந்துவிட்டாள். அதன்மே யான் அவளை ஒன்றுங்கேளாமல் அவளைவிட்டு அப்பாற் சென்றேன். அவள் ஓர் ஆலமரத்தின் நீழலிற் கற்பாறை ஒன்றன்மேல் லிருந்தாள். அவள் தன்கையிற் கொண்டுவந்த ஒரு சிறு பிரப்பம் பெட்டியைத் திறந்து யான் தலைமுழுகியபின் உடுத்துக் கொள்வதற்காகச் சிலபுதிய பட்டாடைகளை எடுத்துத் தாழ்ந்திருந்த ஒருமரக்கிளைமேல் வைத்தாள். எங்களிருவரைத் தவிர வேறு ஆள் நடமாட்டம் அங்கே சிறிதுங் காணப்பட வில்லை. எனது நிலைமையை நினைந்து இடைக்கிடையே

நெட்டுயிர்ப்பெறிந்து, ‘இறைவன் எவ்வழி விடுகிறான் பார்க்கலாம்’ என்னும் ஒருமனத்தேர்ச்சியோடு யான் செல்ல அருகில் மேலிருந்து கீழ்விழுந்தோடும் ஒரு நீர் வீழ்ச்சியைக் கண்டேன். அந்த நீர்விழும் இடத்தில் இடுப்பளவு ஆழமுள்ள ஒருசிறு குட்டையும், அஃது அங்கிருந்து அருவியாய் இறங்கு மிடத்திற் கணைக்கால் முழங்கால் ஆழமுமே இருந்தது. அதில் இறங்கித் தலைமுழுகி எழுந்தபின் அந்தப் பெண்பிள்ளை யான் உடுத்துக் கொள்வதற்காக எடுத்துவைத்த பட்டாடைகளைக் கொண்டுவந்து நீட்டினாள். பிறர்க்குரியவற்றை யான் உடுக்கலாகாது, எனக்கு அவை வேண்டாம்’ என்றேன். இல்லை, உனக்குரிய பெட்டியைத்திறந்து அதிலிருந்து எடுத்த உன்னுடைய ஆடைகளே இவை’ என்னுங் குறிப்புத் தோன்றக் கையை’ அசைத்தாள். அதன்மேல், அவைகளை யான் உற்றுநோக்க அவைகள் சென்னையிலிருந்து யான் கொண்டுவந்தனவாகவே காணப் பட்டன. அதன்மேல் அவற்றை உடுத்துக் கொண்டு ஈரப் புடவையை துவைத்து உலர்த்தி எடுத்துக்கொண்டேன். திரும்ப அவள் என்னை முன்வந்த வழியாகவே அழைத்துக் கொண்டு வந்து, யான் முன்னிருந்த காளிகோட்டத்தில் விட்டுப் போனாள்.

யான் வெளியே செல்லுமாறு கதவைத் திறந்துவிட்ட அந்தப் பார்ப்பனக்கிழவர் அந்தக் காளிகோயிலைத் திறந்து அம்மையின் திருவுருவத்திற்கு உயர்ந்த நிறமும் மணமும் வாய்ந்த மலர்களணிந்து அகில் புகைத்து அம்மலைநாடுகளில் விளைந்த பலவகைத் தீவிய பழங்களும் நெய்யடிசிலும் வைத்துப் பூசனை புரிந்து சௌந்தரிய லகரியிலிருந்து வடமொழிச் சுலோகங்களைக் கூறி அம்மையை வழுத்தினார். அப்போது யான் ஆற்றாமைமிகப் பெற்று, யானும் அந்தப் பராசிககனவானும் என் தமையனும் அடைந்த துயரத்தை எடுத்துச் சொல்லி முறையிட்டு உளம்நைந்து அழுதபடியாய் நின்றேன். அவர் வழுத்துரைகூறி முடிந்தபின் கர்ப்பூரங் கொளுத்தி காட்டிப் பின் எனக்குத் திருநீறுங் குங்குமமுங் கொடுத்தார். அதன்பின் என்னைக்கோயிலுக்கு வெளியே வரச்செய்து, ஒரு புறத்தே ஒரு தேக்கிலையை விரித்துப் பூசைக்குவைத்த பழங்களிற் சிலவும் நெய்யடிசில் ஒரு பகுதியும் வைத்து அவற்றை உண்ணும் படி எனக்குக் குறிப்பிட்டார். அம்மைக்குப் படைத்ததாகையினால் ஒரு புளியங்கொட்டை யளவுமட்டும நெய்யடிசில் எடுத்துக் கொண்டு மிச்சத்தை உண்ணமாட்டேன் என்றேன். அஃது ஏன்? என்று கை

அசைத்துக்கேட்டார். என் கூடவந்த ஆண்பாலார் இருவரும் என்னைப் போலவே சிறை செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய நிலைமை இன்னதென்று அறிந்தாலல்லாமல், யான் உணவு எடுக்கமாட்டேன். பட்டினிகிடந்து உயிரைத் துறப்பதற்கே தீர்மானித்திருக்கின்றேன் என்று குறிப்பிட்டேன். சிறிது நேரம் சும்மா இருந்து பிறகு "அம்மா, உன்னுடன் வந்தவர்களைச் சிறைப் படுத்தியிருந்தாலும், அவர்களுக்கு வேண்டிய சௌகரியங் களெல்லாஞ் செய்திருக்கின்றோம். அதற்காக நீ கவலைப்பட வேண்டாம். நீ இவற்றை உணவாகக் கொள்" என்று செவ்வையான தமிழில் இனிமையாகப் பேசினார்.

இவருக்குத் தமிழ் தெரியாதென்றும், இவர் வடநாட்டுப் பார்ப்பனரென்றும் இதுவரையில் நினைத்துவந்த யான் இவர் நம் தாய்மொழியிற் பேசக் கேட்டவுடனே வழுக்கி விழுவோனுக்கு ஓர் ஊன்றுகோல் கிடைத்தாற்போல் ஒருவகையான ஆறுதலும் உவகையுங் கொள்ளப்பெற்றேன். இவருடைய முதுமைப் பருவமும் வடிவத்தின் அமைதியும் இனிமையான பேச்சும் இவர்பால் எனக்கு அன்புவரச் செய்தன. அதனாற் சிறிது கிளர்ச்சியும் இவரிடத்திற் பற்றும் வைத்து இவருடன் நெருங்கிய பழக்கம் உடையவள் போற் பேசலானேன்.

"பாட்டா, நீங்கள் யார்? இந்த மலைநாடும் இந்த இடமும் பம்பாய்க்கு எவ்வளவு தொலைவில் இருக்கின்றன? என்னையும் என்னுடன் வந்த மற்றிரண்டு ஆடவரையும் வழிமறித்துச் சிறையாகப் பிடித்து வந்தவர்கள் யார்? அவர்களுடைய செயலையும் உங்களுடைய செயலையும் ஒப்பிட்டுப்பார்த்தால் இருளையும் ஒளியையும் இரும்பையும் பொன்னையும் ஒப்பாகக் காண்பது போல் இருக்கின்றதே! அப்படியிருக்க நீங்கள் அவர்களோடு தொடர்புடையவர்கள் போற் காணப்படுவது எனக்குப் பெரிதும் வியப்பாய் இருக்கின்றதே! என்னையும் மற்றிருவரையும் இங்கே கொண்டுவந்து சிறைப்படுத்தியிருப்பது எந்த நோக்கம்பற்றி? இவைகளை ஏழையேன்மீது மனமிரங்கித் தெரிவித்தருளுதல் வேண்டும்" என்று அவரை வணங்கிக் கேட்டேன்.

அதற்கவர் "குழந்தே, நீ களைப்பாய் இருக்கிறாய், ஆகையால் நீ முந்தி இவைகளை அருந்துவாயானால் பிறகு இவ்விவரங்களைத் உனக்குத் தெரிவிப்பேன்" என்றார்.

“பாட்டா, இவ்விவரங்களைத் தெரியாமல், இந்த உணவெடுக்க என் மனஞ்சிறிதும் இசையாது. ஆதலால், அருள் கூர்ந்து இவற்றைத் தெரிவித்தல் வேண்டும். மேலும், என்னையும் மற்றிருவரையும் பிடித்து வந்தவர்கள் திரும்பவும் எங்களை எமது இருப்பிடத்திற் கொண்டுபோய்விட மனம் உடையவர்களா? இல்லையா?” என்று கெஞ்சிக்கேட்டேன்.

“குழந்தாய், சில ஏற்பாடுகளுக்கு இணங்கினால் உன்னையும் உன் தமையனையும் அந்தப் பாரசிகக்காரரையும் அவரவர் இருப்பி டங்களுக்கு அனுப்பிவிடும் நோக்கமேயிருக்கின்றது. நல்லது, இந்த உணவைச்சாப்பிடு, பிறகு எல்லா விவரமுந் தெரிவித்துவிட்டு அப்புறஞ் செல்கின்றேன். அதைப்பற்றி நீ ஐயுறவேண்டாம்’” என்று மிகுந்த அன்போடும் அருளோடு ங்கூறினார்.

இவரது முகத்தைப் பார்க்கும்போதும், இவர் பேசுகையில் இவரது முகத்தில் உண்டாகும் இனிய குறிப்புகளை உற்றுநோக்கும் போதும் என் அன்னையினுஞ் சிறந்த அந்தப் பாரசிகப் பெரு மாட்டியாரின் நினைவே வந்தது. அந்தப் பெருமாட்டியாரின் முக அமைப்புஞ் சாயலுங் குறிப்பும் இவர் முகத்திலும் அப்படியே காணப்பட்டன. அதனால், இவரிடத்தில் வரவர எனக்கு அன்பு மிகலாயிற்று. எங்கட்குவந்த இடர் இவரால் தீரும் என்னும் ஒரு நம்பிக்கையும் என்னுள்ளத்தில் தோன்றிற்று. ஆகவே, இவரது சொல்லைத் தட்டாமற் சிறிது உணவெடுக்க என்மனம் இப்போ திசைந்தது. அங்கு அவர் வைத்த ஒரு செம்பின்றண்ணீரால் கையை கழுவிக்கொண்டு அப்பழங்களிற் சிலவும் அந்நெய்யடிசிலிற் சிறிதும் எடுத்து அயின்றேன். அவை உள்ளபடியே மிக இனியனவாயிருந் தாலும், என் உள்ள மெல்லாம் அவர் கூறப்போகும் விவரங்களைத் தெரிவதிலும், அந்தப் பாரசிகப் பெருமானும் யானும் விடுதலைப் பெற்றுத் திரும்ப எனதிருப்பிடஞ் சேர்வோம் என்னும் நம்பிக்கையிலும் அழுந்தி நின்றன. அதனால் அத்தீஞ்சுவைப் பண்டங்களின் சுவை வேறுபாடுகளை யான் கூர்ந்தறியவில்லை. பிறகு, தீவிய மலையருவி நீரைக் குடித்துவிட்டு “வாய் பூசிக் கைகழுவுதற்கு இடம் ஏது?” எனக் கேட்டேன். அவர் அக் கோயிலின் உள்ளே என்னை அழைத்துச்சென்று அம்மையின் திருவுருவத்திற்கு

பின்னே மேற்கூரைபோற் கவிந்து சரிந்திருக்கும் மலைப்பாறை பிளவு ஒன்றிலிருந்து குமுகுமுவென்று ஏராளமான நீர் ஓயாமற் பெருகிக் கீழ்விழும் இடத்தில் என்னைவிட்டார். அந்த நீர் விழும் இடத்தில் ஐந்தாறு அடி குறுக்களவு உள்ள வட்டமான ஒரு சிறு குட்டையிருந்தது. அதில் வந்து விழும் நீர் நிறைந்து அம்மலைப்பாறையின் கீழே மற்றொரு பிளவினூடு ஒருசிறு காலாய்ச் செல்லக்கண்டேன். அஃது எங்கே எவ்வளவு தொலைவிற் செல்கின்ற தென்பது தெரியாமையால், வாய் பூசிக் கைகழுவியபின் அந்த நீர்க்காலினைச் சுட்டிக்காட்டிப் "பாட்டா, இந்த அருவிக்கால் இந்த மலைப்பிளவினூடே எவ்வளவு தொலைவு போய் முடிகின்றது?" என்று கேட்டேன்.

அவர் 'அம்மா, ஈசுவரனது அற்புத சிருஷ்டியால் மேலே யிருந்து விழும் இவ்வருவி நீரும், இந்தச் சிற்றருவிக்காலும் இங்கே அமைந்திருக்கின்றன. இதன் தண்ணீர் இந்த மலைப்பிளப்பின் வழியாய் எங்கே எவ்வளவு தொலைவிற் போய் எப்படி முடிகிற தென்பது இங்கே எவர்க்குந் தெரியாது. நாங்கள் இங்கே வருகிறதற்கு முன்னேதொட்டு இந்த அமைப்பு இப்படியே தான் இருக்கின்றது. விழுந்தோடும் இந்த நீர் எந்தக் காலத்திலுங் குறைகிறதில்லை. இந்தக் காளிகாதேவி கோயிலும் இந்த இடத்தில் முன்னதாகவே இருக்கின்றது" என்றார்.

இதற்குள் அவரும் யானும் அந்தக் கோயிலுக்கு வெளியே வந்து அம்மையின் திருவுருவத்திற்கு நேரேயுள்ள வேள்விக் குண்டத் தண்டை உட்கார்ந்தோம். அப்போது காலை பத்துமணியிருக்கும். மேற் கூரையாயுள்ள பாறையின் ஓர் இடுக்கிலிருந்து வெயில் வெளிச்சம் ஒரு சரிவாய்க் காணப் பட்டதேயல்லாமல், எவ்வளவு அதனூடு நோக்கினாலும் அதற்கு வெளியே மேலுள்ள வானம் ஒரு சிறிதும் புலப்பட வில்லை. அம்மையின் திருவுருவத் திற்குப் பின்னேயிருந்து குளிர்ந்த ஈரக்காற்றும் மெல்லென வந்து கொண்டேயிருந்தது. யானும் என்னைச் சேர்ந்தவர்களுங்கள் வராற் பற்றப்பட்டு இவ்வளவு துன்பத்தை அடையாதபடி, யான் துயரமற்ற நிலையில் இவ்விடத்திற்கு வந்திருந்தேனானால் இதனுள்ளேயே எந்நாளும் இருந்து காலங்கழிக்க மனம்விரும்பி யிருப்பேன். யாங்கள் அங்கே இருந்தவுடனே அந்தக்கிழவனார் பின்வருமாறு பேசலானார்.

"அம்மா குழந்தே; நாங்கள் இந்த இடத்திற்கு வந்துபதினெட்டுப் பத்தொன்பது வருஷம் ஆகிறது. இங்கே வருவதற்கு முன் நாங்கள் தெற்கே தமிழ் நாட்டில் இருந்தவர்களே. வறுமையினாலும் உறவினராலும் அடைந்த துன்பம் பொறுக்க மாட்டாமல் நாங்கள் இந்த இடத்திற்கு வரநேர்ந்தது. இந்த மலை நாடு பம்பாய்க்கு இருபது முப்பது மைல் தூரத்தில் உள்ளது. இதில் வசித்துவந்தவன் ஒரு பெரிய கொள்ளைக் கூட்டத்திற்குத் தலைவன் அவன் இந்தக் கொள்ளைக் கூட்டத்தில் இல்லாமல், வேறு நல்லோர் சேர்க்கையில் இருந்திருப்பானானால் ஒரு தேசத்திற்கு அரசனாய் வரத்தக்க யோக்யதையுள்ளவன். ஏழை எளியவர்களிடத்து இரக்கம் மிகுந்து அவர்களுக்குத் தன்னால் ஆன உதவியெல்லாஞ் செய்து வந்தவன். வியாபாரம் உத்தியோகம் முதலான தொழில்களைச் செய்து பணஞ் சம்பாதிக்கிறவர்கள் போல் வெளிக்குக் காட்டி, ஏழை எளியவர்களின் பொருளைப் பகற் கொள்ளையிட்டுப் பணஞ் சேர்த்து வைத்துக்கொண்டு இரக்கமின்றிச் சுகமாய்க் காலங் கழிக்கும் பிரபுக்கள் வீட்டுகளில் நுழைந்து இரவிற் கொள்ளையிடு வதுதான் அவனுக்கு வழக்கம். இந்தப் பிரதேசம் முதல் தெற்கே கன்னியாகுமரி வரையில் அவன் போகாத இடமில்லை. அவனையும் அவனைச் சேர்ந்த கூட்டத்தாரையுங் கண்டுபிடித்துச் சிறையிடுவதற்காக ராஜாங்கத்தார் எவ்வளவோ முயன்று பார்த்தும் அது முடியவில்லை. அவ்வளவு தந்திரமும் எப்படிப்பட்ட ஆபத்தையும் விலக்கிச்செல்லும் சக்தியும் அவனிடங் குடி கொண்டிருந்தன. எனக்கு ஒரே ஒரு மகன் உண்டு. அவனுக்கும் அந்தக் கள்வர் தலைவனுக்குஞ் சென்னப் பட்டணத்தில் நேசம் உண்டாயிற்று. எங்கள் பரிதாபமான நிலைமையைத் தெரிந்து என் மகனையும் என் மனைவியையும் என்னையும் இந்த இடத்திற்கு அழைத்து வந்து எங்களுக்கு ஏதொரு துன்பமுங் கவலையும் இல்லாதபடி எங்களைப் பதினைந்து வருஷங்கள் வரையிற் பாதுகாத்து வந்தான், மூன்று வருஷங்களுக்கு முன்னே தான் அவன் காலமானான், காலமானாலும் எங்கள் பிழைப்பிற்கு வேண்டிய சொத்த வைத்துவிட்டுப் போனான்! அவனுடைய உதாரத்துவத்திற்கும் இரக்ககுணத்திற்கும் நாங்கள் எவ்வாறு கைம்மாறு செலுத்தப் போகின்றோம்! அது நிற்கட்டும், நி ஒரு பிராமணப்பெண்ணாமே? சிறு வயதிலேயே அமங்கலியாய்ப் போய்விட்டாயாமே?

மறுபடியும் நீ ஒரு சூத்திரப் பையனைக் கல்யாணஞ் செய்து கொள்வதற்குத்தன் பம்பாய்க்கு வந்தாயாமே?" என்று தமது வரலாறு கூறியபின், யான் திடுக்கிடும்படியாக இந்தக் கேள்வி களைக் கேட்டார்,

அவைகளைக் கேட்ட நான் சிறிதுநேரம் மனக்கலக்கம் உற்றுப் "பாட்டா, நீங்கள் என்னைக் கேட்டவைக ளெல்லாம் உண்மைதான். யான் சிறு குழந்தையா யிருக்கும்போது என்னை நாற்பத்தைந்து வயதுள்ள ஒருவருக்கு மணம் முடித்தார்கள்; மணம் முடித்த அந்த ஆண்டிலேயே கணவனாக ஏற்படுத்தப் பட்டவர் இறந்துபோனார்; அவரை இரண்டொருமுறைதான் நான் பார்த்ததாகச் சிறிது நினைவிருக்கின்றது, மனைவியானவள் கணவனைப்பார்த்து அன்பு பாராட்டத்தக்க நிலைமையில் யான் இல்லாமையாலும், அப்போது அவர் என் தந்தையைவிட வயதில் மூத்தவராயும் வடிவத்தில் பெருத்தவராயும் விகாரமாய் இருந்தமையாலுஞ் சிறு குழந்தையா யிருந்த என் கண்களால் அவரைப்பார்த்த இரண்டொரு முறையும் அச்சங்கொண் டோடினேன். அக்காலத்தில் யான் பள்ளிக்கூடத்திற் படித்துக்கொண்டிருந்தேன், எங்களுக்கு அடுத்த அகத்திலுள்ள ஒரு முதலிப் பையனும் என்னோடுகூடப் படித்துக்கொண் டிருந்தான், அந்தப் பையனுக்கும் எனக்குஞ் சிறுபருவம் முதலே மிகுந்த அன்பான நேசம் உண்டாயிற்று. அந்தப் பையன் வளர்ந்து ஏறக் குறைய எனக்குமேல் மூன்று நான்கு வயது மூத்தவரா யிருக்கின்றார். அவருக்கும் எனக்கம் உண்டான நேசத்தைப் பார்த்து என் பெற்றோர்கள் என்னை என் மாமனார் வீட்டுக்கு அனுப்பி விட்டார்கள், என் மாமனார் இரக்கமும் உயர்ந்த அறிவுங் கல்வியும் உடையவராகையால் எனக்கும் என் தமையனுக்கும் வேண்டிய அளவு சொத்து எழுதிவைத்து, என்னை நான் காதலித்த இளைஞருக்கே மணஞ் செய்து கொடுக்கும்படி என் தமையனிடமும், என் தமையனோடு இந்த மலைகளினிடையே சிறையிடப் பட்டிருக்கும் பாரசிகக் கனவானிடமுஞ் சொல்லி இறந்துபோனார்!" என்று எல்லாம் எடுத்து விரிவாகச் சொன்னேன்.

"குழந்தாய் உன்னுடைய நிலைமையைத் தெரிந்து மிகவும் வருத்தப்படுகிறேன். நம்மவர்கள் பிழையான ஏற்பாடுகளைச் செய்து விட்டுப் பிறகு தாமும் அவ்வேற்பாட்டில் அகப்பட்ட

வர்களுஞ் சொல்லவொண்ணாத் துன்பம் உறுகிறார்கள். பார்ப்பாரச் சாதியிற் பிறந்த நம்மவர்களுக்குப் பொதுவாக இரக்கமும் அன்பும் பின்வருவதை முன் ஆராயத் தக்க அறிவும் இல்லை. அந்த நேரத்தில் தமக்கு எது லாபமோ அதை முன்பின் ஆராயாமற் செய்துவிடுவார்கள். தமது லாபத்திற்காகப் பிறரை எவ்வளவு துன்பத்திற்கும் உள்ளாக்குவார்கள்! அறக் கொடியர்கள்! நானும் என் குடும்பத்தாரும் நம்மவராற் பட்ட துன்பத்திற்கு அளவேயில்லை! நீ புனர்விவாகஞ் செய்துகொள்வதைப் பற்றி எனக்கு ஆட்சேபனை இல்லை. வேத உபநிஷத காலங்களிற் பெண்பாலாரில் எத்தனையோ பெயர் புனர்விவாகஞ் செய்திருக்கிறார்கள். அது சான்றோரால் அங்கீகரிக்கப் பட்டிருக்கின்றது. ஆனாலும், நீ நம்முடைய சாதியைவிட்டுத் தாழ்ந்த சூத்திர சாதியில் ஒருவனைக் கல்யாணஞ் செய்வதுதான் என் மனத்திற்குப் பிடிக்கவில்லை.'' என்றார்.

“ஐயோ! இவர் சாதி வேற்றுமை பார்க்கின்றாரே! இவருடைய தன்மைகளெல்லாம் உயர்ந்தவைகளா யிருந்தும், இவருக்குச் சாதிப்பற்று மட்டும் விலகவில்லையே! இவருக்கு எப்படி விடை சொல்வது! நான் சொல்லும் விடையால் இவர் என் மேல் வருத்தங் கொண்டு என்னைப் பகைப்பாரானால், யானும் என்னைச் சேர்ந்தவர்களும் இவ் விடத்தைவிட்டுத் தப்பிச் செல்வதற்கு ஒருசிறு வழியும் இல்லாமற் போமே! என் செய்வேன் தெய்வமே!'' என்று சிறிதுநேரம் அச்சமும் மனக் கலக்கமுங் கொண்டு வாய் பேசாதிருந்தேன்.

எனது முகவாட்டத்தைப்பார்த்து அவர் திரும்பவுங் “குழந்தாய், நான் சொன்னதற்காக நீ மனவருத்தப்படாதே. உன் மனசிலிருப்பதைத் தைரியமாய்ச் சொல்.'' என்றார்.

“பாட்டா. என் மனத்திலுள்ளதைத் திறந்து சொல்வதற்காகத் தாங்கள் வருந்தாதிருக்கும்படி தங்களை மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன். நானோ ஏழைச் சிறுமி, ஒன்றும் அறியாதவள், யான் சொல்வது பிழையா யிருந்தாலும் அதனைத் தாங்கள் பொறுத்தருளல் வேண்டும். தாங்கள் சொல்வதிலிருந்தே நம் பார்ப்பனக் குலத்திலுள்ளவர்களிற் பெரும்பாலார் மிகக் கொடியரும், இரக்கமும் அன்பும் ஆராய்ச்சி அறிவும் இல்லாதவருந், தமது நலத்தையே பார்ப்பவரும் ஆவரென்பது நன்கு புலப்படுகின்றது. இவ்வளவு இழிந்த

இயல்புகள் உள்ளவர்களை மேற்குலத்தவ ரென்றும், மெல்லிய தன்மையும் இரக்கமும் அன்பும் உதவியும் ஆராய்ச்சியறிவும் பொதுநல நோக்கமும் உடைய மற்றையோரைக் கீழ்க்குலத்த ரென்றும் நாம் சொல்லிக்கொள்வது எனக்கு விளங்கவில்லை. ஆதலால், மற்றைக் குலத்தில் உயர்ந்த இயல்புகள் எல்லாம் அமைந்த ஒருவரைச், சிறுபருவம் முதலே என்னால் அன்புபாராட்டடப்பட்ட ஓர் இளைஞரை நான் மணந்து கொள்வதில் ஏதுங் குற்றம் இருப்பதாக எனக்குத் தோன்ற வில்லையே." என்றேன்.

"அம்மா, நீ சொல்வது உண்மையாய் இருந்தாலும், பார்ப்பாரக்குலம் என்னும் பெயர் வாய்ந்தவர்கள் அந்தக் குலத்தினுள்ளேயே மணஞ்செய்து கொள்வது வழக்கமாய் வந்துவிட்டது, ஆயினும், நான் ஒன்று சொல்லுகிறேன். எனக்கு ஒரே ஒரு மகன் இருக்கின்றான். அவன் அழகிலும் நல்ல குணத்திலுஞ் சிறந்தவன். அவனுக்கு இன்னுங் கல்யாணம் ஆகவில்லை. அவன் பல வருஷங்களாய்த் தனக்கு இசைந்த ஒரு பெண்ணைத் தேடி வருகின்றான். உன்னைப்பற்றிக் கேள்விப் பட்டது முதல் அவன் உன்னையே மணஞ் செய்துகொள்ள வேண்டுமென்னும் விருப்பங் கொண்டு, அதற்கேற்ற சமயம் பார்த்திருந்தான். நீ பம்பாய்க்கு வருவதைக் கேள்விப்பட்டு இங்கே உன்னைக் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளெல்லாம் முன்னமே செய்திருந்தான். மற்று நீ இங்கே கொண்டு வரப்பட்ட வகைகள் எல்லாம் நீயே அறிந்திருக்கின்றாய்." என்றார்.

"ஆம், நன்றாய் அறிவேன். கத்தியுந் துப்பாக்கியுங்கொண்டு கொலைக்கஞ்சாத வன்னெஞ்சக் கள்வர்களால் யானும் என்னைச் சேர்ந்தவர்களும் வலிந்து கொண்டுவரப்பட்டோம். மெல்லிய நெஞ்சமுடைய ஒரு பெண்ணை மணந்து கொள்வதற்கு இது தானா வழி உங்கள் மகன் கொடியதொரு கள்வர் கூட்டத்தைச் சேர்ந்தவராக வன்றோ காணப்படுகின்றார்! இப்படிப் பட்ட கொடுஞ் செயலுங் கொடுந் தன்மையும் உடைய ஒருவரை ஏழைப் பெண்ணாகிய நான் மணந்துகொள்வது எப்படி? மணம் என்பது தெய்வத்தன்மை வாய்ந்ததன்றோ? அதனைச் செய்து கொண்டு கணவனும் மனைவியுமாய் வாழ விரும்புவோர் ஒருவர் உள்ளத்தை மற்றவர் அறிந்து உயர்ந்த காதல் அன்பால் இருவர் உயிரும் ஓர் உயிராய்ப் பிணைக்கப்பட்ட பின்னன்றோ

மணஞ்செய்து வாழ முயல வேண்டும், மேலும் என்னை மணங்கொள்ள விரும்பினவர் என்னை மட்டுமன்றோ இங்கே கொண்டு வந்திருக்கவேண்டும்? என் தமையனையும் அவனுட னிருந்த வேறொரு பாரசிக கனவானையும் ஏன் இங்கே கொண்டு வந்து சிறையில் அடைக்க வேண்டும்? இவர்களுடைய செய்கைகளை நன்றாய் ஆராய்ந்து பார்க்கையில், முதலில் எங்களைப் பிடித்து வந்தபோது ஒரு நோக்கமும் ஏழைச் சிறுமியாகிய என்னைப் பார்த்த பிறகு கூட ஒரு நோக்கமுங் கொண்டவர்களாகவன்றோ காணப்படுகின்றனர்? ஏதொரு வலிவுமில்லாத ஒரு பேதைப் பெண் தமது கையிற் சிக்கிக் கொண்டமையால் அவளைத் தாம் விரும்பியபடி யெல்லாஞ் செய்துகொள்ளலா மென்னுந் தீய எண்ணமே அவர் மனத்திற் குடிகொண் டிருக்கின்றதென அறிகின்றேன். தாதா, உங்களுடைய அமைதியான வடிவத்தையும் இனிய குணத்தையும் உயர்ந்த அறிவையும் நான் எண்ணிப் பார்க்கப்பார்க்க இப்படிப்பட்ட தங்கட்குக் கொடிய கள்வர் ஒருவர் மகனாய்ப் பிறந்ததும், அவருடைய நோக்கப்படி யெல்லாந் தாங்கள் இசைந்து நடப்பதும் எனக்குப் பெரியதொரு வியப்பைத் தருகின்றன. யான் வலிவற்ற ஏழைப்பெண்ணாய் இப்போது கொடிய கள்வர்கையிற் சிக்கிக் கொண்டாலும், அவர்கள் எண்ணப்படி நடப்பேன் என்று கனவிலும் நினைக்க வேண்டாம். என்னுடைய உயிரும் உடலும் நினைவும் அன்பும் எல்லாம் ஒருவருக்கு முன்னமே கொடுக்கப் பட்டன; இனித் திரும்ப அவற்றை மற்றொருவர்க்குக் கொடுக்கப் போவது கனவிலும் இல்லை. தங்கள் மகனுடைய தீய நோக்கங்களுக்கு இசையாமல் தாங்கள் என்னையும் என்னுடன் வந்தவர்களையும் இக் கொடுஞ் சிறையினின்றும் விடுவித்து எங்களை எங்கள் இருப்பிடம் போக விடுவீர்களானால், தங்களுக்கு இம்மையிலும் மறுமையிலும் பெரும் புண்ணியமாகும். ஏழையேனும் என்னைச் சேர்ந்தவர்களுந் தாங்கள் செய்த நன்றியை எழுமையும் மறவோம்!" என்று வற்புறுத்தியும் அஞ்சாமலும் மன்றாடியுஞ் சொன்னேன்.

யான் சொல்லியவைகளைக் கேட்டுச் சிறிதுநேரம் ஆழ்ந்த நினைவிலிருந்த அப் பார்ப்பனப் பெரியவர் பிறகு "குழந்தாய், உன்னுடைய நுண்ணறிவை நான் மிகுதியும் பாராட்டுகின்றேன். நான் முன்னமே தெரிவித்தபடி எங்களுடைய வறுமையும்

உறவினர்களாற் பட்ட துன்பமுமே நாங்கள் கள்வர்களுடன் நேசங் கொள்வதற்குக் காரணமாய் இருந்தன. என் மகன் நீ சொல்லுகிறபடி அவ்வளவு கெட்டவன் அல்லன். ஏனென்றால், எங்களை இங்கே கொண்டு வந்த கள்வர் தலைவன் கெட்டவனுங் கொலைகாரனும் அல்லன். தன்னுயிர்க்கு ஆபத்து வருவதா யிருந்தால் மட்டுந் தனது துப்பாக்கியையுங் கத்தியையும் உபயோகிப்பான். பகற்கொள்ளைக் காரரான உத்தியோகஸ் தர்களும் வியாபாரிகளுஞ் சேர்த்துவைக்கும் பணத்தைக்கவர்ந்து ஏழை எளியவர்களுக்குப் பயன்படுத்துங் கள்வனே தான் என்று அவன் தன்னைப் பற்றி என்னிடம் பலகாற் சொல்லியிருப்பதோடு, அவன் ஒவ்வொரு நகரங்களிற் போய் ஒவ்வொரு பெயர் வைத்துக்கொண்டு சிலநாட்களோ சில மாதங்களோ தங்கியிருந்து அங்கங்குள்ள கல்விச்சாலைகளுக்கும் அறச்சாலை களுக்கும் மடங்களுக்கும் ஏராளமாகப் பொருளுதவி செய்து தான் சொல்லியதைச் செய்கையிலுங் காட்டி வந்திருக்கின்றான். அவன் தான் செய்யுங் களவுத்தொழிலால் எவர்க்கும் உயிர்ச்சேதம் உண்டாகாமல் அதனை நடத்தும் பொருட்டுப் பல மயக்கு வித்தைகள் கற்றிருந்தான், அவனுக்கு அற்புதமான பல பச்சிலை மருந்துகளுந்தெரியும். இந்த மலைநாட்டிலுள்ளசில பச்சிலை களின் சக்தியை என்னென்பேன்! ஒரு பச்சிலையை ஒருவர் மூக்கிற் பிடித்தால் அவர் நெடுநேரம் உணர்விழந்து கிடப்பர். ஒருகால் தன்னைக் காத்துக் கொள்ளும் பொருட்டு ஒருவரைச் சுட்டாலும், அல்லதவர் கால்கையை வெட்டினாலுஞ் சில பச்சிலைச்சாறுகளால் அவருடைய காயங்களை இரண்டொரு நாட்களுள் ஆற்றி அவர்களிருப்பிடத்திற் கொண்டுபோய்ச் சேர்த்து விடுவான். பிரபுக்கள் சிலரிடம் நேசம் புரிபவன்போற் போய்ச் சேர்ந்து அவர்களை உணர்வோடுகூடிய ஒருவகையான தூக்கத்திற் போகச்செய்து தான்வேண்டிய பொருளை அவர்களே தரப்பெற்று வருவான். யாரேனும் அவனைப் பிடிக்க வந்தால் அவர்களைத் திரும்பி உறுத்துப் பார்ப்பானானால் அவர்கள் உடனே மயங்கிக் கீழ்விழுந்து விடுவார்கள். பணக்காரரில் இவனைப் பற்றிக் கேள்விப் பட்டுத் திகில் கொள்ளாதவர்கள் இல்லை. துரைத்தன அதிகாரிகளும் எவ்வளவோ முயன்றும் இவனைப் பிடிக்கமாட்டாமல் வருந்தினர். இப்படிப்பட்ட யோக சக்திகள் உள்ள அவன் இந்தத் திருட்டுத் தொழிலை கைக்கொண்டு நடக்கலானது எனக்கே ஒரு

பெரு வியப்பாகத்தானிருந்தது. இப்படிப்பட்டவனிடம் பழகி வந்தமையாலும், ஏற்கனவே என் மகன் நல்ல தன்மைகள் பொருந்தினவனாய் இருந்தமையாலும் இவனும் அவனுக்குத் தெரிந்த வித்தைகளை யெல்லாந் தெரிந்துகொண்டு அவனைப் போலவே நடந்து வருகின்றான். என் மகனை இந்தத் தொழிலி லிருந்து விடுவித்து எங்கேனும் ஓரிடத்திற் போயிருந்து யோக்யதையாகக் காலங் கழிக்க முயன்றுவந்தேன், பயன்பட வில்லை. ஒரு தொழிலிற் பழகிவிட்டால் அதிலிருந்து மீள்வது அருமையாகவே யிருக்கின்றது. ஆனாலும், நேற்று உன்னைப் பார்த்ததுமுதல் அவனுக்கு மனம் வேறுவழியில் திரும்பியிருக் கின்றது. உன்னைக் கல்யாணஞ் செய்து கொண்டால் தான் இந்தக் களவுத் தொழிலையுங் கள்வர் கூட்டத்தையும் அறவே தொலைத்து விட்டு, நாடுநகரங்களுள் எங்கேனும் போயிருந்து யோக்யதையா யிருந்து உயிர்வாழலாம் என்று தன் உள்ளத்தைத் திறந்து உண்மையாய் உறுதி சொன்னான். முதலில் உங்களைக் கொண்டு வந்த நோக்கம் வேறுதான். உன் மாமனாரால் உனக்கு நாற்பதினாயிர ரூபா சொத்தும், உன் தமையனுக்கு நாற்பதினாயிர ரூபா சொத்துங் கிடைத்தனவாம். அந்தச் சொத்து முழுமையும் உங்களிடமிருந்து கவர்ந்து தான் பாதியும், தன்னை இதில் ஏவிய வெளியார் மூன்று பேர்க்குப் பாதியும் பகுத்துக் கொள்வதாக என் மகன் எண்ணியிருந்தான்-" என்று சொல்கையில்,

யான், "உங்களை இவ்வாறு செய்யும்படி ஏவியவர்கள் யார்?" என்று மிகவும் பரபரப்போடு வினவினேன்.

"அவர்கள் இன்னாரென்பது எனக்குந் தெரியாது, என் மகனுக்கும் அவர்களைப் பற்றிய விவரம் ஒன்றுந் தெரியாது. சொத்தை உங்களிடமிருந்து கவர்ந்துகொள்ளுதற்கு வேண்டிய அளவுமட்டும் என் மகனும் அவர்களுங் கலந்து பேசிக்கொண்ட தாகத் தெரிகின்றேன். நீ என் மகனைக் கல்யாணம் பண்ணிக் கொள்வதானால் உங்கள் சொத்துகளை நீங்களே வைத்துக் கொள்ளவும், நாம் எல்லாம் நேசமாகப் பம்பாய் நகரத்திலேயே போயிருந்து உயிர்வாழவும் அவன் உண்மையாகவே விரும்பியிருக் கின்றான். ஆகையால், நாங்கள் உன்னாலேயே நல்வழிக்குத் திரும்பி மிச்சமுள்ள வாழ்நாளையும் புண்ணியமார்க்கத்தில் பயன்படுத்த வேண்டியிருக்கின்றது. ஆகையால், தயவுபண்ணி நீ உன் மனசைத் திருப்பி என்மகனை விவாகம் செய்வதற்கு

இசைந்தால், எங்களை யெல்லாம் நல்வழியில் திருப்பிய பெரும் புண்ணியம் உண்டாகும்" என்று உருக்கத்தோடு கூறினார்.

கெட்ட எண்ணமில்லாமல் நல்வழியில் தன் மகனைத் திருப்புதற்கு விரும்பி உருக்கத்தோடு இவர் உண்மையாகப் பேசினமையால் இவரிடத்தில் எனக்குச் சினம் உண்டாகவில்லை. இவர் கொண்ட எண்ணத்தை எப்படி மாற்றுவதென்றும் எனக்கொன்றும் புலப்படவில்லை. ஆகையாற் சிறிதுநேரம் யான் பலவாறெல்லாம் எண்ணிகொண்டிருந்து பிறகு "தாதா, என் உயிரையும் நினைவையும் அன்பையுமெல்லாம் ஒருவற்குக் கொடுத்து விட்டபிறகு இனி வேறொருவரை மணப்பதற்கு என் உள்ளம் அணுவளவும் இசையாது. உள்ளம் எவரை நாடியதோ அவர் பால் அன்பு நிலைபெறுதலே மாதரின் கற்பொழுக்க மாகும். இதற்கு மாறாகத் தனக்கு இசையாத ஒருவரை மணப்பது கற்பொழுக்கத்திற்கு முற்றும் மாறாகும். ஆதலால், யான் தங்கள் மகனையாவது அன்றி வேறொர் ஆடவரையாவது மணக்கக் கனவிலும் நினையேன். என்றாலும், என்னையும் என்னைச் சேர்ந்தவர்களையும் இங்கிருந்து விடுதலைசெய்து எங்களிருப் பிடத்திற்கு அனுப்பி விடுவீர் களானால், உங்கள் மகனுக்குத் தக்க ஓர் அழகிய பெண்ணைத்தேடி மணம்புரிய முயல்வேன். வேண்டுமானால் என் பங்குக்குவந்த சொத்துமுழுமையும் உங்களுக்கு எழுதிக்கொடுத்துவிடுகிறேன். எங்களுக்கு ஏதுந் தீங்குசெய்யாமல் எங்களை விடுவித்தருளல் வேண்டு"மென்று பணிந்துகேட்டேன்.

"அம்மா, நீ சொல்வது என் மனசிற்குப் பொருத்தமாகத் தோன்றவில்லை. ஒருபெண் தான் விரும்பிய கணவனை விவாகஞ் செய்துகொள்வது இலட்சத்தில் ஒன்றுகூட இராதென்று நினைக்கின்றேன். ஒரு சாதிக்குள், ஒரே குலத்திற்குள், கோத்திரப் பொருத்தம் பார்த்து விவாகம் முடிக்கவேண்டியதா யிருப்பதால் ஒரு பெண் தான் விரும்பிய கணவனை விவாகஞ் செய்து கொள்வது முடியாது. ஆதலால், அவள் தன் சுற்றத்தார் பார்த்து நியமிக்கும் ஒருவனையே கல்யாணஞ் செய்துகொள்ளக் கடமைப்பட் டிருக்கின்றான்." என்றார்.

"பாட்டா, சாதிக் கட்டுபாடுங் குலங் கோத்திரம் முதலான பலவகைக் கட்டுப்பாடும் வைத்துக்கொண்டு ஏழைப் பெண்களை அவர்களின் விருப்பத்திற்கு மாறானவர்களுடன் பிணைத்து

விட்டு அவர்களை வாழ்நாள் முழுதும் பெருந் துன்பத்திற்கு ஆளாக்குதல் தெய்வத்திற்கு அடுக்குமா? இந்த இந்தியநாட்டில் தவிர வேறு அயல்நாடுகளில் எங்கும் இப்படிப்பட்ட கட்டுப்பாடுகள் இருப்பதாகத் தெரியவில்லையே. அந்த அயல்நாட்டவர்களில் ஆண்பாலாரும் பெண்பாலாருந் தாந் தாம் அன்பு பாராட்டியவர்களை மணந்து கொண்டு இம்மையிற் பெறவேண்டிய எல்லாநலங்களையும் பெற்று இனிது வாழ்கின்றார்களென்று கேள்விப்படுகின்றேன். ஒரு பெண் தனக்கு இசையாத ஒருவனை மணப்பதனாலும், ஓர் ஆண் தனக்குப் பொருந்தாத ஒருத்தியை மணப்பதனாலும் உலகத்தில் அளவிறந்த துன்பங்களும் பழி பாவங்களும் நேர்கின்றன. இறைவனால் வகுக்கப்பட்ட இவ்வாண் பெண் சேர்க்கையை மனிதர்கள் தத்தம் நன்மையைக் கோரி இயற்கைக்கு மாறாக மாற்றினால் அதனாற் பல பெருந்தீமைகள் விளையாது ஒழியுமோ? கடவுளே அன்புவடிவாயிருக்கின்றாரென்றால், அவ்வளவு தெய்வத் தன்மை வாய்ந்த அன்பு ஒருவர்மேல் ஒருவர்க்கு இயற்கை யாகத்தோன்ற அவ்விருவரும் அதனாற் பொருந்தப் பெறுதலைத் தடுக்க எவராலும் ஆகுமோ? இருவர் தமக்குள் தோன்றிய அவ் வன்பைப் பழுதுபடுத்தும் வண்ணம் பொல்லாத இடையூறுகள் தோன்றினாலும், தமது அன்பு பழுதுறாமல் அதனை யுடையோர் தமது ஆவியையுந் துறக்கவேயன்றோ காண்கின்றோம்? மக்களினுங் கீழ்ப்பட்டனவாக எண்ணப்படும் விலங்கினங் களுள்ளும் ஆண்பெண் ஆவன தத்தமக்கு இசைந்தவற்றோடு கூடியேயன்றோ களிக்கின்றன? இவ்வாறு உலக இயற்கையிற் காணப்படும் இவ்வாண் பெண் சேர்க்கையின் நுணுக்கத்தை ஆராய்ந்து பாராமலும், ஆராய்ந்து பார்த்து அதற்கேற்ற ஏற்பாடுகளைச் செய்யும்படி வற்புறுத்தாமலும், அதுசெய்தாற் குற்றம் இதுசெய்தாற்குற்றம் என்னும் நீதி நூல்களை மட்டும் நம் முன்னோரிற் கற்றவர்களாய் இருந்தோரும் எழுதிவைத்து மாண்டார்கள்! அவர்கள் எழுதிவைத்த நீதி நூல்களால் ஏதேனும் நன்மை விளைந்ததா? எத்தனையோ ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய் நீதிநூல்கள் எழுதப்பட்டுங் கற்கப் பட்டும் வந்தும் அவற்றால் விலக்கப்பட்ட குற்றங்கள் இல்லாமற் போய் விட்டனவா? ஒரு சிறிதும் இல்லையே. அந்த நீதி நூல்களால் இதுவரையில் ஏதேனும் நம் நாட்டிற்கு நன்மைவிளைந்த துண்டாவென்றால் அதுவும் இல்லை. அவற்றால் நன்மை

விளையாவிடினுந் தீமையாவது விளையாவிட்டால் அதனை ஒரு நன்மையாகக் கருதலாம். அப்படியும் இல்லையே. நீதிநூல்களைப் படிப்பவர்கள் அவற்றால் விலக்கப்பட்ட குற்றங்களைத் தாம் செய்து கொண்டே, பிறரிடும் மட்டும் அவற்றாற் சொல்லப்பட்ட குற்றங்களைக் கண்டுபிடிக்க முயன்று புறங்கூறித் திரிகின்றார்கள். பிறரைக் குற்றஞ் சொல்வதற்கு மட்டுந் தாங்கற்ற நீதிநூல்களைப் பயன்படுத்து கின்றார்கள். இவ்வாறு புறங்கூறித் திரிதலாற் பல பெருந் தீமைகளைச் செய்கின்றனர், பகைமையையும் பொல்லாங்கையும் வளர்க்கின்றனர். நீதிநூற்படிப்பால் விளைந்த பயன் இவ்வளவு தான். மக்கள் வாழ்க்கையிற் குற்றங்கள் விளைதற்குரிய காரணங்கள் எவ்வெவை என்று நுட்பமாய் ஆராய்ந்துபார்த்து, அக்குற்றங்கள் வராமல் இருக்கத்தக்க ஏற்பாடுகளை வகுத்து வற்புறுத்தும் நூல்களே நீதிநூல்களாகும். அத்தகைய நூல்களால் விளையும் பயன், குற்றங்களை மட்டும் எடுத்துச் சொல்லி விலக்கும் நீதிநூல்களால் எள்ளளவும் விளையமாட்டாது. நீதிநூல்களை வருந்தி எழுதிய ஆசிரியர்கள் அவற்றை எழுதாமல் இருந்திருப்பார்களானால் நம் நாட்டுக்கு எவ்வளவோ நன்மையைச் செய்திருப்பார்கள்! அது கிடக்கட்டும். சாதிக் கட்டுப்பாடு குலங் கோத்திரம் முதலிய கட்டுப்பாடுகளைச் செய்தவர்கள் ஆண் பெண் மக்களின் மனத்தையுங் கட்டுப்படுத்தக் கற்றிருந்தால் அவர்களது எண்ணம்போல் அவர்களை நடக்கச் செய்யலாமே! பிறர் மனங்களைக் கட்டுப்படுத்தத்தக்க வழி வகைகள் தெரியாதவரையில் மற்றக் கட்டுப்பாடுகள் யாது பயனைச் செய்யும்? சாதி குலங் கோத்திரம் முதலிய கட்டுப்பாடுகளால் நம்மவர் நெருக்கப்பட்டு அறிவும் இன்பமும் இல்லாதவர்களாய், வரவரப் பலவகைத் துன்பங்களாற் குன்றிப் பிறருக்கு அடிமைகளாய் மாடுபோல் உழைத்து மாள்கின்றனர்! இக்கட்டுப்பாடுகள் இல்லாத ஆங்கிலரோ அறிவும் இன்பமும் நாளுக்கு நாள் வளரப்பெற்று நம்மையெல்லாம் ஆள்வதோடு, இந் நிலவுலகம் முழுமைக்குமே தலைவர்களாய் இருக்கின்றனர்! ஆதலாற் பாட்டா, என் உயிரையும் பொருளையும் இழந்தாலும் யான் ஒருவர்மேல் வைத்த காதலன்பை மாற்றி இனி மற்றொரு வரை மணக்க இசையேன்!" என்று மிகுந்த மனத்துணிவோடு தங்குதடையின்றிப் பேசினேன்.

என்னுடைய சொற்களைக் கேட்டு வியப்புடையவராய் அவற்றை மறுக்கமாட்டாமல் வாய்மூடிச் சிறிதுநேரம் சும்மா இருந்த அம்முதியவர் "அம்மா, நீ மிகுந்த மேதாவியாய் இருக்கின்றாய்; உன்னுடைய நுண்ணறிவுக்காக நான் மனம் மகிழ்கின்றேன். உன்னுடைய அறிவுக்குங் கல்விக்குந் தக்கபடி நீ ஒரு மணமகனை நாடியது நியாயந்தான். ஆனாலுங், குலங்கோத் திரங்களைக் கடந்தும், பெற்றார் சுற்றத்தார் உடன்பாடு பெறாமலும் ஒருபெண் தன் மனத்திற்குப் பிடித்த ஒருவனை நாடிச் செல்லுதல் வியபிசார தோஷமாய் முடியுமே என்று தான் நான் பயப்படுகிறேன்." என்று சிறிது பணிவான சொற்களோடு கூறினார்.

"பாட்டா, ஒருபெண் தன் உயிரினும் மேலாக ஒருவனைக் காதலித்திருக்க, அவள் பெற்றாரும் சுற்றத்தாரும் அவளுடைய கருத்தையும் உடன்பாட்டையும் எள்ளளவுந் தெரிந்துகொள்ள முயலாமல், அவள் மனம் பற்றாத வேறொருவனுக்குப் பிணைத்து விடுவதுதான் அச்சிறுபெண்ணை வியபிசார தோஷத்திற்கு உள்ளாக்குவதாய் முடிகின்றது. அவள்மனம் வேறொருவனை நாடியிருக்க, அவளைச் சேர்ந்தவர்களோ அவளைப் பிறன் ஒருவனுக்கு அடிமையாக்கி அவளது கற்பொழுக்கத்தைக் குலைக்கிறார்கள். அந்தப் பாவம் அவள் உறவினர்க்கே யல்லாமல் அவளுக்குச் சிறிதும் வராது. மேலிருந்து எல்லார்க்கும் பொதுவாயிருக்கும் அப்பன் அவள் உள்ளத்தின் பாங்கை நன்கு அறிவனாகையால், அவரவர் பாவ புண்ணியப் பயன்களைத் தினையளவும் பிசகாமல் அளந்து பார்த்து அவளுக்கும் நடுவுதவறாத நன்மையே செய்வானென்பது திண்ணம். மனிதர் மனிதரைக் கைவிட்டாலும், மனிதரைக் கடவுள் கைவிடா ரென்பதே எனது நம்பிக்கை." என்று ஊக்கத்தோடும் உருக்கத்தோடுஞ் சொன்னேன்.

"அம்மா நீ சொல்வதெல்லாம் சரியாகத்தான் இருக்கின்றது. இனி எனக்குப் பேச வாய்இல்லை. என் மகன் செய்த கட்டாயத்தினாலும், உன்னைக் கொண்டாவது என்மகனை நல்வழிப்படுத்தலா மென்னும் எண்ணத்தினாலும் இவ்வளவு தூரம் உன்னோடு வாதாடினேன். மகா உத்தமியாகிய உன்னுடைய மன நிலையைக் கெடுப்பது பெரும் பாவமாகும்! ஆனாலும், என் மகன்மேல் வைத்த வாஞ்சையால் இவ்வளவும்

பேசலானேன். நான் இப்போது எங்களிருப்பிடத்திற்குப் போய் என் மகனுக்கு வேண்டிய புத்திமதிகள் சொல்லுகிறேன். அவன் பிற்பகலில் இங்கேவந்து உன்னோடு நேரே பேசவேண்டு மென்று சொன்னான். அவன் கெட்டவன் அல்லன், தீங்கு செய்ய மாட்டான். ஆதலால் நீ தாராளமாய் அஞ்சாமல் அவனுக்குச் சொல்லவேண்டிய நீதிகளை யெல்லாஞ் சற்று நயமாகவே விரிவாய் எடுத்துப் பேசலாம். உன்னையும், உன்னைச் சேர்ந்தவர்களையும் இங்கிருந்து விடுதலை செய்யவேண்டிய முயற்சிகளையும் பண்ணுகிறேன். இங்கே ஏதொரு பயத்திற்கும் இடம் இல்லை. ஆதலால், நீ இங்கே நிர்ப்பயமாய் இரு. மறுபடியுஞ் சாய்ங்காலம் நானும் என் அகத்துக்காரியும் வந்து, இராப்பொழுதிற்கு உனக்குத் துணையாய்ப் படுத்துக் கொள்வோம்.'' என்றார்.

"அருமைப் பாட்டா, தங்கள் பேரன்பிற்காகத் தங்களை நன்றியுடன் வணங்குகின்றேன். தங்கள் மகனார் நல்லவரா யிருந்தாலும், அவர் மிகக் கொடிய சிலருடைய தூண்டுதலால் எங்களை இங்கே கொண்டுவந்திருப்பதால், அவர் தங்கள் புத்தி மதிகளைக்கேட்டு எங்களை விடுதலை செய்வாரென்று தோன்றவில்லை. ஆதலால், தாங்களே, எளியேங்கள்மீது அன்பும் இரக்கமும்வைத்து அவர்களுக்குத் தெரியாமல் எங்களை இவ்விடத்தினின்றும் விடுதலை செய்து விடுவீர்களானால், தங்களுக்குப் பெரும் புண்ணியமாகும்.'' என்று அவரை மன்றாடிக் கேட்டேன்.

"குழந்தாய், நானோ வயசான மனிதன். இந்த மலைப்பிர தேசத்தைவிட்டு அகன்று பம்பாய்க்காவது மற்ற நாடுநகரங் களுக்காவது போய்ச் சேரும் வழிதுறை சிறிதும் எனக்குத் தெரியாது. யானும் என் குடும்பத்தாரும் இங்கே வந்தபிறகு இந்த இடத்தைவிட்டு வேறு எந்த இடத்திற்கும் யான் செல்லவில்லை. இந்த மலைக்கு அருகாமையில் வேறொரு மலைத்தொடர் இருக்கின்றது. அம் மலைத்தொடர் ஒரு சிறு வட்டமாய்ச் சூழ அதன் நடுவிலே அகல நிகளத்திற் கால்மைல் அளவுள்ள ஒரு சிறு காடு அதன் அடிவாரத்தில் அமைந்திருக்கின்றது. அக் காட்டிலே தான் எங்களுக்கு வசதியான ஒர் இலைக்குடிசை யிருக் கின்றது. அதற்கு இங்கிருந்து மேடுபள்ளம் இல்லாமற் சமமாய்ப்போகும் ஒரு சிற்றடிப்பாதை இருக்கின்றது. அதன்

வழியாக அவ்விடத்திற்குச் செல்வதும், அங்கிருந்து இங்கேவந்து பரமேசுவரிக்கு இரண்டுகாலபூஜை செய்வதுந் தவிர, வேறு இந்தப் பிரதேசத்தின் தன்மைகளாவது, இங்கே என் மகனோடு சேர்ந்தவர்கள் இருக்கும் இடங்களாவது, அவர்கள் நடத்துங் காரியங்களாவது எனக்குத் தெரியமாட்டா." என்று உண்மை தோன்றக் கூறினார்.

"அப்படியனால், பாட்டா, தங்கள் மகனாரைச் சேர்ந்தவர்கள் இன்னாரென்பதும், அவர்கள் இத்தனை பெயர்களளென்பதுந் தங்கட்குச் சிறிதுந் தெரியாவோ?" என்று வினாவினேன்.

"அம்மா, அப்டியன்று; வெள்ளிக்கிழமைதோறும் மாலை பத்துமணிக்கு இங்கே ஈசுவரிக்கு விசேஷ பூஜை நடக்கும். அன்றிரவு தான் என் மகனைச் சேர்ந்தவர்கள் எல்லாரையும் இவ்விடத்திற் பார்க்கலாம். என் மகனோடு இந்தப் பிரதேசத்தில் நெடுங் காலமாய் இருப்பவர்கள் எட்டுப் பொல்லாத திருடர்களும் அவர்கள் குடும்பத்தாருமே யாவர். ஆனால், இடையிடையே வேறு சிலர் புதிதாக வருவதும் போவதுமாய் இருக்கிறார்கள். அங்ஙனம் வந்து போகிறவர்கள் தாமே திருட்டுத் தொழிலைச் செய்பவர்களாகத் தெரியவில்லை; இந்தத் திருடர்களுக்கு உளவு சொல்லுகிறவர் களாகவே காணப்படு கின்றனர். பூஜை நடந்தபின் யானும் என் மகனும் எங்கள் இருப்பிடத்திற்குப் போய்விடுவது வழக்கம். ஆனால், என் மகனைச் சேர்ந்தவர்கள் மட்டும் அன்றிரவு முழுதும் இந்தக் கோயிலிலேயே இருந்து போவார்கள். அவர்கள் ஏதுக்காக இரவுமுழுதும் இங்கே தங்குகிறார்களென்பது எனக்குத் தெரியாது. அதைப்பற்றி என்மகனைப் பலகால் யான்கேட்டும் 'எங்கள் இரகசியங்களில், அப்பா, தாங்கள் தலையிட வேண்டாம்' எனக் கெஞ்சிக் கேட்டுக்கொள்வானே தவிர அதன் உண்மையைத் தெரிவிப்பதில்லை. ஆதலால், அறிவுள்ள குழந்தாய், நான் உங்களை விடுவிக்கத்தக்க நிலைமையில் இல்லாதிருக்கிறேன். இந்த இடத்தை மட்டும் விட்டு வெளியே வர உங்களுக்கு வழிகாட்டினாலும், குகையின் வெளியே வந்தபின் அடுக்கடுக்காய் இருக்கும் மலைகளின் ஊடும், இப்பிரதேசம் எங்குமுள்ள கருங் காடுகளின் ஊடும், அவற்றில் நிறைந்த **புலி கரடி சிறுத்தை ஓநாய் மலைப்பாம்பு** முதலான கொடிய

பிராணிகளின் ஊடும் நீங்கள் வழிதெரிந்து செல்வது சிறிதும் முடியாது. இங்குள்ளவர்கள் வெளியே செல்வதும், வெளிப்பிர தேசங்களிலுள்ளவர் இங்கே வருவதும் எளிதில் இயலாமை யினாலேதான், இந்தத் திருடர்கள் அரசாங்கத்தினராற் பிடிபடாமல் சுகமாகக் காலங்கழிக்கின்றனர். ஒருகால் நீங்கள் இந்தக் குகைகளைத் தப்பி வெளியே சென்றாலும் இந்த மலைநாடெங்கும் அலைந்துதிரியும் இந்தத் திருடர்கள் மறுபடியும் உங்களைப் பிடித்துக்கொண்டு வருவார்க ளென்பது நிச்சயம். ஆகையால், இவர்களைக் கொண்டே நயமாக இவ்விடத்தை விட்டுப்போக முயல்வது தான் நலம்.'' என்றார்.

இவர் சொல்லியவைகளைக் கேட்டு யான் அச்சமும் நடுக்கமுங் கொண்டாலும், இவர் எங்களுக்கு நன்மைசெய்யும் எண்ண முடையவராயிருப்பதைத் தெரிந்து மகிழ்ச்சியும் அடைந்தேன். பிறகு யான் ஒன்றும் பேசாதிருக்க அவர் சாயங்காலந் திரும்ப வருவதாகச் சொல்லிவிட்டு, அக் குகையின் புறத்தே மெல்லச் சென்று கதவை இழுத்துச் சாத்தித் தாழிட்டுக் கொண்டு போய் விட்டார். அவர் போனதும், அவருக்கும் எனக்கும் நடந்த பேச்சின் வகைகளெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக என் நினைவிற்றோன்றி என் உள்ளத்திற் பலவேறு நிகழ்ச் சிகளைப் பிறப்பித்தன. பொதுவாக அப்பெரியவரைப் பற்றிய நல்லெண்ணம் என்னை இடையிடையே ஆறுதல் பெறச் செய்தது. ஆனாலும், அந்தப் பாரசிகப்பெருமானும் என் தமையனும் என்பொருட்டு இத்தகைய பெருந் துன்பத்தில் அகப்பட்டிருப்பதும், ஏழைப் பெண்பாலாகிய யான், காமங்கொண்ட பொல்லாத ஒரு கள்வன் கையிற் சிக்கியிருப்பதும், இவ்விடத்தை விட்டு மீள்வதற்கு ஏதொருவழியுங் காணாமலிருப்பதும் நினைக்க நினைக்க என் நெஞ்சை ஆறாத் துயரத்திற்கு ஆளாக்கியது.இப்போது இக் குகையினுள்ளிருக்குங் காளிகோயிலின் வாயிற்கதவு பூட்டப் படவில்லை. அதனால், யான் உட்சென்று அம்மையின் திருவுருவத்தின் இரண்டு திருவடிகளிலும் வீழ்ந்து கண்ணீர் ஆறாய்ப் பெருக்கி என் குறைகளைச் சொல்லி அழுதேன். "எல்லா உயிர்களையும் வருந்தாது பெற்றுக் காத்துவரும் இரக்கமுள்ள தாயே! ஏதொரு குற்றமுஞ் செய்யாத ஏழையேனையும், ஏழையேனுக்குத் துணையும் உதவியும் ஆன என் தமையனையும் பாரசிகப்

பெருமானையும் இந்தப் பொல்லாத கள்வர்கையில் ஒப்பித்து விட்டு, அருட்கடலாகிய நீ ஏதும் அறியாதவள்போற் சும்மா இருத்தல் நன்றோ! பெற்றபிள்ளையைத் தாயே பாதுகாவாமற் கைவிட்டுக் கொலைஞர் கையில் ஒப்பித்தால், 'எம் பெருமாட்டி, அப்பிள்ளை பிழைக்குமாறு எங்ஙனம்! கொடிய இக் கள்வர் செய்யும் வழிபாட்டையும் ஏற்று அவர்க்கு உதவியாய் நீயும் இங்கிருத்தல் சாலுமோ! தான் பெற்ற பிள்ளைகளுட் கொடுமையுள்ள சிறுவர் அமைதியான மற்றச் சிறுவர்களை அடித்தாலும் வைதாலும் தாயானவள் அதனைக்கண்டு மனம் பொறாமல் அக்கெட்ட பிள்ளைகளை ஒறுக்கின்றனளே! உலகத்தின்கண் உள்ள சிற்றறிவுடைய தாய்க்குள்ள இரக்கமுங் கவலையுங்கூட எல்லா உலகத்திற்குந் தாயான உன்னிடத்து இல்லாமற் போனால் இனி இப்பாழுலகம் நிலைக்குமோ!'" என்றெல்லாம் பலவாறு புலம்பி அழுதேன். இவ்வாறு நைந்தழுதபின் என்மனம் ஒருவாறு அமைதியுற்றது. அம்மைக்குப் பின்புறத்தே ஓவாது விழும் அருவியோசை எனக்கு இரங்கி என்னோடுகூடி அழுவது போற்றோன்றிற்று. பிறகு அம்மையை வலம்வந்து வணங்கிப், பின்னே சென்று அவ்வருவிநீர் தேங்குஞ் சிறுகுட்டத்தில் என் முகத்தைக் கழுவிக்கொண்டு அதனோரத்தில் உட்கார்ந்து, அவ்வருவிநீர் மேற்கூரையாயுள்ள பாறையின் பிளவிலிருந்து இறங்குதலையும், இறங்கிய நீர் கீழுள்ள குட்டத்தில் நிரம்பி அடியேயுள்ள மற்றொரு பிளவினூடு செல்லுதலையும் உற்றுநோக்கிக்கொண்டிருந்தேன். 'இவ்வளவு நெருக்கமான இந்த மலைகளினிடையே யிருந்து இவ்வளவு நீர் எவ்வாறு வருகின்றது! வந்து வழியும் நீர் அவ்வளவுந் திரும்ப எவ்வாறு செல்கின்றது!' என்று வியப்புடன் எண்ணமிட்டுக் கொண் டிருந்தேன். 'தண்ணீர் நிறைந்து ஓடும் இவ் வருவிக்கால் இம்மலைகளைக் கடந்து செல்வதற்கு ஒரு வழியாயிருந்தால் ஏழையேன் இப் பொல்லாத இடத்தைவிட்டு மீண்டு செல்வது எளிதாயிருக்குமே! இவ் வருவிக்கால் ஆழம் உள்ளதாயும், செங்குத்தான மலைகளின் மேலோடிக் கீழ் இறங்குவதாயும். இருந்தால் யான் இதன் வழியே எவ்வாறு செல்லக்கூடும் மேலும் போகப் போக இது செல்லும்வழி குறுகலாயும் நெருக்கமாயும் இருந்தால் யான் இதனைவிட்டுச் செல்வது சிறிதும் இயலாதே!' என்று இவ்வாறெல்லாம் எண்ணமிட்டுக்கொண்டிருந்தேன். இவ்வாறான பல நினைவுகளில் என் மனம் அழுந்தி நின்றமையால்

நேரம் போனது எனக்குத் தெரியாது. இப்பொழுது இக் குகைவாயிலின் கதவிலுள்ள பூட்டில் சாவி கரகரவென்று திரும்பும் ஓசை கேட்டது. உடனே யான் திடுக்கிட் டெழுந்து அச்சமுந் திகிலுங்கொண்டு, உள்ளீடில்லாச் சுரைக்கூடுபோல் காற்றில் நடந்து கோயிலின் வெளியேவந்து அதன் கீழ்ப்படிமேல் அயர்ந்து உட்கார்ந்தேன். இதற்குள் முன்வாயிலின் கதவு படீரெனத்திறக்க உயர்ந்து நீண்ட ஓர் ஆண்மகன் உள்ளே வந்தனன். இப்போது என் உயிர் உடம்பிலுள்ளதோ அதன் வெளியேயுள்ளதோ அறியேன், என் கண்கள் திறந்தபடியே இமையாமல் நின்றன, அவனைப் பார்த்தபடியே சோர்ந்து மேற் படிமேற் சாய்ந்துவிட்டேன், அவன் தனது கையில் ஒருசிறு பிரப்பங்கூடை கொண்டு வந்தான். கொண்டுவந்த கூடையை என் அருகில் வைத்து, அதன் மேன் மூடியைத் திறந்து உள்ளிருந்த ஒரு புட்டிலை யெடுத்து, அதன்னுள்ளிருந்த நீரை என் முகத்திற் றெளித்தான்; அது பனிநீர். அதன்பின் என்னை அணைத்தெடுத்துத் தன்றொடைமேற் சாத்திக் கொள்ளக் கையை நீட்டினான். உடனே என் நிலை எனக்குவந்தது; 'என்னைத் தொடவேண்டாம்' என்று கைக்குறி காட்டினேன். அதற்கு இசைந்து அவன் என்னை உற்றுப் பார்த்துக் கொண்டு சும்மா குந்தியிருக்க, யான் ஒருவாறு மனவமைதி பெற்று எழுந்து நிமிர்ந்து உட்கார்ந்தேன்.

என் கண்களினெதிரே யிருந்த அவ்வாண்மகனது வடிவம் அஞ்சத்தக்கதா யில்லை. அவன் முக அமைப்பும் உடம்பின் அமைப்பும் அழகு மிகுந்தனவாகவேயிருந்தன. என்னாருயிர்த் தெய்வநாயகம், தங்கள் அழகிற்கும் என் தமைய னழகிற்கும் அவனை அடுத்தபடியாகச் சொல்லலாம். தங்கள் முகத்திலும் உடம்பிலுங் கடைந்து திருந்திய உறுப்பின் அழகோடு மென்றன்மைக்கு அடையாளமான தாமரை யிதழின் மென்மையுங் கல்வியால் உள்நிறைந்து ஒளிவீசும் உயர்ந்த அறிவுக்கு அடையாளமான ஒரு பேரொளியும் நிரம்பித் துலங்க, இவனது வடிவத்திலோ ஒரு வல்லென்ற தன்மையும் மற்றுமொரு மங்கல் நிறமுங் காணப்பட்டன. இவ்வன்றன்மை அவனுக்கு இடையிலே வந்ததாகல்வேண்டும்; ஏனென்றால் அஃது அவன் வடிவத்தில் நன்றாக முதிர்ந்து தோன்ற வில்லை; அவனுக்கு உயர்ந்த கல்வியறிவு இல்லாமையாற் போலும் மங்கலான நிறங் காணப்பட்டது. இவ்விரண்டு குற்றங்களும் இல்லையானால்

அவனது வடிவத்தினழகை உயர்ந்த தர முடையதாகத்தான் சொல்லல் வேண்டும். அவனது மேலுதட்டின் மேற் கறுகறுத்து விளங்கிய முறுக்கு மீசைதான் அவனுக்கு ஓர் ஆண்டன்மை யினைக் கற்பித்ததேயல்லாமல், அவனது வடிவம் பெரும்பாலும் ஒரு பெண்மகள் வடிவத்தையே ஒத்திருந்தது. அதனால், யான் இவனைப்பற்றி முதலிற்கொண்ட அச்சமுந் திகிலம் ஒருவாறு தணிந்தன. என் அருகில் வந்தவுடன் இவன் எனக்குச் செய்த உபசாரமும், என்னைத் தொடவேண்டா மென்று யான் கை அமர்த்த அவன் அப்படியே விலகியிருந்தமையும் எனக்கு மீண்டும் மனத் துணிவைத் தந்தன. யான் செவ்வையான நிலைமைக்கு வந்ததைப் பார்த்தவுடன் அவன் பின் வருமாறு பேசலானான்.

"நான் யாரோவென்று நினைக்கவேண்டாம். இங்கே பரமேசுவரிக்குப் பூஜைசெய்யும் வயோதிகப் பிராமணருக்கு நான் ஒரே குமாரன். எங்களுடைய வரலாறெல்லாம் என் தகப்பனார் உனக்குத் தெரிவித்திருக்கிறார். நான் சுபாவத்தில் நல்லவனே யனாலும், இளமைக்காலத்தில் நான் அடைந்த வறுமையும் சுற்றத்தார் அவமதிப்புமே என்னை இந்தக் கள்வர் கூட்டத்தில் சம்பந்தப்படும்படி செய்தன. எனக்குப் போதுமான கல்வியறிவும் உண்டு. தமிழிற் பல நூல்களைப் படித்திருக்கின்றேன். உன்னைப் பார்த்த நிமிஷந் தொட்டும், உன்னுடைய அருமைகளைக் கேட்ட நேரந்தொட்டும் உன்னை என் ஆருயிராய்ப்பாவித்து அன்புபாராட்டுகின்றேன். நீ என்னை விவாகஞ் செய்து கொண்டால் யான் நல்வழியில் திரும்பி உன்னைச் சுகவாழ்வில் வைப்பதனையே எனது தவமாய்க்கொண்டு உயிர்வாழ்வேன். நீ என்னை மறந்துவிட்டால் உன் காலடியில் வீழ்ந்து என் உயிரை மாய்த்துவிடுவதற்கே தீர்மானித்திருக்கின்றேன். உனது கூந்தலில் உள்ள ஒருசிறு மயிருக்குங் கூடத் தீங்குசெய்ய என்மனந் துணியாது. நான் இதற்குமுன் பிழைபட நடந்தவைகளை எல்லாம், என் தெய்வமே போல்வாய், நீயே மன்னித்தல் வேண்டும். உனது சொல்லில் எனது வாழ்வு இருக்கின்றது. நீ காலால் ஏவியவற்றை யான் தலையாற் செய்வேன்." என்று பணிவோடும் உருக்கத்தோடும் பேசினான்:

இவனுக்கு எங்ஙனம் விடைகூறுவ தென்று தெரியாமற் சிறிதுநேரந் திகைப்புற்று மயங்கி யிருந்தேன். தான் சொல்லியவை களுக்குத் தக்க விடை கூறினாலன்றித் தான் என்னை விட்டுப்

போவதில்லையென்றும், அன்னந் தண்ணீரும் அருந்துவ தில்லையென்றும் உறுதிமொழி புகன்றான். பிறகு யான் ஒருவாறு மனத்திட்பங் கொண்டு, யான் தங்கட்கு உரியவளாய் இருப்பதையும், தங்களை யல்லாமல் வேறொருவரை மணக்கக் கனவிலும் இசையேனென்பதையும் வற்புறுத்திப் பேசி, அவன் தந்தையாரிடம் யான்முன் சொல்லியவைகளை யெல்லாந் திரும்பவும் எடுத்துச் சொன்னேன். யான் தீர்மானத்தோடும் பேசியவைகளைக் கேட்டு அவன் முகம் வாட்டம் அடைந்தது. சோர்வுடன் பெருமூச்செறிந்து வாய்பேசாமல் தலை குனிந்த படியாய் நெடுநேரங் கன்னத்தின்மேற் கைகளை ஊன்றிக்கொண்டு என்னெதிரில் உட்கார்ந்திருந்தான். இவனை இந்த நிலைமையிற் பார்ப்பது எனக்கு இரக்கமாகவே யிருந்தது. அதனால், திரும்பவும் பின்வருமாறு கூறினேன்:

"ஐயா, ஏழைச் சிறுமியாகிய என்பொருட்டு நீங்கள் இவ்வளவு வருந்துதலிற் பயனில்லை. மணவாழ்க்கை யென்பது காதலனுங் காதலியும் ஒருவரோ டொருவர் இயற்கையிலேயே அளவுக்கடங்கா அன்புடையராய்க் கூடி வாழப் பெறுவதாகும். அவ்விருவரில் ஒருவர்க்கு அன்பில்லையானாலும் அது பிண வாழ்க்கையே யாகு மல்லாமல் மணவாழ்க்கை யாக மாட்டாது. இயற்கையே ஒருவருள்ளத்தில் உண்டாகாத அன்பைப் பால் அடையில் வைத்துப் புகட்டுவதுபோற் செயற்கையாகப் புகட்ட முடியுமோ? ஆதலால், தாங்கள் என்னை வேறுவகையில் அன்பு பாராட்டுவதை விடுத்துத், தங்கள் புதல்வியாகவாவது தங்கையாகவாவது என்பால் அன்பு செலுத்துவீர்களானால், யானுந் தங்களைத் தந்தையாகவோ தமையனாகவோ நினைத்து அன்பு பாராட்டிச், 'சிறு துரும்பும் பல்லுக் குத்த உதவும்' என்றபடி எளியேனுந் தங்கட்கு என்னாற் செய்யக்கூடிய உதவியெல்லாஞ் செய்வேன். என்னோடுகூடக் கொண்டுவந்து நீங்கள் சிறைப்படுத்தியிருக்கும் பாரசிகப் பெருமான் நிரம்ப உயர்ந்த தன்மையும் மிகப் பெரிய செல்வமும் வாய்ந்தவர். அவரைக் கொண்டு தங்கட்கு அழகாற் சிறந்த நல்ல ஒரு பெண்ணை மணஞ் செய்து வைக்கவும், வேண்டும் அளவு உங்கட்குப் பொருள் வருவாயை உண்டுபண்ணவுங் கூடும். ஆனதால், தாங்கள் எளியேன் மீது வைத்த அன்பிற்கு அடையாளமாக எங்களை யெல்லாம் இவ்விடத்தினின்றும் விடுதலைசெய்து, தாங்களும்

இப்போது செய்துவருந் தொழிலை அறவே நீக்கி எங்களுடன் வந்து எங்களோடிருக்க வேண்டுகின்றேன்."

"பெண்மணி, அன்பைக் கரைத்துப் புகட்டமுடியா தென்றும், அது தன்னியற்கையாகத் தோன்ற வேண்டுமென்றும் நீ சொல்லியது உண்மையே. உன்னிடத்தில் எனக்கு அன்பு உண்டாகும்படி புகட்டினார் ஒருவருமில்லை. அஃது இயற்கையாகவே எனக்குத் தோன்றியது. ஆதலால், என்னுடைய அன்பிற்கு இசைந்துதான் நீ நடக்கவேண்டும். என்னை முன்பின் அறியாததனாலும், கொள்ளைக் கள்வரால் இங்கே கொண்டுவந்ததனாலும் நீ என்மேல் அச்சங்கொண் டிருக்கின்றாய், அந்த அச்சம் நீங்க நீங்க நீ என்மேல் அன்பு பாராட்டுவாய், ஆதலால், இப்போது நீ ஒன்றுந் தீர்மானமாகச் சொல்ல வேண்டாம். இன்னும் நாலைந்து நாள் போன பிறகு உனது தீர்மானத்தைத் தெரிவிக்கலாம். இங்கே உனக்கு வேண்டும் சௌகரியங் ளெல்லாம் நாங்களே தெரிந்து செய்து வருகின்றோம். இன்னும் ஏதேனும் ஆக வேண்டியது இருந்தால் தெரிவி." என்று கேட்டான்.

"எனக்காக என்னுடன் வந்தவர்களைச் சிறைப்படுத்தி வருத்துவது நன்றாகுமோ? ஆதலால் அவர்களையேனும் மனமிரங்கி விடுவித்து விடுவீர்களாயின் ஒருவாறு ஆறுத லடைவேன்." என்றேன்.

"பெண்ணே, அவர்களை இப்போது விடுதலை செய்தால், அவர்கள் உடனே உன்னை மீட்பதற்காகவும் எங்களைப் பிடித்துச் சிறையில் அடைப்பதற்காகவும் அரசாங்கத்தார்க்கு அறிவித்து அவர்களோடு சேர்ந்து கடுமுயற்சி செய்வார்கள். ஆதலால், நாம் இருதரத்தாரும் ஒழுங்கான ஓர் ஏற்பாட்டுக்கு வரும் வரையில் அவர்களை இங்கேதான் வைத்திருக்கவேண்டும். அதற்காக, நீ மனம் வருந்தாமல் என்னை மன்னித்தல் வேண்டும். திரும்பவும் நாளைப் பிற்பகலில் இங்கேவருகிறேன். என் பெற்றோர்கள் இன்னுஞ் சிறிது நேரத்தில் இங்கே வருவார்கள்." என்று சொல்லியபின் எழுந்து, அம்மையை வணங்கிக்கொண்டு, குகையின் முன்வாயிற் கதவை இழுத்துச் சாத்திப் பூட்டிக் கொண்டு போயினான். தலையிலிருந்த ஒரு பெருஞ் சுமையை இறக்கிவைத்தவள் போல் உடனே யான் பெரியதோர் ஆறுதல்

பெற்றேன். பேசிச் சென்ற இவனால் ஏதொருதீங்கும் நேராமல் ஏழையேனைப் பாதுகாத்த அம்மையின் அருளை வாழ்த்திப் பலகால் அவள் திருவுருவத்தின் அடியில் வீழ்ந்து வணங்கினேன். இவன் தந்தையார் சொல்லியபடியே இவன் நல்லவனாயிருத்தல் பற்றிச் சிறிது மனநிறைவு கொண்டேனாயினும், இத்தகைய நல்லியல்புள்ளவன் கொடிய கள்வர்களுடன் கூடிப் பலர்க்குத் தீங்கிழைத்து வருவதை நினைக்க என் மனம் அச்சமும் வருத்தமுங் கொண்டது. இவனைத்திருத்தி இவனால் யாங்கள் விடுதலை பெறுவதுடன், இவனையும் இவன் பெற்றோரையுங் கூடக் கொண்டு சென்று, இவர்களை நன்னிலையில் வைத்தற்கு என்னுள்ளம் பெரிதும் விரும்பியது. ஆனால், இவனைத் திருத்தத்தக்க வழியொன்றும் புலனாகவில்லை. ஆகவே, மனக் கலக்கத்தோடும் பலவாறு நினைந்துகொண்டிருக்கையில், மறுபடியுங் குவைவாயிற் கதவிற் சாவி திரும்பும் ஓசை கேட்டது; இரண்டொரு நொடியிற் கதவு திறக்க அப்பார்ப்பனப் பெரியோரும் அவர் பின்னே அவரைப் போலவே முதியோளான அவர்தம் மனைவியாரும் உள்ளே வந்தார்கள். அவர்களைக் கண்டதும் எழுந்து நின்றேன். எனக்குள்ள வருத்தத்தாற் புன் சிரிப்புங் கொண்டிலேன். அவர்களிருவருஞ் சிங்கச் சிலையண்டை வந்து உட்கார்ந்து, என்னையுந் தமக்கு அருகில் இருக்கும் படி கற்பித்தனர். இந்தப் பெரியவரைப் போலவே இவர்தம் மனைவியாரின் வடிவமும் பார்க்கப்பார்க்க மகிழ்ச்சி தரத்தக்க தாயிருந்தது. இளமைக்காலத்தில் இந்த அம்மையார் நிகரற்ற அழகுடையவராயிருந்திருக்க வேண்டும். பொன்னிறமா யிருந்தாலும் இப்போது தோல் திரைந்து தலை நரைத்திருப்பதால் அவ்வழகு சிறிது சிறிது மாறிப்போயிற்று. ஆனாலும், முகத்தில் உள்ள ஒருவகையான களையும் மலர்ச்சியும் முதுமையும் இந்த அம்மையாரின் நல்ல இயற்கையைப் புலப்படுத்தின. தாய் தந்தையர் இருவரும் இங்ஙனம் மிக நல்லவராயிருக்க இவர்கட்குப் பிறந்த மகன் தீயனாவது பொருந்தாது. ஆதலால், இவர்கள் மகன் கள்வர்கூட்டத்திற் சேர்ந்ததற்குக் கொடிய வறுமையும் ஊழ்வினையுந்தாங் காரணமாயிருக்க வேண்டுமென்பது என்மனத்திற்பட்டது. இவர்களைப் பார்க்கப் பார்க்க இவர்கள் மகன் நல்வழியில் திரும்பும்படி அருள்புரிதல் வேண்டுமென

அம்மையை இரந்து கேட்டேன். குறிப்பிட்ட இடத்தில் அமர்ந்தவுடன் அப் பெரியவர் என்னை நோக்கிக்,

“குழந்தாய், இவள்தான் என் அகத்துக்காரி; உன்னைப் பார்ப்பதற்காகவும், உனக்குத் துணையிருப்பதற்காகவும் அழைத்து வந்தேன்.” என்றார்.

இதற்குள் அந்த முதிய அம்மையார் “அருமைக் குழந்தே, உன்னைப்பார்த்தால் என் பேர்த்திப்பிள்ளைபோலிருக்கின்றது. என்மகள் உயிரோடிருந்தால், உன் அவ்வளவு ஒரு பேர்த்திப் பிள்ளை இருக்க வேண்டும். உன்னைப் பார்த்தால் என் மகளுடைய நினைவே எனக்கு வருகின்றது!-” என்று கூறுகையில் அந்தப் பெரியோளின் கண்களில் நீர் ததும்பிற்று.

அதைப்பார்த்ததும் அந்தப் பெரியவர் “இந்தக் குழந்தைக்கு உன் மகனால் நேர்ந்த இடையூறு போதாதா! நீயும் ஏன் இப்போது உன் அழுகையைக் காட்டி இவளைத் துன்பப்படுத்த வேண்டும்?” என்று சொல்லி அந்த அம்மையாரை அமர்த்தி விட்டு எனக்கும் ஆறுதல் சொன்னார்.

அதன்பின் அந்த அம்மையார் “நம்ம பையன் செய்ததும் நன்மையாயிற்று, அவன் கொண்டு வந்ததனா லன்றோ நாம் இந்தக் குழந்தையைக் காணலாயிற்று!” என்று மகிழ்வோடு கூறினார்.

இந்நேரத்தில் என்னை வெளியே அழைத்துக் கொண்டு போவதற்காகக் காலையில்வந்த பெண்பிள்ளை குகையினுள்ளே வந்தாள். அந்தப் பெரியவர் பகற்பொழுது போவதற்குமுன் என்னை வெளியே போய்வரும்படி கற்பித்தமையால் யான் அவளைப் பின்றொடர்ந்து காலையிற் சென்ற இடத்திற்கே போய் மாலைக் கடன்களை முடித்துத் திரும்பினேன். இதற்குள்ளாக அந்தப் பெரியவர் சாய்ங்கால பூஜைக்காக அம்மைக்குத் திருமுழுக்குச் செய்வித்துப் பலநிறப்பூக்கள் அணிந்து அழகாக ஒப்பனை செய்து வைத்திருந்தார். யான் வந்தவுடன் அகில் புகைத்துக் கர்ப்பூரங் கொளுத்தி வழிபாடு செய்தார். இப்போது என்னைப் பற்றிய அளவில் ஒருவாறு அச்சம் நீங்கியதாயினும், அந்தப் பாரசிக கனவானும் என் தமையனுஞ் சிறையில் அடைபட்டுக் கிடத்தலை நினைக்க நினைக்க என் உள்ளம்

புழுவெனத் துடித்து ஆற்றொணாத் துயரம் எய்திற்று. அதனால், இப்போது அம்மையை வேண்டிக் கொள்ளுதலும் விட்டுக் கண்ணீர் வடித்த படியாய் நின்றேன். பூசனை முடிந்தபின் அப்பெரியோர் இருவரும் எனக்குப் பலவகையான ஆறுதல் மொழிகளைச் சொல்லி, இறைவிக்குப் படைத்த பாற்சோறும் பழங்களும் உண்ணும்படி வற்புறுத்தினர். வேண்டா விருப்பாய் சிறிதெடுத்து அயின்றேன். மாலை ஏழெட்டு நாழிகையாயிற்று. மசங்கல் மாலைப் பொழுதிலேயே அப் பெரியவர் குகைவாயிற் கதவைச் சாத்தித்தாழிட்டார். அவர் அதனைச் சாத்திய குறிப்பைச் சிறிதுநேரத்திலெல்லாந் தெரிந்துகொண்டேன். பகல்முழுதும் வெளிவராது தத்தம் இருப்பிடங்களில் ஒடுங்கிக்கிடந்த கொடிய காட்டுவிலங்குகள் எல்லாம் இரைதேடும்பொருட்டு வெளிப் பட்டுப் பலவகை இரைச்சலிட, அவ்வோசை குகையினுள் ளிருக்கும் எங்கள் காதில் விழுந்து எனக்குப் பெரியதோர் அச்சத்தினை விளைவித்தது. இவ்வளவு திகிலான இந்த மலைநாட்டை விட்டு அகலும் வகை எப்படி என்னும் ஏக்கம் எனக்கு வரவர மிகுவதாயிற்று. என்னுடனிருந்த முதியோரிருவரும் பற்பலவற்றைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். எனக்கிருந்த மனவருத்தத்தால் அவர்கள் பேசியவைகளிற் பெரும்பாலும் என்மனம் பதியவில்லை. இடையிடையே அவர்கள் பேசியவற்றிற் சிற்சில எனக்கு ஒருபெரிய ஐயப்பாட்டினை விளைவித்த தென்றாலும் அப்போது எனக்கு இருந்த மனநிலை யானது அவர்கள் சொல்லியவற்றையெல்லாம் ஒரு தொடர்புபடுத்திப் பார்க்கவும், அவர்களை நன்றாய்க் கேட்டு என் ஐயப்பாட்டை விலக்கிக் கொள்ளவும் இடந்தராதாயிற்று. முற்றிலும் என்னுடைய துயர் நினைவுகளாலேயே என்மனங்கவரப் பட்டிருந்தது. இவ்விடத்தைவிட்டுத் தப்பிப்போவதற்கும், என்னவர்களைச் சிறையினின்று விடுவிப்பதற்கும் வழிவகைகள் உண்டாவென எண்ணி யெண்ணிப் பார்த்தும், இறைவியை மன்றாடியும் ஒன்றும் எனக்குத் தெளிவாய்ப் புலப்படவில்லை. ஆனால், இந்நினைவினூடே ஒன்று மட்டும் அடுத்தடுத்துத் தோன்றிற்று. இறைவிக்குப் பின்புறத்தே விழுந்தோடும் அருவிக்கால் தப்பிப்போவதற்கு வழிகாட்டுமோ என்பதே அதுவாம். ஆனாலும், அது முடியாத பிழைஎண்ணம் என்று நினைத்தேன். பிறகு, தம் அருமைமிக்க கணவனாரைக் கள்வர்கையிற் பறிகொடுத்த அந்தப் பாரசிக அன்னையாரும்

அவர் மக்களும் எந்த நிலைமையில் இருக்கிறார்களோ என்பதை நினைக்க என் உள்ளம் அனலிற்பட்ட மெழுகாய் உருகிப் போயிற்று. பம்பாய்போய்ச்சேர்ந்தபின் தெரிவிப்பதாகத் தங்களிடம் நேரே சொல்லி வந்தமையின், யாங்கள் பட்ட அல்லல்களைக் குறித்துப் பாரசிக அம்மையார் தங்கட்கு அறிவித்தனரோ இல்லையோ எனவும், தங்கட்கு இவைகள் அறிவிக்கப்படாமலிருந்தால் தாங்கள் எங்களைப்பற்றி எவ்வாறு நினைந்து எங்ஙனம் வருந்துவீர்களோ எனவும் ஒன்றன்பின் னொன்றாக நினைந்து பெரும் புயலில் அகப்பட்டு நடுக்கடலில் வழிமாறித் தத்தளிக்கும் மீகாமனைப்போற் கலங்கினேன்! இவ்வாறாக அன்றிரவு முழுதும் உறக்கமின்றி நிலத்தே கிடந்து புரண்டேன். விடியற் காலையில் முன்நாளிற் போலவே வந்த பெண்பிள்ளையோ டுடன் சென்று காலைக் கடன்களை முடித்து வந்தேன். அந்தப் பெரியவரும் பெரியம்மையுந் தம் இல்லத்திற்குச் சென்றார்கள்; யான் வெளியே போய்த் திரும்புதற்குள் அப்பெரியவர் மட்டும் பூசைக்கு வேண்டும் பொருள்களோடு அங்கு வந்திருந்து கதவைத் திறந்து வைத்திருந்தார். பிறகு பூசைநடைபெற்றது. யான் சிறிது உணவு கொண்டேன். அதன்பின் அப் பெரியவர் தம தில்லத்திற்குப் போகப், பிற்பகலில் அவர்தம் மகன் என்னிடம் வந்து முன்னாளிற்போலவே தன்னை மணஞ் செய்துகொள்ளும்படி தாழ்மையோடு வேண்டினான். யான் அதனை முற்றும் மறுக்கவே பின்னும் வாட்டத்தோடு போயினான். மாலையிற் பெரியவரும் பெரியம்மையும் எனக்குத் துணையாகவந்து படுத்துக் கொண்டார்கள். இப்படியாகவே நாலைந்துநாட்கள் சென்றன. நாட் செல்லச் செல்ல என் மனத்துயரமும் ஆறாய்ப் பெருகி வரலாயிற்று. ‘இச் சிறையினின்று என்னையும் என்னவர்களையும் விடுவித்துக் கொள்ள வழிகாணாமற் கள்வர்கையில் உணவுவாங்கி யுண்டு காலங்கழிப்பதோ! இதனைவிட்டுப் போவதென்று அல்லது உயிரைத் துறப்பதொன்று’ என உறுதிசெய்தேனாய், ஐந்தாம் நாட் காலையில் அப் பெரியவரை நோக்கிப் “பாட்டா, என்னை விடுதலை செய்விக்க வழியில்லையாயின் அதனை முடிவாகத் தெரிவித்து விடுங்கள்!” என்று கேட்டேன்.

அதற்கவர் உண்மையான மனத்துயரத்தோடும் “அருமைக் குழந்தாய், யானும் என் அகத்துக்காரியுங் கடந்த நாலு நாட்களாய்ப் பேசி உன்னையும் உன்னவர்களையும் அவர்க

ளிருப்பிடம் அனுப்பி விட வேண்டுமென்று என் மகனிடம் வற்புறுத்தியும் அவன் அதற்கு இணங்குகிற வழியாயில்லை. உன்னை மணஞ் செய்து கொள்ளக் கூடாவிட்டாலும் உன்னை வைத்துப் பார்த்துக் கொண்டாவது இருக்க வேண்டுமென்னும் நினைவுடையவனாய் இருக்கின்றான். உன்னுடைய நினைவே அவனுக்குப் பித்தாக ஏறிவிட்டது! உன்னுடன் வந்தவர்களையாவது விடுதலைசெய்யும்படி நான் கேட்டதற்கு முதலில் இணங்கிப் போனவன், அடுத்தநாளில் வந்து அதற்கும் இணங்காமற் பேசினான். யாரோ இரண்டுபேர் உளவாளிகளாய் வந்திருப்பவர் கள் பேச்சைக் கேட்டு அவர்களை விடுவிப்பதற்கு இணங்காமல் மனங் கலைக்கப் பட்டிருக்கின்றான்! என் செய்யலாம்! ஈது எப்படி முடியுமோ! அருமைச் சிறு குழந்தை யாகிய உனது துயரைக் கண்டு என்னாற் பொறுக்க முடியவில்லை! ஆதலால், என்னால் ஆக வேண்டுவது ஏதாயிருந்தாலும் யான் அதனைச் செய்யத் தடையில்லை, என்னால் ஆகாததற்கு யான் என்செய்வேன்!" என்று மனம்நைந்து கூறினார்.

இவருடைய சொற்களைக் கேட்டபின் இவ்விடத்தைவிட்டு அகலலாம் என்று யான் கொண்டிருந்த ஒரு சிறு நம்பிக்கையும் என்னைவிட்டகன்றது. இனி இவ்விடத்தைவிட்டு நீங்குவதற்குப் பெருமுயற்சி செய்யவேண்டுமென்றும், அம் முயற்சி கை கூடாதாயின் உயிரைத் துறப்பதே செயற்பாலதென்றும் முடிவு கட்டினேன். ஐந்தாம்நாட் காலையில் அப் பெரியவர் மேற்கூறியவாறு என்னுடன் பேசிவிட்டுத் தம் இல்லம் நோக்கிச் சென்றபின் யான் அம்மையைத் தொழுது கொண்டு பின்புறத்தேயுள்ள அருவிநீர் விழுங் குட்டத்தில் இறங்கினேன். முதலில் அஃது இடுப்பளவு ஆழம் உள்ளதாயிருந்தது. பின்னர் அதன் நடுவிற் செல்லத் தண்ணீர் என் கழுத்தளவுக்குவந்தது. அதனால் துணுக்குற்றுத் திரும்பிக் கரை ஏறினேன். ஏறிச் சிறிதுநேரம் அக் கரையின் மீது ஆழ்ந்த நினைவோடும் மனக் கவலையோடும் இருந்தேன். இப்போது என் உள்ளத்தில் ஒன்று தட்டுப்பட்டது. 'ஆழம் மிகுதியாயுள்ள இடங்களில் அமிழ்ந்திப் போகாத படியான் மிதப்பதற்கு ஏதுசெய்யலாமென்று எண்ணிப் பார்க்க ஒரு வெறுங் குடத்தை முதுகில் கட்டிக்கொண்டால் நீரில் அமிழாமல் மிதக்கலாம்' என்று ஒருநினைவு பிறந்தது. அதற்காக அம்மையைத் தொழுதேன். அம்மைக்குத் தண்ணீர் முகந்து விடும்

ஒரு செப்புக்குடம் அக்கோயிலின் ஒருமூலையில் இருந்தது. அதனை எடுத்துக்கொண்டுவந்து அம்மையின் எதிரே வைத்து 'அன்னாய், எழைக்கிரங்கும் ஏந்திழாய், இங்குள்ள இக்கொடிய கள்வர்கையில் நின்றும் பேதைச் சிறுமியாகிய யான் தப்பிப் போவதற்கு நீ திருவுளம் இரங்கல்வேண்டும். உனது திருக்குடமாகிய இதனை அடியேற்குத் தந்தருளல் வேண்டும்' என்று சொல்லிக் குறையிரந்தேன். அப்போது தலைக்குமேல் உள்ள ஒருபல்லி இனிதாக **முற்கந்தெறித்தது**. அதனை அம்மையின் விடையாகத் துணிந்து, அவள் வடிவத்தினை வலம்வந்துவணங்கி அக் குடத்தினை எடுத்துக்கொண்டு பின்னேயுள்ள குட்டத்தின்கரையில் சென்று எனது ஆடையில் ஒரு சிறு துண்டைக் கிழித்து அக்குடத்தின் கழுத்தைச்சுற்றி அத் துணியின் நடுவில் முடிபோட்டேன். அதன்பின் எனது ஆடையை என்னுடம்பெங்கும் நன்றாய் இறுகச்சுற்றிக் கட்டிக்கொண்டு, அக்குடத்தைக் கவிழ்த்து அதன்வாயை எனது பிடரியின்கீழ் முதுகின்மேல் வைத்து அதன் கழுத்திற்கட்டிய துண்டின் இருபுறத்தையும் அக்குளின் கீழ்விட்டு என்மார்பின்மேல் இழுத்துப் பட்டையாய் வைத்து முடிந்தேன். இவ்வாறு செய்தபின் 'இனி எவ்வாறாயினும் அம்மையின் திருவுளத்திற்கே ஒப்பிதம்' என்று நினைத்துத் துணிவோடும் அக் குட்டத்தினுள் இறங்கினேன். இறங்கி அதன் நடுவிற்செல்ல முன்போலவே தண்ணீர் கழுத்தண்டை வந்தது. இப்போது நான் சிறிதும் அஞ்சவில்லை. இன்னும் முன்நடந்து, அக் குட்டம் நிரம்பித் தண்ணீர் குறுகலாய் மலைப்பிளவி னூடு செல்லும் வாயிலண்டை வந்தேன். இப்போ தென்கால்கள் நிலத்திற் படவில்லை. என் முதுகின்மேற் கட்டியகுடம் என்னைத் தூக்கிக் கொண்டது. அவ்விடத்தின ஆழம் எனக்கு நிலைக்கவில்லை யாதலால், அந் நீரோட்டத்தில் யான் இப்போது என் விருப்பப்படி நடந்து செல்லக்கூடாமல் அதனால் விரைந்து இழுக்கப்பட்டேன். என் முதுகிற் கட்டியகுடம் என்னை மிதக்கவைத்தபடியா யிருக்க, யான் அந் நீரோட்டஞ் சென்றவழியே விரைந்து இழுக்கப்பட்டுச் சென்றேன். கீழ் நிலம் என் கால்களிற் சிறிதுந் தட்டுப்படாமையால் யான் செல்லும் இந் நீரோட்டம் மிகவும் ஆழமானதென்று கண்டேன். என் தலைக்குமேல் இரண்டு மூன்றடி உயரத்திலும் மலைப்பாறை, யான் செல்லும் நீரோட்டத்தின் இரண்டுபக்கத்திலும் மலை, சில

இடத்தில் அந் நீரோட்டம் மூன்றடியகலமும், வேறு சில இடத்தில் நான்கடியகலமும் இருந்தன. அதற்கு நேர்முகமாயிருந்து ஈரக்காற்று விறுவிறுவென்று வீசியது. இக்காற்று இல்லையானால் யான் மூக்சு அடைபட்டு அங்கேயே இறந்து போயிருப்பேன். நீரோட்டமானது என்னை மிகுவிரைவாய் இழுத்துச் சென்றது. யான் குடத்தின் உதவியால் ஏதொரு வருத்தமும் இன்றி மிதந்து சென்றேன். நீரின் விரைவை நோக்கநோக்க அது வரவரச் சரிந்துசெல்லும் பாறையினூடே செல்லுகின்றதென அறிந்தேன். 'இவ்வளவு விரைவாய்ச் செல்லும் இஃது எங்கே செங்குத்தான மலையின் ஓரத்திற்சென்று வழிகின்றதோ' எனவும், 'அங்ஙனம் வழியுமானால் யான் இந் நீரோட்டத்தாற் கீழ் இழுக்கப்பட்டு வீழ்ந்து சாவது திண்ணம்' எனவும் உணர்ந்து திகில் கொண்டேன். ஆனாலும், இப்போது என்னாற் செய்யக்கூடியது ஒன்றுமில்லை. ஆதலால், மனந்தேறி 'இறைவிவிட்டபடி விடட்டும்' என்று என்னைக் கைவிட்ட நினைவோடு சென்றேன்... ஆனாலும், இடையிடையே என் கால்களைக் கீழ் இறக்கி நிலம் தென்படுகிறதா என்று பார்த்தேன் ஒரு சிறிதுந்தென்படவில்லை. இந்நீரோட்டம் மலையினூடு செல்வதால், ஒரேயிருளாயிருந்தது. இவ்வாறு நெடுநேரம் இந்நீரிற் சென்றேன். ஏறக்குறைய ஏழெட்டுமணிநேரம் யான் தண்ணீரில் இருந்தமையாலும், அம்மலையருவிநீர் மிகவுங் குளிர்ந்திருந் தமையாலும் என் உடம்பிற் குளிரும் விறைப்பும் உண்டாயின. 'அந்தப் பாரசிக கனவானும் என் தமையனும் இருக்கும் நிலைமையை அந்தப் பாரசிகப் பெருமாட்டியாரிடம் சென்று தெரிவித்த பின் உயிர் போகுமாயின் அஃது எனக்கொரு பேர் ஆறுதலாயிருக்கும். அதுவரையில் எம்பெருமாட்டி என்னை உயிரோடு வைப்பையோ' என்று இறைவியை நினைந்து உருகி அழுதேன். பின்னுஞ் சிறிது நேரஞ்செல்ல, மறுபடியும் என் கால்களைக் கீழே இறக்கி இறக்கித் தடவினேன்: இப்போது உருண்டைக் கற்கள் என்காலிற் றட்டின் உடனே ஒரு பெருங்கிளர்ச்சி அடைந்தேன். இப்போது வரவர அந் நீரோட்டம் அகன்று காட்டியது; சிறிது வெளிச்சமும் வந்தது; அதன் இருபுறத்துள்ள மலைகளும் என் கண்கட்குப் புலனாயின; இப்போது பதினைந்தடி அகலமுள்ளதாய் அந் நீரோட்டந் தோன்றிற்று; அஃது அகல அகல ஆழங் குறைந்தது இப்போ தென்கால்கள் அடிநிலத்தே பாவின; தண்ணீர் கழுத்தளவு

நின்றது; அதில் யான் இப்போது சிறிது நடந்துசெல்லவும் முயன்றேன். பின்னும் அரைமணி நேரமாயிற்று; இப்போது வெளிச்சம் நன்றாய்த் தோன்றியது. இவ்வருவிக்கால் இம்மலைப்பிளவை விட்டுப் புறம்போகும் மலைவாய் என் எதிரே தோன்றிற்று. இப்போது அருவிநீர் என் இடுப்பளவுதான் இருந்தது. திரண்டகற்களுஞ் சிறுசிறு பாறைகளும் அடியிற் கிடந்தமையால் யான் அவற்றின் மேல் நடந்து செல்வது வருத்தமாகவே யிருந்தது. மேலுந், தண்ணீர் விசையாக இழுத்துச் சென்றமையால், அவ்விசைக்குத் தக்கபடியான் அத்திரட்சிக் கற்களின்மேல் நடந்து செல்வது இயலாதாயிற்று. அதனால், யான் மறுபடியும் எனது குடத்தின் உதவியால் மிதந்த படியாகவே சென்றேன். ஆயினுங், கீழ்நிலங் காலுக்குத் தென்படுகிறதா என்பதை இடைக் கிடையே காலால் தடவிப் பார்த்துக் கொண்டே சென்றேன். இப்போது மலைவாயிலண்டைவந்தேன். என் தலைக்குமேல் பத்துப் பதினைந்தடி யுயரம் மேற்கூரை வளைவாய் உயர்ந்திருந்தது. அவ்விடத்தில் நீரோட்டத்தின் அகலமும் ஏறக்குறைய இருபதடி அகலந்தான் இருக்கும். அவ்விடத்தில் மாலைக்கால வெளிச்சம் நன்றாய்ப் பட்டதனால், அவ்வருவிக்கால் செல்லும் அம்மலைக்கணவாயின் அழகும் அதனூடு செல்லும் அருவியின் ஓட்டமும் எனக்கொரு வகையான வியப்பினையும் மகிழ்ச்சினையும் விளைவித்தன. அக்கணவாயண்டைவந்தபின் தண்ணீர் தொடையளவே யிருந்தமையால் இனி யான் மிதந்து செல்லக்கூடாதாயிற்று. ஆகவே, மெல்ல மெல்ல நடந்து கணவாயின் புறத்தேவந்தேன். புறத்தே அவ்வருவி முப்பதடிக்குமேல் அகலமாய் விரிந்து, சிறிது சரிவான ஓர் இடைவெளியிற் சென்றது. அவ் விடைவெளியின் கீழுள்ள நிலமும் முழுக் கற்பாறையேயாகும். இங்கே தண்ணீர் முழங்கால் அளவுதான் இருந்தது. கீழ்நிலத்தில் உருண்டைக் கற்களாவது சிறுபாறைகளாவது இல்லாமையால் இவ் விடத்தில் நடப்பது முன்போல் எனக்கு அவ்வளவு வருத்தமா யில்லை. ஆனாலும், இந்த இடத்தில் தண்ணீர் ஓட்டம் மிக விரைவா யிருந்தமையால், நடைதள்ளாடி நின்று நின்று சென்றேன். இருபுறத்துஞ் செங்குத்தான மலைகள் வான் அளாவித் தோன்றின. தலைக்குமேல் திறப்பாய் மாலைக்காலத்து வான் சாம்பல்நிறமாய்த் தோன்றிற்று. எனக்கு எதிரில் நீரோட்டமும் அதுசெல்லும் மலைக் கணவாயும் வரவர அகன்றுகொண்டே

போயின. இக்கணவாய் எட்ட எட்ட வளைவாய்ச் சென்றமையால் எனக்கு எதிரே செங்குத்தான மலைச் சுவரையன்றி வேறொன்றையும் யான் காணக்கூடவில்லை. இருபுறத்துமுள்ள அம் மலைச் சுவர்களில் மரங்களின்வேர்களுஞ் சிற்சிலசெடிகளும் வளர்ந்து தொங்கின. கதிரவன் மறைந்து செல்லும் மேற்றிசை யிதுவென்றும் என்னால் தீர்மானிக்கக் கூடவில்லை. வரவர வெளிச்சமோ குறைகிறது. நீரோட்டத்தை விட்டு ஏறுவதற்குக் கரையோ அகப்படவில்லை. இன்னுஞ் சிறிதுநேரத்தில் என் நிலைமை எவ்வாறாய் முடியுமோ என்பதை நினைக்க என்மனம் மருண்டு கலங்கியது. உடம்புமுழுதுங் குளிர் மிகுதியால் உதறியது. தண்ணீர் முழங்காலுக்குமேற் சிறிதே யிருந்தாலும், அதுமிகு விசையோடும் ஓடுவதால் ஓரிடத்திற் சிறிதுநேரமாயினும் யான் நிற்கக் கூடவில்லை. இவ்வாறு பெருந் துன்பத்தோடும் மனத் திகிலோடும் இறைவனையன்றி ஏதொருதுணையு மின்றித் தன்னந் தனியேனாய் அம்மலைக் கணவாயினிடையே சென்ற எனது இடரான நிலையை யானே விரித்துச் சொல்வதை விட, என்னுயிரனைய தாங்களே அதனை நினைத்துப் பார்த்தால் நன்குவிளங்கும். இங்ஙனமாகப் பின்னும் ஒருமணிநேரம் அம் மலைக் கணவாயின் ஊடே தண்ணீரில் நடந்துசென்றேன்; இனி நடக்கமுடியாமற் கால் ஒய்ந்துபோகும் நேரமும் உடம்பு களைத் விழும் நேரமும் வந்தது. அந் நேரத்தில் இறைவனருளால் இந்நீரோட்டத்தின் இருபுறத்துந் தண்ணீர் மட்டத்திற்குமேல் இரண்டு மூன்றடி உயர்ந்த மலைப்பாறை செங்குத்தான மலைச்சுவரின் அடியிற் கரையாகச் சென்றது. அந்தக் கரையைக் கண்டதும் என்னுயிர் எனக்குவந்தது. நெடுவழி என்னைத் தூக்கிவந்த செப்புக் குடத்தை இப்போது யான் தூக்கி இடுப்பில் இடுக்கி வந்தமையால், அதனை முதலில் அந்தக் கரைமேல்வைத்து நீரோட்டத்தைவிட்டு அதன்மேல் ஏறினேன். முதலில் எனது ஆடையிலுள்ள தண்ணீரை யெல்லாம் நன்றாய்ப் பிழிந்து கூந்தலிலும் உடம்பிலும் உள்ள ஈரத்தைத் துவர்த்திப், பிறகு ஆடையை நன்றாக நீரில் அலைசிப் பிழிந்து உடுத்துக் கொண்டேன். இப்போது என்னால் தாங்க முடியாத களைப்பும் பசியும் நாவறட்சியும் உண்டாயின. அதனால், அந்தப் பாறைக் கரையின் மேல் அங்ஙனமே விழுந்து படுத்தேன். என்னை அறியாத தூக்கம்வந்து என்னைக் கவிந்து கொண்டது. மறுபடியும் யான் கண்விழித்துப் பார்க்கையில், பகல்வெளிச்சம் மறைந்து

போய்விட்டது, மங்கல் மாலைவெளிச்சம் மட்டும் வைகறைப் பொழுதுபோற் றோன்றியது. அதனால், யான் ஓர் இராப் பொழுது முற்றுந் தூங்கித்தான் எழுந்தோனோ வென்று நினைத்தேன். ஆனால் அப்படி இல்லை. அது மாலைப் பொழுது தான். தலைக்குமேல் வானிற் பாதிமதி பளிச்சென்று காணப் பட்டது. ஒருமணி நேரமாவது யான் நன்றாய்த் தூங்கியிருக்கவேண்டும். இப்போது என்உடம்பிலுள்ள அயர்வு பெரும்பாலும் நீங்கியது. ஆனால், பசியின்கொடுமை தாங்கக் கூடியதாயில்லை. வீட்டி லிருக்குங்கால் இரண்டுநாட் பட்டினி கிடந்தாலும் எனக்கு இவ்வளவுபசி தோன்றியதில்லை. இன்று காலையிற் சிறிதுஉணவு கொண்டிருந்துந், தண்ணீரில் நனைந்த படியாய் நீள வழிவந்த வருத்தத்தால் இவ்வளவு கொடும்பசி தோன்றலாயிற்றென உணர்ந்தேன். ஆனால், உணவுக்கு அங்கே ஏதுகிடைக்கப்போகிறது! என்று செங்குத்தான அம் மலைச் சுவரை நெடுக நோக்கினேன் யானிருந்த இடத்திற்குச் சிறிது முன்னே என் பக்கத்துச் சுவரில் கொவ்வைக் கொடிகள் படர்ந்து அடர்ந்து தொங்கின. அவற்றை உற்றுநோக்க அவற்றின் இடையிடையே பவளம்போற் சிவப்பான கொழுங்கனிகள் நிறையக் காணப்பட்டன. உடனே யான் எழுந்து அக்கொடிகளின் கிட்டப் போய்ப்பார்க்க அவை என் தலைக்குமேல் என கை எட்டக்கூடிய அளவுக்குமேல் இரண்டு மூன்றடி உயரத்தில் இருந்தன. இவ்வுற்ற நேரத்திலும் யான் கொண்டுவந்த அம்மையின் திருக்குடம் எனக்குப் பெரிதும் பயன்பட்டது. அக் குடத்தைக் கவிழ்த்து அதன்மேல் ஏறிநின்று தாவி அக்கொவ்வைக்கொடியைக் கீழ்இழுத்து, அதில் நன்றாய்ச் சிவக்கப் பழுத்துக் கனிந்திருந்த பழங்களை எனக்கு வேண்டுமளவு பறித்து, அவற்றை அருவி நீரிற் கழுவி யெடுத்து, அம்மையைத் தொழுது அயின்றேன். அவ்வளவு இன்சுவையுடைய பழங்களை இதற்குமுன்யான் எங்கும் உண்டதே யில்லை. அவைகளை என் பசி அடங்கும் மட்டும் அயின்று, அவ்வருவிநீரும் பருகியபின் என் கொடும்பசி அடங்கியது. அதன்பின் மேலுஞ்சில கொவ்வைப்பழங்களைப் பறித்துக் குடத்தினுள் வைத்துக்கொண்டு அம்மலைப்பாறைக் கரையின் மேல் நீளச் செல்வேனாயினேன். அந்தக் கரை இப்போது மூன்று நான்கடி அகலம் இருந்தது. தன்னந் தனிமையாய்ச் செல்வதும், போகப் போக இது கொண்டு

போய்விடும் இடத்தின்றன்மை தெரியாமையும், இவ்வாறு எத்தனை நாழிகை அல்லது எத்தனை நாள் இம்மலைப் பக்கங்களில் அலைந்து திரியவேண்டுமோ என்னும் நினைவும், இம் மலைநாடெங்குந் திரியும் அக்கள்வர்கள் என்னைத் தாம் வைத்த சிறையிற் காணாமையால் உடனே தேடிவந்து என்னைத் திரும்பவும் பிடித்துக் கொண்டு போய்விடுவார்களோ என்னும் அச்சமுந் தவிர வேறு எனக்கு அச்சத்தை உண்டுபண்ணத்தக்க கொடிய விலங்குகளாவது நச்சு உயிர்களாவது இது வரையில் யான் வந்த வழியிற் காணப்படவில்லை.

இவ்வாறு பலதலையாய்க் கலங்கிய உள்ளத்தோடும் இறைவியை நினைந்தபடியாய் அவ் வழியே சென்றேன். இப்போது பகல்வெளிச்சம் முற்றிலும் மறைந்துபோய்விட்டது. ஆனாற், பாதிமதி தெளிந்த நீலவானிற் குளிர்ந்த பேரொளி வீசியது. யான் செல்லும் அவ் விடமெல்லாம் நிலவின்வெளிச்சம் படுதலால் வெண்மையாகத் தோன்றின; யான் போகும்வழியுந் தெளிவாய்த் தெரிந்தது. யான், இப்போது செல்லும் மலைக் கணவாய்க் கரையின் பக்கத்தே செல்லும் அருவியானது வரவர அகலமாய்க் காணப்பட்டதோடு, கரையின் கீழே வரவரச் சரிந்து ஆழத்திற் சென்றது. யான் நடக்குங் கரையொ மேல் ஏற ஏற எனக்குமுன் உயர்ந்து போவதால் ஏறி நடப்பது இப்போது எனக்கு வருத்தமாயிருந்தது. என்றாலும் நின்று நின்று மூச்சு வாங்கிக்கொண்டு நடந்தேன். என் பக்ககத்திலுள்ள செங்குத்தான மலைச்சுவர் போகப் போகக் குறுகியது. கடைசியாக யான் செல்லுங்கரையும் செங்குத்தான மலைச்சுவரின் உச்சியும் ஒரே மட்ட மாயிருக்கும் இடத்தில் வந்து சேர்ந்தேன். வந்துசேர்ந்தபின் அங்கு அந்தக் கரையின் ஓரமாய் நின்ற ஒரு மிகப் பெரிய ஆலமரத்தின வேரைப் பற்றிக்கொண்டு கீழேநோக்கினேன். என்னைச் சுமந்து கொண்டு வந்த அருவியானது யான் நின்றவிடத்திற்கு ஒரு பனைமர உயர ஆழத்தில் ஏறக்குறைய நூறடி அகலமுள்ளதாய்ச் செங்குத்தான ஒரு மலைச் சுவரின்மேற் கீழ்வழிந்தது. வழிந்தநீர் அங்கிருந்து இன்னும் ஒருபனைமரஉயர ஆழத்திற் காணப்பட்ட மட்டமான ஒருபெரிய மைதான வெளியில் வீழ்ந்து பரவியோடக் கண்டேன். மேலிருந்து அது வழிந்துவிழும் இடத்தில் ஒரு பெரும் பள்ளமான நீர்நிலை அமைந்திருக்கவேண்டுமென எண்ணினேன். ஏனென்றால்,

அங்கே அவ் வருவிநீர் விழுதலால் ஒவென்னும் ஒரு பேரிரைச்சல் ஓயாது அப் பக்கமெங்கும் பரவிக்கொண்டிருந்தது. இழிந்தநீர் நொப்பும் நுரையுமாய் வெள்ளை வெளேலென்று அலையலையாய் மிகு விரைவாய்ப் போய்க்கொண்டிருந்தது. இங்ஙனம் வந்துவிழும் இவ் வருவி நீரின் பக்கத்தே யான் ஏறிவந்தகரையேயில்லாமற் செங்குத்தான வெறுஞ்சுவரே இருந்திருக்குமாயின், யான் அவ்வருவி நீரோடு கூடவே வந்து இங்கே கீழ்விழுந்து இதற்குள் மாய்ந்து போயிருக்க வேண்டுமே! என்று நினைந்து திகில் கொண்டேன். என்னைப்போல் இவ்வழியில் தப்பித் தவறிவரும் ஏழைமக்களையும் பிற உயிர்களையுங் காக்கும் பொருட்டாகவோ எல்லா இரக்கமும் வாய்ந்த இறைவன் செங்குத்தான இம்மலையடி வாரங்களிலும் இவ்வருவிநீருக்குக் கரையை அமைத்துவைத்தான்! என் றெண்ணி ஐயன் படைப்பின்றிறத்தை வாழ்த்தினேன்.

நிலாவெளிச்சம் முன்னையிலும் விளக்கம்மிகுந்து திகழ்ந்தது; வானம் மாசுமறுவின்றித் தெளிந்த நீலநிறமுடையதாய் வெண்மையான அந் நிலவொளியோடு மாறுபட்டுத் தோன்றியது. யான் இப்போது வந்துசேர்ந்த இடத்திலிருந்து நாற்புறமும் பார்க்கக்கூடியவாய் இருந்தன. என்னைக் கொண்டுவந்த அருவிநீர் மேற்குமுகமாய் ஓடிற்று. யானும்மேற்கு நோக்கிய படியாய் நின்றேன்.அவ்வருவிக்குத் தென்னண்டையிற் காடுகளால் மூடப்பட்ட மலைத்தொடர் வான் அளாவித் தோன்றியது. எனக்கு இடப்புறத்தேயிருந்த அம்மலைக் காடுகளிலிருந்து வேங்கைப்புலியின் உறுமும் ஒலியும், மற்றுஞ்சில விலங்கினங் களின் ஓசையுங் கேட்டன. எனக்கு வலக்கைப் புறத்திலோ மட்டமானவெளியுஞ் சிறிதுசிறி துயர்ந்த மலை மேடுகளுஞ், சிறிது சிறிது ஆழ்ந்த மலைப் பள்ளங்களும் இருந்தன; ஆங்காங்குப் பெரியபெரிய மரங்கள் இருந்தனவேயல்லாமல் காடுகள் இல்லை. யானிருந்தபக்கத்திற் காட்டுவிலங்குகளின் இரைச்சல் சிறிதும் இல்லை. அதனால், யான் இந்தப்பக்கத்துக் கரையில் ஏறிவரும்படி அறிவுதந்த இறைவியின் அருளுக்கு ஏழையேன் எங்ஙனங்கைம்மாறு செலுத்தவல்லேன்! இடக்கைப் பக்கத்துக்கரையிலேறி அந்தப் பக்கமாய்ச் சென்றிருப்பேனானால் அக் காட்டில் அகப்பட்டு மறவிலங்குகளுக்கு இரையாய்ப்போ யிருப்பேன்.ஆகையாற் ‘கடவுளை நம்பினோர் கைவிடப்பட்டார்’ என்னும் பழமொழியின் உண்மை என் உள்ளத்தில் அழுந்திப்

பதிந்தது. எனக்குப் பின்னாலும் மலைகள் அடுக்கடுக்காய் வான்அளாவித் தோன்றின. யானிருந்தபக்கத்தில் எனக்கெதிரே மேற்கில்மட்டும் எனக்குத் தடையாய் மலைகள் வளர்ந்து உயர்ந்ததில்லை. அதனாலும், பம்பாய் நகரமானது மேற்குக் கடற்கரை ஒரமாய் இருப்பதொன்றதலாலும், அம் முகமாகவே யான் செல்லல் வேண்டுமென உறுதி செய்தேன். இப்போ தெனக்கு மீளவும் பசியுங்களைப்பும் வந்தமையால், யான் குடத்திற் கொண்டு வந்த கொவ்வைக்கனியையருந்திக், குடத்தி லெடுத்து வந்த அருவி நீருஞ் சிறிதுபருகினேன். இராப்பொழுதிற்கு இவ்விடத்திலேயே படுத்திருந்து காலையிலெழுந்து செல்லலாமா என்று முதலில் நினைத்தேன். அடுத்தாற்போல் அது கூடாதென்று எண்ணினேன். என்னைக் காணாமையால் அக் கள்வர்கள் விடியற்காலையிலேயே இப்பக்கமெல்லாம் வந்து என்னைத் தேடிப்பிடிக்க முயல்வார்க்ள். ஆதலால், உடனே இவ்விடத்தை விட்டுச் சிறி துந்தாழாமற் செல்லல் வேண்டுமென்று அச்சத்தால் உந்தப்பட்டு எழுந்தேன். இல்லா விட்டால், இதற்குமுன் என்வாழ் நாளில் இத்தகைய வருத்தங்களை யடைந்திராத என்னுடம்பிற்கு நேர்ந்த களைப்பும் உழைப்பு மானவை என்னை அங்கேயே படுத்து உறங்கச் செய்திருக்கும். எழுந்து என் மனம்போனவாறு மேற்குத்திக் கினையே குறியாக வைத்துக்கொண்டு நடந்து சென்றேன். மேடு பள்ளங்களில் ஏறியும் இறங்கியுஞ் சென்றேன். இன்றிரவு நிலாவெளிச்சம் எனக்குச் செய்த பேருதவி என்றும் என் வாழ்நாளில் மறக்கற் பாலதன்று. அங்குள்ள அக் குறிஞ்சி நிலத்தில் அந்நேரத்தில் யான் எவ்வளவு விரைவாய் நடக்கக் கூடுமோ அவ்வளவுவிரைவாய் நடந்தேன். **மதியமோ** வரவர மேற்றிசையிற் சாய்ந்து போக, அதன் நிலவு வெளிச்சமும் வரவரக் குறைந்துவந்தது. எனக்கோ ஆற்றப் பொறாத இளைப்புங் களைப்பும் வந்து சேர்ந்தன. இப்போது நிலவொளி முற்றும் மறைந்துபோயிற்று. எங்கும் வெருக்கொள்ளத்தக்க பேர் இருள் பரவிற்று என் காலடிகள் இனி நடக்க முடியாதென்னும் படி எரிவெடுத்தன. எங்குங் கரியமைக்குழம்பைக் கரைத்து விட்டாற் போல இருள் திணிந்திருத்தலால் எனக்கு வழி துறையொன்றும் புலப்படவில்லை. என்னுடம்பின் அயர்வோ தாங்கமுடியாமல் அவ்விடத்தே ஒருமட்டமான பாறைமேற் சோர்ந்து

படுத்துவிட்டேன். இந்நேரத்தில் ஒரு மலைப்பாம்பு என்னை எடுத்து விழுங்கினாலும், அல்லதொரு வேங்கைப்புலி யடித்தாலுந் தெரியாது. அவ்வளவு துணையற்ற நிலைமையில் இறைவியையே நம்பிக்கிடந்தேன்.

சிறிதுநேரம் அவ்விடத்தில் நான் நன்றாய் உறங்கியிருக்க வேண்டும். அவ்வுறக்கங் கலையுந்தறு வாயில் ஒரு கனவுகண்டேன். முழுமதியைச்சூழக் காணப்படும் ஓர் ஒளிவட்டத்தைப்போன்ற தொன்று அக் கனவின்கண் என் எதிரே தோன்றக்கண்டேன். அவ் வட்டத்தை யான் கண் இமையாமல் நோக்க அதன்நடுவில் ஒரு பெரியவர் உருவந் தோன்றியது. முதலில் அது மங்கலாயிருந்தது. அதனை நான் உறுத்து நோக்க நோக்க அஃது ஒளிமிகுந்து துலக்கமாய்க் காணப்பட்டது. இப்போது அவ் வுருவத்தின் திருமுகத்தை அமைதியாய்ப் பார்க்க அஃது இறந்து போன என் மாமனாரது முகமாய்ப் புலப்பட்டது. அவரைக் கண்டதும் எனக்கு ஆற்றொணாத்துயரம் மிகக் கண்ணீர் ஆறாய்ப் பெருகிற்று. “அன்பும் அறிவும் இரக்கமும் ஓர் உருவெடுத்தா லொத்த மாமா, தாங்கள் இறந்துபோன தாகவன்றோ நினைத்தேன்! இதோ தாங்கள் உயிரோ டிருக்கிறீர்களே! தெய்வத் தன்மைவாய்ந்த பெருமானே, அத்தனை நாளாகத் தாங்கள் எளியேனை விட்டு எங்கே சென்றிருந்தீர்கள்?” என்றுசொல்லி அவர் திருவடிகளைப் பிடித்து என்கண்களில் ஒற்ற முயன்றேன். ஆனால், அவை என் கைகளுக்கு அகப்படவில்லை. பிடிக்கப்பிடிக்க முயன்றும் அவையகப்படாமல் இடைவெளியில் நிற்கக் கண்டு வியப்புற்று அவரது திருமுகத்தைப் பார்க்க, அவர் என்னைப்பார்த்துப் புன்சிரிப்புக்கொண்டு “குழந்தாய், நான் இறந்து போகவில்லை. எனது பழையஉடம்பு பழுதாய்ப் போனபடியால், அதனைவிட்டு வேறொரு சிறந்த உடம்புபெற்று வேறோர் உயர்ந்த உலகத்திலிருக்கின்றேன். நீ உன்னால் நீக்கிக்கொள்ள முடியாத இடரான நிலைமையி லிருக்கும்போது உனக்கு நான் உதவிசெய்ய வருவேன் என்று உன்னிடஞ் சொல்லிச்சென்ற படி இப்போ திங்குவந்தேன். யான் இங்கேவருவதற்கு இசைந்து என்னை யழைத்துக்கொண்டு என்னுடன் வந்திருக்கும் இத்தெய்வப் பெருமானை வணங்கு” என்று தனக்குமேற்சுட்டினார். அவர் சுட்டிய இடத்தைநோக்கச் சொல்லுக்கடங்காப் பேரழகும் பேரொளியும் வாய்ந்த ஒரு தேவவடிவம் என் கண்கட்குப் புலனாயிற்று. அதனை

இன்னதென்று வாழ்த்தும் வகையறியாப் பேதையேன் நெஞ்சம் நெக்குநெக்குருகக் கைகளைத் தலைமேற் குவித்துப் "பாவியேன் கண்கட்குப் புலனான அருட்கடலே தேவரீரை எங்ஙனம் வாழ்த்துவேன்! எவ்வாறு வணங்குவேன்!" என்று அழுதுரைத்தேன்; அஃது, என்மேற் புன்சிரிப்புற்று என் தலைமேற் றன் கைகளை நீட்டியது. அதன்பின் யான் அதனை மறுபடியும் நிமிர்ந்து பார்க்க அஃது என் கண்களுக்குப் புலப்படாதாயிற்று. இதற்குள் அத் தேவவடிவத்தின் கீழ்நின்ற என் மாமனார் "அருமைக் குழந்தாய், நீ மிகவும் பொல்லாத இடத்தில் இப்போதிருக்கின்றாய். இனி, ஒரு நொடிப்பொழுதும் இங்கிராதே, எழுந்து என்னுடன்வா". என்று சொல்லித் திரும்பி என்முன்னே நடந்தனர். அவர் சொல்லிய சொற்களைக்கேட்டு என் நெஞ்சம் பதைத்து எழுந்தேன். அவர் பிறகே சென்றேன். யான் செல்லும் வழியெல்லாம் ஒரே ஒளியாயிருந்தது. ஓர் ஆள் மட்டுஞ் செல்லத்தக்க மலையோரங்களிலும், காடுகளினும், கீழ்நோக்கினாற் கிடுகிடு பள்ளமாயிருக்கும் இடங்களின் விளிம்புகளினுஞ் சிறிதும் அச்சமின்றி அவ்வுருவத்தைப் பின்பற்றிப் போயினேன். இப்போது யான் நிலத்தின்மேற் சென்றாலும் என் அடிகள் நிலத்திற் பாவுவதுபோற் காணப்பட வில்லை. என் அடிகளுக்காவது, என் உடம்புக்காவது சிறிது வருத்தந் தோன்றவில்லை. அதனால், யான் கனவுநிலையி லிருக்கின்றேனோ அல்லது நனவு நிலையிற்றான் இருக்கின் றேனோ, இன்னதுதானென்று உறுதிப்படுத்ததக்கூட வில்லை. இவ்வாறாக நடந்து செல்கையிற் கிழக்கு வெளுத்தது; காக்கை கரைந்தது; பல்வகைப் பறவைகளும் அங்குமிங்குமாய்ப் பறக்கலாயின; உடனே எனக்கு முற்சென்ற என்மாமனார் திருவுருவத்தைக் காண்கிலேன். சிறிதுநேரத்திற் பகலவன் கிழக்குத்திக்கிற் செந்நிறத் தழல்வடிவாய்த் தளதளவென்று தோன்றினான். யான் ஒருபக்கத்து மலைத்தொடரின்மேற் புகைவண்டி செல்லும் இருப்புப்பாதை ஓரத்தில் நின்றேன். தொலைவிற் புகை வண்டியின் சீழ்க்கை ஒலி வந்தது. வரப்போவது பம்பாய்க்குச் செல்லும் வண்டியாயிருக்கலா மென்பது என் மனத்திற் பட்டது. இரண்டொரு நொடியில் வண்டி வருவது தெரிந்தது. உடனே என் முன்றானையை அவிழ்த்து விசிறினேன். யானிருக்கும் மிடத்திற்கு மெதுவாய்வந்து அவ்வண்டி நின்றது. உடனே அவ்வண்டிக்குக் காவலாய்ச்செல்லும் வெள்ளைக்

காரத்துரை ஒருவரும் இரண்டு சேவர்களும் வண்டியை விட்டிறங்கி வியப்போடும் என்னிடம்வந்து என்னை அவர்கள் ஆங்கில மொழியிலும் இந்துஸ்தான் மொழியிலும் வினவினார்கள். எனக்குத் தமிழ் ஒன்றைத்தவிர வேறுமொழி தெரியாதென்று சொல்ல, அந்த வெள்ளைக்காரர் வண்டி நெடுகப்போய்க் கேட்டுத் தமிழ் தெரிந்த தென்னாட்டார் ஒருவரை என்பால் அழைத்து வந்தார். அவரிடஞ் சுருக்கமாக யான் கள்வர்கையில் அகப்பட்டு மீண்டதைத் தெரிவித்து யான் பம்பாயில் இன்னார் வீட்டுக்குச் செல்ல வேண்டு மென்பதையுங் குறிப்பித்தேன். சேவகர்கள் யான் சொல்லியவைகளை யெல்லாங் குறித்துக் கொண்டு, என்னை அன்போடும் இரக்கத்தோடும் மரியாதையாக வண்டியிலேற்றிப் பம்பாயில் அந்தப் பாரசிக அன்னையார் மாளிகையிற் கொண்டு வந்து சேர்ப்பித்து அந்த அம்மையாரிடம் ஒப்புவித்து, மறுபடியும் வருவதாகக் கூறிச் சென்றார்கள்.

இன்னும் ஒருமணிநேரத்தில் நாங்கள் புறப்படப் போகின்றோம். என் ஆருயிர்பெருமானே, தங்கள் அன்பின் திறத்தாலும், எல்லாம் வல்ல கடவுளின் அருளாலும் நாங்கள் இவ்விடத்திற்கு மீண்டபின் மற்ற வரலாறுகளும் விரிவாய் எழுதுவேன். இப்போது தங்கள் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி அவற்றை முத்தமிடுகின்றேன்.

# கடிதம் - 17

*என் இன்னுயிர்த் தெய்வமாய்,*

*என்னிரு கண்மணியாய்த் திகழும் என் இன்பப்பெருமானே! நான்கு நாட்களுக்குமுன் யான் எழுதிய கடிதம் பெற்றிருப்பீர் களென்று நம்புகின்றேன். அக்கடிதத்தை மிகவும் விரைவாய் எழுதித் தபாற்சாலைக்கு அனுப்பியபின் ஒருமணி நேரத்தி லெல்லாம் வண்டிக்குப் புறப்பட்டோம். யான் முற்கடிதத்தில் தெரிவித்திருந்த படியே பன்னிரண்டு சேவகர்களும் நுண்ணறிவு வாய்த்த ஓர் அதிகாரியும் எங்களிடம் வந்துசேந்தார்கள். அந்தப் பாரசிக அம்மையார்க்கு நெருங்கிய உறவினரான ஆறு ஆண்பாலாருங் கூட வந்து சேர்ந்தனர். நாங்கள் திரும்பிவரும் வரையில் அந்த அம்மையார் தம் குழந்தைகளையெல்லாம் நன்குபாதுகாக்கும் படி அக்குழந்தைகளோடு நெருங்கிப் பழகிய ஏவற் காரிகள் சிலரையும் உறவினரான பெண்பாலார் சிலரையுந்திட்டப் படுத்தினார். தம் பெரியபெண் பிள்ளையை அருகழைத்து அதன் மனத்தைத் தேறுதலாய் வைத்துக் கொள்ளத்தக்க மொழிகளைச் சொன்னார். யானும் அப் பெண்ணுக்குப் பலவகையான தேறுதல் சொன்னதோடு நான்கு நாளில் ஐயாவைக் கட்டாயம் அழைத்துவருவதைப் பற்றியும் வற்புறுத்திச் சொல்லி முத்தமிட்டேன். யான் நேற்றிரவெல்லாம் மலையிலும் காட்டிலும் அலைந்து வந்தமையால் மறுபடியும் இன்றைக்கு அவ்வழியில் நீள நடந்து செல்வது இயலாமை யாயிருக்கும் என்று மெல்லிய அடிகளையுடைய அப்பாரசிக அன்னையார் கரடு முரடான அவ்வழியில் நடப்பது கூடாமை யாயிருக்கு மென்றும் யான் சொல்லவே அவ்வம்மையார்க்கு உறவினரான ஆடவர் அறுவரும் எங்களைத் தூக்கி செல்வதற்கு இசைத்து இரண்டு துணிந்தொட்டில்கள் ஒழுங்குபடுத்தி எடுத்துக்கொண்டார்கள். எங்கள் இருபத்தொரு பெயர்க்கும் ஒருவாரத்திற்கு வேண்டிய அளவு இலேசான உணவுப்*

பண்டங்களுந் தொகுத்தெடுத்துக் கொள்ளப்பட்டன. ஆண்பாலாரிற் சேவகர்களும் அதிகாரியும் மட்டும் கைத் துப்பாக்கிகளுங் கத்திகளும் இடுப்பிலுந் தொடையிலும் வைத்துக் கட்டிக்கொண்டார்கள். மற்ற அறுவரும் முனையிற் கூரியவேல் உள்ள நீண்ட குத்துக்கோல்களைப் பிடித்துக்கொண்டார்கள். என்னை மிதப்பித்துக் கொண்டுவந்தஅம்மையின் திருக்குடத்தை இப்போதும் எனக்குத் துணையாக எடுத்துக்கொண்டேன்.பாரசிக அன்னையாரும் ஒருகால் தண்ணீரிற் செல்லவேண்டி நேர்ந்தால் அதற்கு உதவியாக ஒரு சுரைக்குடுக்கையுங் கூட எடுத்துக் கொண்டோம். பிறகு யானும் அம்மையாருங் காற்சட்டை மேற்சட்டையிட்டுத் தலையிற் குல்லா வைத்துக்கொண்டோம். எங்களுக்குள்ள பெரிய துன்பத்தின் இடையில் யாங்கள் இருவரும் ஆண்கோலம்பூண்டு ஆண் மக்களுடன் நிற்கலானது எங்களுக்கு ஊடேஊடே நகையினையும் நாணத்தினையும் விளைவித்தது. என்செய்யலாம்! ஊழ்வினையின் வலி மிகப்பெரிது! அம்மையார்க்கு உறவினரான ஆண்பாலார் அறுவர்மட்டும் எங்கள் ஆண்கோலத்தைப் பார்த்துப் புன்சிரிப்புக் கொண் டார்கள். சேவகர்களும் அதிகாரியும் அங்ஙனம் புன்சிரிப்புக் கொண்டிலர். "பெருமாட்டிமார் இருவர்க்கும் இவ் வாண்உடுப்பு அழகாகவே யிருக்கின்றது." என்று அமைதியோடு சொன்னார்கள். இன்னுஞ் சில சில்லறை ஏற்பாடுகளுஞ் செய்தான பின் மாலையில் எல்லாரும் புகைவண்டிநிலையத்துக்குப் போய்ச் சேர்ந்தோம். அன்றைக் காலையில் என்னை வண்டியில் ஏற்றிவந்த வண்டிக்காவல் வெள்ளைக்காரரும் மற்றிரண்டு சேவகரும் எங்களுடன் கலந்து பேசியபின், எங்களையெல்லாம் யான் வண்டியிலேற்றப்பட்ட மலைப் பக்கத்திற் கொண்டுபோய் இறக்க வேண்டுமென்பது தீர்மானஞ் செய்யப்பட்டது. பின்னுஞ் சிறிது நேரத்தில் யாங்கள் எல்லாரும் வண்டியில் ஏற, வண்டி புறப்பட்டு, இரவிற் பத்து மணிக்கு யாங்கள் இறங்கவேண்டிய மலைப்பக்கத்தில் எங்களைக் கொண்டுவந்து இறக்கிப்போயிற்று.

இப்போது வான த்தின்கண் நிலவின் ஒளிவிரிந்து கீழுள்ள அம் மலைநாட்டிடங்களையெல்லாந் தெளிவுறக் காட்டிற்று. ஆள் வழக்கம் இன்றித் தன்னந்தனியாயுள்ள அப் பக்கங்களில் யான் ஒன்றியாய் வந்தகைப் பற்றி அன்னையார் மிகவும் வருந்திக் கூறிப் பிறகு உயிர்பிழைத்து யான் வந்தமைக்காகக் கடவுட்கு நன்றி

செலுத்தினார். மற்ற ஆடவர் எல்லாரும் யான் அம் மலை நாட்டிற் றனித்து வந்ததைப் பேசிப் பேசி வியந்தனர். அம்மலைநாட்டில் எங்கோ ஒருகுகையிற் சிறையாய்க் கிடக்கும் நம்மவர் இருவரையுந் தேடிக் கண்டு பிடிப்பதற்குப் பகற்பொழுதில் இப் பக்கத்தே செல்லவேண்டுவதாயிருக்க, இராப்பொழுதில் சென்றது எதனாலென்று தாங்கள் நினைக்கக்கூடும். யான் அம்மலை களினிடையே நடந்து வந்தது இராப்பொழுதே யாகையால் அப்பொழுதில் அங்கே சென்றால் தான் யான் வந்தவழியின் அடையாளத்தை யான் கண்டு கொள்ளக் கூடும். ஒளி மிகுந்த பகற்காலத்திலானால் யான் அவ்வழியின் அடையாளத்தைக் கண்டு செல்லுதல் இயலாதாகும். அன்றிரவு யான் வந்த வழியின் அடையாளம் இப்போது எனக்கு நன்றாய்த் தெரிந்தது. அன்றிரவு எம்மாமனார் எனக்கு முன்னே வழிகாட்டிச் செல்ல, அவர்க்குப் பின்னே தோன்றிய ஒளிக்கும் இப்போது வீசும் நிலவொளிக்கும் வேற்றுமை மிகுதியாயில்லை. ஆதலால், யான் முன்னே வழிகாட்டிச் செல்லத் துவங்கினேன். அம்மையார் என்னோடு பக்கத்தே வரலானார். நாங்கள் நடப்பதைக் கண்டு எங்கள் உறவினரான ஆடவர் அறுவரும் எங்களை இப்போது தொட்டிலில் தூக்கிக்கொள்வதாக வற்புறுத்திச் சொன்னார்கள். ‘எங்களால்’ நடக்கக் கூடியவரையில் நடப்போம், நடக்க முடியாத இடங்களில் மட்டும் அவ்வாறு உதவிசெய்தாற் போதும்’ என்று யான் சொல்கையில், அம்மையார் ‘குழந்தையாகிய நீ நேற்றிரவு முழுதும் அலைச்சலுற்றதனால், நீ தொட்டிலிலிருந்த படியே வழிகாட்டிச் சொல்லலாமே’ என்றார்கள். ஆயினும், நறுமணங்கமழும் அல்லிமலர் அனைய அவ் வன்னையார் இதற்கு முன் நடந்தறியாத அவ்வல்நிலத்தில் நடந்துவர, யான் மட்டுந் தொட்டிலேறிச் செல்வது என்மனத்திற்கு இசையாமை யாற் “சிறிது நேரமேனும் யான் நடந்துவருதற்கு விடைதரல் வேண்டும்” என யான் கெஞ்சிக் கேட்டதன்மேல் அவர்கள் சும்மா இருந்தார்கள். இவ்வாறாக இரண்டுமணிநேரம் வரையில் யாங்கள் நடந்து சொன்றோம். ஆடவர்கள் எங்களினும் விரைந்து நடக்கக்கூடியவர்க ளாகையால், எங்களுடன் வந்த வலிமையும் ஆண்மையும் மிக்க ஆட்களெல்லாரும் எங்களுடன் மெல்லென நடப்பது தமக்குப் பெருவருத்தமாயிருக்கிறதென்று தெரிவித்து எங்களைத் தொட்டிலில் ஏறிக்கொள்ளும்படி வற்புறுத்தி வேண்டினார்கள். எங்கட்கும் இனி நடப்பது வருத்தமாய்த்

தோன்றவே யாங்களும் அதற்கு இசைந்தோம். உடனே இரட்டுத்துணியிற் செய்த இரண்டு தொட்டில்களை எடுத்து இரண்டு குந்தக்கோல்களிற் கோத்து எங்கள் ஆட்களில் இருவர் ஒரு குந்தக்கோலின் இருமுனைகளைத் தம் தோள்களின் மேற்றூக்கிக் கொண்டார்கள்; மற்றிருவர் மற்றொன்றனை அங்ஙனமே தூக்கிக்கொண்டார்கள். அம்மையார் ஒரு தொட்டிலினும், யான் மற்றொரு தொட்டிலினுமாக ஏறிக் கொண்டோம். எனது தொட்டிலைச் சுமந்தவர்கள் எல்லார்க்கும் முன்னே செல்ல யான் அதிலிருந்தபடியே வழிகாட்டிக்கொண்டு போனேன். இவ்வாறு வழிநடந்து நிலவொளி மேற்றிசையில் மறையும் முன்னமே, என்னைத் தூக்கிவந்த அருவிநீர் செங்குத்தான மலைப்பாறையின் மேல் வழிந்து கீழே ஒருபெரும் பள்ளத்தாக்கில் விழும் அவ்விடத்தின்கண் மேல் உயரத்தில் உள்ள ஆலமரத்தினடியில் வந்துசேர்ந்தோம். எல்லேமும் வழிவந்த வருத்தமும் அயர்வும் நீங்க அதன் கீழுள்ள மட்டமான பாறையில் அமர்ந்தோம். என்னைத் தூக்கிக் கொணர்ந்த அருவியோட்டத்தை எல்லார்க்குங் குறித்துக் காட்டி, யான் அதனைவிட்டு ஏறிய பாறைக்கரை இன்னுஞ் சிறிது தொலைவிலுள்ளதெனக் கூறினேன். இப்போது நிலவொளி மறைந்து போயிற்று. எங்கட்கு எதிர்ப்பக்கத்தேயுள்ள மலைக்காடு களிலிருந்து வந்த வலிய மற விலங்குகளின் ஓசையைக் கேட்டு எல்லாரும் “அந்தப் பக்கமாய்ச் செல்லாமல் இந்தக் கரையில் இந்த அம்மா ஏறிவந்தது தெய்வச் செயலே யாகும்!!! என்று அவரவர்க் குரிய மொழியிற் பேசிக்கொண்டார்கள். அவர்கள் பேசிய மகாராட்டிரம் பாரசிகம் என்னும் இரு மொழியும் என் அம்மையார்க்கு நன்றாய்த் தெரியுமாதலால் அவர்கள் அவற்றைத் தமிழில் எனக்குச் சொல்லித் தாமுங் கடவுளின் பேரருளை நினைத்து வியந்து வாழ்த்தினார்கள். இப்போது எங்கும் பேரிருளாய் இருந்தமையால் யாங்கள் கொண்டு வந்த கைவிளக்குகளை ஏற்றிவைத்தோம். அதற்குமேல், என்னை அடைத்து வைத்திருந்த குகைக்கு நாங்கள் எல்லாருஞ் செல்ல வேண்டிய வழியைப்பற்றி ஆராய்ந்து பார்க்கலானோம்.

சேவகர்களுக்குத் தலைமையாய் வந்த அதிகாரி “இந்த அம்மா வந்த நீரோட்டத்தின் வழியாக நாம் சென்று அந்தக் குகையை அடைதல் முடியாது. மலைச்சரிவில் மிகு விரைவாய் ஓடி வரும் அந் நீரோட்டத்தின் வழியே மிதந்து வருதல்

எளிது; ஆனால், அந் நீரோட்டத்திற்கு எதிர்முகமாய் அதனூடு நீளச் செல்வது எள்ளளவும் முடியாது. முழங்கால் அளவு கழுத்தளவு நீருள்ள யாறுகளில் எதிர்த்துச் செல்வதே பெரிதும் வருத்தமானதென்றால், தலைக்குமேல் நிலைகொள்ளாமல் நீர் மிகுந்து இரண்டு குறுகலான மலைச்சந்துகளினூடே சரிவில் மிகுவிரைவாய் ஒடிவரும் அதன் கண் இத்தனை பெயரும் - அதிலும் பெண்பாலார் இருவரோடு, அதனை எதிர் ஊடறுத்துச் செல்வது கனவினும் முடியாது. ஆகையால், விடியும்மட்டும் நாம் இவ் விடத்திலேயே இளைப்பாறி யிருந்து, விடியற்காலையில் அக் குகைக்குச் செல்லும் வழி தெரிந்து, அதன்பின் நாம் எல்லாம் அங்கே செல்லல்வேண்டும்.'' என்று அறிவோடு கூறினார்.

அவர் சொல்லியவைகளை என் அம்மையார் தமிழில் விளக்கவே யான், ''இந்த அருவியோட்டம் நம் கண்களுக்குப் புலப்படும்வரையில் இந்தச் செங்குத்தான மலையுச்சியின் ஓரமாய்ச் சென்று, பிறகு அது நம் கண்களுக்குப் புலப்படாத இடத்திலிருந்து மேன்மேல் உயரத்திற்போய் நாம் அக் குகைக்கு வழி கண்டு கொள்ளல் வேண்டும். அக்குகையில் யான் இருந்தவரையில் நாடோறுங் காலைமாலை வெளியே சென்று காலை மாலைக் கடன்களை முடித்துவந்த ஓர் அழகிய இடம்உண்டு. அவ்விடத்தைத் தெரிந்து, அதில் என்னைக் கொண்டுபோய்விட்டால், பிறகு அங்கிருந்து யான் அக்குகைக்கு நேரே வழிகாட்டக் கூடும். மேலும், விடியப்போகிற நாள் வெள்ளிக்கிழமை யாகையால், நாளை இரவில் இங்குள்ள கள்வரெல்லாரும் அக்குகையில் ஒருங்கு சேர்வர். நாளைக்கு அவ்விடஞ்சென்றால் அவர்க ளெல்லாரையும் ஒருமிக்கப் பிடித்துக் கொள்ளலாம். நாளைத் தவறினால் திரும்ப அடுத்த வெள்ளிக்கிழமை வரையில் நாம் இங்கே காக்க வேண்டும். அக் கள்வர்கள் இம் மலைநாட்டிற் பல விடங்களில் இருப்பதால் அவர்களைத் தனித்தனியே கண்டுபிடிப்பதுஒரு வகையினும் முடியாது. மேலும், நாம் இப்பக்கங்களில் வந்திருப்பது அவர்கள் தெரிவார்களானால், தாம் சேவகர் கையிற் சிக்காதிருத்தற்குத்தக்க விரகுகளெல்லாஞ் செய்வதோடு, நம்மையெல்லாம் பிடித்துச் சிறையிடவோ அன்றி நம்மையெல்லாம் ஒருங்கு கொன்று விடவோ முயல்வார்கள். ஆகையால், விடிந்தவுடன் நாம் மிகவும் கருத்தாய் முயன்று வழி கண்டுகொள்ளல் வேண்டும்'' என்றேன்.

அவ்வதிகாரியும் மற்றவர்களும் யான் சொன்னதை ஏற்றுக் கொண்டார்கள். இருவர் விழித்திருக்க மற்றையோ ரெல்லாம் விடியும் மட்டும் உறங்குவது நலமென்று தீர்மானித்தார்கள். அக் குகைக்குச் செல்லும் வழியைத் தெரிந்து நாளைக்கு எம்மவரை எப்படிச் சிறைமீட்பதென்னும் நினைவைச் சூழப் பல எண்ணங்கள் ஒன்றன்பின் ஒன்றாய்த் தோன்றி ஓடிக்கொண் டிருந்தமையால் யானும் அம்மையாரும் உறங்க இயலாதென்பது கண்டு, விடியு மட்டும் நாங்கள் இருவருமே விழித்திருப்பதாகக் கூறினோம். ஆகவே, ஆடவர்கள் எல்லாரும் அங்கே நன்றாய்ப்படுத்து உறங்கினார்கள். வழிதுறைதெரியாத இம்மலைநாட்டிலுள்ள அவ்விடத்தைக்கண்டு, பொல்லாத கள்வர் கையிற் சிக்கிய எம்மவரை எவ்வாறு மீட்கப்போகிறோம் என்னும் ஏக்கத்தால் யாங்கள் மனவருத்தம் அடைவதும், பிறகு ஒருவரை யொருவர் தேற்றுவதுமாக அவ் விரவின் மிச்சமுங் கழிந்தது. ஓர் எள்ளளவும் யாங்கள் கண் மூடவில்லை. கிழக்கு வெளுத்தவுடனே அவ் வதிகாரி எழுந்து தாமும், மலைநாடுகளில் திரிந்து கள்வர்கள் பதுங்கும் மறைவிடங்களைத் தெரிவதில் வல்லவரான ஒரு சேவகருமாக வழிகண்டு வரும்பொருட்டுப் புறப்பட்டார்கள். யாங்களும் மற்ற ஆடவர்களுங் கீழேயோடும் அருவி கட் புலனாகும் வரையில் அவர்களோடு கூடவே சென்று அங்கோரிடத்தில் இருக்க வேண்டு மென்றும். அவ் விருவரும் வழி தெரிந்து மீண்டபின் எல்லாருமாய் ஒன்று சேர்ந்து செல்ல வேண்டு மென்றும் முடிவு செய்தார்கள். ஆகவே, அம்மலைமேல் ஓரமாகவே அவ் வருவிநீரைப் பார்த்த படியாகக் கிழக்கு நோக்கிச் சென்றோம். சிறிது நேரத்திலெல்லாம் அவ்வருவிநீர் கீழேயுள்ள மலைக்கணவாய் வாயிலிருந்துவரும் இடத்திற்கு அருகில் மேல் மலைமேல் வந்து சேர்ந்தோம். இனி அவ்வருவிநீர் வரும் இடம் சிறிதும் புலப்படவில்லை. அவ் வதிகாரி உடனே தமது சட்டைப்பையிலிருந்து ஒரு கடிதமும் எழுதுகோலும் எடுத்து, யான் சொல்லிய அடையாளப்படி அம் மலைநாட்டின் கண் என்னை அடைத்து வைத்த குகையிருக்க வேண்டும் இடத்தைப் பல கோடுகள் இழுத்து ஒருகோணத்தில் அதனை நிலைப் படுத்திக் குறித்துக்கொண்டார். இம்மலை நாடாகிய ஒரு வட்டத்துக்கு அவ்வருவிநீர் வரும் மலைக்கணவாய் வாயில் ஒரு மையமாக அக்கடிதத்திற் குறித்து வைக்கப்பட்டது.

அம்மையத்திலிருந்து யாங்கள் இப்போது நிற்கும் வடபுறம் அவ்வட்டத்தின் ஒரு பாதியாகவும், அப் பாதியில் யாங்கள் வண்டியி லிருந்து இறங்கி இப்போது வந்து சேர்ந்த இடம் வரையில் அப் பாதிவட்டத்தில் ஓர் அரைப்பாகமாகவுங் குறித்துக் கழித்து, அதன் மற்றை அரைப்பாகமே யான் சொல்லிய குகையிருக்க வேண்டுமிடமாக அவர் உறுதிசெய்து, பிறகு யாமிப்போதிருக்கும் மையத்திலிருந்து பலகோடுகள் இழுத்து, அங்ஙனங் கடிதத்திற் குறித்த படியே அவ் விடத்தைக் கண்டுவரத் தீர்மானித்தார். அவர் குறித்த கோட்டுக் கணக்கும், அதற்குத் தக்கபடி அவர் செய்த திசைவரையறையும், அவர் வரைந்து காட்டிய அம் மலைப் பாங்கின் நில அடையாளங்களும் நுண்ணறிவோடுஞ் செய்யப் பட்டமையால், அவர் அவ்விடத்தைக் கட்டாயங் கண்டு மீள்வார் என்பது எனக்கு உறுதியாய்ப்பட்டது. அதன்பின், தாம் அணிந்திருந்த படைக் கலங்களோடு சிறிது உணவுப்பண்டங்களும் எடுத்துக் கொண்டு அவ்வதிகாரியும் அவர் தெரிந்தெடுத்த சேவகரும் எங்களை விட்டுப் போயினார்கள்.

நாங்கள் இப்போ திருந்த பக்கத்தில் **ஆல் அரசு முதிரை தேக்கு பாலை** முதலான பெரியபெரிய மரங்கள் இடைக் கிடையே வளர்ந்தோங்கி நின்றன. கட்டிட வளைவுபோல் அடியிலிருந்து எழுந்து ஒருபாதி மேற்கவிந்து வளைந்திருந்த ஒரு மலைப் பாறையின் கீழே நடுவே நான்கடி அகல முள்ளதாய் வர வர அவ்வகலங் குறுகி இருபுறத்தும் முப்பதடி நீளச்செல்லும் ஒருசுனை இருந்தது. அதன்கண் உள்ள நீர் ஓயாமற் சுரந்து ஒரு முனையிற் சிறுக வழிந்துகொண்டே யிருந்தது. போன இருவரும் வழிகண்டு மீளும்வரையில், நாங்கள் அச்சுனையண்டையில் ஓங்கி வளர்ந்த ஒரு பாலைமரத்தின் அடியில் இருக்க ஏற்பாடுகள் செய்தோம். எங்களுக்கு உணவெடுப்பதிற்கூட மனஞ் செல்லாமை யால், போனவர் இருவரும் வழிதெரிந்து மீளவேண்டுமே என்னுங் கவலையால் இறைவியை நினைந்த படியாய் இன்றியமையாத காலைக் கடன்களை முடித்துக்கொண்டு, கையிற் கொணர்ந்த சில சிற்றுண்டிகளை மட்டும் அருந்தினோம். மற்ற ஆடவர்கள் எங்கட்குச் சிறிது எட்ட இருந்த ஓர் அரச மரத்தடியிற் சமையல் செய்வாராயினர். இரவு முற்றும் யாங்கள் விழித்திருந்தமை யாலும், வழிவந்த அயர்வாலும், இப்போது யாங்கள்

அம்மையாரும் யானும் அங்கே நன்றாய் உறங்கி விட்டோம் உச்சிப்பொழுதில், அம்மையாருடன் வந்த அறுவரில் ஒருவர் வந்து எங்களை எழுப்பிச் சிறிது உணவுகொள்ளும்படி எங்களை வற்புறுத்தவே, அவர்கள் சொல்லை மறுக்க மாட்டாமற் சிறிது உண்டோம்.

காலையிற் சென்றவர்கள் இன்னும் மீளவில்லை. பகலவன் மேற்றிசைச் சரிவில் மெல்ல மெல்ல இறங்கத் துவங்கிவிட்டான். பிற்பகல் மணி மூன்றுமாயிற்று, நான்குமாயிற்று. போனவர் இன்னும் மீண்டுவந்திலர். சாய்ங்காலத்து நிழல்போல எங்கள் மனக் கவலையும் மனத் துயரமும் நீளலாயின! இவ்வளவு நேரமாகியுஞ் சென்றவர் மீளாமை என்னை! என்று யாங்களும் ஒருவரை யொருவர் அடிக்கடி உசாவலானோம்; எங்களுடன் வந்த ஆடவர் எல்லாரும் உசாவலாயினர். மணி ஐந்துமாயிற்று, ஆறுமாயிற்று. மாலைக் காலமும் அணுகியது. பகலவனும் மறைந்து போயினான். நிலவு வெளிச்சமும் வந்துவிட்டது. ‘போனவர் இருவரே யாதலால் பொல்லாத கள்வர் கூட்டத்திற்றான் அகப்பட்டுக் கொண்டனரோ! அல்லது இன்னும் வழி தெரியாமற்றான் அலைகின்றனரோ! என்று பலவா றெண்ணி யெண்ணிக் கவலையடையலானோம். மாலை மணி எட்டு இருக்கும். இந்தியாவின் மேற்கரை யோரமா யிருக்கும் அப்பக்கங்களில் இப்போது மழைகாலத் துவக்கமாதலால், வானத்தின் கட் கரியமாசிகள் இடைக்கிடையே தோன்றி நில வொளியை மறைத்தன. இரண்டு மூன்று நாட்களாய் மழை பெய்யாதிருந்தது எங்கள் நல்லகாலந்தான்! மறுபடியும் மாசுவிலகி நிலவொளி இப்போது பளிச்சென்று எறித்தது. தொலைவில் இருவர் வருவதுபோற் காணப்பட்டது. எங்கள் எல்லார்க்கும் பெரியதோர் ஆறுதல் பிறந்தது. கண்களுக்குத் தென்பட்ட அவ்விருவர் வடிவத்தை யாங்கள் எல்லாம் உற்று நோக்கியவாறாய் இருந்தோம். இறைவனருளாற் போனவர்கள் இருவரும் மீண்டு வந்தனர். வந்தவுடனே ‘கடவுளருளால் வழி கண்டு வந்தோம்!’ என்று மகிழ்ச்சியோடு கூறினர். நாள்முழுதுந் திரிந்து களைப்புற்று வந்தமை நோக்கிச், சமையல் செய்து வைத்திருந்த உணவை அவர்கள் அருந்தும்படி பரிமாறினார்கள். அவர்கள் அதனையுண்டு இளைப்பாறியபின், அவ்வதிகாரி பின்வருமாறு எங்களை நோக்கிச் சொல்வாரானார்.

"நான் குறித்துக் கொண்ட கோட்டுக் கணக்குப்படியே இங்கிருந்து பகுக்கப்பட்ட மலைப்பகுதியில் யானும் என்னுடன் வந்த இவருமாகச் சென்றோம். பல மலைப்பக்கங்களிலும், மலைக் காடுகளிலும், மலைப் பள்ளங்களிலும் நாள் முழுதும் அலைந்து திரிந்தோம். அக் குகைக்குச்செல்லும் வழியைச் சிறிதுந் தெரிந்து கொள்ளக்கூடவில்லை. மாலைக்காலம் வரையிற் றிரிந்தும் தேடிச் சென்ற இடம் இன்னதென்று புலப்படாமையால் அடையாளத் தோடு சென்ற வழியிலேயே மீண்டு வருதற்கு எண்ண முற்றுத் திரும்பினோம். சடுதியில் யாரோசிலர் பேசுங் குரல் ஒலி எங்கள் செவியில் மெல்லப்பட்டது. அவ்வொலி வரும் முகமாய் நாங்கள் உற்று நோக்கத் தொலைவில் எங்களுக்கு எதிர்ப் பக்கத்தே இடது புறத்திலிருந்து வலதுபுறமாய் இருவர் மட்டமான இரண்டு குதிரைகளின்மேல் மெல்லச் செல்லக் கண்டோம். அவ் விருவரும் அக்கள்வர் கூட்டத்திற் சேர்ந்தவராயிருக்கலா மென்று ஐயுற்று, அவர்களை அணுகிச் சென்று பார்க்கும் பொருட்டு, அவர்கள் கண்ணிற்படாதபடி நிரம்பக்குறியாய் அவர்கள் சென்றவழியே அவர்களைப் பின்பற்றிப் போயினோம். இடையிடையே மலைப் பாறைகளும், பள்ளங்களும், புதல்களும், அடர்ந்த மரங்களும் இருந்தமையால், யாங்கள் அவர்கள் கண்ணிற்படாதபடி செல்வது எளிதாயிருந்தது. இவ்வாறு அவர் கட்கும் எங்கட்கும் இடையிலே முந்நூறு நானூறு அடி இருக்குமாறு யாங்கள் மறைந்து செல்லாநிற்க, முடிவாக அவர்கள் ஒருசிறு குன்றின்மேலேறி நின்று நாற்புறமும் நோக்கினார்கள். அவர்கள் அங்ஙனஞ் சுற்றிலும் நோக்கிய பார்வையி லிருந்து அவர்கள் தாம் செல்லும் இடத்தைப் பிறர் எவரும் பாராம லிருக்கின்றார்களா என்று தம்மை உறுதிப்படுத்திக் கொள்ளு கின்றார்களென்று அறிந்தோம். அவ்வாறு நோக்கியபின் அவர்கள் அச்சிறு குன்றின் அப் பக்கத்தே இறங்கி மறைந்து போனார்கள். இன்றைக்கு வெள்ளிக்கிழமையாதலால் இக்கள்வர் களெல்லாரும் ஒன்றுசேரும் பொருட்டுப் போகிறார்கள் போலும். இன்னுஞ் சிலரும் இனி வரக்கூடும். ஆதலால், அக் குன்றின் அருகேசென்று பார்ப்பது எங்ஙனம்! என்று எண்ணமிட்டுக் கொண்டு அதன் கிட்டச் செல்லாமலிருந்தோம். இப்போது யாங்களிருந்த இடத்திலும் பதுங்கித்தான் இருந்தோம். இங்ஙனமிருந்தது நல்ல காலமாயிற்று. பின்னுஞ் சிறிதுநேரத்தில் பின்னும் இரண்டு பேர் வேறொரு

முகமாயிருந்து வந்து அச்சிறுகுன்றின்மேலேறி, முற்சென்றவர் களைப் போலவே சுற்றிலும் நோக்கியபின், அப்பக்கத்தே இறங்கி மறைந்து போனார்கள். இப்போதும், யாங்க ளிருந்த இடத்தை விட்டு நாங்கள் பெயரவில்லை. பின்னுஞ் சிறிதுநேரஞ் சென்றபின் பின்னும் இரண்டுபேர் அங்ஙனமே குதிரைமேலேறி அக்குன்றி னிடத்தே வந்து மறைந்தார்கள். அதற்குப்பின், வேறிருவர் அங்ஙனமே குதிரை மேல் இவர்ந்துவரச் சிறு வயதினரான ஒருவரும் அவரினும் வயதில் மூத்த மற்றொருவருந் தம்முடைய கைகள் முதுகின் புறத்தே சேர்த்துக் கட்டப்பட்ட படியாய் அவ்விருவர்க்கும் பக்கத்தே கீழே நடந்து சென்றார்கள்!-" என்று சொல்கையில் யானும் அம்மையாரும் உடலம் பதறிக் கண்ணீர் சிந்தி அவர்கள் தாம் எங்களவர்களாக விருக்கவேண்டும்! அக்கொடிய கள்வர்கள் அவ்விருவர்க்கும் ஏதோ பொல்லாங்கு செய்வதற்காகக் காளிகோயிலுக்கு நடத்திச் செல்கின்றார்கள்! ஆகையால், அவர்கள் செல்லும் இடத்திற்கு நாம் உடனே புறப்பட வேண்டும்!" என்று அம்மையார்கூற யானும் அதற்கு இசைந்து சொன்னேன்.

பிறகு அவ்வதிகாரி எங்களைப்பார்த்து "அம்மைமீர், இன்னுஞ் சிறுதுநேரத்தில் நாம் அங்கே போவோம். அந்தக் கள்வர் எட்டுப் பேரும், கடைசியாக அவர்களுடன் மற்றிருவருஞ் சென்று மறைந்த பின், இந்த அம்மா சொல்லியது என் நினைவுக்கு வந்தமையால், இந்தப் பத்துப்பேரைத் தவிர வேறு எவரும் இனி அங்குவராார்கள் எனத் துணிந்து, யாங்கள் அச்சிறு குன்றின்மேலேறி அதன் அப்பக்கத்தே இறங்கினோம். கீழே பசும்புல் வளர்ந்த ஒரு சிறு பள்ளத்தாக்கும், அதனருகே இப்போதுள்ளதாய் முன்னமே எங்கட்குத் தொலைவிற் காணப்பட்ட ஒரு பெரியமலையும், அதனின்று வழிந்து அப்பள்ளத்தாக்கில் ஓடிவரும் ஒரு சிற்றருவியும் காணப்பட்டன. அப் பள்ளத்தாக்கின் கண்ணே எட்டுக் குதிரைகள் புல் மேய்ந்து கொண்டு நின்றன. அக்குதிரைகளைப் பார்த்ததும், அக்கள் வர்கள் அவைகளை அங்கேவிடுத்து அங்குள்ள ஓரிடத்திற்றான் நுழைந்திருக்கவேண்டுமென்றும், அந்தக் காளிகாதேவி கோயிலும் அதற்குச் செல்லும் வழியும் அவ்விடத் திற்றான் இருக்க வேண்டுமென்றும் முடிவுகட்டிக் கொண்டு இங்கே திரும்பினோம். இன்னும் இரண்டு மூன்று மணி நேரத்தில்

அவ்விடத்திற்குச் செல்லுஞ் சுருக்கமான குறுக்குவழியுந் தெரிந்து வந்திருக்கின்றோம். ஆகையால், எல்லாரும் உடனே புறப்படக் கடவோம்" என்று எங்கள் உயிர் தளிர்க்கக் கூறினார்.

ஆடவ ரெல்லாரும் வேண்டியபொழுது உடனே கையாளத் தக்க வகையாய்த் தாந்தாங் கொண்டுவந்த **கைத்துப்பாக்கி கத்தி எறிகோல்** முதலியவற்றையெல்லாஞ் செவ்வையாக அணிந்து கொண்டனர். விரைவிற் செல்லும்பொருட்டு எங்கள் ஆட்களில் நால்வர் எங்க ளிருவரையுந் தொட்டிலிற் றூக்கிக் கொண்டார்கள். அவ்வதிகாரி கூறியபடியே இரண்டு மூன்று மணி நேரத்தில் அச் சிறுகுன்றின் அண்டையில் வந்து சேர்ந்தோம். நிலவொளி பட்டப்பகல்போல் வீசியது. இப்போதும் நிலவொளி எங்கட்குச் செய்த உதவிக்காக இறைவனை மனங் குழைந்து தொழுதோம். உடனே அக் குன்றின் மேலேறி அப்பக்கத்தே யுள்ள பள்ளத்தாக்கை நோக்கினோம். கீழே எட்டுக் குதிரைகளிற் சில நின்றுகொண்டுஞ் சில படுத்துக் கொண்டும் இருந்தன. அங்கே ஆட்கள் நடமாட்டம் உண்டாவென உன்னித்துப் பார்த்தோம். ஏதோர் அரவமும் இல்லை. அதன்மேல் எல்லாருமாய்க் கீழ் இறங்கி அப்பள்ளத் தாக்கிற் போய்க் கள்வர் சென்ற வழியைத் தேடலானோம். உள்ளே என்மனமும் அம்மையார் மனமுந் துடிதுடித்தன. பேச நாவும் எழவில்லை. மூன்றாள் உயரம் நான்காள் உயரமுள்ள மலைப் பாறைகள் அம் மலையடிவாரத்தில் ஆங்காங்குக் காணப்பட்டன. கீழே எங்கும் மென்புல் அடர்ந்து வளர்ந்திருத்தலால், முற்சென்ற கள்வரின் அடிச்சுவடுகள் தென்படவில்லை. நிலவொளி யிருந்தாலும், இராப்பொழுது ஆதலால், காலடிபட்டு மென்புற்கள் சாய்ந் திருப்பதுங் காணக்கூடவில்லை. ஆகவே, அங்கிருந்த ஒவ்வொரு மலைப் பாறையினையுஞ் சுற்றிச்சுற்றிப்பார்த்தோம். எங்கும்வழி புலப்படவில்லை. கடைசியாக அவ் வதிகாரியின் கூரியகண்கள், ஒரு பாறையின் ஒருபக்கம் நிலத்திற்குமேற் சிறிது வளைவாய் மேற்கவிந்திருத்தலைக் கண்டு கொண்டன. ஒருவர் அதன்கீழ்க் குனிந்துதான் போகலாம். உடனே அவர் அதன் கீழ்க்குனிந்து போய்ப்பார்த்து மீள வெளியேவந்து "இரண்டுபேர் பக்கத்தே பக்கத்தே உள்ளவராய் நின்றபடியே செல்லத்தக்க வழி ஒன்று மலையி னூடே செல்கின்றது!" என்று மகிழ்வோடு கூறினார். உள்ளே சென்றால் குகையினுள் ளிருக்குங் கள்வர்கட்குந் தமக்குங் கடும்போர்நடக்குமாதலால், அவ்விடத்திற்குப் பெண்பாலார்

இருவரையும் அழைத்துச் செல்லுதல் ஆகாதென்று சேவகர்களும் அதிகாரியுஞ் சொல்லினார்கள். தங் கணவனார் உயிர் இடரான நிலையி லிருக்கும்போது தாம் இங்கிருக்க இயலாதென்றும்,தாம் இப்போது ஆண்கோலம் பூண்டிருத்தலால், தம் காதலரையும் என் தமையனாரையும் மீட்கும் பொருட்டுத் தாமுங் கத்தி யெடுத்துச் சண்டைசெய்ய வேண்டுமென்றும் அப்பாரசிக அன்னையார் மொழியவே, என்பொருட்டுச் சிறையிலகப்பட்ட அவ்விரு வரையும் மீட்கும் பொருட்டு யானும் ஒரு பெருங்கிளர்ச்சி யுடையேனாய்க் கத்தி யெடுத்துச் சண்டை செய்ய உறுதிமொழி புகன்றேன். யாங்கள் இருவேமுங் கூறிய சொற்களைக் கேட்டு ஆடவரெல்லாரும் புன்சிரிப்புக் கொண்டனர். ஆயினும், யாங்கள் சிறிதும் பின்வாங்கவில்லை. அவர்களோடு உடன்செல்லுவதற்கு விடாப்பிடியாய் நின்றோம். அவர்கள் எங்களையுங் கூட்டிப்போக இசைந்து, எங்களை யாங்கள் காத்துக் கொள்ளும் பொருட்டாக இரண்டு நீண்ட கூர்ங்கத்திகளையும் எங்கள் கையிற் கொடுத்தார்கள்.

முதலில் அவ் வதிகாரியும் முன்னே அவரோடு கூடச் சென்ற சேவகரும் அப் பாறைக் கீழ்வாயிலின்கீழ் இறங்கிச் சென்றார்கள். அவர்கட்குப் பின்னே இவ்விரண்டு பெயராக எல்லாச் சேவகர்களும் எங்கள் ஆட்களில் நால்வரும் அதனுள்ளிறங்கிச் சென்றார்கள்; அவர்கட்குப் பின்னே அம்மையாரும் யானும் அதனுள் இறங்கினோம்; எங்கட்குப் பின்னே எங்கள் ஆட்களில் எஞ்சிய இருவர்வந்தனர். யான் அக்குகையிலிருந்தபோது காலை மாலை யான் வெளியே சென்ற வழியாய் இது காணப்படவில்லை. ஆனாலும், அந்தவழி பகற்காலத்தும் இருளாயிருந்தமையால், இப்போது அங்ஙனமே இருளாய்த்தோன்றும் இந்த வழிக்கும் அதற்கும் வேறுபாடு மிகுதியாய்த் தென்படவில்லை. அந்தவழி நிரம்ப வளைந்து வளைந்து சென்றது,இந்த வழி சிற் சில இடங்களிற் றவிரப் பெரும்பாலும் நேராகவே சென்றது. சிறிது வழிநடந்ததும் முன்னே சென்ற அதிகாரி எல்லார்க்குங் கடைசியில் வந்த எங்கள் ஆட்கள் இருவரைநோக்கிக் கண்ணாடி விளக்கை ஏற்றிப் பிடித்து வரும்படி கற்பித்தார். இப்போது எங்கட்குப் பின்னே யிருந்து தோன்றிய விளக்கு வெளிச்சம் முன்னே செல்லும் எங்கட்கு வழியை நன்கு காட்டியது. ஒருகால் எங்கட்கு எதிர்முகமாய்க்

கள்வர் எவரேனும் வந்தாலும், பின்னே பிடிக்கப்பட்டிருக்கும் எங்கள் விளக்கு வெளிச்சத்தை அவர்கள் காணல்முடியாது. மலையினூடு செல்லும் இவ்வழியே போகையில் இடையிடையே இரண்டிடங்களில் இரண்டு வேறு வழிகள் காணப்பட்டன. அவ்விடங்களில் வந்தவுடன் 'நேரே செல்வதா பக்கத்தே திரும்பிச் செல்வதா?' என்று மலைத்து நின்றோம் ஆனால் அவ்வதிகாரி ஆழ நினைந்து பார்த்து 'நேராகச் செல்லும் இவ் வழிதான் அக்காளிகோட்டத்திற்குச் செல்லும் வழியா யிருக்கவேண்டும். இடையே காணப்படும் இவ்வழிகள் இவ்விடத்தைக்கடந்து வெளியே செல்வனவா யிருக்க வேண்டும். எவரேனுந் தம்மைப் பிடிக்கவந்தாற் பல முகமாய்ப் பிரிந்தோடு வதற்கு ஏற்ற பலவழிகள் இம்மலைக் குகைக்கு இயற்கையாக அமைந்திருத்த லாற்றான், அக்கள்வர்கள் இவ்விடத்தின்கண் உள்ள குகையில் ஒன்று கூடுவதற்கு ஏற்பாடு செய்திருக்கின்றார்கள். அக்குகையி னுள்ளே அவர்களிருக்கும்போது அவர்களைப் பிடித்தாற்றான் பிடித்தபடி அக் குகைக்கு வெளியே வந்தால் அவர்களைப் பிடிக்க முடியாது; இங்கே காணப்படும் பலவழியாய் ஓடிப்போவார்கள்!'' என்றார். இவர் கடைசியாகச் சொல்லியசொல் முடிந்தவுடனே, எங்கட்கு எதிர்முகமாயிருந்து இருவர் பேசிக் கொண்டு வரும் ஒலி எங்கள் எல்லார்க்குங் கேட்டது. உடனே, அவ்வதிகாரி மிக மெல்லிய குரலில் "இரண்டுபேர் மட்டும் பேசிக்கொண்டு வருகிறார்கள். பெரும்பாலும் இவர்கள் இங்கிருந்து பிரியும் இக்கிளைவழியில் திரும்பினாலுந் திரும்புவர். ஆதலால், நாம் எல்லாரும் பின்நோக்கிச் சென்று இவ்வழிக்குச் சிறிது எட்ட இருந்து, இவர்கள் அக்கிளை வழியில் திரும்பினால் பின்பற்றிச் சென்று அவர்களைப் பிடித்துக் கொள்வோம். இவ் வழியே நேரே வருவார்களானாலும் எதிர்த்துப் பிடித்துக்கொள்வோம். இவ் வழியிற் பிடித்தால் இவர்கள் கூச்சலிட்டுக் குகையினுள் ளிருப்பவர்களையெல்லாம் ஓட்டி விடுவார்கள். கிளைவழியில் இவர்கள் போம்படி நேருமாயின், இவர்களைப் பிடிப்பது அந்தக் கலவரத்திற்கு இடஞ்செய்யாது". என்றுகூறி எங்களோடும் பின் தாங்கிச் சென்றார். அக்கிளைவழிக்குச் சிறிது எட்டவந்து எல்லாருமாய் நின்றோம். இப்போது விளக்கு வெளிச்சம் சிறிதுந் தெரியாதபடி தடித்த துணியிட்டு மறைத்துக் கொண்டோம். சிறிது நேரத்தி லெல்லாம் எதிரே பேசிக்கொண்டு வருவோர் யாங்கள் கண்ட கிளைவழி ஒன்றில் திரும்பும் அரவம் கேட்டது.

குரல் ஒலியால் ஆண்டில் முதிர்ந்தவராய்க் காணப்பட்ட ஒருவர் தம்முடன்வரும் மற்றொருவரைநோக்கி “அப்பா குமார சாமி, உன்னிடம் புதிதாய் வந்திருக்கும் அந்தப் பார்ப்பாரப் பேயர் இருவரும் நம்மிடம் உள்ள கள்வர்களைவிடக் கொடியவர்களா யிருக்கிறார்களே! ஐயோ! அந்தப் பார்சிக்காரனும் அவனோடு பிடிபட்ட பார்ப்பாரப் பையனும் எவ்வளவு நல்லவர்கள்! தம்மை விடுதலைசெய்து விடுவதற்காக லட்சரூபாய்க்குச் சொல்லுறுதிச் சீட்டு அந்தப் பார்சிக்காரன் எழுதிக்கொடுத்திருக்கிறானே! அவ்வளவோடு அவர்களை விட்டுவிடாமல், அவர்கள் இருவரையும் இப்போது கொன்று விடும்படி அந்தக் கள்ளப்பயல்களை யெல்லாந் தூண்டிவிட்டிருக் கிறார்களே! அது மட்டுமா! நமக்கும் அந்தக் கள்ளப் பயல் களுக்கும் பகையையும் விளைத்து வருகிறார்களே! அவர்களோடு பகைத்துக்கொண்டு நாம் இந்த மலைப்பிரதேசத்தில் எப்படி உயிரோடிருப்பது!” என்று வருத்தத்தோடு கூறினார்.

அக்குரலொலியைக் கேட்டவுடன் எனக்கும் எம் அம்மை யார்க்கும் உயிர் உடம்பைவிட்டுப் போனது போலாயிற்று. அந்தப் பாரசிகப் பெருமானையும் என் தமையனையுங் கொல்லுங் கொலைக்கஞ்சா அந்தக் கொடுங்கள்வர் இதற்குள் கொன்று விட்டார்களோ! என்று எங்கள் உடலம் பதறியது. யான் அம்மையாரைப் பிடித்துக்கொண்டேன்; இல்லையேல் அவர் களைத்து வீழ்ந்திருப்பார். யாங்கள் பேசக்கேட்ட பெரியவர் இந்தக் குகைக்காளிகோட்டத்தில் எனக்கு ஆறுதல்சொன்ன பூசகரே யல்லா மற்பிறர் அல்லர். இதற்குள் அப்பெரியவர் கூட வந்தவன் அவர்க்கு விடை கூறுவது கேட்டது. அவ்விரு வருங்கிளை வழியிற் செல்லாமல் நிற்கலாயின ரென்பது தோன்றிற்று.

“அப்பா, அந்தப் பார்ப்பாரப்பயல்கள் செய்ததுநமக்கு நன்மையாய் முடியும் என்று நினைத்தேன்! அவர்களுடைய தூண்டுதலால் யான் கொண்டுவந்த தேவமாதுபோன்ற அந்தப் பார்ப்பாரப்பெண்ணை யான் கல்யாணம் செய்துகொள்ளலா மென்றும், உயர்ந்த குணம்உடைய அந்தப் பார்சிக்கனவானிட மிருந்து பத்தாயிரரூபா வரையில் அந்தப் பயல்களுக்கு வாங்கிக் கொடுத்து விட்டு, நம்மோடு சேர்ந்த கள்ளப் பயல்களுக்குந்தக்க பொருளுதவி புரிந்தபின் அவர்களை விடுதலைசெய்து, நாமெல்லாம் இந்தத் தொழிலைவிட்டு நல்வழியிற் செல்லலா

மென்றும் நினைத்தேன். இந்தக் கருத்தை அந்தப் பார்ப்பாரப் பயல்களுக்கு நான் மெல்லத் தெரிவிக்க, அதற்கு அவர்கள் உடன்படுவதுபோற் பாசாங்குகாட்டிப், பிறகு எனக்குத் தெரியாமல் இரண்டகமாய் நம்ம கள்ளப்பயல்களுடன் கலந்து வேறு வேறு சூழ்ச்சிகளெல்லாஞ் செய்திருக்கிறார்கள். நாம் காளிகோயிலிற் கொண்டுவந்து வைத்திருந்த அந்தப் பெண் எப்படியோ மாயமாய்ப் போய் விட்டாளே! அவள் காணாமற் போன அன்றைக்கே என் உயிர் அரைவாசி போய்விட்டது. அப்பா, அவளை அந்தக் குகையிலே வைத்துப் பூட்டிக்கொண்டு வந்தபின் அவள் எப்படி வெளியே போகக் கூடும்! அவள் தப்பிப் போவதற்கு வழி இல்லையே! என்று கேட்டான்.

இப்போது இங்ஙனம் பேசுகிறவன் அந்தப் பூசகர் மகனே யல்லாமற் பிறர் அல்லர் என்பதனைத் தாங்கள் அறிந்து கொள்வீர்கள்.

உடனே அந்தப் பெரியவர் "குமாரசாமி, உனக்கு வஞ்சகமாய் நான் ஏதும் செய்யவில்லை. ஊழ்வினை வசத்தால் நீ இந்தக் கள்வர் கூட்டத்திற் சேர்ந்து கொள்ளும்படி நேர்ந்த போதும் நான் அதற்கு உடன்பட்டிருந்தேன். உன்பொருட்டு அந்தப் பெண்ணின் மனத்தைக் கரைத்துப் பார்த்தேன். அவள் கற்பிலுங் கல்வியிலுஞ் சிறந்த உத்தமியா தலால் உன்னை விவாகஞ் செய்து கொள்ள இணங்கவில்லை. அதன்மேல் அவளையும் அவளைச் சேர்ந்தவர்களையும் விடுதலைசெய்து விட்டு அவர்களுதவியால் நாமும் நல்வழியில் திரும்பலாம் என்று பலகால் உன்னிடம் சொன்னேன். நீயோ ஒருகால் என் பேச்சுக்கு இணங்குவதும், மற்றொருகால் அதனை மறுப்பதுமாக இருந்தாய். ஆனாலும், நானே அந்தப் பெண் குகையைவிட்டுப் போகாமல் எவ்வளவோ குறிப்பாய்த்தான் காத்துவந்தேன். ஆகையால், என்மேற் குற்றமில்லை" என்றார்.

"அப்படியானால், அந்தக் குகைக்கதவின் சாவி அந்தப் பார்ப்பாரப் பயல்கள் கையிலாவது, கள்ளப் பயல்கள் கையிலாவது அகப்பட்டிருக்கக்கூடுமோ?" என்று அவர் மகன் வினாவினான்.

"நமது வீட்டில் நான் மிகவும் மறைவாய் வைத்திருந்த அந்தச்சாவி எவர்கையிலும் அகப்பட்டிருக்க முடியாது. அவள்

தப்பிப்போனது ஏதோ தெய்வச்செயலாய் இருக்கின்றது. நம் அறிவுக்குத் தென்படாததைப் பற்றி நாம் வீணே பலவாறாக எண்ணுவதிற் பயனில்லை. அது நிற்கட்டும்: சிறந்த இரண்டு உயிர்களை இந்த இரவு மடிக்கக் கங்கணங் கட்டிக்கொண்டிருக் கிறார்களே. அதை நிறுத்த முடியாதா?'' என்று அப்பெரியவர் உருக்கத்தோடுங் கேட்டார்.

“என்னை அவர்கள் கலந்து பேசியபோது, அந்தப் பார்ப்பார் இருவருந் தமக்கு ஓர் இலட்சம்ரூபா எழுதிவாங்கிக்கொண்டு அவர்களை விடுதலை செய்துவிடலாம் என்று சொன்னேன். முதலில் அதற்கு இசைந்த அப்பேய்கள் இரண்டும் பிறகு ‘அப்படி எழுதிவாங்கிக் கொண்டபின் அவர்களிருவரையும் மடித்துவிட வேண்டுமேயல்லாமல், விடுதலைசெய்தல் பிசகு; அவர்களை விட்டுவிட்டால் நம் எல்லாரையும் அரசாங்கத்தாரிடம் பிடித்துக் கொடுத்து விடுவார்கள்' என்று சொல்லின. அந்தப் பார்சிக் கனவான் சொல்லுறுதி தவறாதவராகக் காணப்படுகின்றனர்; அவருடனிருப்பவனும் அவர் சொற்படி நடக்குஞ் சிறந்தகுண முடையவனா யிருக்கிறான். ஆதலால், வீணே அவர்களைக் கொன்று பாவத்தைத் தேடாமல் விடுதலைசெய்வதே நல்லது என்று நான் வற்புறுத்திப் பேசினேன். அவர்கள் என் பேச்சைக் கேளாமல் தாம் விரும்பியபடியேதான் செய்யவேண்டுமென்று முடிவாகக் கூறினார்கள். நம்மைச்சேர்ந்த கள்வர்களும் அவ்விருவர் கருத்துக்கு இணங்கிச் சொல்லவே, எனக்கு மனந்தாளாமல் ‘நீங்கள் எப்படியாவது செய்துகொள்ளுங்கள், இனி நான் இங்கிருக்க முடியாது.' என்று சொல்லிவிட்டு உனக்குப் பிறகே வந்தேன். அவ் விருவரிடமும் லட்சரூபாய்க்கு எழுதி வாங்கிக்கொண்டு அவர்களைக் கொன்று விடுவார்கள்!'' என்று அவர் மகன் சொன்னான்.

அந்தப் பெரியவர் “அவ்விருவரையுங் காக்க வேறு வழி இல்லையா?'' என்று வினவினார்.

“இப்போது நான் கையிற் கத்தியோடு அவர்கள் நடுவிலே சடுதியிற்போய் விழுந்து அவர்களைச் சின்னாபின்னமாக வெட்டிக் கொன்றால், அவ்விருவரையும் மீட்கலாம். அப்பா, விடை கொடுக்கிறாயா?'' என்று ஆண்மையோடு கேட்டான்.

"ஐயோ, மகனே, நீ ஒருவன்தானே இருக்கின்றாய். தள்ளாத எங்களுக்கு வேறு துணையில்லையே. அத்தனை கள்வர்களும் ஒருகால் ஒன்றுசேர்ந்து உன்னைக் கொன்றுவிடுவார்களானால், எங்கள் கதி எப்படியாகும்! உனக்குத் துணை கிடைத்தால்-" என்று அப்பெரியவர் சொல்லிப் பின்னும் பேசுவதற்குள், அவ்வதிகாரி மின்னல் வீச்சுப்போல் அவ்விருவரிடமுஞ் சென்று "இதோ! நான் துணைவருகின்றேன்! வா என்று தமக்குரிய மகாராட்டிர மொழியிற் கூறினார்.

அவ்விருவரும் அக்கிளைவழியில் நின்று தமிழிற் பேசுகையில் என் பாரசிக அம்மையார் அந்த அதிகாரியின் கிட்டச்சென்று, அவர்கள் பேசியவைகளையெல்லாம் மகாராட்டிரத்தில் மொழி பெயர்த்து அவர் காதுக்குட் சொல்லிக்கொண் டிருந்தார்.

அங்ஙனந் தன்னிடம் பாய்ந்து வந்த அவ் வதிகாரியை நோக்கி "நீ எனக்கு நண்பனா? பகைவனா?" என்று அந்தப் பெரியவர் மகன் கேட்டான்.

"நான் உனக்கு நண்பன்!" என்று அவ்வதிகாரி சொல்ல, உடனே அப்பெரியவர் மகனும் அவற்குப் பின்னே அவ்வதிகாரியும் அக்கிளைவழியைவிட்டு, நேர்வழியே காற்றினுங் கடுகிச் சென்றார்கள். நானும் என் அம்மையாரும் ஒரு கிளர்ச்சியால் உந்தப்பட்டு அவ் விருவரையும் பின்பற்றி ஓடினோம். மற்ற ஆடவர்களெல்லாரும் எங்கட்குப் பின்னை விரைந்து வந்தார்களாயினும், நாங்கள் அவர்களையாவது அவர்கள் எடுத்துவரும் விளக்கினுதவியையாவது திரும்பிப்பாராமல், கால் நிலத்திற் பாவுகிறதோ இல்லையோ என்னும்படி அத்தனை விரைவாய்ச் சென்றோம். அவ்வழி முற்றும் இருளாயிருந்தாலும் முன்னே செல்பவர் அவ்வழியை நன்கு தெரிந்து செல்வதால் நாங்கள் அவர்கட்குப் பின்னே வருத்தமின்றிச் சென்றோம்.நாங்கள் இங்ஙனம் பின்னே வருவது முன் விரைந்தேகும் அப்பெரியவர் மகனுக்குந் தெரியாது. சிறிதுநேரத்தில் எல்லாம் குகைவாயிற் கதவண்டை அப்பெரியவர் மகனும் அதிகாரியுஞ் சென்றார்கள். அக்கதவு தாழிடாமல் வறிதே சாத்தப்பட்டிருந்தமையால் அது சடுதியிற் படீரெனத் திறக்கப்பட்டது. அது திறந்தவுடன் உள்ளேயிருந்த விளக்கினொளியால் அங்கேயிருந்த எங்கட்குத் தெரிந்த கொடுங் காட்சியின் தீதினை என்னென்பேன்!

அப்பாரசிகப் பெருமான் காலுங் கையுங் கயிறுகளால் இறுகக் கட்டப்பட்டு அம்மையின் திருவுருவத்திற்கு நேரே கோயிலுக்கு வெளியிலுள்ள சிங்கத்தின் பக்கத்தே நின்றனர்; என் தமையனும் அங்ஙனமே காலுங் கையுங் கட்டப்பட்டு, அவர்க்குப் பின்னே நிறுத்தப்பட்டிருந்தான். அவர்கட்கு எதிரிலே வலிய உடம்பு உள்ளவனான ஒருவன் கூரிய பளபளப்பான வெட்டரி வாள் ஒன்று பிடித்து நின்றான்; அவனுக்குப் பக்கத்திலும் பின்னேயும் பலர் கொடுந்தோற்ற முடையராய் நின்றனர். அவர்களுள் இருவர் அந்தச் சிங்கவடிவமான கற்சிலையை அப்புறம் நகர்த்தும் பொருட்டுக் குனிந்து நின்றனர். இக் கொடுந் தோற்றம். எங்கள் கண்களிற்பட்டது ஒரு நொடிப்பொழுதுதான் இருக்கும். இதற்குள்ளாக அப்பெரியவர் மகன் அங்குநின்ற அக்கள்வர் கூட்டத்தின்மேற் பாய்ந்தான். அவ்வதிகாரி வாயிலில் நின்றபடியே தமது கைத்துப்பாக்கியை எடுத்துப் பிடித்தது தெரிந்தது, அதனையடுத்து இரண்டு வெடி முழக்கங் கேட்டது. இதற்குள் யாங்கள் அக் குகைவாயிலில் வந்தேறினோம். அடுத்த நொடியில் அப்பாரசிகப் பெருமானிடமும் என் தமையனிடமும் யாங்கள் பாய்ந்தடைந்தோம். அம்மையாரும் யானும் அவ்விருவர் கால்கைக் கட்டுகளை யாங்கள் இப்போது வைத்திருந்த கத்தியினால் அறுத்தெறிந்தோம். இவையெல்லாம் நடந்தேறியது ஒன்று அல்லது இரண்டு இமைப்பொழுதுதான் இருக்கும். அவர்கள் கட்டை யறுத்துவிட்டபின் அக்கள்வரிருந்த பக்கமாய்த் திரும்பினோம். அப் பெரியவர் மகனின் பேராண்மையை என்னென்பேம்! இதற்குள் அவன் கள்வர் மூவரை வெட்டி வீழ்த்திவிட்டான். எங்கள் பாரசிகப் பெருமானை வெட்டுவதற்குக் கத்திஏந்தி நின்றவன் அவ்வதிகாரியாற் சுடப்பட்டு வீழ்ந்து கிடந்தான். இப்போது எங்கள் கண்கட்கெதிரே அவ் வதிகாரி மூன்று பெயருடனும் அப் பெரியவர் மகன் மூன்றுபெயருடனும் எதிர்த்துக் கத்திகள் சுழற்றிக் கடும் போர் புரிதலைக் கண்டோம். எங்கள் வாழ்நாளிற் பாராத அக்கொடிய தோற்றம் எங்களுக்குத் திகிலையும் மயக்கத்தையும் விளைத்தது. கட்டறுபட்டதும் எங்கள் பாரசிகப் பெருமான் எங்கள் கையிலிருந்த கத்தியைப் பிடுங்கிக்கொண்டு எதிர்த்துச் சண்டையிடும் அக் கள்வர்கள்மேற் பாய்ந்தார். பின்னும் இருவர் வெட்டுண்டு கீழே வீழ்ந்தனர். இந்நேரத்தில் இருவர் அந்தப் பெரியவர் மகனுடன் மல்லாடக் கண்டோம். அவ்வதிகாரி ஒருவனைக் கீழ்வீழ்த்தி அவன்

மார்பின்மேல் மண்டியிட்டிருந்து அவனது கையிலிருந்த கத்தியைப் பிடுங்கவும், அந்தப் பாரசிகப் பெருமான் மற்றொருவனோடு கத்தி சுழற்றவுங்கண்டு திகிலுற்றோம். இதற்குள் என் தமையன் அந்தப் பாரசிகப்பெருமானுக்கு உதவியாய்ச் செல்லக் கத்தியைக் கையிலெடுக்கையில் எங்கட்குப் பின்னேவந்த எங்கள் ஆட்கள் பதினெட்டுப்பேரும் உள்ளே வந்து நுழைந்து, எங்கட்கு எதிரியான கள்வர்கள் நால்லரையும் பிடித்துக்கொள்ளவே, எங்கள் பாரசிகப்பெருமானும், அவ்வதிகாரியும், பெரியவர் மகனும் மீண்டனர். உடனே, எங்கள் சேவகர்கள் தாம் கொண்டுவந்த இருப்பு விலங்குகளை எஞ்சிய அக்கள்வர் நால்வர் கையிலும் பூட்டினார்கள்.

இதற்குள் அந்தப் பெரியவர் மகனின் தோளிலும் முதுகிலும் கத்திகள் கீறி இரத்தம் மிகுதியாய் ஒழுகினமையால், அவற்றைச் சேவகரிற் சிலர் துணியிட்டுக் கட்டலானார்கள். அவ்வதிகாரி தடித்த கம்பளியுடுப்பு அணிந்திருந்தமையாற் கள்வரின் கத்தி வெட்டுக்கு அவர் தப்பிக்கொண்டார். ஆனாலும், அவருடுப்புகள் பெரும்பாலுங் கீறலுற்றுக் கிழிந்தன; அவரதுகையிலுஞ் சிறிது காயம்பட்டது. அதனையும் அவருடன் வந்தோர் கட்டினார். எங்கள் பாரசிகப் பெருமானுக்கும் மார்பில் ஒரு கீறல், அதனை அம்மையாரும் யானும் என் தமையனுந் துணியாற்கட்டிப் பரிகரித்தோம். இவ்வளவு நடந்ததும் ஏழெட்டு நிமிஷந்தா னிருக்கும். இதற்குள் ஆறுபெயர் சின்னாபின்னமாய்ச் சிதைக்கப்பட்டு மாய்ந்தார்கள்! நான்கு பெயர் விலங்கிடப் பட்டார்கள்! எம்மவர் இருவரும் விடுதலைபெற்றார்கள்! மழைநாள் இரவில் அடுத்தடுத்துத் தோன்றும் மின்னல் வீச்சுப்போல், நினைத்தற்கும் அரிய விரைவோடு இவ்வளவும் அத்துணை விரைவில் நடந்தேறின! சடுதியில் வந்த கடும் புயற் காற்று மரங்களையுங் கட்டிடங்களையும் பெயர்த்தெறிதல் மட்டில் அமையாமல், கடல்நீரையுங் கலக்கிக் கொந்தளிக்கச் செய்தல் போலச், சடுதியில் மூண்ட இப்பெரும்போர் அறுவரை மடித்தது மல்லாமற், பெண்பாலாராகிய எங்களிருவ ருள்ளங்களையுங் கலக்கிப் பலவேறு உணர்வுகளால் அசையச் செய்தது. எதிர்பாராமல் வந்த அப் பெரும்புயல் வந்தவாறே தான் விரைவில் ஓய்ந்துபோக அக்கடல்நீர் அமைதிபெற்றாற் போல எங்கள் உள்ளமும் ஒருவாறு அமைதியுற்றது. என்றாலும், அங்கு

வெட்டுண்டு பிணமாய்க் கிடப்பவரையும், அவருடம்பிலிருந்து பெருகிக் கீழேபரவும் இரத்தத்தினையும், அந்தப் பெரியவர் மகனுடம்பிற் பட்ட வெட்டுக் காயங்களையும் பார்க்கப்பார்க்க எங்கள் மனந் திகிலடைந்தது. பாரசிகப்பெருமானையும் என் தமையனையும்யானும்அம்மையாரும்வந்து கட்டறுத்து விடுகையில், அவர்கள் எங்களை இன்னாரென்று தெரியக்கூடவில்லை. ஏனென்றால், யாங்கள் ஆணுடுப்பில் இருந்த தொன்று; மின்னொளி பாய்ந்தாற் போல் அந்தப் பெரியவர் மகனும் அவ்வதிகாரியும் அக்கள்வரிடையிற் பாய்ந்து அவர்களோடு மலைந்து அவர்களிற் பலரை வெட்டிவீழ்த்தினமை ஒன்று; தம் உயிர் போகுந்தறுவாயில் தெய்வச்செயலாய் இருவர் சடுதியில் வந்து அக்கள்வரோடு போர் இயற்ற இருவர் தம்மைக் கட்டறுத்துவிட அதனாற் பாரசிகப் பெருமானுக்கும் என் தமையனுக்குந் தோன்றிய திகைப்பொன்று; இம்மூன்று காரணங்களாலும், கட்டறுத்த வுடனே பாரசிகப் பெருமான் எஞ்சிய கள்வருடன் போர்புரியப் புகுந்தமையாலும், என் தமையன் தன் கருத்தெல்லாம் இக்கொடிய நிகழ்ச்சியில் இழுப்புண்ணக் கடைசியில் தானுங் கத்தி யெடுத்துச் சண்டையிட முயன்றமையாலும் அவர்கள் எங்களைத் தெரிந்து கொள்ளுதற்கும், யாங்கள் அவர்கட்குத் தெரிவித்துக் கொள்தற்கும் இயலவில்லை. ஆனால், இப்போது யாங்கள் அப் பாரசிகப் பெருமானுடைய காயத்தைக்கட்டிப் பரிகாரஞ் செய்ததும், அம்மையார் அவர் காலடியில் வீழ்ந்து தேம்பித் தேம்பி அழுதார். யானும் அதனைக் கண்டு பொறுக்க முடியாமல் அழுதேன். அம்மையின் கோயில்வாயிலில் ஏற்றப்பட்டிருந்த சரவிளக்குகளின் ஒளி எங்கள் முகத்தின்மேற் படவே எங்களை உற்றுநோக்கி மிகவும் வியப்படைந்தவராய் முதலிற் றம் மனைவியாரை ஒருகையாற் றூக்கி எடுத்து, மற்றொரு கையால் என் இடதுகையைப் பிடித்துக்கொண்டு 'ஆ! கமலா, குயந்தே கோகிலா, இதென்னா ஆண்வேஷம்! நீங்க எப்படி இந்தப் பொல்லாத எடத்துக்கு வந்தீங்கோ?'' என்று எங்கள் பாரசிகப் பெருமான் எங்களிருவரையும் நோக்கி வினவினார்.

அதற்கு யான் ஒன்றுஞ் சொல்லமாட்டாமற் பின்னும் அழ, அம்மையார் தங் கணவனாரைநோக்கி "என் பெருமானே, குழந்தை கோகிலம் தெய்வத்தினுதவியால் இவ் விடத்தினின்றுந்

தப்பிவந்து எங்களை இங்கே அழைத்து வந்தாள்!' என்று ஒருவாறு தமது மனத்தைத் தேற்றிக்கொண்டு கூறினார். இச் சொற்களைக்கேட்டு என் தமையன் என் கையைப் பிடித்துக் கொண்டு கண்ணீர் விட்டான். யாங்கள் இந்நிலையிலிருக்க, எங்களுக்கு எதிர்ப்பக்கத்தே சண்டை நடந்த இடத்தில் அந்தப் பெரியவர் மகன் காயப்பட்டுக் களைத்து உணர்விழந்து கிடத்தலின் அவனுக்கு எங்களுடன்வந்த ஆடவர் களெல்லாரும் பரிகாரஞ் செய்துகொண்டிருந்தனர். இப்போது என் அம்மையார்க்கு உறவினரான ஆட்கள் அறுவரும் தமது நிலை தமக்கு வரப்பெற்றவர்களாய், எங்கள் பாரசிகப் பெருமானிடம் வந்து வணங்கினர். இந்நேரத்தில் அப்பெரியவர் குகையினுள் மெல்ல நடுக்கத்தோடும் வந்து தம் மகன் காயத்தால் இரத்தஞ்சோர உணர்விழந்துகிடப்பதைக் கண்டு ஆற்றப்பெறாத துயரம் மிக்கவராய் "அப்பா, குமாரசாமி தள்ளாத எங்களைக் கைவிட்டாயோ!" என்று அங்கிருந்தவர் எல்லாரும் மனங்கரைய அழுதார். 'குமார சாமி' என்னும் பெயரையும், அப் பெரியவர் குரலொலியினையுங் கேட்டதும் என் அம்மையார் திடுக்கிட்டு அவரிருந்த முகமாய்த் திரும்பிநோக்கினார். இதற்குமுன் கிளைவழியில்நின்று அப் பெரியவர் தம் மகனுடன் பேசியதைக் கேட்டபோதும் அம்மையார் இங்ஙனமே திடுக்கிட்டார். சடுதியில் அம்மையார் தமது பாரசிக மொழியிற் சிலவற்றைத் தங் கணவனார்க்குச் சொல்ல, அவரும் அன்னையாரும் அப் பெரியவரிடஞ் சென்றனர்; யானும் என் தமையனும் அவர் பின்னே சென்றோம். அப்பெரியவர் கீழே கிடக்குந் தம் மகன்மேல் குனிந்து வருந்த எங்கள் சேவக ரெல்லாரும் அவ்விருவரையுஞ் சூழ்ந்துகொண்டு நின்றனர்; அவ்வதிகாரி காயங்களில் ஒழுகும் இரத்தத்தை நிறுத்தல்வேண்டி அவற்றைத் துணிகளாற் கட்டிக் குளிர்ந்தநீரை விட்டு நனைத்துக் கொண்டே யிருந்தார். யாங்கள் அவர்களிடஞ் சென்றதும், பாரசிகப் பெருமான் எங்கள் ஆட்களிடமிருந்த ஒரு விளக்கை வாங்கி, அதன் ஒளி அப்பெரியவர் முகத்திலும், அவர் தம் மகனார் முகத்திலும் படும்படி பிடித்தார். அவ்விருவர் முகங்களையும் நோக்கவே, என் அம்மையார் உடலம் பதறி அப் பெரியவர் பக்கத்திற்போய்க் கீழேகுந்தி அவரது கையைப் பிடித்து "அப்பா!" என்று நடுங்கிய குரலிற் கூறிப் பின்னர், அவரது மகனாரைச் சுட்டி "இவன் நம்ம அண்ணா குமாரசாமியா?" என்று அழுதபடியே வினவினார்.

அச்சொற்களைக் கேட்டதும் அப் பெரியவர் திரும்பிப் பார்த்து அம்மையார் முகத்தை உற்றுநோக்கி “ஐயோ! கமலாம்பா! என் அருமைக் குழந்தே! இத்தனை வருஷங்களாய்க் காணாமற் போய் இப்போது இங்கே எப்படி இந்த ஆண் கோலத்தில் வந்தாய்? இவன் உன் தமையன் குமாரசாமி யல்லவா!” என்று சொல்கையில் அவர் தமது துயரத்தை ஆற்றமுடியாதவராய் மேற்கொண்டு பேச மாட்டாமல் உள்ளம் நைந் துருகி அழுதார். இந்நிகழ்ச்சியைப் பார்த்ததும் எனக்கொன்றும் விளங்காமல் வியப்புந் திகைப்பும் அடைந்தேனாயினும், அவ்விருவர் துயரத்தையுங் கண்டு மனஞ் சிறிதுந் தாங்காமல் யானுங் கண்ணீர் சிந்தினேன். என் தமையனும் பாரசிகப் பெருமானும் ஏதும் பேசாமல் மரம்போல் அசைவற்று நின்றனர். அதிகாரியுஞ் சேவகரும் எங்கள் ஆட்களுந் தமக்கொன்றும் விளங்காமையால் தாம் ஒருவரையொருவர் பார்த்து ‘ஈதென்ன?’ என்று தம்மைத் தாம் வினவும் குறிப்புடைய வராய் வியப்புற்று நின்றனர். இவருள் நுண்ணறிவும் மனத் திட்பமும் வாய்ந்தவரான அவ்வதிகாரி எங்கள் நிலைமையைப் பார்த்து இரக்க முடையவராய் அந்தப் பெரியவரை நோக்கி “உங்கள் மகனுக்கு அபாயம் இல்லை. இரத்தம் நின்றுபோய் விட்டது. திறமான சிகிச்சை செய்தாற் பிழைத்துக்கொள்வார். இப்போது நீங்கள் இங்கே வருந்திக்கொண்டிருப்பதிற் பயனில்லை. மேற்கொண்டு ஆக வேண்டுவதைப் பார்க்க வேண்டும். உங்கள் மகனை நாளைக் காலையில் பம்பாய் வைத்திய சாலைக்குக் கொண்டுபோக வேண்டும்”. என்று சொன்னார் அச்சொல்லைக் கேட்டு அவரும் அம்மையாரும் யாங்களும் மனந்தேறினோம். அந்தப் பெரியவரின் மகனார் இன்னும் உணர்வற்ற நிலைமையிலேயே கிடந்தார். விடிந்தவுடன் மயக்கந் தெளியுமென்றும், அவர் இறக்க மாட்டா ரென்றும் ஆடவர் எல்லாருங் கூறினர்.

சிறிதுமுன் நடந்த சண்டையில் உயிரோடு பிடிபட்டவர் நான்கு கள்வரே யாகையால், இறந்துபட்ட மற்ற அறுவரில் நால்வர் கள்வராகவும் மற்றிரண்டுபேர் வேறு ஆட்களாகவும் இருக்கவேண்டுமென உணர்ந்தேன். இத்தனை துன்பங் களுக்குங் காரணமாயிருந்தது, இப்போது இறந்துபட்ட அவ்விருவர் யாராயிருக்கலாமென்று யான் அப்பெரியவரைக் கேட்டேன். அவர்தாமும் அவர்களை இதற்கு முன் பார்க்க

நேரவில்லை யென்று கூறினார். அதன்மேல், ஒரு விளக்கைக் கையிலெடுத்துக் கொண்டுபோய் அவ் விருவரையும் உற்றுப் பார்க்கும்படி என் தமையனை வேண்டினேன். வெட்டுண்டு கிடக்கும் அப்பிணங்களிரன்டையும் போய்ப்பார்க்க அச்சமும் அருவருப்பும் உற்று முதலில் அவன் பின்வாங்கினானாயினும், பின்னர் என் வேண்டுகோளுக்கு இசைந்து அவன் அவர்களிடஞ் செல்லவே, யானும் அவன்பிற்சென்று அவ்விருவர் பக்கத்தும் நின்றேன். என் தமையன் பிடித்த விளக்கினொளி அவ்விருவர் முகங்களிலும் பட்டது. ஐயோ! இப்போது என் கண்ணெதிரே தென்பட்ட அவ்விரண்டு முகங்களையும் பார்த்ததும் என்னை மறந்து "ஐயோ! ஐயோ! என்று அலறினேன். என் தமையன் "ஓ! அப்பா! ஈதென்ன பொல்லாத காலம்!' என்று இரைந்து கூவினான். உடனே அந்தப் பாரசிகப் பெருமானும் பெருமாட்டி யாரும் எம்மண்டை வந்து நோக்கினார்கள். அவர்களும் அவ்விரண்டு முகங்களையும் பார்த்ததும் "ஐயோ! இதென்ன கொடுமை!" என்று சொல்லிப் பெரு வியப்புற்றுத் திகைத்து நின்றார்கள். யானோ கண்ணீர்விட்டு "அப்பா! அப்பா!" என்று கதறினேன். இப்போது அப்பெரியவரும் என் பக்கத்தேவந்து அவ்விருவரையும் பார்த்தார். ஆனால், அவர்க்கொன்றும் புலப்படவில்லை. அதன்மேல் அவர் என்னை வியப்புடன் நோக்கி "அம்மா, நீ ஏன் இந்தப் பாவிப் பயலுக்காக இவ்வளவு வருத்தப்பட்டு அழுகின்றாய்? உண்மையை ஒளியாமற் சொல்லு!' என்று கேட்டார். யான் என் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு "பாட்டா, இவர் என்னைப் பெற்ற தகப்பனார்! இதோ அவர் பக்கத்திற் கிடப்பவன்றான் இவ்வளவு துயரத்திற்குந் துன்பத்திற்குந் காரணமான சேதுராமன் என்பவன்; இவனைப் பற்றித்தான் பேதையேன் முதலிலிருந்தே ஐயப்பட்டு வந்தேன். இவனாலேதான் என் தந்தை மடிந்தார்!" என்று அழுது கொண்டே சொன்னேன். என்சொற்களைக் கேட்ட அப்பெரியவர் ஐய முற்றவராய் "என்ன குழந்தாய், இந்தப் பாதகன் உன் தகப்பனா! ஓ! ஓ! நான் நம்பமாட்டேன். இந்தக் கொடியவனுக்கு இவ்வளவு உயர்குணமும் அழகும் வாய்ந்த நீ பிள்ளையாய்ப் பிறந்திருக்க முடியாது. நீ ஏதோ ஆள்மாறாட்டத்தால் இவனை உன் தந்தையாக நினைத்து வருந்துகிறாய்!" என்றார். இதற்குள் என் தமையன் "இல்லை, இல்லை, இவர் எங்கள் தகப்பனார் தாம்!" என்று உறுத்திச் சொன்னான். அதன்மேல், அவர் என்னையும் என்

தமையனையும் உற்றுப் பார்த்துப் பின்னும் வியப்புடையவராய் “ஆம், உனக்கு இவள் தங்கையாக இருக்கலாம். உங்கள் இருவர் முகமும் ஒரே அச்சில் வார்க்கப்பட்டனபோல் அவ்வளவு ஒத்திருக்கின்றன! ஆனால், உங்களிருவர்க்கும் இந்தக் கொடியவன் தந்தை என்பதை நான் எப்படி நம்புவேன்!” என்று சொல்லிப், பிறகு அந்தப் பாரசிக அம்மையாரை நோக்கிக் “கமலா, இவர்கள் இருவரும் உன் மக்களைப்போற் காணப்படு கின்றார்களே!” என்றார். அந்த அம்மையார் “அப்பா, இவர்களை என் மக்களினும் மேலாகவே கருதியிருக்கின்றேன். ஆனாலும், இவ்விருவரையும் நான் பிள்ளைகளாகப் பெறும் நல்வினை செய்திலேன்! இங்கே இறந்து கிடப்பவர் தாம் இவ்விருவர்க்குந் தந்தையார்!” என்று துயரத்தோடும் மொழிந்தார். இதற்குள் அந்தப் பாரசிகப் பெருமான் அப்பெரியவரை நோக்கிப் “பெரியய்யா, இவங்க ரெண்டு பேரும் அவரிக்கிப் பிள்ளைங்கதான்!” என்றார். இங்ஙனம் யாங்கள் கூறியவற்றை யெல்லாங் கேட்டு ஒன்றுந் தோன்றதவராய் வியப்புந் திகைப்பும் அடைந்து சிறிதுநேரஞ் சும்மா இருந்து பிறகு பாரசிக அம்மையாரைப் பார்த்துக் “கமலாம்பா, இந்தப் பார்சிக்கார் யார்? நீ மங்கைப்பருவம் அடைந்ததும் யானும் உன் தமையனும் இந்த இடத்திற்கு வந்துவிட்டோம். நாங்கள் இங்கே வந்துசேர்ந்து பல வருஷங்கள் கழிந்தபின்புதான் உன் தாயாரை உன் தமையன் இங்கே அழைத்து வந்தான். அப்போது நீ எப்படியோ காணாமற் போய் விட்டாய் என்பது மட்டுந்தான் எனக்குத் தெரிந்து யான் துக்கப் பட்டேன்.” என்று சொன்னார். அதற்கு அம்மையார் “இவர் என் கணவனார்” என்று அவரைச்சுட்டி அப்பெரியவர்க்குக் காட்டினார். அதைக் கேட்ட அப்பெரியவர் பின்னுந் திகைப் படைந்து “காட்டிலே திகைப்பூண்டை மிதித்தவனைப்போல், நான் இப்போது ஒன்றுந் தோன்றாமல் திகைப்படைந் திருக்கின்றேன். இங்கே நடந்தவைகளும் இப்போது ஒன்றன்பின் ஒன்றாய் வெளிவருபவைகளும் ஒரு பெருஞ் சிக்கலாயிருக்கின்றன. இந்தச்சிக்கு எல்லாங், கமலா, உன் தாயாலேதான் நீக்கப்பட வேண்டும். இங்கே இப்போது வெளிப் பட்ட இந்த உறவுமுறைகளெல்லாம் நம்முடன் நிற்கும் இந்த ஆட்கள் எவர்க்கும் இப்பொழுது தெரிவிக்கவேண்டாம். பின்னே தெரிவிக்க வேண்டிய முறைப்படி தெரிவிக்கலாம். நாம்

எல்லா வற்றையும் விரிவாகக் கலந்துபேச வேண்டும். இனி இங்கே செய்யவேண்டியதைப் பற்றி முடிவு கட்டுங்கள்." என்று பகர்ந்தார்.

எங்கள் பாரசிகப் பெருமான் தம் ஆட்களைப்பார்த்து, வெட்டுண்டு கிடந்த என் தந்தையார் காயங்களைக் கட்டி இரத்தத்தைத் துடைத்து வேறு ஆடைஉடுத்து ஒழுங்கு படுத்தும்படி கட்டளையிட்டார். என் தந்தையார்க்காக மிகவுந் துயரம் அடைய வேண்டாம் என்று அந்தப்பெரியவரும் பாரசிக அன்னையாரும் பெருமானும் எனக்கும் என் தமையனுக்கும் ஆறுதல்மொழிகள் பலவற்றைச் சொன்னார்கள். அதிகாரியும் அவருடன் வந்த சேவகர்களும் உயிரோடு பிடிக்கப்பட்ட கள்வர் நால்வரைக் கேட்டு, இறந்துபோன கள்வர் வரலாறுகளையும், எங்களை அவர்க ளெல்லாருமாய்ச் சேர்ந்து இம் மலைக் குகைக்குப் பிடித்துவந்த வரலாறுகளையு மெல்லாம் எழுதிக் கொண்டார்கள்; அவற்றோடு தொடர்புபட்டமட்டில் எங்கள் வாய்மொழிகளையுங் கேட்டுக் குறித்துக்கொண்டார்கள். பிறகு, அக்கள்வர்கள் விருப்பப்படி இறந்துபோன கள்வர்களை அடக்கஞ் செய்யவேண்டிய வகைகளுந் தீர்மானஞ் செய்யப் பட்டன. இப்போது விடியும் நேரமாயிற்று. அப்பெரியவரின் மகன் இப்போது கண்விழித்தார். விழித்ததும், அருந்துதற்குத் தண்ணீர் வேண்டுமென்று கைக்குறி காட்டினார். உடனே யான் கோயிலின் உட்சென்று அம்மை திருவுருவத்திற்குப் பின்னேயுள்ள அருவிநீர்க் குட்டத்திலிருந்து தண்ணீர் முகந்துவந்தேன். அம்மையார் இப்போது தமக்குத் தமையனாரென்று தெரிந்த அவர்க்குத் தாமே அதனைப் பருகக் கொடுத்தார். அங்ஙனங் கொடுக்கையில் அவர் அம்மையாரது முகத்தை உற்றுப்பார்த்து வியப்புற்றார் என்பது அவரது முகத்திற் றெரிந்தது. ஆனாலும், அவராற் பேசக்கூடவில்லை. தமது மார்பிலுள்ள வெட்டுக் காயத்தைத் தொட்டுக் காட்டி மறுபடியுங் கண்களை மூடிக் கொண்டார். பக்கத்தில் நின்ற அதிகாரி அவரது நரம்பை ஆராய்ந்துபார்த்துச் "சிறிதுங் காலந் தாழாமல் இவரைப் பம்பாய் மருத்துவச் சாலைக்குக் கொண்டுபோக வேண்டும். இவரது உயிர்க்கு ஏதும் இடரில்லை யென்றாலுங், கத்தியின் முனை குத்தி இவரது நெஞ்சப்பை சிறிது பழுதுபட்டிருக் கின்றது. அதனை விரைவிற் சீர்திருத்த வேண்டும்" என்று மகாராட்டிரத்திற் சென்னார். அதனைக் கேட்டதுந் தம் மனைவி

யாரை அழைத்து வருதற் பொருட்டு அப்பெரியவர் அக்குகையை விட்டுச் சென்றார். சேவகர்களும் எங்கள் ஆட்களும் ஒருங்கு சேர்ந்து, இறந்துபோன கள்வர்களையுஞ் சேதுராமனையும் உடம்பு முழுதுந் துணிசுற்றி இறுக்கிக் கட்டி, இரத்தக்கறை படாத ஓரிடத்தில் வரிசையாகக் கிடத்தி வைத்து, இரத்தம்பட்ட இடங்களையெல்லாங் கழுவித் துப்பரவு செய்தார்கள். அவ்வதிகாரி தம் சேவகரில் நால்வரைப் பிடிபட்ட கள்வன் ஒருவனோடும் போக்கி இறந்துபோன கள்வரின் மனைவி மக்களையும் பிடிபட்ட கள்வரின் மனைவி மக்களையும் விரைவில் அழைத்துவரும்படி ஏவினார்.

போய் ஒருமணிநேரத்திலெல்லாம் அந்தப் பெரியவர் தம் மனைவியாரோடுங் குகையினுள் வந்தார். உள் நுழைந்ததும் அப்பாரசிக அம்மையார் ஓடிச்சென்று ஆண்டில் முதிய அந்தப் பாட்டியைக் கட்டிக்கொண்டு 'அம்மா' என்று அலற, அந்த பாட்டியும் அவரைக் கட்டிக்கொண்டு 'கண்மணி கமலா' என்று அலற இவ்விருவரது ஆற்றாமையுங்கண்டு என் நெஞ்சம் நெக்கு நெக்கு உருகியது. பின்னர் அவ்விருவருங் குமாரசாமி என்னும் அப்பெரியவர் மகனண்டையிற்போய் அழ, உடனே அவர் கண் விழித்து 'அழாதே' என்னுங் குறிப்புத் தோன்றக் கையமர்த்தி மறுபடியுங் கண்களை மூடிக்கொண்டார். அப் பெரியவரும் எங்கள் பாரசிகப் பெருமானும் யாங்களும் அவ்விருவரையுந் தூக்கித் தேற்றினோம். அவர்கள் தேறுதல் எய்தி அமைதியுற்றபின் அப் பெரியவர் தம் மனைவியாரை நோக்கிப் "பொல்லாத இக் கள்வரோடு சேர்ந்து சேதுராமனும் இறந்தான்!" என்று துயரத்தோடு கூறினார்.

அது கேட்டதும் அந்தப் பாட்டி மறுபடியும் மனங்கலங்கி "ஐயோ! தன் தாய் தந்தையாரை அறியாமல் நம்மிடம் வளர்ந்து வந்த அவனுமா மாண்டான்" என்று வருந்தி அவன் கிடந்த இடத்திற்போய் அவனைப் பார்த்து நைந்தழுதார். அழுது ஓய்ந்த பின், அவன் பக்கத்தே கிடந்த என் தந்தையாரைப் பார்த்துத் திகிலடைந்து "ஓ! ஓ! இதென்ன கொடுமை, சேதுராமன் பக்கத்தில் சேதுராமன் தந்தையும் மாண்டுகிடக்கின்றாரே! ஐயோ! என் மூத்தமகள் கதி எப்படியாகுமோ!" என்று அலறினார்.

இச் சொற்களைக்கேட்டதும் யான் அடைந்த வியப்புக்குந் துன்பத்திற்கும ஓர் அளவில்லை. அப் பெரியவர்

சொல்லிய படியே எல்லாம் ஒரு பெருஞ் சிக்காய்த்தான் தோன்றின. எனக்கு ஒன்றுமே விளங்கமாற் றிகைப்புற்று நின்றேன். இதற்குள் அந்தப் பாரசிக அம்மையார் தம் தாயெனத் தெரிந்த அப்பாட்டியை நோக்கி "அம்மா, இவர் சேதுராமன் தகப்பனாரல்லர். இதோ, இந்தக் கோகிலாம்பா ளுக்கும் அதோ நிற்குஞ் சுப்பிரமணியத் திற்கும் அவர் தகப்பனார். நீ ஏதோ தவறுதலாய் எண்ணி விட்டாய்!" என்று மொழிந்தார்.

சிறிதுநேரம் அந்தப்பாட்டி தனது துயரத்தையும் மறந்து ஆழ்ந்த நினைவிலிருந்தார்; பிறகு எம் மிருவரையும் உற்றுப் பார்த்தார். யாங்கள் "பாட்டி, நாங்கள் தாம் இவர் பிள்ளைகள்!" என்று அம்மையார் சொற்களை உறுதிப்படுத்திக் கூறினோம்.

அப் பாட்டி தம்மையே தாம் நொந்துகொண்ட ஒரு குறிப்புடையவராய் "இல்லை! இல்லை! சேதுராமன் தான் இருவருடைய மகன்! நீங்கள் இருவரும் இதோ உள்ள என் இளையமகள் கமலாம்பாள் பிள்ளைகள்!" என்று எங்களை நோக்கிச் சொல்லிப், பின்னர்த் தம் மகளைப்பார்த்து "என் கண்மணி, கமலா, இவ்விருவரும் உன்னுடைய உண்மையான பிள்ளைகள்!" என்று வற்புறுத்திச் சொன்னார்.

"அம்மா, இவர்கள் இருவரையும் என் மக்களினும் மேலாகவேதான் எண்ணியிருக்கின்றேன். ஆனாலும், இவர்களை யானே என் வயிற்றிற் பிள்ளைகளாகப் பெறும் நல்வினை செய்தேன் அல்லேன்!" என்று தம் அன்னையின் நினைவு பிசகிய உணர்ச்சியைத் திருத்துவார்போல் வலியுறுத்தி முன்போலவே புகன்றார்.

அதற்கு அந்தப் பாட்டி புன்சிரிப்புக் கொண்டு சுற்றிலும் நோக்கினார். சிறிது விலகி நின்ற அந்தப் பாரசிகப் பெருமானைப் பார்த்ததும் ஒரு புதுநினைவு தோன்றப்பெற்றுத் தம்மகள் பக்கமாய்த் திரும்பி "அம்மா கமலம், அதோ நிற்கும் அவர் அந்தப் பார்சிக்காரர்போல் தோன்றுதே?" என்று பழைய ஒரு நினைவைக்குறித்துக் கேட்பார்போல் வினவினார்.

"அம்மா, அதே பாரசிக்காரர்தாம்! அவர்தாம் என அருமைக் கணவனார்!" என்று உறுத்திச் சொல்லித் தம் அன்னை சொல்லியதற்கு இணங்கிப் பேசினார்.

"அதுசரிதான். நீ அப்போது பெற்ற இரண்டுபிள்ளை களைப் பற்றி மறந்து போனாயோ?" என்று அந்தப் பாட்டி கேட்டார்.

"இல்லை, அம்மா; ஆனால், அவ்விரண்டு குழந்தைகளும் அப்போதே சிலநாட்களில் இறந்துபோனதாக வன்றோ பேச்சு வந்தது," என்று என் பாரசிக அம்மையார் கூறினார்.

"குழந்தாய், நான் செய்த குற்றத்தை நீ பொறுக்க வேண்டும். இரகசியம் வெளிப்படா திருக்கும்பொருட்டு அப்போது அப்படி ஒருபேச்சு வரச்செய்தேன். நீ முதலிற் பெற்றது ஓர் ஆண்குழந்தை, அதேநாளில் உன் தமக்கை பெற்றதும் ஓர் ஆண்குழந்தை. உன் குழந்தையை உன் தமக்கை அறியாமல் அவளிடங் கொண்டு போய்ச் சேர்த்து, அவள் குழந்தையை ஓர் ஏழைப் பார்ப்பாத்தியிடங் கொடுத்து வளர்த்து வந்தேன். அந்தப் பார்ப்பாத்தியிடமும் பிறகு எங்களிடமும் வளர்ந்த அந்த சேதுராமன்தான் இதோ மாண்டு கிடக்கும் இந்தச் சேதுராமன்! பின்னும் இரண்டு வருஷங் கழித்து நீ ஒரு பெண் குழந்தை பெற்றபோது, உன் தமக்கையும் அதேநாளில் ஒரு பெண்பிள்ளை பெற்றாள். அவளுக்குத் தெரியாமல் உனது பெண் குழந்தையையும் அவளிடஞ் சேர்ப்பித்து, அவள் பெற்ற பெண்பிள்ளையை முன்சொன்ன ஏழைப் பார்ப்பாத்தியிடமே கொடுத்து வளர்த்து வந்தேன், ஆனால், அப் பெண்குழந்தை மூன்றாம் மாதத்தில் இறந்துபோயிற்று. நீ பெற்ற குழந்தைகள் இரண்டும் உன் தமக்கை குழந்தைகளாகவே அவளாலும், அவள் கணவனான இதோ கிடக்கும் என் மூத்த மருமகனாலும் வளர்க்கப் பட்டுவந்தன. அக் குழந்தைகளுக்குப் பத்துப் பன்னிரண்டு வயதாகிறபோது உன் தமக்கை ஒரு பெண்குழந்தை பெற்றாள் என்றும், அக்குழந்தைக்கு இப்போது வயது எட்டு என்றுங் கேள்விப் பட்டேன்." என்று அந்தப் பாட்டி கூறினார்.

"என் தமக்கை குழந்தைகளை அவளுக்குத் தெரியாமல் எப்படி அகற்றினாய்? ஏன் அகற்றினாய்? என் குழந்தைகளை வேறு ஒருவரிடங்கொடுத்து வளரச் செய்யாமல் என் தமக்கையிடஞ் சேர்ப்பித்தது ஏன்? அம்மா, அவ்வுண்மைகளை எனக்கு விளக்கிச் சொல்ல வேண்டும்." என்று என் அம்மையார் தம் தாயைக் கேட்டார்.

"நான் அப்போது பட்டதுன்பம் உனக்குத் தெரியாது நன்றாய் வாழ்ந்த நமது குடும்பத்திற்குக் கொடிய வறுமை வந்தது. உனக்கு அப்போது பன்னிரண்டு வயது, உன் தமக்கைக்குக் கிட்டத்தட்டப் பதினான்கு வயது. நீங்கள் இருவரும் மங்கைப்பருவம் அடையும் முன் உங்களை நம்ம சாதிவழக்கப்படி தக்க மாப்பிளைக்குக் கல்யாணம் செய்து கொடுக்க எவ்வளவோ முயற்சி செய்தோம், முடியவில்லை. யார் வந்தாலும் பெண்ணுக்கு என்ன சீதனங் கொடுப்பாய்? ஐயாயிரங் கொடுப்பாயா? இரண்டாயிரத்துக்கு நகைபோடு வாயா? மூன்று பரீட்சை வரையில் மாப்பிளையைப் படிக்க வைப்பாயா? என்று கேட்டார்களேயொழியப், பெண்களின் அழகையாவது தன்மையையாவது கல்வியையாவது கேட்டவர்கள் எவருமேயில்லை. உங்களுக்குச் சுருக்கில் கல்யாணம் ஆகாத கவலை என் வயிற்றிலும் உன் தகப்பன் தமையன் வயிற்றிலும் நெருப்புப்பற்றி எரிவதுபோல் எரிந்துவந்தது. அன்றாடம் சீவனத்திற்குத் தேடுவதே முடியாத நிலைமையில் இருக்கையில் ஏழாயிரம் எண்ணாயிரத்திற்கும் மணச்செலவு செய்து உங்களைக் கட்டிக்கொடுக்க நாங்கள் எங்கே போவோம்! உன் தமக்கை மங்கைப்பருவத்தை அடைந்து விட்டாள். ஆனால், அதை நாங்கள் வெளிப்படுத்தாமல் மறைவாய் வைத்திருந்தோம். பின்னும் ஒரு வருஷத்தில் நீயும் மங்கைப் பருவம் அடைந்துவிட்டாய். உன் தகப்பனுந் தமையனுந் தமிழுஞ் சமஸ்கிருதமும் நன்றாய்ப் படித்திருந்தார்களே தவிர இங்கிலீஷ் படிக்கவில்லை. அதனால் அவர்கள் நல்ல வரும்படிக்கு இடமான அலுவலில் அமரக்கூட வில்லை. அல்லது உங்களுக் காவது இங்கிலீஷ் படிப்புச் சொல்லி வைக்கலாமென்றால் அதற்கும் இடமில்லை. உங்களிருவருக்கும் உன் தகப்பனார் சொல்லி வைத்ததெல்லாந் தமிழுஞ் சமஸ்கிருதமுந் தான். உங்களுக்கு இங்கிலீஷ் தெரிந்திருந்தாலும், நம்மவர்களுக்குப் பயப்படாமல் பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயர் வேலைக்காவது நீங்கள் போய் இருக்கலாம்; அதற்கும் வழியில்லை. தமிழ் சமஸ்கிருதத்திலும் நீ படித்துக்கொண்டது போல உன் தமக்கை படிக்கவில்லை-" என்று அந்தப் பாட்டி சொல்லிவருகையில்,

என் அம்மையார் "அம்மா, தமிழ் சமஸ்திருதங்கூட யான் படித்திராவிட்டால் என்கதி எப்படியாயிருக்கும்! அவ்வளவு

தெரிந்ததும் ஒரு நல்வினையேயாகும்!" என்று இடையே கூறினார்.

மறுபடியும் அந்தப் பாட்டி "அச்சமயத்தில் எனக்கு மற்றொரு பொல்லாத துன்பம் வந்தது. திடீரென்று முதலில் உன் தமையனும் பிறகுன் தகப்பனுங் காணாமற்போய்விட்டார்கள் ஏதும் அற்ற ஏழைப் பெண்பிள்ளையாகிய நான் அடைந்த துன்பத்தை எப்படிச் சொல்லுவேன்! என் துன்பம் ஒருபக்கமாயிருந்தாலும், மங்கைப் பருவத்தை அடைந்த என் அருமைக் கண்மணிகளாகிய உங்கள் நிலைமைக்கும், சிறிதும் ஈவிரக்கம் இல்லாக் கொடியரான நம்ம பார்ப்பார்களின் கடுமைக்கும் பரிகாரம் எப்படியென்னுங் கவலை என்னுயிரைத் தின்றுகொண்டே வந்தது! நல்லகாலமாய் இதோ கிடக்கும் என் மூத்த மருமகனை பலவிடங்களிற் பெண்தேடிச் சரிப் படாமையால் உன் தமக்கையைக் கல்யாணஞ் செய்துகொள்ள வந்து கேட்டார். அப்போது என்னிடமிருந்த நகை பகைகளை யெல்லாஞ் சரிப்படுத்தி ஓர் ஆயிரரூபாதான் நான் செலவழிக்கக் கூடுமென்று தெரிவித்தேன். அவர்கள் இசைந்து உடனே உன் தமக்கையைக் கட்டிக்கொண்டார்கள். கல்யாணம் முடிந்தபின் உன் தமக்கை மங்கைப்பருவம் அடைந்தபிறகு கல்யாணம் செய்யப்பட்ட உண்மை எல்லார்க்குந் தெரிந்துவிட்டது! உன் உடம்பு உன் தமக்கையுடம்பைவிடக் கொழுமையா யிருந்தது. உன்னை அப்போது பார்த்த நம்ம பெண்பாலார்சிலர் உன்னை ஐயுறவோடு கருதிப் பார்த்ததையும் அறிந்தேன். அதனால், உன் தமக்கை கல்யாணம் நடந்தபோது அதற்கு உன்னை அழைத்துப் போகாத படி திட்டம் பண்ணினேன். கல்யாணம் நடந்தபிறகும் உன்னை அவர்கள் அகத்துக்கு அழைத்துப்போகாமல் அவ்வளவு கருத்தாக வைத்திருந்தேன்!" என்று சொல்லும் போது,

"ஆம், அம்மா, அதனாலேதான், இதோ கிடப்பவர் என் தமக்கை கணவன் என்பதை அறியாமற் போனேன்! நான் உன்னோ டிருந்த பின்னுஞ் சில ஆண்டுகளிலுங்கூட இவரை யான் பார்த்ததே யில்லை! உன்னையும் என் தமக்கையையும் மற்றெல்லாரையும் நான் விட்டுப் பிரிந்து சற்றேறக் குறையப் பதினேழு பதினெட்டு வருஷங்கள் ஆய்விட்டமையால், இதற்கிடையில் அம்மைவார்த்து முழுதும் பழுதுபட்டு வேறாகிய

வடிவத்தை அடைந்த என் தமக்கையை இரண்டொருமுறை நான் காண நேர்ந்ததும் அவளை இன்னாளென்று நான் தெரிந்து கொள்ள இயலாமற் போனேன்! ஆனாலும், அவர் என்னைக் கண்டபோது என்னை இன்னாளெனத் தெரிந்துகொள்ளாதது நீண்டகாலப் பிரிவினாலும், பார்சிக்காரர் உடையில் ஒரு பார்சிக் கனவானுக்கு மனைவியாய் இருப்பதானலும் என்றே நினைக் கின்றேன். அதிருக்கட்டும். நான் கேட்டவைகளுக்கு நீ இன்னுந் தக்கவிடை சொல்லவில்லையே?" என்று என் அன்னையார் மொழிந்தார்.

"கண்மணி கமலம், நான் பட்ட துன்பங்கள் என் நினைவுக்கு வந்ததனால், அவற்றை அடக்கமுடியாமல் உனக்குச்சொன்னேன். நம்ம வீட்டில் ஆண்பாலார் எவருமில்லாமையால், நான் உன்னை வைத்துக் கருத்தாய்ப் பாதுகாத்துவந்தேன். நம்ம உறவின ரெல்லாருஞ் சேர்ந்து நம்மையும், உன்தமக்கை அவள் கணவன் அவர்கள் வீட்டிலுள்ளவர்கள் எல்லாரையுஞ் சாதியைவிட்டு விலக்கிவைத்து விட்டார்கள்! இதுவும் நமக்கொரு நன்மையாகத் தான் முடிந்தது. அதனால், உன் தமக்கை கணவன் என்மேல் வருத்தமாய் நம்ம வீட்டிற்கு வருவதில்லை; அவனைச் சேர்ந்தவர்களும் வருவதில்லை; உன் தமக்கையையும் நம்ம வீட்டிற்கு அனுப்புவதில்லை. நான் மட்டும் வேண்டியபோது உன் தமக்கையைப் போய்ப்பாத்து வந்தேன். இப்படி நடந்துவருகையில் திடீரென்று நீ கர்ப்பவதி யானாய். அதைக்கண்டதும் நான் இடி விழுந்தவள்போல் ஆனேன். உன்னைப் பார்த்தே நான் எல்லாத் துன்பங்களையும் பொறுத்து வந்தேன்! கடைசியில் உன்னாலும் துன்பம் வந்ததே! என்று நினைத்து நினைத்து ஆறாத் துயரத்திற்கு ஆளாகினேன். அப்போது உனக்கு நான் எவ்வளவோ புத்திமதிகள் சொன்னேன். நீயும் எனக்கு உண்மையைச் சொல்லிவிட்டாய். நீ கர்ப்பவதியா யிருப்பதை நம்மவர் தெரியாமல் மறைத்துவைக்க நான் பட்டபாடு ஈசனே அறிவான்! நல்லவேளையாய், யார் செய்த புண்ணியமோ உன் தமக்கையும் அதேகாலத்திற் சூல்கொண்டாள். அவள் பத்து மாதமுங் கழித்து ஓர் ஆண்மகவு ஈன்றாள். அப்போது அவள் கணவன் ஊரிலில்லை. அவனைச் சேர்ந்த பெண்பாலாரில் நெருங்கிய உறவினரும் நாலைந்துநாட் கழித்துத்தான் உதவிக்குவந்தனர். அதனால் மருத்துவச்சியும், நானுந்தான் உன் தமக்கையின் பிரசவத்துக்கு அறையில் உதவியாயிருந்தோம். அவள் குழந்தை பெற்ற மூன்றாம்

நாள் நீ நம்ம வீட்டில் மகா சௌந்தரியமுடைய ஓர் ஆண் குழந்தையைப் பெற்றாய். உடனே மருத்துவச்சியும் நானுமாய்க்கலந்து உன் குழந்தையை உன் தமக்கையிடஞ் சேர்ப்பிக்கத் தீர்மானஞ் செய்தோம். அப்போது ஈசன் எங்களுக்குப் பின்னுமோர் உதவிசெய்திருந்தார். உன் தமக்கை பிள்ளைபெற்ற பெருவருத்தத்தால் சன்னிகண்டு நாலைந்துநாள் தன் உணர்வு தனக்கு இல்லாமலே யிருந்தாள். அதனால் உன் பிள்ளையைஅவளிடமும், அவள் பிள்ளையை ஓர் ஏழைப் பார்ப்பாத்தியிடமுஞ் சேர்ப்பிப்பது எனக்கும் மருத்துவச்சிக்கும் எளிதாயிருந்தது. நீ பெற்ற அந்த ஆண்பிள்ளை சொல்லுக்கு அடங்காத அழகுடையதாயிருந்தமையால், அதைப் புறத்தியாள் ஒருத்தியிடங்கொடுக்க என் மனந் துணியவில்லை. உன் தமக்கையின் பிள்ளையோ கறுப்பாய் அழகில்லாமல் இருந்ததனால் அதைப் புறத்தியாளிடங் கொடுக்க மனம் வந்தது; அப்படிக் கொடுத்தாலும், அந்தக்குழந்தையுஞ் செவ்வையாக வளரும்பொருட்டு நான் பட்ட துன்பங் கடவுளே அறிவார். பிறகு உன் தமக்கை சன்னி தீர்ந்து குழந்தையைப் பார்த்ததும் அவ்வளவு அழகான குழந்தையைத் தான் பெற்றதைக் குறித்து அளவிறந்த மகிழ்ச்சி அடைந்து அதனைக் கண்ணுங் கருத்துமாய் வளர்த்து வந்தாள். அவள் கணவனுந் தன் குழந்தை யென்றெண்ணியே அதனிடத்து அளவில்லாத ஆசைவைத்து வளர்த்து வந்தான். அவ்வளவோடு எல்லாம் இரகசியமாகவே நடந்து போயிற்று.உன் தகப்பனுந் தமையனும் இல்லாமல் யான் வறுமையால் துன்பப்பட்டாலும், பிறகு ஒருவருஷம்வரையில் உன்னைப்பற்றிய மட்டில் கவலைக்கு இடமில்லாமல் இருந்தேன். ஆனால், அவ்வொரு வருஷம் போனதும் மறுபடியும் நீ கர்ப்பவதி யானதும்! மறுபடியும் எனக்குண்டான அச்சமுங் கவலையுந் துன்பமும் இப்போது நினைத்தாலும் என் உயிர் போய் விடும்போல் தோன்றுகிறது. உன்னைக் கடிந்து கொள்ளவும் எனக்கு மனம் வரவில்லை. நான் முதலிற் சொல்லிய புத்திமதிகளைக் கடந்து நடந்ததற்காக நீ உன்னையே மிகவும் நொந்துகொண்டு என்முகத்தை ஏறிட்டுப் பார்ப்பதற்கே நீ நாணமுற்றாய் என்பதைத் தெரிந்துகொண்டேன் மனவருத்தத் தால் உன்னையே நீ மாய்த்துக் கொண்டால் என் செய்வது! என்று எண்ணிப்பார்த்துக் கடைசியாக நானே உனக்கு ஆறுதல் சொல்லி வரலானேன். என் கண்மணியாகிய உனக்கு ஒன்று

நேர்ந்தால் நான் எப்படி உயிரோடிருப்பேன்! என்று எண்ணிக் கலங்கினேன். ஏழைகளாகிய நம்முடைய முகத்தைக் கடவுள் மறுபடியும் இரக்கத்தோடு பார்த்தார். நீ சூல்கொண்ட அந்த மாதத்திலேயே மறுபடியும் உன் தமக்கை சூல்கொண்டாள். அதைக் கண்டு போனவுயிர் மீண்டு வந்தவளைப் போல் ஆனேன். பத்துமாதமுங் கழித்து நீ முதலில் ஒருபெண்குழந்தை ஈன்றாய், அது பெருந்தி கிலை எனக்கு உண்டாக்கியது. அன்னந் தண்ணீரும் இல்லாமற் கடவுளை வேண்டினேன். நீ மகவு ஈன்ற இரண்டாம் நாள் உன் தமக்கையும் ஒரு பெண்மகவு ஈன்றாள். ஆனால், இந்த முறை பின்னும் ஓர் இடைஞ்சல் நேர்ந்தது. உன் தமக்கை கணவனும் வீட்டிலுள்ள மற்றவர்களும் இச்சமயத்தில் வீட்டிலேயேயிருந்தார்கள். இதற்கென்ன செய்வதென்று நான் வருத்தப்படுகையில் எனக்குப் பேருதவியாய் இருந்த மருத்துவச்சி ஒரு மயக்கமருந்தை என்கையிற் கொடுத்தாள். அதை என் மனச்சாட்சிக்குமாறாக உன் தமக்கைக்கும் அவள் வீட்டிலுள்ளார் அனைவர்க்குங் கஷாயத்திலுஞ் சாப்பாட்டிலுங் கலந்து கொடுத்துவிட்டேன்! உன் தமக்கை பிள்ளைபெற்ற அதேஇரவில் எல்லாரும் மயக்கம் அடைந்து நன்றாய்த் தூங்கினார்கள். உடனே, நீ பெற்ற அழகே ஒரு வடிவெடுத்தாற்போன்ற அந்தப் பெண் குழந்தையை உன் தமக்கையிடங் கொண்டுபோய்ச் சேர்ப்பித்து, அவள் பெற்ற அழகற்ற பெண்பிள்ளையை முன்சொன்ன ஏழைப் பார்ப்பாத்தியிடமே கொடுத்து வளர்த்துவந்தேன். ஆனால், அக் குழந்தை மாந்தத்தால் மூன்றாம் மாதம் இறந்துபோயிற்று! இப்படியாக இரண்டாம் முறையும் நமது இரகசியம் வெளிப்படாதபடி அருள் செய்த ஈசனுக்கு அல்லும் பகலும் என் வணக்கத்தைச் செலுத்திக்கொண்டு, இனிமேல் இப்படிப்பட்ட துன்பத்திற்கு நீ இடஞ்செய்யலாகாதென்று நான் உன்னைக் கெஞ்சிக் கேட்டும் வந்தேன். பிறகு மூன்றுமாதம் ஆனதும், ஒருநாள் விடியற் காலையில் நான் கண் விழித்துப்பார்க்க, ஐயோ! மகளே! உன்னை நான் காணவில்லை! இப்படியும் என்னைவிட்டு நீ அகலலாமா!" என்று சொல்லி அப் பாட்டி அத் துயரத்தால் விம்மி விம்மி அழுதார்.

அதைக் கண்டு என் அன்னை அப் பாட்டியைத் தேற்றி, "அம்மா, இப்போது எல்லாவற்றையும் நான் ஒளியாமற் சொல்வதிற் குற்றமில்லை. வியாபாரத்தின் பொருட்டுப்

பம்பாயிலிருந்து சென்னைக்குவந்த என் கணவனார் அப்போது நம்ம வீட்டுக்குப் பக்கத்து மாளிகையிற் குடியிருந்தார். அப்போது அவரும் சிறு வயதினர். ஒருநாள் விடியற்காலையில் தலைமுழுகி விட்டு மேல் மாடியிற் சென்று என் கூந்தலை ஈரம் புலர்த்திக் கொண்டிருந்தேன். அப்போது அவருந் தமது மேன்மாடி மேல் தனியே உலவிக்கொண் டிருந்தார். அவர் என்னையும் யான் அவரையும் பார்த்தோம். அம் முதற் பார்வையிலேயே யான் அவரையின்றியும் அவர் என்னையின்றியும் உயிர்வாழ முடியாதென உணர்ந்தோம். எம்மிருவர்க்குள்ளும் உண்டான அன்பின் பெருக்கை என்னால் எடுத்துக்காட்டமுடியாது; எம்மைப் போல் அன்பாற் கட்டு பட்டவர்களுக்கே அதன்றன்மை புலப்படும். பிராமணரல்லாத மற்றச் சாதியில் அன்பான ஒருவரை மணஞ் செய்து கொண்டால் என்ன? என்று உன்னை யான் கேட்டபோ தெல்லாம் ‘பிராமணாளாகிய நாம் கல்யாணம் இல்லாமற் சும்மாஇருந்தாலும் இருக்கலாமே ஒழிய மற்றச் சாதியாரோடு எள்ளளவுங் கலக்கலாகாது’ என்று ஒரேகட்டாய் மறுத்து விட்டாய். நானோ என் மனமும் அன்பும் பதியப் பெற்ற ஒருவற்கு உரியவளே யல்லாமல், உனக்கும் நம் உறவினர்க்கும் உரியவள் அல்லேன் என்னும் உணர்ச்சிகொள்ளப் பெற்றேன். ஒரு பெண் தன் அன்பிற்கு இசைந்த ஒரு காதலனைத் தானே தெரிந்தெடுக்கும் அறிவினைத் தெய்வத்தின் அருளாற் பெற்ற பின், ஈதொன்றில் மட்டும் மாறாய்நிற்குந் தன் பெற்றோர்க்காவது உறவினர்க்காவது கீழ்ப்படிந்து நடக்கக் கடமைப்பட்டவள் அல்லள் என்னும் நினைவும் என் உள்ளத்தில் வேரூன்றித் தோன்றியது. என் அன்பைக் கவர்ந்த காதலனை யல்லாமல் வேறொருவனை மணக்கும் படி நீ வற்புறுத்தினால், அஃது என்கற்புக்குப் பழுதாகுமாதலால், உன்னையும் உறவினரையும் விட்டகன்று என் காதலனோடு போய்விடுவ தொன்று அல்லது உயிர்துறப்ப தொன்று என்று உறுதிசெய்திருந்தேன்.” என்று சொல்கையில்,

என்பாட்டி அப்படியானால் “நீ அப்போது உடனே என்னை விட்டுப் போகாமல் இருந்தது ஏன்?” என்று வினவினார்.

“அம்மா, என் கணவர் அப்பொழுது தம் தந்தையார் கட்டளைப் படி வியாபார முறைகளைக் கற்றுக்கொள்வதிலும், அதனோடு நாடோறுங் கல்விச்சாலைக்குப் போய்

ஆங்கிலமொழி பயில்வதிலுங் கருத்துக்கொண் டிருந்தமை யாலும், அவர் தம் பெற்றோரின் உடன்பாடு பெற்று என்னை மணஞ்செய்து கொள்ள வேண்டுமென விரும்பினமையால் அவர்களின் உடன்பாடு பெறுதற்கு முன்னே என்னை அழைத்துச் செல்லல் ஆகாதென்று எண்ணியிருந்தமையாலும் யான் அவருடன்செல்லாமல் இருந்தேன். மேலும், வயதுமுதிர்ந்த உன்னைத் தனியே விட்டுப் போகவும் என்மனம் இசையவில்லை. எப்படியாவது உன்னை என் விருப்பத்திற்கு இணக்கி என்காதலரை மணந்து கொண்டு, உன்னையும் என்னோடு அழைத்துச்செல்ல வழிபார்த்திருந்தேன். யான் முதற்பிள்ளை பெற்றபிறகாவது நீ என்வழிக்குவருவாயென்று பார்த்தேன். உனக்கோ சாதிப்பற்றுத் தான் பெரிதாய் இருந்ததே யல்லாமல், என் கற்பைப் பற்றியும் யான் என் மனத்திற் கிசைந்த மணவாளனை மணந்து நன்றாய் வாழல்வேண்டுமே என்பதைப் பற்றியும் நீ சிறிதும் கவலைப் படவில்லை. மற்ற எல்லாவகைகளிலும் எனது நன்மையைக் கோரும் உயர்ந்தகுணமுஞ் சிறந்தசெய்கையும் உடைய நீ, அவை எல்லாவற்றிலுஞ் சிறந்த என் காதல் அன்பையுங் கற்பொழுக்கத்தையுஞ் சிதைவுபடாமற் காக்க மனம் வைத்தாயில்லை! அவ்வளவு பொல்லாத சாதிப்பற்று உனக்கும் நம்மவர்க்குங் கெட்டிச் சாயம்போல் ஏறி உங்கள் உள்ளத்தை யெல்லாந் தன்மயம் ஆக்கிவிட்டது!" இரண்டாவது ஒருமகவும் ஈன்றேன்! இவ்விரண்டு மகப்போறும் பிறர்க்குத் தெரியாமல் மறைக்க நீ பட்டபாடு எழுபிறப்பிலும் என் நினைவைவிட்டு நீங்காது! இரண்டாம் மகப்பெற்ற பின்னும் யான் என் காதலனை மணக்க இசைந்தாயில்லை! இதற்கிடையில் என்காதலரும் என்னை மணந்துகொள்ளத் தம் பெற்றோர்களின் உடன்பாடு பெற்றுக் கொண்டு என்னைத் தம்முடன் வரும்படி வேண்டினார். மறைவிற் பெற்றமையால் என் அருமைக் குழந்தைகள் இரண்டும் என்னைவிட்டுப் பிரியும்படி செய்த ஊழ்வினையின் செயலை எண்ணி எண்ணி மனம் நைந்தேன்! இரண்டாம் மகப் பெற்றபின் நீ அதனை மறைக்கப்பட்டபாடும் என் உள்ளத்தை வருத்திற்று. உன் சொல்லைக் கடந்து நடக்க நேர்ந்ததும் என்னை அழலின் மெழுகாய் உருக்கிற்று. உன் சொற்படி நடந்தால் என் காதலற்குப் பிழை செய்தேன் ஆவேன். என் காதலற்கு இசைய நடந்தால் நீ மனம் வருந்துகின்றாய்! இங்ஙனம் இருதலைக் கொள்ளி எறும்பு' போல் தத்தளித்த யான் கடைசியாகப் பெண்மக்களுக்குத் தம்

மனம் உவந்த மாட்சியுடைய காதலரிலுஞ் சிறந்த தெய்வம் இல்லை. அவர் வழிநின்று தமது கற்பொழுக்கத்தைக் காத்தலே அம் மகளிர்க்குச் சிறந்த கடமை. தெய்வத்தின் திருவடியைப் பிடித்தோர் மற்ற உலகத்துப் பற்றுகளை யெல்லாம் முற்றத் துறத்தல்போலத்,, தம் காதலர் அன்பிற் பிணிப்புண்ட மகளிருந் தம் பெற்றார் உற்றார் எல்லாரையும் முற்றத் துறத்தலே செய்யுங் கடமை யுடையர்'. என்று எண்ணிப்பார்த்து மிகுந்த வருத்தத்தோடும் உன்னை விட்டகன்று என்காதலருடன் பம்பாய்க்குப்போய், அங்கே அவர் பெற்றார் உற்றார் உறவினரெல்லாராலும் அவர்க்கேமணஞ் செய்விக்கப் பெற்றேன். மணஞ் செய்துகொண்ட பிறகாவது நீ மனம் இசைவாய் என்று நினைத்து உன்னைவந்து வணங்கி உன்னையும், என் தந்தையுந் தமையனுந் திரும்பி வீடுவந்து சேர்ந்திருந்தால் அவர்களையும் எங்களோடு அழைத்துப்போகலாமென்று விரும்பி என் கணவரும் நானும் பின்பு சில மாதங்களில் திரும்பிச் சென்னைக்கு வந்தோம். என்கணவனார் நாமிருந்த வீட்டிற்குப்போய்ப் பார்க்க நீயும் அங்கில்லாமல் எங்கோ போய்விட்டது தெரிந்து, அண்டை அயலாரை எவ்வளவோ கேட்டுப்பார்த்தும் நீயும் அப்பாவும் அண்ணாவும் போனஇடஞ் சிறிதுந் தெரியவில்லை யென்று வந்து சொன்னார். அச்செய்தியைக்கேட்டு என்உள்ளம் பட்டபாடு இறைவனே அறிவான். பின்னரும் ஆறுமாதம் வரையிற் சென்னையிலேயே தங்கியிருந்து உங்களைப்பற்றி நாடோறும் பலரைக் கேட்டுப்பார்த்தோம், பல இடங்களில் தேடியும் பார்த்தோம். நீங்கள் போனவகை ஒன்றுமே தெரியவில்லை. என் தமக்கையிடம் வளரும் எங்கள் பிள்ளை களைப் பார்த்து, அவைகள் நாங்கள் பெற்றுக்கொண்டு போகவழி யுண்டாவென்று பலகாலும் ஆராய்ந்துபார்த்தோம். என் தமக்கை கணவரிடத்தும் அவர் தம் குடும்பத்தாரிடத்துஞ் சென்று எங்களை இன்னார் என்று தெரிவித்துக் கொள்வது தக்கதாய்த் தோன்றவில்லை. மேலும், என் தமக்கை கணவரை நான்பார்த்ததேயில்லை. அல்லாமலும், அவர்களெல்லாருஞ் சாதிப்பற்று நிரம்பஉடையவர்களாதலால், அவர்கள் என் கணவரை இழிவாக நடத்துவர் என்னும் அச்சமும், யான் அயற் சாதியில் ஒருவரை மணந்துகொண்டதனைக் குறித்து அவர்களெல்லாரும் என்னைப் பார்ப்பதற்கும் மனம் இசையார் என்னும் நம்பிக்கையும் யாங்கள் அவர்களிடஞ் செல்லாதபடி

எங்களைத் தடைசெய்தன. அதுவல்லாமலும், என் தமக்கையிடம் வளருங் குழந்தைகள் இரண்டும் அவள்பெற்ற பிள்ளைகள் அல்ல; யான்பெற்றவைகளே என்று மெய்ப்படுத்திக் காட்டவும் ஏதொருசாட்சியும் இல்லை; அவைகளைத் தாம்பெற்ற பிள்ளைகளென்றே என் தமக்கையும் அவள் கணவனும் உறுதியாய் நம்பியிருக்கிறார்கள். ஆதலால், நாங்கள் வாய்பேசாமல் திரும்பிச் செல்வதே நலம் என்று போனோம். அங்கேபோய்ப் பதினைந்து வருஷங்கள் இருந்தோம். இப்பதினைந்து வருஷங்களுக்கு இடையில் யான் குழந்தைகள் பல பெற்றமையாலும், சென்னைக்கு நெடுந்தூரத்தேயுள்ள பம்பாயில் இருந்தமையாலும், நம் குடும்பத்தாரைப்பற்றித் தெரிந்துகொள் வதற்கு ஏதொரு வழியும் பிறவாமையாலும், என்னுடைய நடையுடை பாவனைகளெல்லாம் பாரசிகக் குலத்திற்சேர்ந்து முற்றும் மாறிவிட்டமையாலும் யான் நம்மவர்களை யெல்லாம் இடைக்கிடையே சில நேரங்களில் தவிர மற்றக்காலங்களி லெல்லாம் பெரும்பாலும் மறந்தேபோனேன். மறுபடியும் வியாபாரத்தின் பொருட்டுச், சென்ற மூன்று ஆண்டுகளுக்கு முன் சென்னைக்குவந்து திருவல்லிக்கேணியில் அம்மூன்று ஆண்டுகளுந் தங்கியிருந்தோமாயினும், நம்மைச்சேர்ந்தவர் களைப் பார்க்கவாவது அவர்களுடன் கலந்து பழகவாவது என்மனந் துணியவில்லை. யான் முதலிற்பெற்ற இருபிள்ளைகளும் பெரிவர்களாகிப் பார்ப்பனக் குடும்பத்தோடு குடும்பமாய்க் கலந்துபோயிருப்பார்களென்று நினைத்தும், அவர்களைப் பார்ப்பதனால் யாங்கள் ஆறாத்துயரங்கொள்ளவும் அதனாற் பலஇடைஞ்சல்கள் வரவும் இடம் உண்டாகும் என்பதனை எண்ணிப்பார்த்தும் அதற்குந் துணிந்திலோம். என்றாலும், எங்கள் முதற்பிள்ளைகள் இரண்டையும், எங்கட்குக் கல்யாணம் ஆனவுடன் பிறந்து ஓர் ஆண்டிற்குமுன் இறந்துபோன எங்களின் மற்றொரு மகளையும் நினைந்து யாங்கள் இடைக் கிடையே பெருந்துயரம் உற்று வந்தோம். எங்கள் பெருந்துயரத்திற்கு இரங்கியே எல்லாம் வல்ல எம்பெருமான் எங்கள் மக்களாகிய சுப்பிரமணியத்தையுங் கோகிலத்தையுந் தற்செயலாய் எங்களுடன் சேர்த்து நம்மெல்லாரையும் இப்போது இங்கே ஒன்றுகட்டி வைத்தார்! என்று என் அன்னையார் சொல்லிமுடித்தார்.

அவர்கள் பேசி முடியும்மட்டும் இவைகளை யெல்லாம் வியப்புடன் கேட்டுக்கொண்டிருந்த என் உண்மைத் தந்தையா ராகிய அப் பாரசிகப் பெருமான் என்னையும் என் தமையனையும் பிடித்துக் கட்டிக்கொண்டு "என் கண்மணிகளா" என்று தம்மை யறியாமல் தேம்பினார்; என் உண்மைத் தாயாராகிய அந்தப் பாரசிகப்பெருமாட்டியும், அவர் தம் பெற்றோராகிய அந்தப் பாட்டன் பாட்டிகளும் எங்களிருவரையும் வந்து கட்டிக்கொண்டு அங்ஙனமே அழுதார்கள். எனக்கும் என் தமையனுக்கும் அங்ஙனமே பொறுத்தற்கரிய ஆற்றாமை உண்டாயிற்று. எங்களுடன் நிற்குஞ் சேவகர்களும் ஆட்களும் எங்கள் உறவின் நெருக்கத்தைக் குறிப்பினாலுணர்ந்து வியப்புற்றவர்களாய் ஒன்றுஞ் சொல்லாமலிருந்தார்கள். எங்கள் எல்லார்க்கும் ஆற்றாமை ஒருவாறு தணிந்தது. இன்னும் என்னால் ஒன்றும் பேசக்கூடவில்லை. என் தமையன் ஒருவாறு மனந்தேறி "அப்பா, அம்மா, எல்லா இரக்கமும் அருளும் உடைய சிவம் உங்கள் ஏழைப் பிள்ளைகளாகிய எங்களை உங்களுடன் கொண்டு வந்து சேர்த்த அருட்செயலை எண்ணிப் பார்க்கப்பார்க்க, அதற்கு நாம் எங்ஙனங் கைம்மாறு செலுத்தவல்லோம்! என்று என்நெஞ்சம் கரைகின்றது. உலகம் எல்லாம் வருந்தாது ஈன்ற அன்னையாகிய இதோ இங்குநிற்கும் நம் அன்னையின் திருமுன்பில் நம் எல்லாரையும் ஒருங்கு சேர்த்தமையால் இவளை நாம் இப்போது வணங்கி எழுந்து, மாமா அபாயமான நிலைமையில் இருப்பதால் அவரை முதலிற் பம்பாய் வைத்தியசாலைக்கு அனுப்புவோமாக!" என்று கூறினான். உடனே நாங்கள் எல்லாரும் எழுந்து சென்று அம்மை திருவுருவத்தின் முன்பு விழுந்து வணங்கினோம்.

அதன்பின், எங்களுடன்வந்த அதிகாரியை என் தந்தையார் அருகழைத்து என் மாமனை இரட்டுத் துணித்தொட்டிலில் வைத்துப், பிடிபட்ட கள்வன் ஒருவன் ஒருவழிகாட்டியாக வர எங்கள் ஆட்களில் ஒருவரும் சேவகரில் இருவருமாய் அவரை முதலிற் பம்பாய் வைத்தியசாலையிற் கொண்டுபோய்ச் சேர்ப்பித்து, வேண்டும் வசதிகளுக் கெல்லாம் பம்பாயில் உள்ள தம் கணக்குப் பிள்ளையிடம் பணம் பெற்றுக்கொள்ளும்படி ஒரு சீட்டும் எழுதிக் கொடுத்தார். அது முடிந்ததுங், குகைக்கு வெளியே சென்ற சேவகர் நால்வருங் கள்வன் ஒருவனும்

அவரவர்க்குரிய மனைவி மக்களை யெல்லாம் உள்ளழைத்து வந்தார்கள். அவர்களில் இறந்துபட்ட கள்வரின் மனைவிமார் தம் கணவர் மாண்டு கிடப்பதைக்கண்டு வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு அழுதார்கள்; மற்றையோரின் மனைவிமார் தம் கணவரை விடுதலைசெய்யும்படி எங்கள் எல்லார்முன்னும் விழுந்தழுது வேண்டினார்கள். அப்பெண்பாலாருற்ற துயரத்தால் அவர்களிற்சிலருக்குள்ள சிறுபிள்ளைகளின் துயரத்தையும் கண்டு எங்கள் எல்லோருக்கும் மிகுந்த இரக்கம் உண்டாயிற்று. எங்கள் அருமைத் தாய் தந்தையரையும் பாட்டன் பாட்டி மாமன் முதலியோரையும் எல்லாங் கூடப்பெற்ற இந்த மகிழ்ச்சியான நேரத்தில், இவர்களைத் துயரப்படவிடுவது கூடா தென்பது எங்கள் எல்லார் மனங்களிலும்பட்டது. ஆகவே, தந்தையார் அப்பெண்பாலார் எல்லாரையும் அழுகையமர்த்தி, அவர்கள் எல்லார்க்கும் நன்மை செய்யத் தாம் எண்ணி யிருப்பதைக் கூறினார். அச்சொற்கேட்டு அவர்கள் எல்லாரும் அமைதியுற்றனர்.

பிறகு என்னருமைத்தந்தையார் அவ்வதிகாரியை அழைத்துக் கொண்டு ஓர் ஒதுக்குப்புறமாய்ப்போய் இது வரையில் நடந்த எங்கள் வரலாறுகளை யெல்லாங் கூடிய வரையிற் சுருக்கமாகவுந் தெளிவாகவும் எடுத்து உரைத்தார். அவைகளைக் கேட்டு அவர் அடைந்த வியப்புக்கு ஓர் அளவில்லை. அவைகளெல்லாங்கூறி முடிந்தபின் அவ்விருவருங் கலந்துபேசி எங்களுக்குத் தெரிவித்து முடிவுகட்டியது இது: இறந்தவர்போகப் பிடிபட்ட கள்வர் நால்வரையுஞ் சிறையிடும் பொருட்டு அறமன்றத்திற் கொண்டு போய் நிறுத்தினால், அவர்கள் வாய் மொழியிலிருந்தே அவர்கட்குத் தலைவராயிருந்த என்மாமனுங் குற்றவாளியாகக் கொள்ளப்படுவார். ஆதலால், என்மாமனைக் காக்கும்பொருட்டும், அவரவர் மனைவிமார் துயரத்தை நீக்கும் பொருட்டும் பிடிபட்ட கள்வர் நால்வரையும் விடுதலைசெய்து அவர்களை நல்வழியிற் காலங் கழிக்குபடி செய்யவேண்டுவது இன்றியமையாத தாயிற்று. ஆனாலும், அவ்வதிகாரியுஞ் சேவகர்களும் எங்களுக்கு உதவியாகவந்து இம்மலைநாட்டி லுள்ள கள்வர்களைக்கொன்று எம்மவர்களை மீட்பிக்கும் பொருட்டு, இறந்துபட்ட அவர்கள் நால்வரையும் பம்பாயில் உள்ள நகர்காவற் சாவடிக்குக் கொண்டுபோக

வேண்டுவது கட்டாயமாகக்காணப்பட்டது. அதன்மேல் என் தந்தையார், அக்கள்வர் நால்வரும் உண்மைதவறாமல் நல்லொழுக்கமுடைய வராய் நடப்பதாக உறுதிமொழி சொன்னால், அவர்களைச் சிறைச் சாலைக்கு அனுப்பாமல் தம்கீழ் அலுவல் பார்க்க வைத்துக் கொண்டு தக்க சம்பளந் தருவதாகவிளம்பினார். அதற்கு அவர்களும் அவர்களின் மனைவிமாரும் மகிழ்வுடன் இசைந்து அம்மை திருவுருவத்தின் முன் ஆணையிட்டுக் கொடுத்தார்கள். அதன் மேல் அவர்கட்குப் பூட்டியிருந்த விலங்குகள் விடுவிக்கப்பட்டன. இறந்துபோன கள்வரின் மனைவிமார்க்குந் தக்கபொருளுதவி செய்து, அவர்களையும் அவர்களின் மக்களையுந் தமது பாதுகாப்பிலேயே தம்மிடம் உள்ள பலவேலைகளில் வைத்துக் கொள்வதாக என் மேன்மையுள்ள தந்தையார் கூறினார். இக்குகையின் கண் உள்ள உலகன்னையின் திருவருளால் யாங்கள் எல்லோரும் ஒருங்குகூடுதற்கு இவ்விடங் காரணமாய் இருந்தமையால், இக் கோயிலையும் இதன்கண் உள்ள அம்மையையுந் தலைமுறை தலை முறையாய் நங் குலதெய்வமாக வழிபடல் வேண்டுமென்றும், ஒருதிங்களுக்கு இரண்டுமுறை நாங்கள் எல்லாரும் இங்குவந்து வழிபாடாற்றிச் செல்லல்வேண்டு மென்றும், இதற்கு அருகாமையில் யாங்கள் தங்கிச்செல்லும் பொருட்டு ஒருமாளிகை கட்டல் வேண்டு மென்றும் என் தந்தையார் தீர்மானித்தார்.

இறந்துபோன கள்வர்களின் உடம்புகளைத் தூக்கிக் கொண்டு விடுதலை பெற்ற கள்வரில் இருவரும் சேவகரில் ஐவரும் எங்கள் ஆட்களில் ஒருவரும் உடனே சென்று பம்பா யிலுள்ள நகர்காவற் றலைவரிடம் அவைகளைச் சேர்ப்பிக்கும்படி கற்பிக்கப்பட்டார்கள். என் மாமனைத் தூக்கிக்கொண்ட நால்வரும், மற்றவர்களும் உடனே குகை வாயிலை விட்டுப் புறப் பட்டுப்போனார்கள். என் வளர்ப்புத்தந்தையையும் அவர் மகன் சேது ராமனையும் நாங்கள் எல்லாருமாய்ச் சேர்ந்து குகைக்கு வெளியே மலையடிவாரத்திற் கொண்டுபோய் அடக்கஞ்செய் வித்தோம். எஞ்சிய சேவகர்களும் ஆட்களுங் குளித்து முழுகிக் கோயிலையுங் குகையையுந் துப்பரவு செய்ய, யாங்கள் எல்லாம் என் பாட்டன் பாட்டியிருந்த இருக்கைக்குப் போய்க் குளித்துப் பூசைக்குவேண்டும் பொருள்களோடு காளிகோட்டத்திற்குத் திரும்பிவந்தோம். என் பாட்டனார் வழக்கம் போல் அம்மைக்குப் பூசைபுரிந்தார். எல்லோரும் அம்மையைத் தொழுது விடை

பெற்றுப், பாட்டனார் குடிலில் உணவுகொண்டு பம்பாய்க்குப் புறப் பட்டோம். என்பாட்டன் பாட்டிகளையும் என் அன்னையையும் என்னையுந் தொட்டிலில் ஏற்றிக் கொண்டார்கள். குகையின் புறத்தேயுள்ள வழியேவந்து, அவ்வழியிற் பிரியும் ஒரு கிளைவழியாய் அம் மலையினுள் ளிடத்தை விட்டு வெளி வந்தோம். இப்போது எங்கட்கு வழிகாட்டியாய்வரும் விடுதலைபெற்ற கள்வன் ஒரு குறுக்குவழியாய் மூன்றுமணி நேரத்தில் எங்களைப் பம்பாய்க்குச்செல்லுஞ் சாலையிற் கொண்டுவந்து, அங்குள்ள ஒரு வண்டிச்சாலையிற் சேர்ப்பித்தான். அவ்வண்டிச்சாலையில் உள்ள வண்டிக்காரர் அத்தனை பெயரும் அக்கள்வர்க்கு உடந்தையா யிருந்தவர்களாதலால் எங்களைக் கண்டு பெரிதும் வெருண்டார்கள். ஆனால், என் தந்தையாரும் அவ்வதிகாரியும் இனி அவர்கள் நல்வழியில் நடந்தால் அவர்களை ஒறுப்பதில்லை யென்று கூற, அவர்கள் உறுதிமொழிகூறி எங்களைப் பம்பாயிலுள்ள எங்கள் மாளிகையில் நேற்றுப்பிற்பகல் மூன்று மணிக்குக் கொண்டு வந்து விட்டார்கள். அவ்வதிகாரிக்குஞ் சேவகர்கட்கும் என் தந்தையார் ஏராளமாகப் பொருளுதவி செய்தார். நகர்காவற் சாவடியிற் சேர்ப்பிக்கப்பட்ட வெட்டுண்ட கள்வர் நால்வரையுங் காட்டிச், சிறையிலகப்பட்ட என் தந்தையாரையுந் தமையனையும் மீட்ட வரலாறுகளெல்லாந் தெரிவித்து, இறந்த அக்கள்வர் நால்வரோடு பம்பாயை அடுத்த அம் மலைநாட்டில் நெடுங்காலம் நடந்து வந்த கொள்ளையுங் கொலையும் அடியோடு தொலைந்தனவெனவும் வற்புறுத்தி அவ்வதிகாரியுஞ் சேவகர்களுந் தமக்கு மேற்பட்ட ஊர்காவற்றலைவருடைய நல்லெண்ணத்தையும் பாராட்டுரை களையும் பெற்றார்கள். இங்ஙனம் இவர்கள் மெய்ப்பித்துரைத்த வற்றில் என்மாமனையும் விடுதலைபெற்ற ஏனைக் கள்வர் நால்வரையும் பற்றி ஏதும் உரையாமற் கருத்தாய் விட்டனர்.

பம்பாய் வைத்தியசாலையிற் சேர்ப்பிக்கப்பட்ட என் மாமனார் இன்னும் நாலைந்துநாளில் முழுதும் நலம்எய்தி வீட்டுக்கு வருவார் அவரைப் பார்க்கும் மறுத்துவர் சொல்கிறார் அச்சொற் கேட்டு எண் பாட்டான் பாட்டிமார் முதல் யாங்கள் எல்லாரும் பெரியதோர் ஆறுதலும் மகிழ்ச்சியும் உற்றோம். என் தந்தையார். அவர்க்குப் பரிகாரஞ் செய்யும் மருத்துவர்க்குத் தக்கபடி பொருளுதவி புரிந்திருக்கிறார்.

என் வளர்ப்புத்தந்தை கள்வர் கூட்டத்திற் சேர்ந்து வெட்டுண்டு இறந்ததைப்பற்றி மட்டும் என் வளர்ப்புத் தாய்க்குத் தெரிவித்து, அவர்களின் பிழைப்புக்கும் என் அருமைத் தங்கையின் மணத்திற்குமாகப் பதினாயிர ரூபா கொடுத்துவிட வேண்டுமேயன்றி இனிச் சென்னைக்குச் செல்லவாவது அறக்கொடியரான எங்கள் பார்ப்பனச் சாதியாரோடு கலக்கவாவது நாம் எட்டுணையும் விரும்பலாகாதென்றும், நாம் அவர்களினின்றும் விலகியவாறே ஒதுங்கிக், கள்ளங்கவடறியா மேன்மக்களான பாரசிக இனத்தாரோடு கலந்தவாறே எல்லாவகையிலுங் கலந்து போக வேண்டுமென்றும் என் பாட்டன் பாட்டியார் வற்புறுத்திச்சொல்ல, நாங்கள் எல்லாரும் அதற்கு மகிழ்வுடன் இணங்கினோம். ஆனால், என்தமையன் மட்டுஞ் சென்னைக்குப் போய்த்தன் மனைவி மங்கைப்பருவம் அடையும் மட்டும் அங்கேயேயிருந்து, பிறகு அவளையும் அழைத்துக் கொண்டு பம்பாயில் எங்களுடன் வந்து சேர்ந்து கொள்ளல் வேண்டுமென்பது தீர்மானிக்கப்பட்டது. உடனே என்னருமைத் தந்தையார் தம் முதன்மகனும் என் தமையனுமான சுப்பிரமணியனைக் கொண்டு, என் வளர்ப்புத் தந்தை இறந்த வகையையும், அவர்க்குச் செய்யவேண்டுங் கருமங்களை யெல்லாஞ் செய்துவிட்டு என் தமையன் இன்னும் பத்துநாளிற் சென்னைக்கு வந்து அவர்கட்கு வேண்டும் எல்லா ஏற்பாடுகளுஞ் செய்வான் என்பதையுந் தந்தி வழியாக என் வளர்ப்புத்தாய்க்குத் தெரிவித்தார். என் தமையன் தமது திருமணம் வரையில் இங்கே தங்க வேண்டியிருப்பதாலுஞ், சென்னையில் தான் பெற்றுவந்த விடுமுறைநாட்கள் கழிவதற்கு இன்னும் மூன்று நான்கு நாட்களே யிருப்பதாலும் மறுபடியும் இரண்டு வார விடுமுறைக்குக் கடிதம் எழுதியிருக்கின்றான்.

சேதுராமன் தாம் பெற்றமகனே என்பதுஎன் வளர்ப்புத் தாய்தந்தையர்க்கும் அவர் இனத்தார்க்குஞ் சிறிதுந் தெரியாதாகை யால் அவன் இறந்ததைப்பற்றி எவர்க்குந் தெரிவியாமல் விட்டுவிடுதலே நலமென்று என் பாட்டன் பாட்டிமார் கூறியது எங்கள் எல்லார்க்கும் ஒப்பாகவேயிருந்தது. சேதுராமன் தன் தாய்தந்தையார் இன்னாரொன்று தெரியாமலே இறந்தா னெனவும், அவனைப் போலவே அவன் றந்தையும் அவனைத் தன் மகனென்று அறியாமலே இறந்தாரெனவும் என் பட்டன். பாட்டி கூறினர். அவர்களுடன் சேர்ந்து அம் மலைநாட்டிற் போயிருந்த என் பாட்டனும், மாமனும், என் அன்னை தன் கணவரோடு கூடிப்

பம்பாய்க்கு வந்துவிட்ட பிறகு, என் பாட்டியையுந் தாமிருக்கும் இடத்திற்குக் கொண்டு போன போது,அப் பாட்டி சிறுபிள்ளையாயிருந்த சேதுராமனையுந் தன்னோடு உடன் கொண்டு சென்றனர். அவனை ஓர் அகதிப் பிள்ளை யென்று சொன்னதன்றி, அவனைப் பற்றிய வரலாறுகளை என் பாட்டன் மாமனுக்குங் கூட என்பாட்டி சொல்லவில்லை. அவன் வளர்ந்து திருடர்களுக்கு உளவாய்ப் பலநாடு நகரங்களிற் போய்வருமாறு பழக்கப்படுத்தப்பட்ட பின் அவன் சென்னைக்குப் போம்படி நேரும் போதெல்லாம், தன் மூத்தமகள் அவள் கணவன் அவர்பிள்ளைகளைப் போய்ப்பார்த்து வரும் வண்ணம் என் பாட்டி ஏவுவராம். ஆனால் சேதுராமனுக்கும் அவர்கட்குந் தமக்கும் உள்ள நெருங்கிய உறவைக்குறித்து அவனுக்கு என் பாட்டி ஏதுமே தெரிவித்ததில்லை. ஏனென்றால், தன் இளையமகள் மறைவிற் பெற்ற பிள்ளைகளை மாற்றி, மூத்தமகள் பிள்ளைகளை வேறோரிடத்திற் சேர்ப்பித்த வகைகளெல்லாந் தெரிந்தால் எல்லாருந் தன்னை அருவருக்கும்படி நேருமென்று நினைத்தே என் பாட்டி அவைகளை முற்றும் மறைவாய் வைத்தனர். சேதுராமன் சென்னைக்கு வந்த காலங்களி லெல்லாம் என் வளர்ப்புத்தந்தையைப் பார்த்தானேனுந் தன்னை ஓர் அகதிப் பிள்ளையாகவே அவருக்குச் சொன்னானென்றும், அதன்பின் அவரால் ஏவப்பட்டுத் தங்களுடன் சிலகாலமும் பம்பாயில் என் தந்தையாருடன் சிலகாலமும் இருந்து உளவுகள் சொல்லி, அதன் பின் அவருடன் சேர்ந்து கள்வர்களைத் தூண்டி எங்களை யெல்லாம் மலைக்குகைக்குச் சிறையாய்ப் பிடிப்பித்துச் சென்றானென்றும் உய்த்துணர்ந்தோம். என் மாமனும் என் வளர்ப்புத்தந்தையும் மலைநாட்டிற் சந்திப்பதற்குமுன் ஒருவரை யொருவர் பார்த்ததுமில்லை, தமக்குள் உள்ள உறவைப்பற்றி முன்பின் தெரிந்ததுமில்லை. ஆகவே, சேதுராமனும் என் வளர்ப்புத்தந்தையும் அடைந்தமுடிவு எங்கட்குப் பெரிதும் இரக்கத்தை உண்டாக்கியது!

என் ஆருயிர்ப்பெருமானே, என்னைவருந்திப்பெற்ற என் உண்மைப் பெற்றோர்களுடன் யான் இப்போது வந்து சேர்ந்திருக்கும்படி, பலபெருந் துன்பநிகழ்ச்சிகளை விளைவித்து அவற்றினூடு என்னைச் செலுத்திய இறைவன் திருவடிகளுக்கு ஏழையேன் எங்ஙனங் கைம்மாறு செலுத்தவல்லேன்! என் தாய் தந்தையரை வானுலகத் தெய்வங்களாகவே வணங்கி வருகின்றேன். என் தமையனும் யானுந் தமக்கு உண்மையான தமையனுந்

தமக்கையுமாதலைத் தெரிந்தவுடனே உண்மையான என் ஒரே அருமைத் தங்கைக்கு உண்டான அளவிலா மகிழ்ச்சியை என் என்பேன்! என் அருமைத் தம்பிமார் நால்வரிற் சிறிது அறிவு கூடப்பெற்ற பிள்ளைகள் மூவரும் என்னையுந் தமையனையுங் கட்டிக் கட்டி முத்தமிடுகின்றனர்; கைக் குழந்தையுங் கூட எமது உறவின் நெருக்கத்தை உணர்ந்தாற்போற் பெரும்பாலும் எங்களிடத்திலேயே மகிழ்வுடன் இருக்கின்றது. குளிருந் தெளி நீருடைய ஓர் அழகிய குளத்தின்கண் அலர்ந்த செந்தாமரை வெண்டாமரை மலர்களினிடையிடையே வெள்ளல்லி செவ்வல்லி களாகிய சிறுசிறுமலர்களும் ஒருங்குகூடித்தோன்றி விளங்கினாற் போல, எமது இனிய மாளிகையில் என் பெற்றோர் பாட்டன் பாட்டிமார்களினிடையே ஒருதாய் மக்களாகிய நாங்கள் கூடிக் களிக்கின்றோம். சென்னையில் என் பெரிய அன்னை யிடமிருக்கும் என் அருமைத் தங்கை தனலட்சுமி என் கூடப் பிறந்தவள் அல்லளென்று உணர்ந்தே னாயினும், அவளுடைய அறிவும் நல்லியற்கையும் என்நெஞ்சிற் பதிந்திருத்தலால் அவளையும் எங்களுடன் சேர்த்துக் கொள்ள விழைந்தேன்; ஆனாலுந், தன் கணவனை யிழந்த என் பெரிய அன்னைக்கு அவள் தன் கணவனை எம்வழிக்கு இழுப்பது அவர்கட்கு வருத்தமாயிருக்குமென் றெண்ணினேன்.

இனி, இவ்வளவு மகிழ்ச்சிகட்கு இடையிலும் என் காதல் வலிமையுடன் தோன்றி என் நெஞ்சை ஊடே ஊடே வாட்டுகின்றது. பசி நீக்குதற்கு உரிய எல்லா இனிய உணவுப் பண்டங்களுந் தன்னைச் சூழ இருப்பினும் நீர் வேட்கையால் நா வறண்டவனுக்கு முதலிற் குடிநீரே இன்றியமையாது வேண்டி யிருத்தல்போல, ஏழையேனும் என் காதற்பெருமானாகிய தங்களைப் பெறுதற்கே ஏக்க முற்றிருக்கின்றேன். வேனிற்காலத்து வெயிலால்வறளுஞ் செங்கழுநீர் மலரின் இதழ்கள் பனிக் காலத்துப் பனித்துளிகளால் நனைந்து எவ்வளவு செழுமை யாயிருக்கின்றன! அதுபோல் என்னை யொத்த மங்கையருந் தங்காதலர் அன்பினால் நனைந்தன்றோ உள்ளங் கிளர்ந்து விளங்குவர்! எனது இந்நிலைமையினை யுணர்ந்து என் பெற்றோர்கள். நமது திருமணத்திற்கு வேண்டும் ஏற்பாடுகளை விரைந்து செய்கின்றனர். திருவருள் விரைவில் நம்மை ஒருங்குகூட்டும்! நலம்!

# பின்னுரை

கோகிலம்பாளின் காதற்கணவன் தெய்வநாயகத்தால் இது மறைமலை அடிகட்கு எழுதப்பட்டது.

அன்பும் அருளும் ஒருங்கு குடிகொண்ட அடிகளின் திருவடித் தாமரைகளைத்தொழுது அடியேன் தெய்வநாயகம் பணிவுடன் வரைவன....

அடியேங்கள் உய்ய எழுந்தருளிய ஐயனே, என் மனைவி கோகிலாம்பாளும் யானும் அவடன் பெற்றோர்களால் ஓர் ஆண்டிற்கு முன் பம்பாய் நகரத்தில் மனம்உவந்து மணஞ் செய்விக்கப்பட்டு, அருமை பெருமையிற் சிறந்த அவடன் குடும்பத்தாரோடு சேர்ந்தே இனிது வாழ்ந்து வருகின்றோம். என்மனைவியின் வேண்டுகோளுக்கு இணங்கியுந், தென்னாட்டின்கண் உள்ள நம் தமிழ்மக்களுக்கு உயர்ந்த நல்லெண்ணங்கள் வளரவேண்டுமென விரும்பியும் அவள் எனக்கெழுதிய கடிதங்களைத் தங்கட்கு அனுப்பியிருக்கின்றேன். யான் என்சிற்றறிவுக்கு எட்டியமட்டிற் சில திருத்தங்களை அவற்றின்கட் செய்திருக்கின்றேன். பேரறிவுநிரம்பிய அடிகள், அவற்றைத் திரும்பவும் பிழைபார்த்துத்திருத்தி அச்சிட்டுப் புத்தகமாக வெளிப்படுத்தும்படிவேண்டுகின்றோம். அடிகட்கு இவ்வளவு வருத்தந்தரும் எளியேங்கள் பிழையினைப் பொறுத்தருளல் வேண்டும்.

கோகிலாம்பாளின் தமையன் மனைவி ஆறு திங்களுக்கு முன் தான் மங்கைப்பருவம் அடைந்தனள். அவன் அவளை அழைத்துக் கொண்டு சென்ற திங்கள் தான் பம்பாய்க்குவந்து எங்களுடன் கலந்துகொண்டான்.

நல்லோரை, அழிக்க முயல்வோர் தெய்வத்தால் அழிக்கப் படுவரென்பதற்கு மற்றும் ஒன்று கண்டோம். எனக்கு மணம் நடந்தவுடனே கோகிலாம்பாள் மீண்டுவந்த மலைக்குகைக்

காளி கோட்டத்திற்கு அம்மையை வழிபடச் சென்றோம். வழிபட்ட பின், அதனைச் சார்ந்துள்ள குகைகளையெல்லாம் போய்ப்பார்த்தோம். அவற்றுள் ஒன்றிற் சென்றுபார்க்க எங்களுக்குண்டான வியப்பையும் இரக்கத்தையும் என்என்பேன்! மிக நல்லவரும் அறிவிற் சிறந்த முதியருமான கோகிலத்தின் மாமனாரும் அவர் தம்பெண்மகவும் இறப்பதற்குக்காரண மாயிருந்த அவரின் இரண்டாம் மனைவி அங்கே இறந்து கிடந்தாள்! அவள் என்மனைவியின் வளர்ப்புத் தந்தையுடன் தீதுசெய்யவந்து, பிறகு யாருமற்ற அகதியா யிறந்தாளென அறிந்தோம்.

பெருமானே, யான் தங்கள் நூல்களைக்கற்றும் விரிவுரைகளைக் கேட்டும் அறியப்பெறாத அரும்பொருள்களை யெல்லாம் அறிந்தேன்; என் மனைவி தங்கள் நூல்களைக் கற்று நல்லறிவு நிரம்பினாள். யாங்கள் தங்களாற் பெற்ற பெறற்கரிய பேற்றை எழுமையும் மறவேம். சிவம் இயற்கையாக விளங்கும் இடம் அனற்பிழம்பே எனத் தாங்கள் விளங்கிய உண்மையை இந்தப் பாரசிகசமயத்திற்கண்டு அதனை நேரேவணங்கி வாழ்கின்றோம்.

**கோகிலாம்பாள் கடிதம்**

- முற்றும் -

பொருள்வழிப் பிரிக்கப்பட்ட **புதினம்** தலைப்பின்கீழ் உள்ள "கோகிலாம்பாள் கடிதங்களுடன்" (மறைமலையம்-14) "மறை மலையடிகளார் கடிதங்கள்" எனும் தலைப்பும் சேர்க்கப்பட்டுள்ளது.

# மறைமலையடிகளார் கடிதங்கள்

1967இல் பாரி நிலையம் வெளியிட்ட மூன்றாம் பதிப்பினை
மூலமாகக் கொண்டு இந்நூல் பதிப்பிக்கப்படுகின்றது.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | மறைமலையடிகளார் கடிதங்கள் | 293 |
| 1. | என்னுடைய நூல்கள் | 294 |
| 2. | நற்சான்றிதழ் | 295 |
| 3. | சொற்பொழிவு | 296 |
| 4. | அன்பு | 297 |
| 5. | கடிதம் | 298 |
| 6. | நன்றி | 299 |
| 7. | தமிழ்த்தொண்டு | 300 |
| 8. | எனது வணக்கம் | 300 |
| 9. | திருமண வாழ்த்து | 301 |
| 10. | இல்லறம் நல்லறம் | 301 |
| 11. | உலக வாழ்வு | 302 |
| 12. | ஆறுதல் மொழிகள் | 302 |
| 13. | ஆறுதல் | 303 |
| 14. | இனிது வாழ்வீர்களா | 303 |
| 15. | தமிழ்த்தொண்டு - சிவத்தொண்டு | 304 |
| 16. | பெண்மக்கள் | 305 |
| 17. | கண்ணோய் | 307 |
| 18. | நூல்கள் | 308 |

| | | |
|---|---|---|
| 19. | முந்நூறு ரூபாய் | 309 |
| 20. | பொங்கல் வாழ்த்து | 309 |
| 21. | தமிழ்த்தொண்டு | 310 |
| 22. | யோக நித்திரை | 310 |
| 23. | பிறப்பு | 312 |
| 24. | பூவும் - மணமும் போல் | 313 |
| 25. | உண்மை அன்பு | 314 |
| 26. | திருவாசக விரிவுரை | 314 |
| 27. | வெளிப்பாளையம் விழா | 315 |
| 28. | நீலா | 316 |
| 29. | நன்கொடை | 317 |
| 30. | Friendship | 319 |
| 31. | Holy Prophet Mohamad | 319 |
| 32. | Mother Tamil | 320 |
| 33. | Appreciation of a Scholar | 320 |
| | Maraimalai adigal's Diary A selected few Jottings from the Diary of Maraimalai Adigal. | 321 |

# மறைமலையடிகளார் கடிதங்கள்

**என் கடிதங்கள்**

*அட்டையில் எழுதுவதாயிருந்தால் மட்டும் ஆங்கிலத்தில் எழுதுவேன். உறைக்குள் எழுதுங்கடிதமாய் இருந்தால் பிறர் பாரார் - ஆதலின் தமிழில் எழுதுவேன். யான் தமிழில் எழுதும் ஒவ்வொரு சொல்லையும் சொற்றொடரையும் நீங்கள் செவ்வையாக உன்னித்து வந்தால் தமிழிற் பிழையின்றிப் பேசவும் எழுதவும் ஆற்றல் பெறுவீர்கள்.*

**- மறைமலையடிகள்**

1957

## 1 - என்னுடைய நூல்கள்

19-7-43

*அன்புமிக்க ஐயா,*

*16 ஆம் நாள் சென்னைத் திருவல்லிக்கேணி கிரீன் அண்டு கம்பெனித் தலைவரும், நம் அன்பருமான, திரு. கனகராயர்க்கு நீங்கள் எழுதிய அன்புள்ள கடிதம், அவர் என்னிடம் சேர்ப்பிக்கக் கண்டு மகிழ்ந்தேன். தாங்கள் விரும்பியபடியே கனகராயர் புகைவண்டி வாயிலாக நூல்களை அனுப்பி, அதன் பற்றுச் சீட்டை வி.பி.பி. தபால்வழி அனுப்புவர். எல்லார்க்கும் கொடுக்கிற கழிவுப்படியே தங்களுக்கும் பன்னிரண்டரை விழுக்காடு கழிவு கொடுக்கப்பட்டிருக்கிறது. அன்பு கூர்ந்து பெற்றுக் கொள்ளல் வேண்டும். நூல்களை வாங்கி விற்பவர்கள் எல்லார்க்கும் விலைச் சீட்டிற் குறித்தபடியே கழிவு கொடுக்கப்பட்டு வருகின்றது; அதில் ஏதும் மாற்றமில்லை. எம்மிடம் நேரே வாங்கினாலும் கனகராயரிடம் வாங்கினாலும் எல்லார்க்கும ஒரே வகையான கழிவு கொடுக்கும்படி ஏற்பாடு செய்திருக்கின்றேன். இதைப் பற்றித் தாங்கள் சிறிதும் ஐயுறவேண்டாம்.*

*இனி, என்னுடைய நூல்களுக்கு விலைகள் மிகுதியா யிருக்கின்ற என்று எழுதி இருக்கின்றீர்கள். அதனை ஒரு வகையில் யானும் ஒப்புக்கொள்ளுகின்றேன். ஆனால் உயர்ந்த பொருள்களை உயர்ந்த நடையில் எழுதி வெளியிடும் ஆங்கில நூல்களின் விலைகளை ஒப்பிட்டுப் பார்ப்பீர்களானால், எமது நூல்களின் விலை குறைந்ததென்றே சொல்வீர்கள். ஆங்கில நூல்களை விற்பவர்களும் அவர்களுக்கு நூல் எழுதிக் கொடுப்பவர்களும், பெரும் பணக்காரர்கள்! அவர்களால் எழுதி வெளியிடப்படும் நூல்கள் எவ்வளவு விலை உயர்ந்தனவா யிருப்பினும், அவற்றை வாங்கிப் படிப்போர் தொகையும், நூறாயிரக்*

கணக்காய் இருப்பது தாங்கள் அறிந்ததே. ஆனால் நமக்கோ அப்படி இல்லை. சென்ற நாற்பதாண்டுகளுக்கு மேலாக யான் எழுதி வெளியிடும் நூல்களின் ஆராய்ச்சிக்கு வேண்டியனவும், யான் பயில்வனவும் ஆக இதுகாறும் எமது நூல் நிலையத்தில் வாங்கி வைத்திருக்கும் ஆங்கிலம், தமிழ், சமஸ்கிருதம் ஆகிய நூல்களின் விலையே இருபத்தையாயிர ரூபாய்க்குமேல் ஆய்விட்டது பேருழைப்பினாலும், பெரும் பொருட்செலவினாலும் யான் எழுதி வெளியிடும் நூல்களுக்கு இதுவரை இலட்ச ரூபாய் செலவாய் இருக்கின்றது. இவ்வளவு செலவுகளுக்கும் நன்முயற்சிக்கும், பொருளுதவி செய்யும் செல்வர்களாவது அரசர்களாவது மடாதிபதிகளாவது எவருமில்லை.

இறைவன் உதவி ஒன்றேகொண்டு இவ்வளவுசெலவும் யாம் தனியே ஏற்றுச் செய்யவேண்டிய தாயிற்று; இன்னும் செய்ய வேண்டுவதாயிருக்கின்றது. இந்த நிலையில் எம்முடைய நூல்களை வாங்கிக் கற்பவர்கள் கால், அல்லது அரை, அல்லது முக்கால் ரூபாய் மிகுதியாகக் கொடுத்து வாங்குவதைப் பெரிதாய் நினைக்கிறார்களே ஒழிய எமது பெருஞ் செலவையும், அச்செலவிற்கு உதவி செய்வாரின்மையையும், எமது பேருழைப்பையும், சிறிதும் நினைத்துப் பார்க்கிறார்களில்லை. தமது வாழ்க்கைச் செலவிற்கும், மணச் சடங்கு, பிணச் சடங்கு கட்கும், கடன் வாங்கியாகிலும் மிகுதியாகச் செலவழிக்கின்றார்கள். அவை எல்லாம் பெருஞ் செலவாக அவர்களுக்குத் தோன்ற வில்லை. எப்போதோ அருமையாக வாங்கும், இரண்டொரு நூலுக்கு ஆகும் செலவையே பெரிதாக நினைக்கிறார்கள். இப்படி இருந்தால் நம் தமிழ்நாடு எக்காலத்தில் முன்னேற்ற மடையுமோ தெரியவில்லை. இறைவன் அருள் செய்க! நலம்.

அன்புள்ள,

மறைமலையடிகள்

## 2 - நற்சான்றிதழ்

4-9-44

அன்புமிக்க செந்தமிழ்த் திருவாளர்... அம்பலவாணர் திருவருளால் எல்லா நலங்களும் மேன்மேற் பெருகுக!

*24-8-44ல் தாங்கள் அன்புடன் எழுதிய கடிதங் கண்டு என் மனைவியும் யானும் பெரிதும் மகிழ்ந்தோம். தங்களைப்போல் உண்மையன்பு வாய்த்த தமிழறிஞருடன் கூடி அளவளாவுதலே எமக்குப் பெருமகிழ்ச்சி தருவதாகும்.*

*தாங்களே விரும்பிய நற்சான்றிதழொன்று இதனுடன் வைத்தனுப்பியிருக்கின்றேன் அம்பலவாணர் திருவருளால் அது தாங்கள் விரும்பிய நலனைப் பெறுதற்குதவி செய்யுமென்று நம்புகின்றேன். நாம் செய்யும் முயற்சி நமக்கும் பிறர்க்கும் பயனளிப்பதாயிருக்குமேற் சிவபிரான் அதனை நன்கு முடித்து வைப்பானென்பது திண்ணம். இறைவன் திருவருட்டுணையையே நாம் கடைப்பிடியாகப் பிடித்தல் வேண்டும். தாங்கள் நீடினிது வாழ்கவென்று சிவபிரான் திருவடிகளை வேண்டி வழுத்தும்.*

*அன்புமிக்க,*

*மறைமலையடிகள்*

## 3 - சொற்பொழிவு

26-12-44

*அன்புமிக்க திருவாளர்.... அவர்களுக்கு, அம்மை அப்பர் திருவருளால் எல்லா நலங்களும் உண்டாகுக.*

*நீங்கள் அன்பு கூர்ந்து அனுப்பிய ரூபாய் ஐந்தும் இன்று கிடைத்தது. அதற்காகத் 'தமிழர் மதம்' என்னும் நூல் ஒன்றைத் தங்கட்குப் பதிவுத் தபாலில் இன்றைக்கு அனுப்பியிருக்கிறேன்.*

*நீங்கள் சொற்பொழிவுக்கு என்னை அங்கு வருவிக்க முயல்வது தெரிந்து மகிழ்கின்றேன். நம் தமிழ்த் தொண்டு சிவத் தொண்டுகள் அங்கெல்லாம் பரவி எல்லார்க்கும் அறிவுக்கண் திறக்கும்படி செய்யும் முயற்சி இம்மையிலும் மேலும் மறுமையிலும் பெரும் பயன் அளிக்கும்.*

*முதலில் எம்மை வருவிப்பதற்கு மட்டும் இருநூற்றைம்பது ரூபாய்க்குக் குறையாமல் ஒரு தொகையைத் திரட்டி அனுப்புங்கள்.*

## 4 - அன்பு

6-8-43

*அன்பிற் சிறந்த திருவாளர்.... அவர்களுக்கு, அன்புடனும் பணிவுடனும் எழுதிக்கொள்ளுங் கடிதம்.*

*5-ஆம் நாள் தாங்கள் அன்பு கூர்ந்தெழுதிய கடிதங்கண்டு தங்களையே கண்டாற்போற் பெருமகிழ்ச்சி அடைந்தேன். பள்ளிக்கூடத்தில் தங்களுடன் நெருங்கிப் பழகிய நேசமானது எந்நாளும் மறக்கப்படுவது அன்று.*

*தங்களை இடையிடையே பலகாலும் நினைப்பதும் உண்டு. ஆனாலும், தங்களைப் பற்றி விளக்கமாகத் தெரிவிப்பார் எவரையும் நீண்டகாலமாகக் காணவில்லை. ஓர் ஆண்டுக்கு முன்னே தான் நம் அன்பர் திரு தியாகராச செட்டியார் வாயிலாகத் தங்கள் நலமறிந்து களிப்புற்றேன். தாங்கள் நமது பழைய நேசத்தை மறவாமல் கடிதம் எழுதிய பேரன்பை நினைந்து நினைந்து மனம் உருகுகின்றேன். எல்லாம் வல்ல ஆண்டவன் திருவருளால் தாங்கள் எல்லா நலன்களுடன் நீடு வாழ்வீர்களாக!*

*தாங்கள் பத்து ஆண்டுகளாகக் குடல் இறக்கத்தால் வருந்துவது தெரிந்து மிக மனம் உளைகின்றேன். தாங்கள் இன்னும் ஒரு திங்களில் இங்கே வரக் கருதியிருப்பது தெரிந்து சொல்ல முடியாப் பெருமகிழ்ச்சி யடைந்தேன். ஆண்டவன் விரைவில் உங்களை இங்கே கொண்டு வந்து சேர்ப்பிப்பாராக!*

*தங்களை நேரிற் காணும்போது மருந்தில்லாமலே நோய் நீக்க யான் தெளிந்த எளிய முறைகள் சிலவற்றைத் தங்கட்குத் தெரிவிப்பேன். தாங்கள் எல்லா நலங்களுடனும் இனிது நீடு வாழ நம் நாகூர் ஆண்டவரும் அருள் செய்வாராக!*

*தங்கள் அன்புள்ள வருகையை எதிர் நோக்கி யிருக்கும்.*

*தங்கள் பள்ளிக்கூட நண்பன்,*
*வேதாசலம்,*

# 5 - கடிதம்

15-1-47

*அன்பிற் சிறந்த திருவாளர்.... அம்பலவாணர் அம்மை திருவருளால் எல்லா நலங்களும் உண்டாகுக! 13-ஆம் நாள் தாங்கள் அன்புடன் எழுதிய கடிதம் வந்தது. தங்களுக்கு உடம்பு நலம் இல்லாதிருந்தது தெரிந்து வருந்தினேன். நீங்கள் முழு நலத்துடன் வாழும்படி சிவபிரானை வேண்டுகிறேன். இந்தப் பனிக் காலத்தில் அடிக்கடி தலை முழுகவேண்டாம். இரண்டு நாட்களுக்கொருகால் ஒரு முரட்டுத் துணியை வெந்நீரிற் றோய்த்துப் பிழிந்த பின் உடம்பெங்கும் தேய்த்து உடம்பழுக்கை எடுத்துவிடுங்கள்.*

*உடம்பில் சட்டை எந்நேரமும் பூண்டிருத்தல் வேண்டும். நாடோறும் தோய்த்து உலர்ந்த ஆடைகளையே உடுத்தல் வேண்டும். காலை 9 மணி வரை ஏதோர் உணவையும் உட்கொள்ளாமல் வெந்நீரையே பருகுதல் வேண்டும். காலை 10 மணிக்கு எளிதிற் செரிக்கத்தக்க நெகிழ்ந்த உணவு உட்கொள்ளுதல் நன்று. நண்பகல் ஒரு மணிக்கு மிகுந்த குளிர்ச்சியும் மிகுந்த சூடும் இல்லாத உணவை எடுத்தலே நல்லன. 10 நாட்களுக்குகொரு கால் தூய நல்லெண்ணெயில் ஓமம் இட்டுக் காய்ச்சியதைத் தேய்த்து வெந்நீரில் முழுகி அரைமணி நேரம் கழித்து மிளகுநீர் சேர்த்த சோறு உண்ணுதல் நன்று. இரவில் கோதுமை நொய்க்கஞ்சியும் வற்றலும் நல்லன. இப்போது நீங்கள் வெளியிடும் நன்முயற்சியில் நூல் ஆக்கிய எமது உழைப்புக்காக எனக்குத் தாங்கள் தர இசைந்த ஏழாயிர ரூபாயில் இப்போது நீங்கள் தருவதாகச் சொல்லும் ஆறாயிர ரூபாயையும் அதன் பின் இரண்டல்லது மூன்று தினங்கள் கழித்து மிச்சம் ஆயிர ரூபாயையும் பெற்றுக்கொள்ள இசைகிறேன். தங்களருமைத் தந்தையாருடன் தாங்கள் இங்கு வந்து தொகையை என்னிடம் சேர்ப்பிக்கும் போது உடன்படிக்கை எழுதிக்கொள்ளலாம். தூத்துக்குடியில் திருஞான சம்பந்தமூர்த்தி மடாலயச் சைவ சித்தாந்த சபையின் 63-ஆம் ஆண்டுவிழாப் பேரவை முதல் இரண்டு நாட்கள் எனது தலைமையிலும், மூன்றாம் நாள் பாகம் பிரியாள் மாதர் சங்கத்தின் 19-ஆம் ஆண்டு விழாப்பேரவை எம் அருமைப் புதல்வி திரிபுரசுந்தரி அம்மையாரின் தலைமையிலும் மிகவும்*

செவ்வையாக நடைபெறும்படி திருவருள் கூட்டி வைத்தது. உள்ளூரில் மட்டுமே யன்றி வெளியூர்களிலிருந்தும் வந்து குழுமிய அன்பர்கள் ஆறாயிரத்துக்கு மேலாவர். எங்கள் தலைமை யுரைகளும் கருத்துரைகளும் வந்து கேட்ட பெருங் கூட்டத் தினரை மிக மகிழ்வித்தன. சொற்பொழிவாளர்களின் உரைகளும் பெரிதும் பாராட்டத் தக்கனவாயிருந்தன. எல்லாரும் சிவபிரான் திருவருள் இன்பத்தில் தோய்ந்து விளங்கினபடியா யிருந்தனர்.

எமக்கு முந்நூற்றைம்பது ரூபாயும், எம் மகள் மருமகனார்க்கு நூற்றைம்பது ரூபாயும் அவையார் அனுப்பி வைத்தனர். மேலும் எம்முடைய வசதிகளுக்காக முந்நூறு ரூபாய் வரையில் செலவு செய்தார்கள். மொத்தம் சபையாருக்கு மூவாயிர ரூபாய்க்குமேல் செலவாகியிருக்கலாம். இங்ஙனம் சிவத் தொண்டுகளுக்குத் தமது பொருளைச் செலவிடும் புண்ணியவான்களே தவஞ் செய்தவர்கள். பொருளை வீண் வழியிற் செலவு செய்தும் பயன்படாதார்க்கு ஈட்டி வைத்தும் இறப்போர் சிவபிரான் திருவருளை எங்ஙனம் அடைவார்கள்?

அன்புள்ள,
மறைமலையடிகள்

## 6 - நன்றி

அன்புமிக்க செந்தமிழ்ச் செல்வர்... அவர்கட்கு, அம்பல வாணர் அம்மை திருவருளால் எல்லா நலங்களும் மென்மேற் பெருகுக! நாங்கள் சில நாட்களுக்கு முன் தில்லைக்கு வந்திருந்த காலையில் எங்களை அன்புடன் வரவேற்று விருந்தோம் பினமைக்கும், அண்ணாமலைப் பல்லைக்கழகத்தில் விரிவுரை செய்வித்துப் பொருளுதவி செய்தமைக்கும் தங்கள்பால் என்றும் நன்றி பாராட்டும் கடமையுடையேன். நுங்கள் அருமை மனைவியார்க்கு என்மனைவியும் யானும் எங்கள் அன்பைத் தெரிவித்துக் கொள்கிறோம். உங்கள் அருமைக் குழந்தைகட்கு எங்கள் அன்பான முத்தம்.

இனி, யான் தில்லைக்குப் போந்து ஆங்கிலத்தில் ஒரு விரிவுரை செய்வதற்குரிய ஏற்பாடுகளையும் தெரிவிக்கும் படி தாங்கள் கூறியதாகச் சொன்னார். ஆங்கில விரிவுரை ஒன்றுக்கு இருநூறு பாயும், போகவர எனக்கு இரண்டாவது வகுப்புச் செலவும் 15 நாட்களுக்கு முன்னமே அனுப்பிவைத்து உதவினால்,

யான் அப்பதினைந்து நாட்களுக்குப் பின் வந்து அவ்விரிவுரை யினைச் செய்து திரும்பலாம். விரிவுரைப் பொருளும் இன்னதாக இருக்கவேண்டு மென்பதனையும் தெரிவியுங்கள்.

தங்கள் நலத்தையும், தங்கள் அருமை மனைவியார் குழந்தைகளின் நலங்களையும் கோரித் திருவருளை வழுத்தும்.

அன்புள்ள,
மறைமலையடிகள்

## 7 - தமிழ்த்தொண்டு

3-1-40

திருவாளர்.... அவர்களுக்குச் சிவபெருமான் திருவருளால் எல்லா நலங்களும் உண்டாகுக!

நலம். யாங்கள் காரைக்காலுக்குச் சில நாட்களுக்கு முன் வந்தபோது எங்களை நீங்கள் அன்புடன் வரவேற்று விருந்தோம் பியதை நாங்கள் என்றும் பாராட்டி மகிழும் கடமை உடையவர் களாயிருக்கிறோம். நாங்கள் இங்கு வந்து சேர்ந்து தமிழ்த் தொண்டு சிவத் தொண்டை எப்போதும் போலச் சிவபெருமான் திருவருளை முன்னிட்டு நடத்திக் கொண்டிருக்கிறோம். நீங்கள் இந்தப் பக்கம் வரும்படி நேர்ந்தால் எமது நிலையத்தை வந்து பார்க்கும்படி கோருகிறோம்.

உங்கள் எல்லார் நலங்களையும் கோரித் திருவருளை வழுத்தும்.

அன்புள்ள,

மறைமலையடிகள்

## 8 - எனது வணக்கம்

4-1-50

அன்புடையீர்,

....எதிர்பாராத வகையாக யான் தங்களையும் தங்கள் குடும்பத்தாரையும் பார்த்து ஒருநாளாயினும் அளவளாவி

*இருத்தற்கு வாய்ப்புக் கிடைத்தமைபற்றிச் சிவபெருமானுக்கு எனது வணக்கத்தைச் செலுத்துகின்றேன். இளமையில் நாமிருவரும் ஒரே வகுப்பில் கல்வி பயின்ற நாளில் நாம் அளவளாவி அன்பு பாராட்டிப் பிரிந்த பின் இத்தனை காலங்கழித்து நம்மை மீண்டும் ஒருங்கு கூட்டிய திருவருளுக்கு எமது வணக்கம் உரியதாகுக!*

*தங்கள் வீட்டார் எல்லார்க்கும் எங்கள் அன்பைத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.*

*அன்புள்ள,*

*மறைமலையடிகள்*

## 9 - திருமண வாழ்த்து

15-4-43

*அன்புமிக்க ஐயா,*

*தங்கள் இளைய புதல்வர் திரு. ஜெயராமன் திருமண அழைப்பு வந்தது. குறிப்பிட்ட நாளில் திருமணம் நன்கு நடைபெற்று, மண மகனும் மண மகளும் இல்லற வாழ்க்கையை நல்லற வாழ்க்கையாய் நடத்திக் கொண்டு, பூவும் மணமும் போற் பொருந்தி எல்லா நலங்களுடனும் நீடு இனிது வாழ்கவென்று எல்லாம் வல்ல சிவபெருமானையும் அம்மையையும் வேண்டுகின்றேன். நலம்.*

*அன்புள்ள,*

*மறைமலையடிகள்*

## 10 - இல்லறம் நல்லறம்

*....சந்திரனும் அவன் மனைவியும் பூவும் மணமும் அமைந்தாற்போல் அன்பிற் பொருந்தி இல்லறத்தை நல்லறமாய் நடத்திக் கொண்டு தமிழாசிரியர்க்குதவியாய் நீடு இனிது வாழ்கவென்று நம் அம்பலவாணரம்மை திருவருளை வேண்டுகிறோம்.*

## 11 - உலக வாழ்வு

29-12-1933

*சுவாமி வேதாசலம்* — *திருமுருகன் அச்சுக்கூடம்*
*மறைமலையடிகள்,* — *பல்லாவரம்*
*பொதுநிலைக் கழக ஆசிரியர்*

*அன்புமிக்க கண்ணப்ப முதலியாருக்கு அம்பலவாணர் அம்மை திருவருளால் எல்லா நலங்களும் மேன்மேற் பெருகுக! 23 ஆம் நாள் நீங்களெழுதிய கடிதத்தால் உங்கள் அருமை மனைவி சடுதியில் இம்மை வாழ்வு நீத்தமை தெரிந்து இங்கு எல்லோரும் மிக வருந்தினோம். ஊழ்வினையும் நம்மவர் நன்கு வாழத் தெரியாமையுமே இங்ஙனம் நேரும் முதிராச் சாக்காடு கட்குக் காரணமாகும்.*

*உயிரோடிருக்கையிலே தெரிவித்திருந்தால் போய் முகத்தையாவது காணலாமே என்று இங்கு வீட்டம்மை சொல்லித் துயருறுகின்றாள். தாயில்லாக் குழந்தைகளுடன் தனியே வருந்தும் நுங்கள் நிலையை நினைந்து எமது நெஞ்சம் நெக்குருகுகின்றது! நம் ஆண்டவன் நுங்கட்கும் நுங்களருமைக் குழந்தைகட்கும் ஆறுதல் அளித்து நுங்கள் வாழ்க்கையை இனிது நடத்துக வென்று அவன் திருவடிகளை இறைஞ்சுதும்.*

*அன்புள்ள,*

*மறைமலையடிகள்*

## 12 - ஆறுதல் மொழிகள்

*அன்புள்ள....*

*சுப்பிரமணியன் வழிவிடுத்த கடிதம் எங்களை மிகவுந் திடுக்கிடச் செய்து உள்ளத்தை வருத்தியது. இப்போது பிறந்த உங்கள் அருமை மகவு திடீரென இறந்துபோன செய்தி நெஞ்சத்தை நீராய் உருக்கிற்று. பிறப்பும் இறப்பும் நம்முடைய ஆற்றலில் அகப்படாமல் நடத்தலால், நாம் செய்யக்கூடிய தொன்றுமில்லை. தாய்க்கு என் ஆறுதல் மொழிகளைத் தெரிவியுங்கள்.*

மற்றைக் குழந்தைகளின் நன்மையைக் கோரித் தாய் மனத்தைத் தேற்றிக் கொள்ளல் வேண்டும். நீங்களும் ஆறுதலாய் இருங்கள். கடுமையான மழை காலையிலிருந்து நடுப்பகல் வரையிற் பெய்தது.

அம்பலவாணர் திருவருளாலும் நுங்கள் நல்லெண்ணத் தாலும் குழந்தை அம்பலவாணன் சிறிது சிறிதாக நலமெய்தி வருகின்றான்.

## 13 - ஆறுதல்

17-6-45

எல்லா நலங்களும் பெருகுக!

உங்கள் நேற்றைக் கடிதத்தால் உங்கள் அருமைத் தந்தையார் காலமான செய்தி யறிந்து வருந்தினோம். உங்களையெல்லாம் பெற்று வளர்த்து நன்னிலையில் வைத்துத் தமது கடமையை நன்கு செய்து முடித்த நுங்கள் தந்தையாரான பெரியார் சிவபெருமான் திருவடி நிழலில் அமர்ந்து ஆறுதல் எய்திப் பேரின்பம் நுகர்ந்திருப்பாராக!

உங்கள் அருமைத் தாயார் முதலான உங்கள் குடும்பத்தார் அனைவர்க்கும் எங்கள் ஆறுதல் மொழிகளைத் தெரிவியுங்கள்.

அன்புமிக்க,

மறைமலையடிகள்

## 14 - இனிது வாழ்வீர்களா

13-5-50

அன்புமிக்க கனகராயர்க்குச் சிவபிரான் றிருவருளால் எல்லா நலங்களும் பெருகுக!

நீங்கள் அன்புகூர்ந்து விடுத்த கடிதத்தால் நுங்கள் சிற்றன்னை இவ்வுலக வாழ்வு நீத்து மேலுலகு சென்றமை தெரிந்து, நாங்கள் எல்லோரும் மிகவும் துயருற்றோம். அவ்வம்மையார் இனிய குணங்கள் உடையவரென்றும், எல்லாரிடத்தும் முகமலர்ந்து

*ஒழுகி இல்லற வாழ்க்கையை நன்கு நடத்தியவரென்றும் தெரிந்து, அவர்தம் அருமைக் கணவனாரையும் இனிய குழந்தைகளையும் விட்டுப் பிரிந்து இளம் பருவத்திலேயே இவ்வுலக வாழ்வு நீத்தமைக்காக எம் உள்ளம் மிக வருந்தாநிற்கின்றது. ஆனாலும்,*

முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவில் ஒரு
பிடிசாம்பராய் வெந்து மண்ணாவதுங்கண்டு பின்னும் இந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதிற் பயனில்லை யாதலால்

*அவ்வம்மையாரின் அரியவுயிர் அம்பலவாணன் அடியினை மலரின் கீழ் வைகி இளைப்பாறுக வென்று அவன் திருவருளை வேண்டுகிறோம். உங்கள் எல்லார்க்கும் ஆறுதல் சொல்லும் பொருட்டு என் மனைவியையும் மகனையும் அனுப்பியிருக்கின்றேன்.*

*நீங்கள் எல்லீருஞ் சிவபெருமான் திருவருளால் இனிது வாழ்வீர்களாக!*

*இங்ஙனம்*
*அன்புள்ள,*
*மறைமலையடிகள்*

## 15 - தமிழ்த்தொண்டு - சிவத்தொண்டும்

*அன்புமிக்க கனகராயர்க்குத் திருவருளால் எல்லா நலங்களும் பெருகுக!*

*நுங்கள் அன்புள்ள 7 ஆம் நாட் கடிதமும் அதனுடன் அனுப்பிய தசாங்க ஊதுவர்த்தி மாதிரியும் வந்தன. தசாங்கம் அவ்வளவு நல்லதன்று; மிகுதியாகப் புகைகிறதே யல்லாமல் மணம் நன்றாயில்லை. ஊதுவர்த்திகள் நல்லவை; ஆனால் அவை மிக மெல்லியவாய் இருக்கின்றன; ஆகையால், சிறிது மொத்தமான ஊதுவர்த்திகள் வாங்குங்கள். தசாங்கம் இன்னும் வேறு கடைகளில் உள்ளவைகளும் மாதிரியாக வாங்குங்கள்.*

*இங்கே... அச்சுக்கூடம் வேலை ஒழுங்காகச் செய்கிறதில்லை. வருகிற சில்லரை வேலைகளையும் கெடுத்து விடுகின்றான். எது செய்தாலும் ஏறுக்குமாறு செய்கின்றான். சிறிதுந் திருந்தாமல்*

எந்நேரமும் மனத்தைப் புண்படுத்தி வருகின்றான். இவனை எந்த வேலையிலாவது வெளியே வைத்தால்தான் யான் மன அமைதியாய் இருக்கமுடியும்.

யான் மிகுதியாக நூல்கள் எழுதிவிட்டபடியாலும், செலவான நூல்களை அடுத்தடுத்து அச்சிடவேண்டி வருவதாலும், ஒரெழுத்தாவது எழுதி எனக்கு உதவி செய்பவர்கள் யாரும் இல்லாமையாலும் யான் படுந் துன்பத்திற்கு அளவேயில்லை. நாளேற நாளேற நூல்வேலை மிகுதிப்படுகின்றதேயல்லாமல், தக்கபடி ஆளுதவியில்லை. நான் செய்யும் தமிழ்த் தொண்டு சிவத்தொண்டு இன்னுஞ் சில காலமாவது செவ்வையாக நடைபெற வேண்டுமானால் எனக்கு உதவி செய்யத்தக்க ஆளை நீங்கள் விரைந்து தருதல்வேண்டும். இதுவரையில் நீங்கள் எனக்குச் செய்து வந்த உதவிகளெல்லாம், இப்போது நீங்கள் செய்யும் இப்பேருதவியினாலேதான் நிலைபெறல் வேண்டும். இப்பேருதவிக்காகச் சிவபெருமான் நுங்கட்கு எல்லா நலங்களையும் பெருகச் செய்வான். நுங்களைவிட எனக்கு வேறு உண்மையன்பர் எவருமில்லை. உண்மையன்புடைய நுங்களால் தான் இவ்வுதவி யான் பெறல் வேண்டும். இதன்பொருட்டு நீங்கள் செய்யும் ஏற்பாட்டுக்கு இணங்கத் தடையில்லை.

இந்தச் சனிக்கிழமை மாலையே கட்டாயம் நீங்கள் இங்கு வரவேண்டும். நுங்கள் எல்லீர் நலமுங் கோரித் திருவருளை வழுத்தும்.

அன்புள்ள,

மறைமலையடிகள்

## 16 - பெண்மக்கள்

19-12-42

திருவருளால் நல்லெண்ணமும் நல்லறிவும் உடல் நலமும் கல்வியும் உண்டாகுக!

கோடி கோடியாக ஊரார் கல்வி வளர்ச்சிக்கென்று தந்த பொருளை வைப்பாட்டிமார்க்கும், தாசி வேசிகட்கும், கொலை வழக்குகட்கும் வாரி இறைத்துக்கொண்டு, கல்விக்கும்

மற்றோர்க்கும் நூல் எழுதுவார்க்கும் ஏதொருதவியும் செய்யாத மடாதிபதிகளாகிய துறவிகளைப் பெருத்த அவமானமாகக் கருதுவாரும் எவரும் இல்லையே! எல்லாரும் அவர் காலிற் போய் விழுந்து, அவர் வீசும் எச்சிற் சோற்றை யுண்டு அவரைப் புகழ்ந்து பாடியும் வருகின்றார்களே! ஈதன்றோ கடியத்தக்க பேரவமானச் செயல்!

அவ்வாறிருக்க, ஐம்பதாண்டுகளாகத் தமிழ்த் தொண்டு சிவத்தொண்டு செய்வதிலேயே ஒரு தொடர்பாக உறைத்து நின்று, எந்த வகையிலும் உதவி செய்வார் எவருமில்லாமலும், துவக்கத்தில் செல்வமின்றி வறுமைப்பட்டும், நாற்பத்தாறாண்டு களாகப் பாதுகாத்து என் மனைவி மக்களை மேல் நிலையை அடையச் செய்தேன்.

மனைவியையும் அருமைப் புதல்வனையும் அழைத்துக் கொண்டு தென்காசி, திருநெல்வேலி, திருச்செந்தூர், குலசேகர பட்டினம், மதுரை, திருச்சிராப்பள்ளி முதலான பற்பல நாடு நகரங்களுக்கெல்லாம் போய் விரிவுரைகள் நிகழ்த்தி வந்தேன். ஆங்காங்குள்ள அன்பர்களெல்லாம் எங்களை எதிரேற்று வேண்டும் சிறப்புக்களெல்லாம் செய்து எம்மைப் பாராட்டி னார்களே யல்லாமல், எவரும் எம்மைக் குறைகூறவில்லை.

ஒழுங்கான முறையில் மனைவியோடிருந்து இங்ஙனம் சிவத் தொண்டு செய்யும் முறையே ஒழுங்கான துறவுநிலை யாகுமென்றும், இவ்வாறின்றி மறைவாகப் பல வேசிமாரை வைத்துக்கொண்டு உலக நன்மைக்கு ஏதும் செய்யாத போலித் துறவுநிலைதான் கடியத்தக்கதென்றும் அன்பர்கள் ஆங்காங்குப் பேசிக்கொண்டார்கள். பெண்மக்களைப் பல துறையிலும் முன்னேற்றமடையச் செய்யவேண்டுமென்றும், அவர்களை அன்பிலும் தொண்டிலும் வளர்க்கவேண்டுமென்றும், மேடையேறிப் பேசுகின்றவர்களே வெளியே வந்து அவர்களை இழிவாகக் கருதுவதும், அவர்களின் அறிவு வளர்ச்சி கடவுளுணர்ச்சிக்காக ஓவியக் காட்சி, திருக்கோயில்கள், அவைக்களங்கள் முதலியவற்றிற்கு அழைத்துச் செல்வதை அவமானமாக நினைப்பதும் மாறுபட்ட செயல்களாகவும் இழிக்கத்தக்க ஒழுகலாறாகவும் கொள்ளல் வேண்டும். துறவிகளென்றால் பெண்மக்களின் முன்னேற்றத்திற்குத் தடையாய் யிருக்கவேண்டும் போலும்! பெண்மக்களே உலக மென்பதை அறியாமல் அவர்களைப் பழித்துப் பேசிவிட்டுப்

*பிறகு மறைவிலே அவர்கள் காலிற் போய் விழுந்து அவர்கள்பால் இன்பந் துய்க்க முயலுங் கயவர்களும் போலித் துறவிகளும் உலக நன்மைக்குப் பெருந்தடை யாவார்களல்லரோ?*

*பெண்மக்களை ஓவியக் காட்சிக்கு அழைத்துப் போவதைக் குற்றமாகக் கருதுவது நன்றன்று. எத்தனையோ நாள் படித்தோ அல்லது கேட்டோ தெரிந்து கொள்ளவேண்டிய வரலாறுகள், புலவர் வீரர் வரலாறுகள் முதலியவைகளைக் கண்ணுக்குஞ் செவிக்கும் இன்பமாக எளிதிலே விளங்கும்படி காட்டும் ஓவியக் காட்சிகள் பெண்மக்கள் எளிதிலே முன்னேற்றமடையத் துணை புரிகின்றன. கற்றவர்களுங்கூட இவைகளைக் காண்பதனால் நுண்ணுணர்வும் இன்பமும் மன ஆறுதலும் அடைகின்றனர். குற்றமற்ற இவ்வின்பங்களைக் கண்டு களியாவிட்டால் துன்பம் நிறைந்த இவ்வுலக மக்களுக்கு வேறெந்த வகையில் எளிதிலே அறிவும் இன்பமும் உண்டாகும்? இறைவன் திருக்கோயில்களை இடங்கடோறும் சென்று தொழாவிட்டால் பெண்மக்கள் பிறவி எடுத்ததனால் வேறென்ன பெரும் பயனை அடையக்கூடம்? இந் நன்மைகளின் பொருட்டாகவே பொன்னம்மையை ஓவியக் காட்சிகளுக்கும் திருக்கோயில்களுக்கும் அழைத்துச் செல்கின்றேன். இதனைக் குற்றமாகக் கருதுங் கயவர்கள் விலங்கினும் கடைப்பட்டவராவர். இனி எழுதுவது மிகை. நீயும் உன் குடும்பத்தவரும் நலமுடன் நல்லெண்ணத்துடன் நல்ல செயலுடன் இனிது வாழும் படி சிவபிரானை வேண்டுகிறேன்.*

*அன்புள்ள,*

*மறைமலையடிகள்*

## 17 - கண்ணோய்

30-12-40
பல்லாவரம்,

*அன்புருவாய்த் திகழும் கனகராயர்க்கு,*

*அம்பலவாணரம்மை திருவருளால் எல்லா நலங்களும் உண்டாகுக!*

*நீங்கள் எழுதிய கடிதம் வந்தது. நீங்கள் கண்ணோயாலும் வாய்ப் புண்ணாலும் வருந்துவதறிந்து மிகத் துன்புற்றோம்.*

சிவபிரான் திருவருளால் உடனே நோய் நீங்கி நீங்கள் முழுநலம் அடைவீர்கள். நல்ல பன்னீர் வாங்கிச் சலவைத் துணியால் வடிகட்டி ஒரு சிறு கண்ணாடிக் குப்பியில் வைத்துக்கொண்டு பகலில் மூன்று பொழுதும், இரவில் ஒருபொழுதும் இரண்டு மூன்று நாட்கள் இரு கண்களிலும் விட்டு வருவீர்களாயிற் கண்ணோய் நீங்கிவிடும். ஈரான் வாதுமைக் கொட்டையின் பருப்பை அரைத்துப் பாலில் கலக்கிக் காய்ச்சி வெறும் வயிற்றில் காலை மாலை உட்கொண்டு வருவீர்களாயின் வாய்ப்புண், கண்ணோய், நீங்கிவிடும். Laxill Pill உட்கொண்டா யினும் Enema வைத்தாயினும் மலக் குடலைத் துப்புரவு செய்யுங்கள். காரமான உணவை நீக்கி, ஆவின் பால் கலந்த சோறு உட்கொள்ளல் நன்று அல்லது எலுமிச்சம் பழச்சாறு சிறிது கலந்து மோர் விட்டுச் சோறு தின்னல் நல்லது.

உங்கள் முழுநலத்தை வேண்டித் திருவருளை வழுத்தும்.

அன்புமிக்க,
மறைமலையடிகள்

## 18 - நூல்கள்

18-1-43

அன்புமிக்க கனகராயர்க்கு,

நீங்கள் உங்கள் அன்னையார் மனைவியுடன் வருவதாகச் சொன்னபடி வருவீர்களென்று இதுகாறும் எதிர் பார்த்தும் வரவில்லை.

கழகத்தில் “தொண்டைமண்டல சதகம்,” “பாண்டி மண்டல சதகம்”, கம்பர் பாடிய “சடகோபரந்தாதி,” “கம்பர் ஏர் எழுபது”, “திருக்கை வழக்கம்”, “சங்கர சோழன் உலா”, “விக்கிரம சோழன் உலா”, “குலோத்துங்க சோழன் உலா”, “இராசராச சோழன் உலா”, “தக்கயாகப் பரணி”, “குலோத்துங்கன் கோவை”, “இராமாநுச நூற்றந்தாதி”, ராமநுஜாய திவ்ய சரிதை “குருபரம்பரை” என்னும் நூல்களை வாங்கி வாருங்கள், ஆராய்ச்சிக்கு வேண்டுவனவற்றை எடுத்துக் கொள்வேன்.

அன்புமிக்க,
மறைமலையடிகள்

## 19 - முந்நூறு ரூபாய்

*அன்புள்ள.....*

*பிறரை ஏமாற்றாமலும், பெரிய புரட்டு களவு இல்லாமலும் ஆண்டவனைப் பற்றியே நெஞ்சுருகப் பேசிக் கல்லில் நார் உரிப்பதுபோல் வருந்தித் தேடிய முந்நூறு ரூபாவும் இழந்ததில் மனக்கொதிப்பு இன்னுந் தீரவில்லை. மனமாரக் கொடுத்து விட்டால் வருத்தம் இராது. இத்தொகையைக் கைப்பற்று பவர்க்குத் தீராக் கொடுநோயும், பெரும்பொருட் கேடும் வரும் என்பது திண்ணமாயினும், எமக்கும் எமது சிவத் தொண்டுக்கும் அது பயன்படாமல் போயிற்றே என்றுதான் மனம் நோகின்றது! அத் தொகையுடனிருந்த காசுத் தாள்களெல்லாம் வைத்தபடியே இருக்க அத்தொகை மட்டும் மறைந்து போனதுதான் மாயமாய் இருக்கின்றது! சிவமே அடைக்கலம்.*

*நீங்கள் எழுதிய கடிதம் எனக்கு ஆறுதல் தந்தது. எல்லாம் வல்ல இறைவனது விளையாடல் அறிவுக்கு எட்டாததா யிருக்கின்றது.*

*அன்புள்ள,*

*மறைமலையடிகள்*

## 20 - பொங்கல் வாழ்த்து

*அன்புள்ள....,*

*நீங்களெல்லீரும் பொங்கல் திருநாளைச் செவ்வனே கொண்டாடி யிருப்பீர்களென்று நம்புகின்றோம்.நீங்களெல்லீருங் கல்வியிலுஞ் செல்வத்திலும் உடல் நல மன நலங்களிலுஞ் சிவபெருமான் திருவருளாற் சிறந்து நீடினிது வாழ்க!*

*அன்புள்ள....*

*பொங்கற் புதுநாளை நீங்கள் நேற்று செவ்வனே கொண்டாடி யிருப்பீர்களென்று நம்புகின்றேன். இவ்வாண்டிற் போலவே இனிவரும் ஆண்டுகளிலும் நீங்களும் நுங்கள் மனைவியர் மைந்தர்கள் மருமக்கள்மார் உறவினர், உங்கள்*

தோழர்... அவர் தம் மனைவியார் புதல்வர்கள் முதலான அனைவரும் நம்முடைய தமிழ்த் தொண்டுக்கு உறுபெருந் துணையாய்க் கல்வியிலும் செல்வத்திலும் தழைத்து நீடு இனிது வாழ்கவென்று அம்பலவாணர் அம்மை திருவடிகளை இறைஞ்சி வேண்டுகின்றேன்.

அன்புள்ள,
மறைமலையடிகள்

## 21 - தமிழ்த்தொண்டு

14-9-42

அன்புள்ள துரைசாமிக்கு,

காசையே பெரிதாக எண்ணி வயிறு கழுவி மாண்டு போகும் ஆட்களில் யான் சேர்ந்தவன் அல்லன் என்பதை அவர் நன்கு அறிவார்.

இப்படித்தானா எம்முடைய தமிழ்த்தொண்டு சிவத் தொண்டுக்கு அவர் உதவி செய்வது? பொருளையே கருதாது சிவத்தொண்டையே கருதி மூன்று இலட்சம் ரூபா வரையில் அதற்காகச் செலவு செய்து, நூல்களை இனிப்பதிப்பிடுவதற்குப் பொருள் இன்றி இடர்பட்டுக்கொண்டிருக்கும் முதுமைக் காலத்தில் எனக்குத் திருத்தமான வகையில் உதவி செய்யாமல் செலவும் மிகுதியாய் வைத்து வருத்துதல் நன்றாகுமா என்பதை அவர் நன்கு நினைத்துப் பார்த்தல் வேண்டும்.

“பற்றித் தொடரும் இருவினைப் புண்ணிய பாவங்களே” காதற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே” என்ற பட்டினத்தடிகள் திருமொழியை நினைவிற் பதித்தல் வேண்டும்.

அன்புமிக்க,

மறைமலையடிகள்

## 22 - யோக நித்திரை

அன்புள்ள கனகராயர்க்கு,

....நலமாகுக, நேற்று முந்தி உங்கட்கு உடம்பு நலமில்லையென்பது கேட்டது முதல் உளம் மிக வருந்தி அன்றிரவு முழுதும்

உறக்கத்திலேயும் நம் அம்மையப்பரை வேண்டியபடியாய் இருந்தேன். அதன் பயனாக மறுநாளே உங்கட்கு உடம்பு நலம் அடைந்ததென்பது தெரித்து மகிழ்ந்தேன். இரண்டு திங்கள் நல்ல மருந்து உட்கொண்டு அந்நோயை வேரறத் தொலைத்து விடுங்கள். உங்கள் உடம்பின் நலத்தைச் செவ்வையாய்ப் பாருங்கள்.

எவ்வளவோ இடர்பட்டு இரண்டு லட்சம் ரூபாய் செலவு செய்து நாற்பது நூல்கள் எழுதியும், இவ்விந்திய நாடு இலங்கை எங்குந் தனியனாய்ச் சென்று ஆயிரக்கணக்கான சொற் பொழிவுகள் ஆற்றியும் 50 ஆண்டுகளுக்கு மேலாக யான் செய்த தொண்டினால் நம்மக்கள் எவ்வளவோ நல்லுணர்ச்சியுஞ் சீர்திருத்தமும் பெற்று வருகிறார்கள். இன்னும் யான் செய்த தொண்டுக்கு உதவியாக நீங்களும், நம் இனிய அன்பர் திரு. செங்கல்வராயரும், அவர்தம் அருமைப் புதல்வர்களும் நம் நூல்களை அச்சிட்டுப் பரப்புவார்களாயின் புகழ் புண்ணியமும் பொருள் வருவாயும் பெருகும்.

யானோ கல்வியிலுங் கடவுள் வழிபாட்டிலுந் தமிழ்த் தொண்டு செய்வதிலுங் காலத்தைக் கழித்து வருபவன் என்பதும், என் பிள்ளைகளுக்கும், என் மனைவிக்கும் யான் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்து வந்திருக்கிறேன் என்பதும் நீங்கள் எல்லாம் நன்றாய் அறிந்திருக்கிறீர்கள்.

யான் எல்லார்க்கும் எக்காலத்தும் பொதுவாக நடப்பவன் என்பதை உங்களையொத்த நண்பர் சிலராயினும் அறிவர். இறைவனுக்கும் அது தெரியும்.

அவன் இறந்துபோகுந் தறுவாயாக அந்நோய் முற்றிய போது ஆறு திங்கள் வரையான் யோக நித்திரையென்னும் அறிதுயிலிற்போகச் செய்து அந்நோயை முற்றும் ஒழித்தேன்.

இம் முதுமைக் காலத்தில் என்னால் எவ்வளவுதான் செய்யு முடியும்? முயற்சி யில்லாமலே பொருள் வந்து விடுமா? தமிழுக்காக ஏராளமான பொருளைச் செலவு செய்துவிட்டேன்.

வேறெவராலும் செய்தல் இயலாத அரும்பெருந் தமிழ்த் தொண்டை நாம் செய்யும்படி இறைவன் நமக்கு அளித்திருக் கின்றனனன்றோ? உலகம் உள்ளளவும் நமது தமிழ்த் தொண்டு நிலைபெற்றுப் பெரும் பயனும் பெரும் புகழும் விளைக்கும்.

நிலைக் கடிகாரத்தில் மணிமுள் நிமிஷ முள்ளை அழுத்தும் பித்தளைச் சிறுகுமிழ் முறிந்து போனதற்கு, வேறு நல்லதொன்று பொருத்தவில்லை. மணிமுள்ளுங் கழன்று கீழே தொங்குகின்றது. அதனை இறுகப் பொருத்த வேண்டும்.

பெரிய கடிகாரம் மறுபடியும் நின்று போயது. ஆதலால், அதனைக் கழற்றிக் களிம்புந் துருவும் போகச் செவ்வையாய்த் துடைத்து அதனை இயக்குதற்குத் திறமான ஒருவரை உடனே அழைத்து வாருங்கள். மணிக் கட்டுக் கைக்கடிகாரமுங் கொண்டு வாருங்கள்.

நமது தொண்டு தொடர்பாகச் செவ்வனே நடந்து நம் மக்கட்குப் பயன்படும்படி செய்வதே நம்மெல்லார்க்கும் புகழ் புண்ணியம். தனியனாய் உழைத்து வருவதுடன் தொல்லை தரும் எல்லாச் செலவும் யான் ஒருவனே செய்துவரும் இடர்ப்பாடும் நீங்கள் எண்ணிப் பார்த்தல் வேண்டும்.

இருவரும் அன்புகூர்ந்து வெள்ளிக்கிழமை இங்கு வரின் நலம்.

அன்புமிக்க,

மறைமலையடிகள்

## 23 - பிறப்பு

அன்புள்ள....

அம்பலவாணர் திருவருளாலும் உங்கள் நல்லெண்ணத் தாலும் என் மனைவி பொன்னாள் மருத்துவ விடுதியில் ஓராண் மகவீன்று குழந்தையுடன் நலமாக இருப்பதறிந்தும், நீங்கள் அவளை ஒவ்வொரு நாளும் போய்ப் பார்த்து வருவதறிந்தும் மிக மகிழ்வெய்தினேன். உங்கள் உண்மையன்பிற்கும் உற்ற நேரத்திற் செய்யும் பேருதவிக்கும் அம்பலவாணர் உங்கட்கு எல்லா நலங்களும் அருள்வார் என்பது திண்ணம்.

உங்கள் மருமகள் ஒரு பெண் மகவு ஈன்று குழந்தையுடன் நலமா யிருத்தலறிந்து எல்லேமும் மிக மகிழ்ந்தோம். பெண் மகவு இல்லையே யென்ற குறை இப்போது நீங்கியது. குழந்தையும் பெற்றோர்களும் எல்லா நலனுடனும் வாழும்படி அவன் திருவருளை வேண்டுகின்றோம்.

*உங்களை நேரிற் பார்த்து நீண்ட நாளானமையால், உங்களைப் பார்க்க மனம் மிக அவாவுகின்றது. விரைவில் வாருங்கள். திருக்குறளுக்குப் புத்துரை ஒன்று எழுதி வருகின்றேன்.*

*அன்புள்ள,*

*மறைமலையடிகள்*

## 24 - பூவும் - மணமும் போல்

24-2-44

பல்லாவரம்,

*அன்புமிக்க... திருவருளால் எல்லா நலங்களும் உண்டாகுக!*

*நீ எழுதிய கடிதம் வந்தது.. 15 நாட்களுக்கு மேலாக உணவின்றி அம்மை நோயினால் மிக வருந்திப் பின் சிவபிரான் திருவருளால் இப்போதுதான் நலமெய்தி வருகின்றேன். நின் திருமணம் நடந்தபோது நான் மிக வருந்திக் கிடந்தமையால் அதற்கு நான்வர இயலவில்லை. ஆனாலும் நம் குடும்ப நேயரான அன்பர் திரு. கனகராயரையும் அவர் தம் மனைவியாரையும் நின் திருமணத்திற்குச் சென்று அங்கு அதனை நடத்தி வைக்கும்படி அனுப்பி வைத்தேன். அவர்களும் நம் அன்பிற்கிசைந்து நின் திருமணத்திற்கு வந்து நன்கு நடத்தி வைத்து எனக்கும் தெரிவித்தார்கள். அது கேட்டு மிக மகிழ்ந்தேன். எங்ஙன மாயினும், நீயும் நின் மனைவியும் பூவும் மணமும்போல், தேனும் பாலும்போல், அன்புடன் வாழ்ந்து, தமிழ்த் தொண்டு சிவத் தொண்டுகளைச் செவ்வனே நீண்டகாலம் நடத்திக்கொண்டு இருக்கும்படி சிவபெருமான் திருவடிகளை வேண்டுகிறோம். நின்மாமன்மாரும், நின் சிற்றன்னையும் நுங்களை விருந்தோம் பினமைக்கும் நின் மாமன்மார் நின் திருமணத்திற்கு வேண்டும் உதவிகளைச் செய்து செவ்வனே நடத்தி வைத்தமைக்கும், மிக மகிழ்கின்றேன். எனக்கு உடம்பு இன்னும் செவ்வையாய் நலமெய்திய பிறகு நின்னையும் உன் மனைவியையும் இங்கு வருவிக்கக் கருதி யிருக்கின்றோம். சிவபெருமான் அருள் செய்யவேண்டும். நின்மனைவிக்கு என் வாழ்த்துரையினைத் தெரிவி. நின் மனைவி இருக்கும் இடத்திலேயே நீயும் வேலை பார்க்கும்படி முயற்சி செய். நலம்.*

*அன்புள்ள மறைமலையடிகள்*

## 25 - உண்மை அன்பு

நீங்கள் நேற்றெழுதிய கடிதம் வந்தது. குழந்தை கண்ணப்பன் நோயாயிருப்பதறிந்து வருந்தினோம். கூடுமானால் நீரேற்றி (enama) நாடோறும் வைத்து மலக் குடலைத் துப்புரவு செய்யுங்கள். அல்லது நாடோறும் இரவில் இழிவு மாத்திரை (Laxill pills) ஒவ்வொன்று அவனுக்குக் கொடுத்து வாருங்கள். பார்லி மாவை ஆவின் பாலிற் சேர்த்து நீர்க்கக் காய்ச்சின கஞ்சியைத் தவிர வேறொன்றும் வயிற்றுக்குக் கொடுக்க வேண்டாம். காலை மாலை துணிகளைக் களைந்து தோய்த் துலர்த்த துணிகளையே யுடுக்கக் கொடுக்க வேண்டும். படுக்கையும் வீடுந் துப்புரவாய் இருக்க வேண்டும். வேப்பிலையும் மஞ்சளும் சேர்த்து அரைத்த நீரை வீடெங்கும் இரண்டு வேளையுந் தெளித்து சாம்பிராணிப் புகையுங் காட்டுக. அம்பலவாணர் திருவருளால் பையன் விரைவில் நோய் நீங்கி நலம் பெறுவான்.

உங்கள் உண்மை யன்பிற்கும் உற்ற நேரத்திற் செய்யும் பேருதவிக்கும் அம்பலவாணர் உங்கட்கு எல்லா நலங்களும் அருள்வார் என்பது திண்ணம்.

மறைமலையடிகள்

## 26 - திருவாசக விரிவுரை

15-7-22

அன்பும் அருந் தகைமையும் வாய்ந்த சைவத் திருவாளருக்கு அன்புடன் எழுதுவன:

தாங்கள் அன்புடன் கூர்ந்தெழுதிய கடிதங்கள் எல்லாம் வந்தன. தங்கள்.... எடுக்கப்பட்ட குற்ற வழக்குத் தீதின்றி முடிந்தமை தெரிந்து மகிழ்ந்தேன். மனமொழி மெய்களால் யான் இதுகாறும் எவர்க்கும் தீது செய்ததின்மையினாலும், பிறர் செய்த தீமை களையும் விரைவில் மறந்து விடுதலே எனது இயற்கையா யிருத்தலினாலும் அவர் செய்தவைகளையுஞ் சொன்னவைகளை யும் மறந்தே போனேன். பிறர் அவற்றை நினைவூட்டினால் மட்டும் அவை நினைவுக்கு வந்து வருத்தந் தருகின்றன.

*திருவாசக உரை எழுதுவதில் எனக்குண்டான உழைப்பை இங்கு எழுதல் இயலாது; எல்லாம் வல்ல சிவமே அதனை யறியும். மாணிக்கவாசக சுவாமிகளுக்கும், சைவத்திற்கும், தமிழுக்கும் யான் செய்யக் கருதிய திருத்தொண்டை இத்திருவாசக விரிவுரை வாயிலாகச் செய்யத் தீர்மானித்தே, இதனை ஆராய்ச்சிகளால் விரித்தெழுதப் புகுந்தேன்.*

*அன்புள்ள,*
*மறைமலையடிகள்*

## 27 - வெளிப்பாளையம் விழா

பல்லாவரம், 28-9-1943

*அன்புருவாகிய செல்வத் திருமகன் கோவிந்தராசு பிள்ளை அவர்கட்குச் சிவபிரான் திருவருளால் எல்லா நலன்களும் மேன்மேற் பெருகுக.*

*உங்கள்பால் விடைபெற்றுக் காரைக்காலுக்குச் சென்று, காரைக்கால் அம்மையாரையும் திருத்தக்கலூர், திருநள்ளாறு, திருக்கடவூர் முதலான திருக்கோயில்களையும் வணங்கிக் கொண்டு நேற்று மாலையில் நலமுடன் இங்கு வந்து சேர்ந்தோம்.*

*உங்கள் அன்பினாலும் அரும்பெரும் முயற்சியினாலும் நமது நாகை வெளிப்பாளையம் சைவசித்தாந்த சபையின் 55-வது ஆண்டு நிறைவு விழாப் பேரவை எனது தலைமையில் மிகச் செவ்வையாகவும், நம் தமிழ் மக்களுக்குப் பயன்படும்படியாகவும் நிறைவேறும்படி அருள் புரிந்த நம் சிவபிரான் திருவடிகட்கு நம் புல்லிய வணக்கம் உரியதாகுக. இனி உங்களாலும், உங்களோடு ஒத்துழைக்கும் அன்பர்களின் முயற்சியாலும் நமது அவை செவ்வையாக நடைபெறுமென்று நம்புகிறேன்.*

*அப்பக்கங்களில் நம்முடைய நூல்கள் மிகப் பரவி நம் தமிழ் மக்களுக்குப் பெரிதும் நன்மை தரும்படி தாங்கள் முயற்சி செய்யவேண்டும். நம் நூல்கள் வேண்டியவர்களின் முகவரியை நம் அன்பர் திரு. அ. கனகராயர் அவர்களுக்குத் தெரிவிப்பீர் களானால், அவர் அவர்களுக்கு அந்நூல்களை வி.பி.பி. வாயிலாக அனுப்புவர். அல்லது வேண்டிய நூல்களை நீங்கள்*

மொத்தமாகத் தெரிவித்தால் அவைகளை ரயில்வே பார்சலில் அனுப்பிப் பார்சல் ரசீதை வி.பி.பி. வாயிலாக அனுப்பி வைப்பார்.

சிக்கல் திருக்கோயில் விழாச் சபைக்கு யாம் வரும்படி நேருமானால் உங்களுக்குத் தெரிவிப்பேன்.

உங்கள் நலத்தையும், உங்கள் வீட்டாரெல்லார் நலத்தையும் கோரிச் சிவபிரான் திருவருளை வழுத்தும்.

அன்புள்ள,

மறைமலையடிகள்

## 28 - நீலா

அன்பும் அருமையும் மிக்க திருவாளர் .... பிள்ளையவர்கட்குச் சிவபெருமான் திருவருளால் எல்லா நலங்களும் உண்டாகுக.

குழந்தை நீலனைத் தங்கள் அன்பிற் சிறந்த மனைவி யாரவர்கள் நாலைந்து நாட்களுக்கு முன் சென்று பார்த்தார்களாம். இந்தச் சனிக்கிழமையன்று நீலா விரிவுரை நிகழ்த்த ஏற்பாடாகி யிருத்தலால் அதற்கு அம்மையவர்கள் வருவதாகவும் கடிதம் வந்தது. நீலாவின் அன்னையும் அன்றைக்குத் திருவல்லிக்கேணிக்கும் போக வேண்டியிருத்தலால் அவள் சனிக்கிழமை காலையில் தங்கள் இல்லத்திற்கு வந்து அம்மையவர்களையும் அழைத்துக்கொண்டு திருவல்லிக்கேணிக்குப் போவாள். சனிக்கிழமை காலை பதினோரு மணிக்குள் என் மனைவி தங்கள் இல்லத்திற்கு வரக்கூடும். அதற்குள் அம்மையவர்களும் புறப்படுவதற்கு ஏற்பாடாகி யிருந்தால் நலமாயிருக்கும். அடுத்த வாரத்தில் யானும் ஒருகால் தங்களில்லத்திற்கு வருவேன். தங்கள் இருவரின் அன்பு மிகுதிக்குப் பெரிதுங் கடமைப்பட்டிருக்கின்றோம். தாங்களும் அம்மையவர்களும் பிள்ளையவர்களும் நலமுடனிருக்கும்படி திருவருளை வழுத்துகிறேன்.

அன்புள்ள,

மறைமலையடிகள்

## 29 - நன்கொடை

5-3-1937

*அன்பர்காள்,*

*1931 ஆம் ஆண்டு, தைத் திங்களில் ஐந்துநாள் நடைபெற்ற தமது பொதுநிலைக் கழக 20- ஆம் ஆண்டு விழாவின் சிறப்புக்களைத் தாங்கள் முன்னமே அறிந்திருக்கலாம். இது கொண்டு வருபவர் தங்களுக்குத் தரும் அதன் வரலாற்றினாலும் அவற்றைத் தாங்கள் நன்கறியலாம். இத் தென்றமிழ் நாட்டின் பல ஊர்களிலிருந்தும், இலங்கை, பர்மா, மலாய் நாடு முதலான தொலைவான இடங்களிலிருந்தும் வந்து அவ் விழாவின் சிறப்புகளை நேரே கண்டும், கல்வி அறிவு ஆராய்ச்சியில் மிக்க புலவர்கள் அப்போது நிகழ்த்திய விரிவுரைகளைக் கேட்டும் இன்புற்ற பெருந்திரளான அன்பர்களில் பலர் அத்தகைய விழாவினை ஆண்டுதோறும் நடத்துமாறு வேண்டிக் கேட்கின்றனர். முன் நடத்திய விழாவுக்கே ரூ. 2000 செலவானமையாலும், அதன் பொருட்டுமிக்க முயற்சியும் உழைப்பும் எமக்கும் எம்மவர்க்கும் நேர்ந்தமையாலும் இங்கே யாம் நூலாராய்தல், நூல் எழுதல், எழுதிய நூல்களை அச்சிட்டு வெளியிடுதல், வெளியூர் அவைகளின் ஆண்டு விழாக்களை அடுத்தடுத்துச் சென்று நடத்தல் முதலான முயற்சிகளை இடையறாது செய்து வருதலாலுஞ் சென்ற 5 ஆண்டுகளாக, அவர்கள் வேண்டியபடி எமது பொதுநிலைக் கழக ஆண்டு விழாவினை இங்கே நடத்தக் கூடவில்லை.*

*ஈகையும் அறமும் இன்றிப் பெரும்பொருள் தொகுப்பதும், தொகுத்த பொருள்கொண்டு நாடகக் காட்சிகள் காண்பதும், அங்ஙனமே மற்றை உலகியல் இன்பங்களை நுகர்வதுமே இம் மக்கட்பிறவி எடுத்ததன் நோக்கம் ஆகா. ஏனென்றால், அவையெல்லாம் நிலையான அறிவையும் நிலையான இன்பத்தையும் தரமாட்டா. அவை திடீரென அழிந்து போவனவும் ஆகும். ஆதலால் அடுத்தடுத்து நுகரும் நிலையில்லா இவ்வுலக இன்பங்களின் இடையிடையே சிறிது சிறிதாவது நாம் பேரின்ப நிலைகளைப்பற்றி அறிவின்மிக்கார் எழுதுபவை களையும் பேசுபவைகளையுங் கற்றுங் கேட்டும் மெய்யறிவு*

பெற்று மகிழல் வேண்டும். அதன் பொருட்டாகவே எமது கழக 26-ஆம் ஆண்டு நிறைவு விழாவினை இவ்வாண்டின் டிசம்பரில் 24, 25, 26, 27, 28- இல் ஐந்து நாட்கள் நடத்தத் திருவருளை முன்னிட்டு முயற்சி செய்கின்றோம்.

மேலும், யாம் செந்தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதி இதுகாறும் வெளியிட்டிருக்கும் 40 நூல்களையும் இவ்வுலகம் எங்கணும் உள்ள அன்பர்கள் கற்றுப் பெரும் பயன் அடைந்து வருகிறார்களென்பது அவர்கள் மகிழ்ந்து எழுதுங் கடிதங்களால் இனிது விளங்குகின்றது. இத்தகைய நூல்களை எமது காலத்திலும் எமக்குப் பிற்காலத்திலுந் தொடர்பாக வெளியிட்டு உலகிற்குப் பெருநலம் புரிய ஒரு பெருந்தொகை வைப்பும் ஏற்படுத்த வேண்டியிருக்கின்றது.

பயன்றராத, நிலையில்லாத, தீயவழிகளிற் பெரும் பொருள் செலவிடுவதை மக்கள் பெரிதாக நினைப்பதில்லை; பெரும் பயன்றரும் நிலையான நல்ல கல்வி விளக்கத்திற்குச் சிறு பொருள் தருவதையோ பெரிதாக நினைக்கிறார்கள்!

ஆனால், எம்முடைய தமிழ்த்தொண்டு சிவத்தொண்டுகளின் பெரும்பயனை அறியத்தக்க தாங்கள், எமது பொதுநிலைக் கழக 26-ஆம் ஆண்டு நிறைவு விழாச் செலவுக்கும், எமது நூல் வெளியீட்டு வைப்புக்கும் பயன்படும்படி இதுகொண்டு வருபவரிடத்துத் தக்க தொகை நன்கொடையாக உதவி, எமது கையெழுத்திட்ட பற்றுச் சீட்டுப் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

கழக விழாவுக்குந் தாங்கள் வந்திருந்து அதன் சிறப்புகளையும் விரிவுரைகளையுங் கண்டுங் கேட்டும் மகிழ்ந்து புண்ணியங்களிற் சிறந்து நீடினிது வாழ்வீர்களாக வென்று எல்லாம் வல்ல அம்பலவாணர் திருவருளை வேண்டி வழுத்துகின்றோம்.

அன்புள்ள மறைமலையடிகள்

பொதுநிலைக் கழக நிலையம்
பல்லாவரம்,
பொதுநிலைக்கழக ஆசிரியர்

மறைமலையடிகள்:
சுவாமி வேதாசலம்

## 30 - Friendship

My dear Friend,

By the grace of God and the Saint at Nagore we arrived here safe yesterday evening. I feel extremely happy for having met you both at Nagapatinam and at Nagore and for having had your company for four or five days consecutively. Our life - long friendship being formed in our school days is a true one, and it is the friendship like this that can last during this life and in the life to come. Friendships formed in life after school days are stinged with self-interest and therefore can have no durable existence. As soon as I met you at Nagapatinam after an interval of 50 years, I forgot myself and wept owing to an overflow of genuine love feeling; and you too were in the same state like mine for sometime. This joyous meeting brought out the remembrance of our very old and sweet associations.

Please convey my best love and grateful feelings to our friend Mr. Krishnaswamy Naidu garu.

Yours lovingly,

Marimalai adigal.

## 31 - Holy Prophet Mohamad

My dear friend, 4-3-1946

I thank you sincerely for inviting me to attend the birthday celebration of the holy prophet Mohamad. Unavoidable engagement here precludes me from having the pleasure of taking part in the celebration. Still I wish to express the high estimation in which I hold the teachings of the prophet - especially the emphasis he repeatedly lays on the worship of one Almighty God of the universe in his sacred Koran.

Although I belong to the Saiva religion of the Tamils, I find the teachings of our Saints bearing close resemblance to those of your prophet in many important respects.

Therefore I pray for the success of the celebration that it might salvation to all souls.

Your affectionately,

Maraimalai adigal

## 32 - Mother Tamil

Pallavaram

My beloved Kanagaroyar, 11-4-59

Trust this will find you all in sound health. Have you got my clock repaired? Since I feel very inconvenient without it, kindly get it well repaired as early as possible and oblige. A painted new dial must be fixed to it.

I have great faith in you and I belive no one cares for my health and happiness better than you. If you wish that I should lead a healthy and happy life and serve my Lord siva and my Mother Tamil without trouble and hindrance, you will kindly fulfil my desire as early as possible Failure of health often interrupts my great work and makes me sad. You are more than my son and it is through your help that I hope to spend the remainder of my life usefully.

May out great Lord crown your efforts with success soon!

I pray for the health of your wife, boy, yourself and all at home.

Yours lovingly,

Maraimalai adigal

## 33 - Appreciation of a Scholar

26-5-41

I am happy to say that I have had and intimate acquaintance with Mr. G. from his early years when he was prosecuting both his Tamil and English studies with great zeal and earnestness. I was much

struck by his strong memory power and keen intellect when he quoted for me the correct reading of some Tamil verses from the old Tamil classics.

Ever since, I was watching his literary career closely, I am glad to see now in him a Tamil scholar grown up to admirable proportions in grammer and literature. To his eminence in the knowledge of Tamil, he writes the modern critical and historical methods of study derived from his knowledge of English. He is the son of an able Tamil scholar Mr. G. and as such I believe he has inherited his taste for Tamil from his learned father .I am quite confident that he will shine as a brilliant star in the firmament of Tamil learning if circumstances favour his further development in Tamil studies. Iam also confident that he will prove a rare acquisition to any Educational Institution that will engage his services

S. Vedachalam

alias

Maraimalai adigal

## Maraimalai adigal's Diary
## A selected few Jottings from the Diary of Maraimalai Adigal.

1-1-1899

Today a new happy year. This morning, we life Palayoor and arrived at Koradacheri at 11 o'clock. I myself alighted in Tiruvaroor in order to worship my Tamil master V. Narayanaswamy Pillai.

31-12-1903

On the whole, this year was not, by any measure, a happy one. On the contraty, very miserable was my life during long-drawn path of this month days. I hope Siva bless me with perfect happiness in the subsequent years.

24-1-1905.

This evening a letter came to me which explained the theft committed by my friend Mr. K. On hearing it. It was surprised, and with two other friends, I asked K. whether he did it, which he confessed and so I presented him with three rupees.

23-11-1905

This evening at Mutt I delivered a lecture on Sivagnanabotham which was very sweet and impressive and clearly arranged. In the middle of my lecture, one Mr. K. out of envy, asked me an absurd question whether I can call vedas as mayaka Nool (மயக்க நூல்), to which I gave a shrewd answer.

13-1-1906

This afternoon my wife gave birth to a male child by the grace of Siva at 4-45 p.m.

13-4-1906

I have an insatiable thirst for buying high class books. By high class, I mean critical works on poetry, philosophy and also poems, written by and such poets as Milton, Shelly, M.Arnold and Keats. I greatly dislike Byron. I bought John Morley's Life and Gladstone's 1st and 2nd part.

23-7-1907

I heard the very sad news that the great champin of India. Mr. Balaganghadara Tilak, was transported to Andamans on the pretended charge of sedition. We all felt a keen sorrow at the separation of this great patriot.

Oh! Mother India! Are Thy sons of suffer thus!

10-4-1908

Very high feaver the whole of this day. In the morning I wept for the grace of Uma and sang pontaneously songs composed extempore.

13-6-1908

My lecture on “Temple worship” this evening in the Sabha was very brilliant and splended. The audience was highly pleased with it. At the end of the lecture, I felt a little pain in my stomach.

17-6-1908.

This evening, my lecture on “சுத்தாத்துவித ஞானம்” was very learned, eloquent, thoughtful and fine and was very much appreciated by the large audience and pandits of the Mutt.

2-2-1912

At Vadalur, this afternoon at 4-0’clock the meeting Swamy Ramalinga’s Sabha began, and my lecture on the ideals of Sanmarga was very brilliant eloquent and enthusiastic. The audience was very large and my lecture was very much appreciated by both male and female portions of the audience.

8-12-1920

Mr. Mahatma Gandhi organised a Hindu University in his province. may his grand work be crowned with success!

4-4-1922

By the grace of my Lord Uma Siva and my hold master St. Manickavasaga Swamigal, I finished my elaborate commentary on thr first four poems of Thiruvachagam at 5.15 P.M. May my Lord and Master release me from the troublesome dealings and make me write the commentary on the whole works and publish it myself.

குறிப்புகள்